THAIVEEDU JANUARY 2024 ஜனவரி www.thaiveedu.com

# தாய்வீடு






பேராசிரியர் செ. யோகராசா
டிசம்பர் 17, 1949 - டிசம்பர் 7, 2023

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HIGHER STANDARDS


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment


NEW TO CANADA?
THERE ARE SERVICES TO SUPPORT YOU.
Canada.ca/newcomer-services
Immigration, Refugees and Citizenship Canada
Immigration, Réfugiés et Citoyenneté Canada
Canada


தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகள்
நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும்,
அமைதி மற்றும் செழிப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.
இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள்!
May the blessings of Thai Pongal
Leave you in good health,
Peace and prosperity.
Happy Thai Pongal!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
@shaunchenmp
@Shaun_Chen
www.shaunchen.com

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
ரஷ்மி (இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா,
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## காசாவில் நடைபெறுவது பாலஸ்தீன இன அழிப்பே!

பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீதான இஸ்ரேலின் முற்றுகையும் கண்மூடித்தனமான தாக்குதல்களும் மூன்றாவது மாதமாகத் தொடர்கின்றன. இந்தத் தாக்குதல்களால் இருபதாயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டும் ஐம்பத்தையாயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயப்பட்டும் உள்ளார்கள் எனச் செய்திகள் சொன்னாலும், உண்மையான எண்ணிக்கை இதனைவிட மிக அதிகமாகவே இருக்கும் என்ற அச்சம் நிலவுகிறது. காசாவாழ் மக்களுள் பாதிக்கும் மேற்பட்டோர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்பதைக் கணக்கிலெடுக்கும்போது, கொல்லப்பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும் சிறுவர்களுமே என்பது தெளிவாகும். எஞ்சியோருள் பெருமளவானோர் பெண்கள்.

இது தற்செயலான நிகழ்வு அல்ல. இஸ்ரேலின் நோக்கம் இதுதான் என்பதை இஸ்ரேல் பல முறைகளில், பல தடவைகளில் மிகத் தெளிவாகவே தெரிவித்திருக்கிறது. ஒக்ரோபர் ஏழாம் நாள் ஹாமாஸ் இஸ்ரேலுக்குள் ஊடுருவி நடத்திய தாக்குதலையடுத்து, யூத வேதாகமத்தின் உபாகமத்திலிருந்து மேற்கோள் காட்டிய இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு, 'அமலேக்கியர்கள் உங்களுக்கு என்ன செய்தார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்' எனக் கூறியிருக்கிறார். அமலேக்கியர்கள் யூத மக்களுக்கு எதிராக நிகழ்த்திய எதிர்பாராத தாக்குதலுக்கு எதிர்வினையாக அவர்கள் அனைவரையும் - அவர்களின் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், பால்குடிக் குழந்தைகளை மட்டுமல்லாது அவர்களின் கால்நடைகளைக்கூடக் கொன்றழித்துவிடச் சொல்கிறது உபாகமம். இதைத்தான் இஸ்ரேல் இப்போது செய்துகொண்டிருக்கிறது. 'ஒரு மனிதர்கூட உயிர்வாழ முடியாத பிரதேசமாக காசா ஆக்கப்படும்' என இஸ்ரேலின் முன்னாள் இராணுவ அதிகாரி கியோரா ஆய்லண்ட் கூறியிருக்கிறார். இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலான்ற், 'நாங்கள் மனித விலங்குகளுடன் போரிடுகிறோம். அதற்கேற்பவே செயற்படுகிறோம்' என்று கூறியிருக்கிறார். இஸ்ரேலிய இராணுவ உயரதிகாரியொருவர், 'மனித விலங்குகள் மனித விலங்குகளாகவே நடத்தப்படவேண்டும்' என காசாவாழ் மக்களைநோக்கி அரபி மொழியிலேயே கூறியிருக்கிறார்.

உலக வரலாற்றில் இடம்பெற்ற இனவழிப்புகளை உற்றுநோக்கினால், இஸ்ரேலின் நடவடிக்கைகள் ஒரு மாதிரிப்படிவத்தைப் பின்தொடர்வதைக் காணலாம். யூத இனவழிப்பின்போது நாசிகள் யூத மக்களை பூச்சிகள் என்றும் எலிகள் என்றும் அழைத்தனர். ருவாண்டாவில் டூட்சி மக்களை இனவழிப்புச் செய்த ஹூட்டுக்கள், டூட்சி மக்களை கரப்பான் பூச்சிகள் என்று அழைத்தனர். இஸ்ரேல், பாலஸ்தீன மக்களை மனித விலங்குகள் என்று அழைக்கிறது. முதல் இரண்டு சந்தர்ப்பங்களைப் போலவே, மூன்றாவது சந்தர்ப்பத்திலும் தாம் மனிதரல்லாதவர்களாகக் கருதும் மக்கட்கூட்டத்தை ஒட்டுமொத்தமாகக் கொன்றொழிப்பதே நோக்கம் என்பது தெளிவு.

ஹாமாஸ் இஸ்ரேலியக் குடிமக்கள் மீது நடத்திய தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதல் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனால், அதற்கு எதிரொலியாக இஸ்ரேல் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறை ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது போலவே உள்ளது.

ஜூலை 24, 1983-இல் தமிழர்களுக்கெதிரான வன்முறை கட்டின்றிப் பெருகுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே, ஜூலை 11 அன்று, 'யாழ்ப்பாணத்து மக்களின் உயிர்களைப் பற்றியோ, அவர்களின் கருத்தைப் பற்றியோ நாம் கருத்திலெடுக்கக் கூடாது' என இலண்டன் டெய்லி டெலிகிறாஃப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறியிருந்தார். அதன் பின்னரே கறுப்பு ஜூலையின் கோரம், வேறு சாக்குப்போக்குகளைக் காரணங்காட்டித் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. இஸ்ரேல் தனது கோரத்தாக்குதலுக்கு ஹாமாசின் தாக்குதலைக் காரணம் காட்டுவதும் இத்தகையதே. ஹாமாஸ் 1300 இஸ்ரேலியர்களைப் படுகொலை செய்ய, அதற்குப் பதிலளிப்பதாகக் கூறிக்கொண்டு இஸ்ரேல் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களைப் படுகொலை செய்துள்ளது. ஹாமாஸ் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்யும் உலக வல்லரசுகள், தாம் சனநாயக நாடு என ஏற்றுக்கொண்டிருக்கும் இஸ்ரேலின் கொலைகளை கண்மூடி, வாய்பொத்திப் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

இனவழிப்பு என்பது ஓர் அரசுக்கோ, இராணுவத்துக்கோ, ஆயுதக்குழுவுக்கோ எதிராகச் சுமத்தப்படக்கூடிய உச்சபட்சக் குற்றச்சாட்டு என்பதை இன்று உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனாற்றான் மக்கள் தொகைதொகையாகக் கொன்றொழிக்கப்படும்போதும் அந்த நிகழ்வுகளை இனவழிப்பு என வரையறுக்க உலகம் தயங்குகிறது. இந்த வரையறைக்கு முக்கியமானது கொலைகளின் நோக்கம் இனவழிப்பு என்பதை நிறுவவேண்டும் என்பதே. பொதுவாக இது கடினமான விடயம். ஆனால் பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் நோக்கம் மிகத் தெளிவாகவே வெளிப்படுகிறது.

# இம்மாதத் தாய்வீட்டில்...


**காசாவில் நடைபெறுவது பாலஸ்தீன இன அழிப்பே! 5**

**காசா: அறப்படுகொலை 7**
- சேரன்

**சியோனிசம்: இஸ்ரேல் அரசுருவாக்கத்தின் பின்னணி 'ஹோலக்கோஸ்ட்' ஐரோப்பாவின் யூத வெறுப்பு 9**
- ரூபன் சிவராஜா

**இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரில் மனித உரிமைகளே மேலோங்க வேண்டும் 13**
- ஷரி எய்க்கன், மைக்கேல் லிங்க், அலெக்ஸ் நீவ்

**இஸ்ரேலின் அறிக்கைகள் இனப்படுகொலைக்கான உள்நோக்கத்தைக் காட்டுகின்றன 16**
- உமர் பார்டோவ்
தமிழில்: - துஷி ஞானப்பிரகாசம்

**நெருப்பினூடாகவும் நீரினூடாகவும் பாதுகாப்பேன் 20**
- ரதன்

**ஏழாவது சனி 26**
- டொறீட் நாமன்

**அவலத்தின் ஒளிப்படங்களைத் திரையிட்டு மறைப்பதை எதிர்த்து 28**
- சாரா அபு றஷேட்

**பாலஸ்தீனத்துக்கு 29**
- அ. கந்தசாமி

**சாவிகள் 30**
அஃமத் அல்மல்லா

**ஒரு துண்டு நிலம் சரளையாக்கப்படுகிறது 31**
- ரூபன் சிவராஜா

**ஒரு பாலஸ்தீனக் குரல் 32**
- எம்.ஏ. நுஃமான்

**அங்காதிபாதம் 400**
நாட்பலன்: 34
- பால. சிவகடாட்சம்

**குளிர்கால சக்தி விரயம் 36**
- வேலா சுப்ரமணியம்

**சிறுதொழில் அமைப்புகள் 38**
- செந்தூரன் புனிதவேல்

**பாடசாலைகளில் பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்கள் 40**
- த. சிவபாலு

**பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் அதீத தலையீடு 43**
- அகமட் பிஸ்தாமி

**உடல் உறுப்புகள் மூப்படைவதனைக் கண்டறியும் குருதிப் பரிசோதனை 46**
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**எனது நீலச் சட்டை 48**
- நிரேஷ் ரட்ணம்

**குறை நல்லதா? 50**
- சி. நற்குணலிங்கம்

**வளமான திருநாடு 52**
- வேதநாயகம் தபேந்திரன்

**வாழாமல் கழிந்த வாழ்நாள் 54**
- குமார் புனிதவேல்

**நெடுந்தீவுக் குதிரைகள் 60**
அ. ரொனிராஜன்

**மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின்... 62**
- து. கௌரீஸ்வரன்

**எல்லை தாண்டிய திரைப்பிரதிகள் 66**
- ஓவியர் ஜீவா

**சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 69**
- மா. கணபதிப்பிள்ளை

**மலையகத்துக்குச் செழிப்புமிக்க கவிதைப் பாரம்பரியம் உண்டு 71**
- மல்லியப்புசந்தி திலகர்

**ஐ.நா. சபையில் முழக்கம் செய்த கிருஷ்ணா வைகுந்தவாசன் 74**
- வே. விவேகானந்தன்

**அந்தோனியோ நெக்ரி: காலம் கவிழ்த்த சிந்தனையாளன் 77**
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**எங்கள் குருநாதர் பேராசிரியர் செ. யோகராசா 82**
- த. மேகராசா

**செ. யோகராசா (1949- 2023) : ஈழத்துப் பிராந்திய இலக்கியங்களின் கிட்டங்கி 89**
- மு. நித்தியானந்தன்

**பேராசிரியர் செ. யோகராசா 91**
- பால. சுகுமார்

**பேராசிரியர் செ. யோகராசா: தமிழ் இலக்கிய வெளியில் ஒரு பரந்த குரல் 92**
- ஜிஃப்ரி ஹாசன்

**'கவனமாகப் போங்கள்' யோகராசாவுடனான ஓர் அனுபவம் 94**
- சி. மௌனகுரு

**எனது தந்தைக்கு நிகரானவர் 96**
- சந்திரசேகரன் மணிசேகரன்

**ஒரு மனித நேயனுடன் பயணித்த காலங்கள் 98**
- 'மகுடம்' வி. மைக்கல் கொலின்

**மலையகத்தின் வேர்களைத் தேடித்தந்த விருட்சம் பேராசான் செ. யோகராசா 101**
- மல்லியப்புசந்தி திலகர்

**ஆழ் கடலெனவே ஒரு மனிதர் 105**
- நிலாந்தி சசிகுமார்

**ஈழத்து நவீன இலக்கியப் பிற்புலத்தில் பேராசிரியர் செ. யோகராசாவின் பார்வையும் பதிவும் 107**
- சி. ரமேஸ்

**எமது கிராம வாழ்வியலை வளப்படுத்திய சிற்பிகள்: 116**
- என். செல்வராஜா

**மலைய மாருதம் 200 120**
- நெல்லை ஜெயசிங்

**ஈழமண்ணில் இந்திய இராணுவம்: நூல்வழிப் பதிவுகள் 125**
- என். செல்வராஜா

**தடைசெய்யப்பட்ட செவ்வியல் நூலும் இரண்டு தேவதாசிகளும் 128**
- ச. சத்யதேவன்

**இராசராச சோழன் ஆண்ட ஈழ மண்டலம் ஈழமும் சோழமும் 134**
- வி. துலாஞ்சனன்

**தமிழ் இலக்கியப் பண்பாட்டின் உப தளங்கள் 137**
- ஜிஃப்ரி ஹாசன்

**ஆளப்பிறந்தாள் 140**
- த. ஜீவராஜ்

**பௌத்த தேசியவாதப் பின்புலத்தில் வெசாக் விழாவின் மீள் உருவாக்கம் 142**
தமிழாக்கம்: கந்தையா சண்முகலிங்கம்

**ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் சிந்தனைகள் 147**
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**மகாகவி சொல்லிய மந்திரம் 160**
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து.... 166**
-மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**நூற்றாண்டில் எழுந்துவரும் கு. அழகிரிசாமி 169**
- சு. வேணுகோபால்

**ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் - தொகுப்பு 174**
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**முத்தம்மா 178**
- சந்திரவதனா

**வாழ்வுரிமை 6 181**
- மா. சித்திவினாயகம்


**மாய வருத்தத்தின் மந்திர முடிச்சு 186**
- தேவகாந்தன்

**தடிகள் 190**
- ஜோர்ஜ் சோன்டேர்ஸ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




பாலஸ்தீனிய மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போரில் இதுவரை 21,000 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் குழந்தைகளும் சிறுவர்களும் பெண்களும். இதுவரை உலகில் நடந்த எந்தப் போரையும் விடத் தீவிரமாகத் திட்டமிடப்பட்ட முறையில் பொதுமக்களைக் கொல்வது எனும் கொள்கையை இஸ்ரேல் நடைமுறைப்படுத்தி வருகிறது. ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள், காஸாவில் இயங்கும் ஏனைய ஆயுத அமைப்புக்களின் உறுப்பினர்கள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர் என்ற விபரம் தெரியாது. தரைமட்டமாக்கப்பட்ட வடக்கு காஸாவின் இடிபாடுகளுக்குள்ளும் சரளைக் கற்களுக்கும் இடையே எத்தனை உடல்கள் சிதறிக் கிடக்கின்றன எனவும் எவருக்கும் தெரியாது. தங்களுடைய இருப்பை உறுதிப்படுத்துவற்காக இனப்படுகொலையும் செய்யத் தயங்க மாட்டோம் என்றும், தேவையெனில் அணுக்குண்டு வீசியாவது பாலஸ்தீனியர்களை அழிப்போம் என்றும் இஸ்ரேலின் அமைச்சர்களும் படைத்துறைத் தலைவர்கள் பலரும் தொடர்ந்து கூறி வருகின்றனர். இஸ்ரேலையும் யூதர்களையும் முற்று முழுதாக அழித்தொழிப்பதே எங்கள் நோக்கம் என்று ஹமாஸ் அமைப்பும் சொல்கிறது. இது அவர்களது அரசியல் யாப்பிலும் முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த வகையில் இஸ்ரேல் - பாலஸ்தீன அடிப்படை முரண்பாடு சிக்கல்கள் நிறைந்தது. அற விழுமியங்கள் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குவது. எனினும், இஸ்ரேல் அரசுக்கு இருக்கிற மிகவும் பலம் வாய்ந்த ஆதரவு அமெரிக்காவிடம் இருந்து வருகிறது. கூடவே ஐரோப்பிய ஒன்றியமும் வலுச் சேர்க்கிறது. இந்த நாடுகளின் மக்களில் பெரும்பாலானவர்கள் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைப் போரை எதிர்க்கிறார்கள். எனினும் அமெரிக்க, ஐரோப்பிய அரசுகள் அவர்கள் எதிர்ப்புக் குரலுக்குச் செவி சாய்ப்பதில்லை. கனடிய அரசும் இதற்கு விதி விலக்கல்ல. கண்மூடித்தனமான அல்லது நிபந்தனையற்ற இஸ்ரேல் ஆதரவு என்பது எல்லாக் கனடிய அரசுகளினும் இடைவிடாக் கொள்கையாக இருக்கிறது. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள், படைத்துறைத் தொழில் நுட்பம், இஸ்ரேலிய - கனடிய இரட்டைக் குடியுரிமை பெற்று இஸ்ரேலியப் படையில் இணைந்து அழித்தொழிப்புகளில் பங்கு பெற்று வருபவர்களுக்கான சலுகைகள், அவர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாமை எனக் கனடிய அரசு மிகப் பெரும் அளவில் பாலஸ்தீனிய மக்களுக்கு எதிரான இனப்படுகொலையில் பங்களித்து வருகிறது. கனடாவின் பெரும் வங்கியான ஸ்கோஷியா வங்கி உட்பட வேறு வங்கிகளும் இஸ்ரேலின் படைத்துறைத் தொழில் நுட்ப நிறுவனங்களில் முதலிட்டுள்ளன. கனடியர் அல்லது தமிழ்க் கனடியர் என்று பெருமையுடன் உரிமை கோரிக் குரலெழுப்புகிற நாங்கள் வெட்கித் தலை குனிய வேண்டிய இன்னொரு கணம் இது.




இன்று காசா பெருமளவுக்கு அழிதொழிக்கப்பட்டு விட்டது. குடியிருப்புகளை மட்டுமல்ல, காசாவின் மிகப் பெரிய நூலகம், அருங்காட்சியகங்கள். தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பள்ளி வாசல்கள், ஏராளமான பூங்காக்கள் என எல்



லாவற்றையும் இஸ்ரேல் அழித்து விட்டது. இனப்படுகொலையோடு பண்பாட்டு அழிப்பையும் இஸ்ரேல் திட்டமிட்டமுறையில் செய்து வருகிறது. பாலஸ்தீனிய மக்களின் அரசியல், பண்பாட்டு அடையாளங்களை முற்றாக அழித்து விடுவது என்பது போர்த்திட்டத்தின் மூல நோக்கம்.

பாலஸ்தீனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் ஒரு காலத்தில் மிக நெருங்கிய உறவு இருந்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் (PLO), ஜோர்ஜ் ஹபாஷ் தலைமையில் இயங்கிய Popular Front for the Liberation of Palestine – PFLP என்ற அமைப்பும் நமது சில இயக்கங்களுக்குப் பயிற்சி அளித்தன என்பது வரலாறு. உணர்வுத் தோழமை என்ற தளத்தில் எமக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் ஆழமான, மானசிகமான உறவு அன்று இருந்தது, இன்றும் இருக்க வேண்டும்.

ஈரோஸ் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்த சங்கர் ராஜியை 1986-ல் இராமேஸ்வரத்துக்கு அண்மையில் இருக்கும் தங்கச்சிமடம் எனும் சிறு ஊரில் சந்தித்து நேர்காணல் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது, அவர் அபு ஜிகாத் (காலீல் அல்-வாஸிர்) என்ற மிகவும் சிறப்பு வாய்ந்த பாலஸ்தீனியப் போராளித் தலைவர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டு, அவரது அமைப்பு ஈழத் தமிழ் விடுதலைப் போராட்டத்துக்குப் பல வழிகளிலும் தருகிற ஆதரவைப் பற்றி விரிவாகப் பேசினார். சங்கர் ராஜியுடனான இந்த நேர் காணலை நான் அப்போது பணி புரிந்து வந்து Saturday Review வார இதழில் வெளியீட்டிருந்தேன்.

அபு ஜீகாத் இஸ்ரேலால் கொல்லப்பட்ட பிற்பாடு அவருக்கான அஞ்சலி நூல் ஒன்றையும் ஈரோஸ் அமைப்பினரும் சங்கர் ராஜியும் வெளியிட்டிருந்தனர்.

1980-களில் விடுதலைப் போராட்டம் சார்ந்த பாலஸ்தீனக் கவிதைகளை பேராசிரியர், கவிஞர் நுஃமான் மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்தக் கவிதைகள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் இலக்கியப் பரிமாணங்களுக்கு மேலும் வலுச் சேர்த்தன.

இனப்படு கொலைக்கு ஆளாகிய மக்கள் என்ற வகையில் பாலஸ்தீன மக்களோடும் இன்று குறிப்பாக காசா மக்களோடும் மிகுந்த உணர்வுத் தோழமையோடு, தோளோடு தோளாக நாங்கள் நிற்க வேண்டும். அந்தத் தோழமையின் ஒரு சிறு வெளிப்பாடுதான் இந்தச் சிறப்புப் பகுதி.

நந்திக் கடலின் எதிரொலியைத்தான் நாம் இன்று காஸாவில் கேட்கிறோம்.



cheran@thaiveedu.com




இஸ்ரேல்-பலஸ்தீன முரண்பாடு என்பது அடிப்படையில் இஸ்ரேல் அரசுக்கும் பாலஸ்தீன மக்களுக்குமிடையிலான நிலம் சார்ந்த முரண்பாடு. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆள்புலம் சார்ந்த முரண்பாடு (Territorial conflict) என்றும் அதனைச் சொல்லலாம். நிலம் சார்ந்த முரண்பாட்டுக்கான தோற்றுவாய் என்பது இஸ்ரேலிய அரச உருவாக்கத்தோடு நேரடியாகத் தொடர்புபட்டதாகும். அதனைத் தொடர்ந்து இஸ்ரேல் கடைப்பிடித்த கொலனியாதிக்க விரிவாக்கமுமாகும். இன்று பாலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் தீவிரப்படுத்தப்பட்ட அரச பயங்கரவாத இன அழிப்பிற்கும், பாலஸ்



தீன நிலங்கள் மீதான கொலனியாதிக்கத்திற்குமான ஊற்று என்பது சியோனிச சித்தாந்தத்தோடு தொடர்புடையது. சியோனிசம் என்பது சியோன் (Sion/Zion) எனும் அடிச்சொல்லிருந்து உருவானது. அது ஜெருசலேம் நகரம் மற்றும் இஸ்ரேல் தேசம் போன்றவற்றைக் குறிக்கின்றது.

## ஐரோப்பிய நாடுகளிலிருந்து யூதர்கள் குடியேற்றம்:

1880-களிலிருந்து ஐரோப்பிய நாடுகளிலிருந்த யூதர்கள் வரலாற்று ரீதியான பாலஸ்தீனப் பிரதேசங்களுக்குக் (இன்றைய இஸ்ரேல்) கொண்டு சென்று குடியேற்றப்பட்டனர். 1948-ல் இஸ்ரேல் அரசுருவாக்கம் நிகழ்ந்த பின்னரான சமகாலம் வரையான கடந்த 75 ஆண்களாக பாலஸ்தீனப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கின்ற போக்கினை இஸ்ரேல் கைவிடவில்லை. வரலாற்று ரீதியான பாரம்பரிய பாலஸ்தீனம் என்பது இன்றைய இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களையும் (மேற்குக் கரை, காசா) உள்ளடக்கியது. இன்றைய அர்த்தத்தில் பாலஸ்தீனம் என்பது இஸ்ரேல் நீங்கலான மேற்குக் கரை மற்றும் காசாவை உள்ளடக்கியது. பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட 'இரு நாடுகள்' தீர்வும் அதனையே சுட்டுகின்றது.

சியோனிசக் கருத்தியலும், சியோனிச இயக்கமும் ஐரோப்பிய யூதர்களின் பாலஸ்தீனத்திற்கான குடியேற்றம், புலப்பெயர்வுக்கு உந்தித்தள்ளியது. சியோனிசம் இரு தளங்களில் தீவிரமாக இயங்கியது. ஒன்று தாயகம் திரும்புதல், இஸ்ரேல் தேச உருவாக்கம் சார்ந்த கருத்தியல் ரீதியானது, மற்றையது இஸ்ரேல் தேச உருவாக்கத்தைச் சாத்தியப்படுத்துகின்ற இலக்குகளைக் கொண்ட நேரடி நடவடிக்கைகளாகும். 1880-ல் அரசியல் இயக்கமாக உருவாக்கம் பெற்றது. அரசியல் சியோனிசத்தின் முக்கிய இலக்கு ஐரோப்பிய யூதர்களைப் பாலஸ்தீனத்திற் குடியேற்றுவது. இது குடியேற்றக் கொலனித்துவம் எனப்படுகின்றது.

யூத அரசுருவாக்கத்திற்கான உந்துதல் இரண்டு அடிப்படைகளில் உருவானதாகக் கணிக்கப்படுகின்றது. முதலாவதும் முதன்மையானதுமான உந்துதல் ஐரோப்பிய நாடுகளில் யூதர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகளாகும். அதாவது ஐரோப்பா முழுவதும் யூத-எதிர்ப்புவாதம் (Anti-Semitism & Holocaust) மேலோங்கியிருந்தது. யூத-எதிர்ப்புவாதத்திற்கான யூதர்களின் எதிர்வினையாகவும் சியோனிசமும் அதன் விளைவான இஸ்ரேல் அரசுருவாக்க இலக்கும் முனைப்புப் பெற்றது. மற்றையது தேசிய அரசுகள் பற்றிய சிந்தனை. அதாவது தனித்துவ அடையாளம் கொண்ட மக்கள் தமக்கான தனியரசைக் கொண்டிருத்தல் தொடர்பான கருத்தியல் அது. தேசியவாதத்தின் வளர்ச்சியின் ஒரு அம்சமாகவும் அதனைக் கருதமுடியும்.

## சியோனிச சித்தாந்தமும் அரசியல் இயக்கமும்:

சியோனிசம் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த ஒரு அரசியல் சித்தாந்தம். 125 ஆண்டுகளுக்கு முன்பு எழுந்தது. ஓஸ்திரிய யூத பத்திரிகையாளரான தியோடர் ஹெர்சல் (Theodor Herzl) 1896-ல் Der Judenstaat ('The State of the Jews') என்ற புத்தகத்தை வெளியிட்டார். யூதர்கள் தமக்கெனச்

சொந்த அரசை அமைப்பது மட்டுமே அவர்கள் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரே தீர்வாக அமையுமென்று அப்புத்தகத்தில் அவர் வாதங்களை முன்வைத்தார்.

ஹெர்சலின் கூற்றுப்படி, புதிய யூத அரசு மதத்தை அடிப்படையாகக் கொண்டதாக அல்லாமல், அறிவொளிக் கால ஐரோப்பியச் சிந்தனைகளைத் தழுவிக் கட்டமைக்கப்பட வேண்டுமென்று கருதினார். 'புனித பூமியில் ஒரு சோசலிச அரசுக்கான' வாதங்களை முன்வைக்கும் இன்னொரு புத்தகத்தினையும் அவர் 1902-ல் வெளியிட்டார். ஹெர்சலின் எண்



ணங்கள் 19-ம் நூற்றாண்டிற் பல வன்முறை துன்புறுத்தல்களை அனுபவித்த கிழக்கு ஐரோப்பிய யூதர்களிடையே பரவலான உந்துதலை ஏற்படுத்தியது. பாலஸ்தீனம் அதற்கான இலக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான காரணம், யூதர்களின் பாரம்பரிய வாழிடமாக பல நூற்றாண்டுகளுக்கு முன் அது இருந்தது, வரலாற்று ரீதியான வேர்களை அவர்கள் அங்கு கொண்டிருக்கின்றனர் என்பதாகும். அது யூதர்களுக்காக வாக்களிக்கப்பட்ட பூமி என்ற வலுவான நம்பிக்கை அவர்களிடம் உள்ளது.

## இன அழிப்பு (Holocaust):

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் நாசிகளால் யூதர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு 'Holocaust' என்ற சொல்லினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. 1938-1945 வரையான 8 ஆண்டுகளில் ஆறு மில்லியனுக்கு மேற்பட்ட யூதர்கள் இன அழிப்புச் செய்யப்பட்டனர். யூதர்கள் இதனை Shoah/Shoa என்று குறிப்பிடுவதாக அறியமுடிகிறது.

யூதர்கள் மீதான இன அழிப்பு என்பது ஒரு படிப்படியான திட்டமிட்ட செயல்முறை. அதாவது திடீரென நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் அல்ல. 1933-ல் அடொல்ஃப் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, 1939 செப்ரெம்பர் 2-ம் திகதி இரண்டாம் உலகப்போர் வெடித்தது வரையிலான காலப்பகுதியில் யூதர்கள் மீது திட்டமிட்ட வகையில் சட்ட, சமூக, பொருளாதார ரீதியான ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. அவர்களின் வாழ்வுச்சூழல் படிப்படியாக மோசமாக்கப்பட்டது. கொலைகளோடு, மோசமான சித்திரவதைகளும் துன்புறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

1939 வாக்கில் ஐரோப்பாவில் அண்ணளவாக பத்து மில்லியன் யூதர்கள் வாழ்ந்தனர். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களில் 60 வீதத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களில் அரைவாசியளவிலானோர் போலந்து நாட்டைச் சேர்ந்த யூதர்கள். 1941 கிட்லர் முன்வைத்த 'இறுதித் தீர்வினை' நடைமுறைப்படுத்துவதில் முழுமூச்சாக இறங்கியது ஜேர்மன். அதாவது ஐரோப்பாவில் யூத மக்களை முற்றாக அழித்தொழிப்பதாகும். கூட்டு மரணதண்டனை, கொலைக்களங்களில் யூதர்கள் மீதான படுகொலைகள் திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்டன. நாசிகளின் உலகக் கண்ணோட்டத்தில் அவர்களுக்கு இடமில்லை என்ற மானிட விரோத 'கொள்கையின்' அடிப்படையில் யூதர்கள் இன அழிப்புச் செய்யப்பட்டனர்.

ஹோலோகோஸ்ட் என்ற சொல்லின் அடி கிரேக்க மொழியைக் கொண்டது. முற்றிலும் எரிக்கப்பட்ட நிலையைக் குறிப்பதாகும். அத்தோடு புராதன மதங்களில் விலங்குகளைப் பலிகொடுத்தலையும் அச்சொல் குறிப்பதாக அறிய முடிகிறது. குறிக்கிறது. 18-ம் நூற்றாண்டிலிருந்து, 'படுகொலை' என்ற அதே அர்த்தத்துடன் ஆங்கில மொழியில் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. முதலாம் உலகப் போரின் போது ஆர்மீனியர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. 1960-களிலிருந்து யூதர்கள் மீதான இனப் படுகொலைக்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னான காலங்களில் இன அழிப்பினை அடையாளப்படுத்தும் சொல்லாக அது மாறியிருக்கின்றது. அதேவேளை இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட மக்கள் இனங்களையும் குழுக்களையும் அழித்தொழிக்கும் முனைப்புகளை விவரிக்க இந்தச் சொல்லின் உள்ளடக்கம் மீள் விரிவாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## ஹிட்லரின்
## யூத வெறுப்பு – அழிப்பு நடவடிக்கைகள்:

1921-ம் ஆண்டு, அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் தேசிய சோசலிச தொழிலாளர் கட்சியின் (National Socialist German Workers' Party) தலைவரானதிலிருந்து, 1945-ல் இரண்டாம் உலகப் போர் முடிவடைவதற்குச் சற்று முன்பு தற்கொலை செய்து கொள்ளும் வரை கட்சியின் சர்வாதிகாரத் தலைவராக இருந்தார். கட்சியின் செயற்பாடுகளும் ஹிட்லரின் சொல்லாடல்களும் யூத எதிர்ப்பு மனப்பான்மையை முதன்மையாகக் கொண்டிருந்தன என்பதும் யூதர்கள் மீதான இன அழிப்பும் மானிட வரலாற்றின் கொடூரமான பக்கங்களை நிறைத்துள்ளது. ஹிட்லர் சிறையில் இருந்தபோது, ஜேர்மனியை ஆரிய இன அடிப்படையில் ஒரு தேசமாக மாற்றுவதற்கான தனது திட்டத்தை ஹிட்லர் வகுத்தார் என்பதை அவர் (1924-ல்) எழுதிய Mein Kampf நூலில் காணலாம்.

அக்காலகட்டத்தில் ஐரோப்பா முழுவதிலும் யூத எதிர்ப்பு வாதம் மேலோங்கியிருந்தது. ஹிட்லரின் கடுமையான யூத-எதிர்ப்பு நூலில், எதிர்காலம் பற்றிய ஹிட்லரின் தொலைநோக்கில் யூதர்களுக்கு எவ்வித இடமும் இல்லை என்பதோடு, அவர்கள் மீதான இன அழிப்புத் திட்டங்கள் குறித்த குறிப்புகளாக அடையாளப்படுத்தக்கூடியவையும் உள்ளன.

முதலாம் உலகப் போரில் ஜேர்மனியின் தோல்வி, போர்க்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் மற்றும் திணிக்கப்பட்ட மற்றும் நிலையற்ற ஜனநாயக ஆட்சி

முறையால் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. ஹிட்லரின் கட்சியும் ஆரிய இனத்தைச் சேர்ந்த ஜேர்மனியர்களை



அடிப்படையாகக் கொண்ட வலுவான ஜேர்மனியைப் பற்றிய அவரது பார்வையும் படிப்படியாக ஜேர்மன் மக்களிடையே அதிக ஆதரவைப் பெற்றதற்கும், கட்சி 1933-ல் ஆட்சிக்கு வந்த பிறகு அவர் அதிபரானதற்கும் இவற்றின் தாக்கம் உள்ளன.

ஜனவரி 1933-ல் நாசிகள் அதிகாரத்தைக் கைப்பற்றியதை அடுத்து யூதர்கள் மீதான துன்புறுத்தல்கள், வன்முறைகள், படுகொலைகள் தீவிரப்படுத்தப்பட்டன. யூத வணிகங்கள், யூத மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டனர். அடுத்தடுத்த ஆண்டுகளில் தேசிய அளவில் துன்புறுத்தல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டதோடு, சமூகத்தின் பல பகுதிகளிலிருந்து யூதர்கள் விலக்கப்பட்டனர். கீழிருந்து மேலான ஒரு பொறிமுறைகளுக்கூடாக யூத-எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது யூத-வெறுப்புச் செயற்பாடுகள் அடிமட்டத்திலிருந்தும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டவாக்கங்கள் அதிகார மேலடுக்கினாலும் கொண்டுவரப்பட்டன.

நாசி அமைப்புடன் தொடர்புடைய ஆதரவாளர்கள் சமூக அடிமட்டத்திற் புறக்கணிப்பு, வன்முறைச் செயல்கள் மற்றும் அவமானப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து, அரசு 'அமைதி ஒழுங்கினை' நிலைநிறுத்துவதென்ற பேரில் யூத எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சட்டமாக்கியது. ஜேர்மனிய யூதர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாகவும் இரண்டாம் தர குடிமக்களாகவும் ஆக்கப்பட்டனர். யூதர்கள் திருமணம் செய்யவோ அல்லது 'ஆரியர்களுடன்' பாலுறவு கொள்ளவோ அனுமதி மறுக்கப்பட்டனர். வேலை வாய்ப்புகள் பாரிய அளவிற் கட்டுப்படுத்தப்பட்டன. யூதக் குழந்தைகள் 'ஆரிய' குழந்தைகளுடன் ஒரே வகுப்பிற் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்டமை போன்ற அனைத்துவித ஒடுக்குமுறைகளும் யூதர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன.

பல நூற்றாண்டுகளாக, ஜேர்மனி, பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், பிரித்தானியா போன்ற நாடுகள் யூதர்களை உள்நுழைய அனுமதிக்கவில்லை. யூதர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. 1938 காலப்பகுதியில், யூதர்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் காரணமாக ஜேர்மனியில் யூதர்களால் நடத்தப்பட்ட சுமார் 80 வீதமான யூத வணிக நிறுவனங்கள், 70 வீதமான தொழிற்றுறை மற்றும் கைத்தொழில் வணிகங்களும் மூடவேண்டியிருந்தது. இது ஜேர்மன் அரசின் பொருளாதாரத்தையும் பாதித்தபோதும் யூத வெறுப்புப் போக்கு அதிகரித்தே சென்றது.

## யூதர்களின் தாயகம் திரும்பும் உந்துதல் – நூற்றாண்டுகளின் கனவு:

ரோமானியப் பேரரசின் ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதும் யூதர்கள் மத்தியில் தாயகம் திரும்புவதற்கான உணர்வு தணியாமல் பேணப்பட்டது. ரோமப் பேரரசு பாலஸ்தீனத்தை பொ.ஆ.மு. 63-ல் கைப்பற்றியது. பொ.ஆ.பி. 395 வரை ஆட்சி செய்தது. ரோமானிய ஆட்சிக்காலத்தில் துறைமுகங்கள், கோட்டைகள், இராணுவத் தளங்கள், சாலைகள், பாலங்களை அமைத்து உட்கட்டுமானங்களை விரிவுபடுத்தினர். விரைவான படை நகர்வுகளை இக்கட்டுமானங்கள் சாத்தியப்படுத்தியதாகச் சொல்லப்படுகின்றது.

19-ம் நூற்றாண்டில், தாயகம் திரும்புவதற்கான யூதர்களின் முனைப்பு புதிய வடிவத்தை எடுத்தது. 'சியோனிசத்தின் தந்தை' தியோடர் ஹெர்சல், சியோனிசத்தை ஒரு அரசியல் இயக்கமாக மாற்றினார். மேலும் 1897-ல் சுவிஸர்லாந்தின் பாசல் நகரில் முதலாவது சியோனிஸ மாநாடு அவரால் கூட்டப்பட்டது. சியோனிச இயக்கத்திற்கு சர்வதேச கவனத்தை முதலில் ஏற்ப



டுத்தியவரும் அவரே. சர்வதேச அரசியல் அரங்கில் யூதர்களை ஓர் அங்கமாக ஆக்கியது இம்மாநாடு.

## ஐரோப்பிய நாடுகளிலிருந்து யூதர்களின் வெளியேற்றம்:

ஹிப்பாட் சீயோன் இயக்கம் (Hibbat Zion) 1800-களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்டது. இது இஸ்ரேல் தேசத்தில் 'யூத வாழ்வை மீளுருவாக்குவதை அதன் இலக்காகக் கொண்டிருந்தது. அங்கு விவசாய சமூகங்களை உருவாக்கத் தொடங்கியது. பல நூற்றாண்டுகளாக, ஜேர்மன், பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், பிரித்தானியா உட்பட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் யூதர்கள் வெளியேற்றப்பட்டனர். ஏனைய நாடுகள் அவர்களுக்கான உள்நுழைவினை முற்றிலும் மூடின. யூதர்களை அனுமதித்த நாடுகள் அவர்களுக்கெதிரான கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததோடு ஒடுக்குமுறைகள், துன்புறுத்தல்களையும் மேற்கொண்டன. இவை ஆழமான தடயங்களை விட்டுச் சென்ற அனுபவங்களாகின. குறிப்பாக 19-ஆம் நூற்றாண்டில் யூதர்கள் தங்கள் வாழ்வில் அடிப்படை

மாற்றங்கள் குறித்த நம்பிக்கையை இழந்தனர். ஐரோப்பாவின் அறிவொளிக்காலம் தமக்கான வாழ்வுரிமைகளைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை பொடிப்பொடியானது. ஐரோப்பாவின் தீவிர மற்றும் வன்முறையுடன் கூடிய யூத-வெறுப்பு யூதத் தலைவர்கள் சியோனிசத்தின் பக்கம் திரும்ப வழிகோலியது எனப்படுகின்றது.

மீண்டும் மீண்டும் படுகொலைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு ஆளான மக்கள், சிறுபான்மையினராகவும் நாடற்றவர்களாகவும் உள்ள காரணத்தினாலேயே, அவர்கள் எங்கு குடியேறினாலும் பாகுபாட்டிற்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உட்படுகின்றனர். எனவே யூதர்களின் பழைய தாயகத்திற்கு - இஸ்ரேல் தேசத்திற்கு திரும்புவதே அதற்கான நிரந்தரத் தீர்வு என்பது சியோனிசம் முன்வைத்த தீர்வு.




## பாலஸ்தீன நிலங்களில் யூதர்களின் குடியேற்ற அலைகள்:

பாலஸ்தீன நிலங்களில் யூதர்களின் குடியேற்ற அலைகள் யூதர்களுக்கு எதிரான படுகொலைகள், ஒடுக்குமுறைகளை அடுத்து நிகழ்ந்தன. 1880-களில் ரஷ்யாவில் நடந்த படுகொலைகளுக்குப் பிறகு முதலாவது குடியேற்றம் நிகழ்ந்தது. கிஷினோவ் படுகொலைகள் (Kishinov-pogrom, 1903) மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உக்ரைன் மற்றும் பெலரஸில் நடந்த தொடர்ச்சியான படுகொலைகளுக்குப் பிறகு இரண்டாவது குடியேற்ற அலை முன்னெடுக்கப்பட்டது. மூன்றாவது அலை ரஷ்ய உள்நாட்டுப் போரின் போதான யூதர்கள் மீதான படுகொலைக்குப் பிறகு இடம்பெற்றது. போலந்தில் யூத பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டம் இயற்றப்பட்டதை அடுத்து நான்காவது குடியேற்ற அலை நிகழ்ந்தது. ஐந்தாவது குடியேற்ற அலை நாசிகளிடமிருந்து தப்பிச் சென்ற ஜேர்மன் மற்றும் ஒஸ்திரிய யூதர்களைக் கொண்டிருந்தது.

சியோனிஸ்டுகள் அரசுருவாக்கத்திற்காகத் தீவிரமாக யூதக் குடியேற்றங்களை மேற்கொண்டதோடு, பாலஸ்தீனப் பகுதிகளில் அரபு மக்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தினர். ஐரோப்பாவில் வசித்த செல்வந்த யூதர்களால் நிலங்களை வாங்குவதற்கெனப் பெருமளவு நிதி அளிக்கப்பட்டன. அத்தோடு 1929-ல் இஸ்ரேலுக்கான யூத ஏஜென்சி (Jewish Agency for Israel) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு யூதக்குடியேற்றம் மற்றும் நிதி சேகரிப்பு முறைப்படுத்தப்பட்டது.


பாலஸ்தீனத்தில் யூத அரசை நிறுவும் யூதர்களின் நோக்கமும் விருப்பமும் சர்ச்சைக்குரியதாக இருந்தது. குடியேற்றத்திற்கு உள்ளான பாலஸ்தீனப் பிரதேசங்களில் வாழ்ந்த யூதர் அல்லாத அரபு மக்களிடையே வலுவான எதிர்ப்பு எழுந்தது. அரசுருவாக்க முன்னேற்பாடுகள் தொடங்கியதிலிருந்து 1948 வரை, சியோனிச இயக்கம் இரண்டு முக்கிய தளங்களில் முனைப்போடு செயற்பட்டது. பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய அரசை அமைப்பதற்கான சிவில் நிறுவனங்கள், இராணுவ பலம், அரசியல் மற்றும் சமூக வாழ்வியக்கத்திற்கான கட்டுமானங்களையும் நிறுவனங்களையும் அமைப்பதில் கவனம் செலுத்தியது. அடுத்தது இராஜதந்திர ரீதியான முன்னெடுப்புகளாகும். அது அரசுருவாக்கத்திற்குத் தேவையான சர்வதேச ஆதரவைப் பெறும் நோக்கத்திலானது.

## நூற்றாண்டுகளைக் கடந்த நில ஆக்கிரமிப்பு, ஹோலோகோஸ்ட்:

1882 – 1940 இடைப்பட்ட ஆறு தசாப்த காலத்திற்குள் கிட்டத்தட்ட அரை மில்லியன் யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு குடிபெயர்ந்தனர் (குடியமர்த்தப்பட்டனர்). முதலாம் உலகப் போருக்குப் பிறகு பாலஸ்தீனம் பிரித்தானியாவின் பாதுகாப்பின் (Under British protectorate) கீழ் இருந்தது. யூதக் குடியேற்றமானது புதிதாக வந்த யூதர்களுக்கும் அப்பகுதியின் அரபு மக்களுக்கும் இடையே வன்முறை மோதல்களை உருவாக்கியது. ஆயினும் இரண்டாம் உலகப் போரின்போது நாசிகளால் யூதர்கள் இனப்படுகொலைகளுக்கு உள்ளானதை அடுத்து, அவர்களின் தனியரசு உருவாக்கத்திற்கு ஆதரவு வழங்க உலகம் தயாரானது. 1947-ல் ஐ.நா முன்வைத்த பிரிவினைத் திட்டத்தின் மூலம் இஸ்ரேலின் உருவாக்கம் முன்னகர்த்தப்பட்டது. இஸ்ரேலுக்கும் அண்டை அரபு நாடுகளுக்குமிடையிலான போரின் விளைவாக, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பகுதி, பிரிவினைத் திட்டத்தில் யூத அரசுக்கு ஐ.நா வழங்கியதை விட பெரியதாக மாறியது.

மே 14, 1948 இஸ்ரேல் அரசு உருவாக்கப்பட்டது. அதன் விளைவாக அயலிலுள்ள அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் போர் மூண்டது. போரின் விளைவாக இஸ்ரேல் ஐ.நா தீர்மானத்தின் மூலம் பிரிக்கப்பட்டதைவிட கூடுதலான ஆள்புலங்களைக் கையகப்படுத்தியது. ஹோலோகோஸ்டிற்கு உட்பட்ட ஓர் இனம், இன்னொரு இனத்தின் வாழ்விடங்களை அபகரித்து, அவர்களைக் ஹோலோகோஸ்டிற்கு உட்படுத்தியுள்ளது என்பது மானிட வரலாற்றின் பெருமுரண். அதனை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றது என்பது மாபெரும் மானிட விரோதப் போக்கு. யூதப் பெருந்தேசிய இனவாதத்தின் இன்னொரு முகம் எனவும் இன்றைய சியோனிசத்தினைக் கணிப்பிட முடிகிறது.

உசாத்துணை:
- Zionism' (1995), Benyamin Neuberger
- History of Zionism', Aftenposten Innsikt (May, 2008), Grete Gaulin
- www.fn.no
- 'Ancient Palestine', 'Holocaust', Store norske leksikon




rooban.s@thaiveedu.com




# இஸ்ரேல் – பாலஸ்தீனப் போரில் மனித உரிமைகளே மேலோங்க வேண்டும்

## – ஷரி எய்க்கன், மைக்கேல் லிங்க், அலைக்ஸ் நீவ்



**ஷரி எய்க்கென்:** குயின்ஸ் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் இணைப் பேராசிரியராக உள்ளார். சர்வதேச மனித உரிமைச் சட்டம், குடிவரவுச் சட்டம், போர்க்குற்றங்கள் என்பன அவரது துறை.



**மைக்கேல் லிங்க்:** ஓய்வுபெற்ற சட்டப் பேராசிரியரும், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரும் ஆவார்.



**அலெக்ஸ் நீவ்:** ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பட்ட மேற்படிப்புத் துறையின் மூத்த ஆய்வாளர். அம்னெஸ்டி இன்டர்நேஷனல் கனடாவின் முன்னாள் பொதுச்செயலாளராக நீண்ட காலம் பணிபுரிந்தவர்.

மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கும் விவாதிப்பதற்கான நேரம் இதுவல்ல என்று கூறும் அனைவருக்கும், இதைவிட அவசியமான நேரம் இருந்ததில்லை என்று நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இஸ்ரேலிலும் பாலஸ்தீனத்திலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி தீவிரமான விவாதம் எப்போதாவது நடக்க வேண்டுமானால், இதுவே அந்த நேரம்.

தெளிவான பார்வை கொண்ட, மனித உரிமைகளை மையம் கொண்ட அணுகுமுறை, எந்த கனடிய அரசாங்கத்தினதும் அடையாளமாக இருந்ததில்லை. கனடா இஸ்ரேலியர்களின் உரிமைகளுக்காக எப்போதும் உறுதியாக நின்றுள்ளது. ஆனால், பாலஸ்தீனியர்களின் உரிமைகள் பற்றிக் கனடிய அரசுகள் பெரும்பாலும் மௌனம் காத்தன. அவற்றின் நிலைப்பாடுகள் பலமுறை இரட்டைத் தன்மை பொருந்தியவையாக இருந்தன. இரட்டைத் தன்மை (Hypocrisy) மனித உரிமைகளுக்கு எதிரானது. அதை மாற்ற வேண்டும். இஸ்ரேலியர்களதும் பாலஸ்தீனியர்களதும் உரிமைகளைச் சமத்துவமாகச் சந்தேகத்திற்கு இடமின்றி பாதுகாப்பது என்பது கனடாவின் நிலைப்பாடாக வரையறுக்கப்பட வேண்டும்.

வெறுப்பும் வன்முறையும் நிறைந்த வாரமாக இது உள்ளது. ஒவ்வொரு மணி நேரமும் காசா மீதான இஸ்ரேலிய முற்றுகையின் விளைவுகள் ஆழமடைகின்றன. தாக்குதல்களில் வெளிப்படும் தீவிரம் முன்னெப்போதும் இல்லாத அளவு பாரியதாக உள்ளது.

இஸ்ரேலில் ஹமாஸின் படுகொலைகள் நடந்த இடங்களிலிருந்து, நோவா இசை விழா, Kfar Aza கிப்புட்ஸ், Be'eri கிப்புட்ஸ் ஆகிய சமூகங்களில் இருந்து வெளிவரும் தகவல்கள் அங்கு நடந்தேறிய பயங்கரத்தைச் சொல்கின்றன. அங்கிருந்து பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட 222 பேரின் அன்புக்குரியவர்களின் வேதனையையும் நாம் உணர்கிறோம். ஹமாஸின் தாக்குதல்களில் 1,200 பேர் அளவில் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக, இஸ்ரேலிய இராணுவம் காசாவில் 22,000 குண்டுகள் மற்றும் ஏவுகணைகளை ஏவியது, கிட்டத்தட்ட 20,000 பாலஸ்தீனியர்களைக் கொன்றது, அவர்களில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள். குறைந்தது 50,000 பேர் காயமடைந்துள்ளனர். 1.1 மில்லியன் மக்களுக்குத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறச் சொல்லி எச்சரித்துள்ளது இஸ்ரேலிய அரசு. ஆனால் இவர்களுக்கோ உண்மையில் எங்கும் பாதுகாப்பான இடம் இல்லை. ஒரு மில்லியன் காசா மக்கள் இப்போது இடம்பெயர்ந்துள்ளதாக தகவல்கள் உள்ளன. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்தூதுவர் அலுவலகத்தின் கூற்றுப்படி, பூமியில் மிகவும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலைதான் காசா.

இதை நாங்கள் எழுதும் போது, காசாவின் அல்-அஹ்லி அராபி பாப்டிஸ்ட் மருத்துவமனையில் குண்டு வெடித்ததில் குறைந்தது 300 பேர் கொல்லப்பட்டதாக திகிலூட்டும் தகவல்கள் வருகின்றன.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த நெருக்கடி, அடிப்படை மனித உரிமைகள் - வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, ஆகியவற்றை அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை எமக்கு வலியுறுத்துகிறது. ஆயினும் அந்த உரையாடலுக்கான இடம் இப்போது, நச்சுத்துருவமாக மாறிவிட்டது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள், ஹமாஸ், ஆயுதமேந்திய



ஏனைய பாலஸ்தீனியக் குழுக்கள், அவர்களின் ஆதரவாளர்கள் அனைவரும் சர்வதேச மனிதாபிமான, மனித உரிமைகள் சட்டங்களைக் கடுமையாக மீறியுள்ளனர் என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளான அம்னெஸ்டி இன்டர்நேஷனல், மனித உரிமைகள் கண்காணிப்பகம், பாலஸ்தீனிய-இஸ்ரேலிய மனித உரிமைக் குழுக்கள், அல்-ஹக், பி'செலெம்(B'TSelem), ஐ.நா மனித உரிமைகள் சிறப்பு அறிக்கையாளர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் அறிக்கைகளில் இது தெளிவாகிறது. இதைப் போல, எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு, ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்பு, போன்ற எண்ணற்ற நிறுவனங்கள் விரிவான ஆவணங்களையும் அறிக்கைகளையும் இஸ்ரேலிய அரசின் தாக்குதல்கள் பற்றி வெளியிட்டுள்ளனர்.

இவற்றிலிருந்து நாம் பெற்றுக் கொள்வதென்ன?

இஸ்ரேல் மீது கண்மூடித்தனமான ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டமையும் பல ஆண்டுகளாக அங்கு நடந்த பயங்கரத் தாக்குதல்களும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற வகையில் அடங்கும்.

ஆனால், இஸ்ரேலின் பாதுகாப்பு என்பதைக் காரணமாக்கி பாலஸ்தீனியர்களை அடிபணியச் செய்வதை நியாயப்படுத்தலாம் என்ற எண்ணம் மிகப் பெரும் தவறாகும். இத்தகைய எண்ணம்தான் காசா, தெற்கு லெபனான் போன்ற இடங்களில் இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல்கள், காசாவின் மீதான நீண்டகால முற்றுகை, முன்னெப்போதுமில்லாத அளவு காசாவில் இடம்பெறும் அழித்தொழிப்பு, இஸ்ரேலிய அரசு எழுப்பிய முற்றுகைச் சுவரின் மனிதாபிமானமற்ற தாக்கம், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிரதேசத்தில் சட்டவிரோதமாக கட்டி எழுப்பப்படும் இஸ்ரேலிய குடியேற்றங்களின் பெருக்கம் என்பவற்றில் பிரதிபலிக்கிறது.

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலிய குற்றங்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கு எதிரான பாலஸ்தீன குற்றங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். ஆனால், அதற்கு பதிலாகத் தண்டனைக்கு அப்பாற்பட்டவையாக இவையைக் கொள்ளும் (Impunity) போக்கே நீடிக்கிறது.

பல தசாப்தங்களாக பாலஸ்தீனியர்களின் அடிப்படை உரிமைகளைப் புறக்கணிக்கும் இஸ்ரேலின் பாதுகாப்புக் கொள்கை, ஆக்கிரமிப்புப் படையாக இருக்கும் இஸ்ரேலின் நடவடிக்கைகள் பேரழிவை ஏற்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. பாரிய மனித உரிமை மீறல்கள் கொடூரமானவை. அநீதியானவை. சட்டத்திற்குப் புறம்பானவை. இவை பாதுகாப்பின்மையையும் வன்முறையையும் மேலும் வளர்க்கின்றன.

ஹமாஸ் தாக்குதலுக்கு எதிரான சாத்தியமான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் இஸ்ரேல் எடுக்க வேண்டும் என்பதும், எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதும் சரியே. ஆனால் காசாவின் எல்லைக்குள் வாழும் 2.3 மில்லியன் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான கொடிய கூட்டுத் தண்டனைகளை நடைமுறைப்படுத்துவதால் அல்ல.

குண்டு வீச்சுகளும் இராணுவ தாக்குதல்களும் அல்ல இப்போதைய தேவை. துணிச்சலான மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்லும் திட்டமும் உரையாடலுமே இப்போதைய தேவை.

பாதுகாப்பான, அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருப்பதற்கான இஸ்ரேலின் உரிமையை மீண்டும் உறுதிப்படுத்துவ

தற்கான முக்கியமான நேரம் இது.

காசா முற்றுகையை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், இஸ்ரேலிய சிறைகளில் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியக் குழந்தைகளை விடுவிக்கவும் முக்கியமான நேரம் இது.

இஸ்ரேலின் சட்டவிரோதக் குடியேற்றங்களை அகற்றுவதற்கும், ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், பாலஸ்தீனிய அரசை அங்கீகரிப்பதற்கும் இதுவே சரியான நேரம்.

மத்திய கிழக்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள பாலஸ்தீனியர்களும் யூதர்களும் தலைமுறை தலைமுறையாக உணரும் உளவடுக்களையும் துயர வரலாற்றையும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதற்கான அவசியமான நேரம் இது.

பாலஸ்தீனியர்களதும் இஸ்ரேலியர்களதும் உரிமைகள் சமத்துவம் கொண்டவை என்பதை ஏற்றுக் கொள்ளும் வகையில் கனடிய அரசு தனது கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும். கூடவே, போர் நிறுத்தம், பணயக் கைதிகளை விடுவித்தல், உடனடி மனிதாபிமான உதவிகளைத் துரிதப்படுத்தல் என்பவற்றுக்காகக் கனடிய அரசு தீவிரமாகச் செயற்பட வேண்டும்.

வன்முறையும் ஒடுக்குமுறையும் பாதுகாப்பைத் தரா. நீதி மட்டுமே சமாதானத்துக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மனித உரிமைகளுக்கு வாய்ப்புக் கொடுப்போம்!





# இஸ்ரேலின் அறிக்கைகள் இனப்படுகொலைக்கான உள்நோக்கத்தைக் காட்டுகின்றன

**– இஸ்ரேலிய வரலாற்றாசிரியர் உமர் பார்டோவ்**

**தமிழில் : துஷி ஞானப்பிரகாசம்**

பேராசிரியர் உமர் பார்டோவ் (Omer Bartov) இஸ்ரேலிய அமெரிக்க வரலாற்றாசிரியரும் அறிவுய்தியும் ஆவார். இஸ்ரேலில் பிறந்து, இஸ்ரேலின் தெல் அவிவ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற அவர் தற்பொழுது அமெரிக்காவின் புராதனப் பெருமை வாய்ந்ததும் உலகளவில் மிக முக்கியமானதொரு கல்வி நிறுவனமாகக் கருதப்படுவதுமான பிரவுண்ஸ் பல்கலைக்கழகத்திலே வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். இனவழிப்பு தொடர்பான மிக முக்கியமான நிபுணராகக் கருதப்படும் பேராசிரியர் பார்டோவ் இனவழிப்புக் குறித்தும், குறிப்பாக யூத இனவழிப்புக் (Holocaust) குறித்தும் பல்வேறு ஆய்வுகளையும் ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளதோடு 'வண்ணத்துப்பூச்சியும் கோடரியும்' (The Butterfly and the Axe; Amsterdam Publishers) என்ற நாவலையும் 2023-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, இஸ்ரேலிய யூதர்களிடையேயிருந்து பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் துணிவுடன் ஒலிக்கும் ஒரு முக்கிய குரலாகவும் பார்டோவின் குரல் கவனம் பெறுகிறது. அந்த வகையில், அவருடைய மிக அண்மிய வெளியீடான 'இனவழிப்பும், யூத இனவழிப்பும், இஸ்ரேல் பலஸ்தீனமும் - இடர்பாட்டுக்காலத்தில் தன்மை நிலை வரலாறு' (Genocide, the Holocaust and Israel-Palestine: First-Person History in Times of Crisis; Bloomsbury Academic) என்ற நூல் இரண்டாம் உலகப்போரின்போது யூதர்கள் முகங்கொடுத்திருந்த பேரிடருக்கும் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டபின் பலஸ்தீன மக்கள் முகங்கொடுத்துள்ள பேரிடருக்கும் இடையில் ஒப்புமைகளை மேற்கொள்கிறது. 'நான் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றாசிரியன். நான் ஒப்புமைகளை மலினமாகச் செய்வதில்லை' எனக்கூறும் அவர் பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேல் முன்னெடுத்துவரும் ஆட்சி தென்னாபிரிக்காவின் நிற ஒடுக்குமுறை (Apartheid) ஆட்சியையொத்தது என வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டி வருகிறார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஐரோப்பாவில் விளிம்பு நிலையிலிருந்த அரசியற் கோட்பாடுகள் அரசியலின் மையத்துள் நுழைந்தபோது பாசிசம் தோன்றியது போன்றதொரு நிலையே தற்பொழுது இஸ்ரேலில் நிலவுவதாக எச்சரிக்கும் பேராசிரியர் பார்டோவ், அந்த நிலை மிகவும் அச்சமூட்டுவதாகக் கூறுகிறார்.

பலஸ்தீனத்தின் காசா பகுதி மீதான இஸ்ரேலின் தற்போதைய முற்றுகை ஆரம்பித்தபின் அது தொடர்பாக பேராசிரியர் பார்டோவ் அவர்களுடன் அமெரிக்காவின் முற்போக்கு ஊடகவியலாளர்களும் குடியுரிமைச் செயற்பாட்டாளர்களுமான ஏமி குட்மன் (Amy Goodman) மற்றும் உவான் கொன்சாலஸ் (Juan Gonzales) ஆகியோர் 'டெமொக்கிரசி நௌ' (Democracy Now) தொலைக்காட்சிக்காக, கடந்த 2023-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 10-ஆம் நாள் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டனர். அந்த ஆங்கில நேர்காணலின் சில பகுதிகள் கீழே.

**▸ 1970–களிலே வட சீனாயில் ஒரு இஸ்ரேலிய இராணுவத்தினராக நீங்கள் பெற்ற பட்டறிவு பற்றியும், அது எவ்வகையில் இன்றைய நிலவரம் பற்றிய உங்கள் பார்வையின் மீது பாதிப்புச் செலுத்துகிறது என்பது பற்றியும் கூற முடியுமா?**

1973-க்கும் 1976-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான் இஸ்ரேலிய தற்காப்புப் படையில் (Israeli Defence Forces) ஒரு சிப்பாயாக இருந்தேன். அதனால், ஒரு இளம் சிப்பாயாக, நான் முதன் முதலில் அனுபவித்த உள அதிர்ச்சி எகிப்தும் சிரியாவும் ஒக்ரோபர் 6, 1973 அன்று இஸ்ரேல் மீது நடத்திய எதிர்பாராத தாக்குதலாகும். அந்த வகையில், அந்தத் தாக்குதல் நிகழ்ந்து 50 ஆண்டுகளும் ஒரு நாளும் கடந்த நிலையில் 2023-ம் ஆண்டு ஒக்ரோபர் 7-ம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியபோது, அது எனக்கும் எனது தலைமுறையைச் சேர்ந்த பலருக்கும் மிகவும் உள அதிர்ச்சியை ஏற்படுத்திய நிகழ்வாக இருந்தது.

எனது சேவைக் காலத்தில், நான் வடக்கு சீனாயிலும் பணியாற்றினேன், நான் சார்ந்திருந்த கட்டளை மையம் காஸாவில் இருந்தது. அதனால் நான் அடிக்கடி காசாவுக்குச் செல்வேன், அது அப்போது ஏறக்குறைய 350,000 மக்களைக் கொண்டி


ருந்தது. ஏழ்மையிலும், நம்பிக்கையற்ற நிலையிலும், நெரிச லுக்கிடையிலும் வாழ்ந்த மக்கள். இப்போது காசாவில் இரண்டு முதல் இரண்டரை மில்லியன் மக்கள் வாழ்கின்றனர், அப்போதிருந்ததைவிட இப்போது ஏழ்மையும், நெரிசலும், நம் பிக்கையீனமும் மிகமிக அதிகரித்துள்ளது. 16 ஆண்டுகளாக அப்பகுதி இஸ்ரேலிய முற்றுகையின் கீழ் இருப்பதைக் கருத் தில் எடுக்கும்போது, அந்த நம்பிக்கையீனம் நீண்டகாலமா கத் தொடர்வதை உணர்ந்து கொள்ளலாம். எனவே, இந்த மோசமான மனிதாபிமான பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இத்தனை ஆண்டுகளாக முன்னேற்றமெதுவும் காணப்படாதி ருப்பதென்பது என்னைப் பொறுத்தவரையில் என்னைத் தனிப்பட்ட முறையில் பாதிப்பது.

நான் மேலும் ஒரு விடையத்தைக் குறிப்பிட வேண்டும். நான் வழக்கமாக ஆக்கிரமிப்பு தொடர்பான கடமைகளில் சிப்பா யாக பணியாற்றவில்லை. ஆனால், அப்படிப் பணியாற்றிய ஒரு காலமும் இருந்தது. அந்த நேரத்தில் எனது படைப்பிரிவு ஒரு எகிப்திய நகரத்தின் வழியாகச் சென்றது எனக்குத் தெளி வாக நினைவில் உள்ளது. மக்கள் யன்னல்களுக்குப் பின் னால் இருந்து எங்களைப் பார்க்கிறார்கள். நாங்கள் அங்கு இருப்பதை அவர்கள் விரும்பவில்லை என்பதும், எங்களைப் பார்த்துப் பயப்படுகிறார்கள் என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. நாங்கள் தெருவில் நடந்து செல்கிறோம். நாங்கள் அந்த இடத்தில் இருப்பது எமக்கும் அச்சமூட்டுவதாயும், நாங்கள் அணிவகுத்துச் செல்லும்போது எங்களுக்கு என்ன நடக்குமோ என்ற பயமூட்டுவதாயும் இருக்கிறது. ஆக்கிரமிப் பில் ஈடுபட்டுள்ள சிப்பாய் என்றால் என்ன என்ற உணர்வு அந்தக் காலங்களில் என்னுடன் கூடவிருந்தது, அது எப்போ தும் என் சிந்தனையை வடிவமைத்தது. அரசியல், பகுப் பாய்வு சார்ந்த காரணங்களுக்கு அப்பாற்பட்டு, தனிப்பட்ட முறையில் இந்த ஆக்கிரமிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என நான் கருதியதற்கான காரணம் இது. இஸ்ரேல் மீதான ஹமாசின் தாக்குதலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே, ஓகஸ்ற் மாதம் நான்காம் நாள், இந்த ஆக்கிர மிப்பை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஒரு பகிரங் கக் கோரிக்கையை நான் உள்ளிட்ட பலர் விடுத்திருந்தோம்.

▸ **இப்போது, குறிப்பாக இது போன்ற சர்ச்சைகள் தொடர்பாக, மானிடத்திற்கு எதிரான குற்றம், போர்க் குற்றம், இனப் படுகொலை என்ற பதங்களை நாங் கள் கேட்கிறோம். பெரும்பாலான மக்கள் இவற் றிற்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வில்லை. நம்மில் சிலருக்கு, போர் என்பதே ஒரு குற் றம், ஆகவே 'போர்க் குற்றம்' என்று சொல்வது கிட் டத்தட்ட தேவையற்றது. இந்தப் பதங்களுக்கு இடை யேயான வேறுபாடுகளைப் பற்றிய வழிகாட்டு தலையோ அல்லது உணர்வையோ நீங்கள் எங்க ளுக்கு வழங்க முடியுமா?**

ஆம். இது மிகவும் முக்கியமான கேள்வி என்று நான் நினைக் கிறேன், ஏனென்றால் மக்கள், நீங்கள் சொல்வது போல், இந் தப் பதங்களை உண்மையில் அவற்றின் அர்த்தம் பற்றிச் சிந் திக்காமல் பயன்படுத்துகிறார்கள். மேலும், இனப்படுகொலை மிக மோசமான குற்றமாக கருதப்படுவதால், நடக்கும் எந்த ஒரு கொடூரத்தையும், ஒருவித தீவிர தலைப்புக்கு தகுதியா னது என்று மக்கள் நினைக்கும் எதையும், அவர்கள் இனப் படுகொலை என்று அழைக்கிறார்கள்.

உண்மையில் போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை பற்றிய ஐக்கிய நாடுகள் தீர்மானங்கள் உள்ளன, அவை அவற்றை தெளிவாக வரையறுக்கின்றன. அந்த வரையறை களை ஒருவர் ஏற்காது விடலாம், ஆனால் அவையே அனைத் துலக சட்டத்தின் கீழ் உள்ள வரையறைகள். இனப் படுகொ லைக்கான ஐக்கிய நாடுகள் தீர்மானம் இனப் படுகொ லையை ஒரு தேசிய, இன, அல்லது மதக் குழுவை முழுமை




யாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துட னான செயற்பாடுகளாக வரையறுக்கிறது. இது ஒரு மிக முக் கியமான வரைவிலக்கணம். ஏனெனில் இது இரண்டு விடயங் களைக் கோருகிறது. முதலில், நோக்கம். கொலைகள் போரின், வன்முறையின் ஒரு பகுதியாக நிகழவில்லை. வேண் டுமென்றே நிகழ்த்தப்படுகிறது எனக் காட்டவேண்டும். இரண் டாவதாக, அந்தக் குறிப்பிட்ட குழுவை அழிப்பதே நோக்கம் என்று வரையறுக்கப்படுகிறது. அதாவது தனிநபர்களைக் கொல்வதல்ல. ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்களைக் கொல்வது.

இது போர்க்குற்றங்களிலிருந்து மிகவும் வேறுபட்டது, ஏனென் றால் போர்க்குற்றங்கள் என்பது போராளிகள், பொதுமக்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் எதிராகப் போர்ச் சட்டங்களை யும் நடைமுறைகளையும் மீறுவதாகும். மானிடத்திற்கு எதி ரான குற்றங்கள் எந்தவொரு மக்கட்கூட்டத்திற்கும் எதிரான அழித்தலுடனோ அல்லது பிற பாரிய குற்றங்களுடனோ

தொடர்புடையது. இவற்றுக்கு நீங்கள் உள்நோக்கத்தைக் காட்ட வேண்டியதில்லை, அவை போரின் போதே நடக்க வேண்டியதும் இல்லை. எனவே, இந்த மூன்று வகைகளையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியம்.

இதில் நான் மேலும் ஒரு வகைப்பாட்டைச் சேர்ப்பேன், அது பற்றி எந்தத் தீர்மானமும் இல்லாதபோதும், அதற்கும் ஒரு



வரைவிலக்கணம் உள்ளது. அதுவே இனச் சுத்திகரிப்பு. இனச் சுத்திகரிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து மக்களை அகற்றுவதற்கான முயற்சியாகும், பொதுவாக நீங்கள் அந்த பிரதேசத்தை அடைய விரும்புகிறீர்கள், மேலும் அதில் வாழும் மக்கள் அதில் தங்குவதை நீங்கள் விரும்பவில்லை. இனப் படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட குழுவை, அக்குழுவினர் எங்கிருந்தாலும் கொல்லும் முயற்சியாகும். ஆனால் இவை இரண்டுக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது, ஏனென்றால் பெரும்பாலும் இனச் சுத்திகரிப்பு இனப் படுகொலையாக மாறும். உண்மையில், முதலாம் உலகப் போரில் ஆர்மீனிய இனப் படுகொலையில் அது நடந்தது, மேலும், யூதர்களை குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து அகற்றும் முயற்சியாகத் தொடங்கிய யூத இனப்படுகொலையிலும் அது நடந்தது, பின்னர், ஜேர்மனியர்கள் யூதர்களை நகர்த்த இடம் இல்லை என்று உணர்ந்தபோது அவர்களை மொத்தமாக கொலை செய்ய முடிவு செய்தனர். எனவே, இந்த வெவ்வேறு வகைப்பாடுகளைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்தால், நாம் களநிலையில் பார்ப்பதையும் அதைப்பற்றி நாம் எவ்வாறு உணர்கிறோம் என்பதையும் வேறுபடுத்தி அறியலாம்.

▶ **காசாவில் தற்போது என்ன நடக்கிறது என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**


எனது கருத்து பின்வருமாறு உள்ளது. இஸ்ரேலிய அரசியல் தலைவர்களும் இராணுவத் தலைவர்களும் காசாவைப் பற்றி மிகவும் திடுக்கிடத்தக்கதும் அச்சமூட்டுவதுமான அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர், காசாவை தரைமட்டமாக்குவது பற்றி அவர்கள் பேசுகிறார்கள், ஹமாஸைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் அதை நீட்டிப்பதன் மூலம் காசாவில் வாழும் மக்களை மனித விலங்குகள் என்று குறிப்பிடுகிறார்கள். காசாவின் மொத்த மக்கள் தொகையையும் காசாவிற்கு வெளியே நகர்த்துவது பற்றி பேசுகிறார்கள். இது இனச் சுத்திகரிப்புக்கான தெளிவான நோக்கமாகும். எனவே, அந்த அறிக்கைகள் உள்நோக்கத்தைக் காட்டுகின்றன. அவை இனப் படுகொலைக்கான நோக்கமாகும். இது நிரூபிப்பதற்குப் பொதுவாகக் கடினமானது. இனப் படுகொலையை மேற்கொள்பவர்கள் அதைத்தான் தாம் செய்கிறார்கள் என்று எப்போதும் கூற விரும்புவதில்லை.

இரண்டாவது, அவர்கள் உண்மையில் அங்கு என்னதான் செய்கிறார்கள்? களத்தில் இருக்கும் இராணுவத் தலைவர்கள், ஹமாஸ் இலக்குகளைத் தாக்குவதற்குத்தான் முயற்சி செய்கிறோம் என்று கூறுகிறார்கள். ஹமாஸ் அடிக்கடி அதன் தலைமையகத்தையும் ஏவுகணைத் தளங்கள் போன்றவற்றையும் மருத்துவமனைகளுக்குள்ளும், மசூதிகளுக்குள்ளும், விளையாட்டு மைதானங்களுக்குள்ளும், பாடசாலைகளுக்குள்ளும் அமைக்கிறது என்று கூறுகிறார்கள். அதில் பெரும்பாலும் உண்மையிருப்பதாகவே நான் கருதுகிறேன். எனவே, தாம் ஹமாஸைத் தாக்கவே முயற்சிக்கிறார்கள், மக்களைத் தாக்க முயற்சிக்கவில்லை என்று இராணுவம் கூறுகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, மக்களும் கொல்லப்படுகிறார்கள். அந்த வகையில், விகிதாசார அடிப்படையில் மிக அதிகமான பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள் என்பது தெளிவு. ஹமாஸ் வழங்கிய எண்களை நாங்கள் நம்பாதுவிட்டாலும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களில் உள்ளது என்பதே உண்மை. அவை இன்னும் அதிகமாக இருக்கலாம், ஏனென்றால் பல உடல்கள் இடிபாடுகளுக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கலாம். அவர்களில் பெருமளவானோர் குழந்தைகள். காசாவின் மக்கள் தொகையில் பாதிப் பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, என்னைப் பொறுத்தவரை, காசாவில் போர்க்குற்றங்கள் நடக்கின்றன என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தெரிகின்றன, மானிடத்திற்கு எதிரான குற்றங்களும் நிகழ்கின்றன.

▶ **ஒக்ரோபர் 7–ம் தேதியிலான ஹமாஸ் தாக்குதலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே, இஸ்ரேலின் பாலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்பை தென் ஆபிரிக்காவின் 'அப்பாதைட்' நிறவெறி ஒடுக்குதலுக்கு ஒப்பிட்டு, அந்த ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரிய திறந்த மடலை நீங்களும் இன்னும் பல யூத வரலாற்றாசிரியர்களும், கல்விமான்களும் வரைந்திருந்தீர்கள். இந்நாட்களில் பெரும்பாலும், இஸ்ரேலில் 1,300 பேர் கொல்லப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு, அது பற்றி எந்த வகையிலான சூழமைவு சார்ந்த கருத்துகளை முன்னெடுத்தாலும், நடந்ததை நியா**

**யப்படுத்துகிறீர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறீர்கள். ஒரு வரலாற்றாசிரியராக நீங்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியது பற்றிப் பேச முடியுமா? பல ஆண்டுகளுக்கு முன்பு தென்னாபிரிக்காவின் நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்மன் ரூட்டு பலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்றபோது, தனது சொந்த நாடான தென்னாபிரிக்காவின் நிறவெறியைவிட மோசமான நிலைமை இருப்பதைக் கண்டாதாகக் கூறினார். எனவே, அந்தச் சொல்லை நீங்கள் தெளிவாகச் சிந்தித்துப் பயன்படுத்துகிறீர்கள், அத்தோடு 'ஆக்கிரமிப்பு' என்ற சொல்லைப் பயன்படுத்துவது பற்றியும் விவாதம் உள்ளது.**

அந்த அறிக்கையை நாங்கள் ஜூலையில் உருவாக்கி, இறுதியாக ஓகஸ்டில் வெளியிட்டோம், 'அறையில் உள்ள யானை' என்று கூறுகிறோம், நாங்கள் பேசிக்கொண்டிருந்த அறையில்




இருந்த யானை ஆக்கிரமிப்பு. அதை நாங்கள் மேற்குக் கரையில், அப்பாத்தைட் ஆட்சி நடைபெறுவதாக வரையறுத்தோம். நாங்கள் அதைச் செய்ததற்குக் காரணம் உண்டு. நெதன்யாகு அரசாங்கத்திற்கு எதிராக இஸ்ரேலில் பரந்த போராட்டங்கள் நடைபெற்றன, நெதன்யாகு அரசாங்கம் நீதித்துறை அமைப்பை முற்றுமுழுதாக மாற்றியமைக்க முயற்சித்தது. இது உண்மையில் இஸ்ரேலில் சட்ட ஆட்சியைக் குலைத்து, நீதித்துறையைப் பலவீனப்படுத்தி, நிறைவேற்று அதிகாரமுள்ள அரசைப் பலப்படுத்தும் முயற்சியாகும். மேற்குக் கரையில் ஆக்கிரமிப்பு ஆட்சியை விரிவுபடுத்தி, இறுதியாக அந்தப் பகுதியை இஸ்ரேலுடன் இணைத்து அங்கே பலஸ்தீனியர்கள் வாழ முடியாத ஒரு நிலையை உருவாக்குவதே இதன் குறிக்கோள். அங்கே அரை மில்லியனுக்கும் அதிகமான யூத குடியேற்றங்கள் உள்ளன. அத்துடன் அங்கே சுமார் 3 மில்லியன் பலஸ்தீனியர்கள் வாழ்கின்றனர்.

சரி, 'அப்பாத்தைட்' என்பதன் அர்த்தம் என்ன? தென்னாபிரிக்காவில் என்ன நடந்ததோ அதுவே அப்பாத்தைட் என்று மக்கள் பெரும்பாலும் நினைக்கிறார்கள். மேலும் இந்த சொல் அங்கிருந்துதான் வருகிறது. ஆனால் உண்மையில், அப்பாத்தைட் என்று சொல்லுக்கான ஐக்கிய நாடுகள் வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்படும் நிலைமைகள் அனைத்தும் மேற்குக் கரையிலும் நிலவுகின்றன. அவற்றில் மிக முக்கியமானது, மேற்குக் கரையில் யூதர்கள் மற்றும் பலஸ்தீனியர்கள் என்ற இரண்டு மக்கட் கூட்டங்கள் உள்ளனர். யூதர்கள், குடியேறியவர்கள், இஸ்ரேலிய குடிமக்கள். அவர்கள் இஸ்ரேலிய சட்டத்தின் கீழ் வாழ்கிறார்கள். அவர்கள் இஸ்ரேலிய பாராளுமன்றத்திற்கு வாக்களிக்கலாம். இஸ்ரேலில் உள்ள யூதர்கள் அனுபவிக்கும் குடியாட்சியின் அனைத்து உரிமைகளையும் அவர்களும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அங்குள்ள பலஸ்தீனியர்கள் முற்றிலும் மாறுபட்ட சட்டங்களின் கீழ் வாழ்கின்றார்கள். அந்தச் சட்டங்கள் அவர்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கவில்லை. அதாவது அவர்கள் இராணுவ ஆட்சியின் கீழ் வாழ்கின்றார்கள். அவர்கள் இராணுவ நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகிறார்கள். அவர்களை முடிவில்லாமல் சிறையில் அடைக்கலாம். எனவே, இவை முற்றிலும் வேறுபட்ட சட்டங்களின் கீழ் வாழும் இரண்டு குழுக்கள். பாலஸ்தீனியர்களின் வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் முறையிலும், அங்குள்ள யூத மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையிலும் தனித்தனியான சாலைகள், சாலைத் தடைகள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றின் மூலமும் அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் பிரிக்கப்படுகிறார்கள். எனவே, அந்தக் கண்ணோட்டத்தில், மேற்குக் கரையில் அப்பாத்தைட் ஆட்சி நடைபெறுவது தெளிவு.

இந்த நிலை, பல வழிகளில் இஸ்ரேலுக்குள் சுரந்துள்ளது. தலைமுறை தலைமுறையாக இஸ்ரேலிய ஆண்களும் பெண்களும் அழைக்கப்பட்டு, இராணுவச் சீருடையில் மேற்குக் கரையில் காவலர்களாகப் பணியாற்றச் செல்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் செய்வது மக்களைக் காவலில் வைப்பதுதான். இது இஸ்ரேலியர்களின் பல தலைமுறைகள் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் அதிகாலை 4:00 மணிக்கு வீடுகளுக்குள் புகுந்து தங்களுக்கு விருப்பமானவர்களைக் கைது செய்யலாம் என்ற எண்ணத்துடன் இயங்குகிறார்கள். எனவே, மேற்குக் கரையில் அப்பாத்தைட் ஆட்சி நிலவுகின்றது என்பதோடு அது இஸ்ரேலிய சனநாயகத்தையும் சீரழித்துள்ளது. இதன் விளைவாகவே இஸ்ரேலின் சனநாயக அமைப்பையே மாற்ற நெத்தன்யாகு முயல்கிறார்.



dushy.gnanapragasam@thaiveedu.com




# நெருப்பினூடாகவும் நீரினூடாகவும் பாதுகாப்பேன்

- ரதன்

*‘சிதைந்த எலும்புகளும்*
*பேச்சற்ற மரண ஓலங்களுமாக*
*தென்னை மரங்களுக்கிடையில்*
*இடு காடுகள் நிரம்பியிருக்கின்றன.*

*அமைதியான சர்வாதிகாரி*
*நீண்ட தொப்பிகளுடனும்*
*தங்கச் சிகைப் பின்னல்களோடும்*
*கழுத்துப் பட்டிகளோடும்*
*பேசிக்கொண்டிருக்கின்றான்’.*

பாப்லோ நெருதா (தமிழில்: சுகுமாரன்)

ஐ.நா சபையில் முதல் தடவையாகக் கனடா, காசா-இஸ்ரேல் உடனடிப் போர்நிறுத்தக் கோரிக்கைக்குச் சார்பாக வாக்களித்துள்ளது. இது கனடாவில் ஆளும் லிபரல் கட்சி மத்தியில் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஒக்ரோபர் ஏழு ஹமாசின் தாக்குதல்களின் பின்னர் ஐ.நா சபைக்கான கனடியத் தூதுவரும் முன்னாள் லிபரல் கட்சித் தலைவருமான பொப் ரே, ஒட்டாவில் சகல கட்சி உறுப்பினர்களின் மத்தியில் பேசிய பேச்சின் சாராம்சம் இது: *'இது ஒரு நேர்த்தியாக திட்டமிட்ட தாக்குதல். இதனை ஹமாஸ் மட்டும் திட்டமிடவில்லை. இதன் பின்னால் ஹமாசைச் சுற்றியுள்ள பல சக்திகளும் இணைந்து திட்டமிட்டுள்ளன. இரண்டாம் உலகப் போரில் நோர்மன்டி தாக்குதலைப் போன்று தன்னிச்சையாக திடீரென நடத்தப்பட்டுள்ளது.'1 இதனைக் கூறிமுடித்த பொழுது அவரது குரலில் ஏமாற்றம் தொனித்தது.*

ஒக்ரோபர் ஏழின் பின்னர் கனடா தனது ஹமாஸ் பற்றிய நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. ஒக்ரோபர் 17-ல் Al Ahli Arab வைத்தியசாலை மீது தாக்குதல் நடைபெற்றது. இஸ்ரேல் இராணுவம் இத்தாக்குதலை மேற்கொள்ளவில்லை எனக் கனடா உறுதியாகத் தெரிவித்தது. நவம்பர் 10-ந் திகதி வரையிலான காலப்பகுதி வரை 18 வைத்தியசாலைகள் மீதும் (50 வீதம்), 46 சுகாதார நிலையங்கள் மீதும் (64 வீதம்) இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகள் தாக்குதலை மேற்கொண்டன. மேற்கு நாடுகள் மௌனம் சாதித்தன. கனடா உட்பட மேற்கு நாடுகள் தொடர்ச்சியாகக் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை நியாயப்படுத்தின. ஆனால், நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. கைதிகள் பரிமாற்றம் நடைபெறுவதற்காகச் சில நாட்கள் போர் நிறுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. இப்போர் நிறுத்தத்திற்குப் பிரதான காரணியாகக் கட்டாரேயிருந்தது. அதன் பின்னர் தொடர்ந்து இஸ்ரேல் காசா மீது தாக்குதல்களை தொடர்ந்தது. இந் நிலையில் ஐ.நா சபை தீர்மானத்துக்கு ஆதரவாகக் கனடா வாக்களித்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆனால் இடது சாரிப் புத்திஜீவியும் முதிர்ந்த அரசியல்வாதியுமான பொப் ரே சி.ரி.வி தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் ஏன் கனடா ஆதரவாக வாக்களித்தது என்பதனைத் தெளிவுபடுத்தினார். போர் நிறுத்தம் என்பது காசா மக்களுக்கான நிவாரணப் பணிக்கானது. ஒரு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கானதல்ல. அரசியல் தீர்வு அவசியம் எனப் பொப் ரே கூறினாலும், அதனை அவர் வலியுறுத்தவில்லை. அதே சமயம் காசா மக்களினதும், மேற்குக் கரை மக்களினதும் பிரதிநிதிகளான ஹமாசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவதனைக் கனடா ஏற்றுக்கொள்ளாது. ஹமாஸ் அழிக்கப்படவேண்டிய இயக்கம் எனப் பொப் ரே மீண்டும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் கனடாவின் இந்த மாற்றத்துக்கான ஒரு காரணம் கனடாவிலும், உலகெங்கும் தொடர்ச்சியாகக் காசா மக்களுக்கு ஆதரவாக எழுந்துள்ள மக்கள் ஆதரவு. ஆனால், கனடாவில் நடைபெற்ற காசா மக்கள் ஆதரவு ஊர்வலங்களில் கலந்துகொண்ட பலரை அவர்கள் சார்ந்த நிறுவனங்கள் வேலை நீக்கம் செய்துள்ளது. உதாரணத்துக்கு ஒரு சிலர்... ஒன்ராரியோப் பாராளுமன்ற ஹமில்ரன் மத்திய தொகுதி உறுப்பினர் Sarah Jama தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்த கருத்துக்காக என்.டி.பி-க் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். Yara Jamal- CTV Atlantic , Zahraa Al-Akhrass-Global News, Aarij Anwer - Western University, Javier Dávila - Toronto District School Board (Suspended), Mostafa Ezzo - Air Canada, Yipeng Ge - University of Ottawa (Suspended), Samantha Pearson - University of Alberta, Ben Thomson - Mackenzie Richmond Hill Hospital (Suspended). இவர்களை விட பலர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். இதற்கு எதிராகக் கனடிய மத்திய அரசோ, மாகாண அரசாங்கங்களோ நடவடிக்கை எடுக்கவில்லை.

பிரபல ஹொலிவூட் இயக்குனர் ஒலிவர் ஸ்ரோன் கூறியது போல்... நீங்கள் யன்னலுக்கு வெளியே பார்க்கலாம். அதற்கான சுதந்திரம் உண்டு. ஆனால் ஏன், எதற்காக என்று கேள்விகளைக் கேட்க உங்களுக்குச் சுதந்திரமில்லை. இதுவே மேற்கின் ஜனநாயகமாகும்.

கனடாவின் இஸ்ரேலுடனான உறவு என்பது மிகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு (charities) கனடியர்களால் வழங்கப்படும் நிதியில் 10 வீதமான நிதி இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்குச் செல்கின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. 2019-ல் சி.பி.சி இந்தக் குற்றச்சாட்டை வைத்திருந்தது.
(https://www.cbc.ca/news/politics/jnf-charity-donations-1.4949072)

| Year | Amount (Canadian dollars) | Ranking |
|---|---|---|
| 2018 | $228,069,162 | 1 |
| 2019 | $333,426,311 | 1 |
| 2020 | $320,949,573 | 2 |
| 2021 | $231,874,578 | 2 |
| 2022 | $69,329,188* | 9 |
| TOTAL | $1,183,648,812 | |

*இஸ்ரேல் கனடிய தொண்டு நிறுவனங்களிடமிருந்து அதிகளவு நன்கொடைகளை பெற்றுள்ளது என்பதை அண்மைய தகவல் அறியும் சரத்தின் கீழ் அறியப்பட்ட தகவலில் கனடிய வருமான கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது (4)*

கடந்த ஐந்து வருடங்களில் 10 பில்லியன் டொலர், சுமார் 200 அரச சார்பற்ற நிறுவனங்களால் இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இஸ்ரேலுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதியைவிட அதிகமானது. இவ்வாறு வழங்கப்படும் நிதி இஸ்ரேலிய இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்றது. இன்று தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த கார்த்திகை மாத நடுப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி Lieutenant-General Herzi Halevi, இஸ்ரேல் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி, F-35Is - the F-35 விமானங்கள் காசா மீதான தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். இந்த விமானங்கள் 907 கிலோ கிராம் எடையுள்ள GBU-31 JDAM குண்டுகளைக் காவிச் சென்றன. இந்த விமானங்களுக்கான உதிரிப்பாகங்கள் கனடாவில் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டவை. இந்த உதிரிப்பாகங்கள் நேரடியாகவும், சில சமயங்களில் இஸ்ரேலுக்கு விமானங்களை உற்பத்தி செய்யும் அமெரிக்க நிறுவனத்துக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. F-35 உதிரிப்பாகங்கள் செய்வதற்கு 110 கனடிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1990-களிலிருந்து சுமார் 3.8 பில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 2022-ல் மட்டும் 21 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 2021- $27,861,257, 2022- $21,329,783.93. (https://www.theglobeandmail.com/politics/article-canada-should-halt-weapons-shipments-to-israel-arms-controladvocate/)

மிசிசிக்காவில் அமைந்துள்ள ஆயுத தொழிற்சாலையான Pratt & Whitney-இன் முன்பாகவும் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர் பங்குதாரராகவும், பிரதம ஆலோசனை அதிகாரியாகவுமிருக்கும் (Partner & President of Advisory Committee) Awz Ventures, 350 மில்லியன் டொலர்களை இராணுவ உயர் தொழில்நுட்ப உற்பத்திக்கு வழங்குகின்றது. தொடர்ச்சியாகக் கனடிய நிறுவனங்கள் பாலஸ்தீனத்துக்கெதிரான இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

Heather Reisman - Indigo புத்தகக் கடைகளைக் கனடாவில் ஆரம்பித்தவர். பின்னால், சப்ரேர்ஸ் புத்தகக் கடைகளுடன் இணைந்து இன்டிகோ-சப்ரேர்ஸ் கடைகளை நடத்தி வருகின்றார். இவர், இந்நிறுவனத்தின் தலைவருமாவார். இவரது கணவர் Gerry Schwartz, Onex முதலீட்டு நிறுவனத்தின் தலைவர். இவர்கள் கனடாவின் பில்லியனர்கள். தங்களது றோஸலன்ட் வீட்டில் நெல்சன் மண்டலோ போன்ற பெரும் தலைவர்களுக்கு விருந்து கொடுத்துள்ளார்கள். இவர்கள் இருவரும் இணைந்து HESEG Foundation-ஐ 2005-ல் ஆரம்பித்தார்கள். இந்நிறுவனம் இஸ்ரேல் பாதுகாப்பு நிறுவனத்தில் பணிபுரியும் வெளிநாட்டு இராணுவ வீரர்களுக்கு, இஸ்ரேலில் கல்வி கற்க நிதியுதவி வழங்குகின்றது. ஒக்ரோபர் ஏழின் பின்னரான உலக எழுச்சியின் ஒரு பகுதியாக ரொரன்ரோவில் நடைபெற்ற எழுச்சியில் இவர்களுக்கு எதிராக funding genocide என்ற சுலோகம் முன்வைக்கப்பட்டது. இன்டிகோ புத்தக நிலையத்தின் சுவர்களில், கண்ணாடிகளில் செந்நிற மையினால் சுலோகங்கள் எழுதப்பட்டது. யோர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் உட்பட சிலர் மீது வெறுப்புக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. சப்ரேர்ஸ் புத்தக நிலையங்களில் 'heather's picks' அடுக்கில் பல நூல்கள் வைக்கப்பட்டிருக்கும். இங்கு பாலஸ்தீன நூல்கள் வைக்கப்பட்டிருக்குமா? இவ்வாறு பல செல்வந்தர்கள் இஸ்ரேல் இராணுவத்துக்கு நேரடியாக உதவி செய்கின்றார்கள்.

கனடிய இராணுவமும் இஸ்ரேலுக்கு நேரடி உதவிகளைச் செய்து வருகின்றது. தற்சமயம் 300 இராணுவ வீரர்கள் இஸ்ரேலில் உள்ளார்கள். இவர்கள் கனடிய தூதரகத்தைப் பாதுகாக்கவேயுள்ளார்கள் என்று கூறப்பட்ட போதும், இஸ்ரேலிய இராணுவத்துக்கு ஆலோசனைகளும், உதவிகளும் செய்வதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சுமார் 450 கனடியர்களை அதன்ஸ்க்கு விமானத்தில் அனுப்பிய கனடா, மிக முக்கிய இராணுவ அதிகாரிகளை அதன்ஸிலிருந்து இஸ்ரேலுக்கு விமானம் மூலம் கொண்டுவந்துள்ளது. இஸ்ரேலிலுள்ள பாலஸ்தீனியக் கனடியர்களை இவர்கள் கருத்திற்கொள்ளவில்லை. அவர்கள் வெளியேற உதவி செய்யவில்லை. கனடிய விசேட செயல்பாட்டு படை கட்டளையக படைகள் (CANSOFCOM), இரண்டாம் உயர் இணை பணி படையகம் (JTF2) ஆகிய படைப்பிரிவினர் இஸ்ரேலில் உள்ளார்கள்.

தகவல் தொடர்பு பாதுகாப்பு அமைப்பு (CSE) கனடியத் தேசியப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் உள்ளது. இவ்வமைப்பானது பாலஸ்தீனியர்களைப் பற்றிய விபரங்களை இஸ்ரேலிய SIGINT National Unit-க்கு வழங்குவதாக குற்றஞ் சாட்டப்படுகின்றது. இதனை Edward Snowden வெளியிட்ட இரகசிய அறிக்கைகளிலும் உள்ளது. அவர் மேலும் US NSA and British GCH project ஆகிய இராணுவ அமைப்புகளும், பாலஸ்தீ

னியர்களைப் பற்றிய விபரங்களை இஸ்ரேலுடன் பகிர்ந்து கொள்கின்றது என வெளியிட்டிருந்தார்.

காசாவை முற்றாக இஸ்ரேல் கைப்பற்றிய பின்னர் அங்கு வெளிநாட்டு இராணுவங்களை அமைதிப் படைகளாகத் தங் கவைப்பதற்கு அமெரிக்கா விரும்புகின்றது எனப் புளூம் பெர்க் சஞ்சிகை தனது இணையத்தில் செய்தி வெளியிட்டுள் ளது. காசாவில் கனடிய பிரென்ச், பிரிட்டிஸ், ஜேர்மன், அமெ ரிக்கப் படைகளுடன் சவூதி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தின் படைகளும் பாதுகாப்பில் ஈடுபடும் எனப் புளூம்பெர்க் தெரிவித்துள்ளது.

Global Affairs Canada செப்ரம்பர் 1, 2022-ல் தனது இணை யத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையானது இஸ்ரேலுக் கும் கனடாவிற்குமான உறவின் படிநிலைகளை உள்ளடக்கி யுள்ளது. இதில் இராஜதந்திரம், இராணுவம், பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, கலாசாரம், விளையாட்டு, சட்டம், சமூகம் ஆகிய பிரிவுகளைப் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள் ளன. அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் எவ்வாறு இராணுவ மற்றும் பாதுகாப்பு உறவுகள் உள்ளதோ அதே போன்ற ஓர் உறவு முறையையே கனடாவும் இஸ்ரேலுடன் பேண விரும்பு கின்றது.
https://www.international.gc.ca/country-pays/israel/strategic-partnership-partenariat-strategique.aspx ?land+eng

**1973.** Yom Kippur போரின் பின்னர் Golan Heights பகு தியை சிரியாவிடமிருந்து இஸ்ரேல் கைப்பற்றியது. இப்பகுதி யைப் பாதுகாக்க ஐ.நா பாதுகாப்புப் படைகள் களத்திலிருந் தன. அங்கு 12,000 கனடியப் படைகளும் அப்பகுதியைப் பாதுகாக்க அமைதிப் படைகள் என்ற பெயரில் களத்திலிருந் தன.

இஸ்ரேல் அமைக்கப்படுவதற்குக் கனடாவின் பங்கு மிக முக் கியமாகவிருந்தது. அப்போது கனடியப் பிரதமராகவிருந்த மக்கன்சி கிங், நீதியரசர் ஐவன் ராண்ட்-ஐ ஐ.நா-வின் பாலஸ் தீனம் அமைப்பதற்காக விசேட குழுவிற்குக் கனடாவின் சார் பாக அங்கம் வகிக்க அனுப்பியிருந்தார். ஐவன் ராண்ட் யூதப் பாலஸ்தீனியம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதி யாகவிருந்தார். அப்போது இஸ்ரேல் என அழைக்கப்பட வில்லை. யூதப் பாலஸ்தீனியம், அரப் பாலஸ்தீனியம் எனவே அழைக்கப்பட்டது. 1948 டிசம்பர் மாதமே கனடா இஸ்ரேலை அங்கீகரித்தது. அப்போது கனடாவின் புதிய பிரதமராக லுயிஸ் சென்ட் லோரன்ட் பதவியேற்றிருந்தார்.

கனடா தொடர்ச்சியாக இஸ்ரேலுக்குச் சர்வதேச ரீதியாக ஆதரவாகவேயிருந்து வருகின்றது. பியர் எலியட் ட்ரூடோ மற் றும் கிறிச்சியன் ஆகிய பிரதமர்களின் ஆட்சிக் காலங்களில் கனடா அரபு நாடுகளுடனும் நெருக்கமான உறவைப் பேணி யது. 1973-1974 காலப்பகுதியில் ஏற்பட்ட எண்ணெய் விற்ப னைப் பிரச்சினைகள், கனடாவை மேலும் அமெரிக்கச் சார்பு இஸ்ரேலிடமிருந்து விலகி அரபு நாடுகளுடன் உறவைப் பேணவைத்தது. இக்காலத்தில் பியர் ட்ரூடோ பாலஸ்தீ னத்தை ஓர் அகதிகளுக்கான பிரச்சினையாகக் கருதாமல், இஸ்ரேலுடனான அரசியல் பிரச்சினையாகக் கருதினார். 1973 அரபு நாடுகளுடனான இஸ்ரேல் போர், பியர் ட்ரூடோவை சர் வதேச தாராண்மைவாதத்திலிருந்து தேசியவாதத்துக்கு மாற் றியது. பாலஸ்தீனியத் தேசியம் பற்றி அப்போதையக் கனடிய அரசைச் சிந்திக்கவைத்தது. அதே காலப்பகுதியிலேயே கன டிய இராணுவம் சிரியாவிலிருந்து அமைதிப்படையாகவும் செயலாற்றியது. எனினும் இந்த அமைதிப் படை உண்மை யில் இஸ்ரேலையே பாதுகாத்தது. ஆனாலும், பியர் ட்ரூடோ பாலஸ்தீனியத் தேசியத்தைக் கருத்திற்கொண்டார் என்பது மறுப்பதற்கில்லை.

கனடா, ஐ.நா சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக 163 தடவை கள் வாக்களித்துள்ளது. பின்வரும் அட்டவணைகள் இவற் றைப் பிரதிபலிக்கின்றன. கனடா ஆறு தடவைகள் ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் அங்கத்துவராக இருந் துள்ளது.

இஸ்ரேலுக்குச் சார்பாக ஐ.நா பொதுச் சபையில் வாக்க ளிப்பு: 1948-2000.

| பிரதம மந்திரிகள் | | வாக்களிப்பு | |
|---|---|---|---|
| 1946 – 1967கிங், சென்ட் லோறன்ட், டீபன் பேக்கர், பியர்சன் | 91% | இஸ்ரேலுக்கு சார்பாக 1948-2000 2% | 7% |
| 1968-1980 பியர் ட்ரூடோ | 71 45% | 42 26% | 46 29% |
| பிரதம மந்திரிகள் | ஆதர வாக | எதிராக | கலந்து கொள்ளாதோர் |
| 1948 - 1949 (கிங் அன்ட் சென் லோறன்ட்) | 18 | 0 | |
| 1958 - 1959 (டீபன் பேக்கர்) | 1 | 0 | |
| 1967 - 1968 (பியர்சன் | 13 | 0 | 2 |
| 1977 - 1978 (பியர் ட்ரூடோ) | 10 | 0 | |
| 1989 - 1990 (மல்ரோனி) | 14 | 0 | |
| 1999 - 2000 (கிறிச்சியன்) | 9 | 0 | |
| மொத்தம் | 65 | 0 | 2 |
| | 97% | 0% | 3% |

(https://mail.google.com/mail/u/0/#inbox/WhctKKZPGTdpHmHNGXGHKgrJfDkgsTbQFxZxcBRtbcRsmDFWHgBLJxWJHDbWdWCQQcTzRNQ ?projectorஸ்ரீ1&messagePartIdஸ்ரீ0.1)

பியர் எலியட் ட்ரூடோவின் பின்னர் சிறிது காலம் ஜோ கிளார்க் கனடியப் பிரதமராகவிருந்தார். இவர் பொதுத் தேர்தல் பிரச் சாரத்தின் போது 1979 சித்திரை 25 அன்று ரொரன்ரோவில் கனடா-இஸ்ரேல் அமைப்பினர் முன்னிலையில் பேசும் பொழுது, தான் பிரதமராகத் தேர்வானால் கனடியத் தூதரகத்தை ரெல்-அவ்வியூலிருந்து ஜெருசலேத்துக்கு மாற்றுவேன் எனத் தெரி வித்தார். ஜோ கிளார்க் தொடங்கியதை 2017-ல் டொனால்ட்

ரம்ப் முடித்துவைத்தார். ஜெருசலேத்தை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்து, அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேத்துக்கு மாற்ற உத்தரவிட்டார். 2018 மே 14-ல் ஜெருசலேத்தில் அமெரிக்கத் தூதரகம் இயங்கத் தொடங்கியது. ஆனால் ஜோ கிளார்க் பிரதமராகவிருந்த காலங்களில் கனடியத் தூதரகத்தை ஜெருசலேத்துக்கு மாற்றும் முயற்சி சாத்தியமற்றுப் போனது. பின்னர் இவர் பிறையன் மல்றோனி அரசில் வெளி விவகார அமைச்சராகவும் இருந்தார்.

கொன்சவேற்றிவ் கட்சி தொடர்ந்து இஸ்ரேலுக்குச் சார்பாகவே இயங்கி வந்தது. பிறையன் மல்றோனி, அவரது வெளிவி



வகார அமைச்சர் ஜோ கிளார்க் ஆகியோர் தொடர்ந்து நிபந்தனையற்ற ஆதரவை இஸ்ரேலுக்கு வழங்கினர். மல்றோனியின் பின்னர் பதவிக்கு வந்த கிறிச்சியன், பியர் ட்ரூடோவின் பாதையையே பின்பற்றினார். 1997-ல் கனடியக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி மொசாட் ஜோர்டானிலுள்ள முஸ்லீம் தீவிரவாதியைக் கொலை செய்ய முயற்சித்தது. இது தெரியவந்த போது உடனடியாகக் கிறிச்சியன் இஸ்ரேலிலுள்ள கனடியத் தூதரை மீள அழைத்தார் (Withdraws). அப்போது இஸ்ரேலியப் பிரதமராகப் பென்ஞ்சமின் நெற்றின்யாகு இருந்தார். பின்னர் இஸ்ரேல் கனடாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது. அத்துடன், கனடியக் கடவுச்சீட்டுக்கள் இனிமேல் பாவிக்கப்படாது என உறுதியும் அளிக்கப்பட்டது. கிறிச்சியனின் ஆட்சிக் காலம் முடியும் வரை இஸ்ரேலுடன் மிக நெருக்கமான உறவைக் கனடா கொண்டிருக்கவில்லை. கிறிச்சியனின் பின்னர் பதவிக்கு வந்த போல் மார்ட்டின் இஸ்ரேலுடன் மீண்டும் நெருக்கமானார். 2003-ல் ஐ.நா-வில் இஸ்ரேல் பாலஸ்தீனத்தைச் சுற்றிக் கட்டிய 750 மைல் நீள மதிலுக்கு எதிராகக் கொண்டுவந்த எதிர் வாக்கெடுப்பில் போல் மார்ட்டின் அரசு கலந்துகொள்ளாமல் இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கியது. 2005-ல் லிபரல் பிரதம மந்திரி போல் மார்ட்டின் 'இஸ்ரேலின் விழுமங்களே (மதிப்பீடுகள்) கனடாவின் விழுமங்களுமாகும்' எனக் கூறினார்'.

போல் மார்ட்டினுக்குப் பின்னர் பதவிக்கு வந்த கொன்சவேற்றிவ் கட்சி ஸ்ரீபன் காப்பர், நேரடியாகவே இஸ்ரேலுக்கு ஆதரவை வழங்கினார். இவரது அமைச்சர்கள் சிலர் தெரிவித்த கருத்துகள் இவை;

- பீற்றர் கெண்ட் - இவர் ஓர் ஊடகவியலாளருமாவார். இவர் அமைச்சராகவிருந்த போது ‘இஸ்ரேலின் மீதான தாக்குதல் என்பது கனடாவின் மீதான தாக்குதலாகும்’ (10) என்று தெரிவித்திருந்தார்.
- பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மக்கேய் ‘இஸ்ரேல் மீதான அச்சுறுத்தல் என்பது கனடா மீதான அச்சுறுத்தலாகும்’ என்று தெரிவித்திருந்தார்.
- வெளியுறவு அமைச்சர் John Baird ஐ.நா சபையில் யூத நாடு என்ற பதத்தைப் பாவித்திருந்தார்.
- ஜோன் பெயிட் - கனடாவைப் போன்ற நல்ல நண்பர் உலகில் இஸ்ரேலுக்கு கிடையாது என்று தெரிவித்திருந்தார்.

2014 ஜனவரி 20-ல் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கனடியப் பிரதமர் ஸ்ரீபன் காப்பர் தனது உரையில், ‘நெருப்பினூடாகவும், நீரின் ஊடாகவும் கனடா இஸ்ரேலுடன் இணைந்து நிற்கும்’ (‘Through fire and water, Canada will stand with you’) என்றார். இவருக்கு இஸ்ரேலிய ரெல்-அவ்வியூ பல்கலைக்கழகம் கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. ‘The Hula Valley’ பறவைகள் சரணாலயம் ‘Stephen J. Harper Hula Valley Bird Sanctuary Visitor and Education Centre’ எனப் பெயர் மாற்றஞ்செய்யப்பட்டது. இவரைத் தனது நெருங்கிய நண்பன் என பென்ஞ்சமின் நெற்றின்யாகு கூறினார். காப்பரின் பேச்சுக்களை எழுதும் Michael Taube (வோசிங்டன் ரைம்ஸ் ஊடகவியலாளர்) ஹாப்பர் ஒரு மிக நெருக்கமான இஸ்ரேலிய ஆதரவாளர் எனத் தெரிவித்தார். ஹாப்பர், மேற்கத்தியக் கலாசாரத்தையும் அரசியல் தன்மைகளையும் இஸ்ரேல் கொண்டுள்ளது எனக் கருதினார். ஜனநாயகம், சுதந்திரம், நீதி (freedom, democracy, justice) இவற்றை இஸ்ரேல் கொண்டுள்ளது எனவும் கருதினார். ஹாப்பரின் காலத்தில் கனடாவின் இஸ்ரேல் பற்றிய வெளியுறவுக் கொள்கையை இஸ்ரேலே தீர்மானித்தது. கனடா தொடர்ச்சியாக ஜனநாயகம், சுதந்திரம், நீதி என்பனவற்றை இஸ்ரேலுக்கு சார்பானதாகவும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு எதிரானதாகவுமே பார்க்கின்றது.

2006-ல் பாலஸ்தீனியர்கள் ஹமாசுக்கு பெருமளவு வாக்களித்தனர். இதனைக் கண்டித்துக் கனடிய அரசு பாலஸ்தீனத்துக்கான நிதி வழங்குவதை நிறுத்தியது. ‘ஜனநாயகம் என்பதனை பாலஸ்தீனர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். கற்றுக் கொள்ள வேண்டும்' என்பதற்காகவே நிறுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஹாப்பரின் பின்னர் பதவிக்கு வந்த ஜஸ்ரின் ரூடோ தனது தந்தையின் பாதையில் பயணிக்காமல் ஹாப்பரின் பாதையில் இஸ்ரேலுடன் கைகோர்த்துப் பயணிக்கின்றார்.

பாலஸ்தீனியப் பகுதிகளில் குடியேறும் இஸ்ரேலியர்களுக்குப் போக்குவரத்துக்கு நெடுஞ்சாலைகளைக் கனடிய அரசு அமைத்துக் கொடுத்துள்ளது.

ஜஸ்ரின் ரூடோவின் ஐ.நா தூதுவர் பொப் ரே அடிக்கடி two state solution என்ற பதத்தை அவரது பேச்சுகளில் பாவிக்கின்றார். 1947-ல் இஸ்ரேல் அமைக்கப்பட்ட பின்னர் கனடா பாலஸ்தீனியர்களை ஒரு தேசிய இனமாகவே அங்கீகரிக்கவில்லை. மாறாக பியர் ட்ரூடோவும், கிறிச்சியனும் தேசிய இனமாகக் கருதினாலும் அதனை அவர்கள் கனடாவின் கருத்தாக வெளியிடவில்லை. ஹாப்பரின் வெளியுறவு அமைச்சர் யூத நாடாகவே கருதினார். ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பின்ன

ரும் கூட கனடா பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்க மறுத்தது. ஒஸ்லோ ஒப்பந்தம் என்பது ஒரு நிரந்தர நவகால னித்துவ சார்புநிலைப் பிரதேசம் (permanent neocolonialist dependency).

இந்த two state என்பது இரு நாடுகளும் சம அந்தஸ்து அதிகாரங்களுடன் அமைய வேண்டும். ஆனால் கனடா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் கருதுவது இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் அமையும் இரு மாநிலங்கள் (மேற்குக் கரை, காசா). இஸ்ரேல் வரி விதிக்கும். பெறப்படும் வரியைப் பாலஸ்தீனத்துக்குத் தான் விரும்பியவாறே வழங்கும். பாதுகாப்பு, பொருளாதாரம், வெளியுறவு போன்ற முக்கிய விடயங்கள் அனைத்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். இந்தத் தீர்வையே கனடாவும் விரும்புகின்றது.



பாலஸ்தீனியர்களை ஒரு தனி இனமாகக் கனடா கருதினால், ஓர் இறையாண்மையுள்ள நாடாகக் கருதுவதில் என்ன தயக்கம்? மேற்கு நாடுகள் காசா இஸ்ரேலால் முழுமையாக கைப்பற்றப்பட்டு, மேற்குக் கரையிலுள்ள பாலஸ்தீனியர்கள் ஜோர்டானுக்கோ, லெபனானுக்கோ விரட்டப்பட்டு முற்று முழுதான இஸ்ரேல் அமைக்கப்படுவதையே விரும்புகின்றது.

2022-ல் பெருவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பெருமளவு பூர்வீக குடிகள் கொல்லப்பட்டனர். இக்காலத்தில் கனடா பெருவிற்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்திருந்தது. பல சர்வ தேச நிறுவனங்கள் கனடாவின் ஏற்றுமதியை நிறுத்துமாறு கேட்டிருந்தனர். அதே போன்று இஸ்ரேலைப் பாதுகாக்கக் கனடா ஆயுத ஏற்றுமதியும், இராணுவ உதவிகளும் செய்கின்றது. தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் காசா அழிப்பில் கனடிய இராணுவ ஆலோசனைகளும் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளுக்கு ஆலோசனைகளைக் கனடியப் பாதுகாப்புப் படைகள் வழங்கிவருகின்றன. அங்கே பல பாலஸ்தீனியர்கள் ஒவ்வொரு நாளும் கொல்லப்படுகின்றனர்.

2020-ல் ஜஸ்ரின் ரூடோவின் ஆட்சியில் பெப்பிரவரி 14 சர்வ தேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கனடா ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. அதில் கனடா இவ்வாறு குறிப்பிட்டிருந்தது 'Palestine not a state, ICC can't investigate Israeli war crimes'.
https://thecjn.ca/news/canada-backs-israel-in-icc-challenge/

பாலஸ்தீனம் ஒரு நாடல்ல. ஒரு தேசமல்ல என்று கூறும் கனடா எவ்வாறு இரண்டு தேசங்கள் என்ற தீர்வுக்கு ஆதரவாகச் செயற்படும். இன்று எழுந்துள்ள தொடர்ச்சியான போராட்டங்களைத் தனது பக்கம் திருப்ப லிபரல் கட்சி நினைக்கின்றது. அதற்காகவே சில மயக்கமான, புத்திசாலித்தனமான வார்த்தைகளைக் கூறுகின்றது. ரஷ்யா உக்ரேன் மீது தாக்குதல் நடத்தினால் அது ஆக்கிரமிப்பு. இஸ்ரேல் ஹமாஸ் மீது தாக்குதல் என்ற பெயரில் காசாவை அழிக்கின்றது. அது எதிர் நடவடிக்கை. இதுதான் இன்றையக் கனடிய யதார்த்தம். அதுதான் மேற்கின் யதார்த்தமுமாகும்.

கனடாவின் எதிர்க்கட்சிகள் நேரடியாகவே இஸ்ரேலை ஆதரிக்கின்றன. காசாவில், இஸ்ரேலின் பாலஸ்தீனிய மக்கள் மீதான குண்டுவீச்சுகளைக் கண்டிக்க மறுக்கின்றன. அது இஸ்ரேலின் எதிர் நடவடிக்கை. அதற்கு அவர்களுக்கு முழுமையான உரிமை உள்ளது என்கின்றது கொன்சவேற்றிவ் கட்சி. லிபரல் அரசு இன்னமும் வெளிப்படையாக இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்கின்றது. என்.டி.பி மௌனமாகவேயிருந்து இஸ்ரேலை ஆதரிக்கின்றது. ஒக்ரோபர் ஏழு, ஹமாஸ் தாக்குதலுக்கு முன்பாகப் பல தடவைகள் இஸ்ரேல் காசா மீதும், மேற்குக் கரை மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அப்போது ஹமாஸ் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளவில்லை. அப்போதும் இவர்கள் மௌனமாக இஸ்ரேலை ஏற்றுக்கொண்டனர்.

268 கனடிய அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து உடனடிப் போர் நிறுத்தத்துக்குக் கனடாவை வலியுறுத்தியுள்ளன. 286,700 பேர் இணையத்தினூடாகக் கையொப்பமிட்டுப் போர் நிறுத்தத்துக்கு வலியுறுத்துமாறு கனடாவைக் கேட்டுள்ளனர். மக்கள் ஆதரவு போர் நிறுத்தத்துக்கும், பாலஸ்தீனத் தேசத்துக்கும், காசா அழிப்புக்கெதிராக இருப்பதும் தான், கனடாவின் ஐ.நா தீர்மான ஆதரவுக்குக் காரணமாகும்.

மிகவும் பலம் வாய்ந்த, புதிய தொழில்நுட்ப வசதிகளுடன், மேற்கு நாடுகளின் ஆலோசனைகளுடன் இயங்கும் இஸ்ரேலிய உளவு நிறுவனங்களுக்கு ஹமாஸின் இருப்பிடங்களைக் கண்டுபிடிப்பது முடியாத விடயமல்ல. அப்படியிருந்தும் ஏன் மக்கள் மீதும், வைத்தியசாலைகள் மீதும் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

ஐ.நாவில் முன்பு கனடா வாக்களித்த முறை இது.

இவ்வாறான வாக்களிப்புகள் புதிதானதல்ல. நீண்ட காலமாக பாலஸ்தீனியர்களின் உரிமைகளை அங்கீகரிக்க கனடா மறுத்துவருகின்றது. லிபரல், கொன்சவேற்றிவ் ஆகிய இரு கட்சிகளும் தங்களது ஆட்சியில் இதனை தொடர்ச்சியாக செய்து வருகின்றன.




- ஜோர்டானின் ஐ.நா தூதுவர் மஹ்மூட் டீபலா ஹமூட் ஒக்ரோபர் முதல் வாரத்தில் உடனடி போர் நிறுத்த தீர்மானத்தை முன்வைத்தபோது, கனடிய ஐ.நா தூதர் பொப் ரே பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்.
- இஸ்ரேலை சர்வதேச சட்டங்களை பாலஸ்தீன பிரதேசங்களில் மீற வேண்டாம் என வற்புறுத்தும் பிரேரணைக்கு கனடா எதிராக வாக்களித்தது.
- 'பாலஸ்தீன பிரதேசங்களில் இஸ்ரேலிய குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை' என்ற தீர்மானத்தை முன்வைத்த போது கனடா எதிராக வாக்களித்தது
- பாலஸ்தீன நிலங்களை - வளங்களையும் சேதப்படுத்தலையும், சிதைப்பதையும், சுரண்டுவதையும் இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தபோது கனடா எதிராக வாக்களித்தது
- 1967-க்கு பின்னர் இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீனிய நிலங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தபோது கனடா எதிராக வாக்களித்தது
- பாலஸ்தீனிய அகதிகளிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை மீள அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தபோது கனடா எதிராக வாக்களித்தது


2011-க்கு பின்னர் இவ்வாறான 149 பிரேரணை மற்றும் தீர்மானங்களுக்கு எதிராக கனடா வாக்களித்தது.
நன்றி breachmedia.ca
https://breachmedia.ca/canada-un-votes-resolutions-gaza-palestine/

Yemeni Houthis செங்கடலில் இஸ்ரேலுக்கு வரும் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர். இவர்களின் நோக்கம் காசா அழிப்பிலிருந்து பாலஸ்தீன மக்களைக் காப்பதாகும். இக்கடற்பகுதியில் அமெரிக்காவுடன் இணைந்து கனடா பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுகின்றது. Houthis அழிக்கப்பட வேண்டும் என்பதற்காக, சவூதி முன்னிற்கின்றது. கனடா சவூதிக்கு பில்லியன் கணக்கான ஆயுதங்களை ஏற்றுமதி செய்கின்றது. இது யேமன் நாட்டு மக்கள் கொல்லப்படுவதற்கும், பாலஸ்தீன ஆதரவுத் தீவிரவாதிகள் கொல்லப்படுவதற்கும் பயன்படுத்தப்படுவதாகச் சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கில் இஸ்ரேலின் இருப்பு என்பது அமெரிக்காவிற்கு அவசியம். அதற்குக் கனடா அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுகின்றது. இஸ்ரேலின் இருப்பிற்கு எதிராகச் செயற்படும் அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்துவது அல்லது அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம். இவர்களின் பாதையில், பார்வையில் பாலஸ்தீனம் அகதிகள் வாழும் பிரதேசம். புளோரிடா போன்ற மாநிலங்களில் சீனர்கள் நிலம் வாங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுவது போல், பாலஸ்தீனியர்களை நிலமற்றவர்களாக்கி, நிரந்தர அகதிகளாக்கி அழிப்பதே அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் நோக்கம். அதற்கு கனடாவும் துணை போகின்றது.

கனடா, ஹமாஸ் இல்லாத ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையே முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. தற்பொழுது 80 வீதமான மேற்குக்கரைப் பாலஸ்தீனியர்கள் ஹமாசுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். எனவே, ஹமாஸ் அற்ற பேச்சுவார்த்தை சாத்தியமற்றது என்பது மேற்கு நாடுகளுக்குத் தெளிவாகவே தெரியும். அவர்கள் முயற்சிப்பதெல்லாம் பாலஸ்தீனத்துக்குப் புதிய தலைமை ஒன்றை மேற்குக்குச் சார்பாக அமைப்பதும். அதே போல் பெஞ்சமின் நெற்றின்யாகு-இற்கு மாற்றீடான வலது சார்புப் புதியவரை இஸ்ரேல் பிரதமராக மாற்றஞ் செய்வதும் ஆகும்.

ஒக்ரோபர் ஏழு ஹமாசின் நடவடிக்கை என்பது தவறானது. ஆனால் அதனைக் கூறி 'எதிர்த் தாக்குதல்' என்ற பெயரில் காசாவை - அதன் பொருளாதாரத்தை, மக்களை, குழந்தைகளை, சந்ததிகள் மீதான அழிப்பு நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இஸ்ரேலின் பின்னால் அணிவகுக்கும் மேற்கு நாடுகளின் கண்ணீரில் கரைந்திருப்பதெல்லாம் குண்டுகள். வரலாறு படிப்பினைகளைத் தரும். இங்கு வரலாறே கொலை செய்கின்றது.



rathan@thaiveedu.com




# ஏழாவது சனி

## - டொறீட் நாமன்



**டொறீட் நாமன்:**
குயின்ஸ் பல்கலைக்கழகத்தின்
சினிமாத் துறை பேராசிரியர்,
திரைப்பட நெறியாளர்.

ஒவ்வொரு நாளும் துயரம் தருவது. ஆனால் சனிக்கிழமைகள் மேலும் துயர் தருகின்றன. எனது சிறுவயதிலிருந்தே சனிக்கிழமை - ஹீப்ரு மொழியில் சொல்வதானால் 'சபாத்'- எனக்கு அமைதியான தெருக்களை நினைவூட்டுவது; அல்லது நிறைவான தூக்கம்; மலைகளின் மேல் இருந்து காற்றில் அலைந்து வரும் பாடல்களை நினைவு கொள்வது; குடும்பத்துடன் காலை உணவு. வாரத்தில் ஒரு நாள் அது. தெரியும். ஆனால் இனி அந்த நாள் எனக்குக் கிடைக்காது.

ஒக்ரோபர் ஏழாம் நாள் எல்லாமே தலைகீழாகின. வார்த்தைகள் என்னை விட்டுப் பிரிந்தன. பேச்சே எழவில்லை. பேசவும் பயப்படுகிறேன். எனினும் இந்த அவலத்துடனும் என்னுடைய மனப்பதிவை நான் எழுதவே வேண்டும்.

அந்த பயங்கரமான சனிக்கிழமைக் காலையிலிருந்து... ஏழு முழு வாரங்கள் ஆகிவிட்டன. பீதி. அழைப்புகள். நலமா? நலமா?

'ஒருவருமே நலமாக இல்லை'.

இழப்பின் அளவை மெதுவாகப் புரிந்துகொள்வது. அல்லது மெல்ல ஒதுங்கி விட்டுப் பின்னர் திகில் விபரங்களை உள்வாங்குதல்.

அன்றைய தினம், வீட்டில் இருந்தோர், வாகனங்களில் சென்று கொண்டிருந்தோர், நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தோர், இசை, நடனக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 900 பொதுமக்கள் ஹமாஸால் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இஸ்ரேலிய-யூதர்கள். ஆனால் பத்துப் பதினைந்து நேபாள மாணவர்கள், பிலிப்பைன்ஸ் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், கூடவே இஸ்ரேலின் பாலஸ்தீனக் குடிமக்களும் இருந்தனர். 240 பேர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். (இவர்களைப் பேச்சுவார்த்தை மூலம் விடுவிக்கப்படுவதே இஸ்ரேலிய அரசாங்கத்தின் முதல் முன்னுரிமையாக இருந்திருக்க வேண்டும், ஆனால் இஸ்ரேல் அரசு அதற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை). முதல் வாரம் துயரப்படவே நேரம் இல்லாமல் இருந்தது. கொல்லப்பட்ட உறவினர்கள், நண்பர்களை அடையாளம் காண்பது, அடையாளம் காணப்பட்டவர்களைப் புதைப்பது, காணாமல் போனவர்களைத் தேடுவது என நேரம் போதாமலிருந்தது.

எனக்கு அந்தக் கணத்திலேயே மனதில் உறைத்த விடயம் என்னவெனில் இதற்கான பழிவாங்கலாக இஸ்ரேல் எடுக்கும் நடவடிக்கை மிக மிகக் கோரமாக இருக்கும் என்பது. காஸாவின் மீதான.., முதல் மூன்று வாரங்களிலேயே ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் ஒரு குழந்தை கொல்லப்பட்டது. ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் ஒரு குழந்தை! இதை எப்படி ஏற்றுக் கொள்வது?

ஒரு சில நாள்களுக்குப் பிறகு 'எப்படி இருகிறீர்கள்?' என்று கேட்பதைத் தவிர்த்து, 'எப்படித் தாக்குப் பிடிக்கிறீர்கள்' என்று எனது இஸ்ரேலிய, பாலஸ்தீனிய நண்பர்களையும் உறவினர்களையும் கேட்கத் தொடங்கினேன். நாம் அனைவரும் பாரிய உளத்தாக்குதலுக்கு ஆட்பட்டிருந்தாலும், இஸ்ரேலின் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர் சமவலுக் கொண்ட இரு பிரிவினருக்கு இடையேயான போர் அல்ல என்பதை நான் அறிந்தாலும் இப்படிக் கேட்பதைத் தவிர்க்க முடியவில்லை.

ஒவ்வொரு உயிரும் தன்னளவில் ஒரு முழு உலகம் அல்லவா?

நம்பிக்கையுடன் பற்றிப் பிடிக்க நமக்கு ஏதாவது வேண்டும். அதற்கான சாத்தியம் என்ன என்பதுதான் எனக்கு இன்னும் தெளிவாகவில்லை. என்னுடைய சிறிய நெஞ்சத்துள் எல்லா உயிர்களுக்குமான ஓர் இடத்தைப் பேண முயற்சிக்கிறேன். இந்தப் போர் தரும் துயரங்களுக்கான ஓர் இடத்தை வழங்கவும் முயற்சி செய்கிறேன். பாலஸ்தீனியரும் இஸ்ரேலியரும் சமத்துவமான உரிமைகளுடனும் சுதந்திரத்துடனும் மாண்போடும் வாழ்வது சாத்தியம் எனும் நம்பிக்கையை இறுகப் பற்ற விரும்புகிறேன். இஸ்ரேலை உலக வரைபடத்தில் இருந்து அகற்றுவோம் எனும் ஹமாசின் நிலைப்பாடும், இனப்படுகொலை மூலம் பாலஸ்தீனத்தை அழிப்போம் என்ற பாசிச நெத்தன்யாஹு - இஸ்ரேல் அரசின் திட்டமும் ஒப்பேறாது. முடிவில், ஒரே நிலத்தில் யூத மக்களும் பாலஸ்தீனியரும் சமத்துவமாகவும் சமாதானமாகவும் தமக்கான தனித்தனி அரசுகளோடு வாழ்வதே நிகழும் என நம்புகிறேன்.




எப்படி முன் செல்வது?

இஸ்ரேலைப் பொறுத்தவரை, ஒக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதல்களுக்குப் பிற்பாடு, இஸ்ரேல்-பாலஸ்தீனிய முரண்பாடுகளைச் 'சமாளித்து' நிர்வாகம் செய்யலாம் என்ற கோட்பாடு செத்துப்போய்விட்டது. எனினும் பாலஸ்தீனியர்களை அழி, மேலும் ஒடுக்கு என்ற குரல்கள் மேலும் தீவிரமாக எழுகின்றன. இவை சமாதானம், தீர்வு, சமத்துவம் எனப் பேசும் குரல்களை விடப் பலமடங்கு அதிகமாக உள்ளன. அதே நேரம் பாலஸ்தீன மக்கள், அவர்களது அவலத்தையும் இழப்பையும் கவனத்தில் எடுக்காத அல்லது ஒரு புன்சிரிப்புடன் கடந்து போகிற பலம் வாய்ந்த நாடுகளை ஆற்றாமையுடன் பார்க்கிறார்கள். அறத்துக்கு இடமில்லாத காலம் இது.

ஒரு புலமையாளராக, திரைப்படக் கலைஞராக, இஸ்ரேலியராக இருந்தும் பாதுகாப்புடன் எறிகணைகளுக்குத் தப்பி வாழும் ஒருத்தியாக நான் பேச வேண்டும். ஆனால், என் சொற்களை மிகுந்த கவனத்துடன் தெரிவு செய்ய வேண்டி இருக்கிறது.

இஸ்ரேலா, பாலஸ்தீனமா எது என ஒன்றை நான் தெரிவு செய்ய வேண்டும் எனும் எதிர்பார்ப்பு இன்றைய கொந்தளிப்பான சூழலில் ஏற்பட்டிருக்கிறது. இஸ்ரேலின் இருப்புக்கே சிக்கல் எழுந்திருக்கும் சூழலில் நான் அதனைப் பற்றிப் பேசவில்லை என எனது இஸ்ரேலிய நண்பர்கள், தோழர்கள் பலர் கோபங் கொள்கிறார்கள். அதனால், அவர்கள் என்னைத் 'துரோகி' என்கிறார்கள். எனினும் வரலாறும் நிகழ்வுகள் நடக்கும் சுற்றுச் சூழலும் முக்கியம் என நான் கருதுகிறேன். ஒரு சிலருக்கு ஒக்ரோபர் 7 தக்குதல்கள் நிகழவே இல்லை என்ற எண்ணம். காஸாவின் மீதான தாகுதல்கள் திடீரென நிகழ்ந்த தான பிரமை. மற்றவர்களுக்கோ, காஸாவின் மீதான இஸ்ரேலின் பதினாறு ஆண்டு கால முற்றுகையைப் பற்றிப் பேசினால் அது யூத எதிர்ப்பு!!! இன்னும் பலருக்கு இஸ்ரேல் என்பது காலனித்துவக் குடியேறிகளின் இருப்பிடம். அவர்கள், 'ஆற்றிலிருந்து கடல் வரை, பாலஸ்தீனமே விடுதலை!' என்று முழங்கும் போது எனக்கான இடம் எங்கே? அப்படி முழக்கமிடுபவர்களில் எத்தனை பேர் காலனித்துவக் குடியேறிகள் (Settler colonial) நாடான கனடாவை விட்டு வெளியேறத் தயாராக இருக்கிறார்கள்?

இத்தகைய சூழலில் அறமும் அறிவும் சார்ந்த உரையாடல்களைப் பெரும்பாலானோர் கைவிட்டுவிட்டார்கள். எனக்கும் குரலெழவில்லை. விவாதக் களங்களும் கருத்துரிமையும் பேச்சுச் சுதந்திரமும் அருகி வருகின்றன. சமாதான சகவாழ்வு என்பது பற்றிய பேச்சுக்கே சாத்தியம் இல்லை என அஞ்சுகிறேன்.

சின்ன விடயங்கள் தரும் உணர்வுத் தோழமையே இப்போது எனக்குப் போதும். சக பேராசிரியர்களின் துணை, வீட்டு வளவில் உதிரும் இலைகளைக் கூட்டி அள்ளுவது, கொடும் பனிக் காலத்துக்காக எனது வீட்டுத் தோட்டத்தைப் பேணுவது, வாழ்வும் நம்பிக்கையும் மீளும் என நம்புவது. நான் புதிதாக நட்ட பூச்செடிகளைக் கொட்டும் பனியிலிருந்து காக்க அவற்றின் மீது சாக்குத் துணிகளைப் போர்த்துகிறபோது நினைவில் எழுவது. ஒரு நாள் வரும். மத்திய கிழக்கில் அச்சமில்லாமல் குழந்தைகள் வளர்வார்கள்.

# அவலத்தின் ஒளிப்படங்களைத் திரையிட்டு மறைப்பதை எதிர்த்து



**- சாரா அபு றஷேட்.**

– சாரா அபு றஷேட்
பாலஸ்தீனக் கவி.
மிச்சிகன் பல்கலைக்கழக நுண்கலை முதுமாணி.
A Map of Myself எனும் அவரது பெண்ணிய அரங்காற்றல் சிறப்பு மிக்கது.

இறந்தவர்களை எண்ணுவதை
நிறுத்தினோம்
ஆனால்
தொடர்ந்தும் இறக்கிறோம்.

எனது அவலப் பயங்கரத்துக்கு
பெயர் வைக்க மறுக்கிறேன்

பெயர்களுக்கு
அன்பின் நெருக்கம் இருக்கும்.
அதனால்
பெயர் தர மறுக்கிறேன்.



ஒரு சொல்
தான் எதுவெனச் சொன்னால்
எப்படி இது என
எப்படி நினைவு கொள்ள?

காசா : அறப்படுகொலை



# பாலஸ்தீனத்துக்கு...



- அ. கந்தசாமி

பாலஸ்தீனத்து மானுட உதிரத்தை
உறிஞ்சி உடல் வளர்த்த
அகோர அதிகாரம் இஸ்ரேல்

ஒளிவருடங்களைக் கடந்த
ஒரு மின்மினிப் புள்ளியில்
மானிடம்
உயிர் தப்பி வாழட்டும்
என்ற அணுவளவு
உணர்வு கூட உன்னிடத்தில்
தோன்றாதெனத் தெரிந்திருந்தும்
வேண்டுகின்றேன்


உங்கள் துப்பாக்கிப்
பூந்திரிகளை
ஊதி அணைத்து விடாதே
வழக்கம்போல்
கொலைப்பணிகளைத்
தொடர்ந்தும் செய்.

உனக்கென்ன?
அண்ணன்மார் அதிகம்

உன் கோமகன்மார்
புழுக்கள் கூட வெறுக்கும்
அழுக்குகள் மீது
உனக்கென
விரித்த செங்கம்பளம்
நீண்டு கிடக்கும்

உன் சீழ் வடியும் கால்களின்
ராஜநடைகளுக்காகக்
காத்துக் கிடக்கும்.

இரத்த கறை படிந்த
உன் பாவக் கரங்களைக்
கைபிடித்துக் கழுவி விட
நைல் நதிக்குப்
பாத்தி கட்டிக் காத்திருப்பார்
அமெரிக்கக் கோமகனார்



ஈயச் சன்னங்களை ஈயும்
அட்சய பாத்திரங்களைத் தரும்
ஆபுத்திரர்கள்
அதிகமுண்டு உன்னிடம்

சமரசத்தைத் தின்று தீர்த்து
துப்பாக்கி விசையை அழுத்தி
ஆனந்த வெறி கொள்ளும்
உன் விரல்களிடம்
பேச என்ன இருக்கிறது?

உன் கொலை விருந்தில்
எச்சமென ஏதும் எஞ்சி இருந்தால்
இடிந்துபோன
வீட்டுச் சுவரில் எழுதி வை :
சிதைந்தோ எரிந்தோ கிடக்குமிவன்
ஓர் அரேபியன் என்று.

மறந்து விடாதே
வரலாறுகள் இறப்பதில்லை

ஒன்று போனால்
ஒன்பது மீண்டு வரும்

இருட்டை
அடைகாத்து அடைகாத்து
வெறுமையுற்று
வெறுப்படைந்து வெந்த
மானுடம் அது.

தீக்குச்சி வேண்டாம்
தீப்பந்தம் வேண்டாம்
ஒரு மின்மினியின்
ஒளியையேனும்
இரவலாய் தாருங்கள் என்கிறது
ஒரு பாலஸ்தீனக் குழந்தையின்
அழுகுரல்

தனக்கென ஒரு சூரியனைக்
கொண்டிருந்த இனம்
இன்று யாசிப்பது
ஒரு சிட்டிகை
ஒளியைத்தான்.





# சாவிகள்

- அஹ்மத் அல்மல்லா

நான் சாவிகளைப் பற்றி
சிந்தித்துக் கொண்டிருந்தேன் –
தெளிவாக:

கை அவற்றை
பூட்டுக்கு நெருக்கமாகப் பிடித்துக்கொள்கிறது –
எதுவும்
திரும்பவில்லை

வெறுமனே நிழற்பட நொடிப்பு,
பிரதிபலிப்பு, விரல்கள்
கண்ணாடியிலிருக்கும் பொருளைத் தீண்டுகிறதே தவிர
பொருளையல்ல.

மேலும்
அந்நாளில்
என்னால் திறக்க முடியாதிருந்த போது:
அக் கதவு வெறும் ஒரு கதவாயிருந்தது.

தடையரணாக அல்ல.
அது பூட்டப்பட்டிருந்தது.
நானும் குளிர்ந்து களைத்துப் போய்
வெளியே இருந்தேன்:

என் விரல்கள்
கட்டுப்பாடற்றும் உறைந்துமிருந்தன.
ஆனால் பிடிபட்டன.

என்னால் பொறுக்கவோ
எனது வழியை கண்டறியவோ முடியவில்லை.
அந்த
கவிதையில் வரும்
டொட்
டொட் டொட் ....க்கு
என்ன நடந்ததென
நான் யோசித்தேன்

ஏன் யாரும் அவற்றை இனியும்
ரசிப்பதில்லை
துண்டிப்பதிலோ
நிறைவற்றிருப்பதிலோ
அப்படியென்ன தவறிருக்கிறது.



அஃமத் அல்மல்லா

இவரின் Border Wisdom (2023)
கவித்தொகையில் இருந்து
பெற்றுக் கொண்ட கவிதை.

பலஸ்தீனில் பெத்லகேம்
நகரைச் சேர்ந்தவர்.
இப்போது
பென்சில்வேனியா
பல்கலைக் கழகத்தில்
பணி புரிகிறார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு:
– சப்னாஸ் ஹாசிம்.

காசா : அறப்படுகொலை



# ஒரு துண்டு நிலம்
## சரளையாக்கப்படுகிறது

- ரூபன் சிவராஜா


பதட்டத்தின் விழிப்பில்
நீள்கின்ற இரவுகளும்
அச்சத்தின் விரிப்பில்
அதிர்கின்ற பகல்களும்
சாம்பலின் மேடுகளில்
தொலைகின்ற காலைகளும்
வஞ்சிப்பின் வரலாற்றில்
சிதைகின்ற வாழ்வுமாய்
இருள் மூடிக்கிடக்கிறது காசா

மத்தியதரைக்கடலின்
தென் கிழக்கு ஓரத்தில்
ஒரு துண்டு நிலம்
சரளையாக்கப்படுகிறது

காடுதிர்த்த சருகுகளாய்
குழந்தைகளின் உயிர்கள்

அதிர்ச்சியில் சிவந்த கண்கள்,
தூசிமண்டிய தலைமுடி,
குருதி வடியும் கன்னம்
சாம்பல் படிந்த முகம்,
கட்டடச் சிதிலங்கள்
நெஞ்சுவரை வரை மூடிய உடல்கள்






காணாமற் போன குழந்தைகளைக்
கட்டட இடிபாடுகளுக்குள்
தேடுகின்ற பெற்றோர்,
கொல்லப்பட்ட பெற்றோரைத் தேடித்
தேம்புகின்ற குழந்தைகளால்
நிறைந்து கிடக்கின்றன
ஊடகத் திரைகள்

உங்களை ஒளியின் குழந்தைகள் என்றீர்கள்
அவர்களை இருளின் குழந்தைகள்
என்றீர்கள்
விலங்குகளுக்கு எதிரான போர்
என்றும் பிரகடனம் செய்தீர்
போர் இயந்திரங்களை
வானிலும் காற்றிலும்
கடலிலும் தரையிலும் ஏவினீர்கள்

நிலங்களை விழுங்குவதும்
வீடுகளைச் சரளையாக்குவதும்
குழந்தைகளைப் பலியெடுப்பதும்
புதிதல்ல உங்களுக்கு
கைதுசெய்வதும் காணாமலாக்குவதும்
வதைப்பதுவும்கூட முதற் தடவையுமல்ல
உங்களுக்கு

புத்தகங்களையும் குறிப்பேடுகளையும்
நெஞ்சில் அணைத்தபடி
ஓடுகிற அந்தக் குழந்தையின்
கண்ணீரில் பெருகித் தெறிக்கிறது
நம்பிக்கையின் மீதித்துளி
எதிர்காலத்தின் நீதிக்கனவு

# ஒரு பாலஸ்தீனக் குரல்



## - எம்.ஏ. நுஃமான்

நீ சொல்கிறாய்
நாங்கள் விலங்குகளுடன் போரிடுகிறேம் என்று
அவர்களை அப்படித்தான் நடத்தவேண்டும் என்று
சொல்கிறாய்
நீ அப்படித்தான் சொல்வாய்
உன் மூளை மரத்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது

விலங்குகளை அவமதியாதே
விலங்குகள் மனிதரின் தோழர்கள்
விலங்குகள் இல்லாத உலகில்
நீயும் நானும் வாழமுடியாது
விலங்குகளை அவமதியாதே

விலங்குகள் ஆக்கிரமிப்பதில்லை
விலங்குகள் குண்டுவீசி மனிதரைக் கொல்வதில்லை
விலங்குகள் ஒரு தேசத்தை அபகரிப்பதில்லை
விலங்குகள் மனிதரைத்
தங்கள் வீடுகளை விட்டுத் துரத்துவதில்லை
கிராமங்களை நிர்மூலமாக்குவதில்லை
விலங்குகள் மனிதரை அகதிகளாக்குவதில்லை
விலங்குகளை அவமதியாதே

நீ யார் என்று யோசித்துப்பார்
நீ எங்கிருந்து வந்தாய்
எப்படி இங்குவந்தாய்
என்பதை எண்ணிப்பார்
எப்படி எங்கள் மண்ணில் காலூன்றினாய்
எப்படி எங்களைத் துரத்தினாய்
எப்படி எங்கள் கிராமங்களை அழித்தாய்
எப்படி எங்களைக் கொன்றுகுவித்தாய்
எப்படி எங்களை அகதிகளாக்கினாய்
எப்படி எங்களைச் சிறையில் அடைத்தாய்
என்பதை எண்ணிப்பார்



உன்மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே

**காசா : அறப்படுகொலை**

எங்கள் அமைதியைக் குலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் தேன்கூட்டைக் கலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் ஒலிவ மரங்களை அழித்தவன்
நீ இல்லையா
எங்களைத் துப்பாக்கி தூக்கவைத்தவன்
நீ இல்லையா
எங்கள் குழந்தைகளைக் கல்பொறுக்கவைத்தவன்
நீ இல்லையா
இப்போது நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே

நீ சொல்கிறாய்
நாங்கள் நாகரீகத்தின் எதிரிகளுடன்
போரிடுகிறோம் என்று
இது நாகரீக சக்திகளுக்கும்
காட்டுமிராண்டிகளுக்கும்
இடையிலான போர் என்று சொல்கிறாய்
இந்த நூற்றாண்டின் பெரிய நகைச்சுவை
இல்லையா இது
நான் சொல்லவேண்டியதை நீ சொல்கிறாயா
சாத்தான் வேதம் ஓதுகிறதா
ஹிட்லருக்குப் பிறகு
அவன்பாதையில் செல்லும்
மனித நாகரீகத்தின் மோசமான எதிரி
நீ இல்லையா

உலகின் பெரிய பயங்கரவாதிகள்
உன்னை ஆதரிக்கிறார்கள்
ஆனால் உன் கண்களைத் திறந்துபார்
நீதி உணர்ச்சி கொண்ட மக்கள்
உலகெங்கும் உனக்கெதிராகக்
கிளர்ந்தெழுகிறார்கள்
நீதி உணர்ச்சி மிக்க உன் சொந்த மக்களே
உனக்கெதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள்
உங்கள் முடிவு நெருங்கிவிட்டது

அநியாயக் காரர்கள் நிலைத்திருப்பதில்லை
வரலாறு அவர்களைக் காறி உமிழ்கிறது
அந்த வரிசையில் நீ வந்துநிற்கிறாய்
உன் முடிவு நெருங்கிவிட்டது

உன் மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
உன் சித்தம் கலங்கிவிட்டது

நீ எங்களை விலங்குகள் என்கிறாய்
காட்டுமிராண்டிகள் என்கிறாய்
நாகரீகத்தின் எதிரி என்கிறாய்
எங்களை முற்றாக அழித்துவிட
ஆசைப்படுகிறாய்
எங்களை அழித்துவிட்டு
நிம்மதியாய்த் தூங்கலாம்
எனக் கனவுகாண்கிறாய்

அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது
பிறரின் அமைதியைக் குலைத்தவனுக்கு
ஏது அமைதி
பிறரின் சுதந்திரத்தைப் பறித்தவனுக்கு
ஏது சுதந்திரம்

இன்னும் இன்னும் ஆயிரம் ஆயிரம்
குண்டுகளை வீசி நீ எங்களை அழிக்கலாம்
அந்த இடிபாடுகளில் இருந்து
அந்தச் சாம்பலில் இருந்து
மீண்டும் மீண்டும்
நாங்கள் உயிர்த்தெழுவோம்
உன் கனவுகளைக் கலைப்போம்

உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையைக் கையில் எடுத்துக்கொண்டு
என்னை நோக்கிவா
எழுபத்தைந்து வருடகால
உன் பாவங்களை நான் மன்னித்துவிடுகிறேன்
உன்னை அரவணைத்துக்கொள்கிறேன்
என் மண்ணில் வாழ உனக்கும் இடம் தருகிறேன்
நாம் நம் வீடுகளில் நிம்மதியாகத் தூங்கி எழலாம்
அதற்கு நீ தயாரா

உன் இதயத்தில் ஈரம் கசியட்டும்
உன் உணர்வு துளிர்க்கட்டும்
உன் சித்தம் தெளியட்டும்
அதற்கு நீ தயாரா

காசா : அறப்படுகொலை

உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையுடன் வர நீ தயாரா

அதுவரை கலைக்கப்பட்ட தேனீக்கள்
உன்னைத் துரத்திக்கொண்டே இருக்கும்
உன் காதில் இரைந்துகொண்டே இருக்கும்
எங்களை முற்றாக அழித்துவிடலாம்
என்று மட்டும் கனவுகாணாதே
அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது.






*'மெல்லி நல் லாளே கேளாய் விளம்பசு வதியி னோய் தான்*
*புல்லிடி லெட்டு நாளிற் போய்விடும் பரணி யென்னிற்*
*கொல்லுங்கார்த் திகைநா டன்னிற் கூடிய நோய்க ளெல்லாம்*
*சொல்லிய விருபத் தொன்பா னாளினிற் சுத்த மாமே'* - 334

மெல்லியலாளே கேளாய்! சொல்லப்படுகின்ற அசுவதி (அஸ்வினி) நாளன்று நோய் வந்து சேருமானால் அந்நோயானது எட்டுநாளில் மாறிவிடும். பரணி நட்சத்திரநாளில் ஏற்படும் நோயானது நோயாளியைக் கொன்றுவிடும். கார்த்திகை நாளில் தோன்றும் நோய்கள் எல்லாம் இருபத்தொன்பதாம் நாளில் முற்றாக மாறிவிடும்.

*'சுத்தமா முரோகணிக்குச் சொல்லுநா ளெட்டிற் றீரும்*
*மெத்துமா திரையி னோடு மிருகசீரிடமோ ரைந்தாம்*
*ஒத்திடு புனர்த மெட்டா முறுபூசம் பதினொன் றாகும்*
*வைத்தவா யிலிய நோய்கள் வந்திடிற் சேத மாமே'* - 335

ரோகிணி நட்சத்திரத்தில் தோன்றிய நோய் எட்டு நாளிலும் ஆதிரை மற்றும் மிருகசீரிட நாளில் எற்பட்ட நோய் ஐந்தாம் நாளிலும் புனர்பூசம் எட்டாம் நாளிலும் பூசத்தில் வந்த நோய் பதினொன்றாம் நாளிலும் குணமாகும். ஆயில்ய நட்சத்திர நாளன்று தோன்றும் நோய் பெரும் சேதம் விளைவிக்கும்.

*'சேதமின் மகமீ ராறிற் றீர்ந்திடும் பூர மாகில்*
*ஓது நாட் பதினைந் தாகு முத்திரம் பத்தா மென்பர்*
*ஏதமிலத்த மாகி லேழுநாடன்னிற் றீரும்*
*பேதமாஞ் சித்திரைக்குப் பிசகில்லைச் சோதி கேளே'* - 336

சேதமில்லாத மகநட்சத்திர நாளில் வந்த நோய் பன்னிரண்டு நாளிலும் பூரநாளாயின் பதினைந்து நாளிலும் உத்தரமாயின் பத்தாம் நாளிலும் மாறும் என்பர். அத்த நட்சத்திரமாயின் ஏழு நாளில் நோய் தீரும். சித்திரை நட்சத்திரத்தில் வரும் நோய் தீங்கு செய்யாது.

*'சோதியிற் பிணிவந் துற்றாற் சுகம்வர நெடுநாட் செல்லும்*
*நீதியாய் விசாக மாகி னீங்கிடு மிருபத் தாறில்*
*வாதையாப் பெண்ணை நாளில் வந்தநோ யீராறாகும்*
*தீதுறு கேட்டை மூவொன் பதுவன்றேற் றீரா தாமே'* - 337

சுவாதி நாளில் நோய் வந்து சேர்ந்தால் சுகம் பெறுவதற்கு நெடுநாளாகும். விசாகத்தில் வந்த நோய் இருபத்தாறாம் நாள் நீங்கிவிடும். பனை நாளாகிய அனுஷ நட்சத்திரத்தன்று வந்த நோய் பன்னிரண்டு நாளில் தீரும். குற்றமில்லாத கேட்டை நாளில் வந்த நோய் இருபத்தேழுநாட்கள் வரை நீடிக்கும்.

*'தீருமொன் பதுநாண் மூலஞ் சிறந்த ராடத் துற்றாற்*
*பாருநா ளிருபத் தொன்றிற் பறந்திடும் பிணிக ளெல்லாம்*
*கூருமுத் திராடத் திற்குக் குறித்தநா ளெழுமூன் றாகும்*
*ஆருமே யறியச் சொன்னோ மோணத்திற் காறு நாளே'* - 338

மூல நட்சத்திர நாளில் நோய் வந்தால் ஒன்பது நாளில் மாறிவிடும். பூராட நாளில் வந்த பிணி இருபத்தொன்றாம் நாளில் தீர்ந்துவிடும். உத்தராட நாளில் வந்த நோய் மாற இருபத்தொரு நாள் செல்லும். திருவோணத்தில் வந்த நோய் ஆறுநாளில் மாறவேண்டும்.

*'நாளிதிற் றீரா தாகி னங்கையே மரண மாகும்*
*கேளுநீ யவிட்டத் திற்கு நாண்முப்பான் கிளத்தினார்கள்*
*ஆறிய சதய மாகி லொன்பதி லகன்று போகும்*
*கோளுறு புரட்டை யெட்டிற் குறுகுநோய்த் துயரம் போமே'* -339

அவ்வாறு ஆறாம் நாளில் தீராவிட்டால் மரணம் சம்பவிக்கலாம். அவிட்டத்தில் தோன்றும் நோய் மாற முப்பது நாள் எடுக்கும் என்று கூறியுள்ளார்கள். சதய நாளில் வந்த நோய் ஒன்பதாம் நாளிலும் பூரட்டாதி நாளில் தோன்றிய நோய் எட்டு நாளிலும் மாறிவிடும்.

*'துயரறு மூவைந் தாநாட் சொல்வருத் திரட்டா திக்குப்*
*பயமுறு மிரேவ திக்கு நோய்வரிற் பகைத்துக் கொல்லும்*
*வயமுறு மினைய நாளில் வன்பிணி வந்து தோன்றில்*
*செயமுறு தான தர்மஞ் சிவபூசை செய்து போற்றே'* - 340

உத்தரட்டாதியில் நோய் வந்தால் பதினைந்து நாளில் மாறிவிடும். பயப்படக்கூடிய ரேவதி நாளில் நோய் வந்தால் அது கடுமைப்படுத்தி மரணத்தை விளைவிக்கும். இதுபோன்ற வலிய நாட்களில் நோய்கள் வரும்போது நற்பலன் தரக்கூடிய தான தர்மங்களும் சிவபூசையும் செய்து இறைவனைப் போற்ற வேண்டும்.

*'போற்றிய பக்கந் தன்னிற் புகறுவா தசியே சட்டி*
*சாற்றிடு நவமி யோடு சதுர்த்தியாந் திதிக டம்மில்*
*ஏற்றமாஞ் சனிசேய் வார மிரவியி னோய்கள் வந்தால்*
*மாற்றுத லரிய தாகு மரணமு மண்ணி தாமே'* - 341

வளர்பிறைப் பக்கத்து துவாதசி, சஷ்டி, நவமி, சதுர்த்தி ஆகிய திதிகளும் சனி, செவ்வாய் அல்லது ஞாயிற்றுக்கிழமையும் கூடும் நாட்களில் ஏற்படும் நோய்கள் மாற்றுவதற்குக் கடினமாகவும் மரணத்தை விளைவிப்பதாகவும் இருக்கும்.

## மருந்துண்ணும் நாள்:

***'அண்ணிய பூசஞ் சோதி யவிட்டஞ்சித் திரையே யோணம்***
***பெண்ணமான் றலையு ரோணி பேசிய சதய மத்தம்***
***எண்ணுமுத் திரங்கண் மூன்றும் இரேவதி பதிநாள் புந்தி***
***நண்ணுபொன் வெள்ளி சோம னாயிறு கன்னி யாமே'*** - 342

பூசம், சுவாதி, அவிட்டம், சித்திரை, திருவோணம், அனுஷம், மிருகசீரிடம், ரோகிணி, சதயம், அத்தம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ரேவதி, திருவாதிரை என்னும் நாட்களும் புதன், வியாழன், வெள்ளி, திங்கள் அல்லது ஞாயிற்றுக்கிழமையும்.

***'கன்னியே மகர மேடங் கற்கட கந்தூக் கென்னும்***
***மன்னுமிந் நாட்க டம்மின் மருந்தையு ளருந்து வீரேல்***
***இன்னல் செய் வாத பித்த சிலேற்பனத் தெழுந்து சாரும்***
***சொன்னவெம் பிணிகணீங்கிச் சுகம் பெற்று வாழு வாரே'***- 343

கன்னி, மகரம், மேடம், கர்க்கடகம், துலாம் என்னும் இராசிகளும் சேரும் நாளில் மருந்தை எடுப்பீரேல் கெடுதல் செய்கின்ற வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் தோஷங்களால் எற்படக்கூடிய கொடிய பிணிகள் நீங்கிச் சுகம்பெற்று வாழலாம்.

***'வாழ்வுறு மாயில் கேட்டை மருவிய செங்கை மூலம்***
***தாழ்விலா வியாழனோடு சனிவார மிருத்தை தன்னிற்***
***சூழ்வுறு கடக மேடந் துலாமெனு மிராசி தன்னில்***
***வீழுநோய் பரிக ரித்துப் பார்த்திடன் மெத்த நன்றே'*** - 344

ஆயில்யம், கேட்டை, அனுஷம், மூலம் ஆகிய நாட்களில் குற்றமில்லாத வியாழன் அல்லது சனிக்கிழமையில் சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய திதிகளில் கர்க்கடகம், மேடம், துலாம் ஆகிய இராசிகளில் நோய்க்குச் சிகிச்சை செய்து பார்த்திடல் மிகவும் நல்லது.

***'மெத்திய வோணங் கேட்டை விளம்புமுத் திரமே செங்கை***
***ஒத்தசங் கிரமஞ் சென்ம நாண்மூன்றி னுடனு வாக்கள்***
***சுத்தமாம் பக்கந் தன்னிற் றுவாதசி துதிகை சட்டி***
***அத்துடன் பதினான் கொன்று மாகிய விவையா காதே'*** - 345

திருவோணம், கேட்டை, உத்தரம், திருவாதிரை நாட்கள் மாதப்பிறப்பு மற்றும் பிறந்த நட்சத்திரம், பிறந்த நட்சத்திரத்துக்கு மூன்றாம், பன்னிரண்டாம், இருபத்தோராம் நாட்கள் மூன்றுடன் அமாவாசை பருவம் மற்றும் வளர்பிறைத் துவாதசி திதியை சஷ்டி, ஏகாதசித் திதிகள் கூடாது.

***'ஆகாத திரிநா ணீக்கி யம்புலி ரவிவாரத்தில்***
***ஓதுநற் சுபதினத்தி லுற்றிடு நோயாளிக்குத்***
***தீதிலா வெண்ணெய் தேய்த்துத் தெண்ணீரில் முழுக நன்றாம்***
***காதலாய் வாக டத்தோர் கருத்துறக் காட்டினாரே'*** - 346

நோயாளியின் பிறந்த நட்சத்திரத்துக்கு மூன்றாவது, பன்னிரண்டாவது, இருபத்தோராவது நட்சத்திர நாட்களைத் தவிர்த்து திங்கள் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் சுபநாளில் சுகமடைந்த நோயாளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிர்ந்த நீரில் முழுகுவது நல்லது என்று மருத்துவ நூலோர் கரிசனையுடன் கூறியுள்ளார்கள்.

***'காட்டிய விருத்தை சென்மங் கலந்தநாண் மூன்று வாக்கள்***
***நாட்டுசங் கிரம கால நயமிலா நாச யோகம்***
***தீட்டிய கிரக நீசஞ் செப்புமிங் கிவைக ணீக்கிக்***
***கூட்டிய சுபதி னத்திற் கோணிலை யுச்ச மாக'*** - 347

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகியவற்றுடன் பிறந்த நட்சத்திரம் அதற்கு மூன்றாம், பன்னிரண்டாம் மற்றும் இருபத்தோராம் நாட்கள் மற்றும் அமாவாசை பறுவம், சங்கிரமகாலம் நன்மை தராத நாசயோகம் உடைய நீசக்கிரகம் என்று கூறப்படுவை விலக்கி ஒரு நல்ல சுபதினத்தில் கிரகங்கள் உச்சமாக இருக்கும்போது,

***'உச்சமாய்த் தீக்கோள் பார்வை யுறாதநல் லோரை தன்னில்***
***அச்சமாங் கால நீக்கி யட்டமஞ் சுத்தி யாக***
***வைச்சுநன் மருந்தை யூட்ட மஞ்சன மாட்ட வெட்ட***
***இச்சையா யிரட்சை செய்ய விசைத்தனர் திருத்தமாக'*** - 348

தீயகோள்களின் பார்வையில்லாத நல்ல முகூர்த்தத்தில் பயம் தருகின்ற வேளையை நீக்கி எட்டாமிடம் சுத்தமாக இருக்க, பொருத்தமான மருந்தைக் கொடுக்கவும், அஞ்சனம் தீட்டவும், அறுவைச்சிகிச்சை செய்யவும், காப்புக் கட்டவும் நல்லது என்று தெளிவாகக் கூறிவைத்துள்ளனர்.

## உணவுகொள்ளும் முறை:

***'திருத்தமாய்ப் போசனங்கள் செய்திடு முறையைக் கேளாய்***
***பருத்தவுந் தியினை நான்கு பங்கது வாகக் கண்டே***
***அருத்து நீ யிருகூ றன்னம் அப்பொரு கூற தாக***
***விருத்தொரு கூறு வீணில் விடுவது மேன்மை யாமே'*** - 349

சிறப்பாக உணவு உட்கொள்ளும் முறைபற்றிக் கேட்பாயாக. பருத்த வயிற்றின் அளவை நான்கு பங்காகப் பிரித்து அதில் இரண்டு பங்கு திண்ணிய உணவாகவும், ஒரு பங்கு நீராகவும் அருந்தி நான்காவது பங்கை வெறுமையாக விடுவது சிறப்பாகும்.

***'மேன்மையாம் போசனங்கள் மிகுசுவை யமுதொப் பென்னும்***
***பான்மையா யருந்தி நூறாய்ப் பகரடி நடந்து பின்னர்***
***வான்மிகு தாம்பூ லங்கண் மரபினற் றுய்த்தது மஞ்சத்***
***தேன்மலி குழலா ரோடு துயில் பவர்க் கில்லை நோயே'***- 350

மிகுந்த சுவையுடைய உணவுகளை அமுதமென அருந்தியதும் நூறு அடி நடந்து பின்னர் வெற்றிலை போட்டு மரபுவழி வந்த படுக்கையில் தேன் நிறைந்த கூந்தலுடையவளுடன் துயில் கொள்பவர்க்கு நோய் வர வாய்ப்பில்லை.

***'நோயிலை யங்கி நீர்கால் நுடங்குடம் பொத்து நிற்கில்***
***ஆயுவுஞ் சுகமு முண்டா மன்னமப் படைவிற் சேரும்***
***ஏயசிந் தையினி லின்ப மிசைந்திடு மகிழ்ச்சி யெய்தும்***
***சேய்மனை வாழ்வினோடு செல்வமுஞ் சிறக்கு மன்றே'*** - 351

தீ, நீர், காற்று என்பன நலிந்த உடலுடன் இசைவாய் நிற்கும்போது நீண்ட ஆயுளும் சுகமும் உண்டாகும். உண்ணும் உணவும் அப்படியே உடம்பிற் சேரும். மனதில் இன்பம் தோன்றும். மகிழ்ச்சி பெருகும். மனைவி பிள்ளைகளோடு வாழ்வில் செல்வமும் பெருகும்.



Sivakadadcham@thaiveedu.com





தொடர்ந்து வரும் 3 - 4 மாதங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ குளிர் மிகுந்த நாட்டில் வாழும் நாங்கள் அதனால் ஏற்படக்கூடிய இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் வாழும் வீட்டினை இதமாக வைத்திருப்பதற்காகவும், சௌகரியத்தோடு வாழ்வதற்காகவும் பலவித வழிமுறைகளைக் கையாளவேண்டி இருக்கும். அத்தகைய வழிமுறைகள் எமக்கு இக்காலப்பகுதியில் அதிகளவு செலவினை அல்லது பண விரயத்தினை ஏற்படுத்தக்கூடியவையாகவும் இருக்கும். ஆனால் சில தந்திர உபாயங்களைக் கையாள்வதன் மூலம் மேலதிகமாக ஏற்படக்கூடிய பல செலவுகளைக் கட்டுப்படுத்தி அதனூடாக பல நூறு டொலர்களை இக்காலப்பகுதியில் நிச்சயம் சேமிக்க முடியும்.

TOU (Time of Use):

ஒன்ரோறியோவின் பெரும்பாலான பகுதியில் வசிக்கும் எல்லோரும் Smart Meter ஊடாக மின்சாரத்தை நுகர்வதால் எங்கள் பாவனை நேரத்திற்கமையவே மின்சாரக் கட்டணம் செலுத்துகின்றோம். நவம்பர் மாதம் 1-ம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 30-ம் திகதி வரை குளிர்காலத்திற்கான நேர அட்டவணை அமுலில் இருக்கும். காலை 7 மணி முதல் 11 மணி வரையும் அத்துடன் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் உள்ள காலப்பகுதி உச்ச காலமாகவும் (High Peak) காலை 11 முதல் மாலை 5 மணி வரையுள்ள கால்பகுதி நடுத்தர காலமாகவும் (Mid Peak) மாலை 7 மணி முதல் காலை 7 மணி வரையுள்ள காலப்பகுதி உச்சமற்ற (Non-Peak) சாதாரண காலப்பகுதியாகவும் வகுக்கப்பட்டுள்ளது. எனவே இக் காலப்பகுதியினைக் கருத்திற்கொண்டு மின்சாரப் பாவனைக்கான எமது செயற்பாடுகளை வகுத்துக் கொள்வது நல்லது. தற்போது மின்சாரக் கட்டணம் பின்வரும் அடிப்படையில் அறிவிடப்படுகிறது.

| | |
|---|---|
| On Peak | 18.2 Cents/kw |
| Mid Peak | 12.2 Cents/kw |
| Non Peak | 8.7 Cents/kw |

குறிப்பாகக் கூறுவதனால் உடுப்பு சலவை செய்தல், பெரிய அளவிலான சமையல் போன்ற நடவடிக்கைகளை இரவு நேர




மான 7 மணிக்குப் பின்னர் வைத்துக்கொண்டால் மின்சாரத்தால் ஏற்படக்கூடிய செலவை சுமார் 40%-க்கு மேல் குறைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

**சேமிப்புக்கான மேலும் பல உபாயங்கள்:**

- கதவுகளையும் யன்னல்களையும் முறையான அடைப்புகள் (Weather Stripe) கொண்டு இறுக்கமாக மூடுவதன் மூலம் 25% சக்தி வியரத்தைச் சேமிக்கலாம்.
- சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வரும்படியாக யன்னல் திரைச்சேலைகளை பகல் வேளைகளில் திறந்து வைப்பதன் மூலம் வீட்டினை இயற்கை முறையில் வெப்பமாக வைத்திருக்கலாம்.
- மரக்கட்டைகள் கொண்டு இயங்கும் தீயறை (Fire Place) இதமாக இருந்தாலும் அது பாவிக்கப்படாத நேரத்தில் அதன் உள்ளிருக்கும் கதவை (Flue Shut) இறுக்கமாக மூடி வைத்திருத்தல் வேண்டும். அல்லது வீட்டின் வெப்பம் விரயமாகி, வீடு குளிரடைய அதனை நிகர் செய்ய Furnace-உம் மேலதிகமாக இயங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.
- பண்டிகைக்கால விளக்குகளையும் வீட்டில் உள்ள மின்குமிழ்கள் மற்றும் விளக்குகளையும் LED-க்கு மாற்றுவதன் மூலம் 75-80% மின்சாரத்தை சேமிக்கலாம்.



- பாவிக்காத மின்சார உபகரணங்கள் அனைத்தையும் முற்றாக நிறுத்திவிடவும், உறங்கு நிலையில் (sleep) வைக்கப்பட்டிருக்கும் உபகரணங்கள் சுமார் 10% மின்சாரத்தை விரயம் செய்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- சலவை செய்யும் இயந்திரத்தை குளிர் தண்ணீரில் சலவை செய்யும் நிலைக்கு மாற்றுவதன் மூலம் 90% சக்தி விரயத்தைத் தவிர்க்கலாம்.
- எரிவாயுவினால் இயங்கும் அடுப்பினைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும் நடுத்தர அளவிலான சுவாலையை பாவிப்பதன் மூலமும் உச்ச பயனை அடையலாம்.
- 6” அங்குல விட்டமுள்ள பாத்திரத்தை 8” விட்டமுள்ள அடுப்பில் உபயோகித்தல் 40% அடுப்பின் வெப்பத்தை விரயமாக்கக் கூடியது. பாத்திரத்தின் அளவுக்கேற்ற அடுப்பைப் பாவிப்பதே உத்தமமானது.
- சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடுகையில் Microwave 75%-க்கும் குறைவான மின்சாரத்தையே பாவிக்கின்றது.
- மூடிய அடுப்பில் (Stove) வெதுப்பும் (Baking) போது அடிக்கடி திறந்து பார்த்தல் 20%-க்கு மேற்பட்ட வெப்பத்தை விரயமாக்கும்.
- பாத்திரத்தை மூடிச் சமைப்பதன் மூலம் 14% சக்தியை சேமிக்கலாம்.
- மின்சார உலர்த்திக்குப் பதிலாக, காற்றில் உலரும் விதத்தில் Dish Washer-ஐ பாவிப்பதன் மூலம் 15% சக்தியை சேமிக்கலாம்.
- முகட்டு காற்றாடியை (Ceiling Fan) பாவிப்பவர்கள் காற்றோட்டத்தை மேலிருந்து கீழ்நோக்கி வருமாறு திருப்பி விடுங்கள். (Reverse the Flow).
- மின்சார உபகரணங்களை ஒரு Power Bar-இல் இணைத்து, பாவனையற்ற காலங்களில் Power Bar-ஐ முற்றாக நிறுத்தி விடல் உசிதமானது.
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கியின் (Furnace) வடிகட்டியை (Filter) மாற்றிவிடுவது அதன் தொழிற்பாட்டின் திறனை அதிகரிக்கவும், சக்தி விரயத்தைச் சேமிக்கவும் வழி வகுக்கும்.
- Dimmer, Timer என்பவற்றை பாவிப்பதன் மூலம் அதிகளவு மின்சாரத்தைச் சேமிக்கலாம்.
- விடுமுறைக் காலங்களில் வீட்டில் பலர் பிரசன்னமாக இருப்பதும் நீண்ட நேரம் குளிப்பதும் பொதுவாகவே இருக்கும். Energy Star Shower Head-களை பாவிப்பதன் மூலம் தண்ணீரை மட்டுமல்ல சுடுநீரையும் சேமிக்கலாம்.
- விடுமுறைக் காலங்களில் பலமுறை செய்யும் வெதுப்பும் வேலைக்களைத் திட்டமிட்டு ஒரே தடவையில் செய்தல் பல விதத்தினும் சேமிப்பைத் தரும்.
- உங்கள் வீட்டின் வெப்பத்தின் அளவை Themostat-ல் 1 Degree குறைப்பதன் மூலம் உங்கள் வெப்பமாக்கல் செலவில் 3%-ஐ சேமிக்க முடியும்.
- படுக்கை நேரத்தில் Themostat ஐ 18°C – 20°C-க்கு மாற்றி விடப் பழகுவதன் மூலம் வெப்பமாக்கல் செலவில் 10%-ஐ குறைக்க முடியும்.
- வீட்டுத் தேவைக்கு வாங்கும் மின் உபகரணங்கள் யாவும் Energy Star தரம் கொண்டவையானவையா? என உறுதி செய்து கொள்ளுங்கள். புதிதாகக் கட்டப்படும் Energy Star வீடுகளுக்கு எல்லோராலும் மாறமுடியாது ஆனால் பாவிக்கும் உபகரணங்களை எல்லோராலும் Energy Star-க்கு மாற்ற முடியும். அதனால் பாரிய அளவு பலனை அடையவும் முடியும்.

மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் எல்லோராலும் எந்த நேரத்தி லும் செய்ய முடியாது. ஆனால் முடிந்தளவு ஒரு சில வற்றைக் கவனத்தில் கொண்டாலே போதுமானது. சிறு துளி பெருவெள்ளம் அது சேமிப்பிற்கும் பொருந்தும்.

உசாத்துணை:
http://www.energy.gov.on.ca



velasubramaniam@thaiveedu.com

# சிறுதொழில் அமைப்புகள்

**– செந்தூரன் புனிதவேல்**

எந்த நாட்டிலும் பலரும் கண்டுகொள்ளாத அடிப்படை அமைப்பு சிறு தொழில்களாகும். ஆங்கில ஏகாதிபத்தையே ஆட்டங்கொள்ளச் செய்தது காந்தியின் கைத்தறி நெசவு இயக்கமாகும். Small Business எனும் சிறுதொழில்கள் கொரோனாத் தொற்றுநோயின் தாக்கம் குறைந்தபின் மீண்டும் புதுத் தெம்புடன் வளர்ச்சியடைந்து வருகிறது. தொற்றுநோய்க் காலத்தில் பல பெருந்தொழில் அமைப்புகளில் ஆட்குறைப்பு வேளையில் பலரும் வாழ்வாதாரத்திற்காகச் சுயவேலை செய்து சிறுதொழில் நிறுவனங்களை ஆரம்பித்துள்ளார்கள்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பல சிறுதொழில் நிறுவனங்கள் ஆரம்பகாலத் தடைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து முன்னேறியுள்ளன. அவர்களுக்கு வாழ்த்துகளும் ஆசிகளும். ஆனால், ஆவர்கள் தொடர்ந்து தொழில் செய்வதில் பல புதுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

P.M.G Intelligance எனும் கனடிய வியாபாரச் செயற்பாட்டு ஆய்வுக்குழு தமது ஆய்வின் முடிவில் சிறுதொழில் உரிமையாளர்கள் கூடிய தன்னம்பிக்கை உடையவர்களாகவும், தமது தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளார்கள். அவ்வேளைகளில் அவர்களுக்குப் பல செலவீனங்களும் உள்ளன. அவர்கள், அவற்றைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை அறிவதற்கு ஆர்வமும் உடையவராயுள்ளார்கள்.

கோவிட் காலத்தில் பல சிறுதொழில் அமைப்புகள் பெரும் முயற்சியுடன், தாம் வீழ்ந்துவிடாது தமது தொழிலை நடத்தி வந்துள்ளார்கள். தற்போது வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பும் வேளையில் போட்டியும் கூடியுள்ளது. இக்கால கட்டத்தில் நிதி சம்பந்தமான அறிவுரையை நிதிசார் நிறுவனங்களில் பெறுவதற்கு முயல்கிறார்கள்.

எமது சமூகத்தில் பல தகுதிவாய்ந்த நிதி அமைப்புகள் இயங்கி வருகின்றன என்பதில் சந்தேகமில்லை.

நிதிசார் அமைப்புகளை அணுகும் வேளைகளில் மிக்க கவனமாய் இருக்கவேண்டும் என்பதுடன், தேர்ந்தெடுக்கும் அமைப்பு பன்முகத் தேவைகளையும் ஈடு செய்வதாக இருப்பது அவசியம். நிதிசார் விடயங்களில் பல அமைப்புகளின் சேவையை நாடும்போது, பெருங்குறை என்னவென்றால், ஏதாவது தவறு ஏற்படின், ஓர் அமைப்பு மற்ற அமைப்பில் குறை கூறித் தப்பித்துக்கொள்ள வாய்ப்புண்டு.

உதாரணமாகக் குறிப்பிடுவதானால், இணையவழி ஏற்படும் தாக்கங்களும் இழப்புகளும் மற்றும் தம்முடன் இணைந்து செயலாற்றும் சேவகர்களுக்குத் தேவையான காப்புறுதிகளும் வழங்குவதுடன், முதலீடு செய்யும் உங்களுக்கான நிதி சம்பந்தமான விடயங்களையும் கவனிப்பதற்கு ஏற்ற ஆலோசகரைப் பெறுவது அவசியம்.

ஒரு விடயத்தில் சிறப்பாகச் செயலாற்றக்கூடியவரை தேர்ந்தெடுப்பதற்கான அறிவுரையை, 2000 வருடங்களுக்கு முன்பே ஐயன் வள்ளுவன் தனது 517-வது குறட்பாவில் கூறிச் சென்றுள்ளார். அதாவது:

***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து***
***அதனை அவன்கண் விடல்.***

என்று.

எமது சமூகத்தில் பல திறமான நிதி ஆலோசகர்கள் உள்ளார்கள். அதில் திறமையானவரை தேர்ந்தெடுங்கள்.

சிறுதொழில் செய்வோர், காப்புறுதி செய்யும் வேளையில் சில விடயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டியுள்ளது.

**தொழில் தடங்கள்:**
இதனை ஆங்கிலத்தில் Business Interuption என்பார்கள். இக்காப்புறுதியைப் பொதுவாகப் பலரும் போதியளவு பெறுவதில்லை. இக்காப்புறுதி எதிர்பாராத அதாவது தீ விபத்து, அல்லது பெருவெள்ளம் ஏற்பட்டு தொழில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டி வரின் ஏற்படும் நஷ்டங்களை ஈடு செய்வதற்காகும்.

இது, கோவிட் - 19 காலங்களில் ஏற்பட்ட தடங்கல்களின் போது ஒரு பெரும் கேள்விக்குறியாக அமைந்தது. பல தொழில் அமைப்புகளும் காலவரையறையின்றித் தமக்கு ஏற்படும் இழப்பைக் காப்புறுதி அமைப்பு ஈடுசெய்யும் என நம்பினார்கள். இதனால் பல வழக்குகளும் தொடரப்பட்டது.

பெரும்பான்மையான காப்புறுதிகள், இது காற்றால் பரவும் நோய்கள் / கிருமிகளின் தாக்கம் எனினும், சிறுதொழில்கள்; குறிப்பாக அவை செயலாற்றும் இடம், மற்றும் கருவிகளில் தங்கியிருப்பவைக்குக் காப்புறுதி நஷ்டஈட்டைத் தரும்.

தொழில் தடைப்படும் வேளையில் தொழில் செயலாற்றுவதற் குத் தேவையான செலவு, சம்பளம், கடன் மீள் செலுத்தல், வாடகைச் செலவு போன்றவை தற்காலிக இடத்தில் ஏற்படும் வேளையில் ஈடு செய்யும்.

இதற்குக் கேட்பனவு செய்யும் வேளையில் இரு விடயங்க ளைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

- எனது தொழில் இரண்டு நாள் முதல் ஒரு வருடம் வரை இயற்கை அனர்த்தத்தால் தடைப்பட்டால் அது தாக்குப் பிடிக்குமா ? போன்றவை.
- எமது தொழில் தீ அல்லது வெள்ளத்தால் தடைப்பட்டால் தொடர்ந்து தொழிலாளர் சம்பளம் போன்றவற்றைக் கட்ட முடியுமா ? என்பதாகும்.

**இணையம்:**
இணையத்தால் தமக்குப் பெருந்தாக்கம் வராது என, பொது வாகச் சிறுதொழில்கள் எண்ணுவது இயல்பு. ஆனால், யதார்த்தம் யாதெனில் இன்றைய தொழில்நுட்ப உலகில் இணையத்தால் தாக்கமடையாதவர் ஒருவருமில்லை. பெருந் தொழில் ஸ்தாபனங்கள் பெருஞ்செலவில் இணையத்தளத் தாக்குதலின் விளைவுகளுக்கேற்ற காப்பரண் செய்து வைக்க லாம். ஆனால் அது சிறுதொழில்களுக்குக் கட்டுப்படாது.

இணையதளத்தில் ஏற்படும் தாக்கம் ஒரு சிறுதொழிலைக் குறிவைத்து இடம்பெறாவிடினும், அதனால் சிறுதொழில் பாதிப்படையும் வேளையில், பெரும் பொருட்செலவு செய்து அத்தொழிலை மீள் ஆரம்பம் செய்யவேண்டி வரும். இப்படி யான இணையத்தளத் தாக்குதல் பல சிறுதொழிலை செயலி ழக்கச் செய்வதுண்டு. இவற்றை ஈடுசெய்ய, இணையப் பொறுப்புடமைக் (Cyber Liability) காப்பீடு (coverage) எடுத் திருப்பது அவசியமாகும்.

அடிப்படையில் இதனைச் செய்வதற்கு எழும் கேள்விகள்:

- எமது இணையத்தளத்தில் எவ்வளவு தகவல்கள் தங்கியுள் ளது.
- எடுத்துள்ள காப்புறுதியில் எது தவிர்க்கப்பட்டுள்ளது, அல்லாவிடில் இணையத்தள இழப்பீடு மட்டுக்குமாக ஒரு காப்புறுதியைப் பெறலாம்.
- தவறுகளும், விடுபாடுகளும் (Errors and Omissions)

எவருமே தவறு செய்யலாம் அல்லது தவறி விட்டிருக்கலாம். அவற்றிற்கு நஷ்டத்தை ஈடுபடுத்துவதற்குரிய காப்புறுதி உள் ளதா என நிச்சயப்படுத்திக் கொள்வது அவசியம்.

உங்கள் சிறுதொழில் வளர்ச்சி, தங்குதடையில்லாது வளர்ச்சி பெறுவதற்குத் தகுந்த ஒரு காப்புறுதி முகவரை அணுகி, அவர் கூறும் அறிவுரைப்படி செயல்படுங்கள்.

வாழ்க வளமுடன்.



senthuran.p@thaiveedu.com





# பாடசாலைகளில் பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்கள்

**த. சிவபாலு**

அண்மைக்காலங்களில் அனைத்துப் பாடசாலைகளிலும் கற்றல், கற்பித்தல் முறைகளில் மட்டுமல்ல பெற்றோரின் பங்களிப்புகளும் எதிர்பார்ப்புகளும் மாற்றம் கண்டுவருகின்றன. இதற்குப் பாடசாலைச் சமூகம் எதிர்வினையாற்ற வேண்டிய நியதியும் எதிர்பார்ப்புக்களும் அதிகம். இதனால் ஆசிரியர்கள், அதிபர், பாடசாலை நிருவாகத்தினர் மற்றும் மாணவர்கள் மட்டுமல்லாமல் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கும் பெற்றோரும் பெரும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் நிலைமை காணப்படுகின்றது என்பது மறுப்பதற்கில்லை. அனைத்து நிலைகளிலும், எல்லா முறைமைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருப்பது நாமனைவரும் காணும் நிதர்சனமான உண்மை.

பிள்ளைகளை எதிர்கால நலனுக்கான முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதாகக் கல்வி அமையவேண்டும் என்பதே பெற்றோரின் விருப்பமாகும். இன்று பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பிவைப்பதோடு அவர்களது கடமை முடிவடைந்து விடுவதில்லை. நாளாந்தம் அவர்களின் நடத்தைகள், முன்னேற்றங்கள், கல்விக்கான தேவைகளைக் கவனிக்கவேண்டிய கடப்பாடும் கட்டாயமும் பெற்றோருக்கு உண்டு. இவற்றிற்கு முகம்கொடுக்கும் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் எதிர்வினைகள் பெற்றோரின் வாழ்வியல் சூழலையும், முறைமைகளையும், செய்தொழில்களையும், வருமானத்தையும், தாம் பெற்றுக்கொண்ட கல்விப்பின்புலத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாக அமைகின்றன.

பாடசாலைச் சமூகம் என்பது மாணவர்கள், பாடசாலைகளில் பணியாற்றும் ஆளணியினரோடு பெற்றோரையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றது. பெற்றோரைப் புறந்தள்ளிவிட முடியாதவகையில் அவர்களை உள்வாங்கவேண்டிய நிலை கல்வியின் ஒருங்கிணைந்த செயற்பாட்டிற்கு மிக அவசியமாகின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் பெற்றோரை உள்ளடக்கிய பெற்றோர் சங்கங்கள் உள்ளன. இவை பாடசாலை நடவடிக்கைளுக்கு பல்வேறு வழிகளிலும் பல்வேறு நிலைகளிலும் உதவி வருகின்றன. இதன் வழியாக பெற்றோரின் ஈடுபாடும் தொடர்பாடலும் பாடசாலைக்குக் கிடைக்கின்றன. பாடப்புறச் செயல்களில் பெற்றோரின் பங்களிப்பு வேண்டப்படுவது போலவே, ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாடு குறித்த அக்கறையையும் ஈடுபாட்டையும் கொண்டிருப்பதற்கு இந்த தொடர்பாடல் வழிவகுக்கின்றது. பாடசாலையோடு தொடர்பில் இருத்தல் என்பது கல்வியில் ஏற்படும் இடைவெளியைக் குறைத்து பிள்ளைகளை வழிநடத்த உதவுவதாகவும் அமைகின்றது.

கல்வி என்பது பாடசாலை நேரத்துக்குள் மாணவர், ஆசிரியர் தொழிற்பாட்டோடு மட்டும் முடிவடைந்து விடுவதில்லை. அது வீட்டை நோக்கியும் தொடர்கின்றது. வீட்டுப் பாடங்களில் பெற்றோர் உதவ வேண்டிய நிலை தவிர்க்கமுடியாதவாறு உள்ளது. எனவே புதிய தொழில்நுட்ப உத்திகள், கற்றல், கற்பித்தல் முறைகள், திறன்கள் பற்றி பெற்றோருக்குத் தெரிந்திருக்கவேண்டிய கடப்பாடு உண்டு. இதனால் பல்வேறு சிரமங்களுக்கு பெற்றோர் உள்ளாவதோடு பல சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகின்றனர்.

('Coaching, ultimately, is all about promoting reflective thinking. To do so, coaches utilize strategies and language that support teams' or teachers' planning and decision making skills, ability to reflect on practice, and development as self-directed learners.' - Mike Mattos, Taking Action) 'ஒரு பயிற்சியின் இலக்கானது, அதன் இறுதியில், ஆழ்ந்து சிந்திக்கின்ற புத்திக்கூர்மையை ஒருவரிடம் வளர்ப்பதாகும். ஒருவரின் முடிவெடுக்கும் திறன், சமயோசிய சிந்தனை மற்றும், தன் முனைப்பால் கற்க் கூடிய ஆற்றல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் உத்திகளையும் அதற்கான மொழிப் பிரயோகங்களையும் பயிற்சிவிப்பவர்கள், குழுக்கள் அல்லது ஆசிரியர்கள் திட்டமிட்டு பயன்படுத்துகின்றனர்' என்று Mike Mattos என்ற கல்வியியலாளர் Taking Action என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்கள், ஆரம்பப் பள்ளிகளிலிருந்து உயர் நிலைப் பள்ளிவரை வேறுபாடு உடையனவாக அமைகின்றன. பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்களால், அவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் வீட்டுவேலைகளைப் புரிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்படுகின்றது. இது அவர்களுக்கு பல்வேறுவிதமான சிக்கல்களையும் மனப்பளுவையும் அதிகரிக்கின்றது. இந்த நிலை 'அப்பா உங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்னும் வார்த்தையைப் பிள்ளைகளிடம் இருந்து கேட்கவேண்டிய நிலைக்கும், தனது பிள்ளையின் முன், தான் தாழ்ந்து நிற்கவேண்டிய நிலைக்கும் தள்ளிவிடுகின்றது. அதே நேரம் பிள்ளைகள் மத்தியில் பெற்றோரைப்பற்றிய தவறான கணிப்

பையும் ஏற்படுத்திவிடுகின்றது. இவற்றிற்குப் பெற்றோர் முகம் கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனால் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி கவனம் செலுத்தவேண்டியுள்ளது. வாழ்க்கை முழுமையும் கற்க வேண்டிய நியதியை இது வலியுறுத்துகின்றது.

பெற்றோர் எதிர்கொள்ளும் சில சவால்கள் பின்வருமாறு:

## அடிப்படையான தலையங்கங்கள் மிகச் சிக்கலானவையாக அமையும்போது:

பாடவிதான மாற்றங்கள் மாணவர்களுக்கான பாடங்களைத் தயாரிப்போரிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பாடவிதான வழிகாட்டல்களைப் பின்பற்றியே பாட அலகுகள் தயாரிக்கப்படுகின்றன. மாறிவரும் உலகத்திற்கேற்ப கல்வியில் பிள்ளைகள் சில பாடங்களில் கொடுக்கப்படும் தலைப்புக்களுக்கும் உள்ளடக்கத்திற்கும் வேறுபாடுகள் காணப்படும்போதும், அவை முரண்படுபவையாகக் காணப்படும் போதும் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக கணிதத்தில் பெற்றோர் கற்றுக்கொண்ட முறைகளுக்கும் இங்குள்ள பாடசாலைகளில் மாணர்களுக்குச் சொல்லித் தரும் சொற்பிரயோகம், அமைப்பு முறைகள், கற்பித்தல் முறைகள் வேறுபாடுடையனவாக அமைகின்றன. பெற்றோர் தாம் கற்ற கணித முறைகளைச் சொல்லிக் கொடுக்க முனையும் போது, அது பிள்ளைகளைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடுகின்றது. உதாரணமாக: கணித பாடங்களில் பின்பற்றப்படும் படிமுறைகள் வேறுபாடுடையனவாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில், பெற்றோர் கற்றமுறைக்கும் இங்கு கற்பிக்கப்படும் முறைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் இவ்வித குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. கனடாவில் பெற்றாரியம் என சில வகுப்புகளை அரசாங்கமே நடத்துவதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

## பாடசாலையானது குழந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யாதபோது:

பெற்றோர் எதிர்பார்க்கும் அல்லது கல்வியின் அடைவினை எதிர்பார்க்கும் கல்வியைப் பாடசாலை பூர்த்தி செய்வதும் தனிப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியதும் முக்கியமானது. ஆனால் இவற்றை நிறைவேற்ற முடியாத நிலைமை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நேரங்களிலும் ஏற்படுகின்றது. இவற்றில் பலவற்றைப் பாடசாலைகள் நிறைவேற்ற முடியாதவையாக உள்ளமையும் அவற்றைப் பெற்றோரே செய்யவேண்டிய நியதியும் இருப்பது கண்கூடு.

இந்தத் தேவைகள் எப்போதும் கற்றல் அல்லது உளவியல் சார்ந்த குறைபாடுகள் அல்ல. அவற்றில் சில தன்னுடல் எதிர்ப்பு சக்தி கொண்டவை. பிள்ளையின் உடல் நலப்பிரச்சினையாகவும் அவை காணப்படலாம். குழந்தைகளை அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பெற்றோர் அருகில் இருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் பெற்றோர் இல்லாத வேளைகளில் பாடசாலையே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். சிலவற்றிற்கு அதற்கேற்ற கருவிகளைக் கையாளுதல் வேண்டும். இவற்றில் சிலவற்றிற்கு ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. அவற்றை அவர்களால் கையாளமுடியும். எடுத்துக்காட்டாக ஒவ்வாமை காரணமாகப் பாதிக்கப்பட்டால் உடனடியாக மருத்துவனைக்குக் கொண்டுசெல்லவேண்டிய ஏற்பாடுகளைப் பாடசாலைகளே செய்தல் வேண்டும். கனடா போன்ற நாடுகளில் பிள்ளைகளுக்கு சில உணவுகளுக்கு ஒவ்வாமை காணப்படலாம். அவற்றிற்கான மருந்துவகைகளை அவர்கள் எப்போதும் கொண்டுசெல்லவேண்டும். இதனைப் பெற்றோர் கவனமாக கொடுத்தனுப்புதல் வேண்டும். பாடசாலைகளிலும் அவசரகால உதவிப் பெட்டிகளில் இவை பேணப்படுகின்றன. ஆனாலும் சிலவேளைகளில் பிள்ளைகள் மூச்சுவிடமுடியாத நிலைக்குத்தள்ளப்பட்டால் உடனடியாக அம்புலன்ஸ் வண்டியை வரவழைத்து வைத்திய நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் இது போன்ற நிகழ்வுகளைக் கையாளும் கருவிகள் மற்றும் திறன்கள் இல்லை.

இவற்றைவிட சில பிள்ளைகள் ஓட்டிசம் அல்லது ஓட்டிசம் அறிகுறிகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். அதற்கான பாதுகாப்பு, அரவணைப்பு, தனிப்பட்ட பிள்ளைகளின் தேவைகளுக்கேற்ப கவனிக்கப்படவேண்டிய நிலை உண்டு. சில பிள்ளைகளை சில வேளைகளில் தனிமைப்படுத்தவேண்டிய நிலைமையும் காணப்படலாம். துரதிர்ஷ்டவசமாக, இது பள்ளியின் நிலையை மேலும் இறுக்கமானதாக அமைக்கலாம். பிள்ளைகளுக்கு ஏற்றவகையில் கனிவு மற்றும் பண்பு கொண்டவையாக இல்லாது போகலாம். எனவே, இவை சிற்சில வேளைகளில் பொருத்தமற்றவையாகக் கூடத் தோன்றலாம். அதனால்தான் சில பெற்றோர் மாணவர்களை மையப்படுத்திய மற்றும் வயதுக்கு ஏற்ற அணுகுமுறையை விரும்புகின்றார்கள். பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பாடசாலைக்குப் பெற்றோர் அழைக்கப்பட்டு பிள்ளைகளை ஒப்படைத்து விடும் தன்மையும் உண்டு. இது பெற்றோருக்குப் பெரும் சவாலாக அமைவதைக் காணலாம். பிள்ளையைப் பாடசாலையில் ஒப்படைத்துவிட்டு வேலைக்குச் சென்ற பெற்றோரைப் பாடசாலை அழைக்குமானால் அவர்கள் வேலையில் இருந்து ஓய்வெடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு அவர்களைத் தள்ளுவது, அவர்களுக்கு அது பெரும் சவாலாக அமைவதைக் காணலாம்.

## பாடசாலை பெற்றோர் சமூகம் வாழ்விடச் சமூகத்திலிருந்து வேறுபடுகிறது அல்லது முரண்படுகின்றது:

அயலவர்களுடன் பிரச்சினைகள் உள்ளவர்கள் குழந்தைகள் மட்டுமல்ல பெற்றோரும் தான். இவை பெற்றோர்களுக்கு சொல்லப்படாத சவால்களில் ஒன்றாகவும் அமைந்துவிடுகின்றன. பெற்றோர் தங்கள் குழந்தைகளை ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சேர்க்கும்போது, அந்த சமூகத்தில் உள்ள பெற்றோருடன் நட்புக் கொள்வது எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தத் தொடர்பாடல் என்பது பல நேரங்களில், மொழியால் தடைப்படுகின்றது. கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரும்பாலும் கல்விமொழியும் ஊடாட்ட மொழியும் ஆங்கில மொழியாகவே காணப்படுகின்றது. வேறு நாடுகளில் இவை மாறுபடும். குறிப்பாக தாய்லாந்தில் உள்ள ஒரு பாடசாலையில் குழந்தை சேர்க்கப்படும் போது, அங்குள்ள பெரும்பாலான பெற்றோர்கள் சீன மொழி பேசுவதால், ஆங்கிலம் பேசும் பெற்றோர்கள் அச்சமூகத்தில் எப்படி நுழைவது என்று தெரியாமல் தவிக்கின்றனர். பெற்றோருடன் தொடர்பாடல் ஏற்படாது போகவும் காரணமாக அமைகின்றது. இவ்விதமே கனடாவிலும் ஆங்கிலம் தெரியாத பெற்றோருக்கும் அது சவா

லாக அமைகின்றது. பாடசாலையோடு தொடர்பு கொள்ளு வது மட்டுமல்ல. பெற்றோர் சங்கங்களில் பங்குகொள்ளவும் ஏனைய பெற்றோருடன் தொடர்பு கொள்ளவும் முடியாத நிலையில், மனதளவில் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக ஆக்கிக் கொள்கின்றார்கள்.

## கொடுமைப்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம்:

சில பிள்ளைகள் பெற்றோரால் கொடுமைப்படுத்தப்படுகின்ற னர் அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். பெரும் பாலான பெற்றோர் இவ்வகையான கொடுமைப்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் தங் களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருக்கவே விரும்புகிறார் கள். ஏனெனில் அவர்கள் அவ்வாறு செய்யும்போது, அது பொதுவாக அதிபரிடம் சென்று பெற்றோருக்கும் அதிபருக்கு மான தேவையற்ற ஒரு சங்கட நிலைமையைத் தோற்றுவிக் கின்றது. ஆனால், பெற்றோர்கள் எப்போதும் குழந்தைக ளைப் பாதுகாக்க விரும்புகின்றார்கள் என்பது உண்மை. குறிப்பாக கொடுமைப்படுத்துபவர் ஆசிரியராக இருக்கும் போது அதனை எதிர்த்து நடவடிக்கை எடுக்க நினைப்பது போன்று, பெற்றோர் கொடுமைப்படுத்தும் போதும் நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்கு பெற்றோர் முகம்கொ டுத்துத்தான் ஆகவேண்டும். நாங்கள் எங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவது கற்றலை மேம்படுத்துவதற்கே. பிள் ளைக்கு தீங்கு ஏற்படுகின்றது என அறிந்தால் தட்டிக்கேட்க வும், துணிவுடன் நடவடிக்கை எடுப்பதற்கும் ஒவ்வொரு பெற் றோரும் முன்வரவேண்டும்.

குழந்தைகளின் துஷ்பிரயோக வழக்குகளில் பெற்றோர் ‘அலட்சியமாக’ அல்லது ‘செயலற்றவர்களாக’ வாழா இருப் பது என்பது அவர்களுக்குக் கவலை தரும் விடயங்கள்தான். ஆனால், பெற்றோர் அதற்காகக் கவலைப்படாமல் இல்லை. மேலும், தண்டனைக்கு உட்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுவதையே பொதுவாகப் பெற்றோர் விரும்புகின்றனர். கனடா போன்ற நாடுகளில் அந்தந்த நாட்டுக் கலாசார விழு மியங்களைச் சீர்தூக்கிப்பார்க்காமல் எல்லோரையும் கனடிய சட்ட நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக நோக்குவ தும் அதன்படி நடவடிக்கை எடுப்பதும் பல சந்தர்ப்பங்களில் வேண்டத்தகாத முடிவுகளைத் தருகின்றது. பாடசாலையில் ‘அம்மா எனக்கு உணவு தரவில்லை’ என்று ஒரு பிள்ளை சொல்லிவிட்டால் அல்லது ஒழுங்காக தூய்மையான உடுப்பை அணிந்து வராவிட்டால் அது உடனடியாக குழந் தைகள் உதவி நிறுவனத்திற்கு அறிவிக்கப்படுவதால், பெற் றோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பிள்ளையை அந்த நிறுவனம் பொறுப்பேற்றுக் கொள்ளும் செயல்களும் இடம்பெறுகின்றன. ‘எனது அம்மம்மாவினால் எனக்கு பைத் தியம் பிடிக்கின்றது’ என ஒரு மாணவர் தனது வகுப்பு ஆசிரிய ரிடம் சாதாரணமாகக் கூறியுள்ளமை உடனடியாக குழந்தை கள் உதவி அலுவலருக்கு அறியத்தரப்பட்டுள்ளது. அவர் கள் அம்மாவைக் காணச்சென்றுள்ளனர். ஆனால் அங்கு இருந்த இரண்டு வயதுக் குழந்தையோடு அம்மம்மா அன் பாக பழகுவதை அவதானித்துவிட்டு நடவடிக்கை ஏதும் எடுக் காமல் மாணவனை விசாரித்தபோது, அம்மம்மா நெடுகலும் படிக்கச் சொல்லுகின்றார் என்பதைத்தான் காரணமாக கண்ட றிந்தனர். இவ்வித சந்தர்ப்பங்கள் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளப் பெற்றோர் பிள்ளைகளை அணுகும் முறைகளில் மாற்றங்களைக் கொண்டு அவர்களுக்கான கற்றல் நேரத்தை வரையறுத்தக்கொள்ள வேண்டும்.

## பாடசாலைகளைத் தெரிவு செய்தில் எதிர்கொள்ளும் சவால்கள்:

‘நாங்கள் சிறந்த பள்ளிகளைத் தேடுகிறோம், ஏனெனில் இது எங்கள் குழந்தைகள் நல்ல கல்லூரியில் சேரும் வாய்ப்புக ளைப் பாதிக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம்.’ எனப் பல பெற்றோர்கள் கருத்துத் தெரிவிப்பதனை அறியமுடிகின்றது. பாடசாலையில் பெற்றோரின் சேர்க்கைக் குழுக்கள் பாகு பாடு காட்டவில்லை என்று கூறினாலும், அது பெரும்பாலும் ஆழ் மனதில் நடக்கும். புதிய பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தும்போது நிறுவனங்களில் இதை அடிக்கடி பார்க்கி றோம். ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்கனவே உள்ள Stereotype இன, மத, நிற வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது, இது பணியாளர் சரியான பொருத்தமாக இருக்கிறதா என்பதைப் பார்க்க மனித வளத்துறைகள் ஒரு குறிப்பாகப் பயன்படுத்து கின்றன. பெற்றோரின் சங்கமத்திலும் பல்வேறு நாட்டினர் கூடும்போது அது மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்த வாய்ப் பாக உள்ளது. பள்ளிகள் மற்றும் மாணவர்களின் தேர்வுக்கும் இதுவே அடிப்படையாக அமைகின்றது. அவர்கள் பொது வாக தரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். அந்தத் தரங்களுக்கான உணர்வு அனைவரிடமும் காணப்படுகின் றமை இயல்பே.

குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் போது, அதை நீண்ட கால முதலீடாக பெற்றோர் கருதுகின்றார்கள். சில நேரங்களில், பிள்ளைகளின் வாழ்க்கையை முன்பள்ளியில் இருந்தே திட்டமிடுகின்றார்கள். ஏனென்றால், அவர்கள் வெற் றிபெற அதிக வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்று பெற் றோர் விரும்புவதனாலே ஆகும். பெற்றோர் விரும்புவது போன்று எல்லா திட்டங்களும் நடக்க வாய்ப்பில்லை. பாடசா லையில் குழந்தைகள் சந்திக்கும் சவால்கள் சரியானவை யாக அமையாதவிடத்து, அது அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடும்.

பாடசாலையோடு தொடர்பு கொள்ளுதல் இடையறாது தொடர்வதனால் பல்வேறு அனுகூலங்களைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள பெற்றோர் காரணமாக அமைகின்றனர். அடிக்கடி தனது பிள்ளையின் ஆசிரியரைக் கண்டு எனது பிள்ளை எப்படி என்ற ஒரு கேள்வியைக் கேட்டால் போதும். அது ஆசிரியரின் கவனிப்பை அதிகரிக்கும் என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம். பெற்றோர் அக்கறையோடு இருக்கின்றார்கள் எனத் தெரிந்தால், ஆசிரியர்களின் கவ னிப்பு அதிகரிக்கும். கொடுத்தனுப்பும் வீட்டுப்பாடங்களை மிக கவனமாகப் பார்த்து திருத்தியிருத்தல் போன்ற செயல் களை வெகுசாதாரணமாக காணமுடியும். இவற்றைவிட பிள் ளையின் முன்னேற்றத்திலும் பலன் கிடைக்கும். இதனைவிட எனது பெற்றோர் ஆசிரியரோடு தொடர்பு கொள்கின்றார் எனத் தெரிந்தால், அது பிள்ளையை ஊக்கப்படுத்துவதோடு தவறான செயல்களைத் தடுப்பதாகவும் அமையும். இவற் றைப் பெற்றோர் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.



sivapalu@thaiveedu.com

# பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் அதீத தலையீடு

– அகமட் பிஸ்தாமி

முன்னெப்போதுமில்லாத அளவு கல்வி குறித்தான கவனக்குவிப்புகள் மேலோங்கியுள்ளன. ஒரு காலத்தில் உயர் வர்க்கம் மட்டுமே பெற்று அனுபவித்த கல்வி எனும் அழியாத கௌரவமான சொத்து, இன்று பாகுபாடுகளின்றி பரவலாக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சூழலில் இலவசக் கல்விக் கட்டமைப்பும் வழங்கலும் அதனை துரிதமாக்கியுள்ளன. ஆனால், தரமான கல்வி எல்லோருக்கும் சரிசமமாக கிடைக்கின்றனவா என்றால், அதன் பின்னால் ஆயிரம் வினாக்கள், விசனங்கள், விமர்சனங்கள் குவிந்த வண்ணம் தான் உள்ளன. அறிவுப் பொருளாதார உலகில் அது பெறுமதியான விற்பனைப் பண்டமாக மாற்றப்பட்டுள்ளது. வசதி, தேவை, சௌகரியம் போன்றவற்றுக்கு ஏற்ப பட்டங்களை கற்கவும் விலைக்கு வாங்கிக் கொள்ளவும் வசதிகள் திறந்து விடப்பட்டுள்ளன.

கல்வி, சமூக மட்டத்தில் அதற்கெனப் பெற்றுள்ள தனித்துவ இடம் போலவே, அது குறித்தும் அது சார்ந்த அமைப்புகள், ஆட்கள் குறித்தும் அதிகூடிய அவதானமும் விமர்சனக் கணைகளும் அள்ளி வீசப்படுகின்றன. அதற்கு ஏற்றாற் போல கல்வி குறித்தான கட்டமைப்புகள், சட்டங்கள், ஒழுங்குகள், கல்வியை விநியோகிக்கும் நிறுவனங்கள், கல்வி தொடர்பான வழிகாட்டல்கள், உளவியல் விழிப்புணர்வுகள், உரிமைகள், விளம்பரங்கள் போன்றன பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. அத்துடன் வெகுசன சமூக ஊடகங்களும் பொதுமக்களும் பாடசாலைகள், ஆசிரியர்கள், கல்விமுறைமைகள் குறித்த அவதானத்துடன் செயற்படுகின்றமை கூர்ந்து அவதானிக்கத் தக்க விடயம். ஊடகங்களின் கழுகுப்பார்வை இதனை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றமையல் சகலரும் மிகவும் உஷாராகவே உள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் இன்றைய தொழில்நுட்ப உலகும், மக்களின் வாழ்வியல் மாற்றங்களும், வாழும் நூற்றாண்டின் தேவைகளும் சவால்களும் ஏற்படுத்திய அதிர்வுகளே எனலாம். தத்தமது பிள்ளைகள் ஒரு பட்டத்தைப் பெற்று தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற கனவு எல்லாப் பெற்றோருக்குள்ளும் கனன்று எரியும் சுடராக உள்ளது. அதே நேரம் அடி நுனி தெரியாது தன் பிள்ளையின் உள்ளார்ந்த ஆற்றல்கள் எதுவும் தெரியாது கல்வியை நுகர நச்சரித்துக்கொண்டு திரியும் பெற்றோர்களும் சமூகத்துக்கு ஒரு சுமையே. இத்தகைய பெற்றோர்களின் அழுத்தங்கள் காரணமாக பாடசாலையை விட்டும், அதன் அழகிய கட்டமைப்பை விட்டும், கல்வியை விட்டும், சமூகத்தை அதன் உறவுகளை விட்டும் விலகி, விடுதலையாகி, சமூக விரோதிகளாக மாறி, போதைப்பொருள் மற்றும் இதர நாசகார செயல்களுடன் தம்மை ஈடுபடுத்தி வாழ்வை அர்த்தமற்றதாக மாற்றிக்கொள்வதும் கண்கூடு.

ஒரு பக்கம் கல்வியின் பெயரால், அது சார்ந்த செயற்பாடுகளால் தம்மை வார்த்து, செதுக்கி, ஆளாக்கி, ஆளுமையாக்கும் அருமையான பணிகள் இடம்பெறும் வேளையில், அதே சூழலில், அதே கல்வியால் தம்மை அழித்துக்கொள்ளும் நிலையும் ஏற்படுவது முரண் நகையான விடயமே. இதில், குடும்பத்தின் கனகாத்திரமான செல்வாக்கும் பெற்றோரின் அதீத தலையீடும் பெருத்த செல்வாக்கு செலுத்துவதை உடனடியாக மறுதலிக்க முடியாது.

ஒவ்வொருவரும் தமது தனித்துவத்தை காக்கவே விரும்புகின்றனர். தனியாள் வேறுபாடுகள் அத்தகைய சிறப்பம்சம் வாய்ந்தவை. அது சிறியவர்களுக்கும் பொருந்தும். வளர்ந்தோருக்கும் பொருந்தும். கற்றல் செயற்பாடுகளிலும் எல்லையற்ற தலையீடு எதிர்மறையான விளைவுகளை உண்டுபண்ணும். முன் பள்ளிப்பருவம் தொட்டு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் பெற்றோர் காட்ட முனையும் எல்லையற்ற தலையீடு பிள்ளைகளுக்கு கல்வியில் விரக்தியையும் சலிப்பையும் ஏற்படுத்தும். பெற்றோர்கள் இதனை கட்டாயம் உணர வேண்டும். தனது பிள்ளையின் எதிர்காலத்தை வளமாக்க இவர்கள் காட்டும் அனாவசியமான அக்கறை நிகழ்காலத்தையும் பாழாக்கிவிடும். இதில் மிகுந்த அவதானம் அவசியம்.

கற்றல் என்பது இயல்பாக வரவேண்டும். விருப்புடன் கூடிய அன்றாட செயற்பாடாக மாறின் நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாம். அதுவே வற்புறுத்தலாலும், பலவந்தத்தாலும், திணிப்

பாலும் ஏற்படுத்தப்படின் அது அவ்வளவு ஆரோக்கியமாக இருக்காது. தனது கற்றல் மொழியை தெரிவு செய்வது முதல் எதிர்கால உயர் கல்வித்துறையை தெரிவு செய்வது வரை பெற்றோர் பிள்ளைகளில் அதிகாரம் செலுத்துகின்றனர். தற் போது குறிப்பாக ஆங்கில மொழி மூலமான கல்வி மோகம் பெற்றோருக்கு உருவாகியுள்ளது போலவே தகவல் தொடர் நிலையை பிள்ளையில் உருவாக்கவும் கூடும்.

குறிப்பாக எமது இலங்கை நாட்டில் நடைபெறும் ஐந்தாம் ஆண்டில் கற்கும் பிள்ளைகள் படும் அவஸ்த்தை ஆய்வுக்கு ரியது. மூச்செடுக்கவும் நேரமின்றி மன அழுத்தத்துடன் தனது காலத்தை கழிக்கிறார்கள் அவர்கள். ஒரு வேளை புலமைப்ப



பாடல் மற்றும் விரைவில் பட்டம் பதவி பெற்று வருமானமீட் டும் துறைகளில் கூட அளவு கடந்த ஆசையும், ஈடுபாடும், ஈர்ப்பும் பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது. அதிலும் வகைதொ கையற்ற பணத்தை செலவழித்து பிள்ளைகளை தனியார், சர் வதேச பாடசாலைகளில் கல்வி கற்க திணிப்பதும், அரச பாட சாலைகளிலுள்ள ஆங்கில மொழி மூலமான கல்வியைப் பெற திணிப்பதையும் அன்றாட எளிய ஆரம்ப உதாரணங்க ளாக கூறலாம்.

பிள்ளைகளை எந்த நேரமும் படி, படி, என்று நச்சரிப்பது அவ் வளவு அழகான ஒன்றல்ல. படிப்பே வேண்டாம் எனும் நிலை மைக்கும் அது செல்லும். படிப்பு ஒவ்வாமையாகவும் அருவ ருப்பான ஒன்றாக மாறவும், கடமைக்காக கற்கவும் கூடிய

ரிசில் பரீட்சையில் சித்தி எய்தினால் அவர்கள் தப்பிப்பிழைப் பார்கள். துரதிஷ்டவசமாக சித்தி எய்தத் தவறினால் அவர்க ளது நிலைமையை உணர அவர்களால் மட்டுமே முடியும். விரக்தியடைந்த இத்தகைய சிறார்களுக்கு நிகழ்ந்த அவலம் கடந்த காலங்களில் அதிர்ச்சியைத் தந்தது. இவற்றை சமூகம் கட்டாயம் ஒழுங்கமைக்க வேண்டும். இன்றேல் கல்வியில் அக்கறையற்ற ஒரு பரம்பரை உருவாகும்.

சித்தி பெற்றவர்களை கொண்டாகும் சமூகம், சித்தி பெறத் தவறியவர்களை கொண்டாட மறுக்கிறது. அல்லது மௌனத் தால் அல்லது புறக்கணிப்பால் திணறடிக்கிறது என்றால் அது சற்றும் பிழையாகாது. கல்வியும் உளவியலும் சிறுவர் உரி மைகளும் பேசிக்கொண்டே, இத்தகைய ஒரு விசப் பரீட் சையை தொடர்ந்தும் முன் கொண்டு செல்வது யாரின் தேவைக்

காக? என்ற கேள்வியை ஆயிரம் தடவை அழுத்தமாக குடைந்து குடைந்து தேடவேண்டும்.

பொதுவாகவே எல்லா மாணவர்களுக்கும் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக மாலை நேர வகுப்பு, வார இறுதி நாட்களில் இதர வகுப்புகள், வீட்டில் இரவில் பாடங்களை மீட்டல் என்று, பிள்ளைகளின் வாழ்வு கல்வியை மட்டும் சுற்றிச் சுழன்றால்... விளையாட்டு, வினோதம், பொழுதுபோக்கு, ஓய்வு என்று எதனையும் அனுபவிக்க அவர்களால் முடியாது போகும். பன்முக ஆற்றல்களை வெளிக்கொணர, வாழ்வை அனுபவிக்க, அதில் அர்த்தம் காண சந்தர்ப்பங்கள் அற்றுப்போகும். பரீட்சையை மையப்படுத்திய, மட்டுப்படுத்தப்பட்ட புத்தக உலகில் வேண்டா வெறுப்புடன் சஞ்சரிப்பார்கள் சிறுவர்கள். அவதானமின்றி காலம் கடத்தக் கற்பவர் போன்று நடிப்பார்கள். ஈற்றில், எதிர்பார்க்கும் பெறுபேறுகள் கிடைக்காவிடின், பெற்றோரின் நிந்தனைக்கும் ஏச்சுப் பேச்சுக்கும் ஆளாவார்கள். அவமதிக்கப்படுவார்கள். பலபோது அனாதரவாக்கப்படுவார்கள்.

இன்னும் சில பெற்றோர் தமது பிள்ளைகள் இப்படித்தான் வரவேண்டும் என்பதற்காய் வலுக்கட்டாயப்படுத்தி க.பொ.த. (உ/த) வகுப்பிலும் இன்னின்ன துறையை, பாடங்களை தெரிவு செய்ய வேண்டும் என பலவந்தப்படுத்துகின்றனர். இதுவும் ஒருவகை அத்துமீறல்தான்.

பிள்ளைகளின் சுயவிருப்பு, ஆசை, கனவுகளில் பெற்றோர் வழிகாட்ட வேண்டுமே ஒழிய, எல்லைமீறி தலையீடு செய்யக் கூடாது. பிள்ளைகளின் சுதந்திரத்தில் அவர்களது எல்லைக்குள் விட்டுத்தரவேண்டும். திணிப்பும் நிர்ப்பந்தமும் ஆக்கபூர்வமாக எதையுமே கொண்டுவராது. பிள்ளைகளின் கற்றல் விடயங்களில் உரிய தரப்பினர் போதிய வழிகாட்டலை வழங்க வேண்டும். எதிர்கால கல்விக்கான ஆலோசனைகளை வழிகாட்டல்களை அதற்கான வாய்ப்புகளை விளங்கப்படுத்தி, அவர்களது தெரிவுக்கு விடலாம். அதனை செய்யாமல், ஆண்களுக்கு வார்த்தகத்துறையும் பெண்களுக்கு கலைத்துறையும் விஞ்ஞானத்தில் உயர் சித்தி பெற்றால் வைத்தியராக மட்டும்தான் வரவேண்டும், கணிதத்தில் சித்தி பெற்றால் பொறியியலாளராக மட்டுமே வரவேண்டும் என்ற நிலையை மாற்றி, அதற்கப்பாலும் அநேகமான துறைகள் உள்ளதை காட்டிக்கொடுப்பது, சமூகத்திலுள்ள கற்றறிந்தவர்களின் தலையாய பணி என்பதை நினைவில் கொண்டு செயற்படுவோம்.

காலம் வேகமாக மாறி வருவதுடன் கடுகதி முன்னேற்றத்தில் முன்னகர்கிறது. கடந்தகால வழிமுறைகளும் அனுபவங்களும் வழிகாட்டல்களும் இன்றைய அல்பா தலைமுறையினருக்கு உகந்ததாக உள்ளனவா? அவற்றை கையளிக்கும் அருகதை எமக்கு உண்டா என சகல பெற்றோரும் பல தடவைகள் சிந்திக்க வேண்டும்.

கல்வி என்பது மனித உரிமை. தனிமனித கட்டாய தேவை (essential individual need). அது ஒரு வழிபாடு (worship). எதிர்கால முதலீடு (future investment). உங்கள் பிள்ளைகளே உங்கள் நிலையான செல்வம் (permanent wealth) என்பதால், அவர்களுக்கு தரமான கல்வியை முழுமையாகக் கொடுக்க நீங்கள் பாடுபடுகிறீர்கள். உங்கள் உழைப்பு உங்கள் பிள்ளையின் நல்வாழ்வு (well-being) மற்றும் கல்வியுடன் சிறந்த, பிரகாசமான எதிர்காலத்துக்கானது (bright future) தானே.

உலகில் பிள்ளையின் கல்வி வாழ்வை (educational and academic life) தீர்மானிப்பதில் 3 வகையான பெற்றோரை காணலாம்.

- கற்றறிந்த பெற்றோர். well educated - கல்வி வாடை உள்ளவர்கள், அதில் கண்ணும் கருத்துமாக இருந்து கருமமாற்றுவார்கள்.
- ஓரளவு கல்வி வாடை கொண்ட பெற்றோர். எப்படியாவது தகவல் பெற்று அதற்காக தேடி ஆடி ஓடி வரும் பெற்றோர்... வகையறாக்கள்.

  ஆங்கில மோகமும் பித்தும் பிடித்து, இலவச கல்வியை புறக்கணித்து, சர்வதேச பாடசாலைகளின் கையில் ஒப்படைத்து வாரி இறைப்போர் சிலர். தமது சமுக அந்தஸ்து கருதி இணைக்கும் செல்வந்தர் பலர். கற்றலின் மொழி குறித்த புரிதலோ குழந்தை உளவியலோ தெரியாதவர்கள்.
- பிள்ளைகளின் கல்வி குறித்த கவனமற்ற தேவையற்ற பெற்றோர்கள். வாழ்க்கைக்கான ஓட்டம், குடும்ப தகராறுகள் சிக்கல்கள், வெளிநாட்டு வேலை கடன், கல்வி இல்லாமை, கடன் சுமை, போதை போன்றவற்றால் பாதிக்கப்பட்டு அன்றாடங்காய்ச்சிகளாக இருப்போர்.

அனைத்து தரப்பிலும் விதிவிலக்குகளும் உண்டு. விளக்கங்களை விபரிப்புகளை மட்டுப்படுத்திய பதிவென்பதால் விரிவஞ்சி சுருக்கியுள்ளேன். எனவே எத்தரப்பாயினும் உங்கள் பிள்ளைகளின் பிறப்பு, வயது, கல்வி பெறும் ஆண்டு, உரிய ஆவணங்கள் போன்றவற்றை உரியவாறு தயார்ப்படுத்தி, பிள்ளையின் ஆரோக்கியமான, தரமான, வினோதமான, வேகமான கற்றலை உத்தரவாதப்படுத்தவேண்டியது உங்களின் தார்மீக பொறுப்பு என்பதை மட்டும் மறக்காமல் நினைவில் கொண்டு செயற்படுங்கள்.



bisthamy.ahamed@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com* *Fax: 1-416-849-0594* *Tel: 1-416-857-6406*



# உடல் உறுப்புகள் மூப்படைவதனைக் கண்டறியும் குருதிப் பரிசோதனை

– சுப்ரமணியம் ஜெயசீலன்

வயது மூப்பு இயற்கையின் நியதி என்பது நிதர்சனமானது என்ற போதிலும் உயிர் வாழும் வரையில் ஆரோக்கியமாக வாழ்வதே குறைவற்ற செல்வமாக நாம் அனைவரும் கருது கின்றோம். அந்த வகையில் எமது ஒட்டுமொத்த உடலும் அதன் அவையவையங்களும் சீராக தொழிற்படுவதனை உறுதி செய்து கொள்வது இன்றியமையாததாகும். உடலின் எந்தப் பகுதியில் எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படக் கூடும் என்பதனை முற்கூட்டியே அறிந்து கொண்டால் அதனை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அந்த வகையில் தற்பொழுது மனித உடலின் பாகங்களது வயது மூப்பு குறித்து கண்டறியும் எளிய குருதிப் பரிசோதனை ஆய்வு ஒன்று வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனம் ஒன்றின் தரத்தை கண்டறிந்து கொள்வதற்கு செய்யப்படும் பரிசோதனைக்கு நிகராக மனிதரின் உடலில் காணப்படும் உள் உறுப்புகள் எவ்வளவு வேகத்தில் வயதாகின்றது என்பது குறித்து பரிசோதனை நடத்த முடியும் எனவும், அவ்வாறான பரிசோதனைகள் மூலம் விரைவில் செயலிழக்கக் கூடிய உடல் உறுப்புகள் குறித்து எதிர்வு கூற முடியும் எனவும், விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் குழுவொன்று இருதயம், மூளை, சுவாசப்பை உள்ளிட்ட உடலின் 11 உறுப்புக்கள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட முடியும் என தெரிவித்துள்ளனர்.

நடுத்தர வயதுடையவர்கள் மற்றும் அதனை விட சற்று வயது மூப்பானவர்கள் சுமார் ஆயிரக்கணக்கானவர்களிடம் இது தொடர்பிலான பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

50 வயதுக்கு மேற்பட்ட ஆரோக்கியமான நபர்களில் ஐந்து பேரில் ஒருவருக்கு குறைந்தபட்சம் உடலின் ஏதாவது உறுப்பு வேகமாக வயதாகும் சாத்தியங்கள் காணப்படுவதாக ஆய்வு முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு நூறு பேரில் ஒருவர் அல்லது இரண்டு பேருக்கு அவர்கள் பிறந்த ஆண்டிலிருந்து பரிசோதனை செய்யும் போது அவர்களது உடல் உறுப்புகள் அவர்களது பிறப்பு வருடத்தை விடவும் மூப்படைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது அச்சமூட்டக்கூடியது என்ற போதிலும் இந்த ஆய்வு முடிவுகள் மூலம் ஒருவரின் வாழ்க்கை பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உருவாகும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சீக்கிரமாக செயலிழிக்கக்கூடிய உடல் உறுப்புக்கள் பற்றி அறிந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆரோக்கிய கேடுகள் என்ன என்பதனை கண்டறிந்து கொண்டு அதற்கு ஏற்ற வகையிலான சிகிச்சை முறைமைகளை பின்பற்ற முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரபல மருத்துவ சஞ்சிகையான நேச்சர் சஞ்சிகையில் இது தொடர்பிலான ஆய்வு கட்டுரையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

உதாரணமாக பிறக்கும் ஆண்டுக்கு அதிகமாக இருதயத்தின் வயது காணப்பட்டால் அவ்வாறான நபர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம் எனவும், வேகமாக மூளை வயது மூப்படைந்தால் அவர்களுக்கு ஞாபக மறதி நோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஓர் உடல் உறுப்பு அல்லது சில உடல் உறுப்புகள் வயதாகிறது என்றால், குறித்த உறுப்புகளின் தன்மைக்கேற்ப, சில ஆண்டுகளுக்குள் நோய்களுக்கு இலக்காகுவதையும் அல்லது மரணத்தை தழுவக்கூடிய சந்தர்ப்பங்களைக் கணிக்கக் கூடியதாகவும் இந்த ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மூளை, இருதயம், வயிறு, சுவாசப்பை, சிறுநீரகம், குருதி நாளங்கள் நோய் எதிர்ப்பு கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு உடல் பாகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த குருதி பரிசோதனையானது பல்வேறு வகையான புரத பொருட்களின் ஆய்வாக அமையப் பெறுகின்றது என்பதுடன், மாறுபட்ட வேகத்தில் வயது முப்படையும் உடல் பாகங்கள் எது என்பது குறித்த அனுமானங்களை இது வெளியிடுகின்றது. இவ்வாறு கண்டறியப்பட்ட புரத பொருட்களின் மாதிரிகள் ஒவ்வொரு உடல் உறுப்புகளுக்கும் தனித்துவமாக காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குருதி பரிசோதனையின் முடிவு மற்றும் நோயாளர்களின் தகவல்களை பயன்படுத்தி இயந்திர கற்றல் தொழில்நுட்பத்தின்



ஊடாக 'அல்ஹோரிதம்' எனப்படும் படிமுறைத்தீர்வு ஊடாக பயிற்றப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்களில் ஒருவரான டோனி விஷ்குரே இந்த விடயத்தை தெளிவுபடுத்துகின்றார். பாரதூரமான நோய் நிலைமைகளினால் பாதிக்கப்படாத பெரும் எண்ணிக்கையிலானவர்களின் உடல் உறுப்புகளை உயிரியல் ரீதியான வயது மூப்பு அடிப்படையில் பரிசோதனை செய்தோம் அவ்வாறு அவர்களது உடல் உறுப்புகள் பரிசோதனை செய்யப்பட்டபோது சாதாரண நபர்களை விடவும் 50 வயது அல்லது அதனையும் கடந்த வயதுடையவர்களின் சுமார் 18.4 வீதமானவர்களின் உடல் உறுப்புகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான உறுப்புகள் வேகமாக வயது மூப்படைவது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் எதிர்வரும் 15 ஆண்டுகளில் பாரதூரமான நோய்களுக்கு இலக்காக கூடிய சாத்தியங்கள் உண்டு என்பது கணிக்கப்பட்டுள்ளது என ஆய்வாளர் விஷ்குரே தெரிவிக்கின்றார்.

எதிர்காலத்தில் இந்த குருதிப் பரிசோதனை முறைமைக்கு காப்புரிமை பெற்றுக் கொள்ளும் முனைப்புகளில் பல்கலைக் கழகம் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக உடல் உறுப்புகளின் வயது மூப்பு மற்றும் உடற் சுகாதாரம் என்பன தொடர்பிலான தொடர்புகளை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் முடிவுகள் எவ்வாறு சாத்தியமான அடிப்படையில் காணப்படுகின்றது என்பதை கண்டறிவதற்கு மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். உயிரியல் ரீதியாக வயது மூப்படையும் செயற்பாடு ஒரே மாதிரியாக அமைவதில்லை என ஆய்வாளர் டோனி விஷ்குரே தனது பரிசோதனைகள் மூலம் கண்டறிந்துள்ளார். எனினும் நபர்களின் 35 வயதின் ஆரம்ப காலப் பகுதியிலும், 60 வயதுகளின் ஆரம்ப காலத்திலும் 70 வயதுகளின் இறுதியிலும் உடல் உறுப்புக்கள் வயது முப்படைவது வேகமாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நபர்களின் உயிரியல் வயது தொடர்பில் குருதியில் காணப்படும் பல்வேறு குறிகாட்டிகள் தொடர்பில் லண்டனில் குயின் மேரி பல்கலைக்கழகத்தின் வயது மூப்பு, ஆரோக்கியம் மற்றும் நோய் நிலைமைகள் குறித்த நிபுணர் பேராசிரியர் ஜேம்ஸ் டிமென்ஸ் ஆய்வு நடத்தி வருகின்றார்.

பேராசிரியர் விஷ்குரேவின் ஆய்வு முடிவுகள் கவர்ச்சிகரமானது என்ற போதிலும், பல்வேறு இன சமூகப் பின்னணிகளைக் கொண்ட இளைஞர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மேலதிக விபரங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானது என பேராசிரியர் ஜேம்ஸ் தெரிவிக்கின்றார். இந்த குருதி பரிசோதனை முறைமை குறித்து மேலும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

மீண்டும் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையிலான நபர்களிடம் பரிசோதனை நடத்தி வெளியே ஆரோக்கியமாக காணப்பட்டாலும் உள்ளுறுப்புகளின் ஆரோக்கிய நிலைமைகளை கண்காணிப்பதன் மூலம், உடல் உறுப்புகள் வயது மூப்பாவது குறித்து கண்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு கண்டறிந்து கொண்டால் மக்கள் நோய்வாய்ப்படும் முன்னதாகவே சிகிச்சைகளை வழங்க முடியும் என பேராசிரியர் டோனி விஷ்குரே தெரிவிக்கின்றார்.

இதேவேளை, மனிதர்களின் சுகாதாரம் ஆரோக்கியம் தொடர்பில் சரியான அனுமானங்களை மேற்கொள்வதற்கு தனித்தனியான உடல் உறுப்புகளை மட்டுமின்றி ஒட்டுமொத்த உடல் தொடர்பிலும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியது அவசியம் என கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் வயது மூப்பு குறித்த உயிரியல் விஞ்ஞானப் பேராசிரியர் பால் சீல்ட்ஸ் தெரிவிக்கின்றார்.

வயது மூப்பு தொடர்பான பாரதூரமான நோய்களை இனம் கண்டு அவற்றுக்கு தீர்வு வழங்குவது குறித்து ஆய்வு நடத்துவது சிறந்தது என்ற போதிலும் ஆய்வு முடிவுகள் குறித்து அறிந்து கொள்வது மனிதர்களை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என ஏச்.யூ.கே. என்ற அறக்கட்டளையைச் சேர்ந்த கரோலின் ஏப்ராஹிம்ஸ் தெரிவிக்கின்றார்.



jeyaseelan.s@thaiveedu.com

# எனது நீலச் சட்டை

**- நிரேஷ் ரட்னம்**

மாணவர்களுக்கான மலிவு விலையில் துணிகளின் மாளிகை, H&M-ல், யாழ்னி தன் விரல்களை மென்மையான துணியினுள் சறுக்கி உணர்ந்தாள். புது பருத்தியின் வாசம் காற்றில் உலாவி அவளை இழுக்கும் சூழல். துடிப்பான குங்குமச் சிவப்பு முதல் அமைதியான கடல் நீலம் வரை பல்வேறு வண்ணங்கள் அவளைச் சுற்றி சுழன்றது. அதனுள் ஒரு இளம் டேனிஷ் விற்பனையாளர் அவளை அணுகினார், 'வணக்கம்! உதவி எதாவது வேணுமா?'

'என் பாய் பிரண்டுக்கு ஒரு ஸ்டைலான சட்டை பாக்குறன். ரொம்ப பளிச்சுன்னு வேணாம்.' என்று யாழ்னி பதிலளித்தாள்.

'இதை பாருங்கள், இது செக்கர்ட் ஷர்ட் கம்பீரமாக தனித்து காட்டும்.' என்று சொல்லிவிட்டு யாழ்னியை கூட்டச் சென்றார்.

அவள் அந்த துணியின் இழைநயத்தை தொட்டுணர்ந்து கேட்டாள், 'ஹ்ம்ம், எனக்கு நிச்சயமா சொல்லத் தெரியல. இதுல நீல கலர் இருக்கா'?

அவர் 'எங்களிடம் மிக மென்மையான துணியில், ப்ரீமியம் சட்டை உள்ளது. சற்று விலை உயர்ந்தது, ஆனால் மிகத் தரமானது.'

அந்த நிறத்தை பார்த்த உடனே பிடித்துப் போக, அவள் விரல்கள் அதன் மென்மையில் தவழ பதிலளித்தாள்,

'அவனுக்கும் பிடிக்குமுன்னு நினைக்குறன்! சரி, நான் இத எடுக்குறன்.' என்று அவள் சொல்ல, அவர் குறிப்பிட்டார், 'இந்த பிரீமியம் சட்டையுடன் கூடுதலாக 10 டொலருக்கு தொப்பி வாங்கலாம். இது வழக்கமாக 30 டொலர்.'

'10 டொலர் மட்டும்தானா, நான் அந்த கறுப்பு எடுக்குறன்.' என்று அவள் பதிலளித்தாள்.

'சிறந்த தேர்வு!' என்று அவர் வாங்கியதை பரிசாக சுற்றி, 'அவருக்கு கண்டிப்பாக இது மிகவும் பிடிக்கும்.' என்று விற்பனையாளர் ஒப்பந்தத்தை முடித்தார்.

### உந்துவிற்பனை மற்றும் கூடுதல் விற்பனை:

யாழ்னியைப் போலவே, நாம் அனைவரும் ஒரு தடவையாவது இந்த காட்சியை எதிர்கொண்டிருப்போம். எதையாவது வாங்க வேண்டும் என்று ஒரு கடைக்குள் நுழைந்திருப்போம், பிறகு அதிக விலையில், மேம்படுத்தப்பட்ட பதிப்பை வாங்க நம்மை நாமே அறியாமல் வற்புறுத்தப்பட்டிருப்போம். கூடுதலாக, தள்ளுபடி விலையில் தொடர்புடைய தயாரிப்பை வாங்க நாம் தூண்டப்பட்டிருப்போம்.

இது ஒரு வழக்கமான அங்காடி உலாவல் அனுபவமாகத் தோன்றலாம், ஆனால் இதற்குப் பின்னால் உள்ள உளவியல் விற்பனை நுட்பம் என்ன? இதை 'உந்துவிற்பனை' (upsell) மற்றும் 'கூடுதல் விற்பனை' (cross sell) என்று நாங்கள் அழைப்போம்.

'உந்துவிற்பனை' என்பது ஒரு விற்பனையாளர் வாடிக்கையாளரை அவர்கள் விரும்பும் பொருளிலிருந்து விலை உயர்ந்த பொருளையோ அல்லது மேம்படுத்தப்பட்ட பொருளையோ ஊக்குவித்து வாங்க வைப்பதாகும்.

'கூடுதல் விற்பனை' என்பது ஒரு விற்பனையாளர் வாடிக்கையாளரை அவர்கள் வாங்கும் பொருளுடன் கூடுதல், நிரப்புப் பொருட்களையோ அல்லது சேவைகளையோ ஊக்குவித்து வாங்க வைப்பதாகும்.

இவை விற்பனையியலில் அடிக்கடி பயன்படுத்தப்படும் உத்திகள். முக்கியமாக, இணைய வணிக தளத்தில் பயனர் வடிவமைப்பில் அவை பெரும் பங்கு வகிக்கின்றன.

### டெஸ்லா:

டெஸ்லா இணையதளம் மூலம் நீங்கள் எப்போதாவது கார் வாங்கியிருக்கிறீர்களா? முதலில் டெஸ்லா ஓர் அடிப்படை வசதியை வழங்கும், பிறகு அடுத்தடுத்த பக்கங்கள் செல்லும் போது பல்வேறு கார் அம்சங்களை மேம்படுத்தி வாங்க நம்மை உந்தும். வாங்குபவர்கள் தங்கள் கார் கட்டமைப்பில் உள்ள சக்கரங்கள், தானியக்கப் பொறிமுறை (autopilot) அம்சம் போன்ற அனைத்தையும் தனித்தனியாக கூடுதல் விலையில் சேர்த்துக் கொள்ளலாம்.

### இணைய வணிக தளங்களில்:

இணைய வணிக தள உலகில், 'உங்களுக்குப் பிடித்திருக்கும்', 'உங்களுக்கு இது பிடித்திருந்தால், நீங்கள் இதை விரும்புவீர்கள்', 'பார்வை / அலங்காரத்தை நிறைவுசெய்ய', 'இவற்றை வாங்கிய வாடிக்கையாளர்கள் இதையும் வாங்கி

யுள்ளனர்', 'இவற்றையும் உங்கள் ஆர்டரில் சேர்க்கவும்', 'உங் களுக்குப் பரிந்துரைக்கப்பட்டது', 'நீங்கள் ஆர்வமாக இருக் கலாம்...' போன்ற வாக்கியங்களை பார்த்திருப்பீர்கள். இவை 'கூடுதல் விற்பனை உத்திகளே.

### துணிகள் வாங்குதல்:

நீங்கள் இணைய வணிக தளத்தில் சென்று அடிப்படைப் பொருளை வாங்கி உள்ளீர்களா? அங்கு ஒரு சட்டையைப் பார்வையிடும் போது, மேலே குறிப்பிட்ட சொற்றோடர்கள் மூலம் 'கூடுதல் விற்பனை' யுக்தியைப் பயன்படுத்தி மேலும் வாங்க ஊக்குவிப்பார்கள். நீங்கள் சட்டையைப் பார்க்கும் போது, கால்சட்டை, காலணிகள், அணிகலன்கள், கழுத்துப் பட்டிகள் என அடிக்கடி ஒன்றாக வாங்கும் பொருட்களை காண்பிப்பதும் 'கூடுதல் விற்பனை'யே. இது உங்களைக் கூடு தல் பொருட்களை ஆராய ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டது.

### பயண முன்பதிவு:

நீங்கள் விமானத்தை இணையதளத்தில் முன்பதிவு செய்யும் போது, 'உந்துவிற்பனை' உத்தியைப் காண்பீர்கள். இது உங் களுக்கு பிரீமியம் இருக்கையோ, முன்னுரிமை போர்டிங் கையோ, அதிகரித்த சாமான்கள் கொடுப்பனவுகள் போன்ற கூடுதல் சேவைகளை வழங்கும். அதே நேரத்தில், கார் வாடகை, பயணக் காப்பீடு, உள்ளூர் சுற்றுலாப் பேக்கேஜ்கள் போன்ற நிரப்பு சேவைகளையும் பரிந்துரைக்கும். இதுவே 'கூடுதல் விற்பனை'.

நீங்கள் எல்லா இடங்களிலும் 'உந்துவிற்பனை' மற்றும் 'கூடு தல் விற்பனை' யுக்திகளை அடிக்கடி சந்தித்திருப்பிர்கள். ஆனால் மீண்டும் மீண்டும் இந்த தந்திரங்களுக்குள் நீங்கள் ஏன் விழுகிறீர்கள் என்று எப்போதாவது நினைத்திருக்கிறீர் களா?

### ஒரு நல்ல ஒப்பந்தத்தைப் பெறுவது நன்றாக இருக்கும்!

உங்களுக்குத் தேவையான விடயங்களில் பணத்தைச் சேமிக் கும்போது, அது ஒரு வெற்றியைப் போல் உணர்வீர்கள். இது சேமிப்பைப் பற்றியது மட்டுமல்ல; இது உங்கள் மூளையின் மகிழ்ச்சியான பகுதியைத் தூண்டிவிடும் (dopamine). யாருக் குதான் அதிக பணம் வைத்திருக்க விரும்பமில்லை?

### வாங்கும் தருணம் முக்கியமானது:

நீங்கள் வாங்கும் போது, கூடுதல் பொருட்களை வாங்குவதற் கான பரிந்துரைகள் எப்படி வெளிவருகின்றன என்பதை எப் போதாவது கவனித்தீர்களா? அது தற்செயல் நிகழ்வு அல்ல. நீங்கள் ஏற்கனவே இணையத்தளத்தில் உள்ள பொருட்க ளைப் பார்த்து, உங்கள் இணையத்தளக் கூடையில் பொருட் களை வைத்திருக்கும்போது இது தென்படும். ஏற்கனவே பொருட்கள் வாங்குவதற்கு தயாராக இருக்கும் பொழுது, மேலும் பொருட்களை வாங்குவதில் நீங்கள் தயக்கம் காட்ட மாட்டீர்கள். ஏனெனில் இதுவே தகுந்த சமயம். செக்மென்ட் சர்வே செய்த ஆய்வில், ஒரு பொருளை வாங்கச் செல்லும் தருணத்தில், பரிந்துரைக்கப்பட்ட பொருட்களையும் வாங்குகி றார்கள் என்று பலர் கூறி உள்ளனர்.

### தவறவிட்டுவிடுவோமோ என்ற பயம் (Fear Of Missing Out – FOMO):

ஒரு சிறப்ப சலுகையை நீங்கள் ஏற்காவிடில், ஏதோ பெரிதாக ஒன்றை இழப்பதாக உணர்ந்திருக்கிறீர்களா? அதைத்தான் FOMO அதாவது Fear of Missing Out என்று கூறுவார்கள். 'இப்போது இது கிடைக்கவில்லை என்றால், பின்னர் வருத் தப்படுவேன்' என நிறுவனங்கள் உங்களை சிந்திக்க வைக்க பயன்படுத்தும் யுத்திகளில் சில 'உந்துவிற்பனை' மற்றும் 'கூடுதல் விற்பனை'.

பல நிறுவனங்கள் தங்களின், இணைய வணிக தளத்திலோ, செயலியிலோ 'உந்துவிற்பனை' (அதிக விலை அல்லது மேம் படுத்தப்பட்ட தயாரிப்புகளை பரிந்துரைப்பது) மற்றும் 'கூடு தல் விற்பனை' (நிரப்பு பொருட்களை பரிந்துரைப்பது) யுத்தி களை புத்திசாலித்தனமாக ஒருங்கிணைத்துள்ளன. பல நிறு வனங்கள் இதை ஒரு சூழ்ச்சித் தந்திரமாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். எனவே இணைய அங்காடியில் உலாத் தும் போது கவனமாக இருப்பது அவசியம். 'எனது நீலச் சட்டை' கதையில் 'உந்துவிற்பனை' மற்றும் 'கூடுதல் விற் பனை' எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்பதை இப்போது நீங்கள் அறிந்திருப்பீர்கள்.



niresh.ratnam@thaiveedu.com



# குறை நல்லதா?

– சி. நற்குணலிங்கம்

குறைகள் மனித வாழ்வின் தவிர்க்கவியலாத பகுதி. உண்மையாக உயர்ந்த நோக்கத்தோடு குறை களைந்து செம்மையாக்கும்பொருட்டு குறை காண்பது, சொல்வது நல்லது. நல்ல விமர்சனம் பயனுள்ளது. குற்றம் காண்பதும், குறை காண்பதும், கற்றுக்கொடுப்பதும் நல்லது. நம் பிள்ளைகளை நாம் குறை சொல்லாவிட்டால் பின் எப்படித் திருந்துவார்கள்? குறை கண்டுகொண்டால் சுட்டிக்காட்டித் திருத்தவேண்டும் தானே. இது ஒவ்வொரு பெற்றோரின் அசைக்க முடியாத நம்பிக்கை. உண்மையில் ஒரு குறையில்லாப் பிள்ளையை நான் உருவாக்கி இருக்கிறேன் என்று இந்த உலகிற்கு மார்தட்டிச் சொல்ல வேண்டும் என்று நாம் நினைப்பது தவறில்லைதான். இதுதான் நிதர்சனம்.

ஒரு கிண்ணத்தில் முழுவதும் நீர் நிரம்பியிருந்தால் மேற்கொண்டு அதனுள் நீர் ஊற்ற முடியுமா? அப்படித்தானே வாழ்க்கையும்! எல்லாவற்றிலும் நிறைவாகவே இருந்தால் நீங்கள் முயற்சிக்க என்ன இருக்கும்? நூற்றுக்கு நூறு புள்ளி வாங்கிவிட்டால் அதற்குமேல் வேறென்ன செய்வது? ஏதோ சில குறைகள் இருந்தால்தானே உங்கள் சொந்த முயற்சியில் அதை நீங்கள் நிறைவுசெய்ய முடியும். நீங்கள் யார் என்பதை நிரூபிக்க முடியும். அவ்வளவு ஏன்? குறைகள் இருப்பதால் தான் உங்கள் வாழ்க்கைக்கே அர்த்தம் கிடைக்கிறது என உணருங்கள்.

13 வயதில் ஒரு இந்தியப் பெண் வெடிகுண்டு விபத்தில் இரு கைகளையும் இழக்க நேர்ந்தது. படிப்பில் அக்கறைகொண்டு பட்டம் பெற்றவர். இவர் மாற்றுத்திறனாளிகளின் உரிமைக்காகவும், பெண்களின் உரிமைக்காகவும் குரல்கொடுத்து வருகிறார். மோசமான மனோபாவம் மட்டுமே வாழ்க்கையின் ஒரே குறை என்று சொல்லும் இவர், தேசிய விருது பெற்றவர். ஐ.நா. சபையில் உரையாற்றியவர். குண்டு வெடித்துக் கைகளை இழந்ததுகூட ஒருவகையில் வரம் என்றே கருதுகிறேன். இல்லை என்றால் நானும் மற்றவர்களைப்போல் சராசரி மனிதராகவே வாழ்ந்திருப்பேன் என்று சிரித்துக்கொண்டே சொன்னார். இதன் பிறகாவது விளம்பரத்தில் கறை நல்லது என்று சொல்வது போல குறை உள்ளவர்கள் மனம் நோகாது குறை நல்லது எனச் சிந்தியுங்கள்.

ஒரு கிண்ணத்தில் பாதியளவுக்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. இதைப் பார்க்கும்போது சிலருக்கு கிண்ணத்தின் பாதி அளவுக்கு நீர் இருப்பதாகத் தோன்றும். சிலருக்கு கிண்ணத்தில் பாதி வெறுமையாக இருப்பதாகத் தோன்றும். இரண்டுமே உண்மைதான். ஆனால் நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே வித்தியாசம் ஏற்படுகிறது. வாழ்க்கையும் அப்படித்தானே? எந்தப் படிப்பும், எந்தத் தொழிலும், எந்தத் திறனும் உயர்ந்ததோ தாழ்ந்ததோ இல்லை. எல்லாமே நம் பார்வையில்தான் உள்ளது. உங்களின் குறையை நிறைவாய் மாற்றப் பரிமாற்றம் (Exchange) அல்லது இணைவு (Joining) என்ற இரண்டு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்திக் குறையில்லாத மகிழ்ச்சியைக் காணுங்கள்.

குறையை நிறையாக மாற்றுங்கள். துன்பத்திலும் இன்பம் காணுங்கள். அப்படிச் செய்தால் எதிரிகளும் விரும்பும் சிறந்த நிலையை அடைவீர்கள். சொல்வது நானல்ல. இடுக்கண் அழியாமை அதிகாரத்தின் இறுதிக் குறள்:

***‘இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்***
***ஒன்னார் விழையும் சிறப்பு’.***

குறை கூறுவது நல்லது. அதைக் கண்டுகொள்ளாமல் செல்லும் நல்ல பழக்கத்தை வளர்த்துக்கொள்ளலாம். ஒரு ஆசிரியரை ஒருவர் குறைகூறி எழுதியிருந்தார். இதுபற்றி அவ்வாசிரியருக்கு ஒரு பேராசிரியர் கூறினார், சிலர் நல்ல காரியங்களை செய்ய முடியாவிட்டாலும் நல்லது செய்தவர்களைக் குறை கூறுவர். அந்தக் குறையைப் பொருட்படுத்தக் கூடாது. அவர்களுக்குப் பதில் எழுதுவதால் தமிழ் தொண்டுக்காக நீங்கள் செலவிடும் காலம் வீணாகும். ஆகையால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் உங்கள் வேலையைச் செய்து வரவேண்டும் என்று கூறினார்.

குறை கூறுவோரில் பலர், இது அவருக்குச் சாதகமாக அமைந்துவிடுமோ என எண்ணிக் குறை கூறுவதை நிறுத்தி விடுவார்கள். சிலர் மனம் திருந்தி, தாம் செய்ததற்கு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பதும் உண்டு. எனவே குறையால்

நற்குணங்கள் வளரும், வாய்ப்புகளும் ஏற்படும். குறை சொல்வது ஆரோக்கியமானது. நாம் குறை சொல்லும்போது நாம் அவர்கள்மேல் அக்கறை எடுத்துத் திருத்துகிறோம் என்று பலமாக நம்புகிறோம். ஆனால் இதுவே நம்மை யாராவது குறை சொன்னால் ஏன் இப்படி இருக்கிறார்கள்? எப்போது இவர்கள் திருந்துவார்கள்? என்று பலவீனமாகித் துடிக்கிறோம். உண்மையில் குறை சொல்லவேண்டிய கட்டாயம் தவிர்க்க முடியாமல் ஏற்படுமாயின் நாம் கொஞ்சநேரம் அதற்காக ஒதுக்கி நாம் எதற்காக இந்தக் குறையை சொல்கிறோம் அந்தக் குறையை மட்டும் திருத்திக்கொண்டால் அந்தப் பிள்ளை எவ்வளவு பெரிய சாதனையாளராக வரமுடியும் என்று நம்பிக்கை கொடுக்கக்கூடியதாக அது இருக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒரு குறையைச் சொல்ல முற்படும்போது அந்தப் பிள்ளையினது நிறைகளையும் தாங்கிவர வேண்டும். அவ்வாறு கூறுவது குறையற்ற குறை கூறும் முறையாகும்.

குறைகள் இருந்தால்தான் மனிதர் தமது தேவையை நோக்கிச் செல்வர். அப்போது அவர்கள் மத்தியில் இறையச்சம் தோன்றும். அது நல்ல எண்ணங்கள் வளர ஏதுவாகும். ஒருவர் கூறுவதை மற்றவர் கரிசனையுடன் கேட்பதன் நோக்கம் பகிர்ந்துகொள்பவரைக் குறை கூறுவது, விமர்சிப்பது, ஆலோசனை வழங்குவது என்பதற்காக அல்ல. மாறாக, ஆதரவு தெரிவித்தல், ஊக்குவித்தல், தீர்வைக்காண உதவுதல் எனும் அக்கறை மனப்பாங்காகும்.

ஒருவர் மகிழ்ச்சி எப்படி ஏற்படுகிறது எனக் கூறினார். அதாவது, 'நான் ஆபிரிக்கா சென்று வந்தபின் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பது புரிந்தது. அங்கு பல இடங்களில் ஒரு கோப்பைத் தண்ணீருக்கு நான் சிரமப்பட்டேன். என் ஊருக்கு வந்ததும் குழாயைத் திறந்ததும் நீர் கொட்டுவதைப் பார்த்தபோது சொர்க்கத்தைக் கண்டதுபோல மகிழ்ச்சி. இப்போது ஒவ்வொரு துளியையும் எச்சரிக்கையோடு கையாளுகிறேன்' எனக் குறிப்பிட்டார். இழக்கும்வரை ஒரு பொருளின் இனிமையை நாம் அறிவதில்லை. பற்றாக்குறையில்தான் ஞானோதயங்கள் ஏற்படுகின்றன.

காயங்களின்றிக் காலம் எதையும் கற்றுக்கொடுப்பதில்லை. எப்போது இந்தச் சமூகத்துடன் பொருந்தி வாழ முடியவில்லை என்று தோன்றுகிறதோ அப்போதுதான் நீ சிந்திக்கவே தொடங்குகிறாய் என்று எண்ணிக்கொள். நீ யோசிக்காமல் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் உன்னை யோசிக்க வைத்துக்கொண்டே இருக்கும். வாழ்நாள் முழுவதும் இருளான வாழ்க்கை என்று கவலைகொள்ளாதே. கனவுகள் முளைப்பது இருளில்தான். 'ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல, உன்னைப்போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே' அப்துல்கலாம் கூறியது. தோல்வி என்பது வெற்றிப் பயணத்தில்வரும் வேகத்தடைகள். 'துன்பங்களுக்கிடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன' ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கூறியது. கரையும் மெழுகில் இருளைக் கடக்க முடியும் என்ற நம்பிக்கை வாழ்க்கையிலும் இருக்கட்டும். உலகின் வடிவமே குறையால் ஆக்கப்பட்டது. அவமானம் ஏற்படும்போது அதைக் குறைதான் எனப் பலரும் நினைப்பர். குறை என்பது முடியாது, இயலாது என்ற படிக்கட்டுகளைக் கடக்கவேண்டும் என நினைத்துக்கொண்டால் குறை நிறைவாகிவிடும். மனதில் தளர்வு மட்டும் இருக்கக்கூடாது.

குறையிலிருந்துதான் தேடல்வரும். நிறைவுடன் குறையைக் கொண்டாடுங்கள், குறை நல்லது. காலம் ஒவ்வொரு துன்பத்திற்குப் பின்பும் கண்டிப்பாக ஏதோ ஒரு மகிழ்ச்சியை ஒளித்து வைத்திருக்கும். ஒருசிலரின் நிராகரிப்புகளே நம்மை தகுதியான இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. சமையல் அறையில் சமையலில் குறைகள் ஏற்பட்டால் புதியவை உருவாகும். யாரிடம் குறைவான ஆசைகள் உள்ளனவோ அவர்கள் கவலையின்றி வாழ்கிறார்கள். குறைகளிலிருந்து பாடம் கற்க முயற்சிக்கவேண்டும். குறைகள் அழகானவை. இது அடுத்த நாளை நல்ல நாளாக ஆக்கிக்கொள்ள உதவும். கிழிந்த புத்தகத்தில்கூட நீ உயர்ந்து வாழ ஒரு சில வரிகள் இருக்கும். புத்தகத்தின் குறைபாட்டை நினைத்து வாசிக்க மறுக்காதே. ஒருமுறையேனும் படித்துப்பார். ஒரு இலை உதிர்கிறது அல்ல, இன்னொரு இலைக்கு இடம் விட்டிருக்கிறது எனச் சிந்தி. வாழ்க்கையில் தோல்வியே பார்க்காதவரால் உண்மையான வெற்றியைக் கண்டுகொள்ள முடியாது. மகிழ்ச்சி வேண்டாம், மறதி போதும் நான் நானாக இருக்க. மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது குறைகளற்ற வாழ்க்கையல்ல, குறைகளை வெற்றிகொண்டு வாழும் வாழ்க்கை.

குறையால் விழுவாய் என்று நினைக்காதே. வளர்ச்சியில் வீழ்ச்சியும் ஒரு நிகழ்ச்சியே. மாற்றத்தை உனக்குள் கொண்டுவா. குறைகள் பலமாக மாறும். உன்னை நீ அறிந்தால் உனது குறைகள் உமக்கு வெளிப்படும். குறைகளை நிறைகளாக்கு உலகம் உன் வசப்படும். உன் குறைகளிலிருந்து முதலில் நீ திருந்து, உன்னைப் பார்த்து உலகம் திருந்தும். பிறரைக் குறைகூறி யாரும், எதுவும் வென்றது இல்லை. தன்னைத் திருத்திக்கொண்டவர் எப்போதும் எதையும் தொலைத்ததும் இல்லை. தோல்வி கண்டதும் இல்லை. உன்னால் முடியும். 'உன்னால் முடியாது என்று பலர் கூறிய வார்த்தைகளே என்னை வெற்றியின் பக்கம் தள்ளியது' என்றார் ஜாக்கிசான். எதையும் கஷ்டம் என்று நினைத்து முயற்சிக்காது விட்டுவிடாதே. 'கஷ்டத்தை நன்கு கவனித்துப் பார், அதில் துணிவு தெரியும்' என்கிறார் விவேகானந்தர்.

குறைகளைக் கண்டுகொள்வதே உன் வளர்ச்சியின் சிறந்த அடையாளம். பசித்த வயிறு, பணம் இல்லாத நிலை, நொறுங்கிய இதயம் ஆகியன வாழ்க்கையின் சிறந்த பாடத்தைக் கற்பிக்கும். உன் உலகம் தலைகீழாகத் திரும்பினாலும் கவலை கொள்ளாதே, மறுபக்கத்தில் இன்னும் அழகான உலகம் உனக்காகக் காத்திருக்கலாம். நெரிசலான பாதை புதுப்பாதையைத் தேர்ந்தெடுக்கவைக்கும். அதுதான் வெற்றிக்கான பாதையும்கூட. சரிவு என்பது அடைக்கப்பட்ட ஒருவழிப்பாதை அல்ல. அது வெற்றிக்கான வேறு பாதையைக் கண்டுபிடிக்கும் ஒரு வாய்ப்பு. எனவே வாழ்வில் சரிவுகள் குறை அல்ல. எந்தக் குறையானாலும் அவை கற்பிக்கும் பாடங்கள் நிறைவான வாழ்வைத் தரும். எனவே குறைகள் நல்லவை அல்ல எனக் குறை நினைக்கவேண்டாம்.



natkunalingam@thaiveedu.com

# வளமான திருநாடு

வேதநாயகம் தபேந்திரன்

**1990** யூன் 15-ல் இரண்டாம் ஈழப்போர் யாழ்ப்பாணத்தி லும் தொடங்கியது. அதன் விளைவு நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவுப் பகுதிகளில் இடம்பெயர்ந்தோர் போக எஞ்சியோர் தனித்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாட்கள் வாரங்களாகி மாதங்களாகின. இருந்த கையிருப்பு உணவுப் பொருட்கள் தீரத் தொடங்கியது. ஒரு நேரமாயினும் சாப்பிடுவதற்கு என்ன செய்வது. பிரதானமாகக் கைகொடுத்தது புழுக்கொடியல், ஒடியல் மா, பனாட்டு ஆகியவை தான். உயிரைக் காப்பாற்ற உணவுத் தேவையை இவை நிறைவு செய்தன.

எனது நினைவு தெரிந்த 1980-களில் சொந்தக் காணி இல்லாதோர் பிறரது காணிகளில் களவாகப் பனங்காய் பொறுக்கிப் புரட்டாதி முதல் மழை கண்டதும், பாத்தி போட்டு, மாசி பிறக்கப் பாத்தி கிண்டுவார்கள். பனங்கிழங்கு, பச்சை ஒடியல், புழுக்கொடியல், பூரான் ஆகியவை உணவாகப் பயன்பட்டன. ஆடி மாதம் மடுமாதாப் பெருநாளுக்காக முதற் தரமான புழுக்கொடியலைச் சேகரித்து விற்றுப் பணம் சம்பாதித்த பெண்களுண்டு.

1983 யூலை மாதத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட புலம்பெயர்வு பல்லாயிரம் புதுப் பணக்கார வர்க்கத்தை உருவாக்கியது. விளைவு கள்ளப் பனங்காய் பொறுக்கிப் பஞ்சம் பார்த்த காலம் போய், தமது சொந்தக் காணிப் பனங்காய்களையே தேடாத செருக்கு வந்து விட்டது. பனாட்டுக்காகப் பனங்களியைப் பாயில் ஊற்றிக் காய வைப்பதைக் கேவலமாக நினைக்கும் ஒரு சமூகம் வளர்ந்தது.

1990-ல் போர் ஏற்பட்டதும் வெளிக்கொண்ட பெருவீதிகளில் எதிர்காலப் பாதுகாப்புக்காக வீதியின் கரையோரமாகப் பனங்கொட்டை நட்டார்கள். 30 வருடங்களின் பின்னர் அவை பனைகளாகி விட்டன. வடலிப் பருவத்திலும் நிற்கின்றன. அந்தப் பனை வடலி ஓலைகளை வெட்டி விவசாயத்திற்கு இயற்கைப் பசளையாகப் பாவிக்கலாம். தோட்டத் துறைகளில் ஓலை படர்த்தி உழுத பின்பு பயிர் நட்டுப் பாருங்கள். ஒரு ஆறு மாத காலத்திற்குப் பின்பாக அமோக விளைச்சலைக் காணலாம். அதுபோல வாழைத் தோட்டச் செய்கைக்காரர்கள் வடலி அல்லது பனையோலை வெட்டி வாழையின் அடியிலிருந்து மூன்றடி தள்ளித் தாட்டுப் பாருங்கள். ஒரு வருடத்தின் பின்னர் இரண்டு பேர் சேர்ந்து தூக்க வேண்டிய பாரமுள்ள பெரிய வாலைக் குலைகள் கிடைக்கும். நீர்வேலிப் பிரதேசத்தில் பனையோலையைப் பசளையாகத் தாட்டு அமோக விளைச்சல் பெறும் வியாபாரிகள் உள்ளனர்.

முன்னாளில் மண் வீடுகளே இருந்தன. வீட்டின் கூரையை மேய்வதற்குப் பனையோலைகளையே பயன்படுத்தினார்கள். இரண்டு வருடத்திற்கொருமுறை புதிதாகக் கூரை மேய்வார்கள். அப்போது பழைய பனையோலைகளைத் தோட்டங்களில் போட்டு உழுவார்கள். பயிர்கள் மிகச் சிறந்த விளைச்சலைக் கொடுக்கும்.

பனை மரம், வடலி ஓலை வெட்டுவதற்கு மரமேற ஆள் தேவையில்லை. மின்சார சபை ஊழியர்கள் பயன்படுத்தும் குழாய் அமைப்பாலான மடித்து வைக்கக் கூடிய வெட்டும் கருவிகளைப் பயன்படுத்தலாம். பசளை இறக்குமதிக்காக டொலர்களை நம்பியிருக்கத் தேவையில்லை. எமது வளமே அதற்குப் போதுமானது.

அதுபோலக் காய்க்கும் தென்னை மரங்களுக்குத் தென்னை மட்டைகளை மரத்தின் அடியிலிருந்து எட்டடி தள்ளி இரண்டடி ஆழத்தில் கிடங்கு வெட்டிய பின்பாகத் தாக்கலாம். பொச்சு மேலே பார்க்கக் கூடியதாகத் தாட்டுப் பாருங்கள். இரண்டு வருட மாரி கழிய அமோக விளைச்சலைக் காணலாம். தென்னை உர இறக்குமதிக்குக் கோடி டொலர்கள் தேவையில்லை.

எமது நிலத்தடி நீர் மாசு படாமல் சிறுநீரக நோய்களும் வராமல் எமது மண்ணையும் பாதுகாத்து நாட்டையும் உயரச் செய்யலாம். 'பிள்ளையைக் கட்டி வளர் வடலியை வெட்டி வளர்' என்பார்கள் எமது மூத்தோர்கள். அதாவது தென்னம் பிள்ளையின் ஓலைகளைப் பச்சை நிலையில் ஒரு போதும் வெட்டக்கூடாது. மரத்தின் அடி சிறுத்து தேங்காய்கள் எண்ணிக்கை, பருமன் குறைந்து விடும். ஆனால் பனை வடலியை வெட்டித் தான் வளர்க்க வேண்டும். வடலிப் பனையோலைகளை வெட்டி வளர்க்காது விட்டால் வடலி பறட்டை பற்றி விடும். மூச்சாகப் பனை வளராது. பனையோலைகளின் பசளைப் பெறுமதியை உணராத தலைமுறையொன்று இப்போ தோன்றி விட்டது.

இன்று பனங்காய்கள் விழுந்து தேடுவாரற்று முளைத்து வடலி






கள் ஆகின்றன.
அல்லது முளைக்காமல் ஊமல் கொட்டைகள் ஆகின்றன. மரநடுகை இயக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் என்றெல்லாம் பல தன்னார்வக் குழுக்கள் இயங்குகின்றன. ஊரெங்கும் தேடுவாரற்றுப் பரவிக்கிடக்கும் பனங்காயகளைக் காணிக்காரர்களது சம்மதத்துடன் அவற்றைப் பெற்று, மணல் பாங்கான நிலத்தில் பாத்தி போட்டு, அதன் பயனைத் தாம் அனுபவிக்கலாம். அல்லது பொதுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

பல பனங்காணி உரிமையாளர்களுடன் கதைத்துள்ளேன். தமக்குப் பனங்காய் பொறுக்க ஆளில்லை. நேரமில்லை. கூலி கொடுத்துப் பாத்தி போடக் கட்டாது. கூலிக்கு ஆளும் பிடிக்க முடியாது. ஆகவே விரும்பிய ஆட்கள் பனங்காயைப் பொறுக்கி எடுங்கள். அதன் பயனை அனுபவியுங்கள் எனக் கூறுகின்றனர்.

அதனால் பனங்காய்களை ஏற்றி அதனைப் பணமாக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருவாய் ஈட்டலாம். அது போல வீதிக் கரையோரம், வெளிக்கொண்ட காணிகளில் நிற்கும் வடலிப் பனைகளது ஓலைகளை வெட்டிச் சிராய்த்துத் தோட்டச் செய்கையாளர்களுக்கு விற்றுப் பணம் ஈட்டலாம்.

பனங்காய்ப் பணியாரம் போசணையும் சுவையும் மிகுந்த ஒரு சிற்றுண்டி. வர்த்தகக் கண்காட்சி நடைபெறும் சில இடங்களில் பார்த்திருக்கிறேன் பனங்காய்ப் பணியாரம் அமோக விற்பனையாகிறது. ஆனி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரையில் பனங்காய் பழுத்து விழும் காலமாகும். இக் காலத்தில் பனங்காய்களைச் சேகரித்துக் கழி பிசைந்து உரிய செய்முறைகளின் ஊடாகப் பனங்காய்ப் பணியாரம் சுடுவது நல்ல தொரு வருமானம் ஈட்டும் தொழிலாகும்.

பனம்பழம் மரத்தில் விழாத காலத்தில் கூட பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் பனங்களியை வாங்கிப் பனங்காய்ப் பணியாரம் சுடலாம். போருக்குப் பிந்திய புனர்வாழ்வில் வாழ்வாதாரம் வழங்குவதற்குப் பல வித வியாபாரங்களைச் செய்கின்றனர். இத் தொழிலைத் தெரிவு செய்வது அதிக இலாபத்தைத் தரும்.

இவ் வருடம் நுங்குக் காலத்தில் பார்த்தேன் ஒரு நுங்கு (நொங்கு ) 50 ரூபாவுக்கு விற்பதைக் கண்டேன். ஒரு நுங்கில் 3 கண் இருப்பது வழமை. இவை பனம்பழமாகி விழுந்து பாத்தி போட்டு அவித்து விற்றாலும் ஒரு பனங்கிழங்கு 10 ரூபாவுக்குத் தான் விற்கலாம். ஆனால் நுங்கு விற்பது இலாபமானது. வெய்யில் காலத்தில் நுங்கு விற்பனை மூலமாக அதிக வருவாய் ஈட்டலாம்.

பொருளாதாரம் ஈட்டுவதற்காக நாட்டை விட்டு ஓடுவதை விட எமது நாட்டிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி நாமும் வாழலாம். நாட்டையும் வாழ வைக்கலாம்.

இயற்கைத் தாயின் அற்புதமான கொடை தான் இலங்கைத் திருநாடு. நாம் அதனை உணர்ந்து முன்னேறுவோம்.



thabendran.v@thaiveedu.com

# வாழாமல் கழிந்த வாழ்நாள்

- குமார் புனிதவேல்

காலைச் செய்தித்தாளை வாசித்துக்கொண்டிருந்தார் சுந்தரம்.

முதியோர் வசிக்கும் அந்தத் தொடர்மாடிக் கட்டடத்தில் தனிமையாக வசித்து வந்த சுந்தரம், ஒரு காலத்தில் இலங்கையில் புகழ் பூத்த பத்திரிகையாளர்.

ஆனால், இன்று ஒரு செல்லாக்காசு. எரிந்த மின்குமிழ்.

இன்று ஏனோ... சுந்தரத்திற்குக் கடந்தகால நினைவுகள் அலைமோதத் தொடங்கியது.

தன் இளமையில் நேரங்காலம் பாராமல் குறித்த நாளில் தனது எழுத்து வெளிவரவேண்டும் என்று விழித்திருந்ததையும், ஆரோக்கியத்தைக் கவனிக்கத் தவறியதையும் எண்ணுகையில் வேதனையாய் இருந்தது. தற்போது இரட்டைக் குழந்தைகளாக இரத்த அழுத்தமும் சர்க்கரை வியாதியும்தான் முதுமையில் எஞ்சி நிற்கிறது.

சுந்தரத்தால்... காலம் கடந்துபோன வேகத்தையும், இழந்துபோன இளமையையும் எண்ணி வேதனைப்படத்தான் முடிந்தது.

கடந்தகால நினைவுகள் மனதை இருள்படுத்த, வெளியிலுள்ள பிரகாசமான சூரிய ஒளியில் நடந்தால் இனிமையாக இருக்கும் எனப் புறப்பட்டார் சுந்தரம்.

அந்தத் தொடர்மாடிக் கட்டடத்திற்கு அருகில் ஓர் அழகிய பூங்கா. அதனருகே மெல்லெனப் பாயும் ஒரு நீரோடை. அங்கு நீண்ட பல இருக்கைகள். அது களைத்துப் போனவர்கள் இளைப்பாறும் இடம். அந்த இருக்கையிலிருந்து நீரோடையை, பூங்காவை இரசிப்பவர்கள் நேரம் போவதே தெரியாது இருப்பார்கள்.

சுந்தரம் மிகவும் களைத்திருந்தார். அந்த நீரோடையும் பூங்காவின் அழகும் அவரை ஆசுவாசப்படுத்தியது.

அவரைக் கடந்து நீரோடையில் ஓடும் அந்த நீரை நெடுநேரம் பார்த்திருந்தார். அவரது வாழ்க்கையும் இந்த ஓடும்நீரைப் போலதான், வாழ்க்கையில் சென்ற காலம் திரும்பிவராது என்பதை நினைவுபடுத்தியது. நெஞ்சம் கனத்தது. அயற்சியாயிருந்ததால் அயர்ந்துவிட்டார்.

யாரே சில புதியவர்கள், தன்னைச் சுற்றிச்சுற்றி வட்டமிடுவது போன்ற நினைவு.

ஆம். அவருடன் ஒருவர் உரையாட வருகின்றார்.

அவர் ஒரு புதியவர். ஆனால் எங்கோ பார்த்தது போன்ற தோற்றம். சுந்தரத்தைப் பார்த்து மெதுவாகப் புன்னகைத்தார்.

சரியாக அவரை அடையாளம் தெரியாவிட்டாலும், பதிலுக்குப் புன்னகைத்த சுந்தரம்... ‘மன்னிக்கவேண்டும், உங்களை முன்பு நான் இங்கு சந்தித்த ஞாபகம் வருகுதில்லை. எனது பெயர் சுந்தரம், அதோ தெரிகிறதே அந்த அடுக்கு மாடியில் வசிக்கிறேன். நீங்கள் இன்று தான் முதல்முறையாக வருகிறீர்களா? உங்களுடைய பெயர் என்ன?’

புன்னகைத்த புதியவர், ‘எனக்கென்று ஒரு பெயருமில்லை, உருவமுமில்லை. ஆனால், என்னோடு ஒரு போதும் கதைக்காதவர்கள் எனக்கு ஆயிரம் பெயர்களும், உருவங்களும் தந்துள்ளார்கள். ஏன் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுள் என்ற பெயரையே வைத்துக் கொள்வோமே?’ என்று முடித்தார்.

பதறிப்போன சுந்தரம், ‘இறைவா! ஆண்டவரே...’ என்று ஏதேதோ உளறினார்.

‘பார்த்தாயா, நான் ஒரு பெயர் சொல்ல, நீ இரண்டு பெயர்கள் வைத்துவிட்டாய். அது சரி... நீ பல்லாண்டுகள் நிருபராயிருந்து பலரையும் பேட்டிகண்டாய். உனக்கு என்னிடம் கேள்வி உண்டோ’ என்றார்.

சுந்தரத்தின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தனது முதல் கேள்வியைக் கேட்டார், ‘கடவுளே! நீங்கள் படைத்த மனிதர் உங்களுக்குத் தந்த பெரும் ஆச்சரியம் என்ன?’

அமைதியாகப் பதில் சொன்னார். ‘இளமையில் வாழ்க்கையை வாழாமல், உயர்நிலைக்கு வளரவேண்டும் வளரவேண்டும் என்று எதிர்காலத்தை நோக்கி ஏங்குகிறார்கள். முதுமையடைந்தவேளை, இளமை போய்விட்டதே போய்விட்டதே என்று இறுதியில் ஏங்குகிறார்கள். இருக்கும் நேரத்தைக் கோட்டை விட்டுவிட்டு, பின் ஏங்குவதில் பயன் என்ன?

‘பொருள் இல்லாதவர்கள் இந்த உலகில் வாழ்வது கஷ்டம் என்பது உண்மைதான். ஆனால், அனுபவிக்கவேண்டிய இளமைப்பருவத்தில் செல்வத்தைத் தேடி ஓடிஓடி உழைப்பதில் தங்களது ஆரோக்கியத்தைத் தவறவிடுகிறார்கள். பின்



தேடிய செல்வம் அனைத்தையும் செலவிட்டு ஆரோக்கியத்தை மீளப்பெற முயல்கிறார்கள். இறுதியில் கானல் நீரைத் தேடி ஓடிய ஒட்டகம் போல் வாழ்வு முடிந்து விடுகிறது'.

'எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்தில் நிகழ்காலத்தை இழந்து விடும் மனிதர்கள், நிகழ்காலத்தில் வாழாமலும், எதிர்காலத்தில் வாழமுடியாமலும்... வாழாமலே இறந்து விடுகிறார்கள்.'

சுந்தரம் அமைதியானார்.

அமைதியைக் கவனித்தவர், சுந்தரத்திற்கு அருகில் வந்து அவன் தோளில் கையை வைத்து இரக்கமாகப் பார்த்தார். அங்கு புரிந்துணர்வு கலந்த அமைதி நிலவியது. வாய்க்குள் முணுமுணுப்பது போல் சொன்னார், 'பாவம் மனிதர். வாழாமலே, வாழ்நாளைக் கழித்துவிட்டு மரித்து விடுகிறார்கள்' என்று.

சுந்தரம் ஏக்கத்துடன் பார்த்துக் கேட்டார். 'கடவுளே! அறிவுரை என்ன ?'.

பதில் சொன்னார், 'முதலாவதாகக் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் மற்றவர்கள் மனதை நீங்கள் இயக்க முடியாது. அவர்களை உங்களிடம் அன்பு வைக்கச் செய்ய முடியாது. அவர்கள் உங்களிடம் அன்பு காட்டக்கூடியதாக உங்களைத் தயார் செய்வதுதான் நீங்கள் செய்யக்கூடியது. மிக முக்கியமாக, உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவது மடத்தனமான விடயம்'.

'ஒவ்வொருவரும் தனது தவறுகளை மன்னித்து மறந்துவிடுவது போல், மற்றவரின் தவறுகள் குற்றங்களையும் மன்னித்து மறந்துவிடக் கற்றுக்கொள்வதவசியம். ஒரு கணப்பொழுதில் கூறிய சொல் நெடுங்காலம் எடுத்தும் ஆறாது இருக்கும்' என்றார்.

'கடவுளே செல்வத்தைத் தேடுவது தவறா ?'.

புன்னகை புரிந்தபடி கேள்விக்குப் பதில் சொன்னார்... 'அதிக செல்வத்தை வைத்திருப்பவர் அல்ல பணக்காரர். தேவைகள் இல்லாதிருப்பவரே உண்மையான பணக்காரர்' என்றார்.

அவர் கூறிய வார்த்தைகள் சுந்தரத்தின் மனதைப் பெரிதும் உறுத்தியது. தனது முன்னோர்கள் தேவைகளைக் குறைத்து, ஆசைகளை அகற்றச் சொன்னார்கள். அந்தக் காரணத்தால் தான்,

***'ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!***
***ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்!***
***ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்!'***

என்றார் திருமூலர்.

தன்னை ஏதோ தாக்குவது போலுணர்ந்த சுந்தரம், திடீரென எழுந்தபோது தடக்கி விழப் பார்த்தார். அப்போதுதான் சுந்தரத்திற்குப் புரிந்தது தான் கண்டது பகற்கனா என்று.

எஞ்சிய காலத்தை ஏக்கமில்லாது வாழ்வதற்காகத் தனது தொடர்மாடிக் கட்டடத்தை நோக்கி நடந்தார் சுந்தரம்.



kumar.punithavel@thaiveedu.com


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள்: 19 ஜனவரி (வெள்ளிக்கிழமை 2024)
நேரம் : இரவு 8:00 - 10:00 மணி ( கனடா ரொறன்ரோ )
நாள்: 20 ஜனவரி (சனிக்கிழமை 2024)
நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன் )
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை , இந்திய )
காலை 11:00 - 1:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )
"தமிழில் சில வினை வகைப்பாடுகளும் கூட்டு வினைகளும் - ஒரு பார்வை"
உரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் செ.இரா. செல்வக்குமார்
Zoom ID: 84777257162 Passcode: 554268



# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

*We've Moved*
*Our New Address*

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Buy or Sell
Your Home
call me 24-7
HOMELIFE HIGHER STANDARDS
Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
• Family Portraits
• Children Portraits
• Business Portraits
• Passport & Citizenship Photos
• Classic Weddings
• Arangetram
• Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml



# நெடுந்தீவுக் குதிரைகள்

**- அ. ரொனிராஜன்**

யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறை சார்ந்து மிகுந்த கவனத்தை இப்போது பெற்றுவருவது நெடுந்தீவு. புராதன தொல்லியல் சின்னங்கள் உட்பட, பொருள்சார் பண்பாட்டின் தொகுக்கப்படாத அறிவும் இங்கு விரவிக் காணப்படுகின்றது. இலங்கையில் எங்குமில்லாத வகையில் இம்மண்ணுக்கு அழகையும் கவனக்குவிவையும் வழங்கும் உயிரியல் அடையாளமாக குதிரைகள் காணப்படுகின்றன. இவை பற்றிய வரலாற்றுத் தேடலாக இக்கட்டுரை அமைகின்றது.

இலங்கையின் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் குதிரை வணிகம் இடம்பெற்றதை அறிய முடிகின்றது. 2011-ல் கந்தரோடையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாறு-தொல்பொருளியல் துறையினர் மேற்கொண்ட ஆய்வில், குதிரையின் எலும்புகள் கிடைத்துள்ளன. அதே போன்று தீவகத்தின் 'சாட்டி' என்னும் இடத்தில் பெருங்கற்பண்பாட்டு காலத்து ஈமக்கிடங்கினை அகழ்வாய்வு செய்தபோது, குதிரையின் எலும்பினைக் கண்டெடுத்தனர். பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், குதிரை வணிகனின் புத்திரர்களான சேன, குத்திக என்னும் இரு தமிழர்கள் அநுராதபுரத்திலே ஆட்சியைக் கைப்பற்றினார்கள் என்பது மகாவம்சக் கதையாகும்.

ஆனால், நெடுந்தீவைப் பொறுத்தவரையில் இங்குள்ள குதிரைகளுக்கும் காலனித்துவ ஆட்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது. குதிரை வணிகத்தில் முக்கியமாக போர்த்துக்கேயர் ஈடுபட்டனர். இவர்களுக்குப் போட்டியாக அரேபியரும் இதில் பங்கெடுத்தனர். 1597 முதல் 1658 வரை யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட இலங்கையின் கரையோரப் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துக்கேயரால் ஒன்று முதல் இரண்டரை வயதுள்ள குதிரைக் குட்டிகள் வளர்க்கப்பட்டதாக ஆதாரங்கள் உள்ளன. குதிரைகளுக்குத் தேவையான சீதோஷண நிலை இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்பட்ட நிலையில், இலங்கையில் குதிரைகளை வளர்க்க போர்த்துக்கேயர் தெரிவு செய்த இடமே நெடுந்தீவு. இது ஒரு தீவு என்பதால் குதிரைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க நெடுந்தீவு பொருத்தமாக அமைந்தது. இங்கு இவை வணிக நோக்கங்களுக்காகவே வளர்க்கப்பட்டன. இவர்களுக்குப் பின் நெடுந்தீவு ஒல்லாந்தரின் (1658 – 1796) முக்கிய நிர்வாக மையமாக அமைந்தது. 1658 முதல் 1675 வரை வடபகுதியின் ஒல்லாந்த அரசாங்க அதிகாரியாக இருந்த 'ரிஜிக் லொஸ்வேன்' இத்தீவில் தங்கியிருந்தபோது ஒரு தொகுதி குதிரைகளை கப்பலில் கொண்டு வந்து இங்கு இறக்கினார். இவையும் வணிக நோக்குடனே கொண்டு வரப்பட்டன.

ஒல்லாந்தருக்குப் பின் நெடுந்தீவைக் கைப்பற்றிய பிரித்தானியர் குதிரைகளைப் பராமரிப்பதற்காக ஒன்டர், கூப்மன் போன்ற பதவிகளில் ஆட்களை நியமித்தனர். பொ.ஆ.மு. 1798-ல் குதிரை வண்டிக்கான பொறுப்பு, வருமான அதிகாரியான 'பார்புற்' என்பவரிடம் வழங்கப்பட்ட. 1816-ல் குதிரை வளர்ப்பதற்காக பொறுப்பு 'சன்கோணி' என்பவரிடமும், 1826-ல் 'அதேட்டன்' என்பவரிடமும் வழங்கப்பட்டது.

ஆங்கிலேய லெப்டினன்ட் நோலன் 1813 – 1819 வரை ஆறு ஆண்டுகள் நெடுந்தீவை நிர்வகித்தார். அக்காலத்தில் போர்த்துக்கேய, ஒல்லாந்தரால் அறிமுகமான குதிரைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பில் அவர் இருந்தார். இவர் நெடுந்தீவு, மத்தி, மேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் மூன்று பெரிய குதிரை லயங்களைக் கட்டினார். மேற்குப் பகுதியில் அமைந்த தொழுவம் அடக்கப்படாத குதிரைகளுக்காக அமைக்கப்பட்டது. மத்தியில் அமைந்த தொழுவம் பயிற்சி பெற்ற குதிரைகளுக்காகவும் கிழக்கில் அமைந்த தொழுவம் குதிரைகளுக்கு பயிற்சி கொடுப்பதற்காகவும் அமைக்கப்பட்டது. நோலன், இனப்பெருக்க நிகழ்ச்சித் திட்டத்திற்காக குதிரைகளை இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது. இவர் நெடுந்தீவில் இருந்த காலத்தில் குதிரைகளுக்கு ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை காரணமாக அவற்றின் ஒரு தொகுதியை இரணைதீவுக்கு கொண்டு சென்று குதிரை லயம், கிணறு என்பவற்றை உருவாக்கி பராமரித்து அவற்றை ஆங்கிலேயரின் இராணுவத்தேவைக்கு பயன்படுத்தியதாக ஆங்கிலேய குறிப்புக்கள் கூறுகின்றன. எனவே இரணைதீவு ஆங்கிலேயர்களால் 'குதிரைச் சமவெளி' (The horse plains) என அழைக்கப்பட்டது.

அவருடைய காலப்பகுதிக்குப் பின் புதிய குதிரைகள் எவையும் கொண்டு வரப்படவில்லை. அவர் தீவை விட்டு வெளியேறிய பின் லயத்தில் இருந்த குதிரைகள் அவர்களின் வழிவந்தவர்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டன. ஆனால் 1870-ல் இச்செயற்பாடு கைவிடப்பட்டு இடைநிறுத்தப்பட்டது. இதன் பின் ஆங்கிலேயரால் வணிக இனப்பெருக்க நிகழ்ச்சித் திட்டம் எவையும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை. நோலன் அவர்களுக்குப் பின் பராமரிப்பற்ற நிலையில் காணப்பட்ட இக்குதிரைகள் வெளியேறி காடுகளில் சுற்றித் திரிந்தன. சிங்கள மொழி எழுத்துக்கள் இவற்றைக் காட்டுக் குதிரைகள் என அடையாளப்படுத்துகின்றன. ஆனால் ஆங்கிலேயர் தமது ஆட்சியின் இறுதிக்காலப்பகுதிகளில் குதிரைகளை ஏலம் விட்டதாகவும். இதை நெடுந்தீவைச் சேர்ந்த நாகலிங்கம் சுவாமிநாதர், சதாசிவம் கந்தையா, முடியப்பு, வேலுப்பிள்ளை கந்தையா ஆகியோர் அவற்றை ஏலம் எடுத்து உரிமை கொண்டதன் பின்னணியில் குதிரைகளுக்கு குறிவைக்கும் மரபு உருவானது என்பது தொடர்பான வாய்மொழி



மரபின் ஆதார நிலைப்பட்ட தகவல்களை தேடிக் கண்டறிய வேண்டும்.

நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டியில் அமைந்துள்ள இடிபாடுகள் ஆனவை நோலன் உருவாக்கிய குதிரை லயத்தின் இடிபாடுகள் எனக்கொள்ளலாம். ஏனைய இரண்டு குதிரை லயங்களும் இருந்தமைக்கான சுவடுகள் எவையும் இல்லை. இந்த இடத்தின் இடிபாடுகளை வைத்து நோக்கும்போது, சுமார் 150 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும் கொண்ட தொழுவமாக இது இருந்திருக்கலாம். சுமார் 6 மீற்றர் உயரம் கொண்ட சுவர் மற்றும் பல உடைந்த தூண்கள் இன்னும் உள்ளன. தூணின் அகலம் 3 சதுர அடியாகும். இக்குதிரைகளைப் போனிஸ் எனக் குறிப்பிடுகின்ற வழக்காறும் உள்ளது. ஈழத்து எழுத்தாளர் செங்கையாழியான் நெடுந்தீவைப் பகைப்புலமாகக் கொண்டு எழுதிய 'வாடைக் காற்று' என்னும் நாவலில் இவற்றை போனிக் குதிரைகள் என்று குறிப்பிடுகின்றார். அவருடைய நண்பர் க. பரமேஸ்வரன் (பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்) தனது பட்டப்படிப்புச் சார்ந்த ஆய்வு ஒன்றுக்காக நெடுந்தீவு சென்றபோது, அவருடன் கூடச் சென்று அங்கு ஒரு வாரம் தங்கியிருந்த செங்கையாழியான் இத்தீவின் சில மரபுகளையும், சொல் வழக்காறுகளையும் கொண்டு போதிய ஆராய்வு இன்றி எழுதியதே 'வாடைக்காற்று' என்னும் இந்நாவலாகும்.

ஆனால் போனிக் குதிரைகளுக்கும் சாதாரண குதிரைக்குமிடையில் அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன. இவை இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. 'போனி' வாழ்க்கை முழுவதும் சிறியதாகவே இருக்கும். ஆனால் சாதாரண குதிரைகளை விட விரைவாக முதிர்ச்சியடையும். குதிரைகளின் வளர்ச்சிப் போக்கு மெதுவாகவே நடைபெறும். போனி சவாரி செய்யப் பொருத்தமானவை அல்ல. இவை நான்கடியை விடக் குறைவான உயரம் கொண்டவை. ஆனால் நெடுந்தீவுக் குதிரைகள் இவற்றுக்கு நேர்மாறான தன்மை கொண்டவை. இவை போனிசைவிட உயர்வானவை. சராசரிக் குதிரைகளை விட உயரம் குறைந்தவை. இவற்றின் மூதாதையர் அரபுக் குதிரைகள். ஆனால், போதிய உணவு, நீரின்மை காரணமாக இவற்றின் தோற்றம் தலைமுறைக்குத் தலைமுறை குறுகிவருகின்றது.

நெடுந்தீவில் படிப்படியாக மழைவீழ்ச்சி குறைந்து வருதல், வெப்பம் அதிகரித்தல், உணவு, நீர் பற்றாக்குறை போன்ற காரணிகள் குதிரைகளை அதிகம் பாதித்துள்ளன. இந்நிலையினைக் கருத்தில் கொண்டு, வனஜீவராசிகள் திணைக்களம் யால, வில்பத்து போன்ற சரணாலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைப் போன்று, இங்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஊடாக, கோடை காலத்தில் இக்குதிரைகளுக்கு நீர் வழங்கும் செயற்பாடு இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டுக்கான நிதி (2023) ஒதுக்கப்படாமையின் காரணமாக நீர் வினியோகத்தில் நிலவிய சீரற்ற நிலமையைக் கருத்தில் கொண்டு, கிராம மக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் நிதி உதவியுடன் குதிரைகளுக்கு நீர் வழங்கும் தனியார் செயற்பாடும் கிரமமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் இந்த ஆண்டு குதிரைகளுக்கு நீர் வழங்கும் செயற்பாட்டில் நெடுந்திவு பிரதேச செயலகம் நடந்து கொண்ட முறை வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்றாகும்.

இக்குதிரைகள் 'அரச உடமைகள்' என்ற தோற்றப்பாடு உள்ள போதும் அரசாங்கத்தால் முறையான சுற்றறிக்கை எவையும் இதுவரை வெளியிடப்படவில்லை. ஆங்கிலேய ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்துடன் தனியாருக்கு சொந்தமான குதிரைகளும் இங்கு உள்ளன. ஆனால் இதுவரையில் அந்த அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதாகவோ அல்லது அவை வெளிப்படுத்தப்படவோ இல்லை.

இங்கு உள்ள குதிரைகளில் 90 வீதமான குதிரைகள் குறியுடனே காணப்படகின்றன. தற்போது சிறிய குதிரைக் குட்டிகளை 'கள்ளிப்பால்' கொண்டு குறிவைக்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பல குதிரைக் குட்டிகள் இறந்தும் உள்ளன. எனவே, எதிர்வரும் காலங்களில் இவ்வாறு முறையற்ற செயலில் ஈடுபடும் நபர்களை மிருகவதைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க முடியுமா ? என்பது தொடர்பாகவும் உள்ளூர் மக்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். எதிர்வரும் காலங்களில் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து நிரந்தரமான, பாதுகாப்பான நீர், உணவு என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் தீவக மக்கள் உரையாடவுள்ளனர். எனவே, தீவகத்தின் உயிரியல் அடையாளமாக விளங்கும் இந்த குதிரை இனத்தை தற்போதைய வரட்சியில் இருந்து பாதுகாக்க உதவிய நல்லுள்ளங்கள், இன்னும் நிலைபேறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தமது ஒத்துழைப்பை வழங்குவார்கள் என தீவக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



ronyrajan.a@thaiveedu.com

# மூன்றாவது கண்
# நண்பர்கள் குழுவின் செயல்வாதப் பாடல்கள்
## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

- து. கௌரீஸ்வரன்

### முகவுரை:

பாடல்கள் மூலமாகக் கருத்துகளைப் பரவலாக்கஞ் செய்வது மனித குலத்தின் பரிணாமத்துடன் சம்பந்தப்பட்ட இயக்கமாகத் தொடர்ந்து வருகின்றது. வேறுபாடுகளின்றி ஒரு சமூகத்தின் அனைத்து மனிதர்கள் மத்தியிலும் கருத்துகளைப் பகிர்வதற்குரிய பொருத்தமான ஊடகங்களுள் ஒன்றாகப் பாடல்கள் காணப்படுகின்றன. எழுத்தறிவு பிரதானப்படுத்தப்படாத உள்ளூர்ப் பண்பாடுகளில், பாடல்கள் வாயிலாகவே நமது அறிவுப் பொக்கிசங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குப் பகிரப்பட்டு வந்துள்ள, நீண்ட நெடிய வரலாற்றை நாம் காண்கின்றோம். உள்ளூர் வாய்மொழிப் பாரம்பரியம் என்பது மிகப்பெரும்பாலும் ஓசை நயத்துடன் பின்னப்பட்ட பாடல் மரபாகவே காணப்படுகின்றது. இவ்வாறு நமது உள்ளூர் மரபில் ஆதிக்கஞ் செலுத்தும் பாடல் பண்பாடு, நமது வரலாற்றில் நிகழ்ந்த பல புரட்சிகளில் மிகவும் முக்கியமான பங்கைச் செலுத்தியுள்ளமையினையும் காண்கின்றோம். வணிக மேலாண்மையிடமிருந்து விவசாயிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக முன்னெடுத்த பக்தி இயக்கப் புரட்சிக் காலத்தில் நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பாடல்கள் மிகவும் முக்கியமான பங்களிப்பை வழங்கியுள்ளன. இதேபோல் எழுத்தறிவும் எழுத்தை மையப்படுத்திய ஆக்க இலக்கியங்களும் பிரதானப் படுத்தப்படும் நவீன யுகத்திலும் பாடல் மரபின் முக்கியத்துவம் குறைந்து விடவில்லை மாறாக அதிகாரத்தையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து நிற்கும் மக்களின் குரலாகப் பாடல்கள் இயக்கம் பெற்று வருகின்றன. சாதாரண மக்களின் சக்தி வாய்ந்த ஊடகமாகப் பாடல் மரபு தொடர்ந்து வருகின்றது. உலகம் முழுவதும் மானுட மேன்மைக்காகப் பாடுபடும் சின்னச் சின்னச் செயற்பாடுகளில் பாடல்கள் பிரதான ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய உலகந்தழுவிய படைப்பாற்றலுடன் சேர்ந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கலைச் செயல்வாதம் என்று அறியப்படுகின்றது. இச்செயல்வாதங்களில் பாடப்படும் பாடல்கள் செயல்வாதப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு உலகந்தழுவிச் சுயாதீனமாக இயங்கும் பல்லாயிரக்கணக்கான நண்பர்கள் குழுக்களில் ஒன்றாக, இலங்கையின் மட்டக்களப்பிலே செயற்பட்டு வரும் ‘மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழு’வும் அடையாளங் காணத்தக்கதாக, உள்ளது. இக்குழுவினர் முன்னெடுக்கும் பல்வேறு காத்திரமான நடவடிக்கைகளில் பாடல்கள் பிரதான இடம் பெற்றுவருகின்றன. இந்தப் பாடல்களில், உலகந்தழுவிய மானுட நேயம் மேலெழும் விதத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

### அறிமுகம்:

மனித குலத்தின் இயங்கியல் பரிணாமத்தில் புதிய புதிய எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள் என்பனவற்றை உருவாக்குவதும் அவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதும், பரவலாக்குவதும் நடந்தேறி வருகின்றன. இதற்காக மனிதர்கள் பல்வேறு வழிமுறைகளைக் கண்டறிந்து பிரயோகித்து வருகின்றார்கள். இதில் நிகழ்த்து கலைகளும், இலக்கியங்களும் குறிப்பிடத்தக்க விடயமாக உலகம் எங்கிலும் இருந்து வருவதனைக் காண்கின்றோம். இதில் பாடல்களின் வகிபாகம் மிகவும் தாக்கஞ்செலுத்துவதாக இருக்கின்றது. உலகின் பல்வேறு மரபுவழி கலை இலக்கியங்கள் யாவும் பாடலையும், ஆடலையும் மையப்படுத்தி இருக்கின்றமை பாடல்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. உலக நாகரிகங்களில் எழுத்தை மையப்படுத்தி கலை இலக்கியங்களின் பனுவலாக்கம் நடைபெறுவதற்கு முன்னர் நீண்ட நெடிய வரலாற்றையுடையதாக பாடல் மரபு ஆதிக்கஞ் செலுத்தி வந்துள்ளமையினை நமது பண்டைய கலை இலக்கியங்கள் பற்றிய கற்கைகளும் ஆராய்ச்சிகளும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

மனிதர்கள் தாம் அனுபவத்தின் ஊடாகக் கண்டறிந்தவற்றை, உய்த்துணர்ந்தவற்றை, தாம் சிந்தித்தவற்றை இன்னொருவருக்குச் சட்டென்று கேட்ட மாத்திரத்திலேயே அவருடைய மூளையில் பதியும் வண்ணம் ஓசை நயத்துடன் கருத்துச் செறிவுள்ள பாடல்களாகப் பாடியுள்ளார்கள், கணியன் பூங்குன்றனின் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தர வாரா’[1] தொடங்கி சமகாலப் படைப்புகள் வரை இந்தப் பாடல் மரபு பலமாகப் பயணித்து வருவதனைக் காண்கின்றோம். உலகின் கலை இலக்கியப் படைப்பாக்கங்களின் வரலாற்றில் அதன் ஆணிவேராக மனிதநேயம் விளங்கி வருவதனைக் காண்கின்றோம். கலையோ அல்லது இலக்கியமோ எவ்வளவுதான் அதற்கேயுரிய அழகியலைக் கொண்டிருந்தாலும் அப்படைப்பில் மனித நேயம், மனித அறம் இல்லை

யென்றால் அது வரலாற்றில் குப்பைத்தொட்டிக்குரியதாகி விடுவதனைக் காண்கின்றோம்.

கட்டமைக்கப்பட்ட கலை வடிவங்களும், இலக்கியங்களும், வரலாற்றில் கோலோச்சிய அதிகார பீடங்களுக்குக் கட்டுப் பட்டும், அதற்கு இசைவாக நெகிழ்வுற்றும், கலை இலக்கியங் களுக்கேயுரிய மனித நேயத்தை இழக்க வேண்டியிருந்த காலங்களிலும், சூழல்களிலும், அந்த அதிகார பீடங்களின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து, மனித நேயத்தை உயிர்ப்புடன் வைத்திருந்து, மனித நேயத்தை வலுப்படுத்தும் வகையில் மக்களை அணி திரட்டுவதற்குரிய பொருத்தமான ஊடகமாகப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதனை வரலாற்றில் நிறையவே காண முடிகின்றது.

பாடல்கள் மிகவும் எளிமையான, அதே நேரம் மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமாகவுள்ளது. எந்த மனிதரையும் இலகுவாகத் தொற்றிக் கொள்ளும் வல்லமை பாடல்களுக்கு இருக்கின் றன. எத்தகைய சூழ்நிலைகளிலும் இருக்கின்ற, கிடைக்கின்ற வளங்களையும் வசதி வாய்ப்புகளையும் பயன்படுத்தித் தனி யாகவும் பிறருடன் சேர்ந்தும் வசதிக்கேற்ப செயலாற்றுவதற் குப் பாடல்கள் வாய்ப்பளிக்கின்றன. 'யாமார்க்கும் குடியல் லோம் யமனை அஞ்சோம்'[2] என்று கருத்துகளை ஒளிவு மறை வின்றி நேரடியாகவும், 'ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருத் தன் போட்டானாம் வெள்ளரிக்காய், காசுக்கு ரெண்டாக விற் கச் சொல்லிக் கடிதம் போட்டானாம் வெள்ளக்காரன்'[3] என்று, உள்ளுறைப் பொருளாகவும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு களைப் பாடல் மரபு வழங்கி வருவதனைக் காண்கிறோம்.

உலக வரலாற்றில் மனிதர்கள், மனித நேயத்திற்கு விரோத மான சவால்களையும் சோதனைகளையும் எதிர்கொண்ட சந் தர்ப்பங்களிலும் சூழல்களிலும் காலங்களிலும் பாடல்களை ஊடகமாகக் கொண்டு மனிதநேயத்தை நிலைநாட்டப் பாடு பட்டு வந்துள்ளார்கள். குறிப்பாக முழுக்க முழுக்க ஆணா திக்கத்தின் அடக்குமுறைகளுக்குள் சிறை வைக்கப்பட்டு அடிமைகளாக வாழ்ந்துவந்த பெண்கள், தமது துயரங்க ளைப் பாடல்கள் மூலமாகவேதான் முதன்முதலில் வெளிப்ப டுத்தியுள்ளார்கள் தாலாட்டு, ஒப்பாரி, கவி என்று தம் உள் ளத்து உணர்வுகளைக் கூறத் தலைப்பட்டார்கள். 'மெல்லிய முணுமுணுப்புகளில் தொடங்கி ஒப்பாரியாகி, கவியாகிப் பாடலாகத் தமது கருத்துகளை, எதிர்ப்புக் குரலைப் பெண் கள் வெளிப்படுத்தினர்'[4] 'தம்மைக் கட்டுப்படுத்தும் கீழ்த்தர மான ஆணாதிக்க சிந்தனைகளுக்கெதிராக ஒப்பாரி, கவி போன்றவற்றை நாட்டாரியல் பாடல்களில் தம் கருத்தை முன் வைத்த பெண்கள்...'[5] எனும் மேற்கோள்கள், மேலும் உறுதிப் படுத்துகின்றன.

எனவே, பாடல் மரபு என்பது உலக மனிதகுல வரலாற்றில் மனித வாழ்வியலில் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக, மானுடம் சவால்களை எதிர்கொண்ட போது மானசீகத்தைப் பாது காத்து வரும் ஒரு கலை வடிவமாக இயக்கம் பெற்று வருவத னைக் காண்கின்றோம்.

## நவீன காலத்தில் பாடல் மரபு:

இத்தகைய பாடல் மரபு நுகர்வுப் பண்பாட்டைப் பிரதானப்ப டுத்திய நவீன காலத்தில் நுகர்வுப் பண்பாட்டிற்குரியதாகக் குறுக்கப்படும் நிலைமைகள் வலுப்பெற்று வந்துள்ளன. மக்க ளின் பங்குபற்றல் மரபாகவும், பொது உடைமையாகவும் பல் பரிமாணங்களில் பயன்கொடுத்து வந்த உள்ளூர்ப் பாடல் மர புகள், மக்களைப் பங்குகொள்வோராக ஆக்கும் தன்மை பல வீனமாகி, மிகமுக்கியமாக தனிநபர் படைப்பாக, தனியாள் உடைமையாக மாற்றப்படும் நிலைமைகள் வலுவடைந்தன. மக்கள் மத்தியில், அவர்தம் வாழ்விலும் இயக்கத்திலும் பின் னிப் பிணைந்துள்ள உள்ளூர்ப் பாடல் மரபுகள் செம்மையற் றவை, சீரழிந்தவை என்று தரந் தாழ்த்தப்பட்டு, பொதுமக் களை வெறும் பார்வையாளர்களாக மாத்திரம் வைத்திருக்கக் கூடிய நுகர்வுப் பண்பாட்டிற்கு வலுச்சேர்க்கவல்ல பாடல் மர புகள் செம்மையானவை என்று போசிக்கப்பட்டன. இதன் அடுத்த பாய்ச்சலாக உள்ளூர்ப் பாடல் மரபுகள் அதன் பல்ப ரிமாணத் தன்மையிலிருந்து விடுவிக்கப்பட்டு நுகர்வுக்குரிய தாக்கப்படுதலே போற்றுதலுக்குரிய கலைப்பணியாக விதந் துரைக்கப்பட்டது.

இவ்வாறு நவீனகாலத்தில் கலை இலக்கியங்கள் வணிக நலன்களுக்குரிய நுகர்வுப் பண்பாட்டின் செல்வாக்கிற்குட்ப டுத்தப்பட்ட போதிலும் மனிதர்களின் வாழ்வியலுடன், பங்கு பற்றலுடன் இரண்டறக் கலந்த பாடல் மரபின் உள்ளூர்த் தன்மை முற்றாக அழிந்து விடவில்லை. மாறாக, அவை உள் ளூர் மட்டங்களில் உள்ளூர்க் கலைஞர்களின் பயில்வினா லும் முயற்சியினாலும் உயிர்ப்புடன் இயக்கம் பெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இவற்றை நவீன ஆய்வறிவாளர் கிராமியக் கலைகள், நாட்டுப்புறக் கலைகள், மரபுக் கலை கள் எனப் பல்வேறு வகைகளில் வேறுபடுத்தியும் காட்டியுள் ளார்கள்.

## காலனிய நீக்கமும் உள்ளூர் பாடல் மரபும்:

இதேவேளை காலனித்துவ எதிர்ப்புடன் விருத்தியடைந்த பின் காலனித்துவ, பின்நவீனத்துவ, காலனியநீக்க ஆய்வறிவுச் செயற்பாடுகள் உள்ளூர்க் கலை வடிவங்களை நவீன நோக் கில் நுகர்வுக்கானதாக மாத்திரம் அணுகாமல் அவற்றின் வாழ்வியல் கூறுகளைக் கவனத்திற் கொண்டு கலையாக்கங் களைப் படைக்கும் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கி யுள்ளமையினை ஆய்ந்தறிய முடிகின்றது. மக்கள் ஒன்றுகூடு வதற்கும், செயலாற்றுவதற்கும், தமது உள்ளத்து வெளிப்பா டுகளை, தாம் எதிர்கொள்ளும் சவால்களை வெளிக்கொணர் வதற்குமான ஊடகமாக உள்ளூர்க் கலை வடிவங்கள் இத்த கைய செயற்பாட்டாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின் றன. இதில் பாடல் மரபு மிகவும் சிறப்பாகப் பிரயோகிக்கப் பட்டு வருகின்றது. இந்த வகையில், ஈழத்தில் 'மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழு'வினர் தமது கலையாக்கச் செயற்பாடுகளில் மேற்படி நோக்குகளில் பாடல் மரபைச் சிறப்பாகப் பிரயோகித்து வருவதனைக் காண முடிகின்றது.

## மூன்றாவது கண் குழுவும் அதன் பாடலாக்கங்களும்:

ஈழத்தில் குறிப்பாகக் கிழக்கின் மட்டக்களப்பில் இரண்டாயிர மாம் ஆண்டுகளிலிருந்து இக்குழுவின் கலையாக்கச் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர், அறிவு, திறன், ஆக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், வன்முறை யற்ற சமத்துவமான வாழ்வியலைப் பிரயோகத்திற்குக்

கொண்டுவருதல் எனும் நோக்கங்களுடன் கலையாக்கச் செயற்பாடுகளைப் பிரதான ஊடகமாகக் கொண்டு இக்குழுவினர் இயங்கி வருகின்றார்கள். கருத்தியல் தெளிவோடு தன்னார்வத்துடன் இணைந்து செயற்படும் நண்பர்கள் குழுவாகச் சின்னச் சின்ன அளவில் ஆக்கபூர்வமான, பெறுமதியுடைய செயற்பாடுகளைக் கடந்த மூன்று தசாப்தங்களாக இக்குழுவினர் முன்னெடுத்து வருகின்றார்கள். இக்குழுவினரின் இலக்கானது பாடல் மூலமாகவே வெளிக்காட்டப்பட்டு வருகின்றது. அதாவது,

*'எங்களின் அறிவில் எங்களின் திறனில்*
*தங்கி நிற்போம் நாங்கள்*
*எங்களின் நிலத்தில் எங்களின் விதைப்பில்*
*விளைவித்தே வாழ்வோம்*
*கட்டுப்படுத்தும் வாழ்க்கை முறைகளை*
*நீக்கி எழுந்திடுவோம்*
*சூழலிலிணைந்து வாழும் வழிகளை*
*மீளவும் ஆக்கிடுவோம்'*[6]

இக்குழுவினரின் செயல்வாதங்கள் சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகள், வளர்ந்தோருடனான களப் பயிற்சிய ரங்க நடவடிக்கைகள், உள்ளூர்க் கலைகளை மீளுருவாக்கும் நோக்கில் மரபுவழிக் கலைஞர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் பங்குகொள் ஆய்வு முன்னெடுப்புகள் என்ற வகைகளில் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் யாவும் பால்நிலைச் சமத்துவம் எனும் அடித்தளத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்று வருகின்றன. இவற்றில் பாடலாக்கம், பாடலளிக்கை என்பன பிரதானமானதாக இடம் பெற்று வருகின்றன. இத்தகைய பாடல்கள் அனைத்தும் சமகாலத்தின் சவால்களை எதிர்கொண்டு மனிதநேயத்தை வலுப்படுத்தும் நோக்கில் ஆக்கப்பட்டவையாக இருப்பதனைக் காணலாம்.

உதாரணமாகச் சிறுவர்களுடனான கலையாக்கக் களப் பயிற்சிகளில் பாடப்படுவதற்காக எழுதப்பட்டு குறித்த குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் களப் பயிற்சிகளில் பாடப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வரும் பின்வரும் பாடல் சமகாலத்தில் மனித வாழ்வின் இருப்பை வலியுறுத்துவதாக இருப்பதனைக் காண்கின்றோம்.

***'நாங்கள் வாழவேண்டும் இந்தப் பூமியில் - என்றும்***
***நாங்கள் வாழவேண்டும் இந்தப் பூமியில்***

***இயற்கை தந்த இனியவாழ்வை***
***இணைந்து மகிழ்ந்து வாழ வேண்டும்***

***இயற்கை மடியினில் கூடுகள் கட்டி***
***இயற்கை மகிழ்ந்திட வாழ்வினைக் கூட்டி***

***இணைந்து மகிழ்ந்து வாழ வேண்டும் - நாங்கள்***
***இணைந்து மகிழ்ந்து வாழ வேண்டும்***

***துயர்களை எல்லாம் துச்சமாய் எண்ணி***
***தடைகளை எல்லாம் வெற்றிப் படிகளாய் மாற்றி***
***துணிந்து நிமிர்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும் - நாங்கள்***
***துணிந்து நிமிர்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும்***

***அன்பின் வழியிலே வாழ்வினைக் கூட்டி***
***வன்முறையற்ற***
***வாழ்வினை ஆக்கி***
***இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழ வேண்டும்'***[7]

மேற்படி பாடலானது ஈழத்தின் தமிழ்பேசும் சமூகங்கள் மத்தியில் மூன்றாவது கண் நண்பர்களின் பங்குபற்றுகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு களப் பயிற்சிகள், கருத்தமர்வுகளில் பாடப்படும் பாடலாக இருந்து வருகின்றது. பலரும் ஆர்வத்துடன் பயிலும் பாடலாக இது இருப்பதனைக் காண முடிகிறது. இப்பாடலின் உருவாக்கமானது அனர்த்தங்களின் பின்னரான மீண்டெழுந்த ஈழத்தமிழர்களின் வரலாற்றுடனும் அனுபவங்களுடனும் சம்பந்தப்பட்ட ஒரு கூட்டுப் படைப்பாக்கமாக இருப்பது இங்கு சுட்டிக்காட்டவேண்டிய அம்சமாக இருக்கின்றது. அதாவது 2004 ஆழிப்பேரலையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உளநல ஆற்றுப்படுத்தலுக்கான கலையாக்கச் செயற்பாட்டின் போது இப்பாடலின் முதல் மூன்று பந்திகளும் குறித்த குழுவின் இணைப்பாளரும் அரங்கச் செயற்பாட்டாளருமாகிய பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களால் எழுதப்பட்டு அதற்கான இசை ஆக்கப்பட்டு ஈழத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலே ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்று நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்த சிறுவர்களிடையே பாடப்பட்டது. நான்காவது பந்தி ஈழத்தில் நடைபெற்ற போரினால் பாதிப்புற்ற பெண்களுடனான களப் பயிற்சியின் போது குறித்த களப் பயிற்சியில் பங்குபற்றிய பெண்களால் எழுதப்பட்டு இணைக்கப்பட்டது. அடுத்த நான்கு வரிகள் வன்முறைகளில் தப்பி வாழும் பெண்களுடனான களப் பயிற்சியின் போது, அதில் பங்குகொண்ட பெண்களால் எழுதப்பட்டு இதில் இணைக்கப் பட்டது. இக்களப் பயிற்சிகளின் இலகுபடுத்துனராகப் பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளரும் மூன்றாவது கண் நண்பர்களில் ஒருவருமான கமலா வாசுகி அவர்கள் செயலாற்றியிருந்தார். ஆகவே குறித்த பாடலானது ஒரு கூட்டுப் படைப்பாக்கமாக, அனர்த்தங்களிலிருந்து மீண்டெழும் மனித வாழ்வியலின் வெளிப்பாடாக, மனித வாழ்வியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பாடலாக ஈழத்தின் கலைச் செயல்வாத வரலாற்றில் மேற்கிளம்பி நிற்கின்றது.

இதையொத்த பல பாடல்கள் குறித்த குழுவினால் கூட்டுப் படைப்பாக்கமாக ஆக்கப்பட்டும், பாடப்பட்டும் வருகின்றன. கட்டுரையின் வரையறை கருதி அவற்றின் எடுத்துரைப்பு இதில் தவிர்க்கப்பட்டுள்ளது.

அடுத்து, மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின் செயற்பாடுகளுள் முக்கியமானதாகப் பால்நிலைச் சமத்துவத்தை வலியுறுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பாடலாக்கம் பாடலளிக்கை பிரதான விடயமாக இடம் பெற்று வருகின்றன. குறித்த பால்நிலைச் சமத்துவத்தை வலியுறுத்தும் பாடல்கள் களப் பயிற்சிகளினூடாகக் கூட்டுப்

படைப்பாக்கமாகவும், தனியாள் படைப்பாக்கமாகவும் ஆக்கப்பட்டு, பாடப்பட்டு வருகின்றன. இவை உள்ளூர் இசைவடிவங்களைத் தழுவியவையாக ஆக்கப்பட்டிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. இதற்கான சில எடுத்துக்காட்டுக்களாகப் பின்வரும் பாடல் வரிகளைக் கூறலாம்.

***‘வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
வன்முறை வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
அன்பே வேண்டும்
வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
சந்தேகம் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
நம்பிக்கை வேண்டும்
வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
சந்தேகம் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
சந்தோசம் வேண்டும்’***[8]

***‘இயற்கைப் படைப்பில் ஏற்றத் தாழ்வு
இருந்ததில்லையே
என்றும் இருந்ததில்லையே
இயற்கையோடு இணைந்து வாழப்
பிறந்து வந்தோமே
நாங்கள் பிறந்து வந்தோமே
ஆணும் பெண்ணும் மகிழ்ந்து வாழும்
உலகத்தில் நாங்கள்
வாழப் பிறந்து வந்தோமே
மனிதம் பற்றி மனிதரோடு பேச வந்தோமே
நாங்கள் கூடி வந்தோமே’***

***‘சமமான உறவு தனைப்பேண - இங்கே
சமத்துவம் தானாய் வளர்ந்திடுமே
சமத்துவம் என்றே சொல்லும் போது
பால்நிலை என்பதும் முக்கியமே
பெண்களும் மனிதர்கள் என்று சொல்லி - நல்ல
மேன்மையை உலகுக்கு எடுத்துரைக்க
பெண்களின் அடிமைத்தளை உடைக்க - இந்தப்
பூமியில் மாந்தர்கள் ஒன்று சேர்க
ஆண்களும் பெண்களும் சரிசமமாம் - இந்தப்
பாரினில் உண்மையை ஏற்றுக் கொள்வீர்
பெண்களை அடிமையாய் பார்த்துவிட்டால் - இந்தப்
பாரினில் உண்மைகள் செத்துவிடும்’***[9]

இவ்விதமாக இந்தப் பூமியில் மானுடம் தழைக்க அடிப்படையாக அமையும் பால்நிலைச் சமத்துவம் எனும் மானுட நேயத்தை வலியுறுத்தும் பாடல்களாக மூன்றாவது கண் நண்பர்களின் செயல்வாதப் பாடல்கள் காணப்படுகின்றன. இப் பாடல்கள் பாடலளிக்கைகளாகவும், அரங்க ஆற்றுகைகளாகவும், களப் பயிற்சியரங்கின் பிரயோகங்களுள் ஒன்றாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எளிமையாகவும், இலகுவாகவும், சமகாலத்தில் அவசரமாகவும் அவசியமாகவும் உரையாடவேண்டிய மானுடநேயச் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்லவும் அதையிட்டு மக்களைப் பங்குபற்றிச் சிந்திக்கச் செய்வதற்கும் இப்பாடல் மரபு பெரும் பங்களிப்பு வழங்கி வருகின்றது.

## முடிவுரை:

முடிவாக மனிதகுல வரலாற்றில் பாடல் மரபு மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாக இருந்துவரும் பின்னணியில், நவீன காலத்தில் அது நுகர்வுப் பண்பாட்டிற்குரியதாக மாத்திரம் முக்கியப்படுத்தப்பட்ட தன்மையினையும் பின்னர் காலனியநீக்கச் செயற்பாடுகளில் பாடல் மரபு மீளவும் அதன் பல்பரிமாணத் தன்மையினை முக்கியத்துவப்படுத்தி மேற்கிளம்பிவரும் விதத்தினையும் இதற்கான ஈழத்துத் தமிழ்ச் சூழலின் ஓர் எடுத்துக்காட்டாக மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழுவின் பாடலாக்கங்களும் பாடலளிக்கைகளும் காணப்படுகின்றன என்பதையும் கண்டறியும் நாம் குறிப்பாகச் சமகாலச் சவால்களை எதிர்கொண்டு மானுட வாழ்வியலை ஆக்கபூர்வமாகத் தகவமைத்துக் கொள்வதற்கான மானுடநேய வெளிப்படுத்தல்களை இக்குழுவின் பாடல்களினூடாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

அடிக் குறிப்புகள்

- [1] கணியன் பூங்கொன்றன் பாடல்
- [2] திருநாவுக்கரசர் தேவாரம்
- [3] நாட்டார் பாடல்
- [4, 5] வாசுகி ஜெய்சங்கர், பெண்களின் கலாசாரச் செயல்வாதம், 1999. இலங்கையில் தமிழ்பேசும் பெண்கள் - சமூகமும் பண்பாடும், ஆய்வரங்கக் கட்டுரைகள், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை, ப-92
- [6, 7, 8, 9] மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழுவின் பாடல்கள், கையெழுத்துப் பனுவல், மட்டக்களப்பு.

கலாசாரச் செயல்வாதம் என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு செயற்பாடு ஆகும். இங்கு பெண்களின் கலாசாரச் செயல்வாதமானது பாடல்களை ஊடகமாகக் கொண்டு அதன்வழி செயற்பட்டது எவ்விதமெனில், மட்டக்களப்புச் சூழலிலே மக்களின் அன்றாட வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்ற கிராமியப் பாடல்கள், சடங்குப் பாடல்கள், கூத்துப் பாடல்களின் மெட்டுகளின் வழியே பெண்கள் தமக்கான பிரச்சினைகளைப் பொதுவெளியிலே பேச முன்வந்தனர். வீட்டிலே கூட உரையாடமுடியாத விடயங்களைத் தமக்குப் பரிச்சயமான மெட்டுகளின் வழியே பேசுவது என்பது பெண்களுக்கு மிகவும் இலகுவானதாக இருந்தது. கேட்போர் படிப்போர் மெட்டுகளுக்குப் பரிச்சயமானவர்களாக இருந்த காரணத்தினால் இதனைப் பொதுத் தளத்தில் பேசுவது என்பது பெண்களுக்குச் சாத்தியமானது. ஏனெனில் சமூகம் என்கின்ற கட்டமைப்புக்குள் பெண்களும் இருப்பதனால் பெண்கள் தங்களது பிரச்சினைகளைப் பேச சூழலிலுள்ள பாடல்களின் மெட்டுகளைத் தேர்வு செய்தனர்.



gowrieeswaran@thaiveedu.com



# எல்லை தாண்டிய திரைப்பிரதிகள்

- ஓவியர் ஜீவா

ஒரு மொழியில் வெற்றி பெற்ற படத்தை உடனே இன்னொரு மொழியில் மீண்டும் தயாரிப்பது இந்தியாவில் மிக சகஜமான ஒன்று. இதில் ஒலியை மட்டும் இன்னொரு மொழியில் மாற்றி வெளியிடப்படும் டப்பிங் படங்கள் வேறு வகை. தெலுங்கு மொழிப்படங்கள் முன்னொரு காலத்தில் ஏராளமாக இவ்வாறு மொழிமாற்றம் செய்யப்பட்டு தமிழில் வெளியாயின. என்.டி. ராமராவ், காந்தாராவ், ஜெயமாலினி, விட்டலாச்சாரியா, கிருஷ்ணா போன்ற பெயர்கள் இங்கே பிரசித்தி பெற்ற காரணங்கள் இத்தகைய திரைப்படங்களினால்தான். மற்றபடி வெற்றி பெற்ற வேறு மொழித் திரைப்படங்களை இன்



னொரு மொழியில் எடுப்பது மினிமம் காரண்டி என்று சொல்லப்படும் ‘கையை கடிக்காது’ என்ற நம்பிக்கையினால்தான். நடிகர் பாலாஜி, திரைப்பட தயாரிப்பாளர் ஆனதும் அவர் கடைப்பிடித்த கொள்கை இந்த ‘ரீமேக்’ தான். அவருடைய படங்களில் பெரும்பான்மை மறு ஆக்கங்கள்தான்! எம்ஜியாரும் சிவாஜியும் உச்சத்தில் இருக்கும்போது இத்தகைய திரைப்படங்களில் ஏராளமாக நடித்தார்கள். பின்னர் கமல்-ஹாசனும் ரஜினிகாந்தும் இதை தொடர்ந்தனர்.

மண்வாசனையை பிரதிபலிக்காமல் பொழுதுபோக்கு அம்சங்களையும் உணர்ச்சிகளையும் சரியாக பிரதியெடுத்தாலே படங்கள் அதே தரத்தையும் வெற்றியையும் அடையலாம். ஆனால் பலர் இதை கோட்டை விட்டுவிடுவதுண்டு. மெஹ-பூப் கான் அறுபதுகளில் ‘மதர் இந்தியா’ என்ற மகத்தான திரைப்படத்தை இயக்கினார். படம் பெரும் வெற்றி. வட மாநிலத்தில் நடக்கும் கதை. சம்பல் கொள்ளையர்கள், கிராமத்து வட்டி முதலாளிகள், எப்போது வேண்டுமானாலும் வந்து பெரும் அழிவைத் தரும் பெருவெள்ளங்கள். அங்குள்ள கிராமத்து சம்பிரதாயங்கள், பிரத்யேக வறுமை, உடையலங்காரங்கள் அனைத்துமே தமிழ் மண்ணுக்கு அந்நியமானவை. அதை அப்படியே பிரதியெடுக்கும்போது, தமிழ் மக்களால் அதில் ஒன்றிப்போக முடியாது. மதர் இந்தியா, தமிழில் புண்ணிய பூமி என்ற பெயரில் வெளிவந்து பெரும் தோல்வியைத் தழுவியது! சீதா அவுர் கீதா தமிழில் வாணி ராணியாக வந்து பலத்த அடி வாங்கியது. ஆனால் பொழுதுபோக்கு திரைப்படங்களான ஜானி மேரா நாம் (ராஜா), சச்சா ஜூட்டா (நினைத்ததை முடிப்பவன்), பிரேம் நகர் (வசந்தமாளிகை), யாதோன் கி பாராத் (நாளை நமதே) பெரும் வெற்றியை அடைந்தன.

மூலப்படத்தை கார்பன் காப்பியாக அப்படியே எடுக்காமல், மாற்றியும், சில சமயங்களில் சிதைத்தும் எடுக்கப்பட்ட படங்கள் பெரும் வெற்றியை அடைவதும் ஒரு ஆச்சரியம். பல படங்கள் தோல்வியடைந்ததும் உண்டு. புகழ் பெற்ற ஹிந்தி இயக்குநரான சாந்தாராம், ‘தோ ஆங்கேன் பாரா-ஹாத்’ என்ற படத்தை, தானே நடித்து இயக்கினார். ஆறு பயங்கர கைதிகளை ஒரு திறந்தவெளி சிறையில் வைத்து ஒரு ஜெயிலர் திருத்துவது போல இயக்கியிருந்தார். தமிழில் எம்ஜியார் நடிக்க ‘பல்லாண்டு வாழ்க’ என்ற பெயரில் வந்தது. தேவையில்லாத கனவுக்காட்சிகள், கைதிகளுக்கு வினோத ஒப்பனைகள், என்று படத்தை நாசம் செய்து அதன் ஆதார கருவையே சிதைத்து வைத்திருந்தனர். படமும் மக்களை கவரவில்லை. சாந்தாராம் படத்தை பார்த்து மனம் வருந்தியதாகவும் ஒரு செய்தி! கே.பி. கேசவதேவ் எழுதிய ‘ஓடையில் நின்னு’ (சாக்கடையில் இருந்து) மலையாளத்தில் சேதுமாதவன் இயக்கத்தில் சத்யன் நடிப்பில் வெளியானது. ஒரு எளியகை ரிக்ஷாகாரனாக சத்யன் பிரமாதமாக செய்திருந்தார். அதை தமிழில் ‘பாபு’ என்ற பெயரில் சிவாஜி நடிக்க ரீமேக் செய்தனர். மலையாளத்தில் ‘ஓ ரிக்ஷா வாலா’ என்ற பாடல், கதாநாயகனே இல்லாமல் படமாக்கப்பட்டது. தொழிலாளிகளின் உற்




சாகப் பாடலை, தமிழில் 'வரதப்பா வரதப்பா' என்று மாற்றி விஜயஸ்ரீயுடன் சிவாஜி ஆடுவதுபோல எடுத்து, காதல் சமாச் சாரங்களையும் கலந்து தந்தனர். ஆச்சரியமாக படம் வெற்றி பெற்றது. இன்னொரு காரணம், இங்கு பலர் மூலப் படத்தை பார்த்ததில்லை. சிவாஜி, தன் தேர்ந்த நடிப்பால் படத்தை உயரத் தூக்கி சென்றுவிட்டார்.

பல தரமான மலையாளப் படங்கள் தமிழில் கொத்துப்ப ரோட்டா போடப்பட்டாலும் வெற்றியடைந்தன என்பது பெரும் ஆச்சரியம். 'தேன்மாவின் கொம்பத்து' பிரியதர்சன் இயக்கத் தில், மோகன்லால் நடித்து வெளிவந்த ஒரு இனிமையான திரைப்படம். ஒரு கிராமத்து முதலாளியும், வேலைக்கார னும், ஒரு நாடக கம்பெனி நடிகையும் முக்கிய கதாபாத்திரங் களாக வைக்கப்பட்டு உருவான திரைப்படம். கேரள, கர்நா டக எல்லையில் கதை நடப்பது போல அமைத்திருந்த னர். தமிழில் இதை ரஜினிகாந்த் நடிப்பில் 'முத்து' என்று தயா ரித்தனர். கதையின் எளிமை சிதைக்கப்பட்டு படாடோபம் நிறைந்த ஒரு படமாக, ஆடல், பாடல், சண்டை காட்சி கள், இரட்டை வேட ரஜினி என்று ஏகப்பட்ட மசாலாக்களை தூவி வெளிவந்தது. என்ன ஆச்சரியம். இதுவும் வெற்றி பெற் றது! மணிச்சித்திரத்தாள் பாசில் இயக்கத்தில் வெளிவந்த ஒரு அற்புதமான மனோதத்துவ மர்மங்களை அடக்கிய திரைப்படம். மிகவும் கவனமாக கோர்க்கப்பட்ட கதாபாத்தி ரங்கள், கதைத்தளம் என்று வித்தியாசமாக செய்திருந்தனர். மோகன்லாலும் சுரேஷ் கோபியும் நடித்திருந்தனர். கதாநாய கியாக ஷோபனா. அவர் நடிப்பின் உச்சம் இந்தப் படம் என்று சொல்வார்கள். தமிழில் இதை பி. வாசு 'சந்திரமுகி' என்ற பெயரில் இயக்கினார். அனைத்து கதாபாத்திரங்களின் தன் மைகளும் மாற்றப்பட்டன. ஆபாச நகைச்சுவை சேர்க்கப்பட் டது. ஒரு அனகோண்டா பாம்பு கூடுதல் கவர்ச்சியாக இணைக்கப்பட்டது! எவ்வளவு சிதைத்திருந்தாலும் மக்கள் சந்திரமுகியை ஏற்றுக்கொண்டனர். நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த சிவாஜி புரடக்ஷன்ஸ், மீண்டும் எழுவதற்கு இந்தத் திரைப்படம் பெரும் உந்துசக்தியாக விளங்கியது என் பது ஒரு பெரும் ஆச்சரியம்! பி. வாசுவிற்கு ஏற்கனவே 'பர தம்' போன்ற ஒரு தரமான திரைப்படத்தை' சீனு' என்ற பெய ரில் தமிழில் தந்த அனுபவம் உண்டு என்பதும் ஒரு செய்தி.

அவர் தந்த ரீமேக்களில் சிறப்பாக அமைந்தது 'நடிகன்'. ஹிந் தியில் ஷம்மி கபூர் நடித்த 'ப்ரோபசர்' படத்தின் மறு ஆக்கம் இது. சத்யராஜ், கவுண்டமணி, மனோரமா மூவரும் தங்கள் சிறப்பான நடிப்பால் படத்தை வேறு உயரத்திற்கு கொண்டு போய்விட்டனர்.

கமல் ஹாசன் பல பிறமொழிப் படங்களை கவர்ந்து நிறைய படங்கள் எடுத்திருந்தாலும், உரிய அனுமதி பெற்று எடுத்த படங்களில் சிறப்பாக அமைந்த ஒன்று 'சத்யா'. அர்ஜுன் என்ற ஹிந்திப் படம்தான் மூலம். கமல் நடித்த இன்னொரு முக்கியமான படமான 'குருதிப்புனல்', கோவிந்த நிஹ்லானி இயக்கிய துரோஹகால் படத்தை அப்படியே எடுத்தது. ஆந் திரக்களனில் மக்கள் போர் போன்ற தீவிரவாதக் குழுக்கள் பின்னணியில் மூலப்படம் இருந்தது. அதில் ஒரு நம்பகத் தன்மை இருந்தது. தமிழ்நாட்டில் அத்தகைய தீவிரவாதக் குழுக்களின் செயற்பாடுகள் குறைவு, ஆகவே பல காட்சிகள் தமிழ்ப் படத்தில் யதார்த்தமாக அமையவில்லை. கமல் தயா ரிப்பில் வெளிவந்த 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு 'மலை யாள' ஆவநாழியின்' ரீமேக். காட்சிக்கு காட்சி அப்படியே எடுத்ததால் தரம் குறையாமல் இருந்தது.

மலையாளத்தில் வந்த முக்கியமான தரமான திரைப்படங்க ளில் ஒன்று சிபி மலையில் இயக்கிய 'கிரீடம்'. ஒரு தந்தையின் எதிர்பார்ப்புக்கள் தன மகனுக்கு நேர்ந்த சில சம்பவங்களால் நொறுங்கிப்போவதை அற்புதமாக சித்தரித்த திரைப்படம். திலகனும் மோகன்லாலும் தந்தையும் மகனுமான சிறந்த நடிப்பை வழங்கியிருந்தனர். இது உடனே தெலுங்குக்கு சென்றது. சத்யநாராயணாவும் டாக்டர் ராஜசேகரும் நடித்தி ருந்தனர். அப்படியே மொழிமாற்றம் செய்து 'ஆம்பிளை' என்ற பெயரில் தமிழில் வெளியிட்டனர். மூலத் திரைப்படத் திற்கு எந்த விதத்திலும் தீங்கு விளைவிக்கவில்லை. ஹிந்தி யில் அம்ரிஷ் புரியும் ஜாக்கி ஷராஃபும் நடித்த இந்தப்ப டம், நீண்ட நாட்களுக்கு பிறகு தமிழுக்கு மீண்டும் ஒரு ரவுண்ட் வந்தது. 'கிரீடம்' என்ற பெயரிலேயே வந்த இந் தப் படத்தில் ராஜ்கிரணும் அஜீத்தும் தந்தை மகனாய் நடித் தனர். பல காட்சிகள் மாற்றப்பட்டன. காமெடி ட்ராக் முக்கியம் பெற்றது. படத்தின் ஆதார ஆன்மா காணாமல் போனது.





இதே போல இன்னொரு மோகன்லாலின் நல்ல படம் ஒன்று 'ஸ்படிகம்'. அதையும் தமிழில் காமெடி ட்ராக் சேர்த்து சுந்தர் சி நடிப்பில் வீராப்பு என்ற பெயரில் வெளியிட்டனர். பிரகாஷ்ரா-ஜும் சுந்தரும் தங்கள் பங்குக்கு வைத்து செய்தார்கள்.

ஸ்ரீனிவாசன் மலையாளத்தில் புகழ் பெற்ற நடிகர், திரைக்கதாசிரியர், மற்றும் இயக்குனரும் கூட. இவர் படங்களுக்கென்றே தனியான ரசிகர் குழாம் உண்டு. இவரது படங்கள் நிறைய தமிழில் மீண்டும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. காந்தி நகர் செகண்ட் ஸ்ட்ரீட் (அண்ணா நகர் முதல் தெரு), சன்மனசுள்ளவர்க்கு சமாதானம் (இல்லம்), நாடோடிக்காற்று (கதாநாயகன்), வடக்குநோக்கி யந்திரம் (திண்டுக்கல் சாரதி), பாவம் பாவம் ராஜகுமாரன் ( கோபுர வாசலிலே), சந்தேஷம் (வீட்டைப் பார், நாட்டைப் பார்), சிந்தாவிஷ்டயாய சியாமளா (சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி), உதயனாணு தாரம் (வெள்ளித்திரை) என்று ஏராளமான நல்ல திரைப்படங்கள் தமிழுக்கு வந்தன. சிலவற்றைத் தவிர மலையாளத்தின் தரம் இவற்றில் காணக்கிடைக்கவில்லை.

ஒரு காலத்தில் ஹிந்தித் திரைப்படங்கள் சூப்பர் ஹிட்களாக ஓடிக்கொண்டிருந்தபோது, அவற்றை பெரும் விலை கொடுத்து வாங்கி தமிழில் தயாரித்து வெளியிடுவது ஒரு லாபகரமான தொழிலாக இருந்தது. பி கிரேடு படங்களை பெரும்பாலும் மாடர்ன் தியேட்டர்ஸ் வெளியிட்டனர். அலிபாபாவும் நாற்பது திருடர்களும், வல்லவனுக்கு வல்லவன், இரு வல்லவர்கள், போன்ற படங்கள் எல்லாம் இந்தியிலிருந்து வந்தவையே. ஆராதனா, வக்த், ஹம்ராஸ், யாதோன் கி பாராத், ஷோலே, குர்பானி, பாபி போன்ற திரைப்படங்கள் தமிழ்நாட்டில் நூறு நாட்களை கடந்து வெள்ளிவிழாவையெல்லாம் தொட்டவை. ஆராதனா, சிவகாமியின் செல்வன் என்ற பெயரில் வெளிவந்து தோல்வி கண்டது. ஜஞ்சீர் படத்தில் அமிதாப், பிரான் நடித்த வேடங்களில் தமிழில் எம்ஜியாரே இரட்டை வேடத்தில் நடித்தார். படம் ஓடவில்லை. டான், தீவார் திரைப்படங்கள் ரஜினி நடிக்க பில்லா, தீ என்று வந்தன. குர்பானி, விடுதலையாக வெளிவந்தது. ரஜினி, சிவாஜி இருந்தும் வெற்றி பெறவில்லை. பாலாஜி நீண்ட நாட்களாக ஷோலேவை தமிழில் எடுக்கவேண்டுமென்ற கனவில் இருந்தார். நல்லவேளை எடுக்கவில்லை. தப்பித்தார். ஆனாலும் மிஸ்டர் இந்தியா என்ற வெற்றி பெற்ற படத்தை தமிழில் பாக்-யராஜ் நடிக்க 'ரத்தத்தின் ரத்தமே' என்ற பெயரில் எடுத்து, தன் சாம்ராஜ்யத்தையே மரணப்படுக்கைக்கு எடுத்துச் சென்றார்.

இந்த மொழி மாற்றுப்படங்களின் அலையில் கலைஞர் கருணாநிதி கூட தப்பிக்கவில்லை. அவர்கள் குடும்ப நிறுவனங்கள் தயாரித்த பல மலையாள மூல தமிழாக்கப் படங்களுக்கு அவர் வசனம் எழுதியிருக்கிறார். பாசப்பறவைகள், பாலைவன ரோஜாக்கள் (மலையாள வார்த்தா), நியாயத் தராசு (பஞ்சாக்னி) போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கவை. பஞ்சாக்னி திரைப்படம், மலையாள எழுத்தாளரும் திரைக்கதை ஆசிரியருமான எம்.டி. வாசுதேவன் எழுதியது. பிரபல நக்சலைட் போராளியான அஜிதா வாழ்க்கையை தழுவி எடுக்கப்பட்ட படம். தமிழ்நாட்டவர்க்கு அந்த பிரச்சினைகளின் வீரியம் தெரியாது என்பதால் படம் யாரையும் தொடவில்லை.

கலைஞர் மறைந்தாலும் அவர் பேரனான உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஆவதற்கு முன் நடித்த பல திரைப்படங்கள் வேற்று மொழிப்படங்களின் தமிழ் மறு ஆக்கங்கள்தான் என்பதுதான் புத்தம் புதிய செய்தி.



jeeva@thaiveedu.com



# நூற்றாண்டு காணும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

## - மா. கணபதிப்பிள்ளை -

ஆங்கிலேயக் கல்வி, அரச அனுசரணையுடன் மிகச் சிறப்பாக வளர்ந்த அக்காலத்தில், சைவக் குழந்தைகளின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்டதே சைவ வித்தியாவிருத்திச் சங்கம். சைவ மறுமலர்ச்சிக்காக ஆறுமுக நாவலரால் முன்னெடுக்கப்பட்ட, சைவக் கல்வி, கலாசாரம், மற்றும் சைவப் பாரம்பரியங்களைப் பேணல் போன்ற நடவடிக்கைகள் அவரின் இறப்பின் பின் பாரிய பின்னடைவைக் கண்டிருந்த நிலையில், அப்பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டது 'சைவ வித்தியா விருத்திச் சங்கம்'. மரபுவழிக் கல்வி முறைமைகளை மறுதலித்ததால் ஏற்பட்ட தாக்கம்தான் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றமென்பவர்கள் உண்டு. இந்தச் சங்கம் சைவக் கல்விக்கு ஆற்றிய பங்கு முதன்மையானதும், சமூகம் தழுவிய குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியதுமாகும்.

இச்சங்கம் 1923-ல் தான் பெயரளவில் உருவாகியது. ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்குள் அது பாரிய வெற்றிபெற்ற நிறுவனமாக வளர்ச்சி கண்டது.

இச்சங்கத்தைப் பற்றியும், இலங்கைக் கல்வி முறைமையில் அதன் தாக்கம் பற்றியும், யாழ்ப்பாணக் கல்விவிருத்தியில் அச்சங்கம் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் எம்மிடம் போதிய ஆய்வுகள் இல்லை என்பதை முதலில் நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

சைவசமயம் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்த காலத்தில் 1923-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28-ம் திகதி யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் திரு. சேர். பொன். இராமநாதன், திரு. எஸ். இராசரத்தினம், திரு. விஜயரட்ணம், திரு.- எம்.எஸ். இராசரத்தினம் ஆகியோரால் கலந்தாலோசிக்கப்பட்டு சமகாலப் பாடசாலைகளை வலுப்படுத்தல் மற்றும் புதிய பாடசாலைகளைத் தோற்றுவித்தல் என்கின்ற பிரதான இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் எனச் சிந்தித்தனர். இந்த இரு நோக்கங்களை அடிப்படையாக வைத்து நவம்பர் 10, 1923 அன்று முக்கியமான கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திலேயே 'சைவ வித்தியா விருத்திச் சங்கம்' அமைக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில்தான் பொதுமக்களுக்கான சைவ வித்தியா விருத்திச் சங்கம் டிசம்பர் 09, 1923 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இலங்கையின் சைவமதக் கல்விக்கான மிகப்பெரிய அமைப்பாக இற்றைவரை போற்றப்படுகிறது. இதன் முதலாவது தலைவராகவும், முகாமையாளராகவும் திரு. சேர். பொன். இராமநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சைவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இரண்டு பாடசாலைகளை நிறுவியிருந்தார். பெண்கள் பாடசாலையான இராமநாதன் பெண்கள் கல்லூரி இன்றும் யாழ்ப்பாணத்தின் முக்கிய கல்லூரிகளிலொன்றாக விளங்கிவருகிறது. ஆண்கள் பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரி 1970-களின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஒரு பகுதியாக் கப்பட்டது.

இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்கு 1927-ம் ஆண்டு திரு. டபிள்யூ. துரைசுவாமி அவர்களும், 1928-லிருந்து 1930 வரை திரு. சிவபாதசுந்தரம் அவர்களும் தலைவராயிருந்து பெருஞ் சேவையாற்றினார்கள். 1928-இலிருந்து திரு. எஸ். இராசரத்தினம் (இந்துபோர்ட் இராசரத்தினம்) அவர்களே அதன் முகாமையாளராகவிருந்து அரும்பணியாற்றினார்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பொது நோக்கங்கள்...

1) சைவப் பாடசாலைகள் தேவைப்படும் இடங்களில் அதை உருவாக்கலும், அவற்றைக் கொண்டு நடத்துதலும்.
2) சம காலத்திலுள்ள பாடசாலைகளைப் பொறுப்பெடுத்தலும், முகாமை செய்தலும்.
3) தேவைப்படுமிடத்துச் சமகாலத்தில் இயங்கும் பாடசாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கல்.
4) சைவப் பிள்ளைகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கி, சைவக் கல்வியை மேம்படுத்தல்.
5) தமிழ், இலக்கியம், சங்கீதம், நாடகம் என்பவற்றைப் படிக்க




ஊக்குவித்தல்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பித்த பாடசாலை..

| ஆண்டு | பாடசாலை | மாணவர் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 1923 | 1 | 150 | |
| 1924 | 22 | 2250 | |
| 1925 | 32 | 4000 | |
| 1926 | 45 | 5000 | |
| 1932 | 61 | 8440 | 320 |
| 1933 | 63 | 9815 | 348 |
| 1934 | 67 | 10500 | 406 |
| 1938 | 93 | 14885 | 465 |
| 1940 | 100 | 16000 | 500 |
| 1944 | 116 | 18000 | 555 |
| 1948 | 118 | 18500 | 650 |
| 1958 | 187 | 35000 | 1100 |

என்று அது பெருவளர்ச்சி கண்டது.

இந்த அடிப்படையில் நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, எழுவைத்தீவு, காரைநகர், வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, பளை, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, பதுளை, நாவலப்பிட்டி, கண்டி, புத்தளம், திக்வெல ஆகிய பல இடங்களில் அப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. ஆரம்பப் பாடசாலைகள், சைவ ஆசிரியர் கலாசாலை, சைவப் பிள்ளைகளுக்கான விடுதிகள் என்பவை அவர்கள் பணிகளுள் முக்கியமானவை. கல்வியில் கிறிஸ்த்தவ மத நிறுவனங்களின் வலைப்பின்னலைப் பின்பற்றி நற்கல்வியையும், சைவசமயப் பற்றை ஊக்குவித்து நல்லொழுக்கங்களைப் பேணுகிற நிறுவனமாக இது விளங்கியது.

***‘அன்புக்கும் பரிவிற்கும் எமதில்லம்***
***ஆதரவற்ற சிறுவருக்கும் எமதில்லம்***
***பண்புக்கும் ஒழுங்குக்கும் எமதில்லம் - எமைப்***
***பாலித்து நிறைவாழ்வு தருமில்லம்***

***கலைக் கல்வி தொழில் யாவும் பயில் கோயில் - எமைக்***
***கண்காணித் துருவாக்கும் திருக்கோயில்***
***சிலையாக நிற்கின்ற மூதாதை - அந்தத்***
***தெய்வீக மனிதர் நம் வழிகாட்டி’***

என்று பிற்காலத்தில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் சைவ வித்தியாவிருத்திச் சங்கக் கீதம் பாடிவைத்தார்.

அத்தகு துணிவோடும், இயங்குதிறனோடும், சைவக் கல்வியையும், கலாசாரத்தையும் முன்னெடுப்பதில் மாபெரும் வெற்றிபெற்ற நிறுவனமாக இது இன்றளவும் விளங்குகின்றது. இவ்வாறான பல்நோக்குக் கல்வி நிறுவனம் இதற்குப்பின் வேறொன்று இலங்கையில் தோற்றம் பெற்ற வரலாறில்லை.

டிசம்பர் 09, 2023 அன்றுடன் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது.

அரசாங்கம் பாடசாலைகளை அரசமயப்படுத்தியபோது மிக வினைத் திறன்மிக்க 187 பாடசாலைகளையும், 35,000 மாணவர்களையும், 1,100 பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் விரிவுரையாற்றிய திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையையும் அரசிடம் கையளித்தவர்கள் நம்முன்னோர் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.



kanapathipillai.maa@thaiveedu.com



# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

## மலையகத்துக்குச் செழிப்புமிக்க கவிதைப் பாரம்பரியம் உண்டு

**– மல்லியப்புசந்தி திலகர்**

கிழக்கினைப் போன்றே மலையகக் கவிதைகளுக்கும் தனித்துவம் இருக்கிறது - அனார்


மலையகத்துக்குச் செழிப்புமிக்க கவிதைப் பாரம்பரியம் உண்டு - ஔவை விக்னேஸ்வரன்

மலையகக் கவிதைப் பாரம்பரியத்துள் மலையகம் சாராத கவிஞர்கள் மலையகம் பற்றிப் பாடியுள்ளமையையும் அவதானிக்கத்தக்கது. 1965-ல் வெளிவந்த குறிஞ்சிப்பூத் தொகுதியில் அத்தகைய பலரது கவிதைகள் இடம்பெற்றிருப்பது ஏலவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் கவிஞர் நாவண்ணன் பற்றிக் குறிப்பிடும் தெளிவத்தை ஜோசப் அவர்கள்: கவிஞர் நாவண்ணன் ‘கதை, கண்ணீர், கவிதை’ எனும் தலைப்பில் ஒரு கவிதை நூலை எழுதியுள்ளார். மலையக மக்களின் கதை, அவர் மழையெனப் பொழிந்த கண்ணீர், என் கலையகத்தெழுந்த கவிதை எனும் தலைப்புக் குறியுடனான கவிதை நூலிது. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் நாடுகடத்தப்பட்ட மக்கள் தலைமன்னார் துறைமுகத்தில் ராமானுஜம் கப்பலின் மேற்தளத்தில் நின்று கண்ணீர் விடுவதையும் கரையில் நிற்கும் உறவினர்கள் கைகளை உயரத் தூக்கிக்காட்டிக் கதறி அழுவதையும் வெளிக்கொண்டுவரும் கவிதை நூல் இது எனக் குறிப்பிடுகின்றார். பதுளை, பண்டாரவளை, தலவாக்கலை என்று இந்த மக்களுடன் சில காலமே பழகிய உணர்வின் வெளிப்பாடே இது என்று கூறியுள்ளார் நாவண்ணன்.

இதுபோன்ற மலையக மக்களிடையே ஊடாடிய பிற பிரதேசக் கவிஞர்கள் கவிதைகளையும் கவிதைத் தொகுதிகளையும் தந்துள்ளனர். தான் மலையகப் பகுதிகளில் வைத்தியராகப் பணியாற்றிய காலத்தில் கவிஞர் ஜின்னாஹ் சரிபுத்தீன் எழுதிய ‘பனிமலையின் பூபாளம்’ கவிதைத் தொகுதி. தாமரைத்தீவானின் மலையகம் சார் கவிதைகள், முல்லையூரான் (1980) ‘உயரத்தால் உயர்ந்தவர்கள்’ கவிதைத் தொகுதி, நந்தலாவினர் தொகுத்தளித்த சாருமதியின் ‘அறியப்படாத மூங்கில் சோலை’ (2010) தொகுதியில் இடம்பெறும் மலையக மக்கள் சார்ந்த கவிதைகள், மாத்தளைப் பிரதேசத்திலிருந்து ஆரம்பத்தில் எழுதிய தவசஜிதரன் (இப்போது லண்டனில் வசிக்கிறார்) கவிதைகள் இங்கே குறிப்பிடத்தக்கன.


கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்ட களுத்துறை (மத்துகமையூர் ஜோதி), கண்டி (கனிவுமதி) இரத்தினபுரி (மாரிமுத்து சிவகுமார்) பதுளை (எஸ்.பி. பாலமுருகன், சிறுதுளி பிரபா) மாவட்டங்கள் போன்று கோகாலை மாவட்டத்திலிருந்து வந்த கவிதை வரவுகளுள் எட்டியாந்தோட்டைக் கருணாகரனின்




வரவு முக்கியமானது. 2012-ம் ஆண்டு எட்டியாந்தோட்டைக் கருணாகரன் எனும் பெயரில் ‘அவமானப்பட்டவனின் இரவு’ எனும் தொகுதியை வெளியிட்டுள்ளார். கேகாலை மாவட்டத்தில் ஏ.பி.வி. கோமஸ் ஏற்படுத்திய கவிதைத் தாக்கம் மலையகக் கவிதை வரலாற்றில் முக்கியமானது. அதனை அடுத்து கேகாலை மாவட்டத்திலிருந்து மலையகக் கவிதை இலக்கி

யத்திற்குக் கிடைத்த மிக முக்கிய அறுவடையாக 'அவமானப்பட்டவனின் இரவு' அமைகிறது. கிழக்கினைப் போன்றே மலையகக் கவிதைகளுக்கும் தனித்துவம் இருக்கிறது என்பதை கருணாகரனின் கவிதைகளின் ஊடேதான் தரிசிப்பதாக எழுதுகிறார் கிழக்கின் பெண்கவிஞர் 'சிகரம் தொட்ட பெண்மணி'-யான கவிஞர் அனார். 'அவமானப்பட்டவனின் இரவு' அந்த ஆண்டின் சிறந்த புதுமுகக் கவிதைநூலாகக் கொடகே தேசிய சாகித்ய விருதினைத் தனதாக்கிக் கொண்டது.

2011-ம் ஆண்டில் தமது மணவாழ்விலிணைந்த ஒரு தம்பதி




யர் தங்களது திருமண நிகழ்வில் ஒரு சிறு கவிதை நூலை வெளியிட்டிருந்தமை புதுவித முயற்சியாக அமைந்திருந்தது. தாரணி-இந்திரச்செல்வன் எனும் இத்தம்பதியின் 'சிறு கீற்று' எனும் தலைப்பில் இந்தக் கவிதை நூலைத் தந்திருந்தனர். இந்தக் கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருக்கும் கவிஞர் மஹாகவியின் மகளும் கவிஞருமான திருமதி. ஔவை விக்னேஸ்வரன் 'மலையகம் பல நல்ல கவிஞர்களைக் கண்ட பூமி. அதற்கென ஒரு செழிப்புமிக்க கவிதைப் பாரம்பரியம் உண்டு. அந்தப் பாரம்பரியத்தில் கால்பதித்து நின்று அதை உள்வாங்கி மேலெழுந்து தாரணியும் இந்திரசெல்வனும் சிகரம் தொடவேண்டும் என்று வாழ்த்துகிறேன் எனக் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியராகக் கடமையாற்றும் பபியான் ஒரு கவிதைத் தொகுப்பினைத் தந்துள்ளார். அவரது 'பருவதங்களில்...' எனும் கவிதை இவ்வாறு அமைகிறது.

***'தலைமுறைகளை***
***குத்தகைக்கு எடுத்திருந்ததாக***
***முழங்கிக் கொண்டிருந்த***
***தலைவன் தனக்கான***
***சவப்பெட்டியையும் சிலுவையையும்***
***வரித்துக்கொண்டான்..***

***பக்க வாத்தியங்களின்***
***ஊதுகுழல் கேட்டு***
***மூன்று திசைகளை***
***முழுதாகப் பிரித்து***
***மனம்போல உவந்தான்..***
***கொடிகளும் பதாதைகளும்***
***பிடித்தகரங்கள்***
***பகிரந்தளித்த துண்டுகளை***
***உண்டு களித்த லயக்குருவிகள்***
***கோஷமிடத் தவறவில்லை!***

***இப்படியே இன்னும்***
***நிலமற்ற வீடுகளில்***
***விலைகொடுத்து வாழவிளையும்***
***வாழ்க்கையுடன் பருவத மனுக்கள்...'***

- மகுடம் மலையக சிறப்பிதழ் - 2012

அண்மைக்காலமாக மலையக இலக்கியப் பரப்பில் பரபரப்புடன் இயங்கிவரும் பெருவிரல் கலை இலக்கிய இயக்கம் பல புதிய கவிஞர்களை அறிமுகம் செய்து வருகின்றது. சு. தவச்செல்வன், மு. கீர்த்தியன், சண்முகம் சிவகுமார், கிஷோகுமார், பெரியசாமி விக்னேஸ்வரன், நல்லையா சந்திரசேகர், நேரு கருணாகரன் போன்றோருடன் சிறுகதைகள் எழுதுவதில் அதிக அக்கறைகாட்டும் சிவனு மனோகரனும் கவிதைகளை எழுதி வருகிறார். இவரது 'மலைகளின் பாடல்' எனும் தொகுதி 2022-ம் ஆண்டு வெளிவந்ததுடன் கொடகே தேசிய சாகித்ய விருதினையும் பெற்றுக்கொண்டது. சினிமா விமர்சனம், சினிமா இயக்கம் எனும் சினிமா சார்ந்து அதிக கவனத்துடன் இயங்கும் மாரி மகேந்திரன் அவ்வப்போது புதுக்கவிதைகளை எழுதி வருபவர். அக சலனம் எனும் தொகுதியையும் வெளிக்கொணர்ந்துள்ளார். சுந்தர் நிதர்சன், மஹா, வசந்த தீபன், பிங்கராவ யுகநாதன், பா. சாருலதா, மு. ராம்கி, தக்சன், ரிசிபாரதி, ப. தனஞ்சயன், நிரோ ரூபன், வெ. ஹேமந்த்-குமார், குமரன் விஜி, இனியவன் காளிதாஸ், பிரான்சிஸ் திமேஷ், கலா புவன், திருஷா, தயானி, விஜேந்திரன், காளிமுத்து கருணாகரன், அனுசன் எனப் பல புதிய வரவுகள் மலையகக் கவிதைச் சூழலுக்குள் அண்மைக்காலமாகக் காலடியெடுத்து வைத்துள்ளனர். அனுசன் இரண்டு கவிதைத் தொகுப்புகளை அடுத்தடுத்து வெளிக்கொணர்ந்துள்ளார்.


மகுடம் மலையகச் சிறப்பிதழில் சண்முகம் சிவகுமார் எழுதியுள்ள கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது:

***'வியர்வை பூத்த பாடல்***
***வேரில் காத்திருக்கும் பூ***
***எழுந்து வருகையில்***
***வலிகளைத்தாங்க வேண்டும்***

*எதிர்பார்க்கும் வசந்தத்தின்*
*வாசனை நுகர*
*குறுகி வளர்த்த மரங்களின் முகங்கள்*
*எல்லா வேடங்களையும்*
*கற்றுதேர்ந்தவனின் நடிப்பாற்றலில் மீண்டும்*
*அரங்கத்திலிருந்து எத்தித் தள்ளப்படுகின்றது*
*ஆன்மாவின் ஈரம் துளிர்த்த*
*பொழுதுகளின் கைக்குள்*
*உழைப்பின் வெகுமதி தரப்படவில்லை*
*தாளில் உறைந்திருக்கும்*
*உப்பின் வீரியம்*
*மறைக்கப்பட்டிருக்கிறது.*

*ஆனாலும் அவ்வப்போது*
*ஓர் மந்திரக்குரல் எழத்தான் செய்கிறது*
*பூட்டப்பட்ட உதடுகளின் ஒப்பனை*
*கலைத்தெறிந்து*
*வியர்வையில் பூக்கும் பாடலின்*
*பூவை*
*மண்ணிற்காக உழைத்த உனக்கு*
*சமர்ப்பிக்க..'*

மலையக இலக்கியத்தின் புதிய கவிதை வரவுகளுக்குள் இப்




படியான காத்திரமான கவிதைகள் தலைகாட்டத் தொடங்கி யுள்ளன.

மகுடம் மலையக சிறப்பிதழில் இடம்பெறும் மு. கீர்த்தியனின் 'மௌனம் அவிழ்கின்றபோது' எனும் கவிதையில்...

*'இரவினின்றும் விடுபடாத*
*ஆயிரமாயிரம் பகலிலொன்று*
*சுலித்தபடி புலர்கிறது*
*மலைகளை உரித்து*
*தேயிலையின் விதைகளைத் தூவிய*
*என் மக்களின்*
*அவிழாத மௌனத்தோடு*
*மலைகளை ஆளும்*
*எங்களின் எஜமானர்கள்*
*அதிகாலை தேநீருக்காக*
*எம் குடிசைகள் மீது*
*தீ மூட்டுகின்றபோது*
*இன்னும்*
*தம்மினத்து மந்தைகளை*
*எங்களின் நிலமடியில்*
*வன்முறையின் சந்தங்களோடு*
*மேய்ச்சலிடுகின்றபோது..*

*நாய்களின் மொழியை*
*எங்களிடையே வீசுகின்ற போது*
*குடிசையின் தீ எம்மீது பரவும்*
*அக்கணம்*
*அதிகாரத்தின் உடுக்கொலியில்*
*மந்திரித்த நூல்கொண்டு*
*பூட்டிய விலங்குகளை*
*உடைத்தபடி*
*அடிமைகளின் விடுதலைக் குரல்களில்*
*உரசப்பட்ட தீக்குச்சிகளின்*
*நுனிபட்டு*
*பெரு வெடிப்போடு*
*அவிழும் எம் மௌனம்..'*

எனப் புதுக்கவிதையில் புரட்சி செய்கிறார்.

மலையகத்துக்கும் வெளியேயுமான வாசிப்புத் தேடல்களுடன் புதிய பரிமாணத்தில் கவிதைகளைப் படைக்கும் புது வரவு கள் மலையகத்தில் அடையாளம் காணப்பட்டுவருகின்றன. அத்தகைய புதுவரவுகள் ஆர்வமிகுதியில் மலையகப் பண் பாட்டுக்கு வெளியேயான விடயதானங்களில் தமது படைப்புக ளைத் தர விளைகின்றனரோ என்கின்ற அச்சம் அண்மைய காலங்களில் ஆய்வாளர்களிடையே நிலவுகின்றது. மலைய கத்தின் எரியும் பிரச்சினைகளாகப் பல பிரச்சினைகள் இருக்க அவற்றைவிடுத்துப் பொதுவெளியில் தமது படைப்பு களைத் தரமுயலும் ஒரு கலாசாரம் மலையகத்தைத் தொற் றிக்கொண்டுள்ளதாகக் கவலையுறுகிறார் ஆய்வாளரும் ஓய் வுநிலை விரிவுரையாளருமான வ. செல்வராஜா (லெனின் மதி-வானம் எழுதிய ஊற்றுகளும் ஓட்டங்களும் ஆய்வுரை - ஹட்-டன்) இத்தகையதொரு போக்கு இடம்பெறுவதை நாம் நம்-மைச் சுதாகரித்து உணர மறுப்பது ஒரு வரலாற்றுத் தவறாகி விடும் என எச்சரிக்கிறார் அவர்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com



# ஐ.நா. அவையில் முழங்கிய கிருஷ்ணா வைகுந்தவாசன்

## - வே. விவேகானந்தன்

ஈழத்தமிழரின் அரசியல் பிரச்சினையை முன்னிறுத்தி, உலக நாடுகளின் மிகப்பெரும் சபையான ஐக்கிய நாடுகளின் சபையில், முதன் முதலாகக் குரலெழுப்பிய பெருமைக்குரியவர் அமரர் கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள். இவர் தமிழும், இசையும், கலையும், செழித்தோங்கிய அளவெட்டி என்னும் ஊரில் 1920-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி பிறந்தார். இவரது தகப்பனார் கிருஷ்ணப்பிள்ளை அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயார் இலக்ஷ் மிப்பிள்ளை காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்டவர். எனவே இவர் தனது இளமைக்காலக் கல்வியை இரு ஊர்களிலுமுள்ள பாடசாலைகளில் மாறிமாறிக் கற்றார். உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொண்ட இவர் சட்டக்கல்வியையும் தொடர்ந்தார். அக்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கங்கள் வலுப்பெற்றிருந்தன. இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகிய இரு இனத்தவர்களும் தங்கள் தனித்துவ அடையாளங்களுடனும், பரஸ்பர மதிப்புடனும், வாழும்போது தான் அமைதி நிலவும் எனவும், அப்போதுதான் சமூக மாற்றமும், பொருளாதார வளர்ச்சியும், அரசியலில் ஸ்திரத் தன்மையும், ஏற்படும் எனவும் இடதுசாரிகள் எண்ணினர். அவ்வாறு சிந்தித்தவர்களுள் வைகுந்தவாசனும் ஒருவர். அதற்காக மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். அதன் பயனாக 1947-ம் ஆண்டு 25,000 அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கைப் பொதுசேவை தொழிற் சங்கத்தின் (General Public Service Trade Union of Ceylon) செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் ஒரு இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட, அகில இலங்கை பொதுப்பணித்துறைத் தொழிற்சங்கங்களின், இணைச் செயலாளராக விளங்கி, வழிநடத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பதவிக்கு வந்த டி. எஸ். சேன-நாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொழிற்சங்கங்களைப் பலவீனப்படுத்துவதையும், தனியார் துறையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. வைகுந்தவாசனின் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்த அரசாங்கம் அவரைப் பழிவாங்கும் நோக்குடன் 1950-ம் ஆண்டு அரசசேவையில் இருந்தும் பதவி நீக்கம் செய்தது.

தொழிற்சங்க செயற்பாடுகளில் முழுநேரமாக ஈடுபட எண்ணிய வைகுந்தவாசன், மருதானையில் அச்சுக் கூடம் ஒன்றை நிறுவினார். 'People's Voice' என்னும் ஆங்கிலப் பத்திரிகையை 1951-ம் ஆண்டு ஆரம்பித்து, அதன் ஆசிரியராகவும், உரிமையாளராகவும் இருந்தார். அப்பத்திரிகையில் பீற்றர் கெனமன், கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க, ரி.பி. இலங்கரத்னா, பிலிப் குணவர்த்தனா, எஸ்.டி. பண்டாரநாயக்கா, செனட்டர் நடேசன், பி. கந்தையா, என். சண்முகதாசன், எம். கார்த்திகேயன் போன்றவர்கள் ஆக்கங்களைப் படைத்து, மக்கள் மத்தியில் முற்போக்குச் சிந்தனையைப் பரப்பினர். பத்திரிகைத்துறை அனுபவமில்லாத வைகுந்தவாசனுக்கு அவரது மனைவியார் நாகேஸ்வரி பக்கத்துணையாக இருந்து, அச்சுக் கோர்ப்பது, பத்திரிகை மடிப்பது, அடுக்குவது, போன்ற சகல வேலைகளையும் செய்து ஊக்கமளித்தார். சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் என அழைக்கப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் அக்கால அரசியல் அவலங்களை எடுத்துக்காட்டும் கருத்தோவியங்களை வரைந்து அனுப்புவார். அவை பத்திரிகையின் முன் பக்கத்தை அலங்கரித்தன.

1953-ம் ஆண்டு வைகுந்தவாசன் அவர்கள், சீனா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அந்நாடுகளில் அரசியல் தலைவர்களைச் சந்தித்ததோடு, பல மகாநாடுகளிலும் கலந்து கொண்டார். 1955-ஆம் ஆண்டு சட்டத்துறையில் மேற்படிப்பை மேற்கொள்வதற்காகப் பிரித்தானியாவுக்குச் சென்றார். அங்கு சட்டம் பயிலும் அதேவேளை, லண்டனில் பிரித்தானியக் கவுன்சிலின் கடல்கடந்த மாணவர்களுக்கான நிலையத்தில் (British Council Overseas students Centre) வாராந்தம் நடைபெறும் கலந்துரையாடல்களிலும், விவாதங்களிலும் தவறாது கலந்து

கொண்டு, அனைவரது உள்ளங்களிலும் இடம் பிடித்தார். சட்டத்துறைப் படிப்பை (Bar-At-Law) நிறைவு செய்து இலங்கை திரும்பிய அவர், ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக இலங்கை உயர் நீதிமன்ற வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். 1965-ம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெற்றபோது, காங்கேசன்துறைத் தொகுதியில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு எதிராக இடதுசாரி ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டார். 1966-ம் ஆண்டு இடதுசாரிக் கட்சிகள் இருமொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டதால், இடதுசாரிக் கட்சியிலிருந்தும் விலகி, தமிழின விடுதலைக்காகச் செயற்படத் தொடங்கினார். இலங்கை நீதிமன்றங்களிலும், தனிச் சிங்கள அரசகருமமொழி தொடர்பாக, வெறுப்படைந்த வைகுந்தவாசன் 1971-ம் ஆண்டு சாம்பியா நாட்டிற்குச் சென்றார்.

சாம்பியாவிலே நீதித்துறையில் மாவட்ட நீதிபதியாகப் (Senior Resident Magistrate) பதவியேற்றார். சாம்பியா நாட்டின் முதலாவது ஆசிய நாட்டைச் சேர்ந்த நீதிபதி என்னும் பெருமையும் இவரைச் சாரும். இங்கு உயர் நீதிமன்றப் பதிவாளராகவும் (Registrar High Court) பணியாற்றியுள்ளார். 1973, 1975 ஆகிய ஆண்டுகளில் பொதுநலவாய நீதிபதிகளின் மகாநாடுகளில், சாம்பியா நாட்டின் சார்பில் கலந்து கொண்டார். காலப்போக்கில் சாம்பியா நாட்டிலும் சாம்பிய நாட்டு மக்களே உயர் பதவிகளை வகிக்கவேண்டும், என்ற அதிபர் கவுண்டா அவர்களின் (Zambianization) கொள்கை காரணமாக, அங்கிருந்து வெளியேறி 1977-ம் ஆண்டு பிரித்தானியாவில் குடியேறினார். அங்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினது இலண்டன் கிளையின் செயலாளராகவும் பணிபுரிந்தார். அத்துடன் அங்கு குடியேறிய காலம் முதல், இலங்கை அரசின் இனவாதக் கொள்கைகளையும், தமிழர்கள் இனக்கலவரங்கள் மூலம் கொல்லப்படுவதனையும், சர்வதேச நாடுகளின் கவனத்துக்குப் பரப்புரை செல்வதில் குறியாக இருந்து, அதனைச் செயற்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினார்.

1978-ம் ஆண்டு பிரித்தானியாவில் பாரிஸ்டராகப் பணியாற்றிய போது, நியூயோர்க் நகரில் நடைபெற்ற, அமெரிக்க வழக்குரைஞர்கள் கழகத்தின் மகாநாட்டில், பிரித்தானியாவின் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டார், அதே நாட்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது 150 நாடுகளைச் சேர்ந்த 2000 பேராளர்கள் வரையில் கலந்துகொண்டிருந்தனர். அவர்களுள் உலக நாடுகளின் தலைவர்கள், பிரதமர்கள் வெளிநாட்டு அமைச்சர்கள் எனப் பலரும் இருந்தனர். ஐக்கிய நாடுகளின் இந்தியக் குழுவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் வைகுந்தவாசனுக்குக் கிடைத்தது. அதனைப் பயன்படுத்தி, அப்போது நியூயோர்க்கில் இருந்த இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஐ.நா. சபையில் உரையாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி செய்தார். ஆனால் சி.வி. நரசிம்மன் உள்ளடங்கிய இந்தியக் குழு அம்முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான, யாசீர் அரபாத் எந்தவகையான அதிகாரபூர்வ அனுமதியும் பெறாத போதிலும், ஐ.நா. சபையில், பாலஸ்தீன மக்கள் சார்பில் உரையாற்ற அனுமதிக்கப்பட்டார். இந்த முரண்பாடு வைகுந்தவாசனைப் பெரிதும் விசனப்படுத்தியது. எனவே அவர் நேரடியாகக் களத்தில் இறங்க முடிவு செய்தார். அச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த எண்ணிய வைகுந்தவாசன், அடிக்கடி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டங்களுக்குச் சென்று, கூட்ட நடைமுறைகளை நன்கு அவதானித்து வந்தார். அங்கு பங்குபற்றும் பேராளர்களின் நடை, உடை, பாவனைகளையும் அறிந்துகொண்டார்.


1978-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5-ம் திகதி நண்பகல் சைப்பிரஸ் நாட்டுத் தலைவரினதும், அதனையடுத்து சுரினாம் நாட்டுப் பிரதமரினதும் உரைகளைத் தொடர்ந்து, மதிய



இடைவேளைக்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு அமைச்சரின் உரை அட்டவணைப் படுத்தப்பட்டிருந்தது. அன்றைய தினம் பொதுச் சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் கொலம்பியா நாட்டைச் சேர்ந்த 'இன்டேல்சியோ லிவியானோ' என்பவராவர். அவரும் பொதுச் சபையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பேராளர்களும் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் யாரென அடையாளம் கண்டிருக்கவில்லை. இலங்கை வெளிநாட்டு அமைச்சர் உரையாற்றுவார், என அறிவிக்கப்பட்டதும், உடனடியாக பேராளர் வரிசையில் இருந்து எழுந்த வைகுந்தவாசன், விரைவாக மேடைக்குச் சென்றார். அவரை இலங்கை வெளிநாட்டு அமைச்சர் என நினைத்த அவைத் தலைவரும் சிரம் தாழ்த்தி வரவேற்றார்.

உடனே வைகுந்தவாசன் 'எனது பெயர் கிருஷ்ணா. ஸ்ரீலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே இருக்கும், 25 இலட்சம்

மக்களைக் கொண்ட பலம் பொருந்திய, தமிழீழத்திலிருந்து வந்திருக்கிறேன். தமிழீழம் போன்ற அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள சிறிய தேசங்கள், உலகின் அதியுயர்ந்த மன்றமான இந்தச் சபையில், தமது முறையீடுகளை வைக்க முடியாதென்றால் நாங்கள் எங்கேதான் போவது ? தயவுசெய்து ஒரே




ஒரு நிமிடம் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள். ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது இனக்கொலைக் கொள்கையைத் தொடர்கிறது' எனக் கூறியதுடன் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது. இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் பேராளர் வரிசையில் இருந்து எழுந்து வருவதற்குள் இவை அனைத்தும் நடந்து முடிந்தன.

வைகுந்தவாசனைப் பாதுகாப்பு அதிகாரிகள் மண்டபத்திலிருந்தும் வெளியேற்றினர். அவரைச் சூழ்ந்த தொலைகாட்சி, மற்றும் பத்திரிகை நிருபர்கள் தமிழீழம் பற்றி மேலும் அறிய, நேர்காணல் செய்தனர். நியூயோர்க் நகரிலிருந்து வெளிவரும் 'India Abroad' என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் பி.பி. கூப்பர் விரிவான முறையில் நேர்காணல் செய்து, 1978 - ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20-ம் திகதி பத்திரிகையில் பிரசுரித்திருந்தார். இலங்கை உட்பட பல ஊடகவியலாளர்கள் தமது பத்திரிகைகளில் வைகுந்தவாசனின் நேர்காணலை வெளியிட்டனர். இலண்டன் பி.பி.சி வானொலி உட்பட பன்னாட்டு வானொலிகளும் தொலைக்காட்சிகளும் இந்நிகழ்வை வெளிக்கொணர்ந்தன.

வைகுந்தவாசன் ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவும், அரசியல் விடுதலைக்காகவும், தொடர்ந்தும் செயற்பட்டு வந்தார். 1979-ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஒரு வருடத்துள் பயங்கரவாதத்தை ஒழிப்பேன் எனக் கூறித், தனது மருமகனை வடக்குக்கு அனுப்பிய பின்னர், இடம்பெற்ற, இளைஞர்களின் படுகொலைகள் குறித்து அறிக்கையினைச் சமர்ப்பித்திருந்தார். 1980-ம் ஆண்டு, நாடு கடந்த தமிழீழ அரசை நிறுவும் முயற்சிக்கு ஆதரவு தேடி, இந்தியாவுக்குச் சென்றபோது, 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் திகதி, பிரித்தானியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இச்சம்பவமும் ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்திருந்தன.

இவ்வாறு வைகுந்தவாசன் ஒரு தனி மனிதராக, ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியன. அரச உத்தியோகஸ்தராக, பத்திரிகையாளராக, பேச்சாளராக, எழுத்தாளராக, சட்டத்தரணியாக, நீதிபதியாகவெனப் பன்முக ஆளுமை கொண்டவர். ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ், தமிழீழ மக்களும் ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் சபையில் தமிழீழக் குரல், இந்திய - தமிழீழ சம்மேளனம், ஐ.நா-வில் தமிழன் - என் முதல் முழக்கம், மக்கள் குரல் -ஆங்கில வாரப் பத்திரிகையில் வெளிவந்த தலையங்கங்கள், நான் கண்ட நவசீனா. ஆகிய நூல்களை வெளியிட்டு நூலாசிரியராகவும் பிரகாசித்தவர். இவரது பணிகளைப் பாராட்டி இலண்டன் ஈஸ்ட் ஹாம் தமிழர் முன்னேற்றக் கழகம், பிரித்தானிய அளவெட்டி மக்கள் மன்றம் போன்ற அமைப்புகள் கௌரவித்துள்ளன. இவரது வாழ்க்கை வரலாற்றை லண்டன் முரசுப் பத்திரிகையின் ஆசிரியர் சதானந்தன் அவர்கள் 'Lawyer who Rocked the United Nations' என்னும் பெயரில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தமிழீழமே, என்ற ஒரே குறிக்கோளுடன் வாழ்ந்து, அதற்காகவே துடிப்புடன் செயற்பட்டு வந்த வைகுந்தவாசன் அவர்கள், 2005-ம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதி இலண்டனில் அமரத்துவம் அடைந்தார்.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்த ஈழத் தமிழர் அரசியல் பிரச்சினை இன்று வரை தொடர்கதையாக உள்ளது.

என்று தணியும் இந்த சுதந்திர தாகம் ?.



vivekananthan.v@thaiveedu.com

# அந்தோனியோ நெக்ரி : காலம் கவிழ்த்த சிந்தனையாளன்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புக்கள்:**

கடந்த டிசம்பர் மாதம் 16-ம் திகதி நன்கறியப்பட்ட இத்தாலியத் தத்துவவாதியும் சிந்தனையாளருமாகிய அந்தோனியோ நெக்ரி (Antonio Negri) தனது 90-வது வயதில் காலமானார். ஐரோப்பிய மார்க்சியச் சிந்தனைப் பள்ளியின் தவிர்க்கவியலாத இடம் நெக்ரியினுடையது. ஒரு தத்துவவாதிக்கு மேலாக களத்தில் பணியாற்றும் ஒருவராகவும் அவர் இருந்தார். அதே வேளை 1960-களின் இறுதிப் பகுதியில் வேகங்கொண்ட சோவியத் யூனியனின் சீரழிவு எவ்வாறு ஐரோப்பிய இடதுசாரிச் சிந்தனைகளைப் பாதித்தது என்பதற்கு நல்ல உதாரணம் நெக்ரி. அவரது சிந்தனைகளை ஆழ்ந்து நோக்கும் போது அதைப் புரிந்து கொள்ளல் இலகு. தத்துவம், அரசியல், சமூக இயக்கங்கள் பற்றிய விரிவான விவாதங்களைத் தனது படைப்புகளினூடு உருவாக்கிய நெக்ரி உலகளாவிய பாராட்டையும் விமர்சனத்தையும் பெற்றார். நெக்ரி பதுவா மற்றும் பாரிஸ் பல்கலைக்கழகங்களில் தத்துவம் மற்றும் அரசியல் அறிவியல் பேராசிரியராகக் கற்பித்தார். இருப்பினும், அவர் கல்வித்துறைக்கு அப்பால் ஒரு அறிவார்ந்த வாழ்க்கையை கட்டியெழுப்ப முயன்றார். பல்வேறு உலகளாவிய போராட்டங்களுக்கு தனது ஆதரவை வழங்கினார்.

தத்துவத்தில் அவரது முக்கிய பங்களிப்பு 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவஞானி பரூச் ஸ்பினோசாவின் தத்துவங்களை மீள்வடிவமைத்து அறிமுகப்படுத்தியமையாகும். பிரான்சில் செல்வாக்குப் பெற்ற நவ-ஸ்பினோசிச இயக்கத்தில், அல்து-சர் மற்றும் டெலூஸ் போன்ற செல்வாக்கு மிக்க சிந்தனையாளர்களுடன் பணியாற்றியவர் நெக்ரி. இவரது நூலாக 'எமது காலத்திற்கு ஸ்பினோசா: அரசியலும் பின்நவீனத்துவம்' (Spinoza for Our Time: Politics and Postmodernity) ஸ்பி-னோசா என்ற தத்துவஞானியின் விரிவான வாதங்களின் நேரடியான விளக்கத்தையும் அவரது தற்போதைய பொருத்தத்திற்கான ஒரு வற்புறுத்தக்கூடிய வாதத்தையும் வழங்குகிறது. சமகால உலகளாவிய பிரச்சினைகளுக்கு ஸ்பினோசா-வின் சிந்தனைகளின் பயன்பாட்டின் சாத்தியம், அரசியல், தத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் அவரின் பங்களிப்பு ஆகியவற்றை விரிவாக அந்நூல் பேசுகிறது.

நெக்ரி ஸ்பினோசாவை ஒரு முன்னோடி பின்நவீனத்துவவாதி என்று வாதிடுகிறார். அவரின் கோட்பாடுகளை அரசியல் தத்துவத்தின் சமீபத்திய போக்குகளுடன் இணைக்கிறார், குறிப்பாக கார்ல் ஷ்மிட்டின் 'அரசியல் இறையியல்' மற்றும் தத்துவத்தின் வரலாறு ஆகியவற்றோடு ஒப்புநோக்குகிறார். ஸ்பி-னோசா ஒரு 'தீவிர அறிவொளி காலத்திற்குச்' சொந்தமானவார் என்று வாதிடுவதன் மூலம் ஸ்பினோசாவை ஒரு சமகால புரட்சிகர அறிவுஜீவியாக நிலைநிறுத்த முனைந்தார். இதன் மூலம் ஸ்பினோசாவிற்கு எதிராக ஜாக் டெரிடா, அலைன் பாடியோ மற்றும் ஜியோர்ஜியோ அகம்பென் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை நெக்ரி திறம்படத் தோற்கடித்தார்.

1933-ல் இத்தாலியின் பாதுவாவில் பிறந்த நெக்ரியின் தந்தையார் ஒரு கம்யூனிஸ்ட் ஆவார், இதனால் சிறுவயது முதலே கம்யூனிசத்தின் மீது ஈர்ப்பு இருந்தது. 1956-ல் இத்தாலிய சோசலிசக் கட்சியில் இணைந்து 1963 வரை அதில் பங்களித்தார். அவர் கல்விகற்ற பாதுவா பல்கலைக்கழகத்திலேயே பேராசிரியராகப் பணிக்கு அமர்த்தப்பட்டார். 1960-களில் கட்சிகளுக்கு வெளியே அறிவுப்புலத்தளத்தில் மார்க்சியத்தை இத்தாலியில் மீட்டெடுப்பதற்காகத் தொடங்கிய பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இணைந்தார். 1969-ம் ஆண்டு பிரான்கோ பிபரானோ என்ற பௌதீகவியல் பேராசிரியருடன் இணைந்து தொழிலாளருக்கு அதிகாரம் (Potere Operaio) என்ற அமைப்பைத் தொடங்கினர். தீவிர இடதுசாரி அமைப்பாக அறியப்பட்ட இவ்வியக்கம் தொழிற்சாலைகள், குறிப்பாக தொழில்துறை வடக்கில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் செல்வாக்குடையதானது. செய்தித்தாள்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை வெளியிடுவதை முக்கிய செயற்பாடாகக் கொண்டியங்கியது. தொழிலாளர்களின் அன்றாட வாழ்வில் மார்க்சியக் கோட்பாட்டின் பயன்பாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் இவ்வியக்கம் அடிப்படையாகக் கொள்ள முயன்றது.

1973-ல் இவ்வியக்கம் முடிவுக்கு வந்தாலும் இதன் வழி கோட்பாட்டுருவாக்கம் பெற்ற தொழிலாளித்துவம் (operaismo) என்ற சிந்தனை செல்வாக்குடையதாக மாறியது. இது காலப்போக்கில் நெக்ரியால் தத்துவார்த்த ரீதியாக விளக்கங் கொடுக்கப்பட்ட தன்னாட்சித் தத்துவமாக (Autonomism) மாறியது. இன்றும் இத்தத்துவத்தின் முக்கியமான கோட்பாட்டாளராக அந்தோனியோ நெக்ரி அறியப்படுகிறார்.

1970-களின் பிற்பகுதியில், இடதுசாரி போர்க் குணமிக்க நட



வடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளை நெக்ரி எதிர்கொண்டார், ஆனால் தொடர்பில்லாத குற்றச்சாட்டுகளுக்காக 1984-ல் தண்டிக்கப்பட்டார். சிறையில் இருந்த அவர், பின்னர் பிரான்சில் தஞ்சம் புகுந்தார். பாரிஸில், அவர் அலைன் பாடியூ மற்றும் கில்லஸ் டெலூஸ் போன்ற அறிவுஜீவிகளுடன் ஒத்துழைத்தார். நெக்ரி தானாக முன்வந்து 1997-இல் இத்தாலிக்குத் திரும்பி தனது 13 ஆண்டுகால சிறை தண்டனையை அனுபவிக்கத் தொடங்கினார். தண்டனை குறைக்கப்பட்டு 2003-ல் விடுவிக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது மைக்கல் ஹார்ட் உடன் இணைந்து எழுதிய பேரரசு என்ற புத்தகம் மிகுந்த செல்வாக்குள்ளதாய் மாறியது. இது நெக்ரி மற்றும் ஹார்ட் ஆகியோரை சமூகக் கோட்பாட்டின் முன்னணி நிலைக்குத் தள்ளியது, 'பேரரசு' என்ற கருத்தை அறிமுகப்படுத்தியது. பேரரசு என்பது தேசிய அரசுகளை விஞ்சும் இறையாண்மையின் உலகளாவிய வடிவமாகும் என்று வாதிட்டது. அதிவலது பற்றிய கவலைகளுக்கு மத்தியில், நெக்ரி மற்றும் ஹார்ட்டின் முன்னோக்கு, உலகமயமாக்கலில் இருந்து உருவாகும் கூட்டம் என்று அழைக்கப்படும் ஒரு புதிய வகுப்பை வலியுறுத்தியது. இந்நூலின் புகழ் எத்தகையது எனில் சில முக்கியமான மேற்குலகச் சிந்தனையாளர்கள் பேரரசை கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் நவீன மறுவிளக்கம் என்று புகழ்ந்தனர்.

தன்னை ஒரு மார்க்கசியராக அறிவித்துக் கொண்டாலும் நெக்ரியின் சிந்தனைகளில் தொடர்ச்சியான ஊசலாட்டம் இருந்தது. அவரது சிந்தனைகள் பல தளங்களில் பின்நவீனத்துவச் சிந்தனைகளாக இருந்தன. மார்க்சியத்தின் அடிப்படைகள் பலவற்றைத் தவறான விளக்கங்களின் ஊடு விளக்கியதனூடாக பின்மார்க்சியராகவும் அவர் அறியப்பட்டார். இவரது சிந்தனைகளை ஆழமாக நோக்குமிடத்து அது புலப்படும்.

### பேரரசு என்ற கருத்துருவாக்கமும் கோட்பாடும்:

நெக்ரியின் முதன்மையான படைப்பாகக் கருதப்படும் 'பேரரசு' குறித்து நெக்ரியும் ஹார்ட்டும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். 2000-ம் ஆண்டு வெளியான பேரரசு நூலுக்கு எழுதிய முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

'பேரரசு நம் கண் முன்னே உருப்பெறுகிறது. கடந்த பல தசாப்தங்களாக, காலனித்துவ ஆட்சிகள் தூக்கியெறியப்பட்டு, முதலாளித்துவ உலகச் சந்தைக்கான சோவியத் தடைகள் இறுதியாக சரிந்த பின்னர், பொருளாதார மற்றும் கலாசார பரிமாற்றங்களின் தவிர்க்கமுடியாத மற்றும் மீளமுடியாத உலகமயமாக்கலை நாம் கண்டோம். உலகளாவிய சந்தை மற்றும் உற்பத்தியின் உலகளாவிய சுற்றுகளுடன் சேர்ந்து ஒரு உலகளாவிய ஒழுங்கு, ஒரு புதிய தர்க்கம் மற்றும் ஆட்சியின் அமைப்பு தோன்றியுள்ளது. சுருக்கமாக, இறையாண்மையின் புதிய வடிவம். பேரரசு என்பது இந்த உலகளாவிய பரிமாற்றங்களை திறம்பட ஒழுங்குபடுத்தும் அரசியல் பொருள், உலகை ஆளும் இறையாண்மை சக்தி.


பேரரசுக்கான பாதை நவீன இறையாண்மையின் அந்தியில் இருந்து வெளிப்படுகிறது. ஏகாதிபத்தியத்திற்கு மாறாக, பேரரசு எந்த ஒரு பிராந்திய அதிகார மையத்தையும் நிறுவவில்லை மற்றும் நிலையான எல்லைகள் மற்றும் தடைகளை நம்பவில்லை. இது முழு உலக சாம்ராஜ்யத்தையும் அதன் திறந்த, விரிவடையும் எல்லைகளுக்குள் படிப்படியாக ஒருங்கிணைக்கும் ஆட்சியின் ஒரு மையப்படுத்தப்படாத பிராந்திய எல்லைகளை அறுக்கும் (decentered and deterritorializing) இயந்திரமாகும். பேரரசானது கலப்பு அடையாளங்கள், நெகிழ்வான படிநிலைகள் மற்றும் பன்மை பரிமாற்றங்களை, கட்டளை வலைப்பின்னல்களை மாற்றியமைப்பதன் மூலம்

நிர்வகிக்கிறது. உலகின் ஏகாதிபத்திய வரைபடத்தின் தனித்துவமான தேசிய நிறங்கள் ஏகாதிபத்திய உலகளாவிய வான வில்லில் ஒன்றிணைந்து கலக்கின்றன.

மிகவும் குறிப்பிடத்தக்கது யாதெனில், மூன்று உலகங்களின் (முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது) இடஞ்சார்ந்த பிரிவுகள் அழிக்கப்பட்டுள்ளது. இதனால் முதல் உலகத்தை மூன்றாவதிலும், மூன்றாவதுலகை முதலிலும் காண்கிறோம். இரண்டாவது கிட்டத்தட்ட எங்கும் இல்லை. மூலதனம் ஒரு சுமூகமான உலகத்தை எதிர்கொள்வது போல் தெரிகிறது. உலகமயமாக்கல் செயல்முறைகள் மற்றும் அமெரிக்காவில் புதிய உலக ஒழுங்கின் மீது ஆட்சி செய்யும் இறுதி அதிகாரத்தை பலர் கண்டறிந்துள்ளனர். அதன் ஆதரவாளர்கள் அமெரிக்காவை உலகத் தலைவர் மற்றும் ஒரே வல்லரசு என்று புகழ்கிறார்கள், எதிர்ப்பாளர்கள் அதை ஏகாதிபத்திய அடக்குமுறையாளர் என்று கண்டிக்கின்றனர்.

இந்த இரண்டு கருத்துக்களும் ஐரோப்பிய நாடுகள் இப்போது வீழ்ச்சியடையச் செய்துள்ள உலகளாவிய அதிகாரத்தின் கவசத்தை அமெரிக்கா வெறுமனே அணிந்துள்ளது என்ற அனுமானத்தில் தங்கியுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரிட்டிஷ் நூற்றாண்டு என்றால், இருபதாம் நூற்றாண்டு அமெரிக்க நூற்றாண்டு அல்லது உண்மையில் நவீனத்துவம் ஐரோப்பியன் என்றால் பின்நவீனத்துவம் அமெரிக்கன். அப்படியானால், பழைய ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளின் நடைமுறைகளை அமெரிக்கா திரும்பத் திரும்பச் செய்கிறது, அதே சமயம் அமெரிக்காவை ஆதரவாளர்கள் மிகவும் திறமையான மற்றும் அதிக கருணையுள்ள உலகத் தலைவராகக் கொண்டாடி, ஐரோப்பியர்கள் தவறிழைத்ததை சரிசெய்துகொள்கிறார்கள் என்பதுதான் விமர்சகர்களின் மிகவும் மோசமான குற்றச்சாட்டு. எவ்வாறாயினும், இறையாண்மையின் புதிய ஏகாதிபத்திய வடிவம் உருவாகியுள்ளது என்ற நமது அடிப்படை கருதுகோள் இந்த இரண்டு கருத்துக்களுக்கும் முரணானது. அமெரிக்கா இன்று ஒரு ஏகாதிபத்திய திட்டத்தின் மையமாக இல்லை, உண்மையில் எந்த தேசிய அரசும் இன்று உருவாக முடியாது. ஏகாதிபத்தியம் முடிந்துவிட்டது. நவீன ஐரோப்பிய நாடுகளின் வழியில் எந்த நாடும் உலகத் தலைவராக இருக்காது.

நாம் இங்கு ‘பேரரசு’ என்பதை ஒரு உருவகமாகப் பயன்படுத்தவில்லை என்பதை வலியுறுத்த வேண்டும், இது ஒரு தத்துவார்த்த அணுகுமுறை. பேரரசின் கருத்து எல்லைகளின் பற்றாக்குறையால் வகைப்படுத்தப்படுகிறது: பேரரசின் ஆட்சிக்கு வரம்புகள் இல்லை. முதலாவதாக, பேரரசு என்ற கருத்து, இடஞ்சார்ந்த முழுமையை திறம்பட உள்ளடக்கிய ஒரு ஆட்சியை நிலைநிறுத்துகிறது, அல்லது உண்மையில் முழு ‘நாகரிக’ உலகத்தையும் ஆளுகிறது. எந்த பிராந்திய எல்லைகளும் அதன் ஆட்சியை கட்டுப்படுத்தாது. இரண்டாவதாக, பேரரசு என்ற கருத்து தன்னை வெற்றியில் தோற்றுவிக்கும் ஒரு வரலாற்று ஆட்சியாக அல்ல, மாறாக வரலாற்றை திறம்பட இடைநிறுத்தி, அதன் மூலம் நித்தியத்திற்கான தற்போதைய விவகாரங்களை சரிசெய்யும் ஒரு ஒழுங்காக காட்சியளிக்கிறது. பேரரசின் கண்ணோட்டத்தில், விஷயங்கள் எப்போதும் இப்படித்தான் இருக்கும் மற்றும் அவை எப்போதும் இருக்க வேண்டியவை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பேரரசு தனது ஆட்சியை வரலாற்றின் இயக்கத்தில் ஒரு இடைநிலை தருணமாக முன்வைக்கவில்லை, ஆனால் பிராந்திய எல்லைகள் இல்லாத ஒரு ஆட்சியாக மற்றும் வரலாற்றிற்கு வெளியே அல்லது வரலாற்றின் முடிவில் இந்த அர்த்தத்தில் முன்வைக்கிறது. மூன்றாவதாக, பேரரசின் ஆட்சியானது சமூக உலகின் ஆழம் வரை பரவியுள்ள சமூக ஒழுங்கின் அனைத்து பதிவுகளிலும் செயற்படுகிறது. பேரரசு ஒரு பிரதேசத்தையும் மக்கள் தொகையையும் நிர்வகிப்பது மட்டுமல்லாமல் அது வாழும் உலகத்தையும் உருவாக்குகிறது. இது மனித தொடர்புகளை ஒழுங்குபடுத்துவது மட்டுமல்லாமல், மனித இயல்பை நேரடியாக ஆள முயல்கிறது. அதன் ஆட்சியின் பொருள் சமூக வாழ்க்கை முழுமையும். எனவே, பேரரசு உயிர்சக்தியின் முன்னுதாரண வடிவத்தை முன்வைக்கிறது. இறுதியாக, பேரரசின் நடைமுறை தொடர்ந்து இரத்தத்தில் குளித்தாலும், பேரரசு என்ற கருத்து எப்போதும் அமை




திக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது - வரலாற்றிற்கு வெளியே ஒரு நிரந்தர மற்றும் உலகளாவிய அமைதிக்காக.’

இவ்வாறு தான் பேரரசு என்ற கருத்தாக்கத்தை இருவரும் வியாக்கியானம் செய்கிறார்கள். அதன்படி நாம் அறிந்த ஏகாதிபத்தியம் இனி இருக்காது, ஆனால் பேரரசு உயிருடன் இருக்கிறது. மைக்கேல் ஹார்ட் மற்றும் அன்டோனியோ நெக்ரி பேரரசு என்பது உலகமயமாக்கலின் புதிய அரசியல் ஒழுங்காகும் என்கிறார்கள். உலகெங்கிலும் நிகழும் சமகால பொருளாதார, கலாசார மற்றும் சட்ட மாற்றங்களை அடையாளம் காண்பது எளிது, ஆனால் அவற்றைப் புரிந்துகொள்வது கடினம். ஹார்ட் மற்றும் நெக்ரி அவர்கள் பேரரசு பற்றிய நமது

வரலாற்று புரிதலுக்கு ஏற்ப, எல்லைகள் அல்லது வரம்புகளை ஏற்காத ஒரு உலகளாவிய ஒழுங்காக பார்க்க வேண்டும் என்று வாதிடுகின்றனர். இந்த வளர்ந்து வரும் பேரரசு முந்தைய காலங்களில் ஐரோப்பிய மேலாதிக்கம் மற்றும் முதலாளித்துவ விரிவாக்கத்தின் ஏகாதிபத்தியத்திலிருந்து எவ்வாறு அடிப்படையில் வேறுபட்டது என்பதை அவர்களின் புத்தகம் காட்டுகிறது. மாறாக, இன்றைய பேரரசு அதன் கலப்பின அடையாளங்களின் பாரம்பரியம் மற்றும் விரிவடையும் எல்லைகளுடன் கவனத்தை ஈர்க்கிறது.

நவீன அரசியலின் தத்துவ அடிப்படையான இறையாண்மை, தேசம் மற்றும் மக்கள் போன்ற கருத்துக்களில் ஒரு தீவிரமான மாற்றத்தை பேரரசு அடையாளம் காட்டுகிறது. ஹார்ட் மற்றும் நெக்ரி இந்த தத்துவ மாற்றத்தை பின்நவீனத்துவ சமுதாயத்தில் கலாசார மற்றும் பொருளாதார மாற்றங்களுடன் இணைக்கின்றனர். புதிய இனவெறி, அடையாளம் மற்றும் வேறுபாடு பற்றிய புதிய கருத்துக்கள், புதிய தொடர்பு மற்றும் கட்டுப்பாட்டு வலையமைப்புகள் மற்றும் இடம்பெயர்வுக்கான புதிய பாதைகள் என்பன இதில் குறிப்பிடத்தக்க சில. புதிய ஏகாதிபத்திய உலக ஒழுங்கை வரையறுப்பதற்கு நாடுகடந்த நிறுவனங்களின் சக்தியும், தொழில்துறைக்கு பிந்தைய உழைப்பு மற்றும் உற்பத்தியின் அதிகரித்துவரும் மேலாதிக்கமும் எவ்வாறு உதவுகின்றன என்பதையும் அவை காட்டுகின்றன. பகுப்பாய்வைக் காட்டிலும், பேரரசு என்பது இன்றைய உலக ஒழுங்கை வகைப்படுத்தும் சுரண்டல் மற்றும் கட்டுப்பாட்டின் ஆட்சிகளுக்கு அப்பால், அது ஒரு மாற்று அரசியல் முன்னுதாரணத்தைக் காட்டுவதாகக் கருதப்பட்டது.

2000-ம் ஆண்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் இந்நூல் வெளியடப்பட்டபோது அறிவுலகத்தில் ஒரு புயல் வீசுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. மேற்குலகால் இப்புத்தகம் கொண்டாடப்பட்டது. ஹார்ட் மற்றும் நெக்ரி, தாராளவாத பத்திரிகைகளில் முறையாக அங்கீகரிக்கப்பட்டு கொண்டாடப்பட்டனர். பிரித்தானியாவில், நியூ ஸ்டேட்ஸ்மேன் நெக்ரியுடன் ‘இடதுசாரிகள் உலகமயமாக்கலை விரும்ப வேண்டும்’ என்ற தலைப்பில் ஒரு நேர்காணலை நடத்தியது. உலகமயமாக்கல், உண்மையான ஜனநாயக ‘உலகளாவிய குடியுரிமைக்கு’ வழிவகுக்கிறது என்று நெக்ரி கூறினார். அமெரிக்காவில், நியூயார்க் டைம்ஸ் மதிப்பாய்வாளர் எமிலி ஈக்கின் பேரரசை ‘அடுத்த பெரிய சிந்தனை’ என்று பாராட்டினார், கடந்த தசாப்தத்தில் மனிதநேயத்தை வகைப்படுத்திய ‘நெருக்கடி’, ‘வெறுமை’, ‘ஆழமான அவநம்பிக்கை’, ‘சாதாரணத்தன்மை’ ஆகியவற்றைக் கடக்க மோசமாகத் தேவைப்படும் ‘பெருங்கோட்பாடு’ வருவதை அறிவித்தார். பேரரசு (புத்தகம் மற்றும் கருத்து இரண்டும்) வரையறுக்க கடினமாக இருந்தாலும், அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியாக இருந்தது.

உண்மையில், பேரரசு புத்தகம் குறித்த முக்கிய கேள்வி ஏகாதிபத்தியம் பற்றியது. ஏனெனில் ஏகாதிபத்தியம் என்ற கருத்தாக்கம் காலாவதியாகிவிட்டது என்பதே இந்நூலின் வாதமாகும். ஹார்ட் மற்றும் நெக்ரி வாதிடுவது போல முதலாளித்துவம் இப்போது ஒரு ‘ஏகாதிபத்தியத்திற்கு பிந்தைய’ கட்டத்தில் நுழைந்துள்ளதா அல்லது அது ஏகாதிபத்தியத்தின் ஒரு புதிய கட்டத்தை ஒருங்கிணைத்ததா என்பதுதான் பேரரசைச் சுற்றியுள்ள விவாதத்தின் வரையறுக்கும் பிரச்சினை. இந்தக் கேள்விக்கான பதில் முக்கியமானது, ஏனெனில் அது உலகளாவிய முதலாளித்துவத்தின் யதார்த்தத்தை வரையறுக்கிறது என்பது மட்டுமல்ல, அதன் மாற்றத்தின் சாத்தியத்தை அது தீர்மானிக்கிறது.

ஹார்ட்டும் நெக்ரியும் லெனினின் ஏகாதிபத்தியம் பற்றிய கருத்து இன்று நமது உலகத்தைப் புரிந்துகொள்வதற்குப் பொருந்தாது என்றும் பேரரசு என்பது ஏகாதிபத்தியத்திற்குப் பிறகு வரும் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். இது அடிப்படையிலேயே தவறானது என்பதைப் பலர் நிறுவியிருக்கிறார்கள். அது தனியாக விரிவாக நோக்கப்பட வேண்டியது.

நவீன சமுதாயம் உண்மையிலேயே ‘உலகமயமாக்கப்பட்ட’ சமூகம் என்று நெக்ரி சொல்வது சரிதான், முதலாளித்துவம் உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அதன் கூடாரங்களை விரிவுபடுத்தும் அளவிற்கு விரிவாக்கம் அடைந்துள்ளது. எவ்வாறாயினும், அதே நேரத்தில், பல்வேறு தேசிய முதலாளித்துவ வர்க்கங்களின் வெளிப்பாடான தேசிய அரசால் விதிக்கப்பட்ட வரம்புகள், முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளேயே கடக்க முடியாத மனிதகுலத்தின் எதிர்கால வளர்ச்சியின் மீது ஒரு பாரிய தடையை பிரதிபலிக்கின்றன. இன்று, முன்னெப்போதையும் விட, அத்தகைய முரண்பாடு முதலாளித்துவத்தை அழிப்பதன் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும், இதன் மூலம் எல்லைகள் மற்றும் தேசிய அரசுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், அனைத்து தேசிய தொழிலாளர்களின் தொழிற்சங்கத்தை உலக சோசலிசமாக கட்டமைப்பதற்கும் நிலைமைகளை உருவாக்குகிறது.

அதிகம் புகழ்பெற்ற பேரரசு நூலின் தொடர்ச்சியாக அதன் இரண்டாவது பகுதியாக ‘பன்முகம்: பேரரசு யுகத்தில் போர் மற்றும் ஜனநாயகம்’ (Multitude: War and Democracy in the Age of Empire) என்ற நூலை ஹார்ட்டும் நெக்ரியும் 2004-ம் ஆண்டு வெளியிட்டார்கள். இதில் மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ‘பன்முகம்’ என்ற கருத்தின் மூலம் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை இருவரும் ஒருபோதும் தெளிவாக விளக்கவில்லை. இந்தப் பிரச்சினையை விவாதிக்கும் ஒவ்வொரு முறையும் மூடுபனி மேகம் இறங்குவது போல் தெரிகிறது. நெக்ரி இதன் சிறப்பியல்புகளைப் பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ‘பன்முகம் என்றால் என்ன?’ என்ற கேள்விக்கு பதிலளிப்பதை இருவரும் திறமையாகத் தவிர்த்துவிட்டனர்.

இத்தொடரின் மூன்றாவது நூல் ‘பொதுநலன்’ (Commonwealth) என்ற தலைப்பிலானது. இம் மூன்று நூல்களிலும் ஹார்ட் மற்றும் நெக்ரியின் ஆய்வறிக்கைகள் இரண்டு வலியுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டவை:

- அமைப்பின் உலகமயமாக்கல் எந்த வகையான தேசியக் கொள்கையையும் செயற்படுத்தும் எந்த முயற்சியும் தோல்வியடையும் ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. இதன் விளைவாக, தேசம் மற்றும் தேசிய நலன் பற்றிய கருத்துக்கள் காலாவதியாகிவிட்டன.
- இந்த யதார்த்தமானது ஆதிக்கம் செலுத்தும் சில சமயங்களில் மேலாதிக்க சக்திகள் உட்பட அனைத்துத் தேசங்களையும் (அவற்றின் முறையான இருப்பு இருந்தபோதிலும், நிச்சயமாக) பாதிக்கிறது, அதன் விளைவாக, ஏகாதிபத்தியம் இல்லை, ஆனால் எங்கும் இல்லாத ஒரு ‘பேரரசு’ மட்டுமே உள்ளது. பொருளாதார மற்றும் அரசியல் முடிவெ

டுக்கும் மையங்கள் உலகம் முழுவதும் சிதறிக் கிடக்கின் றன மற்றும் அரசின் கொள்கைகளை வழங்குகின்றன.

இந்த இரண்டு முன்மொழிவுகளும் முற்றிலும் தவறானவை. முதலாளித்துவ உலகமயமாக்கலின் வரலாறு பற்றிய முழு மையான அறியாமையால் மட்டுமே இவ்வாறு விளக்க முடி யும். ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு அதன் தோற்றம் முதல் தற்போது வரை உள்ள வரலாறு இதைத் தெளிவாகக் காட்டுகிறது. இது குறித்த விரிவான விமர்சனத்தை சமீர் அமிர் முன்வைத்துள்ளார்.

பேரரசு என்ற கோட்பாட்டை முன்மொழிந்து ஏகாதிபத்தியம் என்பது காலாவதியாகிவிட்டது என்ற ஹார்ட் மற்றும் நெக் ரிக்கு மூன்றாம் உலகப் பார்வையில் மிகவும் விரிவான அதே வேளை ஆழமான விமர்சனத்தை முன்வைத்தவர் ஆர்ஜென் டீனிய மார்க்சிய சமூகவியலாளரான அட்டிலியோ போரோன் (Atilio Borón). இது குறித்த விரிவான குறிப்புகளுக்கு அவர் எழுதிய Empire and Imperialism: A Critical Reading of Michael Hardt and Antonio Negri நூலை வாசிப்பது பயனுள் ளது. போரோன் இந்நூலில் குறிப்பிடுகின்ற ஒரு விடயம் பேர ரசு என்ற நூல் குறித்த விவாதங்களுக்கு முத்தாய்பாக அமை கிறது.

‘மேற்குலகின் நவதாரளவாத ஆதரவாளர்கள் பேரரசுக்கு அளித்த சாதகமான வரவேற்பு, அவர்கள் புத்தகத்தை கவன மாகப் படித்ததையும், அதன் மிக ஆழமான செய்தியை அவர் கள் சரியாகப் புரிந்துகொண்டதையும், மேலாதிக்க சித்தாந் தத்துடன் பொருந்தாததாகக் கருதக்கூடிய எதுவும் புத்தகத் தில் இல்லை என்று அவர்கள் துல்லியமாக முடிவு செய்ததை யும் காட்டுகிறது. ஆச்சரியமளிக்காத வகையில் இப் புத்தகம் அவர்கள் நீண்டகாலமாகச் சொல்லி வருவதை மீளவலியுறுத் துகிறது. ‘உலகமயமாக்கல்’ 1980-களில் இருந்து உலகம் முழுவதும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது, அதாவது: தேசிய அரசு நடைமுறையில் இறந்து விட்டது, ஒரு உலகளாவிய யதார்த்தம் உலகை ஆளுகிறது, என்பதைச் சொல்வதனூடு ஏகாதிபத்திய சக்திகளை சிலிர்க்க வைக்கும் கம்யூனிசத் திற்கு எதிரான கதையாடலை இது முன்னெடுக்கிறது. பேரரசு முதலாளித்துவத்தை ஒரு மனிதாபிமானமற்ற, அடக்குமுறை, சுரண்டல் மற்றும் நியாயமற்ற உற்பத்தி முறை என்று முறை யாக விமர்சித்தாலும், பின்நவீனத்துவத்தின் ஒளி ஊடுருவக் கூடிய காற்றில் அது மறைந்துவிடுகிறது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போலவே, பேசும் விதத்தில், கண்ணுக் குத் தெரியாததாக மாறும், மேலும் இந்த வழியில் இரண்டும் ‘இயற்கைப்படுத்தப்பட்டவை’ என்று நியாயம் கற்பிக்கும். பசி, வறுமை, மரணம், போர்கள், நோய்கள் மற்றும் இருபதாம் நூற் றாண்டு முழுவதும் காணப்பட்ட மனித துயரங்களின் முழுப் பட்டியலும் மந்தமான மற்றும் கிட்டத்தட்ட அசாத்தியமான சொற்றொடர்களில் சொல்லாட்சிக் கலையாக மாற்றப்பட்டு, வரலாற்றின் மிகவும் இழிவான அம்சங்களை மறைக்கிறது. இதன்மூலம் இப்புத்தகம் புதிய தாராளமய உலகமயமாக்க லுக்கான நியாயப்பாட்டை வழங்குகிறது.’

## நிறைவுக் குறிப்புகள்:

அந்தோனியோ நெக்ரியை வரலாறு எவ்வாறு நினைவு கொள் ளும் என்ற வினாவை அலசுவதன் ஊடு இதை நிறைவு செய் வது பொருத்தம். மேற்குலகால் கொண்டாடப்பட்ட ஒரு மார்க் சியராக நெக்ரி இருந்தார். அவர் சோவியத் யூனியனையோ அது மார்க்சியத்துக்கு வழங்கிய பங்களிப்பையோ ஏற்றுக் கொண்டவரல்ல. ஐரோப்பிய மார்க்சிய மரபும் அதன் தத்துவ முமே சரியானது என நம்பியவர். இந்தக் குழப்பநிலை அவ ரது சிந்தனைகளிலும் எதிரொலித்தது. ஒரு காலம் தன்னை பின்நவீனத்துவவாதியாக அடையாளங் கண்டார், பின்னர் சில காலம் தன்னை மார்க்சியர் என்றார். பின்பு பின்மார்க்சி யர் என்றார். 1970-களிலும் 80-களிலும் பிரான்சில் நிலவிய குழப்பகரமான தத்துவார்த்தப் பாரம்பரியத்தின் வார்ப்பான நெக்ரி கவர்ச்சிகரமான ஆனால் ஆழமான உள்ளீடற்ற கருத் துக்களின் வழி தனது தத்துவார்த்தப் பயணத்தை நிகழ்த்திய வர். தாராண்மைவாத ஜனநாயகத்தை ஏற்றவர் ஆனால் தன்னை மார்க்சியவாதி என்பவர். இந்த முரண்நகை அவரது வாழ்வு முழுவதும் இருந்தது. புரட்சிகர மார்க்சியத்தை நீர்த் துப்போகச் செய்யும் பணியை அவர் செவ்வனே செய்தார். அதற்காகவே தத்துவஞானியாக மேற்குலக ஊடகங்களாலும் கல்விப் புலத்தாலும் கொண்டாடப்பட்டார். இவரது நூல்கள் மார்க்சிய விரோதமான பதிப்பகங்களாலேயே வெளியிடப்பட் டன.

மார்க்சிய வழித்தடத்தில் புரட்சிகர சிந்தனைகளோடு ஒரு செயல்வீரனாக தன் மக்கள் பணியைத் தொடங்கிய நெக்ரி இன்று மார்ச்சியத்தை வலுவிழக்கச் செய்ய வாய்ப்பான குழப் பகரமான அதேவேளை செல்வாக்கு மிக்க சிந்தனைகளைக் தந்த ஒருவராக விடைபெறுகிறார். தத்துவார்த்த ரீதியாக முப் பதுக்கும் அதிகமான நூல்களை அவர் எழுதியுள்ளார். அவை யாருடைய நலன்களுக்காக எழுதப்பட்டவை? அவை யாரால் ஊக்குவிக்கப்படுகின்றன? எங்கெல்லாம் கற்பிக்கப்படுகின் றன? இக்கேள்விகளுக்கான பதிலிலேயே வரலாறு எவ்வாறு அன்தோனியோ நெக்ரியை நினைவுகூரும் என்ற பதிலும் அடங்கியிருக்கிறது.

அட்டிலியோ போரோன் பேரரசு குறித்த தனது விமர்சன நூலை கீழ்வரும் வரிகளோடு நிறைவு செய்கிறார். அத்துடன் இந்த அஞ்சலிக் குறிப்பை முடிக்கலாம்.

‘நெக்ரியின் விஷயத்தில், இந்த புத்தகத்தில் கண்டறியப்பட்ட தவறுகள் அவர் பாரிஸில் இருந்தாலும், நீண்டகாலம் நாடு கடத்தப்பட்டதால் ஏற்பட்ட சிதைவுகளால் இருக்கலாம் என்று நான் நினைக்க விரும்புகிறேன். உலகம் முழுவதும் பயணம் செய்து ஏகாதிபத்தியத்தின் மோசமான உண்மைகளை தனது கண்களால் உறுதிப்படுத்தும் திறன் இல்லாததால், அவரால் இப்படியான ஒரு மோசமான முடிவுக்கு வர நேர்ந்ததா எனவும் ஐயுறுகிறேன். இறுதியாக, ஜோன்-பால் சார்த்ரே போன்ற குறிப்பிடத்தக்க பிரெஞ்சு அறிவுஜீவிகள் செய்தது போல சுய முடிவுகளின் அடிப்படையில் பிரான்சையே உலகாகக் கொண்ட குறுகிய பிரதேசவாதத்தின் வழி விளங்கிக் கொண்ட அரிதான அறிவுசார் பாரிசிஸ் சூழலுக்குள் சிக்கிச் சீரழிந்த இன்னொருவராகவே நெக்ரி அறியப்படுவார். சமூகம் மற்றும் அரசியல் மார்க்சியக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு நெக்ரியின் பங்களிப்புகள் அத்தகைய ஏமாற்றமளிக்கும் முடிவுக்குத் தகு தியானவை அல்ல.ஆனால் அம் முடிவுக்கே வரவேண்டியுள்ளது.’



meenilankco@thaiveedu.com




# எங்கள் குருநாதர் பேராசிரியர் செ. யோகராசா

**– த. மேகராசா**

எம் நெஞ்சில் இடிவிழுந்த நாள்தான் 2023-ஆம் ஆண்டின் டிசம்பர் 7-ம் நாள். 'பேராசிரியர் செ. யோகராசா காலமாகிவிட்டார்' என்ற செய்தி பேரதிர்ச்சியைத் தந்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து இன்றுவரை நாம் மீளவில்லை.

பேராசிரியர் செ. யோகராசா அவர்களிடம் கல்வி கற்றமையை இந்தப் பிறப்பில் பெற்ற உயரிய பேறாகக் கருதுகின்ற அவருடைய மாணாக்கர்களுள் நானும் ஒருவர். அவரை நினைத்து அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மட்டுமன்றி அவரது மாணவர்கள், நண்பர்கள், படைப்பாளர்கள் அனைவருமே கலங்குகிறார்கள். ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரின் இழப்பை, ஆயிரக்கணக்கானோர் தினமும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நினைத்து வேதனையுறுவதை முதன்முதலாக நான் காண்கிறேன். அவர் பற்றிய செய்திகள் நாளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. 'எனக்கு இவ்வாறு வழிகாட்டினார்' என்று ஒருவர் கதைக்க, 'எனக்கு இவ்வாறு எழுதும்படி ஊக்கப்படுத்தினார்', 'நான் இவ்வாறு வருவதற்கு அவர் காரணமா

கவிருந்தார்' என்றெல்லாம் மற்றையவர்களும் மாறிமாறிக் கூறித் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்தியவண்ணம் இருக்கிறார்கள். முகநூல்களில் அவரது முகங்களே நிறைந் துகிடக்கின்றன. அவர் பற்றிய பதிவுகளே பகிரப்படுகின்றன. இவ்வாறு அவரது இழப்பால் பலரும் துயர்கொள்வதற்கும் பலரும் அவரைப் பாராட்டுவதற்கும் அவர் என்ன செய்தார்? அவரது பலம் என்ன என்பது முக்கியமானதாகும்.

பேராசிரியர் செல்லையா யோகராசா யாழ்ப்பாணம் வடமராட் சிப் பிரதேசத்தின் கரவெட்டி - கரணவாய்க் கிராமத்தில் 1949.12.17-ஆம் திகதி பிறந்தார். கரணவாய் வித்தியாலயத்தி லும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் பாடசா லைக் கல்வியைக் கற்ற அவர் கொழும்புப் பல்கலைக்கழகத் தில் தமிழ்ச் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தை 1972-ல் பெற்றார். தொடர்ந்து முதுதத்துவமாணி, கலாநிதிப் பட்டங் களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். 1960-களிலிருந்து கருணையோகன் என்ற புனைபெயரில் கவிதைக ளையும் மெல்லிசைப் பாடல்களையும் எழுதிய ஒருவராகவும் விளங்கினார். மகோ தபால் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது ஆசிரியர் நியமனம் பெற்று மலை-யகத்திலுள்ள கோல்புறுக் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்தார். (இதனால் கோல்புறுக் யோகர் என்றும் அழைக் கப்பட்டார்). அச்சந்தர்ப்பத்தில் அங்கேயே விஜயதிலகி என்ப வரைத் திருமணம் செய்ததன் மூலம் மலையகத்திற்கு மணம கனானார். அங்கு கல்வி கற்பித்த காலத்தில் மலையகக் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார். கல்வியை இடைநிறுத்தித் தோட்ட வேலைகளில் ஈடுபட்ட சிறுவர்களை யும் பாடசாலையில் இணைத்து அவர்களுக்குக் கல்வியை ஊட்டினார். கல்வி கற்க வசதியற்ற மாணவர்களுக்கு உதவி கள் செய்து நகரப்புறப் பாடசாலைகளில் மேற்படிப்பைத் தொடரவும் வழிகாட்டினார். மலையக எழுச்சிக்காகப் பல் வேறு மெல்லிசைப் பாடல்களை இயற்றி அவற்றை மாணவர் கள் தினமும் விரும்பிப் பாடும் நிலையை உருவாக்கினார். அவரிடம் கல்வி கற்ற மலையக மாணவர்கள் பலரும் இன்று பல்வேறு பதவிநிலைகளில் பிரகாசிக்கிறார்கள். மலையகத் தில் அவரது தடம் இப்போதும் இருக்கிறது. மலையகத்திலி ருந்து இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப் பிற்கு வருகைதந்த ஒருவர் என்னிடம் கூறினார். சேரின் உடலை இறுதி அஞ்சலிக்காக கோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத் தில் வைத்திருந்தால் சுமார் இருபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு அஞ்சலிக்க வந்திருப்பார்க ளென்று.

1991-ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் மொழித்துறைக்கான ஆளணியின் முதலாவது விரிவுரையாள ராக இணைந்துகொண்டார். 2009-ம் ஆண்டு பேராசிரியராகப் பதவி உயர்வுபெற்ற அவர் ஓய்வுபெற்ற பின்னரும் இறக்கும் வரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரை யாளராகப் பெரும்பணியாற்றினார். மட்டக்களப்பில் வாழ்பதி யமைத்துக் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக வாழ்ந் துவந்த அவருக்குச் சுவஸ்திகா என்றொரு மகளும் உண்டு. அவர் தனது மனைவி, மகள் ஆகியோரை மிகவும் நேசித்தார். அதேபோன்று மாணவர்கள், படைப்பாளர்கள், விரிவுரையா ளர்கள், விமர்சகர்கள், கலை இலக்கியச் செயற்பாட்டாளர் கள் முதலானோரையும் நேசித்தார். அவரது வாழ்வின் பெரும் பகுதியை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குமே செலவிட்டார்.

பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கும் எனக்குமான தொடர்பு இருபது வருடங்களுக்கு முன்னர் கிழக்குப் பல்க லைக்கழகத்தில் ஏற்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத் தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள அரசடித்தீவுக் கிராமத்தில் பிறந்தவன் நான். பாடசாலையில் குறிப்பிட்ட முக்கிய பாடங்களைக் கற் பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இல்லாதபோதிலும் அப்போதி ருந்த ஆசிரியர்கள் கடின முயற்சியெடுத்து அனைத்துப் பாடங்களையும் கற்பித்து எங்கள் வாழ்விற்கு ஒளியூட்டினார் கள். அதனால் எங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவ ருமே எங்களுக்குத் தெய்வங்களாகவே தெரிந்தார்கள். அந்த மனநிலையோடு பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கா கக் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது, கற்



பித்த விரிவுரையாளர்கள் அனைவருமே வெவ்வேறு அடிப்ப டையில் தமது ஆற்றலால் எம்மைக் கவர்ந்தபோதிலும் பேரா சிரியர் செ. யோகராசா அவர்கள் எல்லோரிலும் மேலாக எம் மைக் கவர்ந்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர் என்பவர் விரிவுரைகளை மட்டும் நிகழ்த்துகின்றவரல்ல. அவர் மாணவர்களின் திறனறிந்து அதற்கேற்ப அம்மாணவர்களை வழிப்படுத்துபவர். குறிப்பாக மாணவர்களின் உளவியலை அறிந்து கற்பித்தலை மேற் கொள்பவர். பிராந்திய வளர்ச்சிக்கு ஆய்வு சார்ந்த பெரும் பணியை முன்னெடுப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்ய வழிப்படுத்துபவர். தினமும் மாணவர்களை ஊக்கப்படுத்து பவர். மாணவர்களுக்கு உதவுகின்றவர். இத்தனை பண்புக ளையும் நாம் பேராசிரியர் செ. யோகராசா அவர்களிடம் கண் டோம்.

பேராசிரியர் என்போன்ற மாணவர்களின் நிலையை அறிந்து, குறிப்பாக நூல்களை வாங்கி வாசிக்குமளவிற்குப் பொருளா தாரப் பலமற்ற சூழ்நிலையை அறிந்து, அவரிடமுள்ள ஆயி ரக்கணக்கான நூல்களில் எமக்குத் தேவையான நூல்களை வாசிக்கத் தருவார். கையில் எப்போதும் வைத்திருக்கும் ஒரு குறிப்புக் கொப்பியில் யார் யாருக்குப் புத்தகம் கொடுக்கப் பட்டது என்ற விபரத்தைக் குறித்து வைத்திருப்பார். அவரிடம் நாங்களெல்லாம் புத்தகங்களைப் பெற்றுப் படிக்கும் வாசக



ரானோம். புத்தகம் தருவதால் மட்டும் அவரை நாங்கள் விரும்பினோம் என்று இல்லை. அவரது விரிவுரை வகுப்பே கலகலப்பாக இருக்கும். மிகத் தெளிவாக விளங்கப்படுத்து வார். இடைக்கிடையே வகுப்பைக் கலகலப்பூட்டுவதற்காகக் குறியீட்டு மொழியில் பேசுவார். அதன் அர்த்தம் சற்றுத் தாம தித்தே எமக்கு விளங்கும். மொழி தெரியாதவர்கள் எல்லோ ரும் சிரிப்பதைப் பார்த்து தாமதமாகிச் சிரிப்பதுபோல நாங்க ளும் பேராசிரியர் கூறியதன் அர்த்தத்தைத் தாமதமாகவே விளங்கிச் சிரிப்போம். ஆனால் அவர் அதைப் பொருட்படுத் தாமல் விரிவுரையைத் தொடர்ந்துகொண்டிருப்பார். நாங்க ளும் அவரின் விரிவுரையின் பின்னால் ஓடுவோம். எங்களது ஒப்படைகளை மிகக் கவனமாகக் கருத்தூன்றி வாசித்துக் கருத்துக்களைக் கூறுவார். சிறந்ததைப் பாராட்டுவார். ஏனை யவர்களையும் அதனை வாசிக்கும்படி வலியுறுத்துவார். புதிய புதிய தகவல்களை வழங்குவார். இக் காரணங்களாலும் நாம் அவரை மிகவும் நேசித்தோம். அவரது பக்தர்களானோம். அவரை அறிவுத் தெய்வமாகப் பார்க்கத் தொடங்கினோம்.

2007-ல் தமிழ்ச் சிறப்புக் கற்கையை முடித்துவிட்டு பல்க லைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னரும் அவர் என்னை எழுதும்படி உற்சாகப்படுத்தினார். நல்ல செயற்பாடுகளைப் பாராட்டுவார். எங்களது ஆசிரிய - மாணவ உறவு முன்னரை விடவும் மிகமிக நெருக்கமாகியது. அவர் இரகசியங்களை மிகவும் காப்பவர். நான் அரசடித்தீவுக் கிராமத்திலிருந்து கல் லடிக்கு வாழ்பதியமைத்துக்கொண்ட பின்னர் பேராசிரியரை அடிக்கடி சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. பதினைந்து வரு டங்கள் அவருடைய மிகமிக நெருக்கமான மாணவராக இருந்து, நூல்களை வாசிக்கவும், ஆய்வுக் கட்டுரைகளை எழுதவும், ஆய்வு மாநாடுகளில் பங்கேற்கவும், இலக்கியக் கூட்டங்க ளில் பேசவும் பங்கெடுக்கவும் தூண்டினார்.

2010-ம் ஆண்டிலிருந்து பேராசிரியருடன் இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். பேருந்து, புகையிரதம், மோட்டார் சைக்கிள் எனப் பேராசிரியருடன் பய ணங்கள் தொடர்ந்தன. முதன்முதலில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு ஆய்வரங்கிற்காக இருவரும் இரவுப் பயணத்தைத் தொடர்ந்தோம். அவர் என்னருகிலிருந்து நூல்களை வாசித் துக்கொண்டே வந்தார். எனக்கும் நூல்களைத் தந்தார். நானும் வாசித்துப் பார்த்தேன். போக்குவரத்தின் போது நூல் களை வாசிப்பது எனக்குப் புதுப்பழக்கமாதலால் அவரைப் போன்று தொடர்ந்து வாசிப்பது சிரமமாக இருந்தது. நான் நித் திரைகொண்டு எழும்போதெல்லாம் அவர் நூல் ஒற்றைக ளைப் புரட்டி மகிழ்ந்துகொண்டிருந்தார். நான் மிகவும் ஆச்சரி யத்தோடு அவரை அவதானித்துக்கொண்டு சென்றேன். பேருந்து அதிகாலை 3.30-ற்கு யாழ் பேருந்து நிலையத்தை அடைந்தது. விடிந்த பின்பு கரணவாய் - கரவெட்டிக்குச் சென்று அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் குச் செல்வதுதான் திட்டம். பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் இருக்கையுள்ள இடத்தைக் காட்டி, யாழ்ப்பாணம் வந்தால் விடியும்வரை இதிலிருந்து நூல்களை வாசித்துவிட்டு போவது தான் எனது வழமை. அதற்கும் சேர்த்துத்தான் வாசிக்கப் புத் தகங்களைக் கொண்டுவந்திருக்கிறேன் என்றார். வெளிச்ச முள்ள இடத்திலிருந்த அவர் உடனே வாசிப்பில் மூழ்கிவிட் டார். அவருடன் பயணம் செய்த முதலாவது சந்தர்ப்பம் அது வென்பதால் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். பயணக்க ளைப்பு இல்லாமல் இப்படித் தொடர்ந்தும் வாசிக்கிறாரே என் பதுதான் எனது ஆச்சரியம். பின்னர் அவரது அத்தகைய செயற்பாடு எனக்கு ஆச்சரியம் தருவதில்லை: அவர் பேருந்

துப் பற்றுச்சீட்டிலும்கூட கட்டுரை எழுதுவதற்கான குறிப்பு களை எழுதிக்கொள்வார். பின்னர் அவற்றை விரிவாக்கி கட்டு ரையை அமைத்துக்கொள்வார்.

பேராசிரியர் செ. யோககராசா அவர்கள் மிகவேகமாக நடப்ப வரும்கூட. யார் போகிறார்கள் யார் வருகிறார்கள், யார் எம்மை அவதானிக்கிறார்கள் என்ற எக்கவனமும் அவரிடமி ருப்பதில்லை. நான் அவருடன் நடந்துசென்ற ஒரு சந்தர்ப்பத் தில் கேட்டேன், ‘இவ்வளவு வேகமாக நடக்கிறீர்களே சேர், அது எவ்வாறு முடிகிறது’ என்று. பேருந்துகள் பயணம் செய் யாமையால் குறிப்பிட்ட தூரம் தனது ஊருக்கு நடந்தே செல் லவேண்டியிருந்தமையால் வேகமாக நடந்துசென்று பழகிவிட் டதாகவும், வேகமாக நடப்பதுபோலவே சிந்திப்பது, உணவு உண்பது அனைத்தும் மிகவேகமானது என்றும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் இடையே தொடர்பு இருக்குதல்லவா என்று பதிலளித்தார்.

ஆய்வுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்த அவர் மாணவர்க ளையும் வழிப்படுத்தினார். உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வ ரங்குகளில் கலந்துகொண்டு கட்டுரை சமர்ப்பிக்கவும் ஞானம், ஜீவநதி, மகுடம், தேனகம் முதலான சஞ்சிகைகளிலும் பிற ஆய்வுச் சஞ்சிகைகளிலும் கட்டுரை எழுதவும் தொடர்ந்தும் என்னை வழிப்படுத்தினார். எழுதாதபோது ‘மேகராசா உனக் குத் தந்த காலக்கெடு முடிந்துவிட்டது. நீ விரைவாக எழுதியே ஆகவேண்டும்’ என்று கட்டளையிடுவார். ‘இதைப் பற்றி எழுது’ என்றும் சொல்வார். ‘ஏன் இன்னும் எழுதவில்லை’ என் றும் கேட்பார். இன்னொரு விடயம் இவ்வாறு எனக்கு மட்டுந் தான் கூறுகின்றவர் என்றில்லை. ஏனைய அவரது மாணவர்க ளுக்கும் இவ்வாறே சொல்வதுதான் அவரது இயல்பு. படைப் பாளர்களிடமும் இத்தகைய விடயங்களை எழுதினால் நல்ல தென்று கூறுவார். அவர் கூறி ஒரு படைப்பாளரால் எழுதப் பட்ட நாவல் பரிசுபெற்றமை பற்றியும் நான் அறிவேன். அவர் மாணவர்களையோ, படைப்பாளர்களையோ வரையறுத்துக் கொண்டதில்லை. தமிழ் மாணவர்கள் - முஸ்லிம் மாணவர்கள் என்ற எந்தவிதமான பேதங்காட்டல்களும் அவரிடமிருந்த தில்லை. அதேபோன்றே படைப்பாளர்களையும் பார்த்தார். அவர் ஆய்வினூடாக முன்னோடிகளை இனங்கண்டு வெளிப் படுத்தினார். அவ்வாறு வெளிப்படுத்தும்போதுகூட தமிழரா, முஸ்லிமா என்று பார்ப்பதில்லை. மறைப்பதில்லை. முன் னோடி யாராகவிருப்பினும் வெளிப்படுத்துவார். அதனால் சில தரப்பினரால் அவர் விமர்சிக்கப்பட்டார்.

அவரிடம் பிறருக்கு உதவுகின்ற குணம் அதீதமாகவிருந்தது. எந்தப் பேராசிரியரும் அத்தகைய குணம் இருந்ததாக எனது அனுபவத்துக்கு எட்டியவகையில் தெரியவில்லை. அவரி டமோ என்னிடமோ இல்லாத புத்தகங்களை எங்கேயோ கண் டால் அவை அவசியமெனில் பிரதியெடுத்துத் தருவார். ஒரு முறை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து எனக்கு அழைப்பெடுத்தார். ‘இப்படி ஒரு புத்தகம் உங்கள் ஆய்வுக் குத் தேவையானது, அது இருக்கின்றதா’ என்றார். இல்லை சேர் என்றேன். அடுத்தநாள் என்னை அழைத்து அந்தப் புத்த கத்தின் பிரதிபண்ணப்பட்ட முக்கிய பகுதிகளைத் தந்து ஆச் சரியப்படுத்தினார்.

புதிய புத்தகங்கள் வருகின்றபோது அதன் முக்கியத்து வத்தை உணர்ந்து வாங்குவதற்குத் தூண்டுவார். புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் பலரிடமிருந்தும் அவரது வீட்டுக்குப் புத்தகங்கள் தபாலில் வரும். அவற்றை வாசிக்கத் தருவார். தமிழகச் சஞ்சிகைகளைப் பெற்று வாசிக்கின்ற அவர் அவற் றையும் தருவார். எந்த ஆசிரியரும் செலுத்தாத அக்கறை யைப் பேராசிரியர் என்போன்ற அவரது மாணவர்களிடம் செலுத்தினார். அதனால் அவர் எமக்கு மேலானவராகத் தெரிந் தார்.

ஓயாமல் வாசித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்த வர், எத்தகைய விருப்புடன் அவற்றை வாசித்தாரோ அதே விருப்புடன் அதனை மற்றையவர்களுக்குக் கொடுக்கும் அறி வுக் கொடையாளராகவும் விளங்கினார். எந்த நேரத்தில் தொடர்புகொண்டாலும் பேசக்கூடியவர். அழைப்பைத் தவற விட்டால் அவரே தொடர்புகொள்வார். அதனால் எந்த நேரத்தி லும் அவரிடமிருந்து தேவையான தகவல்களையும் ஆலோச னைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவர் ஒருபோதும் நேரமில்லையென்றோ, நோய் என்றோ, வேலையிலிருக்கி றேன் என்றோ, இரவாகிவிட்டது நாளை எடுங்கள் என்றோ சொல்லியதில்லை. அவர் வைத்தியசாலையில் இருக்கும் போதும் கிழக்கிலங்கைக் கவிதையின் செல்நெறி குறித்து 20 நிமிடங்கள் தொலைபேசியில் கதைத்தார். நிறைவான தகவல் களைத் தந்து வழிகாட்டினார். அதனால் அவர் பல நூல் களை எழுதியிருந்தும் குறிப்பாக நான் அவற்றைச் சேகரித்து வைக்க எண்ணியதில்லை. சேமித்துவைக்கவேண்டுமென்ற எண்ணமும் வந்ததில்லை. நூலாசிரியரே எமக்கு வழிகாட்டி யாக இருக்கின்றார் என்ற திடமான நம்பிக்கை. அவரிடம் உரையாடி, எழுதியதை அவரிடம் காட்டிச் சரிபார்த்தே அனைத்து ஆய்வு வேலைகளையும் செய்த எமக்கு, அவரது இழப்பு பேரிழப்பாகும்.

பேராசிரியர் நூல்களை வாசிப்பதுடன் மட்டும் நிற்கவில்லை. பெரியவரோ, சிறியவரோ வயது வேறுபாடின்றி அனைத்து ஆராய்ச்சியாளர்களின் உரைகளைக் கேட்பதையும் பெரிதும் விரும்பினார். இவ்வருடம்(2023) ஆவணி மாதம் 7-ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆய்வரங் கின் சிறப்புரையினைத் தமிழகப் பேராசிரியர் மணிகண்டன் அவர்கள் ‘தமிழில் அற இலக்கியங்கள்’ என்ற தலைப்பிலே 100 நிமிடங்கள் உரையாற்றினார். என்னருகிலிருந்த பேராசிரி யர் செ. யோகராசா அவர்கள், உரை நிறைவடைந்ததும் என் னிடம் கூறினார் ‘இந்த ஆய்வரங்கிற்கு வராமலிருந்திருந்தால் நான் எவ்வளவு விடயங்களை இழந்திருப்பேன்’ என்று. அதே போன்று பேராசிரியராகி ஓய்வுபெற்ற பின்னரும் தனது ஆய் வுக் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தவேண்டுமென்ற ஆர் வத்தோடு எங்கெங்கு ஆய்வரங்குகள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் பயணம் செய்தார்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பார்களே அதற்குப் பேராசிரியரை யாரும் இலக்கணமாக வைக்கமுடியும். அவரது முகத்தில் மெல்லிய புன்னகை இருக்கும். அது குழந்தைக ளின் இதயத்திற்கு ஒப்பானது. அவர் மிகவும் நேர்மையானவர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் எனக்கு அழைப்பை மேற்கொண்ட அவர் ‘மேகராசா, எனக் குத் தரப்பட்ட விசிற்றிங் மணித்தியாலத்தில் 18 மணித்தியா லங்களைப் படிப்பித்துவிட்டேன். இன்னும் இரண்டு மணித்தி யாலங்கள் படிப்பிக்கவேண்டும். நான் அடுத்தவாரம் வந்துவி டுவேன். இன்னுமொன்று, படிப்பித்த மணித்தியாலங்களுக்கு ரிய கையொப்பத்தைக் குறித்த ஆவணத்தில் வைக்க கவன மெடுக்கத் தவறிவிட்டேன். நான் வகுப்பெடுக்கவில்லை என்று

ஆகிவிடுமல்லவா? என்ன செய்வது' என்றார். 'சேர் அதை நான் சேரிடம் (துறைத் தலைவரிடம்) சொல்கிறேன். நீங்கள் அதைப்பற்றிக் யோசிக்கவேண்டாம். நீங்கள் வந்ததும் கையொப்பத்தை வைத்துக்கொள்ளலாம்' என்றேன். 'இல்லை மேகராசா எனது பொறுப்பைச் சரியாகச் செய்யத்தானே வேண்டும்' என்றார். தனது கடமையைச் சரியாக நிறைவேற் றும் ஒழுக்கசீலராக - நேர்மையாளராக அவர் விளங்கினார். இன்னுமொன்று அவர் யாரைப் பற்றியும் யாரிடமும் குறை சொல்லியதில்லை. பொறாமைப்பட்டதில்லை. பிறரிடம் குறை கண்டு முகநூலில் எழுதியதில்லை. முகநூலே அவருக்கு இருந்ததில்லை. திருமண வழியின் மூலம் மலையக அரசியல் பிரமுகர்களின் செல்வாக்கு அவருக்கு இருந்தபோதிலும் தன் னிடம் கற்ற மாணவர்கள் உயர் பதவிகளில் இருந்தபோதிலும் அவர் தனது தேவையை நிறைவேற்றுவதற்காக ஒழுங்கற்ற தன்மையைக் கையாண்டதில்லை. அறத்தையும் ஒழுங்கை யும் பின்பற்றினார். ஆசிரியராகப் பணியாற்றியமைக்கான காலத்திற்குரிய ஓய்வூதியத்தைப் பெறுவதற்குரிய ஆவணங் களை அவர் ஒப்படைத்திருந்தும் அந்த ஆவணங்கள் காணா மற் போனமையால் மீளவும் ஆவணங்களைக் கொடுப்பதில் சிரமப்பட்டார். ஆவணங்களை ஒப்படைத்தார். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். யாருடைய உதவியை யும் நாடவில்லை. இறுதிவரையும் அவருக்கான ஓய்வூதியத் தைக் கூட அவரால் பெறமுடியவில்லை.


கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டப் படிப்பைத் தொடர்ந்தபோது ஈழத்து நவீன இலக்கியத்தையும் ஒரு பாடமாகக் கற்றவர் பேராசிரியர். அது பின்னாளில் அவ ருக்குப் பெரிதும் கைகொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். கலாநிதிப் பட்டத்தினையும் கவிதைத் துறையிலேயே யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட அவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். தனக் கான தனித்துவமான ஆய்வு முறையியலினூடாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். புதுப்புது விடயங்களைக் கண் டறிந்தார். தான் எழுதியது பிழையென்று தெரிந்தும், அதனை ஒப்புக்கொண்டால் தனக்கு அவமானமென்று பிடிவாதம் பிடிப்போருக்கு மத்தியில், அவர் எழுதிய சில ஆய்வுகளை அவரே பின்னாளில் மறு ஆய்வுக்கும் உட்படுத்தினார். அந்த நேர்மையும் அவரிடம் இருந்தது. மொழிபெயர்ப்பு நூல்க ளைத் தேடி வாசித்தார். பல துறைகளில் ஈடுபாடு செலுத்திய அவர் பல்கலைக்கழகத்திலே நவீன இலக்கியம், ஈழத்து இலக்கியம், உலக இலக்கியம், தென்னாசிய இலக்கியம் குறித்தே கூடுதலான நேரங்கள் கற்பித்தல் பணியை மேற் கொண்டார். அதனால் இலக்கியத்தின் தரத்தைக் கணிக்க வும், உலக இலக்கியத்தின் போக்குகளைப் புரிந்துகொள்ள வும், நவீன இலக்கிய விமர்சன முறைகளை அறிந்துகொள்ள வும் அவரால் முடிந்தது.


அவரை ஒரு சிறந்த விரிவுரையாளராகவும் வழிகாட்டியாகவும் பார்த்த எனக்கு பின்னாளில் அவரது பன்மைத்துவ முகம் தெரியத் தொடங்கியது. அவர் ஈழத்துப் படைப்பாளர்களுடன் நெருங்கிய உறவைப் பேணுகின்றவர் என்பது அதிலொன்று. குறிப்பாக ஈழத்துப் படைப்பாளர்களின் நூல்களுக்கு நாற்பது வருடங்களுக்கும் மேலாக முன்னுரைகளையும், அணிந்துரை களையும், மதிப்பீட்டுரைகளையும் அவர் எழுதி வந்திருக்கி றார். பேராசிரியரிடமிருந்து பெறுகின்ற முன்னுரை காத்திரமா னது என்று படைப்பாளர்கள் கருதினார்கள். அதனால் அவரி டம் முன்னுரை பெறுவதற்காகப் பலரும் காத்திருந்தார்கள். அவரும் காலத்தைத் தாமதிக்காது தனது பயணங்களின் போதும் அவற்றைக் கொண்டுசென்று வாசித்து எழுதிக்கொ டுக்கின்றவராகத் திகழ்ந்தார். குறித்த படைப்பு எப்பிரதேசத் திலிருந்து வெளிவருகிறது, அப்பிரதேசத்தின் இலக்கிய முன் னோடிகள் யாவருளர்? குறித்த படைப்பாளரின் பின்புலம் என்ன? குறித்த படைப்பு எத்தனையாவது? அப்படைப்பில் என்னென்ன சிறப்புகள் உள்ளன? என்னென்ன குறைகள் உள்ளன என்பனவற்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட் டதாக அவரது முன்னுரை அமைந்திருக்கும். பெரும்பாலும் புதிய படைப்பாளர்களே அவரிடம் முன்னுரைகளைப் பெற் றார்கள். அவரும் அதனையே விரும்பினார். ஈழத்தில் நவீன இலக்கியம் குறித்த கூடுதல் பரிச்சயம் பேராசிரியர் செ.யோக- ராசா அவர்களுக்கு இருந்தது. அத்தகைய ஈடுபாடு அவரது முன்னுரைகளுக்குக் கனதியைக் கொடுத்தது. அவரே அதிக முன்னுரைகளை எழுதிய ஈழத்து ஆய்வாளராகவும் திகழ்கின் றார். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் நேசத்திற்குரிய ஆசிரியராகத் திகழ்ந்த அதேயளவிற்குப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் நேசத்திற்குரிய வழிகாட்டியாக வும் திகழ்பவர் பேராசிரியர் என்பதை நான் உறுதியாக அறிந் துகொண்டேன்.

அதேவேளை அவரது ஆய்வுகளை ஈடுபாட்டோடு தொடர்ந்து வாசிக்கவும் அவரது ஆய்வுகள் தொடர்பாக உரையாடவும் வாய்ப்பிருந்தமையால் அவரது ஆய்வின் முறையியலையும் புரிந்துகொள்ளமுடிந்தது. அவர் பன்மைத்துவ நோக்கில் படைப்பைப் பார்த்தார். ஒற்றைத் தராசு என்ற அளவுகோ லைக் கொண்டு இலக்கியப் படைப்பைத் தரநிர்ணயம் செய் யாது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான தராசுக ளையே பயன்படுத்தினார். அதனால் அவரது மதிப்பீட்டுத் தராசில் ஏதோவொன்று அவருக்குக் கிடைத்தது. அதனை இனங்கண்டார். அவ்வழியில் செல்லுமாறு குறித்த படைப்பா ளரை வழிப்படுத்தினார். வாழ்த்தியே படைப்பாளர்களுக்கு முன்னுரைகளை எழுதுகிறார் என்று சிலர் குற்றம் சுமத்திய போதும், அவர் அவரது மதிப்பீட்டு முறைமையில் சரியாகவே நின்றார். அவரது முன்னுரைகளின் தனித்துவத்தை உணர்ந்த மையாலேயே அவரது உதவியுடன் குறிப்பிட்ட முன்னுரை களை, 'ஈழத்து நவீன இலக்கியங்கள் - படைப்பாளர்கள் - தடங்கள் (2019)' என்ற நூலாகப் பதிப்பித்தேன். ஆய்வுல கிற்கு அவர் அறிமுகமாகிய ஆரம்ப காலத்திலிருந்தே ஆய் வுத்துறை சார்ந்து சாதிக்கவேண்டுமென்ற வெறி அவரிடமி ருந்தது. 'நிறையத் தகவலை வைத்திருக்கின்றான். அதனை எவ்வாறு வெளிப்படுத்துவதென்ற முறை தெரியாதிருக்கி றான்' என்று பேராசிரியர் செ. யோகராசா குறித்துப் பேராசிரி யர் கா. சிவத்தம்பி கூறியதாக ஒரு கருத்தை அறிகிறேன். அக்கருத்து ஏற்கக்கூடியதே. அது பல்கலைக்கழகத்தை முடித்துவிட்டு ஆய்வுத் துறையில் கால்பதிக்கின்ற பெரும்பா லானவர்களிடமிருக்கின்ற தன்மைதான்.

பேராசிரியர் தம்மீதான விமர்சனங்களை விதண்டாவாதமாக மறுப்பவராகவோ அல்லது எல்லாவற்றையும் ஏற்பவராகவோ இருக்கவில்லை. அதேவேளை தன்னைப் பகீரங்கப்படுத்தி நிரூபிக்கவேண்டுமென்றும் அவர் ஒருபோதும் கருதிய தில்லை. ஆனால் மிகச் சாமர்த்தியமாக எதிர்க்கவேண்டி யதை எதிர்த்தும் ஏற்கவேண்டியதை ஏற்றும் நடந்துகொண் டார். சிக்கல் தரக்கூடிய வினாக்களை மெல்லிய புன்னகை யாலோ அல்லது ஒரு மௌனத்தாலோ கடந்துவிடுவார். அத னால் அவருக்கு பகைவர்கள் என்று யாரும் இருந்ததில்லை.

அவர் பார்வைக்கு மென்மையானவராகவும் ஆய்வுகளை உறுதியாக முன்வைப்பதிலும், தனக்கான கோட்பாட்டு வழியில் செல்வதிலும், தனக்கான கருத்து நிலைப்பாட்டிலும் உறுதிமிக்கவராகவும் திகழ்ந்தார். பதவிகளைப் பொறுப்பெடுத்தால் கற்பித்தலையோ, ஆய்வுச் செயற்பாட்டையோ திருப்தியாகச் செய்யமுடியாதென்பதால் இயலுமானவரை அவற்றையெல்லாம் தவிர்த்தே வந்தார். பலருடைய வேண்டுகோளின்படியே மொழித்துறையின் தலைவராகவும் விளங்கினார்.









பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் ஈழத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நடைபெற்ற ஆய்வரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வாசிக்கின்றவராகவும் விளங்கினார். கற்பித்தலை எந்தளவிற்கு மிகவும் நேசித்தாரோ அதேயளவிற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதனை வெளிப்படுத்துவதிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் இறக்கின்ற இறுதிக்காலத்திலும் கூட கொழும்பு இந்து கலாசார அமைச்சால் நடத்தப்பட்ட ஆய்வரங்கிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வரங்கிலும் கட்டுரைகளை வாசித்திருந்தார். பேராசிரியராகி ஓய்வுபெற்ற பின்னரும்கூட அவர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதிலிருந்து ஓய்வுபெறவில்லை. வைத்தியசாலையில் அவர் இருந்த காலத்திலும் கூட அக்காலப்பகுதியில் நடைபெற்ற ஆய்வரங்குகளில் கலந்துகொள்ளமுடியவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியதாக அறிந்தேன். வைத்தியசாலையிலிருந்து மீண்டு வந்ததும் பல கட்டுரைகளை எழுதலாம் என்ற நம்பிக்கையில் அவற்றுக்கான குறிப்புக்களை எழுதிவைத்திருந்தார். அத்தோடு இறக்கும் இறுதிக்கணம் வரையும் வாசிக்கலாம் என்றுகருதி அவர் வைத்திருந்த புத்தகங்கள் தலையணையின் கீழும் கட்டிலிலும் இருந்தன. அந்தளவிற்கு வாசிப்பையும், ஆய்வையும், கற்பித்தலையும் நேசித்தார். குறிப்பாக ஈழத்து நவீன இலக்கியம், நாட்டாரியல், மரபிலக்கியம், பெண்ணியம், இதழியல், சிறுவர் இலக்கியம், இடைக்கால இலக்கியம், மலையக இலக்கியம், புகலிட இலக்கியம் என்று பல்வேறு தளங்களில் ஆய்வுப்பணியை மேற்கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். இவ்வாறு பல்வேறு தளங்களில் ஆய்வுப் பணியை முன்னெடுத்த பேராசிரியராக நான் அறிந்தவரை அவர் மட்டுமே இருந்தார் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பல்கலைக்கழகமென்பது சமூகத்தோடு இணக்கப்பாடுடைய பிரதான நிறுவனமாகுமென்பதைப் பேராசிரியர் புரிந்துகொண்டிருந்தார். சமூகமட்ட நிகழ்வுகளில் குறிப்பாக நூல் வெளியீடுகள், பாடசாலை விழாக்கள், கருத்தரங்குகள், ஆக்க இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள், பொது அமைப்புகளின் கலை இலக்கிய விழாக்கள் அனைத்திலும் அவரது பங்குபற்றுதல் இருந்தது. இன்னொரு வகையில் கூறுவதாயின் அவரது பங்குபற்றுதல் இல்லாத விழாக்களே இல்லையென்றுகூடக் கூறலாம். அதிதியாக அழைத்தால்தான் செல்வார் என்றில்லை. ஒரு பார்வையாளராகக்கூட சென்று யாரையும் இடையூறுக்குள்ளாக்காது எங்கோ ஓரிடத்தில் அமர்ந்துவிடுவார். இதனால் சமூகத்திலுள்ள பலராலும் அறியப்பட்ட ஒருவராகப் பேராசிரியர் திகழ்ந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்திலேயே அவர் எமது அழைப்பில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் பங்குபற்றியிருக்கின்றார். இதேபோன்று மட்டக்களப்பு நகர்ப்பகுதி, அம்பாறை, திருகோணமலை, வடபகுதி, கொழும்பு, மலையகம் என்று நாட்டின்

அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று தனது பல்கலைக்கழக வகிபாகத்தைச் சிறப்பாக வெளிப்படுத்திய ஒருவராகத் திகழ்ந்தார். இதன் காரணமாகவும் அவர் பலருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

அவர் வெறுமனே கல்வியை மட்டும் புகட்டவில்லை. எவ்வாறு சமூகத்தில் நாம் வாழவேண்டுமென்ற வாழ்வியலையும் உணர்த்தினார். பொறுமையைக் கடைப்பிடிக்கக் கற்றுத்தந்தார். விமர்சனங்களைத் தவிர்க்க வழிகாட்டினார். குறிப்பாக மென்மையே வாழுமென்று வாழ்ந்துகாட்டினார். கிழக்கிலங்கைத் தமிழர்களும் முஸ்லிம்களும் கூடுதலாக வாழுகின்ற பிரதேசம். யுத்தகாலத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் இரு இனங்களுக்கிடையேயும் கசப்புணர்வுகள் உள்ளன. சமகாலத்தில் இலக்கியம் - ஆய்வு என்பவற்றினூடாக மனிதநேயத்தையும் சமூக இணக்கப்பாட்டையும் கட்டியெழுப்ப முயன்ற ஒருவராகவும் பேராசிரியர் திகழ்ந்தார். அவ்வகையிலும் அவர் எமக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

பேராசிரியரது மாணவர்கள், அவருடன் நெருங்கிய உறவைப் பேணிய படைப்பாளர்கள், விமர்சகர்கள், ஆய்வாளர்கள், விரிவுரையாளர்கள், அவரது நண்பர்கள் அனைவரும் அவரை உரிமைகொண்டாடத் தகுதியுடையவர்கள். அவர் ஒருவருக்கோ, ஒரு குழுவிற்கோ, ஒரு பிரதேசத்திற்கோ, ஒரு சமூகத்திற்கோ உரிமையுடையவராகத் திகழ்ந்தவரல்லர். இன, மத, பிரதேச எல்லைகளைக் கடந்து மனித சமூகத்தை நேசித்த ஒருவராக அவர் திகழ்ந்தார். குறிப்பாகப் பேராசிரியர் என்ற தனது பதவியை முன்னிறுத்தாது சிறுவர் - பெரியவர், தமிழர் - முஸ்லிம், யாழ்ப்பாணத் தமிழர் - கிழக்குத் தமிழர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், படித்தவர் - படிக்காதவர் என்றெல்லாம் எவ்விதப் பாகுபாடும் காட்டாது அனைவருடனும் பழகியவர். எந்த அரசியல் குழுவாதங்களுக்குள்ளும் நுழையாதவர். ஆனால் தனக்கென்றொரு அரசியலை உறுதியாகப் பற்றி நின்றவர். யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்பு என்று இலங்கையின் மூன்று முக்கிய பிரதேசங்களில் ஆழமாகக் கால்பதித்த அவர் அனைவரையும் நேசித்தார். அவர் சிலரால் புறக்கணிக்கப்பட்டார் எனினும், அவர் யாரையும் புறக்கணிக்கவில்லை. உரத்துக் கத்தியும் போராடியும் சாதிக்கவேண்டிய விடயத்தைச் சத்தமில்லாது தனது எழுத்தின் மூலமாகச் சாதித்துவிட்டு அமைதியாகவிருந்தார். ஈழத்தின் அரசியற் சூழல் சார்ந்த படைப்புகளையும் ஆய்வுக்குட்படுத்தினார். அவற்றில் தான் சொல்ல விரும்பியதைத் துணிச்சலோடு வெளிப்படுத்தினார். ஆகையால் அவருக்கென்று கோட்பாடு இருந்தது. அவரது வாழ்வியலையும் அவரது எழுத்துகளையும் வாசித்தால் அதனைப் புரிந்துகொள்ளமுடியும்.


அவர் தனக்கான துறையைச் சரியாகவே தெரிவுசெய்ததாகத் திருப்திப்பட்டவர். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததும் தன்னை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ப்பித்ததாகவும் தனது நண்பர்கள் பலரும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளைத் தெரிவுசெய்து கல்வியைத் தொடர்ந்த போதிலும் தனது பெற்றோரின் ஆசிர்வாதத்துடன் தான் கலைப்பிரிவையே தெரிவுசெய்ததாகவும் சிலவேளை தானொரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வந்திருந்தால் கூட பிறருக்குத் தெரியாமல் மறைந்துபோயிருப்பேன் என்றும் கூறியிருக்கிறார். உண்மைக்கும் அவர் தமிழுக்குத் தொண்டாற்றப் பிறந்த பெருமகன்தான். அவரிடம் அதற்குரிய அத்தனை உயரிய குணங்களும் இருந்தன.

பேராசிரியரது இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு இரங்கலுரையாற்றிய அவரது இளவயது நண்பர் ஒரு சம்பவத்தைக் கூறினார். தன்னையும் யோகராசா அவர்களையும் அப்போது இந்தியன் ஆமி பிடித்ததாகவும் அதிலே தன்னை விட்டுவிட்டு யோகராசாவைக் கொண்டுசென்றவர்கள் இரண்டு, மூன்று அடிகளை அடித்துவிட்டு பின்னர் விட்டதாகவும், அதன் பின்னர், 'என்னடா உன்னை விட்டுத்து என்னைப் பிடிச்சித்துப் போய்விட்டாங்கள்' என்று யோகராசா அவர்கள் கூறியதாகவும் 'உனக்குடா ஆய்வுநோக்குக் கண். எல்லாத்தையும் கூர்ந்து கவனிக்கிற கண். அதுதான் பிடிச்சிருக்கிறாங்கள்' என்று தான் சொன்னதாகவும் சொன்னார். அவருடன் பழகியவரை அது மிகவும் சரியானது. அவர் மிகவும் கூர்ந்த அவதானிப்புடையவர். எல்லோரையும் மதிப்பிட்டு வைத்திருந்தார். தன்னை விமர்சித்தவர்களையும் அவர் நேசித்தார். அந்த ஏற்புடைமையும் அவரிடமிருந்தது.

ஏலவே கூறியபடி கற்பித்தலையும், ஆய்வையும், மற்றவர்களை வழிப்படுத்துவதையும் உயிர்மூச்சாகக் கொண்டு செயற்பட்ட பேராசிரியர் செ. யோகராசா தனக்கான கடமையை நிறைவேற்றுவதில் எப்போதும் கவனமாகவிருந்தார். என்னிடம் கூறியதுபோன்று 'இருபது மணித்தியாலங்களில் இரண்டு மணித்தியாலங்கள் விசிற்றிங் செய்யவில்லையென்பதைத் துறைத்தலைவரிடமும் கூறியிருக்கிறார். மாணவர்களிடமும் அழைப்பெடுத்துக் கூறியிருக்கிறார். தான் வந்துவிடுவேனென்றும் சொல்லியிருக்கிறார்.

அவரது வாழ்வின் இறுதி நிமிடத்தில் அவரது மகள் சுவஸ்திகா மகரகம வைத்தியசாலையில் நின்றார். கடைசியாக அவர் கதைத்த வார்த்தைகளில் ஒன்று, அந்த இரண்டு மணித்தியாலங்கள் வகுப்பெடுக்கவில்லை என்பதும், அம்மாவை நன்றாகப் பாரத்துக்கொள் என்பதுவுமாக இருந்தது. பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது உயிர் பிரிந்தது. அவரது பிரிவுத்துயர் எங்கும் வேகமாகப் பரவியது.

74 வயதுவரை வாழ்ந்தாலும் 150 வயதுக்கான ஆய்வுப் பணியை அவர் செய்துள்ளார். ஈழத்து நவீன இலக்கியம், தமிழக இலக்கியம், உலக இலக்கியம், மரபு இலக்கியம், இடைக்கால இலக்கியம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், இலக்கணம், பெண்ணியம், பின்காலனித்துவம், பின்நவீனத்துவம் உள்ளிட்ட கோட்பாடுகள் சார்ந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். இறுதிக் காலத்திலே ஈழத்தின் இலக்கண முன்னோடிகள் பற்றிய ஆராய்ச்சியிலேயே அதிகம் ஈடுபட்டார். இருபதுக்கு மேற்பட்ட நூல்களையும் இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். தான், தன்குடும்பம், தன் பிரதேசம் என்று வாழாது தமிழ்மொழிக்கே தன்னைத் தியாகம் செய்தார். அவரிழப்பு பேரிழப்பாகும். அவர் வெளியிடவேண்டுமென்ற நூல்களும் கட்டுரைகளும் உள்ளன. அவற்றை வெளியிடுவது அவரது பெரும்பணியை உலகறியச் செய்யும்.



megarajah@thaiveedu.com



# செ. யோகராசா (1949– 2023) : ஈழத்துப் பிராந்திய இலக்கியங்களின் கிட்டங்கி

– மு. நித்தியானந்தன்

2023-ஆம் ஆண்டு செ. யோகராசாவின் மறைவோடு அஸ்தமிப்பது துயரமானது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஒரே காலத்தில் அறிமுகமான நாங்கள், இருவேறு துறைகள் சார்ந்து எமது கல்வி அமைந்திருந்தபோதும், தமிழ் இலக்கிய ஈடுபாட்டால் மிக நெருக்கமானோம்.

செ. யோகராசா தமிழ் மொழியைச் சிறப்புக் கற்கை நெறியாகப் பயின்றவர். நான் பொருளியலைச் சிறப்பாக எடுத்திருந்தேன். தமிழைச் சிறப்பாகப் பயின்று கொண்டிருந்தோருக்கு 'புனைகதை' (Fiction) ஒரு பாடமாக அமைந்தது, கலாநிதி க. கைலாசபதி அப்பாடத்தின் விரிவுரையாளராக வந்தபோது,



அவரின் விரிவுரைகளை அவ்வாண்டு முழுதும் நான் தொடர்ந்து கேட்டு வந்திருக்கிறேன். இதனாலும், சித்ரலேகா மௌனகுரு, செ. யோகராசா ஆகியோருடனான எனது உறவு நெருக்கமானது. யோகராசாவை நான் ஒருபோதும் அந்தப் பெயரில் அழைத்ததில்லை. எனக்கு அவர் யோகன். கருணையோகன் என்ற பெயரில் அவர் அப்போதே கவிதைகள் எழுத ஆரம்பித்திருந்தார். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான எங்கள் உறவு அவர் மறையும் வரை தொடர்ந்திருந்தது. என்னைத் தேடி அவர் எனது விடுதிக்கு வருவதும், வெள்ளவத்தையில் அவர் தங்கியிருந்த இடத்திற்கு அவரை நாடி நான் செல்வதும் வழக்கமான விவகாரங்கள்.

பல்கலைக்கழகக் கல்வி முடிந்த கையோடு நான் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 'தினகரன்' ஆசிரியர் குழுவில் இணைந்தபோது, யோகன் கறுவாக்காட்டில் தபால் நிலையத்தில் பணியில் அமர்ந்தார். அவர் ஒழுங்காக முத்திரை விற்று, மீதிக் காசைச் சரியாகக் கொடுத்து, கணக்கை முடிக்கிறாரா அல்லது கையிலிருந்து காசைப் போட்டு கணக்கை நேர் செய்கிறாரா என்று நான் கவலைப்பட்டதுண்டு. வாசிப்பும் தேடலும் மிக்க யோகனுக்கு ஆசிரியர் பணி மட்டுமே உகந்தது என்பது எனது கட்டித்த அபிப்பிராயம். ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பின் அவர் முத்திரை விற்றுக்கொண்டிருந்த யுகத்திற்கு ஒரு முடிவு வந்தது. அவர் ஆசிரியரானார். மலையகத்தில் சிலகாலம் அவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது, அவருக்குப் புதியதோர் உலகம் தரிசனமானது. மலையகம் அவர் புகுந்த இடமானது. பின்னர் வடமராட்சியில் சில காலம் ஆசிரியத் தொழிலில் கழிந்தது. இந்தக் காலங்களில் அவர் தனது முதுகலைமாணிப் பட்டத்தையும் கல்வி டிப்ளோமாவையும் முடித்து விட்டிருந்தார்.

பேராசிரியர் சி. மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாகத் திகழ்ந்தபோது, யோகன் அங்கு தமிழ் விரிவுரையாளராகப் பதவி பெற்றமை, யோகனின் இலக்கியப் புலமைக்குப் பெருந்தளமிட்டது. மட்டக்களப்பு அவர் மண்ணாகியது. கிழக்கிலங்கையின் இலக்கிய வாசத்தில் அவர் லயித்தார். புதிய தலைமுறை எழுத்தாளர்கள் இவரின் முன்னுரைக்கு கியூவில் நின்றனர். கற்றுக்குட்டிகளின் படைப்பிலும் நயம் கண்டு, குறைகளை நோகாமல் சொல்லி, மயிலிறகால் வருடிக்கொடுக்கும் safe ஆன முன்னுரைக்காரராக யோகன் மாறியிருந்தார். யோகன் 200 நூல்களுக்கு முன்னுரை கொடுத்திருக்கிறார். த. மேகராசா பதிப்பித்திருக்கும் 'செ. யோகராசாவின் ஈழத்து நவீன இலக்கியங்கள்-படைப்பாளர்கள்-தடங்கள்' என்ற நூலில் யோகன் எழுதிய 76 நூல் முன்னுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில், 65 முன்னுரைகள், புதிய எழுத்தாளர்களின் முதற்படைப்புகளுக்கு எழுதப்பட்டவையாகும்.

ஒரு நூல் எழுந்த பிராந்தியம், அப்பிராந்தியத்தின் இலக்கியச் சூழல், வரலாற்றுச் சம்பவங்கள், தொன்மங்கள், வாசிப்பு நிலை, இலக்கிய மன்றங்களின் செயற்பாடு, விமர்சன



வளர்ச்சி, முன்னோடிகளின் ஒத்துழைப்பு, இயற்கை அனர்த்தங்களாலும் உள்நாட்டுப் போரினாலும், அகதிகளாக இடம்பெயர்ந்த நிலைகள் அப்பிராந்தியத்தின் இலக்கிய ஸ்திரப்பாட்டிற்கு ஊறு விளைவித்த தன்மை, இலக்கிய மரபு போன்றனவற்றின் பின்புலத்தில் யோகனின் முன்னுரைகள் அமைகின்றன. இத்தகைய பிராந்திய இலக்கியங்களில் அவ்வப்பிரதேச புவியியல் எல்லைகள், அடையாளம், ஊர்ப்பற்று, ஊர்ப்பெரியவர்களின் மாண்பு, கலாசார முதுசம், குடிவழி அல்லது குடும்ப மரபு, அப்பிரதேச வழக்காற்றியல், தலபுராணங்கள் என்பன பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. யோகனின் அக்கறை இந்தப் பிராந்திய எழுத்துக்களின் மீது கவிந்துள்ளது. பிராந்திய எழுத்துலகு என்பது பெருங் கூடாரம் போன்றது.

இலங்கையில் நம் இலக்கிய வாசிப்பிற்குள் வந்து சேராத பல பிராந்தியங்கள், தொழில் முறைகள், சமூக மாற்றங்கள், முரண்பாடுகள் எவ்வளவோ உள்ளன. கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று வரையுள்ள, 25 மைல் எல்லைக்குட்பட்ட பிரதேச அலகுகளில் 275,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வியற் கோலங்கள் வேறுபட்டன. தொழில் முறைகள், சமூக உறவுகள், அயலகக் கிராமங்களின் ஊடாட்டங்கள், பொருளாதார முன்னேற்றங்கள், கல்வி வளர்ச்சிகள், அரசியல் நிலைமைகள் என்பன இலக்கியங்களில் இன்னும் போதிய அளவு கொண்டுவரப்படவில்லை.

இத்தகு பிராந்தியங்களில் முகிழ்க்கும் இலக்கிய வெளிச்சங்களை யோகன் அக்கறையோடு அவதானிக்கிறார். இருநூற்றுக்கும் அதிகமாக அவர் எழுதியுள்ள முன்னுரைகள் தொகுக்கப்படும்போது, புதிய இலக்கிய நிலத்தோற்றங்கள் நம் கண்ணில் படும் நல்ல வாய்ப்பு உருவாகும்.

யோகனின் கட்டுரைகள் அளவிற் சிறியன. அனைத்தையும் அவர் bullet points களில் தருவதை வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார். கொள்ளையான தவல்கள், விபரங்களைக் கொண்ட கிட்டங்கி அவர். இந்தத் தரவுகளை சமூக அசைவியக்கங்களோடும் இலக்கிய மரபின் செழுமையோடும் பொருத்திப் பார்த்து, கோட்பாட்டுருவாக்கம் செய்யும் பண்பினை யோகனின் விமர்சனங்களில் காணமுடிவதில்லை.
யோகனின் நுண்ணிய தேடல்கள், பரந்த வாசிப்பு என்பனவற்றிற்கு அவர் தொகுத்தளித்திருக்கும் 'ஈழத்து சிறுவர் அறிவியல் பாடல்கள்', 'ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு', 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்', 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்', 'ஈழத்துத் தமிழியல்சார் தமிழ் ஆய்விதழ்கள்' ஆகியன அரும்பெரும் சான்றாகும். ஒரு பெரும் நிறுவனம் மட்டுமே செய்து முடித்திருக்கக்கூடிய பணியினை யோகன் தனியொருவராக நின்று, தேடி, திரட்டி, வகைப்படுத்தி, தொகுத்து இலக்கியக் கருவூலங்களாக நமக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அத்தகு தேடலும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்ட இன்னொரு ஆய்வாளனை நம் காலத்தில் நாம் இனிக் காண்பதரிது.


இலக்கியமும் வாசிப்புமே யோகனின் மூச்சாக இருந்திருக்கிறது. ஏனைய லௌகீக விடயங்கள் எதுவுமே அவருக்கு ஆர்வத்தைக் கிளர்த்துவதில்லை. என்றும் புன்னகை தவழும் முகமும் எளிமையும் எவரையும் புண்படுத்தாத இனிய பாங்கும் மென்மையும் கருணையும் மிகுந்த யோகன், நாம் வாழ்வில் சந்தித்திராத மிகப் பெருஞ் சவால்களை அவர் தன் வாழ்வில் சந்தித்து மீண்டிருக்கிறார் என்பதைச் சொல்லியாக வேண்டும். ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான ஆற்றோட்ட வாழ்வாக அவரது வாழ்வு அமைந்திருக்கிறது. உக்கிரமமான மோதல்களும் வன்முறைகளும் அபாயமான சூழலும் உயிராபத்துகளும் இனவெறுப்புகளும் அலைமோதிய ஒரு காலப்பகுதியில், ஒரு சித்தனைப் போல அவர் இலக்கியக் கருமமாக்கியவாறிருந்திருக்கிறார். 'நானே எழுத வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன' என்று அவர் என்னிடம் கூறியிருக்கிறார்.

இரா. முரளீஸ்வரன் எழுதிய 'ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்' என்ற நூலுக்கு யோகன் எழுதிய முன்னுரையில், முரளீஸ்வரனின் கவிதை வரிகளைச் சிலாகித்து மேற்கோள் காட்டியிருந்தார். அந்த வரிகள் இவை:

***சில வார்த்தைகள்***
***சொல்லப்படாமல் வாழ்க்கை முடிந்துவிடுகிறது***
***சில வார்த்தைகள்***
***கேட்கப்படாமல் வாழ்க்கை முடிந்துவிடுகிறது***



nithiyananthan.m@thaiveedu.com



# பேராசிரியர் செ. யோகராசா

## - பாலசுகுமார்

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தன் எழுத்தாலும் வாசிப்பாலும் நிலைபேறுபெற்ற ஒருவர். முப்பது வருடங்களுக்கு மேலான நட்பும் தோழமையும் அறிவார்ந்த அணுக்கமும் உடையவராக என்னோடு இருந்தவர்.

யோகராசா என்றதும் என் நினைவுக்கு வருவது அவரது தீவிரமான வாசிப்பு. 'வாசிப்பின் காதலன்' என்பேன் அவரை. மட்டக்களப்பில் என் பக்கத்து வீடு. என்ன நடந்தாலும் கலங்காத உள்ளம். ஆனால், என் மகள் அனாமிகாவின் இழப்பில் கலங்கி நின்றவர்.

சென்றாண்டு சேனையூர் அனாமிக்காப் பண்பாட்டு மைய வருடாந்த கலை இலக்கியக் கூடலில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, அவர் திருகோணமலை இலக்கியம் பற்றிப் பேசிய உரை இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்து இலக்கியம் பற்றிய தகவல் பெட்டகம் அவர். அதில் அவரது தேடலின் ஆழத்தை அறியலாம். விரல் நுனியில் எல்லாம் அறிந்து வைத்திருந்தார். காத்திரமான விமர்சனப் பார்வை இருந்தது என்பதை மறுத்துவிட முடியாது.

குறிப்பாக ஈழத்தின் நவீன தமிழிலக்கியம் பற்றிய புரிதல் அவரிடம் மிகையாகவே இருந்தது என்பேன். ஈழத்துக் கவிதை பற்றிய அவரது ஆய்வு மிக முக்கியமானது.

பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு வஞ்சகம் செய்யாத பேராசிரியர். ஏன் சொல்கிறேன் என்றால், விரிவுரைகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னமே பாடத்திட்டத்துக்கேற்ப நிறைவு செய்து, விரிவுரையாளர்களுக்கு ஒரு முன்னுதாரணம் என்பேன்.

நான் கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதியாக இருந்த காலத்தில் அவரது கடமை தவறாத பண்பைப் பார்த்திருக்கிறேன். ஒரு நேர்த்தியான விரிவுரையாளர்.

என்றும் என் நினைவில்...



bala.sugumar@thaiveedu.com





## பேராசிரியர் செ. யோகராசா :

# தமிழ் இலக்கிய வெளியில் ஒரு பரந்த குரல்

**– ஜிஃப்ரி ஹாசன்**

ஈழ இலக்கியவெளியில் நான் இரண்டாயிரமாம் ஆண்டுத் தலைமுறையைச் சேர்ந்தவன் என்றவகையில் பேராசிரியர் செ. யோகராசா எழுத்துரீதியாக எனக்கு முதன் முதலில் தோழர் எம். பௌசர் பிரதம ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'மூன்றாவது மனிதன்' இதழ் மூலமே 1999-ல் அறிமுகமானார். 1996-ம் ஆண்டு வெளிவந்த மூன்றாவது மனிதன் இதழ் -03 எனக்கு 1999-ல் வாசிக்கக் கிடைத்தது. அந்த இதழில் பேராசிரியர் தமிழகத்தின் புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியரான மதியழகனைப் பேட்டி கண்டிருந்தார். இலக்கியத்தின் தொடக்க காலகட்டத்தில் தீவிரமான தேடலோடு பயணத்தைத் தொடங்கியிருந்த என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் எழுச்சியூட்டிய நேர்காணல் அது. மிக ஆழமான கேள்விகள். இலக்கியம் குறித்த நுண்மையான பார்வைகள். ஒரு நல்ல வழிகாட்டலாகவும், கருத்துப் பகிர்வாகவும் அந்த நேர்காணல் அமைந்திருந்ததால் பேராசிரியர் யோகராசாவின் பெயர் என்னில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பின்னர் மூன்றாவது மனிதன் 07-வது இதழில் 'ஈழச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1930-1955) ஒரு மறுமதிப்பீடு' எனும் கட்டுரையை எழுதியிருந்தார். ஒரு சிறிய இரண்டு பக்கக் கட்டுரைதான் என்றாலும், அது ஈழச்சிறுகதை வரலாறு பற்றிய ஒரு மறுவாசிப்பை முன்வைத்தது. புதிய மாற்றுப் பார்வைகளையும், விவாதங்களையும் கோரிய கட்டுரை அது. இதுவும் அந்நாட்களில் எனக்கு மிகவும் பிடித்துப் போனது. இந்தக் கட்டுரையில் மிக முக்கியமான ஒரு பக்கத்தைப் பேராசிரியர் தொட்டிருந்தார். ஈழத்தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்த கதையாடல்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே நின்றிருந்தது. இந்தக் கட்டுரையில் பேராசிரியர் ஈழத் தமிழ்ச் சிறுகதையின் வரலாறு குறித்த மேலோட்டமான விதந்தோதல்களைத் துணிச்சலாகத் தகர்த்து, மறைக்கப்பட்டிருந்த இன்னொரு பக்கத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சினார்.

*'ஈழத்தமிழ்ச் சிறுகதையின் தோற்றம் பற்றி இதுவரை ஆராய்ந்துள்ளோர் பலரும் இலங்கையர் கோன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகிய மூவரையுமே முன்னோடிகளாக முதன்மைப்படுத்தி வந்துள்ளனர். இம்மூவரதும் கதைகள் பெரும்பாலும் வரலாற்று இதிகாசச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தனிமனித அவலங்களையும், உணர்வுகளையும் சமூக யதார்த்தச் சூழலின்றி வெளிப்படுத்தின. அதாவது மனோரதியப் பாங்கில் அமைந்திருந்தன. ஆனால் அண்மைக்கால ஆய்வுகள் மேற்கூறிய முன்னோடிகளுக்குச் சமாந்தரமாக வேறுசில எழுத்தாளர்களை இனங்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக ஆனந்தன், 'சுயா' போன்ற படைப்பாளிகளைக் குறிப்பிடலாம். இவர்களது படைப்புகள் சமகாலச் சமூகப் பிரச்சினைகள் சிலவற்றை வெளிப்படுத்தியுள்ளன. இவர்களுள் ஆனந்தன் 1939-லேயே முற்போக்கான சிந்தனைகளோடு சாதிப் பிரச்சினையின் ஒரு பக்கத்தை நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளார். இந்த மண்ணின் பிரச்சினையை மண்வாசனையோடு முதன்முதலில் எழுதியவர் ஆனந்தன்...'*

அவரது இந்த வரிகள் திரும்பத் திரும்ப எழுதி உச்சரிக்கப்படும் கருத்துகளுக்கெதிரான புதிய பார்வைக்கான அவசியத்தை வலியுறுத்துவதாக இருக்கிறது. அடுத்த தலைமுறை புதிய தேடலை விரித்துக்கொண்டு முன்செல்லத் தூண்டுகிறது. எனவே தமிழ் இலக்கிய ஆய்வுகள் சார்ந்து அவர் ஓரிடத்தில் தேங்கி நிற்பதை விரும்பாமல் அகலித்த பார்வைகள் நமக்குள்ளிருந்து மேற்கிளம்ப வேண்டும் என விரும்பினார். 'இங்கு நாம் நினைவுகூரவேண்டியது யாதெனில், இலங்கையர் கோன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோரின் சிறுகதைப் போக்கிற்குச் சமாந்தரமாகச் சமூக நோக்கும் யதார்த்தப் பாங்கும் கொண்ட இன்னொரு போக்கு சமகாலத்தில் நிலவி வந்துள்ளது என்பதே, 'பேராசிரியரின் இத்தகைய மாற்றுப் பார்வைகளும், சிந்தனைத் தெறிப்புகளும் புதிய தலைமுறைக்கான திசைகாட்டியாக வெளிப்பட்டவை என்று நம்புகிறேன்.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றுப்போக்கில் கண்டுகொள்ளப்படாத பக்கங்களை நோக்கி அவரது ஆய்வுப் பார்வையும் தேடலும் விரிந்திருந்தது. தொடக்ககால ஈழச் சிறுகதைத்துறைக்கு மலையக எழுத்தாளர்களின் பங்களிப்புக் குறித்த பார்வைகள், கருத்துகள் பெரிதாக இங்கு நிலவவில்லை. ஈழத்தமிழ்ச் சிறுகதைக்கு அங்கிருந்தும் தொடக்ககாலத்தில் கிடைத்த பங்களிப்புகளைப் பொதுவெளியில் பதிவுசெய்தார். புறக்கணிக்கப்பட்டவர்களின் குரல்கள் மீது பேராசிரியர் யோகராசாவுக்கு எப்போதும் ஈடுபாடு இருந்தே வந்திருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று என்றே தோன்றுகிறது.

'இதே காலப்பகுதியில் - முப்பதுகளில் - மலையகத்திலும் சிறுகதைக்கான ஆரம்ப முயற்சியொன்று மின்னல் கீற்றுப் போலத் தோன்றியது. கோ. நடேசய்யர் மலைநாட்டுத் தொழிலாளர் பற்றி ஓரிரு கதைகள் எழுதியதாக அறியமுடிகின்றது.

எடுத்துக்காட்டாகத் திரு. இராமசாமிச் சேர்வையின் சரிதம் கதையைக் குறிப்பிடலாம்’.

செ. யோகராசா ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பரந்த குரல் என்ற வகையில் ஈழத்துத் தமிழ், முஸ்லிம் படைப்புலகுடனும், படைப்பாளிகளுடனும் அவர் கொண்டிருந்த உறவும், ஊடாட்டமும் மிகவும் முக்கியமாகப் பதிவுசெய்யப்பட வேண்டியது என்று நினைக்கிறேன். பேராசிரியரின் இந்தப் பங்களிப்புக் குறித்துப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, ‘*தமிழில், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற வகைப்பாடு ஏற்படுவதற்குப் பேராசிரியர்களான விபுலாநந்தர், கணபதிப்பிள்ளை, வித்தியா நந்தன் ஆகியோர் மிக முக்கியபங்கு வகித்துள்ளனர். சமகாலத்தில் அவ்வழியே குறிப்பிடப்பட வேண்டியவர்களுள் மிக முக்கியமானவர் பேராசிரியர் யோகராசா*’ என்று ஜீவநதி இதழில் எழுதுகிறார்.

ஈழ இலக்கியத்தின் பல்வேறு தளங்களிலும் இயங்கிய தமிழ், முஸ்லிம் படைப்பாளிகள் மீது அவர் ஏற்படுத்திய கவனம் மிகவும் முக்கியமானது. கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற தளங்களில் ஈழத் தமிழ், முஸ்லிம் படைப்பாளிகளின் பங்களிப்பைச் சற்று விரிவாகச் சமகாலம் வரை அகலித்த பார்வையோடு பதிவுசெய்த ஒரே பேராசிரியர் செ. யோகராசாதான் என்று உறுதியாகச் சொல்வேன். ஈழத்து விமர்சனத்துறைக்கு எம்.எம்.எம். மஹ்ரூஃப் ஆற்றிய பங்களிப்புப் பற்றி இதுவரை யாரும் பதிவுசெய்ததில்லை என்றே நம்புகிறேன். மஹ்ரூஃபை இலங்கை முஸ்லிம்கள் குறித்த வரலாற்று, சமூகவியல், பண்பாட்டு மானுடவியல் அறிஞராகவும், ஆய்வாளராகவும், வரலாற்றாசிரியராகவுமே நாம் அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால் அவரது ஈழ இலக்கியத்துக்கான விமர்சனத்துறைப் பங்களிப்பு என்பது பலராலும் கண்டுகொள்ளப்படாத சூழலில் அதை முன்னிறுத்தியவர் பேராசிரியர் யோகராசா.


ஈழப் புனைவிலக்கியத்தில் மேலும் பல அங்கீகாரம் மறுக்கப்பட்ட படைப்பாளிகளின் மீது அவரது பார்வை விரிந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த எழுத்தாளர் பித்தன் இவ்வாறு பேராசிரியரால் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட எழுத்தாளர். ஈழத் தமிழ்ச் சிறுகதையின் தொடக்ககாலப் படைப்பாளிகளுள் ஒருவரான பித்தன் போதியளவு கவனம் பெறாத ஒருவராக இருந்தார். பித்தனின் கதைகள் தொகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்தும் அவர் வலியுறுத்தி வந்தார். ‘*பித்தன் சிறுகதைகள் மட்டக்களப்புச் சிறுகதை வரலாற்றிலோ முஸ்லிம் சிறுகதை எழுத்தாளர் சிறுகதை வரலாற்றிலோ மட்டுமன்றி ஒட்டுமொத்த ஈழச்சிறுகதை வரலாற்றிலேயே முக்கிய இடம் பெறக்கூடியன*’ என்று எழுதினார். பித்தன் கதைகள் குறித்த பேராசிரியரின் இந்தக் கருத்து வெறும் விதந்தோதல் என்று கருதமுடியாது. உண்மையில் பித்தனின் கதைகள் அந்தத் தளத்தில் நின்றவைதான்.

ஈழத்துத் தமிழ் முஸ்லிம் வாழ்வியலை முதன்முதலில் புனைவுக்குள் கொண்டு வந்தவர் சுபைர் இளங்கீரன்தான் என்கிற கருத்து யோகராசாவிடமிருந்தது. அவர் ஈழ எழுத்தாளர்களின் படைப்புலகுடனும், அவர்களின் எழுத்துகளுடனும் தொடர்ச்சியாக ஓர் இடையறாத பயணத்தை நிகழ்த்தி வந்திருக்கிறார். பெரும்பாலான ஈழப் படைப்பாளிகளின் படைப்புகள் குறித்து அவரிடம் அபிப்பராயங்கள் இருந்தன. தென்னிலங்கை எழுத்தாளர் திக்வல்லைக் கமாலின் படைப்புலகு குறித்து ஒரு விரிவான கட்டுரையை ஜீவநதி இதழில் எழுதினார். எந்தவொரு பேராசிரியரின் பார்வைக்கும் படாத கமாலின் படைப்புலகு குறித்த முதல் விரிவான கட்டுரை அது என்றுதான் நினைக்கிறேன். தென்னிலங்கைத் தமிழின் ஓசை, பேச்சுப் பாணி, பண்பாடு போன்றவற்றை அவரது படைப்புகளிலிருந்து யோக-ராசா ஆய்வுரீதியாக முன்வைத்தார்.

அவர் தனிமனித நிலைசார்ந்து ஒரு சிறந்த மனிதாபிமானியாக இருந்தார். எவர் மனதும் புண்படாத வகையில் தன் இலக்கியச் செயற்பாட்டைக் கவனமாக முன்னெடுத்தவர் பேராசிரியர். இதனால் ஒரு குறிப்பிட்ட கருத்தியல், அரசியல் நிலைப்பாடுகள் என எதையும் அவர் சார்ந்திருந்ததாக நம்மால் யூகிக்க முடியாததாகவே அவரது பொதுவெளி எழுத்துகள் இருந்தன. தனிப்பட்ட வகையில் அவரிடம் அரசியல் நிலைப்பாடுகள் கருத்துநிலைகள் இருந்திருக்கலாம். ஆனால் அதனைத் தன் விமர்சன எழுத்துகளில் அவற்றை அவர் பிரயோகிக்கவில்லை என்றே நினைக்கிறேன். இதனால் சில சமகாலப் படைப்புகள் சார்ந்து அவரது விமர்சன நோக்குகள் கறாரானதாகத், தீவிர நிலைப்பாடு கொண்டதாக அமையவில்லை. மிக மேலோட்டமானதாக, எல்லாவற்றுக்கும் அங்கீகாரம் வழங்கிவிடுகிற நெகிழ்வுத்தன்மை கொண்டதாகவே அவரது விமர்சனக் கட்டுரைகள் ஆழமற்றுப் போயின. எனது இலக்கியப் பயணத்தின் தொடக்க காலத்தில் மூன்றாவது மனிதனில் வாசித்த அவரது ஆரம்பக் கட்டுரைகளில் தெரிந்த ஆழ்ந்த நோக்கும், பார்வையும் சமகாலத்தில் அதே வீச்சுடன் வெளிவரவில்லை என்ற மனக்குறை எனக்குண்டு. கிழக்கில் சில படைப்புகளுக்கு அவர் எழுதிய முன்னுரைகள் மிக மேலோட்டமானவையாக இருந்தன. அந்த எழுத்தாளரின், கவிஞரின் மனம் நோகாமல் விதந்தோதலாகவே எழுதிக் கொடுத்தார். இலக்கியத் தரமற்ற, மிக மேலோட்டமான எழுத்துகளுக்கும் இதனால் ஒரு கவனயீர்ப்பு ஏற்பட்டது. வழமை போன்று விருதுகளும் கிடைத்தன.

அதே நேரம், தீவிர இலக்கியப் படைப்புகளைத் தந்த அரசியல் மற்றும் கருத்தியல் நிலைப்பாடுகள் கொண்ட படைப்புகள் குறித்து அவர் மௌனமாகக் கடந்துசென்ற சந்தர்ப்பங்களும் உண்டு. ஈழ இலக்கியத்தின் அரசியல் உள்ளடக்கம் சார்ந்து இரு போக்குகளாக இருக்கும் புலி ஆதரவு இலக்கியம், புலி எதிர்ப்பு இலக்கியம் எனும் இரு முகாம்களில் அவரது சார்பியம் புலி ஆதரவு இலக்கியத்தின் மீது இருந்ததை நான் அவதானித்திருக்கிறேன். அவருக்குச் ஷோபா சக்தியை விட குணா கவியழகனே உவப்பான படைப்பாளியாக இருந்தார். அது அவரது இலக்கிய அரசியல் நிலைப்பாடு சார்ந்த விடயம். ஆனால் அவர் தன் நிலைப்பாட்டைத் தனது விமர்சனங்களில் வெளிப்படையாகப் பதிவுசெய்யத் தயங்கினார். அது அவரது எதிர்க்கருத்து முகாமினரைக்கூட நோகடித்து விடக் கூடாது என்கிற அவரது மென்போக்கு மனநிலையின் காரணமாகக் கூட நடந்திருக்கலாம்.

ஒரு நல்ல மனிதநேயவாதியாகவே கடைசிவரை வாழ்ந்துவிட்டுப் போன அவரது சில இலக்கிய ஆய்வுகள் இலக்கியத்தில் அவரது இடத்தை என்றும் உறுதிசெய்யக்கூடியன.



jiffry.hassan@thaiveedu.com



# ‘கவனமாகப் போங்கள்’

## யோகராசாவுடனான ஓர் அனுபவம்

– சி. மௌனகுரு

1999 செப்ரெம்பர் மாதம் எனது இதயத்தில் சில பிரச்சி னைகள் எனக் கண்டறிந்த மட்டக்களப்பு வைத்தியசாலை வைத்தியர்கள் உடனடியாக என்னைக் கொழும்பிற்கு அனுப் பிவைத்தனர்.

கொழும்பில், வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற் கொண்ட போது மிகுந்த ஆபத்தான நிலையில் இருக்கின் றேன் என்பதை அறிந்து உடனடியாக என்னை அவசர சிகிச் சைப் பிரிவில் அனுமதித்து விட்டார்கள்.

அடுத்த நாள் அஞ்சியோகிராம் எனும் இருதயப் பரிசோதனை செய்தபோது, எனது இரத்த நாளங்களில் பல அடைப்புகள் உள்ளன எனக்கண்டு, உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் எனக்கூறி, நவலோகா வைத்தியசாலையில் அனு மதித்தும் விட்டார்கள்.

நான் மிகவும் திகைப்படைந்து போனேன். மரணிக்கப் போகி றேன் என்றுதான் எண்ணிக்கொண்டேன்.

மரணிக்கமாட்டேன் என்று இன்னொரு உணர்வு கூறியது. இன் னும் வாழ வேண்டும் என்ற ஓர்மம் மனதில் தலைதூக்கியது.

ஆப்பரேஷன் அறைக்குள் கொண்டு செல்லப்படும் போது திரும்பிவருவேன், திரும்பிவருவேன் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டிருந்தேன்.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. அவர்கள் சொன்ன பயிற்சிகளை ஒழுங்காகச் செய்தேன். மெல்ல மெல்லத் தேறி யும் விட்டேன். அச்சமயம் ஒரு கவிதையும் எழுதி இருந்தேன்.

என்னைப் பார்ப்பதற்காக யோகராசா வீட்டுக்கு வருகிறார். அனுபவங்களையெல்லாம் கூறிக் கவிதையை வாசித்துக் காட்டினேன். அதன் சில வரிகள் இவை;

***‘நடந்தே கழிய வேண்டும் பயணம்***
***வாழ்ந்தே கழிய வேண்டும் வாழ்க்கை***
***வாழ வேண்டும் வாழ வேண்டும்***
***இறக்கும்வரைக்கும் வாழ வேண்டும்’***

யோகராசாவிடம் வாசித்துக் காட்டிய பின்னர் சிரித்துக் கொண்டு;

‘யோகராசா எனக்கு அஞ்சலி ஆற்றுகின்ற அருமையான சந் தர்ப்பத்தை நீங்கள் இழந்துவிட்டீர்களே. நான் இறந்தால் நீங் கள் என்ன உரையாற்றியிருப்பீர்கள் என்று யோசிக்கிறேன்’ என்றும் கூறினேன்.

அவர் என்னிடம் சிரித்தபடி இவ்வாறு கூறினர்;

‘நீங்கள் தான் எனக்கு அஞ்சலி உரையாற்றுவீர்கள். ஆனால் நீங்கள் என்ன பேசினீர்கள் என்பதையறிய நான் இருக்க மாட் டேனே’ என்றார்.

இருவருமே வாய்விட்டுச் சிரித்துக்கொண்டோம்.

யோகராசா எப்போதும் நசிக்கிடாமல் பகிடி விடுவார். அவ ரது குணாம்சங்களில் அதுவும் ஒன்று. நகைச்சுவை உணர் வுள்ளவர்கள்தான் வாழ்க்கையை நன்கு அனுபவிப்பார்கள் என்பது எனது கொள்கை, அனுபவம்.

அஞ்சலியுரை நிகழ்த்தாவிடினும் அவர் என்னைப்பற்றி இரண்டு நூல்கள் எழுதியிருக்கிறார். ஒன்று நான் பல்கலைக்கழகத்தி லிருந்து ஓய்வுபெற்ற போது அவர் எழுதிய நூல். அவருடைய தகவல் சேகரிப்பு அதில் எனக்குத் தெரிந்தது.

பல நாட்களாக என்னுடன் உரையாடியெழுதிய இன்னொரு நூல், ‘சங்க காலம் முதல் சமகாலம் வரை’ என்பதாகும். இந்த நூலில் அவர் கேள்விகளால் என்னைத் தோண்டியெடுத்திருந் தார்.

நாடகத்தைப் பற்றி எந்தக் கேள்வியும் அதிலே இல்லை. நாட கம் தவிர்ந்த எனது வேலைகளைக் கூறும் நூல் அது.

எனக்கு அஞ்சலியுரை நிகழ்த்தியிருந்தால் அவர் என்ன பேசி யிருப்பார் என்பதனை ஓரளவு அந்த நூல்கள் எனக்குக் கூறின.

நான் அவரைப்பற்றி என்ன கருத்துகள் வைத்திருக்கிறேன் என்பதை அறியாமலேயே அவர் போய்விட்டாரே என்பதுதான்

எனது கவலையாக இருக்கிறது.

யோகராசா வாழ்க்கையை நன்கு அனுபவித்தார். நான் 'நன்கு' என்று கூறுவதில் பல அர்த்தங்கள் உள்ளன.

இறுதியில் நானே அவருக்கு அஞ்சலியுரை நிகழ்த்தவேண்டியதாயிற்று. அந்த அஞ்சலியுரை கேட்க அவரில்லை. அவரது மரண வீட்டில் அஞ்சலியுரையில் நான் அவரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார்.

பேச்சில் நான் இந்த அனுபவத்தைக் குறிப்பிட்டேன். அவர் உயிருடன் இருந்தபோது, அவரைச் சந்திக்க நான் மஹறகம வைத்தியசாலைக்குச் சென்றேன். சேர்லைன் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிறு குழந்தை போல அவர் மல்லாந்து படுத்துக்கொண்டிருந்தார். அவருடைய உடலின் கால், கை, நெற்றி எனச் சில பாகங்கள் கறுத்திருந்தன.

அவர் அருகிலே மூன்று தாதிகள் நின்று கொண்டிருந்தார்கள். மூவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் அவரைக் காட்டி,

'இவரை உங்களுக்குத் தெரியுமா ?' என்று கேட்டேன்.

'இல்லை' என்றார்கள்.

'இவர் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர்' என்றேன்.

அந்த மூன்று பெண்களின் கண்களும் வியப்பால் விரிந்ததைக் கண்டேன்.

'எங்களுக்கு இது தெரியாதே' என்றார்கள்.

நான் யோகராசாவின் பெருமையெல்லாம் கூறி, மிகவும் பெறுமதியான மனிதர் இவர். அவரை நன்கு கவனித்துக்கொள்ளுங்கள். இது உங்களுக்கு வாழ்க்கையில் கிடைத்த பெருவரம்' என்று கூறினேன். மிகுந்த மரியாதையுடன் அவர்கள் யோகராசாவைப் பார்த்தார்கள்.

நான் அருகில் அமர்ந்து, அவர் கைகளைப் பிடித்துக்கொண்டேன். அதன் மென்மையை அனுபவித்தேன், அவர் தலையைத் தடவினேன். அவர் கண்கள் என்னை நோக்கின. அவர் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அவர் புன்னகைத்துக்கொண்டு என்னோடு பேச முயன்றார்.

அவர் வார்த்தைகளிலிருந்து வந்த முதல் வரி, அன்று நான் எழுதிய அந்தக் கவிதை வரிதான்.

***'நடந்தே கழிய வேண்டும் பயணம்
வாழ்ந்தே கழிய வேண்டும் வாழ்க்கை
வாழ வேண்டும் வாழ வேண்டும்
இறக்கும்வரைக்கும் வாழ வேண்டும்'***

அவர் வாயிலிருந்து இந்த வரிகள் வந்தன. அவர் தொடர்ந்து பேசினார்.

'உங்களைப் போலதான் நானும் மனதுக்குள் எண்ணிக்கொண்டிருக்கிறேன்'.

'எனக்கு ஒன்றுமில்லை
திரும்பி வருவேன், திரும்பி வருவேன்
திரும்பி வருவேன்' என்றார்.

இதனை அவர் வழக்கமான பகிடித் தொனியில் கூறவில்லை. மிகவும் சீரியஸாகத்தான் கூறினார். ஆனால், அவரது அந்த நிலை எனக்கு நம்பிக்கை தருவதாகவில்லை. அவர் திரும்பி வரார் என்றே மனம் கூறியது. அவருடைய உடல், முகத்தோற்றம் எனக்கு நம்பிக்கை தருவதாகவில்லை.

சித்ராவுடன் பேசினார். சித்ராவும் அவரும் நல்ல நண்பர்கள். பல்கலைக்கழக நண்பர்கள். இருவரும் உரையாடுவது சுவ



ராசியமாக இருக்கும். சித்ராவும் அண்மையில் நோயிலிருந்து மீண்டிருந்தார்.

நோயோடு போராடி வெற்றிகண்ட சித்ராவின் துணிவு பற்றி என்னிடம் ஏற்கனவே யோகராசா சிலாகித்திருக்கிறார்.

பல மாதங்களுக்கு முன்னர் உடலாலும் மனதாலும் சோர்ந்து போயிருந்த யோகராசாவைக் கண்ட சித்ரா, 'உடனடியாக உடம்பைப் பரிசோதியுங்கள்' என்று அவரை வற்புறுத்தியது எனக்கு ஞாபகம் வந்தது. சித்ராவைக் கண்டதும் அந்த வற்புறுத்தல் அவருக்கும் ஞாபகம் வந்திருக்கக்கூடும்.

எங்களைப் பார்த்து அவர் இறுதியாகக் கூறிய வார்த்தைகள்... 'கவனமாகப் போங்கள்' என்பதுதான்.

கவனமாகத்தான் போகிறோம். எத்தனை கவனம் இருந்தும் என்ன யோகராசா, வாழ்வின் பிறப்பு என்பது ஒரு பக்கம் எனில் இறப்பு என்பது மறுபக்கம் தானே ?



maunaguru.s@thaiveedu.com

# "சேரும் நானும்" எனது தந்தைக்கு நிகரானவர்

## - சந்திரசேகரன் மணிசேகரன்



ஒரு மாதத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நிறையப் பேர் உங்களைப் பற்றி நிறைய எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் என்னால் உங்களைப் பற்றி இன்னும் எழுதக் கூடிய மனநிலையை அடைய முடியவில்லை.

எதை எழுதுவது ?
ஆசிரியர் மாணவன் உறவையா ?
இலக்கிய உறவையா ?
திருமணத்தின் ஊடான பந்த உறவையா ?

எனக்கு என்றும் வழிகாட்டி நீங்கள். சுறுசுறுப்பை உங்களிடம் தான் கண்டேன். 24 மணி நேரம் காணாது என்று கதறும் பேர்வழிகள் மத்தியில் 24 மணி நேரத்தில் எவ்வளவு வேலைகளை நிறைவேற்றலாம் என்பதற்கு நீங்கள்தான் உதாரணம். உங்களிடம் வந்தால் மீண்டும் ஒரு சக்தி கிடைத்து விடும். புதிய சக்தியுடன், புதிய சிந்தனைகளுடன், புதிய தகவல்களுடன், புதிய புத்தகப் பட்டியலுடன் புத்தூக்கத்துடன்தான் திரும்ப நேரிடும்.

1983 சித்திரை மாதம் உங்களைச் சந்திக்கிறேன். குளிருடன் நடுங்கியபடி பசுமலையில் அப்பா உங்களைக் காட்டுகிறார். 2023 நவம்பர் வரை அறிமுகம் ஏதோவொரு வேடந்தாங்கி 40 வருடமும் 7 மாதமும் நீடித்தன. அதற்கிடையில் ஓராயிரம் விடயங்கள். புத்தகங்களுடன் வாசம் செய்ததுதே அதிகம்.

தந்தையுடன் நானும் தங்கைகளும் தம்பியுடன் வசிக்கும் வீட்டிற்கு வரும்போது ஒரு புதிய சொல்லுடனே வந்தீர்கள். அந்த சொல் நன்செயல். அன்றிலிருந்து எங்கள் எல்லோருக்கும் 'சேர்' தான் நீங்கள். எங்கள் எல்லோருக்கும், அன்று முதல் கௌரவமான சேர் பட்டத்தைத் தாங்கிவிட்டீர்கள்.

மூத்த தங்கை திருமணம் முடித்து கொழும்பில் வாழும்போது கொழும்பில் நீங்கள் தங்குமிடங்களில் அதுவும் ஒன்றாகியது. அப்போது நீங்கள் தங்கைக்கு மட்டுமின்றி தங்கையின் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் சேராகி விட்டீர்கள்.

இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்றபிறகு அப்பாவிற்கு உங்கள் முத்து முத்தான கையெழுத்தில் ஒரு கடிதம். மகன் தந்தைக்கு எழுதிய கடிதம். எங்கள் அப்பா அக்கடிதத்தைப் பார்த்துப் பூரித்துப் போய்விட்டார். தன்னுடைய மூத்த மகன் எழுதிய கடிதமாகவே கருதிப் பல தடவை என்னிடம் காட்டியுள்ளார். எங்கள் அப்பாவின் உள்ளக்கிடங்கைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நெருங்கிய நண்பரானீர்கள்.

பல வருடங்களின் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டதன் பின்னர் மீண்டும் நெருக்கம் கூடியது. எனது திருமணம் பற்றி முதன்முதலாக அப்பாவால் உங்களுக்குத்தான் கடிதம் எழுதப்பட்டது. உங்களிடமிருந்து உடனே வரவில்லை. பின்னர் தாமதமாக மழுப்பலான பதில் ஒன்று வந்தது. முடிவெடுக்கும் நிலையில் நீங்கள் இல்லை என்பதைப் புரிந்துகொண்டார்.

மீண்டும் மட்டக்களப்புக்கு நான் வரவேண்டும், வீடு வாசல்களைச் சொந்தமாகத் தேடவேண்டும். என்பதில் மிகக் கரிசனை கொண்டிருந்தவர்.

20 வருட 'வனவாசத்தின்' பின்னர் 2003-ல் மட்டக்களப்புக்கு வந்தபோது, முதன் முதலாக ஒரு நூலுக்கான விமர்சன அரங்கைத் தந்து வழிப்படுத்தியவர். அமரர் எழுத்தாளர் ஆ.மு.சி. வேலழகனின் சில்லிக்கொடி ஆற்றங்கரை நாவலுக்கான விமர்சன உரை சேருக்குப் பதிலாக என்னால் நிகழ்த்தப்பட்டது. இலக்கிய உலகில் பலரை எனக்கு அறிமுகப்படுத்தியது.

கட்டுரைகளுக்காகப் பல இடங்களில் என்னை அறிமுகப்படுத்தி ஊக்கப்படுத்தினார். எனது சோம்பேறித்தனத்தால் சில இடங்களில் பங்குபற்றி, சில இடங்களில் தவற விட்டுள்ளேன்.

ஈழத்தில் சிற்றிதழ்கள் மகாநாட்டில் ஒரு கட்டுரை, கிளிநொச்சி மாவட்ட நவீன இலக்கியப் போக்குகள். செங்கையாழியான் தலைமையில் ஒரு கட்டுரையை ஒரு மாதிரி எழுதினேன்.

ஞானத்தின் போர்க்கால இலக்கியங்கள் தொகுப்புக்கும், ஜீவநதியின் இரண்டு தொகுப்புக்கும் கட்டுரைகள் எழுதாமல் தவறவிட்டுவிட்டேன். அதற்குச் சேரால் நோகாமல் சில வரிகள் அவ்வளவே.

குடும்பத்தில் சோக நிகழ்வு நிகழும் சந்தர்ப்பங்களில் நாங்



கள் இருவரும் உறவுக்காரர்கள் எனும் அடிப்படையில் மீண்டும் நெருக்கமாகி விடுவோம். அப்போதும் புத்தகமும் கட்டுரையும் பரபரப்பும் தான். உடலங்களை பல நாட்கள் வீட்டில் வைத்திருப்பதில் அவருக்கு உடன்பாடில்லை. சென்றவரை விட இருப்பவர்களுக்கு அது பெருந் துன்பங்களைக் கொடுக்கும் என்பது அவர் கருத்து, உண்மையும்கூட. துரதிர்ஷ்டவசமாக அவரின் உடலத்தை அவர் விரும்பியோ விரும்பாமலோ மூன்று நாட்கள் வைத்திருக்க வேண்டிய நிலை.

இன்று இவைகளெல்லாம் பெருங் கனவு போல உள்ளது. மீண்டும் வர மாட்டாரா என்ற ஏக்கம். இன்னும் ஒரு 5 வருடங்கள் இருந்திருப்பாராயின் இன்னும் நிறையச் சாதித்திருப்பார். 'மீள மீண்டு வருவேன்' என்ற பெரும் நம்பிக்கையுடனேயே இறுதி வரை இருந்தார். பல திட்டங்களுடனும் பல புதிய தகவல்களுடனும் இலக்கிய உலகிற்குச் சில புதிய விடயங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனுமே இருந்தார்.

அவரின் இறுதி நிகழ்வின் இரங்கலுரைகளே அவரின் நேசிப்பை, அரவணைப்பை, வழிப்படுத்தலை வெளியுலகிற்குக் காட்டியது.

ஆசிரியப் பணி அர்ப்பணிப்பு மிக்கது. ஒரு பூரணத்துவமான ஆசிரியராகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர் பணியில் புதிய சிந்தனைகளுக்கான பல திறவுகோல்களை உருவாக்கிய சிற்பியாகவும், இலக்கிய உலகில் சுறுசுறுப்பையும் தேடலையும் கொண்ட குழாமை உருவாக்கியவராகவும், நல்ல கணவனாகவும், நல்ல தந்தையாகவும் வாழ்ந்தே காட்டிய நல் வழிகாட்டி. அவர் ஒரு பீனிக்ஸ் பறவை. விழ விழ எழுந்தவர். வேறு யாராக இருப்பினும் எப்போதோ காணாமல் போயிருப்பர்கள்.

இழப்பின் வலியும் இடைவெளியும் வார்த்தைகளிலன்றி வாழ்வில் இனித்தான் உணரும் காலம். என் வாழ்வில் மீள முடியா இழப்புகளில் ஒன்றாக உங்கள் இறப்பும் அமைந்து விட்டது சேர்.

தந்தைக்கு நிகரானவர். சாகா வரம் பெற்றவர். நீங்கள் இல்லா உங்கள் வீட்டிற்குச் செல்ல மனம் வருகுதில்லை.

உங்கள் இழப்பு எனது 56 வருட வாழ்வில் பல பாடங்களை உணர்த்தி, புதிய வழியைத் திறந்துள்ளது.

எனது வார்த்தை ராசி இல்லாதது என உணர்கிறேன். எனது தந்தையை வைத்தியசாலையில் வைத்து பெப்ரவரி 4 வருவதாகக் கூறிச் சென்றேன். அவர், நான் வருவேன் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும் போது சனவரி 30 என்னை விட்டுப் பிரிந்தார்.

உங்களுடன் நின்று விட்டு அம்மாவின் கிரியைகளை முடித்து விட்டு அடுத்த வாரம் வருவதாக வந்தேன். அம்மாவின் கிரியைகள் நடைபெறும் போதே நீங்களும் என்னை விட்டுப் பிரிந்துவிட்டீர்கள். நான் மீண்டும் உங்களைப் பார்க்க வருவேன் என்ற நம்பிக்கையில் இருந்தீர்களோ தெரியாது சேர்.

குறையப் பேசி, நிறையச் சிந்திக்க வைத்த நீங்கள், இன்று சிந்திப்பதை நிறுத்திக் கொண்டீர்கள்.

இன்னும் ஏற்க மறுக்கிறது மனம். எங்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டேயிருப்பீர்.



manisegaran.s@thaiveedu.com



# ஒரு மனித நேயனுடன் பயணித்த காலங்கள்

**– ‘மகுடம்’ வி. மைக்கல் கொலின்**

*‘நள்ளிரவு*
*மெல்லிய தூறலுடன்*
*மழையின் வருகை*
*குளிர் தென்றல்*
*முகத்தில்*
*அறைய அறைய*
*பனைகளின் தேசம் நோக்கி*
*விரைகிறது பேரூந்து*
*நாளைய*
*நூல் அறிமுக நினைவுகளினூடு*
*என் மனம்.*
*அருகில் அகத்திய முனியாய்*
*தமிழ் பேராசிரியர் யோகராசா*
*நித்ராதேவியின் அணைப்பில்*
*என் தோள் மீது அவர் தலை சாய்கிறது*
*இந்தக் கவிதை மனம்*
*சொல்லிக்கொள்கிறது.*

*‘தமிழ் என் தோள் மீது*
*தலை சாய்கிறது*
*அன்று முல்லைக்கு*
*தேர் கொடுத்தான் பாரி*
*இன்று தமிழிற்குத் தோள் கொடுத்தான்*
*இந்த மைக்கேல்’*

தாய் வீடு பத்திரிகையின் பதிப்பாளரும் ஆசிரியருமான நண்பர் டிலிப்குமார் அவர்கள் கடந்த வாரம் தொடர்புகொண்டு ‘அமரர் பேராசிரியர். செ. யோகராசா அவர்கள் பற்றிய ஒரு கட்டுரையை நீங்கள்தான் தரவேண்டும்’ எனக் கேட்டபோது என்னுள் பல தலைப்புகள் ஓடத்தொடங்கியது.

செ. யோ. என்ற ஓர் ஆளுமையின் மறைவின் தாக்கம் இன்னும் மனதை விட்டழியாத நிலையில் தமிழ் இலக்கியத்தின் தவிர்க்கவியலாத ஒருவரை, வடக்கு, மலையகம், கிழக்கு என ஊடாடியவரை, குறித்த பிரதேசங்களில் தன் தடங்களை ஆழமாகப் பதித்தவரைப் பற்றி எழுதும்போது அதற்குரிய மிகப் பொருத்தமான ஒரு தலைப்பும் அமையவேண்டும் அல்லவா?

கடந்த இரண்டு வாரங்களாகச் சமூக ஊடகங்களில் பேராசிரியரைப் பற்றிப் பலரும் அஞ்சலிக் குறிப்புகளும், கட்டுரைகளும், நினைவுப் பகிர்வுகளுமாக எழுதிக்கொண்டிருக்கையில், அவரது கலை இலக்கியச் சமூகப் பணி பற்றிப் பட்டியலிடப்படுகையில் புதிதாக எதை எழுதுவது? நான்கு வரி பாராட்டி எழுதிவிட்டுக் கடந்து விடக்கூடியவரா அவர்? இப்படியான ஒரு குழப்பநிலையில்தான் மூன்று தசாப்தகாலமான எனக்கும் அவருக்குமான தொடர்பு பற்றி எப்போதும் புன்னகைத்த முகத்துடன், அனைவருடனும் நட்புடன் பழகும் பேராசிரியர் பற்றி, அவரது மனிதநேயம் பற்றி எழுதுவதும் இலக்கியத்திற்கும் அப்பால் தனது குடும்பத்தை நேசித்த நல்லதொரு குடும்பத் தலைவராக நான் கண்டுகொண்ட நல்லதொரு மனிதரை அவரது மனிதப் பண்புகளை இங்கு பதிவதே எனது நோக்கமானது. அதனால் இந்தக் குறிப்புக்கு நான் வைத்த தலைப்பு ‘ஒரு மனித நேயனுடன் பயணித்த காலங்கள்’.

இந்தத் தலைப்புக்கு அடிப்படையான ஒரு காரணமும் இருந்தது. பலமுறை பல இடங்களுக்கு நூல் வெளியீடு, மற்றும் இலக்கிய நிகழ்வுகளுக்கு நானும் பேராசிரியரும் பேரூந்திலும், எனது மோட்டார் சைக்கிளிலும் சென்றிருந்தாலும் 24-10-2018 அன்று எனது ‘பரசுராம பூமி’ சிறுகதை நூல் அறிமுக விழாவிற்கு நானும் பேராசிரியரும் யாழ்ப்பாணம் சென்ற பயணமே மிகத் தொலைதூர நீண்ட பயணமாகும். அப்பயணத்தின் போது அவர் என் தோள் மீது சாய்ந்து உறங்கியதும் அப்போது நான் எனது கைபேசியில் எழுதி உடனே எனது முகநூலில் பதிவேற்றிய கவிதையே இக்கட்டுரையின் மேலே உள்ள கவிதையாகும்.

1992-ம் ஆண்டு இறுதியில் எனது உயர் கல்விக்காகத் திருகோணமலையிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்தேன்.

அப்போது தமிழ்த்துறையில் விரிவுரையாளராகக் கடமையிலிருந்தார் செ.யோ. அவர்கள்.

முகாமைத்துவபீட மாணவனான எனக்கும் தமிழ்த்துறைக்கும் அவ்வளவு நெருக்கமில்லையாயினும் 1993-ன் ஆரம்ப காலங்கள் வரை நான் ‘ராக்கிங்’ எனப்படும் பல்கலைக்கழகப் ‘பகிடிவதை’யை அனுபவித்த காலமாதலால் இக்காலங்களில் அவரை அதிகம் அறியமுடியவில்லை. 1993 மார்ச் மாதத்திற்குப் பின்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற பல இலக்கிய நிகழ்

வுகளில் அவரைச் சந்திக்கவும் உரையாடவும் முடிந்தது.

எனது பாடசாலைக் காலங்களில் நான் வெளியிட்ட 'தாகம்' கலை இலக்கிய இதழ் மற்றும் எனது கவிதை முயற்சிகள் தொடர்பாகச் செ.யோ. அறிந்திருந்ததாலும், அவரது தமிழ்த் துறைக்கு அப்பால் ஒரு மாணவன் கலை இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்ததும், அவர் என்னுடன் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

டிசம்பர் 17, 1949-ல் வடமராட்சியின் கரணவாயில் பிறந்த செல்லையா யோகராஜா தனது பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்து, தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் (1971) பெற்றுக்கொண்டார். அதே பல்கலைக்கழகத்தில் தத்துவமாணிப் பட்டத்தையும்(1972) பெற்றுக்கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா(1984), முதுகலைமாணி(1990), கலாநிதி(1999) பட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

1976-ல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று நுவரெலியா கோல்புறூக் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். இக்காலத்தில் அவர் மலையகச் சமூகத்திற்குச் செய்த கல்விப்பணியை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. பல கல்வியாளர்கள் மலையகத்தில் உருவாக, அவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையை ஆற்றிவந்தார்.

தொழில் நிமித்தமாக மலையகம் சென்ற அவர் மலையகத்தின் மாப்பிள்ளையாக மாறியது சுவாரசியமானது.

1991-ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை விரிவுரையாளராகப் பணியில் இணைந்துகொண்ட அவர். சிரேஷ்ட விரிவுரையாளராகத் தரம் உயர்ந்து 2009-ல் பேராசிரியராக உயர்வு கண்டார்.

இதுவரை இவர் பல நூல்களையும், தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார். 'ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்', 'இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள்' (2003), 'ஈழத்து நவீன கவிதை: புதிய உள்ளடக்கங்கள், புதியதரவுகள், புதிய போக்குகள்' (2007), 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்' (2013), 'ஈழத்து இலக்கியமும் இதழியலும்' (2007),' 'பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை' முதலிய நூல்களை இவர் ஆக்கியளித்துள்ளார்.

இதில் 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்' மகுடம் பதிப்பகத்தின் ஐந்தாவது வெளியீடாக வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இவரது 'இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள்' (2003), என்ற ஆய்வுக் கட்டுரை நூலில் எனது 'வரம்' சிறுகதை பற்றி மிகச்சிலாகித்து எழுதியிருந்தார். '*அகலிகை அக்கதையில் எடுக்கும் முடிவு இதுவரை அகலிகை தொடர்பாக வெளிவந்த மறுவாசிப்புக் கதைகளில் மிகவும் மாறுபட்டதும் துணிச்சலானதுமான முடிவு*' என்பது அவரது கருத்தாக இருந்தது. எமக்கு இருவருக்கும் இலக்கிய ரீதியாக அதிக பிணைப்பு வருவதற்கு இச்சிறுகதை மிக முக்கியமானது.



கௌதம சித்தார்த்தனை மறுவாசிப்புச் செய்து நான் எழுதிய 'ஞானம்' என்ற சிறுகதையும், எனது 'பரசுராமபூமி' சிறுகதையும் அவருக்கு மிகவும் பிடித்தமானது.

பேராசிரியர் செ. யோகராசா பல தொகுப்பு முயற்சிகளிலும், ஆய்வு முயற்சிகளிலும் குறிப்பாகச் சிறுவர் இலக்கியம் தொடர்பாகவும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

எனது மகுடம் காலாண்டு இதழிற்காகத் தமிழ் இதழியல் வரலாற்றில் முதன் முறையாக ஒரு பேராசிரியரை இன்னுமொரு பேராசிரியர் நேர்கண்ட மிக நீண்ட நேர்காணல் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் நேர்கண்டு மகுடம் கலை இலக்கியச் சமூகப் பண்

பாட்டுக் காலாண்டிதழில் வெளியானது.

‘சங்ககாலம் முதல் சமகாலம் வரை’ என்ற தலைப்பில் வெளி வந்த இந்நேர்காணல் மகுடம் பதிப்பாக நூலாகவும் வெளிவந் தது. இது அதிக பக்கங்களைக் கொண்ட மிக நீண்ட நேர்கா ணல் மட்டுமன்றி, இதில் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்க ளின் முழுமையான கலை, இலக்கியச் செயற்பாடுகளையும் தனது கேள்விகள் மூலம் வெளிக்கொணர்ந்திருந்தார் பேராசி ரியர் செ.யோ. அவர்கள்.

2012-ல் வெளிவரத்தொடங்கிய எனது மகுடம் கலை இலக்கி யச் சமூகப் பண்பாட்டுக் காலாண்டிதழின் ஆரம்ப இதழிலி ருந்து பல காத்திரமான ஆய்வு ரீதியான கட்டுரைகளை எழுதி வந்தார் பேராசிரியர் செ.யோ.

அத்துடன் மகுடம் பதிப்பகம் மூலமாக வெளிவந்த எனது ‘பர சுராமபூமி’ சிறுகதைத் தொகுப்பு, ‘இவனைச் சிலுவையில் அறையுங்கள்’ கவிதை நூல், ‘வீணையடி நீ எனக்கு’ நாவல் என மூன்று நூல்களுக்கும் அணிந்துரை எழுதியதோடு எமது மகுடம் பதிப்பகம் மூலமாக வெளிவந்த நூல்களில் 25-க்கும் மேற்பட்ட நூல்களுக்குப் பேராசிரியர் செ. யோகராசா அவர் களே அணிந்துரை எழுதியுள்ளார்.

பேராசிரியர் செ. யோகராசா அவர்களே ஈழத்தில் அதிக நூல் களுக்கு அணிந்துரை எழுதியவர் என்ற புகழுக்கும் உரியவர். பல இளம் எழுத்தாளர்களுக்குத் தனது அணிந்துரைகள் மூலம் வெளிச்சம் பாய்ச்சியவர்.

தொடர்ச்சியான வாசிப்பும், இலக்கியத் தேடலும், தேடலின் வழியான ஆய்வும், ஆய்வு ரீதியான எழுத்தாக்கமும், எவரை யும் காயப்படுத்த விரும்பாத ஆக்கபூர்வமான விமர்சனமும் எனத் தனது வாழ்வில் இடையறாது இயங்கியவர் பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள்.

பல கலாநிதிகளும் பேராசிரியர்களும் உருவாகுவதற்கு ஒரு வழிகாட்டியாகவும் இவர் பலரை வழிப்படுத்தியுள்ளார். இவை கள் எல்லாம் இலக்கிப்பரப்பில் பேராசிரியருக்கு நன்மதிப் பைப் பெற்றுக்கொடுத்திருந்தாலும், விமர்சன ரீதியாக இவர் எழுத்துகள் தொடர்பாகவும், ‘உதவி என்ற பெயரில் ஒன்றுக் கும் உதவாத பல கலாநிதிகளும், பேராசிரியர்களும் உருவா கக் காரணமாகியுள்ளதோடு கேட்பவர் எல்லோரது நூல்க ளுக்கும் அணிந்துரை எழுதித் தனது பெயரைக் கெடுத்துக் கொள்கிறார், அவர்களுக்கு அடையாளம் கொடுக்கிறார்’ என்ற குற்றச்சாட்டுகளும் அவர் மேல் சுமத்தப்படாமல் இல்லை. இது தொடர்பாக நான் அவரோடு பேசும்போதெல் லாம் தனது நகைச்சுவை கலந்த புன்சிரிப்பு மாறாத அவரது பதில் அந்தக் கேள்விகளையும், கருத்துகளையும் ஒன்றுமே யில்லாமல் மாற்றிவிடும்.

பேராசிரியர் யோகராசாவின் நகைச்சுவைப் பேச்சு வித்தியாச மானது. அது எல்லோருக்கும் உடன் இலகுவில் புரிந்து விடாது. அதனை அசைபோட்டுப் பார்க்கும்போதே அதிலுள்ள எள்ளலும், நக்கலும் புரியும்.

பேராசிரியர் செ.யோ அவர்கள் தனது வாழ்நாளில் அதிக காலத்தைப் பயணத்தில் செலவிட்டவர். அது, அவரது தொழில் ரீதியாகவும் இலக்கிய நிகழ்வுகளுக்கான பயணமா கவும் அமைந்தாலும் தனது பயணங்கள் தோறும் வாசிப்பை நேசிப்பாகக் கொண்டு வாழ்வை வாசித்து முடித்தவர் அவர்.

கலையிலக்கிய ரீதியாக, தொழில் முறை ரீதியாக இப்படி ஒரு பக்கம் பேராசிரியருடையது என்றால், என்னைக் கவர்ந்த அவ ரது இன்னொரு பக்கத்தையும் சொல்லியாகவே வேண்டும்.

**1996**-இல் ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக, அவரது துணைவியார் தனது வாழ்நாள் முழுமைக்கும் எழுந்து நட மாட முடியாது, சக்கர நாற்காலியே துணை என்று மாறிவிட்ட நிலையில், பொறுப்புமிக்க ஒரு குடும்பத் தலைவராய், நேசிப்பு மிக்க அன்பான ஒரு கணவனாய் அவரது சகல தேவைகளையும் நிறைவேற்றி, அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து அன்றைய நாளுக்கான வீட்டு வேலைகள், மற்றும் சமையல் வேலைகளைச் செய்து, தனது மகளுக்கான பணிவி டைகளையும் செய்து, தனது கடமைகளையும் செவ்வனே செய்து வந்த ஒரு மனித நேயன்.

தனது குடும்பப் பொறுப்புகளை ஒரு தோளிலும், தனது தொழில் ரீதியான கலையிலக்கியச் செயற்பாடுகள் சார்ந்த பொறுப்புகளை இன்னுமொரு தோளில் சுமந்தாலும் தேனீ யைப் போலவும், எறும்பைப் போலவும் எப்போதும் தொடர்ச்சி யாக இயங்கிக்கொண்டிருந்தவர் பேராசிரியர் செ.யோ அவர்கள்.

எப்படி ஒரு மனிதர் தனது குடும்பத்தையும் சமூகத்தையும் நேசிக்க முடியும் என்பதற்கு ஓர் உதாரணம் அவர்.

வடக்கில் பிறந்து, மலையகத்தில் வாழ்க்கைப்பட்டு, கிழக் கைத் தனது வாழ்விடமாக அமைத்துக்கொண்டாலும் மூன்று மண்ணையும் நேசித்த ஒரு மனிதராக, சகல மண்சார்ந்த மக் களதும் நேசிப்புக்குரிய மனிதராக, அவர் தனது வாழ்நாள் முழுதும் வாழ்ந்து முடித்துள்ளார்.

கலை இலக்கிய ரீதியில் ஒரு தகவல் களஞ்சியமாக, இலக்கி யம் தொடர்பாக எவருக்கு எந்த சந்தேகம் வந்தாலும் அதனை நிவர்த்தி செய்யக்கூடிய ஆற்றலுடன் இருந்தவர் செ.யோ.

அவர் மட்டக்களப்பு மண்ணுக்கு ஆற்றிய சேவைக்கு, அவ ரது மணிவிழா நாளில், அவருக்குப் பணி நயப்பு விழாவெ டுத்து மாபெரும் விழா மலர் ஒன்றினையும் வெளியிட்டோம். இது மட்டக்களப்பு மண் அவரைத் தனது மைந்தனாக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகியது.

முப்பது வருடகால அவருடனான இலக்கியப் பயணம் டிசம்பர் 07, 2023 அன்றுடன் முடிவுக்கு வந்தது பேரிழப்பாகும். தமிழ் அன்னை தனது நேசிப்புக்குரிய மைந்தனை இழந்து தவிக்கி றாள்.

வாசிப்பைப் போலவே சகல சமூக மக்களையும் நேசித்த மனித நேயனுக்கு எமது மகுட அஞ்சலிகள்.



michael.collin@thaiveedu.com

### மலையகத்தின் வேர்களைத் தேடித்தந்த விருட்சம்

# பேராசான் செ. யோகராசா



**- மல்லியப்புசந்தி திலகர்**

எங்கள் ஊர் மடகொம்பரைக்கான சிறுநகரம். வட்டகொடை.

இந்த வட்டகொடை எனும் பெயரில் இலங்கையில் பல இடங்கள் உண்டு. கொழும்பு - பதுளை ரயில் மார்க்கத்தில் ரயில் நிலையத்துடன் எங்கள் வட்டகொடை அமைந்திருப்பதால் 'ஸ்டேசன்' வட்டகொடை எனும் காரணப்பெயரும் உண்டு. இந்த வட்டகொடை பெயரிலேயே அருகே ஒரு தேயிலைத் தோட்டமும் உண்டு. 1867-ம் ஆண்டு இந்தத் தோட்டம் நிறுவப்பட்டதாக அந்த ஊரின் பெயர்ப்பலகை குறித்து நிற்கிறது. 150 வருடங்களுக்குமேல் பழமையான இந்தத் தோட்டம் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, யொக்ஸ்பொர்ட் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. மலையகத் தியாகி சிவனு லட்சுமணன் இந்த யொக்ஸ்போர்ட் பிரிவைச் சேர்ந்தவர்தான். ஆற்றுக்கு அப்பாலமைந்த டெவன் தோட்டக் காணிப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் பலியாகி உயிர் நீத்தார் தியாகி சிவனு-லட்சுமணன்.



வட்டகொடை மேற்பிரிவு, வட்டகொடை ரயில்வே நிலையத்தை ஒட்டிக்கொண்டே இருக்கும் தோட்டப்பகுதி. 'தெப்பத் திருவிழா' எனும் தண்ணீரில் தேரோடும் திருவிழாவுக்கு இந்த ஊர் பிரசித்தமானது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியுடன் பல்கலைக்கழகத்தில் சமகாலத்தில் கற்ற அவரது நண்பர் தி.வே. மாரிமுத்து (ஊடகவியலாளர் சிவலிங்கம் சிவகுமாரின் பெரியப்பா) எனும் கல்வியியலாளரின் தந்தையார்தான் இந்தத் தோட்டத்தில் பெரியாங் கங்காணியாக இருந்திருக்கிறார். அதற்கு அடுத்த தோட்டமான மடகொம்பரையில் சி.வி. வேலுப்பிள்ளையின் தாய் வழித் தாத்தா குமரன் பெரியாங் கங்காணியாக இருந்தவர். அவருடன் மலையக மக்கள் முன்னணி உப ஸ்தாபகத் தலைவரான வி.டி. தர்மலிங்கத்தின் தந்தை வடிவேல் உப கங்காணியாகவும் கணக்கப்பிள்ளையாகவும் பணியாற்றியிருக்கிறார்.

இப்படிப் பல பிரசித்தங்களுக்குப் பேர்போன வட்டகொடை மேற்பிரிவில் மண்டையன் எனத் தோட்ட மக்களால் அழைக்கப்படும் செல்லன் எனும் இயற்பெயரைக் கொண்ட ஒரு தோட்டத் தொழிலாளி வாழ்ந்தார். இவரது மகன் ஜெயகுமார் எனது வகுப்புத் தோழன். இந்தச் செல்லனுக்குக் 'கபாலி செல்லன்' என்றும் ஒரு பெயருமுண்டு. இந்தக் கபாலிச் செல்லன்; ஒரு கலைஞன், பாடகன். சினிமாப் பாடல்களை ஒப்புவித்துப் பாடும் பாடகன் இல்லை கபாலி. ஊர் ஊராகப் பணம் கொடுத்து அழைத்துச் செல்லப்படும் சொந்தப் பாட்டுக்காரன். தானாகப் பாடலியற்றி மெட்டமைத்துப் பாடும் கபாலி செல்லனுக்கு அயல் தோட்டங்களில் நல்ல கிராக்கி இருந்தது. திருவிழாக் காலம் என்றால் இவரை அழைத்துப் போய் பாட்டுக் கச்சேரி நடத்துவார்கள். எந்த ஊருக்குப் போகிறாரோ அந்த ஊரின் பெருமைகளையெல்லாம் தனது பாடல் வரிகளில் கொண்டுவந்து விடுவார்.

***'ஏய்க்கிறான்... ஆள***
***ஏய்க்கிறான்***
***எங்களை ஏமாளி என்று சொல்லி***
***ஏய்க்கிறான்...***
***எந்த நாடு? நம்ம நாடு...***
***அந்தரத்தில் வாழச் சொல்லி***
***அனுப்பிருக்கான் சிட்டிசன் காடு...'***

இப்படிச் சரளமாக அரசியலை அள்ளி வீசுபவர் இவர். எம்.ஜி. ஆர் இறந்த நாளில் எங்கள் ஊரில் இடம்பெற்ற ஊர்வலம் இரங்கல் கூட்டத்தில் கபாலிச் செல்லனும் பாடுவதாக இருந்தது. அன்றைய கூட்டத்தின் இடையே மழை கொட்டத் தொடங்கிவிட்டது. கூட்டம் கலைந்து செல்லத் தொடங்கியது.

மழை சற்றே குறைந்ததும் 'அடுத்ததாகக் கபாலிச் செல்லன் பாடுவார்' என அறிவித்தல் செய்ய, மரத்தில் கட்டியிருந்த ஒலிபெருக்கியில் ஓங்கி ஒலித்தது கபாலிச் செல்லனின் குரல்.

***'மாரி என்றால்... மாரி என்றால்...***
***மழை பொழியும் மடகொம்பரை புதுக்காட்டிலே***
***எம்.ஜி.ஆரு இறந்தால்***
***இயற்கை அழும் தன்பாட்டிலே...'***

எனப் பாட ஆரம்பித்ததும் ஊருக்குள் ஒரு பரவசமாகியது. கலைந்த கூட்டமெல்லாம் மீண்டும் கோயில் முன்றலிலே கூடி விட்டன. இப்போதும் எனக்கு உடல் புல்லரிக்கும், நான் விப ரிக்கும் இந்தக் காட்சி நடந்தது 1987-ம் ஆண்டாக இருக்க வேண்டும்.

மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'மகுடம்' எனும் கலை இலக்கிய இதழ் 2010-க்குப் பின்னதான ஒரு காலப் பகுதியில் மலையகச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த ளது திறமைகளை எடைபோடத் தெரிந்திருந்தது. அதனைப் பதிவுசெய்து வைக்கும் உயர்வான எண்ணம் இருந்துள்ளது. இப்படியாக மலையகத்துக்கு அவர் ஆற்றியுள்ள ஆய்வுப் பணிகளுக்குச் சான்றுகள் பல உண்டு.

இரா. சடகோபன் தமிழாக்கம் செய்த 'கசந்த கோப்பி' நாவல் வெளியீட்டின் போதே அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். 5 நிமிடங்கள் மாத்திரம் கிடைத்த வாய்ப்பினை நூல் பற்றிய கருத்துகளுக்கு அப்பால் வெளியீட்டு நிகழ்வில் ஏற்பட்ட ஒரு தவறினையும் சரிசெய்யப் பயன்படுத்திக்கொண் டேன். விழா முடிந்ததும் தட்டிக்கொடுத்தார்.

மட்டக்களப்பு இலக்கியச் சந்திப்பு (சத்துருக்கொண்டான் - 2015) மலையக அரங்கு. அப்போதுதான் நாடாளுமன்ற உறுப் பினராகத் தெரிவாகியிருந்தேன் (சத்தியபிரமாணம் கூடச் செய் திருக்கவில்லை). தெளிவத்தை ஜோசப், மு. சிவலிங்கம், மு. நித்தியானந்தன் (மிக நீண்ட வருடங்களுக்குப் பின்னர் இலங்கை திரும்பியிருந்தார்), இரா. ரமேஷ் ஆகியோருடன்



இதழை வாசித்துக் கொண்டிருந்த என்னை திடீரென 1980-க ளுக்கு அழைத்துச்சென்ற ஒரு கட்டுரை, கபாலிச் செல்லனை கண்முன் நிறுத்தியது. கபாலிச் செல்லனின் பாடல்களில் உள்ள சிறப்புகள் பற்றி எடுத்துச்சொல்லியிருந்த விதத்துக்கு நானே சாட்சியாக நின்று வாசித்துக்கொண்டிருந்தேன். எழு தப்பட்டிருந்த சில பாடல் வரிகளை நானே முணுமுணுக்க எனக்கு உடல் இப்போதும் புல்லரித்தது. நாம் சிறுவயதில் கேட்டு ரசித்த நம் ஊர்த் தொழிலாளியான கபாலிச் செல்லன் பற்றி இவ்வளவு நேர்த்தியான ஒரு கட்டுரை மட்டக்களப்பிலி ருந்து வெளிவந்துள்ளதே என எழுதியவர் பெயரைத் தேடி னேன். 'செ. யோகராசா' என்றிருந்தது.

சி. சுப்பிரமணியம், சி.வி. வேலுப்பிள்ளை, தி.வே. மாரிமுத்து, வி.டி. தர்மலிங்கம், சி.எஸ். காந்தி எனக் கற்றறிந்த ஆளுமை களையே ஊரின் பெருமை என எண்ணிக்கொண்டிருந்த எனக்குள் ஒரு புதிய திசையைக் காட்டியிருந்தார் பேராசிரியர் செ. யோகராசா. யாழ்ப்பாணத்தில் பிறந்து கிழக்குப் பல்க லைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றும் ஒருவ ருக்கு வட்டகொடை எனும் மலையகத் தேயிலைத் தோட்டத் தில் சாதாரண தொழிலாளியாக வாழ்ந்துகொண்டு அயல் ஊர்களில் நடக்கும் சின்னச் சின்ன விழாக்களில் பாடிக் கொண்டிருந்த 'கபாலிச் செல்லன்' போன்ற எளிய மனிதர்க நானுமாக 'மலையக அரங்கு' ஒன்றை ஒழுங்குசெய்து பேசி னோம். எங்கள் அரங்குக்குத் தலைமை தாங்கியவர் பேரா சான். செ. யோகராசா. இன்றுவரை இலக்கியச் சந்திப்பு நண் பர்கள் விதந்து பேசும் ஓர் அரங்காக அந்த 'மலையக அரங் கம்' நெஞ்சில் நிறைந்துள்ளது.

தெளிவத்தை ஜோசப் எழுதிய 'நாங்கள் பாவிகளாக இருக்கி றோம் அல்லது 1983' நாவல் அறிமுகத்தை வாழைச்சேனை யில் நடத்துவதற்குக் 'காகம்' நண்பர்கள் ஒழுங்குகளைச் செய்திருந்தனர். மாலை நேரம் பாடசாலை மண்டபம் ஒன்றில் கூட்டம். நாடாளுமன்ற உறுப்பினராக ஒரு வருட அனுபவத் தோடு இப்போது கிழக்குக்குச் சென்றிருந்தேன். நூல் குறித் துப் பேச செ. யோகராசாவும் வந்திருந்தார். விழா தொடங்க முன்னர், இரவுணவு நேரம், என் நாடாளுமன்ற அனுபவங்க ளைப் பகிர்ந்துகொள்ள நேரிட்டது. விழா முடிந்ததும் எமது அடுத்தடுத்த நாள் நிகழ்ச்சி நிரல்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பேராசிரியர், அடுத்த நாள் காலையிலேயே எங்க ளோடு ஒரு மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு தானும் இணைந்து கொண்டார். முதலாவது தரிப்பிலேயே 'மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்துங்கள். ஏறுங்கள் எங்களோடு' என எனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டோம். மூன்று நாட்க ளாகப் பல கதைகள், உரையாடல்கள், சிரிப்புகள், சீரியஸ்

பேச்சுகள் எனச் சந்தோஷமாக நாட்கள் கழிந்தன. விடைபெறும் நாளில், 'திலகரும் தெளிவத்தையும் எங்கள் வீட்டுப்பக்கமும் வருவீர்களா?' என்றார். அதற்கென்ன! எனப் பேராசியர் வீட்டை நண்பர்கள் சகிதம் அடைந்துவிட்டோம். அவரே கைப்படத் தேநீர் தயாரித்து எங்கள் எல்லோருக்கும் தந்தார். துணைவியாரின் சுகயீனம் பற்றியும் தெரிந்துகொண்டோம். உங்கள் எல்லோர் முன்னிலையிலும் திலகரிடம் ஒரு வேண்டுகொள் விடப்போறன் எனப் புதிர் போட்டார். எல்லோரும் ஆவல்கொள்ள எனக்குள் ஒரு பதட்டம் வந்தது. என்னவாக இருக்குமென யோசித்துக்கொண்டிருந்த என்னை அவரது அடுத்த கேள்வியே ஆச்சரியம் கொள்ளச் செய்தது. *இந்த மூன்று நாட்களாக நானும் உங்க கூடச் சுத்தியது ஏன் தெரியுமா? நாங்கள் ஒவ்வொருத்தரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். யாரிடமும் பதில் இருக்கவில்லை. 'இந்தப் நாடாளுமன்ற உறுப்பினர்களோட எல்லாம் நமக்குப் பழக வாய்ப்பில்லை. அந்த உலகத்தில என்ன நடக்குது என்று நாம அறிய வாய்ப்பில்லை. நம்ம நண்பர் என்றதால திலகர்ட்ட அந்த வாய்ப்பு அமைஞ்சது... அதனாலதான் வந்தேன். திலகர்ட்ட கன தகவல்களை எடுத்துக்கொண்டன். அடுத்தது அவர் இயல்பாக அந்தச் சூழலை நமக்குள்ளே கொண்டு வாறார். ஒரு அந்நியத்தன்மையில்லாமல் சுவாரஷ்யமா அவர் முதல் நாள் சொன்ன கதைகளைக் கேட்க... இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாதென நான் நல்லா பயன்படுத்திக் கொண்டான். திலகர் எங்களுக்கு ஒரு உதவி செய்யணும்'*

மீண்டும் கோரிக்கை, உதவி எனப் பேராசிரியர் முன்வைக்க நான் மேலும் குழப்பமடைந்தேன்... என்னவாக இருக்கும்? என்பதுதான் காரணம்.

*'எங்களோட இந்த மூன்று நாளும் பகிர்ந்துகொண்ட அந்தக் கதைகள், சம்பவங்களைத் தொகுத்து ஒரு நூலாக்கவேணும். இதுதான் எனது கோரிக்கை'* என்றாரே...

'இதுதானா...' என நான் வாய்விட்டுச் சிரிக்க என்னையும் மீறிய தெளிவத்தையாரின் சிரிப்பு எல்லோரையும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது.

'பகிடிக்கு இல்ல... ஒரு இலக்கியவாதி நாடாளுமன்ற உறுப்பினராகப் போனாத்தான் இப்படி சுவாரஷ்யமாக அதனைச் சொல்ல முடியும். கட்டாயம் எழுதுங்க' என்று தனது கோரிக்கையை மீண்டும் உறுதி செய்தார்.

எதிர்காலத்தில் அவரது கோரிக்கையை நிறைவேற்ற வாய்ப்புக் கிட்டும் என்ற எதிர்பார்ப்பு ஒரு புறம் இருக்க தனக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களையெல்லாம் ஒரு ஆய்வாளராக எவ்வாறு அவர் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார் என்பதை எண்ணும்போது இன்னும் ஆச்சரியமாகவே உள்ளது.

2017-ம் ஆண்டு மீண்டும் கொழும்பில் ஒரு மேடை. கோ. நடேசய்யரின் 'இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' எனும் அரசியல் நாடக நூற் பிரதியை அந்தனி-ஜீவா மறுபதிப்புச் செய்திருந்தார். திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டில் நானே அந்த நூலை வெளியிட்டு வைத்திருந்தேன். அதன் அறிமுகக் கூட்டம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றபோது பேராசிரியர் செ. யோகராசா ஆய்வுரை நிகழ்த்த நான் கருத்துரை வழங்கினேன். 50 பிரதிகளையும் வாங்கி அந்தனி ஜீவாவை ஊக்குவித்தேன். தனது ஆய்வுரையில் 'கோ. நடேசய்யர் ஈழத்தின் முதல் அரசியல் நாடக ஆசிரியர்' எனும் ஓர் ஆய்வுக் கூற்றினைப் பேராசிரியர் செ. யோகராசா முன்வைத்தார். ஏற்கனவே 'திருமதி. மீனாட்சியம்மை நடேசய்யரே ஈழத்தின் முதலாவது பெண் கவிஞர்' எனும் கூற்றினையும் பேராசிரியர் யோகராசா முன்வைத்துள்ளார். இவ்வாறு மலையகத்தின் வேர்களைத் தேடித் தேடி ஆய்ந்தறிந்து அவற்றுக்கு விலாசம் கொடுத்த பெருவிருட்சமாகப் பேராசிரியர் யோகராசாவை அடையாளம் காட்டமுடியும்.

அவருடனான உரையாடலுக்காக அதிகாலை நேரத்தை ஒதுக்கியிருந்தேன். பெரும்பாலும் காலை 5 மணியளவில் தொலைபேசி எடுப்பார். தனக்குத் தேவையான தகவல் எதுவோ அதனை மாத்திரம் மிகச்சுருக்கமாகப் பேசிவிட்டு அழைப்பைத் துண்டித்துவிடும் நாகரிகத்தைத் தொடர்ச்சியாகக் கடைபிடித்து வந்தார். ஒருமுறை அழைப்பெடுத்தவர் 'பரமஹம்சதாசர் தான் மலையகத்தில் முதலாவது புதுக்கவிதை எழுதியவர் என்று சொல்லலாமோ? உங்களது ஆலோசனை என்ன?' என எனது அபிப்பராயத்தைக் கேட்டார். 'வாழ்ந்த பிரதேசம், பாடிய காலம், பாடுபொருள் என்றெல்லாம் பார்க்கும்போது பரமஹம்சதாசரை மலையகப் புதுக்கவிதையாளராக அடையாளம் காட்டுவதில் சிக்கல் உள்ளது... எனது ஆய்வுத் தேடல்களின்படி வண்ணச்சிறகு அரு. சிவானந்தன் தான் மலையகப் புதுக்கவிதைப் பிதாமகன் என்பேன்' என எனது வாதத்தை முன்வைக்க... 'ம்ம்... நீங்க சொல்ற பக்கத்தையும் பார்க்கிறன்... உங்கட கவிதை இலக்கியச் செல்நெறி தொடர்ச்சியாக வாசிக்காட்டிலும் அவ்வப்போது படிக்கிறன். அருமையான வேலை ஒன்றைச் செய்றீங்கள். கட்டாயம் நூலாக்கம் செய்து விடுங்கள். இல்லாட்டிக்குத் தேடிய தகவல்களெல்லாம் வீணாகப் போயிடும்' என அறிவுரை கூறினார். 'கட்டாயம் நூலாகும் சேர். நீங்கள்தான் முன்னுரை எழுத வேணும் என விரும்புறன்...' என ஒருசில பாகத்தின் பிரதிகளையும் அவருக்கு அனுப்பி வைத்தேன். அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட பணி நிறைவு பெறாமலேயே இன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

2020-ம் ஆண்டு முதல் கொரானா முடக்க காலத்தில் வீரகேசரியில் ஒவ்வொரு வாரமும் எழுதிய நூலறிமுகக் குறிப்புகளைத் தொகுத்து செப்ரெம்பர் மாதம் 'மலைகளை வரைதல்' எனும் நூலாக வெளியிட்ட கையோடு ஒக்ரோபர் மாதம் அக்கரைப்பற்றில் நண்பர் சிராஜ் தொடங்கிய, 'பேஜஸ் புத்தக இல்லம்' அக்கரைப்பற்றுப் புத்தகக் காட்சியில் பேராசான் செ. யோகராசாவைச் சந்திக்கக் கிடைத்தது. 'ஆங்கில நூல்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்வது அருமையான பணி. அதனை நூலாக்கியும் கொடுத்துள்ளீர்கள் சிறப்பான பணி...' என வாழ்த்தினார். 'இப்போது நாடாளுமன்றத்தில் இல்லை தானே... நல்ல நேரமிருக்கும் என்னுடைய கோரிக்கையையும் ஒருக்கால் கவனியுங்கோ' எனப் பழைய வேண்டுகோளை மறக்காமல் நினைவூட்டினார்.

2023 சுகவீனமுற்றவராக மகரகமத் தேசிய வைத்தியசாலையில் படுக்கையில் கிடந்தவரை பார்க்கச் சென்ற என்னிடம்... மலைகளை வரைதல் பகுதி இரண்டு எப்போது வரும் என்ற வினாவுடன்தான் பேச ஆரம்பித்தார். நானே மறந்து விட்டிருந்த எனது மலைகளை வரைதல் இரண்டாம் பாகத்தை (எஞ்

சிய கட்டுரைகள்) தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையிலும் ஞாபகப்படுத்தி என்னை ஆச்சரியத் துக்குள்ளாக்கினார். தனது வைத்தியசாலை அனுபவங்களை நூலாக எழுதவுள்ளதாகவும் அதன் அத்தியாயங்கள் குறித்து ஆலோசித்தார். தான் இருக்குமிடம் எதுவென்பதற்கு அப் பால் தனது பணி என்ன? என்பதில் சீரிய கவனத்துடன் இயங் கியவராகப் பேராசான் செ. யோகராசாவை அடையாளம் காட்ட முடியும். தனது பக்கத்துப் படுக்கையில் பார்க்க நாதி யற்றவராகக் கிடந்த பௌத்த துறவி ஒருவர் குறித்து அதிக மனவிரக்கம் கொண்டவராக இருந்தார். அவருக்காகவே ஒரு அத்தியாயத்தை எழுத எண்ணம் கொண்டிருந்தார். தன்னை இறுதி நாட்களில் வைத்தியசாலையில் கவனித்துக்கொண்ட தனது மலையக மாணவர்கள் உட்பட, அனைத்து மலையக மாணவர்கள் மீதும் எப்போதும் அவருக்கு அதீத அன்பு இருந்தது.

எண்பதுகளில் ஆசிரிய நியமனம் பெற்று அக்கரப்பத்தனை மன்ராசி பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் நல்லாசிரியராக மாணவர்களின் வாசிப்புப் பழக் கத்தை ஊக்குவிக்கும் வழிகாட்டியாக மாணவர்கள் மத்தி யில் பெருமதிப்பைப் பெற்றுள்ளார். மலையகச் சமூகத்தோடு இரண்டறக் கலந்த வாழ்க்கை வாழ்ந்துள்ள அவர் அந்தப் பகுதியில் வாழ்ந்த குடும்பம் ஒன்றில் தனது வாழ்க்கைத் துணையையும் தேடிக்கொள்ள, மலையகத்து மருமகனும் ஆனார். மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் செயலா ளர் நாயகமாகத் திகழ்ந்த எஸ். விஜயகுமாரின் சகோதரிகள் எழுவரில் மூத்தவரையே பேராசிரியர் செ. யோகராசா மணமு டித்திருந்தார்.

எனக்கு நன்கு அறிமுகமான பிரான்ஸிஸ், சண்முகராஜா, பர மசிவம், ரவி போன்ற பேராசிரியர் யோகராசாவின் மாணவர் கள் அவர் மீது அதிக அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். பர-மசிவம் தனது மகளின் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்குப் பேராசிரியரையே பிரதம விருந்தினராக அழைத்திருந்தார். அவர் கொழும்பு வருவதென்றால் அதற்கான பஸ் ஒழுங்குக ளைச் செய்து கொடுப்பது, தங்குமிடம் ஏற்பாடு செய்வது எனத் தங்கள் ஆசிரியரைத் தாங்கிப் பிடித்துக்கொள்ள அவ ரது மாணவர்கள் எப்போதும் தலைநகரில் தயாராகவே இருந் தனர். அந்த எண்ணம்போலவே அவரது இறுதிநாட்களில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவருக்குப் பணிவிடைச் செய்யும் பணியை பிரான்சிஸ் போன்ற அவரது மாணவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டிருந்தனர். ஒவ் வொரு நாளும் வைத்தியசாலை செல்வது அவரது மருத்துவ அறிக்கைகளைப் பெறுவது எனத் தன்னை முழுமையாக ஈடு படுத்திக்கொண்ட நண்பர் பிரான்ஸிஸிடமே நாங்கள் அவரது உடல் நிலை குறித்துக் கேட்டு அறிந்துகொண்டோம்.

வைத்தியசாலையில் நேரம் கடத்த அவர் வாசிக்கட்டுமே என நான் கொடுத்தபோது வாங்கித் தலையிணையின் கீழ் வைத் துக்கொண்ட தமிழகன் எழுதிய 'களுகங்கை முதல் காவிரி வரை' எனும் நூலையே அவர் இறுதியாக வாசித்திருக்க வேண்டும். அதேநேரம் பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதி வெளிவராத சில கட்டுரைகளைத் தொகுத்துத் தான் வெளி யிட்ட நூல் அச்சாகி இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்றதா கக் கேள்வியுற்றுத் தனது மனைவிக்கு அதுகுறித்து அறி வித்து அந்த நூலைப் பெற்று, படுக்கையில் இருந்தவாறே அதனைப் பார்த்து மகிழ்ந்தார் எனும் செய்தியையும் அவரது துணைவியார் என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

தான் மலையகத்துக்கு வந்து சேர்ந்தது, நன் மாணாக்கர்க ளைப் பெற்றது பெரும்பேறு என என்னுடனான இறுதி உரை யாடலின்போதும் வைத்தியசாலையில் பகிர்ந்துகொண்டார். மலையகத்தைத் தன் மனதார நேசித்தவர் என்கிற வகையில் மலையகம் குறித்த அவரது பார்வையும் பங்களிப்பும் எப்போ தும் உயர்வானதாகவே இருந்தது. மலையகம் குறித்த உயர் வான பார்வையைக் கொண்டிருந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கும் இதுபோல இறுதிநேரப் பணி விடை செய்வதற்கு மலையகத்தவர்களான நாங்கள் பேறு பெற்றோம். அதேபோல அவரது மாணவரான பேராசிரியர் செ. யோகராசாவின் அந்திம காலத்திலும் அவருக்குப் பணி விடை செய்யும் பாக்கியம் நன்றியறிதலாக மலையகத்துக்கே வாய்த்தது.

எனது தலைமையில் இயங்கும் 'மலையக அரசியல் அரங்கம்' அமைப்பின் ஈராண்டுப் பூர்த்தி விழாவை இரண்டு அமர்வுக ளாகக் கொழும்பில் நடத்தியதொடு கலாநிதி. குமாரி ஜெய வர்தன, அந்தனிஜீவா ஆகியோருக்கு நடேசய்யர் - மீனாட்சி யம்மை ஆகியோர் நினைவாக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவம் செய்வதை நண்பர் பிரான்ஸிஸ் ஊடாக அறிந்துகொண்டு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய் தியே மலையகம் குறித்தான அவரது இறுதிப் பார்வையாக இருக்க வேண்டும். அதனை விழாவில் நண்பர் பிரான்ஸிஸ் வாசிக்கத் தயாராக இருந்தபோதும் நேரம் வாய்க்காததால் வாய்ப்புக் கிட்டவில்லை. எனினும் நண்பர் பிரான்ஸிஸ் பகிர்ந் துகொண்ட அந்த இறுதி வாழ்த்துச் செய்தியை இங்கே பகிர்ந் துகொள்வது பொருத்தமானது.


*'இந்திய முதல் மந்திரியாக இருந்த நேருஜி ஒரு முறை - பூதம் போல இந்தியா தூங்குகிறது. அது ஒரு காலத்தில் விழித்தெழும்பும் என்று குறிப்பிட்டார். அது இப்போது உண் மையானது. இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் மிகவும் உயர்ந்த நிலையை அடைவார்கள் என்று குறிப்பிட் டார். அதேபோன்று இலங்கையைப் பொறுத்தவரையில் சிறு பான்மை இனத்தவர் மூவரிலும் மலையக மக்கள் இன்றுபோ லத் தம்மை வெளிப்படுத்தாதவர்களாக இருந்தனர். இப் போது அந்த சிந்தனையில் மாற்றம் வந்துள்ளது. அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே இங்கே நடக்கவுள்ள இருநிகழ்வு களும் ஆகும். இத்தகைய வலுவான, வளமான நிகழ்ச்சியை ஒன்று சேர்ப்பதில் பெரும் பாடுபட்டவர்களுக்கும் அலுப்பும் சலிப்பும் இல்லாமல் பங்கெடுப்பவர்களுக்கும் எனது நெஞ் சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்'*

அவரது இறுதி வார்த்தைகளாக அமைந்த இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டது போலவே மலையகம் குறித்த ஆய்வு முயற்சிகளுக்காக அவர் பட்ட பாடுகளையும் அவரது பங்களிப்புகளையும் என்றும் மலையகம் மறவாது, மீனாட்சி யம்மை முதல் கபாலிச் செல்லன் வரை மலையகத்தின் வேர் களைத் தேடித்தந்த விருட்சமாகப் பேராசான் செ. யோகராசா மலைகளில் வாழ்வார்.



thilagar@thaiveedu.com

# ஆழ் கடலளவே ஒரு மனிதர்



**– நிலாந்தி சசிகுமார்**

ஆழ் கடலைப்பற்றி ஓர் கிணறு பேசலாமா? அவ்வாறு தான் இருக்கும் நான் பேராசிரியர் செ. யோகராசா அவர்களைப் பற்றிப் பேசுவது. இருப்பினும் அவரின் மறைவு என்னைக் கொஞ்சம் ஆட்டிப் பார்த்ததால் பேச விழைகிறேன்.

ஆம்... அந்த ஆழ்கடல் கொஞ்சம் என்னிடம் வந்தது. அது 2018-ம் ஆண்டு தை மாதம், எனது கவிதைத் தொகுப்பின் வெளியீடு எனும் சுனாமியின் போது. இலக்கிய உலகைப் பற்றி எதுவும் தெரியாமல் மனதில் தோன்றியதையெல்லாம் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு வீட்டோடு அடைபட்டுக் கிடந்த எனக்கு ஏற்பட்ட விபரீத ஆசை, எழுதியவற்றைப் புத்தகமாகப் பார்க்கவேண்டும் என்பது. அதற்காக நான் மகுடம் பதிப்பகத்தை நாடினேன். அதன் பொறுப்பாளர் மைக்கேல் கொலின் அவர்கள் எனது கிறுக்கல்களையெல்லாம் தொகுத்து, சிலவற்றைத் தவிர்த்து, பலவற்றைத் திருத்தச் செய்து, கவிதைத் தொகுப்பை வெளியிட ஆயத்தம் செய்தார்.

சரி பிழை பார்க்க முதல் புத்தகம் என் கையில் வந்தபோது தான் அந்த அணிந்துரையின் அடியில் பேராசிரியர் செ. யோகராசா என்ற பெயரைப் பார்த்தேன். அவரைப் பற்றி எதுவும் தெரியாது. அவரின் அணிந்துரையில் அவர் குறிப்பிட்டிருந்த தன் சுருக்கம் இதுதான். ‘இவர் புது அறிமுகம். அறிமுகம் செய்து வைத்த மகுடத்திற்கு வாழ்த்துகள். இவரின் கவிதைகளில் குறிப்பிடத்தக்கவை சில. மாற்ற வேண்டியவை பல. அதற்கு இவர் செய்ய வேண்டியது வாசிப்பு மட்டுமே’. இந்த அணிந்துரையை வாசித்த போதே அவரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் என்னை ஆட்கொண்டது.

வெளியீட்டு நாளும் வந்தது. மைக்கேல் அண்ணா அழைத்திருந்த அனைவரும் வந்திருந்தனர். அவர்களை அப்போது தான் நான் முதன் முதலாகப் பார்க்கிறேன்; அறிகிறேன். என் கண்கள் மட்டும் இதில் எவர் யோகராசா சேராக இருக்கும் என்றே தேடியது. இறுதியாக, அணிந்துரை வழங்க இதோ பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் என அழைத்தபோது அங்கே வந்து நின்றது ஒரு வாமன ரூபம். நான் சற்றும் எதிர்



பார்க்காத, என் கற்பனையை உடைத்தது அந்தத் தோற்றம்.

அவரையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். உருவத்திற்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லை. அவரின் பேச்சின் ஆழத்தைப் பார்த்தேன், அதில் இருந்த அக்கறையை உணர்ந்தேன். படைப்பாளர்களை ஊக்குவிப்பதிலும் பார்க்க அவர்களைச் சரியான பாதையில் திருப்பி விடவேண்டும் என்பதில் குறியாக இருந்தது அவரது பேச்சு.

நிறைகுடம் தழம்பாது என்பார்கள். அதற்கு மிகப் பொருத்தமான உதாரணம் இவரே. பேச்சில் அலட்டலோ சந்தேகமோ துளியும் இல்லை. தேவையானவற்றை அளவோடு சொல்லும் ஆற்றலும் அறிவும் அதிகமாகவே இருந்தது. சிரிக்காமல் நக்கல் பண்ணும் குசும்பும் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. ஆனால் அதைப் புரிந்துகொண்டு சிரிப்பதற்குள் பல விடயங்களைச் சொல்லிச் சென்று விடுகிறார்.

இந்தக் குறுகிய மனிதருக்குள் இவ்வளவு அறிவும் தேடலும் நினைவாற்றலும் எப்படி விரிவடைந்து கிடக்கின்றது என ஆச்சரியப்பட்டுப் போனேன். அதிர்வில்லாத அவரது பேச்சில் ஆணித்தரமான கருத்துகளும் ஆதாரத்துடனான மேற்கோள்களும் நிறைந்திருந்தது. அவரை என் மானசீகக் குருவாக வரித்துக்கொண்டு, நிகழ்வின் முடிவில் என்னிடம் அவர் கூறிய அறிவுரைகளைச் செவிகளில் வாங்கிக் கொண்டேன்.

அதன்பின் பல இலக்கிய நிகழ்வுகளுக்குச் சென்றிருக்கிறேன். அத்தனை நிகழ்வுகளும் அவரது உரை இல்லாமல் நிகழவில்லை. எந்த நிகழ்வுக்கும் வரவோ, உரை நிகழ்த்தவோ அவர் மறுத்ததும் இல்லை. பெரியவர்களோ சிறியவர்களோ இலக்கியம் சார்ந்து எவர் பேசினாலும் அவர்களுடன் உரையாடத் தயங்கியதில்லை. அவருடன் பேசக் கிடைத்த அத்தனை தடவைகளும் அவர் கூறிய ஒரே அறிவுரை; *'வாசியுங்கள் கருத்துப் புரிய வாசியுங்கள். வாசித்தவற்றை யோசியுங்கள் பின் பதிவு செய்யுங்கள். அப்போதுதான் எழுத்து வசப்படும்'.* இவ்வறிவுரையே என்னைக் கவிதை தாண்டிக் கட்டுரைக்குத் தாவச்செய்ததென்றால் மிகையாகாது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறியைக் கற்றபோது அவரது மாணவியாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது என் பாக்கியம்.

அவர் ஓர் அற்புதமான மனிதர், அதிசயமான மனிதப் பிறவி. அனைத்தும் தெரிந்திருந்தாலும் எதுவும் தெரியாதவர் போல் நடந்துகொள்ள ஒரு சிலரால் மட்டுமே முடியும். அப்படிப்பட்ட அந்த மனிதரை நான் ஆழ்கடலுடன் ஒப்பிடுவதில் பெருமை கொள்கிறேன்.

ஈழத்தமிழ் இலக்கிய உலகம் ஒரு நடமாடும் அறிவுப் பெட்டகத்தை இழந்துவிட்டது. எம்மைப் போன்ற வளர்ந்து வரும் இலக்கிய ஆர்வலர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பே. ஈடிணையற்ற ஒரு பொக்கிஷம்.


அவரை மதிப்பவர்கள் செய்ய வேண்டியது வாசிப்பதை நேசிப்பதைத் தவிர வேறொன்றும் இல்லையென்பேன். அதுவே அவருக்கு நாம் கொடுக்கும் நன்றிக்கடன்.



nilanthy.s@thaiveedu.com



# ஈழத்து நவீன இலக்கியப் பிற்புலத்தில் பேராசிரியர் செ. யோகராசாவின் பார்வையும் பதிவும்



- சி. ரமேஸ்

ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபில் நவீன இலக்கியப் பிற்புலத்தில் சிந்தித்துச் செயற்பட்ட விமர்சகர்களில் முக்கிய, முதன்மையான ஆளுமையாக விளங்கியவர் பேராசிரியர் செ. யோகராசா ஆவார். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியற்துறைத் தலைவராகச் செயற்பட்ட இவர் நாவல், சிறுகதை, மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதைகளில் ஆழமான பரிச்சயம் கொண்டவர். கருணையோகன், பசுமலை யோகன் என்ற பெயரில் கவிதைகளை எழுதியவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருபத்தைந்தாண்டுகள் பணியாற்றிய செ. யோகராசா அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அதிகம் உழைத்தவர். நவீன தமிழ் இலக்கியம், ஈழத்து இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், மலையக இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டாரியல் இலக்கியம், கல்வியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆய்தறிந்த அனுபவங்களைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் தந்தவர்.

யோகராசா 1949 டிசம்பர் 17-ல் யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி, கரணவாய் என்னும் ஊரில் செல்லையா, இலட்சுமித் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைக் கரணவாய் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை நெல்லி-யடி, மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்று, பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1971-ல் தமிழில் இளங்கலைச் சிறப்புப் பட்டத்தையும், 1972-ல் இளமெய்யியல் பட்டத்தையும் பெற்றார். 1972 முதல் பல்வேறு இடங்களில் அஞ்சலக முகாமையாளராகப் பணியாற்றிய யோகராசா அவர்கள் 1976-ல் ஆசிரியப் பணியில் சேர்ந்தார். நுவரேலியா மாவட்டத்திலுள்ள கோல்புறுாக் என்று அழைக்கப்படுகின்ற பசுமலைக் கிராமத்தில் (அக்கரப்பத்தனை) அமைந்துள்ள பாடசாலையில் கடமையாற்றினார். இக்கல்லூரியில் சு. முரளிதரன் போன்ற ஆளுமைகளை உருவாக்கிய இவர் தன்னலமற்ற மனிதராகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் கடமையாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1984-ல் கல்வி டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்ற இவர் 1990-ல் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் வழிகாட்டலின் கீழ் முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். அதன் பின்னர் 1999-ல் முனைவர் பட்டத்தையும் பெற்றார். 1991-ல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் விரிவுரையாளராக இணைந்த செ. யோகராசா அவர்கள் 2009-ல் பேராசிரியரானார்.

பேராசிரியர் செ. யோகராசா ஆசிரியர் எழுதிய நூல்களாக ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும், இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன கவிதை, ஈழத்து முச்சந்தி இலக்கியம், ஈழத்து இலக்கியமும் இதழியலும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானவற்றைக் காணலாம். இவர் தொகுத்து வெளியிட்ட நூல்களாக ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, மாற்று நோக்கில் சில கருத்துகளும் நிகழ்வுகளும், புதுத்துளை நூறு (பயிற்சிப் பட்டறைக் கவிதைகள்), ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள், ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம் முதலானவற்றைக் கூறலாம். கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் காலாண்டு இதழாக 1982 முதல் வெளியிடப்பட்டுவரும் ‘கிழக்கொளி’ சஞ்சிகையிலும், மட்டக்களப்புப் பிரதேசச் செயலகத்தால் வெளியிடப்பட்டு வந்த தேனகம் சஞ்சிகையிலும் மட்டக்களப்புப் பிரதேச அறிஞர்களைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தி வைத்ததோடு நில்லாது ஈழத்தின் நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம் தொடர்பாகவும் விரிவாக எழுதினார். கிழக்கொளி (வைகாசி - ஆடி 1993) இதழில் இவர் எழுதிய கண்ணகி வழக்குரையில், கண்ணகி என்ற கட்டுரை கண்ணகி வழக்குரை கூறும் பதினொரு காதைகளின் வாயிலாக நுண்மதியும் அனுபவ அறிவும் கொண்ட கண்ணகியைக் காட்சிப்படுத்த முனைகிறார். கிழக்கொளி (ஐப்பசி - மார்கழி 1993) இதழில் வெளிவந்த இருபதாம் நூற்றாண்டின் முடிவில் ஈழத்துச் சிறுகதை என்ற கட்டுரை கிழக்கிலங்கை நாவலாசிரியர்களான பித்தன், வ.அ. இராசரத்தினம், எஸ்.பொ. போன்ற படைப்பாளிகளினை ஆளுமைகளையும் எமக்கறிமுகம் செய்கிறது. ‘இருபதாம் நூற்றாண்டு முடிவில் ஈழத்துச் சிறுவர் இலக்கியம் (கிழக்கொளி: 09.07.2000) கட்டுரை ஈழத்தில் எழுந்த சிறுவர் இலக்கியம் குறித்த விரிவான செய்திகளைத் தருகிறது. ஈழத்துச் சிறுவர் பாடல்கள் குறித்த வளர்ச்சி 1918-ல் வெளிவந்த பாலபோதினி தொகுப்போடு தொடங்குகிறது எனக் கூறுவது ஆய்வுக்குரியது. ‘இருபதாம் நூற்றாண்டு முடிவில் ஈழத்து நவீன நாடக வளர்ச்சி’ என்ற கட்டுரை கிழக்கொளி (03.01.2003) பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தனின் நாடக இலக்கிய முயற்சிகள் குறித்துப் பேசுவதோடு நில்லாது 1980-களில் ஏற்பட்ட தமிழ் தேசியப் போராட்டச் சூழலில் வெளிவந்த நாடகங்கள் குறித்தும் பேசுகின்றன. 07.04.2009 இதழில் எழுதிய இருபதாம் நூற்றாண்டு முடிவில் ஈழத்து வாசகர்கள் என்ற கட்டுரை வித்தியாசமான நோக்கில் எழுதப்பட்டது. இக்கட்டுரையில் வாசகர்களைக் காத்திரமான நோக்குடைய வாசகர்கள், பொழுது போக்குடைய வாசகர்கள் என இரண்டா

கப் பிரித்தாராய்வர். காத்திரமான வாசகர்களை மேலும் இரண்டாகப் பிரிப்பர். தேடல் தாகத்துடன் இடையறாது வாசிப்போர். தேடல் தாகத்துடன் அவ்வப்போது வாசிப்போர். இதுபோல வாசகர்களை மேலும் இரண்டாகவும் வகைப்படுத் துவர்.எழுத்தாளராகவுள்ள வாசகர், உயர் கல்வி நிறுவனங்க ளில் பணிபுரியும் ஆசிரியர்களாகவுள்ள வாசகர். உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களாகவுள்ள வாசக ரைப் பெண் வாசகர், கிராமப்புற வாசகர் என இரண்டாகப் பிரித்து இக்கட்டுரை ஆராயும். ஆனால் இப்பிரிப்பு நடைமு



றைக்குச் சாத்தியமானதா - இல்லையா என்பது ஆய்வுக்குரி யது. ஆடி - புரட்டாசி 2008 கிழக்கொளியில் விபுலாநந்தர் குறித்து எழுதிய 'விபுலாநந்தர் வாழ்வினிலே' என்ற கட்டுரை விபுலாநந்தர் தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கத்தையுடைய வராக இருந்தமையையும் பாரதி மீது ஈடுபாடு கொண்டவராக வும் தேசியப்பற்று மிகுந்தவராகவும் இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத, வேதாந்த கேசரி முதலான சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்தமையையும் எடுத்துரைக்கிறது. சிறு கதை எழுதுவோம் (கிழக்கொளி : ஐப்பசி - மார்கழி - 2008) என்ற கட்டுரை மாணவரின் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையில் எழுதப்பட்ட கட்டுரை ஆகும். பாரதியார் புகழ் பரப் பிய முதற் பெண்மணி பத்மாசனி அம்பாள் என்பதை 'பாரதி புகழ் பரப்பிய முதல் புலமையாளர் ஈழத்துப் பண்டிதை பத் மாசினி அம்மையார்' (புரட்டாதி - மார்கழி :2010) கட்டுரை எடுத்துரைக்கிறது.

தேனகத்தில் வெளிவந்த மட்டக்களப்புப் புகலிட இலக்கியம் (தேனகம் -1997), என்ற கட்டுரை ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்ற கவிஞர்கள், நாவலாசிரியர்கள், சிறுகதை யாசிரியர்கள் குறித்துப் பேசுகிறது. ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்று அம்மண்ணில் கவிதை இலக்கியங்களைப் படைத்து ஈழத்திலக்கியத்துக்குப் பெருந் தொண்டாற்றிய கவி ஞர்களாக ஈழத்துப் பூராடனார், ஞானமணியம், வே. கருணா-நிதி முதலானோரை இனங்காட்டும் இக்கட்டுரை புகலிடச் சிறுகதைகள் ஊடாக ஈழத்திலக்கியத்துக்குத் தொண்டாற்றிய ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், எஸ். பொன்னுத்துரை, செல்வ மதீந்திரன், கல்லாறு சதீஸ், களுவாஞ்சிக்குடி யோகன் முத லானோரையும் இனங்காட்டுகிறது. புகலிட நாவலாசிரியை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்களைக் கோடிட் டுக் காட்டி நிற்கும் இக்கட்டுரை நாடகமுயற்சிகள், இதழியல் முயற்சிகள், திரைப்பட முயற்சிகள், மொழிபெயர்ப்பு முயற்சி கள் மற்றும் கட்டுரை முயற்சிகள் குறித்தும் பேசுகிறது. தேன கத்தின் வாயிலாக மட்டக்களப்பு எழுத்தாளர்களின் இலக்கி யப்பணிகள் பலவற்றை ஈழத்திலக்கியத்துக்கு அறிமுகம் செய்து வைத்தவராகச் செ. யோகராசா அவர்களைக் கூற லாம். 2000-ம் ஆண்டு தேனகத்தில் புரட்சிக்கமாலின் சிறுக தைகளை மதிப்பிட்ட செ.யோ, 2001-ம் ஆண்டு தேனகத்தில் மட்டக்களப்புப் பிரதேச நூல் வெளியீட்டு முயற்சிகள் குறித் தும் எழுதியிருந்தார். தமிழ் தேசியத்துக்குப் பங்களிப்புச் செய்த மட்டக்களப்பு கவிஞர்கள் குறித்து இவரெழுதிய தமிழ்த் தேசியமும் மட்டக்களப்புப் பிரதேச கவிஞர்களும் என்ற கட்டுரை தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை யில் அதற்கெதிராகக் குரல் கொடுத்த நீலாவணன், ராஜபா-ரதி, ஆரையூர் அமரன், ஜீவா ஜீவரத்தினம், எருவில் மூர்த்தி, புரட்சிக்கமால், திமிலைத்துமிலன், காசிஆனந்தன் முதலான கவிஞர்கள் குறித்தும் பேசுகிறது. மொழியுரிமை, ஸ்ரீ எதிர்ப்பு, சிங்களமொழி எதிர்ப்பு, தேசிய விடுதலை என்பவற்றை முன் னிறுத்தி செ.யோ-வால் எழுதப்பட்ட இக்கட்டுரை ஈழத்துக் கிழக்கிலங்கை மக்கள் தமிழ் தேசியத்தின்பாற் கொண்டி ருந்த ஈடுபாட்டினையும் எமக்குணர்த்தி நிற்கிறது.

2004-ம் ஆண்டு தேனகத்தில் எழுதிய 'புலவர்மணி பெரியதம் பிப்பிள்ளை மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதையின் ஊற் றுக்கால்' என்ற கட்டுரை புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை பகவத்கீதை வெண்பா, விபுலாநந்தர் மீட்சிப் பத்து, மண்டூர் பதிகம் என்பன மரபுவழிக் கவிஞராகக் காட்டி னாலும் சமூகத்தின் சிறுமை கண்டு இவர் பாடிய கவிதைகள் இவரை நவீன கவிஞர்களுள் ஒருவராகவே இனங்காட்டி நிற்ப தனை இக்கட்டுரை விளக்கி நிற்கிறது. 2006-ம் ஆண்டு தேன கத்தில் எழுதிய 'ஈழத்து இயற்கை அனர்த்த இலக்கியங்கள்' என்ற கட்டுரை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அறியப்படாத பக்கங்கள் பலவற்றைத் திறந்து நிற்கின்றன. மக்கள் வாழ் கின்ற பிரதேசங்கள் சுனாமி, புயல், வெள்ளப்பெருக்கு, சூறா வளி முதலான இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் ஈழத்தில் எழுந்த இலக்கியங்கள் குறித்தும் பேசும் கட்டுரையாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரியக் கல்வி வளர்ச்சி - சில அவதானிப்புகள் என்ற தலைப்பில் தேனகத்தில் இவர் எழுதிய கட்டுரை திண் ணைப் பள்ளிக் கல்விமுறை குறித்துப் பேசுகிறது. மட்டக்க ளப்பின் பாரதி சஞ்சிகையின் முக்கியத்துவம் குறித்து செ.யோ எழுதிய 'பாரதி சஞ்சிகை மூன்று பார்வை என்ற கட்டுரை எம். எம். சாலிஹ் எழுதிய 'சதிகாரி' என்ற சிறுகதை குறித்தும் ஜி.எம். செல்வராஜ் அவர்களுடைய கவிதை குறித்தும் பாரதி யில் வெளிவந்த கட்டுரை இலக்கியம் குறித்தும் விரிவாகப் பேசுகிறது. மண்முனை வடக்கு நவீன கவிதைகள் குறித்துச் செ. யோகராசா அவர்கள் எழுதிய மண்முனை வடக்கு நவீன

கவிதை: மரபும் மாற்றமும் என்ற கட்டுரை மக்களின் வாழ்க்கைப் புலத்தை நவீன கவிதை எவ்வாறு வெளிப்படுத்தி நின்றது என்பதனைக் காட்டி நிற்பதை வெளிப்படையாகக் கூறிச் செல்கிறது.

நாட்டாரியல் ஆய்வுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒருவராகப் பேராசிரியர் செ.யோ காணப்படுகிறார். இவருடைய நாட்டரியல் ஆய்வுகள் முச்சந்தி இலக்கியம் என்ற பெயரிலும் ஈழத்து வாய்மொழிப்பாடல் மரபு என்ற பெயரிலும் நூல்களாக வெளிவந்துள்ளன. ஈழத்தில் வெளிவந்த முக்கிய நூல்களில் ஒன்றாக 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்' காணப்படுகிறது. இந்நூல் வெளிவருவதற்கு முன்னரே செ.யோ அவர்கள் ஈழத்து வாய்மொழிப்பாடல் மரபு என்ற நூலையும் எழுதியிருந்தார். இந்நூலுக்கான அணிந்துரையைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எழுதி இருந்தார். திருவிழா, சந்தைக் காலங்களில் வீதிகளில் பாடப்படும் பாடல்கள் குறித்து ஆய்வினை, பாணர்களின் மரபுகளுடன் ஒப்பிட்டு செ.யோ மேற்கொண்டிருந்தார். மட்டக்களப்பு, மலையகப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. 'ஈழத்து வாய்மொழி மரபு' என்ற நூல் வடக்குக் கிழக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம் கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, திருகோணமலை, மலையகம் ஆகிய ஊர்களில் வழக்கிலிருந்த Semi oral எனப்படும் எழுத்துநிலை பெற்ற வாய்மொழிப் பாடல்களைத் தொகுத்து இந்நூலினைச் செ. யோகராசா வெளிக்கொணர்ந்திருந்தார். இப்பாடல்கள் வேளாண்மைச் செய்கை பற்றிய பாடல்களாகவும் இயற்கை அனர்த்தங்கள் குறித்த பாடல்களாகவும் இறைவணக்கத்தை வெளிப்படுத்தும் பாடல்களாகவும் நாட்டுவளம் கூறும் பாடல்களாகவும் தேர்தலைப் பாடும் பாடல்களாகவும் சிறைமீட்ட கும்மிப் பாடல்களாகவும் காணப்படுகின்றன. நாட்டாரியல் குறித்த கட்டுரைகளை எழுதியவராகவும் செ.யோ காணப்படுகின்றார். மட்டக்களப்பு எண்ணெய்ச் சிந்து: ஒரு பன்முக நோக்கு என்ற கட்டுரை மட்டக்களப்புப் பண்பாட்டுச் சூழலில் எண்ணெய்ச் சிந்து பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது. பேராசிரியரால் எழுதப்பட்ட மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள தனித்துவமான ஊஞ்சல் பாடல்கள் என்ற கட்டுரை ஊஞ்சலாடும் போது பாடப்படுகின்ற பாடல்கள் வெறும் பொழுதுபோக்கான பாடல்களன்று. அவை அறிவையூட்டும் பாடல்களாகவும் மக்களின் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் பாடல்களாகவும் அமைவதனையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

இன்றைய இலக்கியங்களில் 'இதிகாசப் பெண் பாத்திரங்கள்' என்ற நூல் 2003-ல் எழுதப்பட்டு வெளிவந்த நூலாகும். இந்நூல் இதிகாசங்களில் எடுத்தாளப்படும் நளாயினி, சீதை, அகல்யை ஆகிய பாத்திரங்கள் இலக்கியங்களில் எவ்வாறு பேசப்பட்டுள்ளன என்பதை இருபத்தைந்து இலக்கியப் படைப்புக்களின் வாயிலாக ஆய்வுக்குட்படுத்துகின்றன. சு.து. யோகியாரின் கவிதை, புதுமைபித்தன், பிரபஞ்சன், சம்பந்தன், மு. தளையசிங்கம், கருணாநிதி, ராஜாஜி, கோ. சுந்தராஜன் முதலானோரின் சிறுகதைகள், வ. ராவின் நாவல், ந. பிச்சமூர்த்தியின் உயிர்மகள் புதுக்கவிதை, தேனூரானின் கூத்து, இ. இரத்தினம், சில்லையூர் செல்வராஜனின் வானொலி நாடகங்கள் முதலான படைப்புகளின் வாயிலாக ஆய்வுக்குட்படுத்துகிறார். ஈழத்திலக்கியப் பரப்பில் பேசப்படவேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று.

இலக்கியத் தேட்டம் : ஈழத்து நவீன இலக்கியம் என்ற நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெளியீடாக 2000 ஆண்டளவில் வெளிவந்தது. நவீன இலக்கியம் குறித்துப் பரவலாகப் பேசப்படாத நிலையில் இந்நூலே எமக்கு முன்னோடி நூலாக அமைந்தது. இந்நூலில் நவீன கவிதை குறித்துப் பரிசீலிக்கிறார். 1945 - 1960-ம் ஆண்டு காலகட்டத்தைத் திராவிடப் போக்கு, வெற்றோசைப் போக்கு, புதுக்கவிதைப் போக்கு எனப் பிரித்து ஆராய்வர். 1960 முதல் 1970 வரையிலான காலகட்டத்தைப் புதுக்கவிதைப் போக்கு, முற்போக்குக் கவிதைப் போக்கு எனப் பிரித்து நோக்குகிறார். 1970 - 1980-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தைச் சமூகச்சார்பு, பொதுவுடமைச் சிந்தனைகள், கற்பனாவாதப் பண்புகள், கலைப் பெறுமானமும் கலைத்துவமும் குன்றிக் காணப்படல் எனப் பகுத்தாராயும் செ.யோ 1980 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் 'அரசியல் எதிர்ப்புக் குரலே' மேலோங்கிக் காணப்பட்டதாகக் கூறுவார். ஈழத்து கவிதைகளில் பெண்நிலைவாத நோக்கும் புகலிட அனுபவங்களும் நிறைந்து காணப்பட்டதான செ.யோ கூற்று பொய்யில்லை. சிறுகதைகளைப் பொறுத்தவரை இந்நூலில் 1930-களோடு சிறுகதைகள் தொடங்குவதாகக் கூறுகிறார். முற்போக்கு அணி சார்ந்த சமூக நோக்குடைய எழுத்தாளர்கள் (டானியல், கணேசலிங்கன், அகஸ்தியர், நீர்வை பொன்னையன்) முற்போக்கு அணி சாராத சமூக நோக்குடைய எழுத்தாளர்கள் (அ.செ.மு, திக்குவல்லை கமால், எஸ்.பொ, வ.அ. சுதாராஜ், அ. முத்துலிங்கம்) என இரண்டாகப் பிரிப்பர். ஈழத்து நாவல்கள், விமர்சனங் குறித்தும்; இந்நூல் ஆய்வு செய்கிறது. ஈழத்தின் நவீன இலக்கியத்தை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய நூல் என்னும் வகையில் முக்கியமான நூலாகும்.

ஈழத்துச் சிறுவர் பாடல்கள் குறித்து வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து செ. யோகராசா அவர்களால் வெளியிடப்பட்ட நூலே 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்' ஆகும். இந்நூலில் 'தமிழ்ப் பாரம்பரியத்தில் சிறுவருக்கான இலக்கியம்' (பேராசிரியர் கா. சிவத்தம்பி), 'தமிழில் குழந்தைக் கவிதைகள்' (பேராசிரியர் க. கைலாசபதி), 'சிறுவர் இலக்கியம்' (க. நவசோதி), 'சிறுவர் இலக்கியம் சில சிந்தனைகள்'(செ. கணேசலிங்கன்), 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்' (கனக. செந்திநாதன்), 'தமிழ் இலக்கியப் பரப்பில் ஈழத்துக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள்' (பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா), 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்: ஒரு பார்வை' (த. துரைசிங்கம்), 'ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள்' (பேராசிரியர் செ. யோகராசா), 'சிறுவர் உளப்பண்பும் இலங்கையில் தமிழில் சிறுவர் இலக்கியமும்;' (ஏ. இக்பால்), 'இலங்கையில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி: ஒரு கண்ணோட்டம் (பேராசிரியர் செ. யோகராசா), 'ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளர்ந்துள்ளதா ?' (பேராசிரியர் செ. யோகராசா), 'குருவியின் தலைமீது பனங்காயைச் சுமத்தலாமா ? குழந்தைக் கவிதைகள் பற்றிய சில சிந்தனைகள்' (கல்வயல் வே. குமாரசாமி), 'சிறுவர் விமர்சனம்: அனுபவத்தினூடான மனப்பதிவு' (பேராசிரியர் செ. யோகராசா), 'யாழ்ப்பாணப் பிரதேசச் சிறுவர் பாடல் வளர்ச்சி: ஒரு நோக்கு' (வே. செவ்வேட்குமரன்), 'மட்டக்களப்புப் பிரதேசச் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி எஸ்.இ. கமலநாதன்' (பேராசிரியர் செ. யோகராசா) முதலான கட்டுரைகளோடு சிறுவர் இலக்கியங்களுக்கு எழுதப்பட்ட முன்னுரைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. ஈழத்தில் சிறுவர் இலக்கியம் தொடர்

பாக வெளிவந்த ஆழமான நூல்களில் இதுவுமொன்றாகும்.

'ஈழத்துத் தமிழ் நாவல்: வளமும் வளர்ச்சியும்' என்னும் ஆய்வு நூலைத் தந்த பேராசிரியர் இந்நூலில் பத்துக் கட்டுரைகளி னூடாக ஈழத்து நாவல் இலக்கியத்தை ஆய்வுக்குட்படுத்து கின்றார். 'ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றமும் எழுபதுகள் வரையான வளர்ச்சியும்: மறுமதிப்பீடு' 1976 மல்லிகையில் வெளிவந்த கட்டுரை ஆகும். 1885-ல் மோகனாங்கி நாவலு டன் ஆரம்பிக்கும் இக்கட்டுரை கணேசலிங்கத்தின் நாவல் கள் பட்டியலுடன் முடிவுக்கு வருகிறது. கருப்பொருள், பாத்தி ரவார்ப்பு, நாவலின் பேசுபொருள், சம்பவங்களின் வாயிலாக ஈழத்து நாவல்களை ஆய்வுக்குட்படுத்தும் செ.யோ அவர்கள் மக்களின் அன்றாட வாழ்க்கைமுறையில் இடம்பெறும் அடிப் படைப் பிரச்சினைகளைக் குறித்தும் பேசுகிறார். 'எழுபதுக ளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்' எனும் தலைப்பில் இடம் பெறும் கட்டுரை அலையில் வெளிவந்த போதிலும் அதன் தலைப்பு மாற்றப்பட்டுள்ளது. கார்த்திகை மாதம் 1975-ல் வெளிவந்த அலையில் இக்கட்டுரை 'எழுபதுகட்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளிவந் தது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. ஈழத்து நாவல் தொடர் பாக வெளிவந்த இக்கட்டுரை பெறுமதியான கட்டுரைகளில் ஒன்றாகும். வர்த்தக அடிப்படையில் நிறுவனரீதியாக நாவல் கள் வெளிவரும் நிலையை இதில் சுட்டிக்காட்டுகின்றார். 'எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள், ஒரு புதிய அலை', தொண்ணூறுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்: புதிய போக்குகள் முதலான கட்டுரைகள் ஈழத்தின் அரசியல், சமூக மாற்றங் களை நாவல்கள் எவ்வாறு பிரதிபலித்துச் சென்றன என்ப தனை நினைவு கூருகிறது. குறிப்பாகப் 'பெண் விடுதலையை' நாவல்கள் எவ்வாறு வெளிப்படுத்தின என்பதையும் இக்கட் டுரை ஆய்வுக்குட்படுத்துகிறது. 'மட்டக்களப்பின் முதல் நாவல்: அரங்க நாயகி', 'நாற்பதுகளில் எழுதப்பட்ட ஈழத்து நாவல்' அனிச்ச மலரின் காதல்', 'மார்க்சிய நோக்கில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்: செ. கணேசலிங்கன் நாவல்கள் பற்றிய அவதா னிப்பு', 'ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானிய லின் நாவல்கள்: கானல், அடிமைகள் பற்றிய சில குறிப்பு கள்', 'எண்பதுகளில் வெளிவந்த ஒரு நாவல்: 'மரக்கொக்கு' என்பன ஈழத்து நாவல் இலக்கியத்தின் போக்கினையும் ஆளு மைகளின் சிறப்பினையும் ஈழத்திலக்கியத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஈழத்திலக்கிய வரலாற்றை ஒரு பாடமாகக் கற்றமையாலும் கிழக்குப் பல்கலைக்கழகத் தில் அதனை ஒரு பாடமாகக் கற்பித்தமையாலும் நவீன கவி தைகள் குறித்துப் பேசியும் விவாதித்தும் வந்ததையாலும் அது குறித்து ஆழமான தேடலை மேற்கொண்டமையாலும் நவீன கவிதை குறித்துப் பரந்த அறிவு செ.யோ அவர்களிடம் காணப்பட்டது. இதன் விளைவே 'ஈழத்து நவீன கவிதை - புதிய உள்ளடக்கம் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்' என்ற நூல். ஈழத்துக் கவிதையின் வளர்ச்சியை இருபத்தி நான்கு கட்டுரைகளுக்கூடாக விபரிக்கும் இந்நூல் நவீன கவி தையின் தோற்றம், முக்கிய ஆளுமைகள்; கோட்பாடுகள் குறித்துப் பேசுகிறது. இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் புதிய உள்ளடக்கம், அதன் புதிய போக்குகள் குறித்துப் பேசு வதுடன் கவிதைகளைப் பிரதேசரீதியில் பகுத்தும் ஆராய்கி றது. இந்நூலில் இடம்பெறும் 'ஈழத்து நவீன கவிதை ஊற்றுக ளும் ஓட்டங்களும், கிளைகளும்' என்ற கட்டுரை நவீன கவி தைக்கான அறிமுகமாக அமைகிறது. 19-ம் நூற்றாண்டின் நவீன கவிதையின் ஊற்றாகச் சரவணமுத்துப் பிள்ளையின் தத்தை விடு தூதை அடையாளப்படுத்தும் இக்கட்டுரை இரு பதாம் நூற்றாண்டின் நவீன கவிதையின் திறவுகோலாக அமைந்த பாவலரின் கவிதை முயற்சி குறித்தும் ஆராய்வது டன் 1930 காலப்பகுதியில் மறுமலர்ச்சிக் குழுவினரின் வரு கையைத் தொடர்ந்து நவீன கவிதையில் உள்ளடக்க, உருவ ரீதியாக ஏற்பட்ட புதிய மாற்றங்கள் குறித்தும் விரிவாகப் பேசு கிறது. பாரதி(மண்டூர்), உதயன் (மட்டக்களப்பு), எரிமலை(தி ருகோணமலை), பாரதி(கொழும்பு) முதலான சஞ்சிகைகள் நவீன கவிதைகளுக்கு ஆற்றிய பங்களிப்புகளைச் சுட்டி நிற் கும் செ.யோ-வின் கட்டுரை நவீன கவிதை முயற்சியில் சில் லையூர் செல்வராஜன், முருகையன், சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ. நுஃமான், தா. இராமலிங்கம், மு. பொன்னம்பலம் போன்ற இலக்கிய ஆளுமைகளின் பங்களிப்புக் குறித்தும் எடுத்துரைக்கிறது.

ஈழத்து நவீன கவிதை ஊற்றுகளும் ஓட்டங்களும், கிளைக ளும் என்ற கட்டுரையின் தொடர்ச்சியினை ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும் என்ற கட்டுரையிலும் காணலாம். பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றவர்கள் முற்போக்கு இலக்கியத்தை முன்னிறுத்தி ஈழத்திலக்கிய வளர்ச்சியை நோக்கிய நிலை யில் பேராசிரியர் செ. யோகராசா 'மறுமலர்ச்சி'க் கவிதை களை முன்னிறுத்தி ஆராய்ந்த முதல் பேராசிரியர் ஆவார். சமூக சீர்திருத்தம், தேசாபிமானம், சமூக விடுதலை என இரு பதாம் நூற்றாண்டு ஆரம்பக் கவிதைகள் பயணித்த நிலை யில் உணர்ச்சிகளையும் அனுபவத்தையும் சேர்ந்தே வெளிப் படுத்தும் மறுமலர்ச்சிக் கவிஞர்களின் நவகவிதைகளை இனங்கண்டு வெளிப்படுத்திய செ.யோ அவர்கள் மஹாகவி, அ.ந. கந்தசாமி, சாரதா முதலான மறுமலர்ச்சிக் கவிஞர்க ளின் ஆளுமைத் திறன்களைக் கண்டறிந்து வெளிப்படுத்துகி றார். இக்கட்டுரை மறுமலர்ச்சிக் கவிதைகளின் மேலோங்கி நிற்கும்; பேச்சோசைப் பண்புகள் குறித்தும் ஆராய்கிறது. செ.யோ-வின் இக்கட்டுரையே செ. சுதர்சன் போன்றவர்கள் மறுமலர்ச்சி இதழ்களைக் கண்டடைந்து ஆய்வுகளை மேற் கொள்வதற்கும் இன்று மறுமலர்ச்சிக் கவிதைகள் நூலாக்கம் பெறுவதற்கும் காரணமாக அமைந்தன எனலாம். இதன் தொடர்ச்சியைச் செ.யோ அவர்களின் 'ஈழத்து இலக்கியச் சஞ் சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும் மதிப்பீடும்' என் னும் கட்டுரையிலும் காணலாம். இக்கட்டுரை நவீன கவிதை யின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஆரம்பகால இதழ்க ளான மறுமலர்ச்சி, பாரதி (கொழும்பு), பாரதி(மண்டூர்), எரி மலை(திருகோணமலை) முதலான இதழ்களை முன்வைத் தும் ஆய்வு செய்கிறது. கவிதைகள் வாயிலாகப் பொதுமக் கள், தொழிலாளர் பிரச்சினைகளை வெளிப்படுத்திய இதழ் என்னும் வகையிலும் முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட தும் மற்றும் மொழிபெயர்ப்புக் கவிதைகளைப் பிரசுரித்த இதழ் என்னும் வகையிலும் 'பாரதி'-யை(கொழும்பு) முன் வைத்து ஆய்வு செய்யும் இக்கட்டுரை மண்டூரிலிருந்து வெளி வந்த 'பாரதி' சமூக நோக்குமிக்க கவிதைகளைப் பிரசுரித்த மையையும் ஆய்வுக்குட்படுத்துகிறது.

'ஈழத்தில் புதுக்கவிதையின் தோற்றம்' என்ற கட்டுரை தமிழ கச் சஞ்சிகைகளில் வெளிவந்த புதுக்கவிதைகளை ஆரம்ப கால ஈழத்துப் புதுக்கவிதை முயற்சிகளுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. 13.06.43-ல் வெளிவந்த வரதரின் 'ஓர் இரவிலே' என்ற கவிதையே ஈழத்தில் வெளிவந்த முதலாவது புதுக்க

விதை என்ற தரவினைப் பகிரும் இக்கட்டுரை புதுக்கவிதை யின் உள்ளடக்கம் பற்றிக் கூறுவதுடன் பாரதிச் சஞ்சிகையில் எழுதிய 'க', விஜயன், தங்கம், ராம்; முதலானவர் எழுதிய புதுக்கவிதைகள் குறித்தும் பேசுகிறது. 'ஈழத்துத் தமிழ்ப் புதுக்கவிதை தோற்றம், வளர்ச்சி, தேக்கம்' என்னும் பெயரில் புதுக்கவிதை தொடர்பான பிறிதொரு கட்டுரையொன்றினை யும் செ. யோகராசா அவர்கள் 1980 ஆவணியில் வெளிவந்த மல்லிகை இதழில் எழுதியுள்ளார். ஈழத்தின் புதுக்கவிதை யின் தோற்றத்தினை மறுமலர்ச்சி குழுவினருடன் தொடர்புப டுத்தி ஆராயும் இக்கட்டுரை புதுக்கவிதைகளின் தோற்றத் துக்கான காரணங்களை விரிவாக ஆராய்வதுடன் ஈழகேசரி புதுக்கவிதைகளை வசனகவிதைகள் எனக்கூறி அவை பிரசு ரிப்பதற்குத் தகுதியற்றவை எனக் கருதியதையும் வாசக னுக்கு அறியத் தருகிறது. எழுத்தின் நேரடி, மறைமுகப் பாதிப்பால் மேற்கிளர்ந்த ஈழத்துக் கவிஞர்களான தருமு சிவராம், மு. பொன்னம்பலம், கே.எஸ். சிவகுமாரன் போன்றோ ரின் கவிதைகள் குறித்து ஆராயும் இக்கட்டுரை ஈழத்துப் புதுக்கவிதையின் தனித்துவமான இயல்புகளையும் தொட்டுச் செல்கிறது.

ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகளில் காத்திரமான இலக்கி யப் பணியை ஆற்றிய பத்திரிகையாக ஈழகேசரி விளங்குகின் றது. நா. பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்ட ஈழகேசரி 1939 முதல் 1958 வரை வெளிவந்தது. இக்காலப்பகுதியில் ஈழகே-சரி ஈழத்து நவீன இலக்கியத்துக்கு ஆற்றிய பணிகளைச் சொல்லளவில் அளவிடமுடியாது. ஈழகேசரி தொடர்பான ஆய்வுகள் ஈழத்தில் பேரளவில் முன்னெடுக்கப்படாத நிலை யில் இவ்வாய்வை முன்னெடுத்தவராகச் செ.யோ அவர்கள் காணப்படுகின்றார். சாதி எதிர்ப்பு, மது ஒழிப்பு, கோயிலில் பலியிடல் தவிர்க்கப்பட வேண்டும் முதலான சமூகச் சீர்திருத் தக் கருத்துகளை உள்வாங்கி வெளிவந்த ஈழகேசரி கவிதை கள் குறித்தும் இந்நூல் பேசுகிறது. அல்லையூர் மு. செல்லை யாவின் கவிதைகளுக்கூடாக இரட்டைத் தேசியத்தின் தன் மைகள் குறித்தும் இந்நூலில் இடம்பெறும் இப்பகுதியில் விரி வாக ஆராயப்படுகிறது. இது தவிர ஈழகேசரி தொடர்பாகப் பிறிதொரு கட்டுரையொன்றினையும் செ.யோ அவர்கள் ஞானம் பொன்விழா மலரில் எழுதியுள்ளார். 'ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியின் ஆரம்பகால வரலாற்றில் ஈழகேசரிக் கவிதைகள்' என்ற தலைப்பில் செ.யோ எழுதிய இக்கட்டுரை ஈழகேசரி கவிதைக்கு ஆற்றிய பணியை மதிப்பிடுவதுடன் ஆரம்பகால ஈழத்துக் கவிஞர்களான மனுப் புலியார், அகி லேஸ்வரசர்மா, மு. நல்லதம்பி, அல்லையூர் மு. செல்லையா, நாவலியூர் நடராசன், யாழ்ப்பாணன், சோமசுந்தரப்புலவர், வேந்தனார், மஹாகவி, அ.ந. கந்தசாமி, வரதர், சாரதா முத லானோர் ஈழகேசரி பண்ணையில் ஊற்றெடுத்த கவிஞர்கள் என்பதையும் இனங்காட்டிச் சென்றது. சமூக சீர்திருத்தக் கருத்துகளை முன்வைத்தும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத் தியும் ஈழகேசரி ஆற்றிய பணிகளை இக்கட்டுரை நன்காராய் கிறது.

மீனாட்சியம்மாள், சாரதா, அ.ந. கந்தசாமி, ஆரையூர் அமரன் முதலான ஈழத்தின் கவிதை முன்னோடிகளையும் எம்.ஏ. நுஃமான், சிவசேகரம், வில்வரத்தினம், சோலைக்கிளி போன்ற ஈழத்தின் கவிதாளுமைகளையும் எடுத்துரைக்கும் நூலாக ஈழத்து நவீன கவிதை - புதிய உள்ளடக்கம் - புதிய தரவுகள் -புதிய போக்குகள் என்ற நூல் விளங்குகிறது. மலையகத்தின் முதற் கவிதாயினியாக மீனாட்சியம்மாள் நடேசையரின் பணி களை முதன் முதல் விரிவாக எடுத்தாராய்ந்தவர் பேராசிரியர் செ. யோகராசா ஆவார். ஈழத்தின் முதற் பெண்கவிஞர் மீனாட்சியம்மை நடேசையர் என்ற கருத்தை இக்கட்டுரை யூடாக செ.யோ முன்வைக்கிறார். ஈழத்தில் மலையகத்தின் முதல் பெண்கவிஞர் மீனாட்சியம்மை நடேசையர் என்ற செ.யோ-வின் கருத்து ஏற்புடையது. ஆனால் 'ஈழத்தின் முதற் பெண்கவிஞர் மீனாட்சியம்மை நடேசையர் இல்லை என்பதை அவருக்கு முன்னரே கவிதை இலக்கியத்தில் தடம் பதித்த பத்மாசனி அம்பாளை ஆதாரம் காட்டி மறுப்பார் பா. ம-கா லிங்கசிவம் 'ஈழத்தில் முதற் பெண்கவிஞரும் முதற் பெண் மொழிபெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்பாள்', சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை சிறப்பு மலர், 2011). பத்மாசனி அம்பாள் எழுதிய புலோலி பசுபதீசுவ ரர் பதிற்றுப் பத்தந்தாதி 1925-ல் வெளிவந்திருக்க 1930-களுக்குப் பின் எழுதிய மீனாட்சியம்மை நடேசையரை முதற் பெண்கவிஞராகக் கொள்ளமுடியாது என்பது பா. மகாலிங்க சிவத்தின் ஆய்வின் முடிவாகும். பத்மாசனி அம்பாளை மரபு வழி வந்த பெண்கவிஞராகக் கொள்ளலாமேயன்றி அவரை நவீன ஈழத்துக் கவிதைகளின் முன்னோடியாகக் கருதமுடி யாது என விமர்சிக்கும் இன்றைய ஈழத்து ஆய்வாளர்கள் பாடுபொருளாலும் கூறுமுறையாலும் நவீன கவிதைகளைத் தந்த மீனாட்சியம்மை நடேசையரே ஈழத்தின் முதலாவது பெண்கவிஞராகக் கூறுவர். (41-வது இலக்கியச் சந்திப்பு. மல் லியப்புசந்தி திலகர் உரை). அகிலம் இதழில் செ.யோ அவர் கள் சமூகத்தைப் பாடிய ஆரம்பகாலப் பெண்கவிஞரான மீனாட்சியம்மை நடேசையருடன் இணைத்து சேனாதிராசா கொலை வழக்கைப் பாடிய திருநெல்வேலி வித்யா அம்மை யாரையும், போலி தேச உபகாரிகளை எதிர்த்துப் பாடிய மயி லிட்டி சி. ஞானாம்பிகை முதலானோரையும் ஆழமாக நோக் கியுள்ளார்.

இந்நூலில் இடம்பெறும் பிரதேச அடிப்படைகள் என்ற பகுதி 'மலையகக் கவிதைகள்', 'தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை', 'தமிழ்த் தேசியமும் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும்' என்னும் கட்டுரைகளைத் தன்னுள் உள்ளடக் கியது. மலையகக் கவிதைகள் என்னும் கட்டுரை 1930-களில் ஈழத்து மலையகக் கவிதைகளுக்கு வித்திட்ட கோ. நடேசய்-யர், மீனாட்சியம்மையார் முதலானவர்களின் பணிகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதுடன் சக்தி அ. பாலையா, தமிழோவி-யன், குறிஞ்சிநாடான், சண்முகநாதன், மல்லிகை சி.குமார், குறிஞ்சித் தென்னவன், முரளிதரன், தம்பையா, சிவ. ராஜேந்தி ரன், பன்னீர்ச் செல்வம், முதலானவர்களின் கவிதைகளுக் கூடாக மலையகக் கவிதைகளின் எழுச்சியையும் எடுத்து ரைக்கிறது. இந்நூலில் இடம்பெறும் 'கோட்பாட்டு நோக்கு' என்னும் பகுதி 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைக ளில் பெண்களும் பெண்கவிஞர்களும்', 'ஈழத்துக் கவிதைக ளில் எதிர்ப்புக்குரல்', 'உருவ நோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி' என்ற கட்டுரைகளைக் கொண்டது.

ஆறாவதாக இந்நூலில் இடம்பெறும் 'பொதுப்பார்வை' என்ற பகுதியில் 'ஈழத்து நவீன தமிழ்க் கவிதை ஒரு புதிய அலை', 'தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை', 'ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி', இன்னும் சில பக்கங்கள்', 'ஈழத்து நவீன கவிதையின் வளம் நோக்கி' போன்ற கட்டுரைகள் உள் ளடக்கப்பட்டுள்ளன. இதில் புலம்பெயர் கவிதைகள் ஈழத்துக் கவிதைகளில் ஏற்படுத்திய தாக்கங்கள், பெண் விடுதலை, அரசியல் நிலை, சமத்துவம் முதலான விடயங்கள் ஈழத்துக்

கவிதைகள் எவ்வாறு வெளிப்படுத்திச் சென்றன முதலான விடயங்களைப் பேசிச் செல்கின்றன.

இந்நூலில் இடம்பெறும் ஏழாவதும் இறுதிப்பகுதியுமான பகுதி, 'அண்மைக் காலப் போக்குகள்' என்ற தலைப்பின் கீழ் முதல் கட்டுரையாக அமையும் 'தொண்ணூறுகளுக்குப் பின்னர் ஈழத்தில் நவீன கவிதை முயற்சிகள்' என்ற கட்டுரை, கவிதை மொழி ஈழத்துக் கவிதைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆழமாக நோக்குகின்றது. விரிவாக எழுதப்பட்ட இக்கட்டுரை சரிநிகர்க் காலம், புதிய பிரதேச அறிமுகம், புதியபோக்குகள், வித்தியாசமான முயற்சிகள், புதிய தலைமுறைப் பெண்கவி ஞர்கள், புதிய வடிவங்கள், மொழிபெயர்ப்புகள், நிறுவனஞ் சார் வெளியீடுகள் என்னும் பகுதிகளுக்கூடாகத் தொண்ணூ றுகளுக்குப் பின்னரான ஈழத்துக் கவிதைகளின் போக்கையும் ஈழத்துக் கவிதாளுமைகளையும் ஆராய்கிறது. ஈழத்திலக்கி யத்துக்குப் புதிய உத்திமுறைகளுக்கூடாக ஆழமான, அனுப வபூர்வமான கவிதைகளைத் தந்த பத்திரிகையாக சரிநிகர் அறியப்படுகிறது. செ.யோ அவர்களால் இக்கட்டுரையில் எடுத்தாளப்படும் நட்சத்திரன், செவ்விந்தியன், அஸ்வகோஸ், ஆத்மா, வாசுதேவன், றஸ்மி முதலானோர் இன்றும் பேசப்ப டும் கவிதாளுமைகளாக அறியப்படுகின்றனர். தமிழ் மக்க ளால் சரிநிகர் பத்திரிகை மறக்கப்பட்ட சூழலில் அதன் கவிதை முயற்சிகளை அடையாளப்படுத்தும் கட்டுரையாக இக்கட் டுரை அமைகிறது. இக்கட்டுரையில் புதிய பிரதேசமாக வன்னி அறிமுகப்படுத்தப்பட்டு இப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய கவிஞர்களாக நிலாந்தன், கருணாகரன், அமர- தாஸ், அம்புலி, முல்லைக்கமால், அநாமிகன், ஆதிலட்சுமி முதலானோர் எடுத்துரைக்கப்படுகின்றனர். இக்கட்டுரை முஸ் லிம் தேசியம், இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தம், சிறை அனுபவங்கள் குறித்தும் பேசுகிறது. இக்கட்டுரையில் புதிய வடிவங்களைத் தாங்கிவந்த இ.சு. முரளி, பொன். கணேச மூர்த்தி முதலானோரின் குறுங்கவிதைகளும் நிலாந்தனின் 'வன்னி மான்யம்', மு.பொ-வின் 'பொறிக்குள் அகப்பட்ட தேசம்', றஸ்மியின் 'இருகிராமங்களைத்தின்ற ஆடு' மஜீத்தின் 'சுள்ளிக்காடும் செம்பொடையானும்' றியாஸ் குரானாவின் 'வண்ணத்துப் பூச்சியாகப் பிறந்த கதைக்குரிய காலம்' முத லான நெடும்பாடல்களும் நோக்கப்படுகின்றது. இக்கட்டுரை யில் புதுவை இரத்தினதுரையின் 'உலைக் கலம்' தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளும் கூர்மையாக நோக்கப்படுகிறது. புதுவை இரத்தினதுரை என்னும் வியாசரால் எழுதப்பட்ட உலைக் களம் என்பது விசாகனின் உலைக் கலம் (ஈழத்து நவீன கவிதை - புதிய உள்ளடக்கம் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்-பக்.219) என்று தவறுதலாக அச்சடிக்கப்பட்டிருந் ததும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஆயினும் 1990-களுக்குப் பின் ஈழத்துக் கவிதையின் இயங்கு தளத்தையும் அதன் போக்கையும் அறிந்துகொள்ள இக்கட்டுரை எமக்குத் துணை செய்கிறது. இலங்கையில் நவீன கவிதைகள் குறித்து வெளி யான முதலெழுந்த நூல் என்ற அடிப்படையில் பேராசிரியர் செ. யோகராசாவின் ஈழத்து நவீன கவிதை - புதிய உள்ளடக் கம் - புதிய தரவுகள் -புதிய போக்குகள் என்னும் நூல் கனதி யான தகவல்களைத் தருகிறது. செ.யோ-வின் ஆழ்ந்த தேட லையும் நிறைந்த வாசிப்பையும் இந்நூல் சுட்டி நிற்கிறது. ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் குறித்தும், அதன் கோட் பாடு குறித்தும், ஆளுமைகள் குறித்தும் விரிவாக ஆராயும் இந்நூல் ஈழத்துக் கவிதையின் உள்ளடக்கம், உணர்த்தும் முறை குறித்தும் ஆழ்ந்து நோக்குகிறது. ஈழத்து இலக்கிய வரலாறை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் பல்க லைக்கழகத்தில் தமிழ் கற்கை தொடரும் மாணவருக்கும் இந் நூல் நிறைந்த பயனுடையது.

புலம்பெயர் கலாசாரமும் புகலிட இலக்கியமும் (பண்பாடு - 1995 ஆனி) என்ற கட்டுரை புலம்பெயர் மக்களின் வாழ்க்கை முறையைக் கவிதைகளுக்கூடாக ஆராயும் ஆரம்பகாலக் கட்டுரைகளில் ஒன்றே ஆகும். அகதிவாழ்வு, ஆட்கடத்தல், குழந்தையைப் பிரிந்து கண்காணாத இடத்தில் வாழும் தகப் பனின் மனவுளைச்சல், செய்தொழில், இனவாதம், புகலிட வாழ்வின் கெடுபிடிகள், பெண்நிலைவாதம் முதலானவை இக்கட்டுரையில் புலம்பெயர் கவிதைகளுக்கூடாக ஆராயப் படுகின்றன. புகலிடக் கவிதைகளில் இடம்பெறும் புதிய உவ மைகள், படிமங்கள், குறியீடுகள் போன்றவற்றையும் இக்கட் டுரை எடுத்துக்காட்டுகிறது. புகலிட இலக்கியங்கள் எடுத்தா ராயப்படாத காலகட்டத்தில் புகலிடக் கவிதைகளினை வெளிச்சம் போட்டுக் காட்டிய கட்டுரை இதுவென்றால் அது மிகையில்லை.

ஈழத்தில் பாடல்மரபு சார்ந்த கவிதைகள் குறித்தான ஆய்வு கள் பேரளவில் முன்னெடுக்கப்படவில்லை. மலையகத்தை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் அருணாசலம், சு. முரளிதரன், மல்லியப்புசந்தி திலகர் முதலானோரால் இவ்வாய்வுகள் முன்னெடுக்கப்பட்டா லும் அதனை ஓரளவுக்குக் கண்டடைந்தவராகப் பேராசிரியர் செ. யோகராசா காணப்படுகின்றார். அவ்வகையில் மலைய கத் தொழில்சார் கவிஞர் கபாலிச் செல்லன் கவிதைகளைக் 'கவிஞர் கபாலிச் செல்லன் கவிதைகள் சில குறிப்புகள்' என்ற கட்டுரையூடாக ஆவணப்படுத்திய ஒருவராகவும் பேரா சிரியர் விளங்குகின்றார். தொழிலாளர் வாழ்வினைத் தத்ரூப மாகப் பாடிய கபாலிச் செல்லனின் கவிதைகளை அறிமுகப்ப டுத்தும் இக்கட்டுரை அவர் பாடல்களில் இடம்பெறும் வர்க்க எதிர்ப்பு, சமூக ஏற்றத் தாழ்வு, அரசியல்வாதிகளின் இரட்டை முகம் முதலானவற்றையும் ஆராய்கிறது.

தற்கால ஈழத்துக் கவிதை வளர்ச்சியும், முஸ்லிம் கவிஞர்க ளும் 'புலம்பெயர் கலாசாரமும் புகலிட இலக்கியமும், 'ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி ஒரு மதிப்பீடு', 'ஈழத்துக் கவிதை', 'சுதந்திரத்திற்குப்பின் ஈழத்துக் கவிதை மாற்றமும் வளர்ச்சி யும்', 'எதிர்ப்பு இலக்கிய நோக்கில் ஈழத்து நவீன கவிதை', 'ஈழத்தின் புதுக் கவிதை வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம்', 'மலையகத்தில் மக்கள் இலக்கியம் கவிதையை அடிப்படை யாகக் கொண்ட சில அவதானிப்புகள்', 'இந்திய அமைதிகாக் கும் படையின் செயற்பாடுகள் பற்றிய இலக்கியப் பதிவுகள்', 'சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதை ஒரு கண்ணோட்டம்', 'ஈழத் துக் கவிதை', 'ஈழத்தின் புதுக் கவிதை வளர்ச்சி - ஒரு கண் ணோட்டம்' முதலான ஆய்வுக் கட்டுரைகள் இவரால் எழுதப் பட்டு வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகள் ஈழத்துக் கவிதைக ளின் பாடுபொருளையும் அதன் அமைப்பையும் விளங்கிக் கொள்வதற்குத் துணை செய்கின்றன.

மகுடம் 2012 ஏப்ரல் - ஜுன் இதழில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி யில், 'தாமரைத் தீவான் தடங்கள்' என்ற தலைப்பில் பேராசிரி யர் செ. யோகராசா அவர்கள் எழுதிய கட்டுரை சோ. இரா சேந்திரம் எனப்படும் தாமரைத் தீவானின் இலக்கியப் பணி யோடு இயைந்த வகையில் காணப்படும் கவிதைப் பணிகள் குறித்தும் விரிவாக ஆராய்கிறது. 1950-களில் சிங்களமொழி எதிர்ப்பு முன்னிலைப்படுத்தப்பட்ட சூழலில் தமிழ் மீது கொண்ட

பற்றினால் கவிதை இலக்கிய உலகுக்குள் நுழைந்த தாமரைத் தீவான் மக்களின் வாழ்க்கை மீது படிந்த ஆறாத் துயர்களைக் கவிதையாகப் படைத்தார் என்பதை செ.யோ-வின் இக்கட்டுரை தாமாரைத் தீவானின் இலக்கியப் பின்புலத்தை மையமாகக் கொண்டு ஆராய்கிறது. கபாலிச் செல்லன், தாமரைத் தீவான் போன்று கவனிக்கப்படாத, பேசப்படாத கவிஞர்கள் குறித்துத் தமிழ் இலக்கியப் புலத்தில் ஆழமான ஒரு பார்வையைச் செ.யோ செலுத்தியுள்ளார். அவ்வகையில் தோழர் இஸ்மாயில், புலவர் பூபாலப்பிள்ளை, புலவர் குழந்தை முதலானோர் முக்கியமானவர்கள்.

1960-களில் ஈழத்துக் கவிதை இலக்கியத்துள் புகுந்த யூ.எல்.-எம். இஸ்மாயிலின் ஆளுமையை அவரின் கவித்துவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தி அடையாளப்படுத்திய ஒருவராகப் பேராசிரியர் செ. யோகராசா காணப்படுகின்றார். கிழக்கிலங்கை வாசிகளால் தோழர் இஸ்மாயில் என அழைக்கப்பட்ட இவர் ‘கூன் நிமிர்கிறது’ தொகுப்பின் வாயிலாகவும் சமவுடமைக் கருத்துகளின் வாயிலாகத் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட போதிலும் இவரை ஈழத்து தமிழ் இலக்கியச் சமூகம் பெரிதும் கண்டுகொள்ளவில்லை. இத்தகைய சூழலில் ஜீவ-நதி 50-வது இதழில் வெளிவந்த செ.யோ அவர்களின் கட்டுரை முற்போக்குக் கவிஞராக இவரை அறிமுகப்படுத்தியது. நெசவுத் தொழிலாளர், மலையகத் தோட்டத்தொழிலாளர், மீன்பிடித் தொழிலாளர், விவசாயிகள், பெண் தொழிலாளிகளின் வாழ்க்கை முறைகளைப் பாடிய இவரின் கவிதைகள் சாதிப் பிரச்சினைகளை முன்வைத்தும் கிழக்கு மாகாணப் போடிகளின் வல்லாட்சியை எதிர்த்தும் பாடப்பட்டதையும் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்குகிறார். பேராசிரியரின் இக்கட்டுரை தோழர் இஸ்மாயிலின் தூய சிந்தனையையும் மனித நேயத்தையும் உணர்வின் வாயிலாக நுட்பமாக வெளிப்படுத்துகின்றது.

கவனிக்கப்படாத, கவனிக்கப்பட வேண்டிய புலவர்கள் என்ற கட்டுரை (தென்றல் - தை - பங்குனி 2015) புலவர் பூபாலப்பிள்ளை பாடியுள்ள பாடல்கள் குறித்த ஒரு அறிமுகத்தைத் தருகிறது. சமகால அரசியல் வரலாற்றைப் புலவர் பாடிய ‘வன்செயல் கும்மி’-யை மையப்படுத்தி இக்கட்டுரையில் செ.யோ ஆராய்கிறார். சிங்களத், தமிழ் உறவுகள் சீர்குலைந்தமையையிட்டு புலவர் வருந்தும் வருத்தமும் தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் உணர்வுகள் வீட்டுச் சின்னத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தையும் இக்கட்டுரை தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தி நிற்கிறது.

இலங்கையில் 1950-களில் மொழிப் பிரச்சினை முக்கியத்துவப்படுத்தப்பட்ட சூழலில் இதனை மையப்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்தில் காத்திரமான கவிதைகள் எழுச்சி பெறத் தொடங்கின. அவ்வகையில் தமிழ்மொழியின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பையும் ஆழ வலியுறுத்திக் கவிதைகளைப் புனைந்தவராகப் புலவர் குழந்தை காணப்படுகின்றார். சிங்கள மொழி எதிர்ப்பு, சிங்கள ஆட்சி எதிர்ப்பு என வெளிப்பட்ட இவரின் கவிதைகள் அறப் போராட்டத்துக்கான அறைகூவல்களாகவும் ஒலித்தன. கலைத்தவசி இதழில் இவரெழுதிய, ‘மன்னார்ப் பிரதேச நவீன கவிதை முன்னோடி கவிஞர் குழந்தை’ என்னும் கட்டுரை தமிழுக்குப் பணிசெய்த குழந்தை செபமாலை அவர்களின் தமிழ் பற்றை ஆழ வெளிப்படுத்தும் ஆவணமாகும்.

அனலைக் காதர் கவிதைகள் குறித்த பதிவொன்றையும் செ.யோ அவர்கள் செய்துள்ளார். செ.யோ அனலைக் காதரின், ‘விதி வரைந்த கோலங்களுக்கு’ எழுதிய அணிந்துரை அனலைக் காதரை ஆற்றல் மிக்க கவிஞராகத் தமிழ் இலக்கியத்தின் முன்நிறுத்துகிறது. 1960-களில் தமிழ் கவிதை இலக்கியத்துக்குள் நுழைந்த அனலைக் காதர் பெரும்பாலான வாசகரால் அறியப்படாத ஒருவராகவே காணப்பட்டார். செ.யோ-வின் இவ்வணிந்துரையை உள்வாங்கி வெளிவந்த மல்லிகை (டிசம்பர்-2006) இதழ் அனலைக் காதரின் சமூகப் பார்வையின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்வுபூர்வமாக எடுத்துரைக்கிறது. இது போன்று எஸ். புஸ்பானந்தனின், ‘இரண்டு கார்த்திகைப் பறவைகள்’ தொகுப்புக்கு எழுதிய அணிந்துரையும் ல்லிதாசனின், ‘செம்மாதுளம்பூ’-த் தொகுப்புக்கு எழுதிய அணிந்துரையும் கவிஞர் பாலமுனை பாறுக்கின், ‘தோட்டுப்பாய் மூத்தம்மா’ என்ற குறுங்காவியத்துக்கு எழுதிய அணிந்துரையும், மற்றும் அவரின் ‘எஞ்சிய பிரார்த்தனையோடு’ என்னும் நூலுக்கு எழுதிய வாழ்த்துரையும் ப. சுஜ-ந்



தனின், ‘மறுக்கப்பட்ட நியாயங்கள்’ தொகுப்புக்கு எழுதிய முன்னுரையும் ஆழ்ந்து நோக்கப்படவேண்டியவை.

மல்லிகை 22-வது ஆண்டுமலரில் எழுதிய, ‘சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதை ஒரு கண்ணோட்டம்’ என்ற கட்டுரை 1978 - 1983 காலப்பகுதியில் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் பரிணாம வளர்ச்சியை ஆய்வு செய்கிறது. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தமிழாராய்ச்சி மாநாடும் இனக்கலவரங்களும் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் ஏற்பட்ட தாக்கத்தை அனுபவப் புலத்தின் வாயிலாக வெளிப்படுத்தும் இக்கட்டுரை காலி வீதி, வெலிக்கடைச் சிறை முதலானவற்றில் அரங்கேற்றப்பட்ட வன்கொடுமைகள், பூவரசங்குளம், குமுதினிப் படுகொலைகள் முதலானவற்றுடன் பெண் விடுதலை, பெண்நிலைவாதம் முதலானவற்றையும் உணர்வுபூர்வமாக ஆராய்கிறது.

ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பினைத் தமிழ் இலக்கிய உலகுக்கு எடுத்துக்காட்டிய முக்கிய

மானவர்களுள் பேராசிரியரும் ஒருவர். இவருடைய பல்வேறு கட்டுரைகள் ஈழத்துப் பெண்கவிகள் தொடர்பாக எழுதப்பட்ட வையாகும். நவீன வாய்மொழிப் பாரம்பரியத்தில் கிழக்குப் பெண் கவிஞர்கள், தமிழக - இலங்கைப் பெண் கவிஞர்கள் ஓர் ஒப்புநோக்கு முதலான கட்டுரைகள் ஈழத்துக் கவிதை இலக்கியத்தில் பெண் கவிஞர்களின் பங்களிப்பினை ஆழ மாக மதிப்பிடுகின்றன. நவீன வாய்மொழிப் பாரம்பரியத்தில் கிழக்குப் பெண் கவிஞர்கள் கட்டுரையில் அக்கரைப்பற்று கிராமத்தின் கவிதைப் பாரம்பரியம் சிறப்பாக நோக்கப்படுகி றது. 1800-களின் முற்கூற்றில் அக்கரைப்பற்றில் வாழ்ந்த வள் ளிநாயகி, ஜனாபா கலுங்கர் பாத்திமா முதலானோரின் பாடல் களைப் பொருண்மை நோக்கில் ஆராயும் இக்கட்டுரை காத் தான்குடி வெள்ளம்மா, கல்முனைக்குடி சீனி உம்மா முதலா னோரின் பாடல்கள் பாடப்பட்ட நோக்கு, பாடிய முறைமை என்பவற்றையும் விளக்கமாகக் கூறிநிற்கிறது. இது போன்று மலையக வாய்மொழிப் பாடல்களையும் செ.யோ அவர்கள் எடுத்து ஆராய்ந்துள்ளார். ஞானம் மூன்றாவது ஆண்டுச் சிறப்பிதழில் இவரெழுதிய, ‘மலையகப் பிரதேச அரை - வாய் மொழிப் பாடல் பாரம்பரியம்’ என்னும் கட்டுரை 1930-களில் மலையகத்தில் தோற்றம் பெற்ற வி.எஸ். கோவிந்தசாமித் தேவர், ஏ.எம். ராமையா, கே.கே. ஜில், ஆர்.எஸ். பெரியாம் பிள்ளை, கா.சி. ரெங்கநாதன், எம்.பி. வேல் சாமிநாதன் முத லானவர்களை மலையகத்தின் வாய்மொழிக் கவிஞர்களாக இனங்காணுகின்றது. கவிஞர்கள் பாடிய சமூகப் பிரச்சினை களை - சமூகக் குறைபாடுகளைச் சுட்டி ஆராயும் இவ்வாய்வு இக்கவிஞர்களின் பக்திப் பாடல்களையும் ஆய்வுக்குட்படுத் துகிறது. தமிழ்நாட்டிலிருந்து கூலிகளாக அழைத்து வரப்ப டும் தொழிலாளர்கள்; அவர்கள் எதிர்நோக்கும் அல்லல்கள், அரசியல் விவகாரங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் என விரிந்து செல்லும் இவ்வாய்வு அரை வாய்மொழிப் பாடலின் வடிவ வகை குறித்தும் அரை வாய்மொழிப் பாடல் மரபின் சமூகப் பயன்பாடு குறித்தும் சிந்திக்கிறது.

தமிழக - இலங்கைப் பெண்கவிஞர்கள் ஓர் ஒப்புநோக்கு என்ற கட்டுரை நவீன கவிதையின் பெண்கவிஞர்களை அறுப துகளில் வைத்து நோக்குகிறது. இக்கட்டுரையில் சங்கரி, சிவ ரமணி, சன்மார்க்கா, ரங்கா, மசூரா ஏ. மஜீட், ஔவை, ரே-ணு காநவரட்ணம், ஊர்வசி முதலான ஈழத்துப் பெண் கவிஞர்க ளின் கவிதைகளுடன் திலகவதி, பொன்மணி வைரமுத்து, கனிமொழி முதலான தமிழகப் பெண்கவிகளின் கவிதைக ளும் எடுத்து ஆராயப்படுகின்றன. மேலும் இக்கட்டுரையில் சீதனக் கொடுமை, ஆணாதிக்க எதிர்ப்பு என விரியும் புகலி டப் பெண் கவிஞர்களின் தொகுப்பான ‘மறையாத மறுபாதி’ நூலில் இடம்பெறும் கவிதைகளும் பேராசிரியர் அவர்களால் கூர்ந்து நோக்கப்படுகின்றன. பெண் எழுத்தாளர்களின் கவி தைகளை வடிவம், பொருள் அடிப்படையில் நோக்கும் இக் கட்டுரை நவீன இலக்கிய ஆய்வாளர்களின் இலக்கிய முயற் சிகளுக்குப் பயனுடையதாக அமைந்தன எனலாம்.

ஈழத்துப் பெண் போராளிகளினது படைப்புகள் சில அவதா னிப்புகள் என்ற நிவேதினி (கார்த்திகை-2005) இதழில் வெளி யான கட்டுரை பெண் போராளிகளினது நாவல், சிறுகதைகளு டன் இணைத்து அவர்களால் எழுதப்பட்ட கவிதைகளையும் நுண்ணாய்வு செய்கிறது. புதிய அனுபவங்கள், பேசுபொருட்க ளுக்கூடாக விரியும் இக்கவிதைகள் நாளாந்த வாழ்க்கையின் அனுபவங்களைப் பேசுகின்றன. சக போராளிகளினது நேசம், தாய்ப்பாசம், இராணுவக் கெடுபிடி, தமிழ் விடுதலை உணர்வு, சர்வதேச அரசியல் விவகாரங்கள் என விரியும் இக் கவிதைகள் பேராசிரியர் அவர்களால் நுண்ணாய்வு செய்யப்ப டுகின்றது. ஈழத்தின் வரலாற்று உருவாக்கங்களை ஆவணப் படுத்திய இக்கட்டுரை பெண்களின் அரசியல் விடுதலைப் போராட்டங்கள், பெண்களின் வீரம், பெண்ணிலைவாதம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு மிக்க பயனுடை யதே ஆகும்.

மண்டூர் அசோகா சிறுகதைகளுக்கூடாக நன்கறியப்பட்ட அளவுக்கு கவிதைகளுக்கூடாக அவர் பெரிதும் அறியப்பட வில்லை. இவரை ஈழத்து இலக்கியத்துக்குக் கவிஞராக அடையாளப்படுத்தியவர் செ.யோ ஆவார். பெண்நிலைவாத நோக்கில் எழுதப்பட்ட இவரின் கவிதைகள் மெல்லிசைப் பாடல்களாகவும் வெளிவந்துள்ளன. இவரின் பெரும்பாலான கவிதைகளுக்கு வானொலியும், சனசமூக நிலையங்களும், கையெழுத்துப் பிரதிகளும் களம் அமைத்துக் கொடுத்தன. அசோகாவுடன் மட்டும் நின்று விடாத செ.யோ அவர்கள் மண் டூரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மண்டூர் தேசிகன், எஸ். புஸ் பானந்தன் முதலான கவிஞர்கள் குறித்தான ஆய்வுகளிலும் ஈடுபட்டவர்.

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் பழமை வழியில் வீறு நடை போட்ட விபுலாநந்தருடைய கவிதைகளைப் பொருண் மையை அடிப்படையாகக் கொண்டு வகைபிரித்து ஆழமான தொரு ஆய்வை மேற்கொண்டோருள் முதன்மையானவர் செ.யோ ஆவார். கனடாவிலிருந்து வெளிவந்த விபுலம் சிறப் பிதழில், ‘ஆய்வு நோக்கில் சுவாமி விபுலாநந்தரது கவிதை கள்’ என்ற தலைப்பில் இவரெழுதிய கட்டுரை விபுலாநந்தரது சமகாலக் கவிதைப் போக்குகளை உற்றுநோக்குவதுடன் அவருடைய தனித்துவமான பண்புகளையும் ஆழமாக எடுத் தாய்கின்றது. இக்கட்டுரையில் விபுலாநந்தருடைய கவிதை கள் சமயம் சார்ந்தவை, வாழ்த்துப்பா, இரங்கற்பா, பொது, மொழிபெயர்ப்பு என்ற வகையில் செ.யோ அவர்களால் நோக் கப்படுகிறது. மொழிப்பெயர்ப்புத் துறையினூடாகத் தமிழ் இலக்கியத்துக்கு புதுவழிகாட்டியவர் என்ற நோக்கிலும் கவி தையாக்கத்தில் பழைமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்டவ ராக விளங்கியவர் என்ற நோக்கிலும் விபுலாநந்தரின் இலக் கிய ஆளுமையை இக்கட்டுரை நிறுவிச் செல்கின்றது. இதன் விரிவினை ‘விபுலாநந்தர் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்’ என்ற தலைப்பில் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலரில் செ.யோ எழுதிய கட்டுரையில் காணலாம்.

திரையிசைப் பாடல்கள் தொடர்பாகவும் பேராசிரியர் ஆராய்ந் துள்ளார். ‘தற்காலத் திரைப்படப் பாடல்கள் சில குறிப்புக்கள்’ (மல்லிகை - ஆகஸ்ட், 1984)என்ற கட்டுரை தமிழ் சினிமா வின் நிகழ்கால மாற்றங்களுக்கூடாக வெளிவந்த திரைப்படப் பாடல்களைப் பழைய திரைப்படப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. பாலுணர்ச்சிகளுக்கு முதலிடம் கொடுத்து எழு தப்படும் பாடல்களைக் கண்டிக்கும் இக்கட்டுரை இடைக்கா லப் பாடல்களில் புதுக்கவிதை, நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம் இடம்பெற்றமையையும் இசைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தையும் சுட்டிநிற்பதுடன் தமிழ்ப் பாடல்கள் மனோரம்மியமான கற்பனைகளால் வழிநடாத்தப்படுவதை யும் கூறிநிற்கிறது.

பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் ‘கவிதை மொழிபெ யர்ப்பு’ ஆய்வுகளையும் மேற்கொண்டவர். ஈழம் தொடர்பான

மொழிபெயர்ப்பு ஆய்வுகளை நேர்த்தியாகச் செய்தவர் செ.யோ ஆவார். மறுபாதி முதலாம் ஆண்டு இதழில் இவர் எழுதிய ஈழத்தில் - தமிழில் - கவிதை மொழிபெயர்ப்பு சில அவதானிப்புகள் என்ற கட்டுரை 1906-இல் விபுலாநந்தரால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பு முதல் 2009-ல் வெளிவந்த ஹெக்கிராவ ஸுலைகாவின் மொழிபெயர்ப்பு வரை ஈழத்தில் தமிழில் நிகழ்ந்த கவிதை மொழிபெயர்ப்புகள் குறித்துப் பேசுகிறது. மொழிபெயர்ப்பு முயற்சிகளை உள்ளடக்கரீதியில் அணுகும் இக்கட்டுரை மொழிபெயர்ப்பு நுட்பங்கள், மொழிபெயர்ப்பு முயற்சியால் வாசகர்கள் பெற்ற பயன்கள் குறித்தும் பேசவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கிறது. மூலக் கவிதைக்கும் மொழிபெயர்ப்புக் கவிதைக்கும் இடையிலான வேறுபாடுகள் குறித்தும் இக்கட்டுரை நுட்பமாக ஆராயவில்லை என்பது கட்டுரையின் குறைபாடாகக் கருதப்பட்டாலும் கவிதை மொழிபெயர்ப்பு தொடர்பாக ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விரிவாகச் சுட்டிநிற்கும் ஆய்வு என்னும் அடிப்படையில் இக்கட்டுரை முதன்மையானது. யாழ் பல்கலைக்கழகத்தில் வேல் நந்தன் முதலானோர் 'கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள்' குறித்து முதுமாணி ஆய்வுகளைத் தொடர்வதற்கும் அதனைப் பூர்த்தி செய்வதற்கும் இக் கட்டுரையே அடிப்படையாக அமைந்தது எனலாம்.

செ. யோகராசா அவர்கள் கருணையோகன் என்னும் பெயரில் கவிதைகளையும் எழுதியவர். இவருடைய கவிதைகள் மல்லிகை, இளந்தென்றல், படி, சிரித்திரன் முதலான சஞ்சிகைகளிலும் வீரகேசரி, மித்திரன், தினகரன் முதலான பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. 1970-களில் வெளிவந்த இளந்தென்றல் சஞ்சிகையில் ஆலயப் பிரவேசத்தை வலியுறுத்தி இவர் எழுதிய 'நாவுக்கரசரே வாருமையா' கவிதை சாதியின் பெயரால் மனிதம் இழிவுபடுவதைச் சாடுகிறது. தமிழகத்தில் மாத்திரமன்றி ஈழத்திலும் உயர்சாதியினர் தொழிலின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரைச் சாதியின் பெயரால் ஒடுக்கினர். அம்மக்களுக்கு ஆலயப்பிரவேசம் மறுக்கப்பட்டது. 'ஆவுரித்து தின்னும் புலையரேனும் சிவநெறியில் நிற்பாராயின் அவரே யான் வணங்கும் கடவுள்' என்றார் நாவுக்கரசர். அந்நாவுக்கரசரை விளித்துப் பாடும் இக்கவிதை அங்கதவுணர்வுக்கூடாகப் போலி ஆன்மீகவாதிகளின் இரட்டைமுகத்தைத் தோலுரித்துக் காட்டும் கவிதையாகவும் இதுவுள்ளது.

***'ஐயா! நாவுக் கரசரே!***
***அடியே னுமக்கு விண்ணப்பம்***
***மெய்யா கவேகேட் கின்றேன்***
***மீண்டும் மானிட வடிவுகொண்டு***
***ஐயா! ஈழம் வந்திங்கே***
***ஆண்டவன் கோயிற் தாழ்திறந்து***
***உய்ய வழி காட் டிடவேண்டும் ...***
***கோயிற் குருக்கள் உள்ளே நாம்***
***கும்பிடச் செல்ல விடுவாரோ?***
***வாயிற் கதவு பூட்டி நடு***
***வழியில் நிற்பார் கடவுளென ஓர்***
***தாயின் வயிற்றுப் பிள்ளைகள் நாம்***
***தடுத்து வைத்தல் இது முறையோ?***
***நாயி னிழிந்தோ ராக எமை***
***நடத்தி வைக்க இவர் யாரோ?'***

கருணையோகன் என்ற பெயரில் இவர் எழுதிய கவிதைகள் மனிதநேயத்தை வலியுறுத்துபவை. மனிதரைச் சக மனிதர் நேசிப்பதை நோக்காகக் கொண்டவை.

மலையகப் பெண் தொழிலாளிகள் வாழ்க்கையில் பட்ட இடர்களை வெளிப்படுத்தும் 'மென் குளிரும் மலை நதியும் கேளீரோ!' என்னும் கவிதை ஆகஸ்ட் 1981 தாரகை இதழில் வெளிவந்தது. '

உச்சி மலையில் ஏறி, கொட்டும் பனியில் கொழுந்தெடுங்கும் தொழிலாளிகள் வறுமைக்குள் சிக்குண்டு வாழ்வைக் கரியாக்கிக் கொண்டு நாட்டை செழிப்பாக்க அவர்படும் இன்னல்களை' மென்னுணர்வுத் தளத்தில் இக்கவிதை பதிவு செய்கிறது.

'படி' இரண்டாவது இதழில் வெளிவந்த 'சுடுநெருப்பும் கட்டெறும்புகளும்' என்னும் கவிதை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் வித்தியாசமான புதிய முயற்சி எனலாம். உரைநடை வடிவில் எழுதப்பட்ட இக்கவிதை வடிவரீதியிலும் கவிதைமரபுக்குப் புதியது. கவித்துவமான உரைநடைக்கூடாகக் கவிதைக்குள் கவிதையாக உருப்பெறும் இக்கவிதை மட்டக்களப்பின் அசாதாரண சூழலுக்கு முகம்கொடுத்த மக்களின் வாழ்க்கைத் துயர்களை விளக்கி நிற்கிறது.

மரண ஊர்வலத்தின் வழி சாதியத்தைச் சாடும் கவிதையே 1970 ஜனவரி மல்லிகையில் வெளிவந்த 'உயர்திரு கந்தசாமியும் மரண ஊர்வலமும்'. வாழ்வு நிலையில்லாதது எனக் கூறும் இக்கவிதை அதே வேளை சாதியத்திற்கு எதிரான சாவுமணியாகவும் ஒலிக்கிறது. செ.யோ அவர்களால் எழுதப்பட்ட கவிதைகள் விரிவான ஆய்வொன்றுக்கு உட்படுத்தப்படவேண்டும். இவரின் பெரும்பாலான கவிதைகள் பத்திரிகைகளுக்கூடாகவே அறியப்பட்டன. கவியரங்குகளில் அவர் பாடிய கவிதைகளும் வெவ்வேறு நோக்குக்காக எழுதப்பட்ட கவிதைகளும் பெரும்பாலும் பிரசுரம் பெறவில்லை. இக்கவிதைகளைக் கண்டெடுத்துத் தமிழ் இலக்கிய உலகம் பிரசுரிக்குமேயானால் ஈழத்தின் சிறந்த கவிஞர் ஒருவரை ஈழத்திலக்கியம் கண்டடையும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் கவிதையைச் சிறப்பாக ஆராய்ந்து ஒரு புதுப் பாதையைத் தமிழுக்கு வகுத்தவர் செ. யோகராசா ஆவார். பண்டிதர் வீரகத்தியிடம் யாப்பினை ஆழமாகக் கற்றதனால்; மரபுக்கவிதை குறித்தான ஆய்வுகளை செம்மையாகச் செய்தவர். பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் பூலோகசிங்கம் முதலியோரிடம் கற்றமையால் இவருடைய நவீன கவிதை குறித்தான ஆய்வுகளும் நேர்த்திமிக்கவை. நிறைந்த அனுபவத்தின் ஊடாகவும் ஆழமான வாசிப்பினூடாகவும் புலமையைப் பெற்ற இவர் தமது ஆய்வுகள், படைப்புகளுக்கூடாக பெரும்வீச்சை ஏற்படுத்தியவர். விஸ்தீரணமிக்க இவரின் ஆய்வுகள் ஆழ்ந்த மனிதத்தேடல்களின் வாயிலாகப் பெறப்பட்டவை. ஆகையால் இவருடைய திறனாய்வு குறித்தான பார்வைகள் தமிழிலக்கியப் பரப்பில் விரிவாக ஆராயப்படவேண்டும். அவ்வாறு விரிவாக ஆராயப்படும்பட்சத்தில் ஈழத்து இலக்கியம் புதிய எல்லைகளைக் கண்டடையும்.



ramesh.s@thaiveedu.com




'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்பது முன்னோர் வாக்கு. மானிட வாழ்வில் தாய்க்கே முதலிடம் வழங்கப்படுகின்றது. அத்தகைய தாய்க்கு அடுத்தபடியாகப் போற்றப்பட வேண்டியது ஒருவர் பிறந்த நாடாகும்.

ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றை நாம் அறிந்துகொள்ள உதவும் வழிகளுள் பிரதேச வரலாற்றாய்வுகள், இடப்பெயர் ஆய்வுகள் என்பன முக்கியமானவை. இவ்வாய்வுகள் மொழியியல், வரலாறு, தொல்பொருளியல், புவியியல், சமூகவியல் போன்ற பல்வேறு துறைகளின் ஆய்வுகளுக்கும் வழிகாட்டுகின்றன. மக்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறியவும் இவ்வாய்வு துணை செய்கின்றது.

பல்லாண்டு காலமாக ஊரின் சிறப்புப் பற்றிக் கூறும் வழக்கம் தமிழ் மொழியில் இருந்து வந்துள்ளதை நாம் காண்கிறோம். பட்டினப் பாலை, மதுரைக் காஞ்சி முதலிய சங்ககால நூல்கள், நகர்கள் பற்றிக் கூறுவனவாகும். ஊரின் அமைப்பு, மக்களின் தொழில் வளம், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுச் சிறப்பு ஆகியவை பற்றிய பல செய்திகளை இந்நூல்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. சிற்றிலக்கிய வகைகளான ஊர் விருத்தம், ஊர்வெண்பா என்பனவும் ஊரின் வரலாறு பற்றிக் கூறுவனவாகும். பாட்டுடைத் தலைவன் வாழ்ந்த ஊரின் சிறப்பினை பத்து ஆசிரிய விருத்தங்களால் சிறப்பித்துப் பாடப்பெறுவது 'ஊர்விருத்தம்' என்பார்கள். ஓர் ஊரினைப் பத்து வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறுவது 'ஊர் வெண்பா' எனவும் அறியப்படுகின்றது.

எண்பதுகளின் பின்னரான ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வால் விளைந்த 'அலைந்துழல்வு' (Nostalgia) வாழ்க்கை தருகின்ற துயரத்திலிருந்தும், ஏக்கத்திலிருந்தும் எம்மைத் தற்காலிகமாகவேனும் ஆறுதல்படுத்துவது நாம் சார்ந்த ஊர் பற்றிய எண்ணங்களாகும். எமது இனத்துவ அடையாளங்களை நமது அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்ல உதவுவதும் இத்தகைய நினைவுகளின் சேகரங்களே.


தாம் விட்டுப் பிரிந்த தாய் மண்ணின் பிரதேச, சமூக வரலாறுகளைத் தம் சந்ததியினர் அறிந்துகொள்ளவென வழங்கிவிட்டுச் சென்ற நம் முன்னோர்களின் மண்மணம் மறவாத படைப்புக்கள் பல, இன்றும் எம்மை நாம் இழந்துவிட்ட அந்தக் காலத்துக்கு அழைத்துச் சென்று எம்மைப் புளகாங்கிதமடையச் செய்கின்றன. தாம் பிரிந்து வந்த மண்ணின் நினைவுகளை பிரதேச வரலாறுகளாகப் பதிவு செய்யும் நடைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது.

இன்று நமது புகலிடங்களில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் கோயில்கள் கூட, தாயகத்துக் கோயில்களின் நினைவுகளைத் தாங்கியே இயங்குவதை ஆழ்ந்து அவதானிக்க முடிகின்றது. ஆங்காங்கே உருவாக்கப்பட்டு, ஆண்டு தோறும் சந்திப்பு நிகழ்வுகளை மேற்கொண்டு, கூடிப் பேசிப் பிரியும் ஊர்ச் சங்கங்கள் கூட, பிரதேச வரலாற்றின் கூறுகளாகவே அமைகின்றன. அவை அவ்வப்போது வெளியிடும் மலர்களும் அவ்வப் பிரதேசத்தின் வரலாற்றுப் படிமங்களாகவே காணப்படுகின்றன. தாம் கற்ற பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களும், இணைந்து நடந்த சனசமூக நிலையங்களும் இந்த வகைக்குள் அடங்குகின்றன.

ஓர் ஊருக்கான வரலாற்று மதிப்பு அவ்வூரில் வாழும் மக்களைக் கொண்டே அமைகின்றது. குறிப்பாக அம்மண்ணுக்கு தன் சேவையை வழங்கிய பெரியார்களின் வாழ்வும் பணிகளும், அவரின் மறைவின் பின்னரும் அம்மக்களால் போற்றப்பட்டும் நினைவு கூரப்பட்டும் வரும் தரணங்களில் அப்பெரியாரும் அப்பிரதேச வரலாற்றுக் கூறுகளில் ஒருவராகி விடுகின்றார். அவரின் வாழ்வை மீட்டுப் பார்ப்பதன் மூலம் அச்சமூகத்தின் வரலாறும் இரைமீட்கப்படுகின்றது.

ஊரின் பெயர் விளங்கக் காரணமான அவர்களைப் போன்றவர்களைத்தான் ஔவையார் தனது ஆத்திசூடியில் குறிப்பிட்ட 'ங' போல் வளை, என்பதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் எழுத்தான 'ங'வின் குடும்பத்தில் 12 எழுத்துகள் இருப்பினும், 'ங'வைத் தவிர மற்றைய எழுத்துகள் எவையும் வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை. 'ங'வை முன்வைத்தே மற்றைய பதினொரு எழுத்துகளும் வாழ்கின்றன. அப்படிப்பட்ட பெரியார்கள் ஒருவர், இருவரால்தான் ஒரு ஊரோ, ஒரு தேசமோ, ஒரு நாடோ வாழ்கின்றது.

அவ்வகையில் தான்சார்ந்த தாய்மண்ணின் பெயரை உலகறியச் செய்த அத்தகைய மண்ணின் மக்களை, அவர்களது வாழ்வியல் பணிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக அண்




மையில் வே. விவேகானந்தன் 'எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்' என்ற நூலை எழுதி வழங்கியுள்ளார்.

இந்நூலில் கட்டுவன், வறுத்தலைவிளான், மயிலிட்டி தெற்கு ஆகிய கிராமங்களின் வரலாறும் அம்மண்ணின் மக்களும் மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

போர்க்காலத்தில், முப்பதாண்டுகளுக்கும் மேலாக அங்கு வாழ்ந்த மக்கள் துரத்தியடிக்கப்பட்டு, அந்தப் பிரதேசமே பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உருக்குலைந்து போயிருந்த இக்கிராமங்களின் வரலாற்று மூலங்கள், எம் மனங்களில் நினைவுத் தகடுகளாக மட்டுமே நின்று எம்முடனே மறைந்து போய்விடுமாயின், எதிர்கால சந்ததியினருக்கு அவ்வரலாற்றை மீளக் கையளிக்கமுடியாது போய்விடும். அவற்றைப் பாதுகாத்து சேமித்து ஆவணப்பதிவாக்கிவைத்து அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தும் மிகப்பெரும் பொறுப்பு, அந்த அனுபவச் சுமையுடன் வாழும் இன்றைய தலைமுறையினருக்கு, குறிப்பாக, அம்மண்ணிலிருந்து பிடுங்கியெறியப்பட்டு, புதிய சமூகச் சூழலை வாழிடமாகக் கொண்ட புலம்பெயர்ந்த அறிவு ஜீவிகளுக்கு விதிக்கப்பட்ட சமூகக் கடமையாகும்.

இந்நூலின் உருவாக்கத்திற்கு கால்கோளாக அமைந்திருப்பது 'பாலர் ஞானோதய சங்கம்' என்ற அமைப்பாகும். போர்ச்சூழலினால் சிதைவுற்று நிற்கும் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் கிராமங்களின் முதுகெலும்பாக, காலங்களைக் கடந்து பல தடைகளையும் தாண்டி வேரூன்றி நூற்றாண்டில் கால்பதித்து விருட்சமாகி நிற்கும் 'பாலர் ஞானோதய சங்க'த்தையிட்டு பெருமிதம் அடைவதாக இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக் குருக்கள் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

1922-ம் ஆண்டு தொடக்கப்பெற்ற இக்கிராமத்து 'பாலர் ஞானோதய சங்கம்', வர்த்தகர் க. கந்தையா என்பவரது துணையோடு ஞானோதய வித்தியாலயத்தை நிறுவியது. அது இன்று நூற்றாண்டைக் கடந்து நிற்கின்றது. அக்காலகட்டத்தில் முகிழ்ந்தெழுந்த சமூக அபிவிருத்தி நோக்கிய சனசமூக நிலையங்களின் உருவாக்கத்தின் முன்மாதிரியாக பாலர் ஞானோதய சங்கம் திகழ்ந்துள்ளது. கட்டுவன், வறுத்தலைவி




ளான், மயிலிட்டி தெற்கு ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இச்சங்கத்தின் வரலாறு அப்பிரதேச வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது. இந்நூலும் அதனை ஒரு தனி அத்தியாயத்தின் வாயிலாக முதன்மைப்படுத்துவதை காணமுடிகின்றது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த, மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாலயம், 28 வருடங்களின் பின்னர் 2018-ம் ஆண்டு சித்திரை மாதம் புதுவருட

தினத்தன்று விடுவிக்கப்பட்டது. அப்போது முற்றாக இடிந்து அழிந்த நிலையில் பற்றைகள் சூழ்ந்து ஒரு பாடசாலைக்கான தடயமேயின்றி அப்பாடசாலைச் சூழல் காணப்பட்டது

பின்னர் இக்கட்டடம் பிரித்தானிய, சுவிட்சர்லாந்து கிளைக ளின் நிதியுதவியுடன் இரண்டு மாடிக் கட்டடமாகத் தழைத்தெ



முந்து சாம்பலில் மீழெழுந்த பீனிக்ஸ் பறவையாகக் காட்சி தருகின்றது.

இப்பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை தனது பாராட்டுரையில் குறிப்பிடும் வரலாற்றறிஞர் கலாநிதி சிவ.-தியாகராஜா அவர்கள், கட்டுவன், மயிலிட்டி ஆகிய கிராமங் கள் பண்டைய யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அரச மைய மாக இருந்த காலத்திலிருந்தே வந்திருக்கின்றன என்பதை தெரிவிக்கின்றார்.

இந்நூலின் முதல் பதின்மூன்று அத்தியாயங்களில், அறிமு கம், அமைவிடம், வரலாற்றுப் பின்னணி, கட்டுவன் சந்தி, பாலர் ஞானோதய சங்கம், கல்விப் பாரம்பரியம், சைவசமயப் பாரம்பரியம், கலை கலாசாரப் பாரம்பரியம், விளையாட்டு முயற்சிகள், நிலவளமும் நீர்வளமும், போக்குவரத்துச் சாத னங்களும் சேவைகளும், மயிலிட்டி கிராமசபை, அரச தனி யார் சேவைகள் ஆகிய வரலாற்றுத் தகவல்கள் இடம்பெற் றுள்ளன.

பதினான்காவது அத்தியாயம் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய முக்கிய கிராமங்களை பல்வேறு வழிகளிலும் வளப்படுத்திய 28 சான்றோர்கள் பற்றியதாகும். ‘கட்டுவனூரை செதுக்கிய சிற்பிகள்’ என்ற தலைப்பில் அம்ப லம் பொன்னையா, தம்பிப்பிள்ளை பொன்னம்மா, கதிர்காமர் ஆறுப்பிள்ளை, சின்னக்குட்டி கந்தவனம், க. பொன்னம்பலம், க. நாகலிங்கம் சகோதரர்கள், வித்துவசிரோமணி சி. கணே-சையர், பண்டிதர் இ. நமசிவாய தேசிகர், இ. தாமோதரம் பிள்ளை, த. சிவக்கொழுந்தர், பண்டிதர் வ. முத்துக்குமாரு, சீ. விஜயசுந்தரம், க. சிவபாதசுந்தரக் குருக்கள், அனு. வை. நாகராஜன், பேராசிரியர் சு. சுசீந்திரராஜா, நல்லதம்பி நாக லிங்கம், வல்லிபுரம் குருசாமி, எஸ்.கே. பரராஜசிங்கம், த. துரைச்சாமி, சி. கனகசபை, இளையதம்பி சின்னத்துரை (பத் தாயிரம் சின்னத்துரை), கந்தையா சின்னப்பு, சின்னையா நாகலிங்கம், சின்னத்தம்பி அருணாசலம், சின்னத்தம்பி இரா சரத்தினம், கவிஞர் க. திருமாவளவன், பேராசிரியர் ச. விநாய கமூர்த்தி, பொன்னையா பாலசிங்கம், பேராசிரியர் நா. சண்மு கலிங்கம் ஆகியோர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூ லில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் வே. விவேகானந்தன் இப்பெரியார்களின் புகைப்படங்களையும் தேடியெடுத்துப் பதிவுசெய்துள்ளார்.

இறுதியில் இக்கிராமங்களின் பேரில் பாடப்பெற்ற பாடல்க ளின் தொகுப்பும் இடம்பெற்றுள்ளது. தென்மயிலை ஞானவை ரவர் போற்றிப் பத்து, தென்மயிலை ஞானவைரவர் திருவூஞ் சல், அலவத்தை வீரபத்திரர் திருவூஞ்சல், யாழ். கட்டுவன் வளமாரி வைரவ சுவாமி திருவூஞ்சல், கட்டுவன் தண்ணித் தாள் ஞானவைரவர் திருவூஞ்சல், வசந்தன் நாடகம், ஒயிலாட் டம் ஆகிய ஏழு படைப்பாக்கங்கள் இப்பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. ஆவணவாக்கத்தினை ஆர்வத்துடன் மேற்கொள்ள இவருக்கு தான் சார்ந்திருந்த நூலகத்துறை பின்புலம் உதவியிருக்கின்றது எனக் கருதுகின்றேன்.

கட்டுவனூர் சைவமடத்தைப் பூர்வீகமாகக் கொண்ட திரு. வே. விவேகானந்தன், வேலாயுதர் - அன்னம்மா இணையரின் மக னாவார். தனது ஆரம்பக் கல்வியை மாத்தளை இந்து மகா வித்தியாலயத்திலும் (கந்தசாமி வித்தியாசாலை), உயர் கல் வியை மாத்தளை சென். தோமஸ் கல்லூரியிலும், தெல்லிப் பளை யூனியன் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்து, புவியியல் சிறப்புப் பட்டப் படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தி லும் நிறைவு செய்தார். நூலகத் துறையிலே ஆர்வம் கொண்ட இவர், இலங்கை நூலகச் சங்கம் நடத்திவந்த நூலகவியல் கல்வியைக் கற்று, மயிலிட்டி கிராமாட்சி மன்றம் 1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் பொது நூலகமொன்றினை ஆரம்பித் தவேளையில், அதன் முதலாவது நூலகராகத் தனது பணியை ஆரம்பித்தார். 1981-ம் ஆண்டு, இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், கொழும்புத் தலைமைக் காரியாலய நூலகத்தில் நூலகப் பொறுப்பாளராகவும், பின் னர் அதே நிறுவனத்தில் இளைஞர் சேவை உத்தியோகத்தரா கவும், திருக்கோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பணியாற்றியுள்ளார். கனடாவுக்குப் புலம்பெ யர்ந்த பின்னர் Royal Bank of Canada, Symcor Services Inc. Canada ஆகிய நிதி நிறுவனங்களில் பணியாற்றி, தற்போது ஓய்வுநிலையில் உள்ளார். இலங்கையில் வாழ்ந்தபோது வீர கேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும், கனடாவில் உத யன், தமிழர் தகவல், தமிழர் செந்தாமரை, தாய்வீடு போன்ற இதழ்களிலும் அரசியல் சமூக பொருளாதார விடயங்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதி வருகிறார். இவர், கனடாவில் வெளிவரும் தமிழர் தகவல் சஞ்சிகையின் முன்னாள் உதவி ஆசிரியரும் தற்போதைய வெளியீட்டுக் குழுவின் உறுப்பினருமாவார்.



selvarajah.n@thaiveedu.com

# தமிழ்வலை - 99


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-99 வினா

### இடமிருந்து வலம்

1 தற்பொழுது போர் நிகழும் இடம்
3 விமானப்பயணம்
6 மாலை
7 இலங்கையில் ஓர் இடம்
9 உணவு
10 தாயின் சகோதரன்
11 தூறு
12 யாழ் குடாவில் ஒரு வெளி
13 அகதி
14 ஒரு மரம்


### மேலிருந்து கீழ்

2 'சாயாவனம்' நாவலாசிரியர்(1-5)
3 மணம்
4 வளர்ப்புத்தாய்
5 உ. வே. சா.வின் தலைமணாக்கர் (2-6)
7 ஒரு தாவரம்
8 அடையாள மோசடி
11 புலமைவாய்ந்த
12 குடியிரு
13 ஒரு படைப்பதவி
14 மன்மதன்

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 98க்கான விடைகள்



## தமிழ்வலை-98 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்.
தேவாம்பிகை அரவிந்தன், UK.
சிவருபி சிவகடாட்சம், ரொறன்ரோ.
தவமணி கனகசிங்கம், பாரிஸ்.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
சண்முகநாதன் சபேசன், மார்க்கம்.

### பரிசுபெறும் போட்டியாளர்

**உமா கதிர்,**
ஏஜக்ஸ்.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






200 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பலதரப்பட்ட பணிகளுக்காகத் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்ட மக்களின் வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கருத்தரங்குகள், நடை பயணங்கள், கண்காட்சிகள் எனப் பல வடிவங்களில் வரலாற்று நிகழ்வுகள் நினைவுகூரப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அம்மக்களின் கடந்த கால வரலாற்றையும் எதிர்கால எண்ணங்களையும் உலகிற்கு உரக்கக் கூறும் வகையில் 'மலைய மாருதம் 200' என்ற பெயர் கொண்டு ஒரு நூல் வெளிவந்துள்ளது.

மலையகம் கடந்த 200 வருட வரலாற்றில் வீழ்ந்து கிடந்ததும், வீழ்த்தப்பட்டு இருந்ததும் உண்மையே. ஆனால் அவர்கள் இன்று பீனிக்ஸ் பறவைகளாக வீறுகொண்டு எழுந்துவரத் தொடங்கி விட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்த மலைய மாருதம் 200 நூலின் தொகுப்பாசிரியர் தோழர் டிலிப்குமார் அவர்கள் பரந்த மனதுடன் மலையக ஆளுமைகளிடம் பெற்ற 19 கட்டுரைகளை ஒரு நூலாக, ஒரு வரலாற்று பதிவாகக் கொண்டுவந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

வட இலங்கையில் இருந்து கனடா நாட்டிற்கு இடம்பெயர்ந்த முற்போக்குச் சிந்தனையாளர், சமூகச் செயற்பாட்டாளர், எழுத்தாளர், உரையாளர் எனப் பன்முக ஆற்றல் மிக்க தோழர் டிலிப்குமார் அவர்களை முதன்மை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'தாய் வீடு' இதழ் மலையகம் 200-ன் முக்கியத்துவம் கருதி மலையகம் தொடர்பான கட்டுரைகளை 2023 ஒக்ரோபர் இதழில் வெளியிட்டதுடன், அதனைத் தனித்துவமான நூலாகவும் வெளியிட்டு, மலையக மக்களிடம் மட்டுமல்லாமல் அனைத்துத் தமிழ்பேசும் மக்களிடமும் அந்நூல் பெரும் வரவேற்பைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஓவியர் ஜீவா அவர்களின் நேர்த்தியான அட்டைப் படத்துடன் 120 பக்கங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ள இம்மலர் தாய் வீடு பதிப்பகத்தின் சென்னைப் பிரிவால் அனைவரையும் ஈர்க்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. மலர் வடிவிலான இந்நூலில் இலங்கையிலும் புலம்பெயர்ந்தும் வாழும் மலையக ஆளுமைகள் எழுதியுள்ள 19 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை மலையக மக்களின் அரசியல், பொருளாதாரம், இலக்கியம், கலை, கல்வி, சமூகம் தொடர்பான விடயங்களை மிக ஆழமாக உற்றுநோக்கி எழுதப்பட்டவையாகும்.

மலையக வரலாற்று நிகழ்வுகளின் வழி நின்று ஆக்கங்களைத் தொகுத்து வழங்கியுள்ள தொகுப்பாசிரியரின் அறிமுக உரை நூலின் நுழைவாயிலில் முத்தாய்ப்பாக மிளிர்கிறது. முன்னுரையில் மலையக மக்களின் கடந்த கால வரலாற்றைக் குறிப்பிடும் நூலின் தொகுப்பாசிரியர் அம்மக்களுக்கு இக்காலத்திலும் இழைக்கப்படும் அநீதிகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. குறிப்பாக மாக்ஸியக் கண்ணோட்டத்தில் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டலைக் கூறும் அவர் நூற்றாண்டு கடந்த லயன் வாழ்க்கையின் அவலங்களையும் குறிப்பிடுகிறார். அம்மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாக 1948-ம் ஆண்டு குடியுரிமைப் பறிப்புச் சட்டத்தையும், 1964-ம் ஆண்டு மலையகத் தொழிலாளர்களை நாடுகடத்தும் ஒப்பந்தத்தையும் கடுமையாகச் சாடும் தொகுப்பாசிரியர் மலையக மக்களின் உரிமைக் குரலுக்குச் செவிமடுக்காமல் ஆட்சியாளர்கள் பக்கம் நின்று நாடாளுமன்றத்தில் செயற்பட்ட தமிழ் தலைவர்களை எந்தச் சமரசமும் இல்லாமல் மிகக் கடுமையாகச் சாடும் அவரது பரந்த மனப்பான்மை போற்றுதலுக்குரியது. தனது எழுத்தின் வாயிலாக மட்டுமல்லாமல் செயற்பாட்டின் வழியிலும் மலையக மக்களின் வளர்ச்சி மீது தாய் வீடு ஆசிரியர் காட்டும் அக்கறையும் ஆர்வமும் பாராட்டுதலுக்குரியது.

முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் 'மலைக

ளைப் பேசவிடுங்கள்' நூலின் ஆசிரியரும் எழுத்தாளருமான தோழர் மல்லியப்புசந்தி திலகர் அவர்களின், 'அடையாள அழிப்புக்கான முனைப்புகளும் மீட்பதற்கான முன்னகர்வுக ளும்' என்ற தலைப்பிலான கட்டுரையுடன் மலைய மாருதம் மலர் விரிகிறது. இலங்கையில் இயற்றப்பட்ட 1948-ம் ஆண்டு குடியுரிமைச் சட்ட மசோதா உட்பட மலையக மக்கள் தொடர் பான பல்வேறு சட்ட வரைவுகளை நுணுக்கமாக ஆராய்ந்து எழுதப்பட்ட பதிவாக இது அமைந்துள்ளது. கூலிகள் என அழைக்கப்பட்டவர்கள் இன்று 'மலையகத் தமிழர்' என்ற தேசிய இன அடையாளத்தை நோக்கிய பயணத்தையும் அதன் அவசியத்தையும் திலகர் அவர்கள் மிகவும் ஆராய்ந்து எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மலையகக் கலை இலக்கிய வரலாறு:

'மலையக வாய்மொழி இலக்கியமும், பண்பாட்டு கூறுகளும்' என்ற கட்டுரையில் திரு. வே. இராமர் அவர்கள் மலையக மக் களின் கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களை வாய்மொ ழிப் பாடல் வரிகள் ஊடாக மிகவும் திறம்பட வெளிப்படுத்தி யுள்ளார். மலையக மக்களின் தனித்துவமான இலக்கியப் பண்பாட்டுத் தளத்தை வாய்மொழிப் பாடல் வரிகள் வாயிலா கக் கூற முற்படும் ஆசிரியரின் பதிவு அம்மக்களின் வரலாற் றுக் கூறுகளையும் நினைவுகூருவதாகவும் இருக்கிறது.

***'கண்டி, கண்டி ஏங்காதிங்க***
***கண்ட பேச்சு பேசாதீங்க***
***கண்டியில பட்ட பாட்டை***
***கண்டவங்க சொல்லுவாங்க'***

***'கோண கோண மலையேறி***
***கோப்பிப்பழம் பறிக்கையில்***
***ஒரு பழம் தவறிச்சின்னு***
***உதைச்சானய்யா சின்னதுரை'***

என ஏராளமான வாய்மொழிப் பாடல்களை நினைவூட்டும் ஆசிரியர் அதன் வாயிலாக அம்மக்களின் வாழ்க்கை பயணத் தின் பல்வேறு பரிமாணங்களை நம் முன்னே நிலைநிறுத்தி யுள்ளார்.

'பேசுபவர் இல்லையெனில் மொழி இறந்து விடும்' எனக்கூறும் திரு. வேலு உதயசேகர் அவர்கள் வழக்கொழியும் மலையகச் சொற்கள் பற்றிய தனது கட்டுரையில் மலையகப் பேச்சு மொழி தென்னிந்தியப் பாரம்பரியச் சொற்களின் கலப்பு எனக் கூறுகிறார். மேலும் அவர் மலையக மக்களின் மொழி தனித்து வமானதென்றும், ஈழத்து மொழி வழக்கிலிருந்து வேறுபட்ட பண்பாட்டு அம்சங்களைக் கொண்டதெனவும் பல்வேறு ஆதாரங்களை முன்வைத்துத் தெளிவாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கலை இலக்கியத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படும் நாடகம் தொடர்பாகத் தனது கட்டுரையில் கூற முற்படும் திரு.அ.- லெட்சுமணன் அவர்கள் மலையக நாடக முயற்சிகளை யும் விபரமாகக் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். திரு. கோ. நடேசய்யரின், 'தோட்டத் தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு' நாடக நூல் ஊடாகத் தொழிலாளர்களின் வாழ்விய லுடன் இணைத்துத் தனது ஆழமான ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். மலையக நாட கத் துறையானது ஒவ்வொரு தசாப்தங்களிலும் வெவ்வேறு பட்ட அணுகுமுறைகளில் வளர்ச்சியடைந்ததாகக் கட்டுரை யாசிரியர் வலியுறுத்துவதைக் காணலாம்.


மறைந்த மலையக இலக்கியத்தின் பிதாமகன் 'சாகித்திய ரத்னா' தெளிவத்தை ஜோசப் அவர்களின் கட்டுரை ஒன்றும் 'மலைய மாருதம் 200' நூலில் இடம்பெற்றுள்ளமை நூலிற்குப் பெருமை சேர்ப்பதாக அமைகிறது. ஒரு வரலாற்றுப் பார்வை யுடன் அவர் எழுதியுள்ள 'மலையக இலக்கியமும் இதழிய லும்' என்ற கட்டுரையில் மலையகத்தில் இலக்கியத்துடன் இணைந்த இதழியலின் வளர்ச்சி பற்றி மிக விரிவாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. மலையகம், இலக்கியம் நிறைந்த மண் எனக் கூறும் அவர், இம்மண்ணில் இலக்கியவாதிகள், எழுத் தாளர்கள் நிறைந்து காணப்படுவதைப் பெருமையுடன் பதி விட்டுள்ளார்.

200 வருட மலையக இலக்கியம் பற்றி மற்றுமொரு கட்டுரை யில் கூறமுற்படும் திரு. சு. தவச்செல்வன் அவர்கள் வாய் மொழி இலக்கியமாக இருந்த நாட்டார் பாடல்கள் மூலம் கோப்பிச் செய்கைக் காலத்திலும் பின்னர் தேயிலைச் செய்கைக் காலத்திலும் சமூக வாழ்க்கை நிலைமைகளை அறிந்துகொள்ள முடிகிறது எனக் குறிப்பிடுகிறார். தோட்டத் துப் பாடல்கள் மூலம் தொழிலாளர்களின் யதார்த்தமான வாழ்க்கையை அறிந்துகொள்ள முடிகிறது எனக் குறிப்பிடும் அவர், பாடல்கள் மூலம் வெளியிடப்பட்ட பிரச்சினைகள் இரு பதாம் நூற்றாண்டில் எழுத்துப் பதிவுகளாக வெளிவந்தன எனவும் பதிவிடுகிறார். 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மலையக வாய்மொழிப் பாடல்கள் பத்திரிகைகளில் வெளி வந்த நிலையில் பின்னைய காலப்பகுதியில் கும்மி, தெம் மாங்கு, சிந்துப் பாடல் வரிகள் புத்தக வடிவில் வெளிவரத் தொடங்கிய வரலாற்றையும் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். கோ. நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை ஆகியோரின் தொழிற்சங்கப் பணிகளைக் குறிப்பிடும் தவச்செல்வன் அவர் கள், அவர்களின் இலக்கியப் பங்களிப்புப் பற்றியும் குறிப்பி டத் தவறவில்லை.

இவ்வாறு பல்வேறு இலக்கிய ஆளுமைகளின் மலையக இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளின் மத்தியில் மலையகத்தின் பிரபல எழுத்தாளர் திரு. மு. சிவலிங்கம் அவர்களின் 'பூட்டுப் போடு' எனும் சிறுகதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது. டெங்கு நுளம்புக்கு மருந்து தெளிப்பதை மைய மாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையில் ஆழமான, அவசி யமான அரசியல் கருத்துகளை அவர் தெறிக்கவிட்டிருக்கும் சிறப்பைக் காணலாம்.

‘சட்டத்தக் கழட்டனும்... தாத்தா’. ‘இருநூறு வருசம் முடிஞ்சி போச்சி தாத்தா! நம்ம உரிமைக்கு இப்பவே போராடியாக னும் தாத்தா’ போன்ற கருத்தாழமிக்க வரிகள் மலையகத்தின் குரலாக எழுத்தாளர் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

‘இவ்வாறு மலைய மாருதம் 200’ மலரில் மலையக இலக்கியம் சார்ந்து ஆறு கட்டுரைகள் மலர்ந்து மணம் பரப்பி வருகின் றன. அவை வெறும் வரிவடிவங்களல்ல. ஆழ்ந்து ஆய்ந்து




எழுதப்பட்டவைகளாகும். மலையகம் வெறும் கோப்பியும் தேயிலையும் விளைந்த மண் அல்ல. அங்கே ஆழமான செறி வான மண் வாசனை வீசும் கலை இலக்கியம் இருந்துள்ளன. இன்றும் இருக்கின்றன என்பதை உலகிற்கு உரக்கச் சொல் லும் வகையில் மலையக இலக்கிய ஆளுமைகளின் பதிவு கள் இந்நூலில் இடம்பெற்றிருப்பது மலையக மக்களுக்கான அங்கீகாரம் ஆகும்.

### தேசிய இன அடையாளம்:

மலையக மக்களின் தேசிய இன அடையாளம் குறித்த வாதப் பிரதிவாதங்கள் இலங்கையில் பரவலாக நடந்து வரும் நிலை யில் அது தொடர்பான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மூன்று மலையக ஆளுமைகளின் கட்டுரைகள் மலைய மாருதம் நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கதாகும். இவர்களின் எழுத்துகள் மலையகத் தேசிய இன அடையாளத்திற்கு வலுச் சேர்ப்பதாக இருக்கின்றன. தோழர் திலகர் அவர்களும் நூலின் ஆரம்பக் கட்டுரையில் தேசிய இன அடையாளத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

மலையக இன அடையாளத்துக்கான அவசியத்தைக் குறிப்பி டும் கலாநிதி திரு. பெ. சரவணக்குமார் அவர்கள் மலையக நிர்மாணச் சிற்பி கோ. நடேசய்யர் அவர்களின் ‘இந்திய இலங்கை ஒப்பந்தம்’ நூலை மேற்கோளாகக் காட்டி திரு. நடேசய்யர் மலையகத் தமிழருக்கான அடையாள உருவாக் கத்துக்கான அடித்தளத்தை அமைப்பதில் பெரும் பங்கு வகித்ததாகக் கூறுகிறார். இலங்கை அரசியல்வாதிகளின் இனவாதக் கொள்கை பற்றிக் கூறும் இந்நூல், இந்திய விரோ தக் கொள்கை உருவானதையும் சுட்டிக் காட்டுவதாகக் கட்டு ரையாளர் குறிப்பிடுகிறார். இந்தியாவிலிருந்து வந்த ஒவ் வொரு தொழிலாளியும் இலங்கையில் நிரந்தர வாசியாக வேண்டும் என்பது கலாநிதியின் கருத்தாக இருக்கிறது. இவ் வாறு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் வாழும் தனியான ஓர் இனத்தின் அடையாளம் கொண்ட சமூ கம் என்ற கருத்தை வலியுறுத்துவதாகக் கட்டுரை அமைந்தி ருப்பதைக் காணலாம்.

ஒரு சமூகத்தின் இன அடையாளம் பாதுகாக்கப்படாவிட்டால் அந்த இனம் அழிந்து போய்விடும் எனத் தனது கட்டுரையில் ஆதாரங்களுடன் மிக அழுத்தம் திருத்தமாகப் பிரபல எழுத் தாளர் திரு. இரா. சடகோபன் அவர்கள் குறிப்பிடுவதைக் காணலாம். 200 வருடங்களாக வஞ்சிக்கப்பட்ட இவர்கள் இலங்கை நாட்டிற்கு உரியவர்கள் எனத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது அவரது வாதமாகும். இந்திய வம் சாவழித் தமிழரா, இலங்கைத் தமிழரா, இலங்கை மலையகத் தமிழரா என்ற பல கேள்விகளுக்கு விடையளிப்பதாக அவ ரது கட்டுரை அமைந்துள்ளது. மலையகத் தமிழர் என்பது ஒரு புவியியல் கோட்பாடு அல்ல, அது ஒரு அரசியல் கோட் பாடு என்பது அவரது வாதமாக இருப்பதை அவதானிக்க லாம். மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இன மாக அங்கீகரிக்கப்பட்டு சட்ட அங்கீகாரம் பெறப் பட வேண்டும் என்ற அவரது கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடிய தாக இருக்கிறது எனலாம். இந்திய வம்சாவழி என்ற அடையா ளத்தால் ஏற்படும் பாதகங்களை மிக விபரமாகக் கூறும் திரு. சடகோபன் அவர்கள் தனது கட்டுரையில். ‘இலங்கை மலை யக மக்கள்’ என்ற தேசிய இன அடையாளமே சரியானதும் நியாயமானதும் என்பதை ஆழமாக வலியுறுத்தியிருப்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மலையகத் தமிழரின் அரசியல் அங்கீகாரம் பற்றித் தனது கட் டுரையில் கூறமுற்படும் திரு. சுப்பையா கமலதாசன் அவர்க ளும் இலக்கியத் தளம், அரசியல் தளம் என எல்லாவற்றிலும் ஆழ வேரூன்றி நிற்கும் மலையக மக்கள் அரசு ரீதியாக மட் டுமே இன்னும் அங்கீகாரம் பெறவில்லை எனக் கூறுகிறார்.

தேர்தல் வரலாற்றைச் சுட்டிக்காட்டும் இவர் தற்போது வாக்கு ரிமையுடைய அரசியல் அங்கீகாரம் பெற்ற சமூகமாக உள்ள இவர்கள் தேசிய இன அடையாளத்துக்கும் உரித்தானவர் களே என்கிறார்.

இவ்வாறு மலையக மக்களின் தேசிய இன அடையாளத்தின் அவசியத்தை வலியுறுத்தி எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகப் பார்க்கப்படுகின் றன. சுயநலம் சார்ந்த சில பிரிவினர் இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்தை வலிந்து திணிக்க முயலும் இன்றைய காலகட்டத்தில் ‘இலங்கை மலையகத் தமிழர்’ என்ற பொருத் தமான தேசிய இன அடையாளத்தைக் குறித்து மலையக ஆளுமைகளின் கட்டுரைகள் மலைய மாருதம் மலரில் இடம் பெற்றிருப்பது சிறப்பான ஒன்றாகக் கருதப்படுகிறது.

## அரசியல் பங்களிப்பு:

இலங்கை மலையக மக்களின் தொழிற்சங்க ஈடுபாடு மிக அவசியமான ஒன்று எனக் கூறப்படும் அதே நேரம் அரசியல் பங்களிப்பும் மிகவும் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகி றது. கடந்த காலங்களில் போதிய விழிப்புணர்வு இன்மையால் அவர்கள் எப்படியெல்லாம் இனவாத அரசியல்வாதிகளால் பாதிப்புக்கு உள்ளாகினர் என்பதை உலகம் அறியும். இந்நி லையில் தோட்டத் தொழிலாளர்கள் அடிமட்டத்திலிருந்து தங் களின் அரசியல் பங்களிப்பைச் செய்திடல் மிகவும் அவசியம் என்ற வகையில் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. இரா. ரமேஷ் அவர்கள் எழுதியுள்ள கட் டுரை இந்நூலில் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

உள்ளாட்சி அமைப்புகளில் தற்போதைய மலையக மக்க ளின் நிலை குறித்து விபரமாக ஆராயும் அவர் சமூக நீதி, சுய நிர்ணயம் என்பவற்றை உறுதிசெய்யும் இடமாக உள்ளாட்சி அமைப்புகள் இருப்பதால் அவற்றில் மலையக மக்களின் ஈடு பாடு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளார். குடியு ரிமையின் அவசியத்தைக் கூறும் கலாநிதி, சமூக உரிமை முழுமையாக மலையக மக்கள் பெறமுடியாது இருப்பதற் கான அரசியல் நிர்வாகக் காரணிகளைச் சுட்டிக் காட்டுகிறார். உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள குறைபாடுகளைக் குறிப் பிட்டு அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் விரிவுரையா ளர் உள்ளாட்சி அமைப்புகளில் தோட்ட மக்கள் உள்வாங்கப் படாத பாரபட்சமுள்ள இலங்கையின் அரசியல் செயற்பாட் டையும் வன்மையாகக் கண்டிக்கிறார்.

இலங்கை மலையக மக்களின் அரசியல் வரலாற்றில் 1948-ம் ஆண்டு குடியுரிமைப் பறிப்பு என்பது அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரும் துரோகச் செயலாக இன்று வரை பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில் சர்வதேச அள வில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவரும் திரு. என். சரவணன் அவர்கள் மலைய மாருதம் நூலில் எழுதியுள்ள 1948 குடியு ரிமை பறிப்புத் தொடர்பான கட்டுரையில் குடியுரிமை பறிக்கப் பட்டதும் வாக்குரிமை பறிக்கப்பட்டதும் திட்டமிட்ட சதியாகும் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களைத் தனது கட்டுரையில் முன்வைத்துள்ளார். மலையகம் 1940-களில் இடது பக்கம் சாய்வதை வலதுசாரிகள் விரும்பவில்லை எனவும் குறிப்பிடு கிறார். மலையக மக்களின் அரசியல் வரலாற்றை மிக நுணுக் கமாக ஆராய்ந்து தனது கட்டுரையை வடிவமைத்துள்ள சர- வணன் அவர்கள் குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் வட இலங்கை அரசியல்வாதிகளில் சிலர் பாரபட்சமாகச் செயற்பட்ட வரலாற்றையும் குறிப்பிட்டுள்ள தைக் காணலாம்.

## மலையக மக்களின் உரிமைக்கான குரல்:

மலையக மக்களின் இன்றைய மிகப் பெரும் தேவையாகவும் பிரச்சினையாகவும் இருப்பது அவர்களுக்கான காணி உரி மையாகும். இதனை மிக ஆழமாகப் புரிந்துகொண்ட பெரும் பான்மை சமூகம் சார்ந்த சமூகச் செயற்பாட்டாளர் எழுத்தா ளர் திரு. விக்டர் ஐவன் அவர்கள் ஆற்றிய சிங்கள உரை தமிழ் கட்டுரையாக மலைய மாருதம் இதழில் இடம்பெற்றிருப் பது மிகச் சிறப்பாகும். ‘மலையகத் தமிழரை சிறுதோட்ட உட மையாளராக்குவதன் அவசியம்’ என்ற அவரது உரையைத் தோழர் திலகர் அவர்கள் தமிழாக்கம் செய்து அதனைப் பொருத்தமாக, இன்றைய காலகட்டத்தில் வெளிவரச் செய் துள்ளமை சிறப்பான நிகழ்வாகும்.

மலையக மக்களின் 200 வருட வாழ்வியல் வரலாற்றைக் கூர்ந்து கவனித்து வந்துள்ள திரு. விக்டர் ஐவன் அவர்கள் இலங்கை தேசத்தின் பொருளாதாரக் கட்டமைப்பில் மலை யக மக்களின் பங்களிப்பைக் கூறுவதுடன் அரசியல் ரீதியாக அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் எடுத்துரைப்ப தைக் காணலாம். ஆண்டாண்டு காலமாகத் தேயிலைத் தொழிலோடு பின்னிப் பிணைந்திருக்கும் மலையகத் தமிழ் மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மிக ஆழமாக வலியுறுத்துவதாக அவரது உரை யும், கட்டுரையும் இருப்பது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறப்படுகிறது. காணி உரிமையே மலையக மக்களின் எதிர்காலம் என்ற கருத்தை ஆழ்ந்து சிந்திக்கும் வகையில் அவர் குறிப்பிட்டுள்ளமை முக்கியத்துவம் பெறுகி றது.

பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் சமூகச் செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான திரு. எம்.எம். ஜெயசீலன் அவர்கள் மலையகச் சுடர் திரு. கோ. நடேசய்யர் அவர்கள் 100 வருடங்களுக்கு முன்னர் வெளியிட்ட ‘இலங் கையில் இந்தியத் தொழிலாளர்’ என்ற துண்டுப் பிரசுரத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாகக் கூறப்பட்ட பல்வேறு உரிமைகள் சார்ந்த அம்சங்களைத் தனக்கேயுரிய பாணியில் ஆராய்ந்து மிக விபரமாகக் கட்டுரை வடிவில் மலைய மாரு தம் இதழில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் மேம்பட இலங்கை அரசாங்கமோ தோட்ட உடைமையாளர்களோ அக்கறை காட்

டவில்லை என்பதை திரு. நடேசய்யர் வலியுறுத்தி இருப்பதாகக் கூறும் கட்டுரையாளர் அன்றைய தொழிலாளர்கள் பட்ட கடன், அவர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கப்படாமை, மிக மோசமான குடியிருப்புகள், கல்வி வழங்கப்படாது, சிறுவர்களையும் வேலைகளில் ஈடுபடுத்தியமை, ஓய்வில்லாத் தொடர் வேலை, முதுமையில் பாதுகாப்பு இன்மை எனப் பல்வேறு அநீதிகளை, 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர்' என்ற துண்டுப் பிரசுரத்தை ஆதாரமாகக் கொண்டு திறம்பட வடிவமைத்துள்ளமை சிறப்பிடம் பெறுகிறது.

மலையகம் 200 தொடர்பாகப் பல்வேறு தளங்களில் வெவ்வேறு விதமான நிகழ்வுகள் இலங்கை தேசமெங்கும் குறிப்பாக மலையகம் சார்ந்து நடைபெற்று வருவதைக் கல்வியாளரும், எழுத்தாளரும் அரசின் நிதி ஆலோசகருமான திரு. எம். வாமதேவன் அவர்கள் தனது 'மலையகப் போராட்டங்கள்' குறித்த கட்டுரையில் பதிவிட்டுள்ளார். மலையகத்தின் 200 வருட வரலாற்றைக் குறிப்பிடும் ஊர்வலங்கள், நடை பயணங்கள், நூல்களின் அறிமுகங்கள், கருத்தரங்குகள், கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகள் என நடந்த பல நிகழ்வுகளின் சிறப்பைக் கட்டுரையாளர் பதிவிட்டுள்ளதைக் காணலாம்.

நூல் அறிமுகங்களைப் பற்றிக் கூறும்போது கட்டுரையாளர் அவர்கள் இலங்கையின் சட்டத்தரணியும், எழுத்தாளருமான திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதி வெளிவந்த 'தேயிலை மொட்டின் சிறு துளிகள்' என்ற நூலின் சிறப்புப் பற்றியும் தனது கட்டுரையில் பதிவிட்டுள்ளார். மலையகத்தில் நடந்த பல்வேறு வீரம்மிக்க போராட்டங்களையும் அதன் தொடர்ச்சியாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக உயிர் துறந்தவர்களின் தியாகங்களையும் நினைவுகூரும் வகையில் திரு. வாமதேவன் அவர்களின் கட்டுரை மலைய மாருதம் இதழில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இடம் பெயர்ந்தவர்கள் – மறுவாழ்வு திட்டங்கள்:

மலையக மக்கள் தங்களின் 200 வருட வரலாற்றில் மலையக மண்ணிலிருந்து காலச் சூழ்நிலை காரணமாகப் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இதனை வரலாற்று அடிப்படையில் கூறமுற்படும் முன்னாள் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளரும் தற்போது தமிழ்நாட்டில் வசிப்பவருமான எஸ். இஸட். ஜெயசிங் அவர்கள் பின்வருமாறு வகைப்படுத்திக், கட்டுரையாக மலைய மாருதம் இதழில் வெளியிட்டுள்ளார்.

- இலங்கை இந்திய உடன்படிக்கையின் கீழ் இந்தியாவில் குடியேறியவர்கள்,
- இலங்கை நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்கள்,
- மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள்,
- அகதிகளாகத் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தவர்கள்.

இவ்வாறு பல வகையில் குடிபெயர்ந்தவர்கள் பற்றிக் கூறுவதுடன் இடம்பெயர்ந்த பின்னர் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கட்டுரையாளர் மிகத் தெளிவாகத் தனது கட்டுரையில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையிலிருந்து தாயகம் சென்றவர்களின் மறுவாழ்வுத் திட்டங்கள் பற்றி 'களுகங்கை முதல் காவிரி வரை' நூலின் ஆசிரியரும், சமூகச் செயற்பாட்டாளருமான தோழர் தமிழகன் அவர்கள் தனது கட்டுரையில் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கைக்கு உட்பட்டுத் தமிழகம் சென்றவர்களின் மறுவாழ்வுத் திட்டங்கள் பற்றியும், அவை தோல்வியடைந்து அதன் காரணமாக இன்றுவரையும் அம்மக்கள் படும் துன்பங்கள் பற்றியும் தனது கட்டுரையில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். அத்துடன் இலங்கையில் அரசியல் சூழலால் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் தமிழகம் சென்ற மலையகத் தமிழ் அகதிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ள கட்டுரையாளர் 'தாயகம் திரும்பியோர் வாழ்வுரிமை இயக்கம்' சார்பாகப் பல விதமான கோரிக்கைகளையும் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்ற மலையக மக்களின் வழித்தடங்களை நினைவுகூரும் வகையில் தலைமன்னார் தொடங்கி மாத்தளை வரையில் நடைபெற்ற நீண்ட நெடிய நடைபயணச் சிறப்பைக் கட்டுரை வடிவில் மலைய மாருதம் இதழில் நிபா அவர்கள் இடம்பெறச் செய்துள்ளார். நடைபயணத்தின் பல்வேறு சிறப்புகளைப் பட்டியலிடும் கட்டுரையாளர் பலதரப்பட்ட சமூகத்தவர்களும் இன, மத, மொழி வேறுபாடின்றிக் கலந்துகொண்ட சிறப்பைப் பெருமையுடன் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக மக்களின் வரலாற்றையும், அவர்களின் வாழ்வியல் போக்கையும் நினைவுகூரும் பிருந்தா இராஜகோபாலன் அவர்கள் 'விடியல் தொலைவில் இல்லை' என்ற தனது கட்டுரையில் இயற்கையின் தலைமையகமாக விளங்கும் மலையகத்தில் மக்களின் எழுச்சிப் பயணம் வெற்றிபெறும் என்று நம்பிக்கையளிக்கிறார்.

இவ்வாறு மலையக மண்ணின் ஆளுமைகள் எழுதி, தாய் வீடு இதழில் பதிவாகி, அதன் பின்னர் முதன்மை ஆசிரியரின் முன்முயற்சியால் நூலாக வெளிவந்துள்ள இக்கட்டுரைகள் மலையக வரலாற்றில் நிலைத்து நிற்கும் ஆவணங்களாகும். கட்டுரைகள் அனைத்தையும் நூலாக்கி அதற்கு 'மலைய மாருதம் 200' எனப் பெயரிட்டு மலையக மக்களிடம் சமர்ப்பித்த தாய் வீடு ஆசிரியர் தோழர் டிலிப்குமார் அவர்களுக்கு மலையக மக்கள் தங்களின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர்.



jeyasingh@thaiveedu.com



# ஈழமண்ணில் இந்திய இராணுவம்

## நூல்வழிப் பதிவுகள்

**- என். செல்வராஜா**

7

**முடிவுரை:**

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987-ல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் - இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நிகழ்வு, முன்னதாக வானிலிருந்து உணவுப் பொட்டலங்களைத் துணிச்சலுடன் போட்டுச்சென்ற இந்திய வான்படையின் துணிச்சலை வியந்திருந்த தமிழர் மனங்களில் இந்தியா பற்றிய பாரிய நம்பிக்கையை ஊட்டியிருந்தது. அந்த நம்பிக்கை படிப்படியாகச் சிதைவடைந்த வரலாறு மேற்குறிப்பிட்ட நூல்களின் வாயிலாக ஓரளவு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றே நம்புகின்றேன். இருப்பினும், இன்னும் பதிவுசெய்யப்படாத நிகழ்வுகள் ஏராளம் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும், தமிழ் மண்ணின் ஒவ்வொரு நிறுவனத்துக்குள்ளும் இக்காயம் நீண்ட காலமாக நீறுபூத்த நெருப்பாகவே கடந்துசென்றுவிட்டன.

குறிப்பாக இந்திய இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கைப்பற்றிய வேளையில் அங்கு கலைத்துறைப் பணியகங்களில் சேகரிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வேடுகள் உள்ளிட்ட பல நூல்கள் எரிக்கப்பட்ட நிகழ்வும் சொத்துகள் அழிக்கப்பட்ட சம்பவங்களும் பல்கலைக்கழக புத்திஜீவிகளால் போதியளவு வெளியுலகிற்கு வெளிப்படுத்தப்படவில்லை என்றே கருதுகின்றேன்.

மேலும் பெருங்கற்கால யாழ்ப்பாணம் பற்றிய அகழ்வாராய்ச்சி நிகழ்த்தப்பட்ட வேளையில் யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழியும் அதனுள்ளிருந்த 5000 ஆண்டுகள் பழமைவாய்ந்த எலும்புக்கூடும் அந்த அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட அணிகலன்களும், வரலாற்றுத்துறைக் கட்டடத்தின் ஒரு பிரிவில் செ. கிருஷ்ணராஜா, பரமு புஷ்பரட்ணம் உள்ளிட்ட வரலாற்றுத்துறை ஆய்வாளர்களால் பொக்கிஷமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்திய இராணுவம் பல்கலைக்கழகக் கட்டடத்தை ஆக்கிரமித்ததன் பின்னர் அவற்றுக்கு என்ன நடந்ததென்றே அறியமுடியவில்லை. இது பற்றிய பதிவும், எவ்வித ஆவணங்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்று கருதுகின்றேன்.

எமது வரலாறு முறையாகப் பதியப்படாமல் கடந்த 150 ஆண்டுகளாக எம்முன்னோர்கள் விரயம் செய்தமையின் காரணமாக எமது வரலாற்றை மகாவம்சத்திலும், பிற இலக்கியங்களிலும், கற்பனைக் கதைகளிலுமே தேடியலையவேண்டிய துரதிர்ஷ்டம் மிக்கவர்களானோம். அதன் பலனை இன்று நாம் நாடற்றவர்களாக உலகெங்கிலும் அலைந்தும் சொந்த மண்ணிலேயே உரிமையற்றவர்களாக நின்றும் அனுபவிக்கின்றோம். இப்பொழுது இந்த 21-ம் நூற்றாண்டிலும் கூட முறையாக அவற்றைப் பதிவுசெய்யவேண்டும் அல்லது அவ்வாறு பதிவுசெய்ய முனைபவருக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற உணர்வுகூட ஈழத் தமிழர்களுக்குப் போதியளவு ஏற்பட




வில்லை என்பது எனது அனுபவபூர்வமான வேதனைமிக்க கருத்தாகும். இன்றளவில் இத்தகைய வரலாற்றுப்பதிவை மேற்கொள்ளத் தனித்து முனையும் தனிநபர்களைக்கூட எமது இனம் கண்டுகொள்ளாதிருப்பதை நாம் கூர்ந்து கவனித்தால் இலகுவில் கண்டறிந்தும், புரிந்தும் கொள்ளலாம். பொதுநல நோக்கம்கொண்ட தனிநபர்களே பாதையையும் உருவாக்கி அதில் பயணிக்கவேண்டியதொரு துரதிர்ஷ்டவசமான நிலைமையை எமது ஈழத்துத் தமிழினம் கண்டும்

காணாதிருப்பது வருத்தத்திற்குரியதாகும். இந்நிலைமை மாறும் வகையில் முடிந்தவரை எம்மவர்கள் இத்தகைய வர லாற்றுப் பதிவுகளை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டவேண் டும்.

களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் பாடும்மீன் சிறீகந்தராஜா இலங்கையில் சட்டத்தரணியாகவும் சமாதான நீதவானாகவும் பணியாற்றியவர். தற்போது புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். இனப்



பற்றையும் தமிழ் உணர்வையும் ஊட்டும் எழுச்சிக் கவிதை கள் பலவற்றின் ஆசிரியரான தென் தமிழீழ மண்ணின் மைந்த ரான பாடும்மீன் சிறீகந்தராஜா அவ்வப்போது இடம்பெற்ற தாய்மண் நிகழ்வுகளைக் கவிதைகளுக்குப் பொருளாக்கிப் பாடியிருக்கிறார். இவற்றின் தொகுப்பாக 'தமிழினமே தாய கமே' என்ற கவிதைத் தொகுதி 2003-ல் வெளிவந்திருந்தது. அதில் இடம்பெற்றிருந்த இந்திய இராணுவ அடக்குமுறை தொடர்பான 'கோர நிகழ்வுகளும் சோக நினைவுகளும்' என்ற கவிதையுடன் இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

### கோர நிகழ்வுகளும் சோக நினைவுகளும்

'வாழத்துடிக்கின்ற ஈழத்தமிழனத்தின் - வரலாற்றில்
ஆழப்பதிந்துவிட்ட காலச் சிதைவுகளை - ஏற்படுத்த
ஈழத்தமிழ் மண்ணில் இந்திய இராணுவம் - 'அமைதி'யாய்
காலைப் பதித்திட்ட ஜுலைத் திங்கள் - எண்பத்தியேழு.

பத்தோடு ஆறாண்டு பறந்து போயிற்று
பாரதப் படையும் மறந்து போயிற்று
செத்தவர்கள், மறைந்தவர்கள், சீரழிந்து போனவர்கள்
சொத்தை இழந்தவர்கள் சோகம் மறையவில்லை.

கடந்த நினைவுகள் பசுமையானவை
நடந்த நிகழ்வுகள் கொடுமையானவை
அடைந்த விளைவுகள் துயரமானவை
சிதைந்த வாழ்வுகள் நிகரில்லாதவை.

பங்காளியில்லாத ஒப்பந்தம்
பாரினிலே இதுபோல நடந்ததில்லை.
தங்களது ஆளுமையை நிலைநிறுத்த
ராஜீவும் ஜேயாரும் செய்தவினை.

கையொப்பம் இட்ட 'மை' காயு முன்பே
காத்திருந்த அமைதிப்படை பாய்ந்ததங்கே
நல்வரவு சொன்னார்கள் செந்தமிழர்
நாதியற்றோம் என்றழுதார் சிங்களவர்.

பாரதம் நமது மூதகம் என்பதால்
படையினர் நமக்கு சாதகம் என்றுநாம்
வீறுடன் நெஞ்சிலே கனவுகள் விதைத்தோம்
விபரீத மாகிடும் என்றா நினைத்தோம்.

வந்தாரை வரவேற்கும் வழமையோ டவரைநம்
சொந்தமாய் நினைத்தோம்
செந்தென்னை இளநீரும் தேனோடு தயிர்கலந்து
தெவிட்டாமல் கொடுத்தோம்

உள்ளளவும் நினைப்பதற்கு உப்பிட்டு மோர்கடைந்து
உவப்போடு கொடுத்தோம்
சுள்ளெனவே மிளகாயின் சுவைசேர்த்த சம்பலுடன்
சுடுகிழங்கு கொடுத்தோம்

பாசமுடன் வீதியெங்கும் படையினரை வரவேற்று
வாசலிலே நிறைகுடமும் வனப்புமிகு தோரணமும்
ஆசையுடன் பாட்டிகளின் ஆராத்தி வாழ்த்துகளும்
நேசமதைக் காட்டியது நினைவில் இன்னும் நிற்கிறது.

பாரதப் படையின் பாரிய வண்டிகள்
பாதை நெடுகிலும் பவனியாய் வந்தன
ஓரம் இரண்டிலும் கூடினர் மக்கள்
ஓடி மறித்தனர் உவகையில் களித்தனர்

வளவுகள் எங்கணும் காய்த்துக் குலுங்கிய
அழகிய செம்மஞ்சள் இளநீர்க் குலைகளை
மளமள வென்றே மண்ணில் விழுத்தி
வடிவாய்ச் சீவி மகிழ்ந்தே கொடுத்தனர்

இளநீரைக் குடித்தபின் இரண்டாகப் பிளந்து
இதமாக உள்ளே இருக்கின்ற வழுவலை
உளமார கேட்டவர் உருசித்துத் தின்றதும்
உறவாக நினைத்தனர் உருகி மகிழ்ந்தனர்

இந்த வரவேற்பு எதைக்காட்டி நின்றதங்கே
நொந்து கிடக்கின்ற நம்வாழ்வை மீட்டெமக்குத்
தந்து உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழவைக்க
வந்த உறவென்று நம்பியதைக் காட்டியது.

அப்பாவித் தமிழ்மக்கள் அன்று நினைத்ததில்லை
தப்பாகி எல்லாமே தலைகீழாய்ப் போகுமென்று
வெட்டக் குலை இளநீர் வீழ்ந்து சிதறுதல்போல்
சுட்டுத் தமிழ் இனமே சுருங்குமென நினைத்ததில்லை

எந்த மரங்கள் இளநீரைத் தந்தனவோ
அந்த மரங்கள் அடியோடு சாயுமென்றோ
வந்த படையினரால் வாழ்விழந்து போகுமென்றோ
அந்த மனங்களுக்கு அந்நேரம் தெரியவில்லை.

நெற்றியிலே குங்குமமும் நீண்ட கருமுடியில்
கொத்தாக மல்லிகையும் கோர்த்தகன காம்பரமும்
முற்றத்தில் நிறைகுடமும் முகத்திலே புன்சிரிப்பும்
அத்தனையும் கொண்டு மக்கள் ஆவலுடன் வரவேற்றார்

நெற்றியிலே பொட்டழியும் நீண்ட தலைமயிரைப்
பற்றியிழுத்து அந்தப் பாவிகளால் உடல் கிழியும்
முற்றத்திலே கணவன் மூச்சுநிற்கும் என்றெல்லாம்
சற்றுமெதிர் பார்த்ததில்லை சந்தேகம் கொண்டதில்லை.

பொட்டோடு பொலிந்து நின்றார்கள் படைவந்த போது
பொட்டை இழந்து நின்றார்கள் அது சென்றபோது.

பள்ளிசெல்லும் போதெல்லாம் பாலகர்கள் தவறாமல்
பாரதப் படையினரின் பக்கத்தில் சென்றார்கள்
இந்திமொழி வார்த்தைகளில் இரண்டொன்றை அவர்களிடம்
முந்திப் பொறுக்கிப் புன் முறுவலுடன் உச்சரித்தார்.

பள்ளிக்குள் வந்துதம் உயிரைப்பறிப்பார்கள்
கொள்ளி அடுக்குதல்போல் குவித்து எரிப்பார்கள்
என்றந்தப் பிஞ்சுகளோ எள்ளளவும் நினைத்ததில்லை
அன்று நினைப்பதற்கு அவர் வயதும் போதவில்லை.

திருவிழாச் சோடனையை  சென்றுபார்த்து மகிழ்வது போல்
உருவாகும் முகாம்களெல்லாம் ஊர்மக்கள் பார்த்துவந்தார்
ஆற்றொணாத் துயரில் தம்மை ஆழ்த்துதற்கு வந்திருக்கும்
கூற்றுவர் படையதென்று கொஞ்சமும் நினைத்ததில்லை.

தமிழர்களைக் காக்கவென்று வந்து சேர்ந்தார்
தடம்புரண்டார், எண்ணத்தில் விடம் கலந்தார்
எமதின்னல் களைவதற்கே வந்தோம் என்றார்
இரண்டரையே மாதத்தில் எதிரி யென்றார்

ஆம் என்றால் சுட்டார்கள்
இல்லையென்றால் எரித்தார்கள்
ஏன் என்று கேட்டிட்டால்
இரவிலே கடத்தினார்கள்.

வானரம் முன்புமொன்று வந்தது
வனப்புமிகு இலங்கையை அழித்தது
சேனையாய் இப்போது வந்தது
செந்தமிழ் ஈழத்தைச் சிதைத்தது.

வீடுகள் செந்தீயில் எரிந்தன
வீதிகள் தடைபோட்டு சிதைந்தன
ஓடினோர் குண்டுபட்டிறந்தனர்
உள்ளேயோ பலர் வீட்டோடெரிந்தனர்.

கோயிலில் கும்பிட்டு நின்றனர்
கும்பலாய் வந்தனர் கொன்றனர்
ஏனென்று கேட்டிட்ட தலைவர்கள்
இரவிலே காணாமல் போயினர்

கற்புடல் சிதைந்தவள் கதறினாள்
கணவனை இழந்தவள் பதறினாள்
கற்புடல் கணவன்முன் சிதைந்தவள்
கடவுளே இ(ல்)லையெனச் சிதறினாள்.



தாயின்முன் தனையர்கள் சுடுபட்டனர்
தந்தைமுன் சிறுமிகள் கெடுபட்டனர்
நோயின்றி யேபெண்கள் காமுகர்
நுகர்ந்ததால் தங்களின் உயிர்விட்டனர்.

பள்ளியில் படித்தனர் மாணவர்
பாவிகள் சென்றங்கு பிடித்தனர்
மெல்லிய கைகளை மதிலோடு
விரைவாகக் கட்டியே நிறுத்தினர்.

தள்ளியே நின்றதோர் டாங்கியை
தருக்கர்கள், மதிலோடு நின்றிட்ட
அல்லிப்பூ உடல்களில் மோதினர்
அந்தந்தோ! ஐயகோ! அம்மம்மா!

ஒன்றாயி ரண்டா இப்படி
ஊருக்கு ஊர் வாசற்படி
அன்றைய தமிழர் நிலைப்படி
அரசுகள் செய்த குழப்படி.

இரண்டரை ஆண்டுகள் தங்கினர்
ஈழத்தைத் தடுக்கவே வந்தனர்
மிரண்டனர் இதுபோல எங்குமே
விழுந்ததே இல்லையென்று சென்றனர்.

தமிழீழ மக்களைக் கொன்றதும்
தங்களில் பலர் உயிர் இழந்ததும்
எமதீழ நாட்டினைச் சிதைத்ததும்
இறுதியில் பாடம் படித்ததும்

வரலாறு மன்னிக்க முடியாத
வடுவொன்றைப் பாரதம் பெற்றதும்
ஒருநாளும் அழியாத கறையது
‘உதவினால்’ மறைய வாய்ப்புள்ளது.



selvarajah.n@thaiveedu.com

# தடைசெய்யப்பட்ட செவ்வியல் நூலும் இரண்டு தேவதாசிகளும் - 2
# ‘பேத நன்கறிவார்களோடு இவை பேசினால் பெரிது இன்சுவை’

**– ச. சத்யதேவன்**

இயற்றரவிணைக் கொச்சக் கலிப்பா என்னும் சிக்கலான யாப்பில் ‘சங்கத் தமிழ் மாலையென’ போற்றப்படும் திருப்பாவையையும், சிறுவயதிலிருந்தே கண்ணன்பாற்கொண்ட காதலால்...

***‘பிராயம் தொடங்கி ஆதரித்தெழுந்த தடமுலைகளைத்***
***துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து தொழுதுவைத்து’***

***‘பொங்கிய பாற்கடல் பள்ளிகொள் வானைப்***
***புணர்வதோ ராசயினால், என்***
***கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்***
***தாவியை யாகுலஞ் செய்’***வதை

அளவியல் சந்தத்தில், அழகும் எளிமையும் ததும்ப ‘நாச்சியார் திருமொழி’யையும் பாடிய கோதை ஆண்டாளை ஓர் அறியாத பேதைப்பெண் என்ற நடமுறைக்கொவ்வாத புனைவை இன்றும் மறுப்பின்றி ஏற்றுக்கொண்டிருக்கிறது தமிழ் உலகு. கோதை ஆண்டாளின் ‘நாச்சியார் திருமொழி’யைத் தமிழ் சிருங்கார பக்தியின் உச்சமென மெச்சப்படுவதையும், ‘வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று’ என 9-ம் நூற்றாண்டு வானவியல் தரவை தன்பாட்டில் பொதிந்து வைக்கும் அறிவும் திறமையும் கொண்ட பெண் அறிஞராகத் திகழ்ந்தவர் கோதை நாச்சியார் என்பதையும் மறந்து விடுகிறது. அக்காலத்தில் இவ்வறிவும் புலமையும் பெறும் வாய்ப்புகள் யாருக்கு இருந்ததென முதற்பகுதியில் குறிப்பிடப்பட்டது.

***‘...சிறுமா னிடவரைக் காணில்நாணும்,***
***கொங்கைத் தலமிவை நோக்கிக்காணீர்***
***கோவிந்த னுக்கல்லால் வாயில்போகா’***

என்றும்,

***‘என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்,***
***பொன்னாகம் புல்குதற்கென் புரிவுடைமை செப்புமினே’***

என்றும்,

***‘....கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து,***
***ஒருநாள் தங்குமே லென்னாவி தங்குமென் றுரயீரே’***

என்றும்,

கண்ணன் மீதான காதலைப் பாடிய ஆண்டாளைப் படித்துச் சுவைத்து, அதில் பத்துப் பாடல்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்தவர் முத்துப்பழனி.

***‘முற்று இலாத பிள்ளைகளோம் முலை போந்திலோம்’,***
***‘யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை***
***நீ நலிந்து என்ன பயன்?’***

ஆகையால்...

***‘பேத நன்கறிவார்களோடு இவை***
***பேசினால் பெரிது இன்சுவை’***


என்ற தன் குல முன்னோரான ஆண்டாளின் ஆசையை ஆயிரமாண்டுகளின் பின்னர் ராதிகா சாந்தவனத்தில் முத்துப்பழனி முழுமையாக்கினார். மொழி வேறாயிருந்தபோதும் இளம் பெண்களாகப் பாடிய பொருளில் மட்டுமன்றி அனுபவத்திலும் அறிவிலும் இவ்விருவரும், ஒருவரின் தொடர்ச்சியாக மற்றொருவர் உள்ள நிலை புலப்படுகின்றது.

கோதை ஆண்டாளின் தொடர்ச்சியை முழுமையாக்க முத்துப்பழனி, *‘முலை பொந்திலாத முற்று இலாத பிள்ளையினதும், பேத நன்கறிந்த பேரிளம் பெண்ணின் காதலையும் களிப்பையும்’* தன் காவியத்தில் படைத்தார். அதன் பொருட்டே மங்கை இளாவையும் ஆண்டாளின் காலத்தில் உருவாகியிராத ராதையையும் தன் காவிய நாயகிகளாக்கினார். ராதை அல்லது ராதிகா நந்தகோபனின் சகோதரி. திருமணமான இவள் கணவனைவிட்டுப் பிரிந்து சகோதரனின் வீட்டிலேயே வாழ்ந்து, சிறுவனான கிருஷ்ணனை வளர்த்தவள். இருந்தும் அவனுடன் இறையன்பின் இன்பக் கூடலைக் கூடிக் களிப்பவளாய் இருப்பவள்.

10-ம் நூற்றாண்டில் ‘சோமதேவஸூரி’ என்பவரால் இயற்றப்பட்ட ‘யசஸ்திலக சம்பூ’ என்ற வடமொழி நூலே, ராதா எனும் பெயர் கொண்ட கோபிகையை அறிமுகப்படுத்துகிறது. அதிலுள்ள ஒரு கதையில் யசோதரன் எனும் மன்னனை மணக்கும் அம்ருதவதி என்பவளுக்குத் திருமண வாழ்க்கையில் திருப்தி கிடைக்கவில்லை. அவள் வேறு ஒருவரோடு திருமணத்துக்குப் புறம்பான உறவைக் கொண்டிருந்ததை அறிந்த மன்னன், அவளை விசாரிக்கும் போது அவள், ‘சிவனுடன் கங்கை,

கிருஷ்ணனுடன் ராதை, சந்திரனுடன் பிரகஸ்பதியின் மனைவி தாரா, வாலியுடன் சுக்கிரீவனின் மனைவி தாரா கொண்டிருந்த முறைகேடான உறவையெல்லாம்' விமர்சிக்கிறாள். தம் மனைவியிடமே இன்பம் கிடைக்குமானால் லக்ஷ்மி தேவியின் கணவர் திருமால், கோகுலத்து இடையர் குலப் பெண்ணான ராதையுடன் ஏன் உறவை நாடவேண்டும்' என வாதிக்கிறாள்.

11-ம் நூற்றாண்டில் ஹம்ஸ மரபைச் சேர்ந்த 'நிம்பார்க்கர்' 'யுகள உபாஸனா' என்ற இரட்டையர் வழிபாட்டில் கிருஷ்ணரையும் ராதையையும் இணைத்து ராதைக்கு இறைவி அந்தஸ்த்தை அளிக்கிறார். ராதா - கிருஷ்ண காதலை முதலில் காவியமாக்கியவர் 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஜயதேவர்'. அவரால் இயற்றப்பட்ட 'கீத கோவிந்தம்' முற்றிலும் ராதா-




கிருஷ்ண காதலையும் களிப்பையும் வர்ணிப்பது. இதில் வரும் 'மேககர் மதுரம்' எனும் பகுதியில் 'அடர்ந்த மேகங்களினால் வானம் நிறைந்துள்ளது. தமால மரங்கள் நிறைந்த இந்தக் காட்டுப் பகுதி முழுவதும் கறுத்துக் காணப்படுகின்றன. இந்தச் சிறுவன் கிருஷ்ணன் கடும் இருட்டின் தாக்கத்தால் பயந்திருக்கிறான். 'ராதா! இவனைப் பத்திரமாக வீட்டுக்கு அழைத்துப்போ'வென்று? யாதவனான நந்தன் கட்டளையிடவே, அவளும் அவ்வாறே கிருஷ்ணனோடு நடக்கையில், யமுனை நதிக்கரையில் கொடிப் பந்தர்களின் கீழே, இருவரும் தம் இன்ப லீலைகளைத் தொடங்கினர்' என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ராதை நந்தகோபனின் உறவினர் மற்றும் கிருஷ்ணனைவிட வயதில் மூத்தவள் என்பதும் புலப்படுகிறது என்பார் பி.எம். சுந்தரம். ராதா-கிருஸ்ண உறவை முன்னிலைப்படுத்திப் பரவலாக்கியவராக 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த 'சைதன்ய மஹாப்பு' அறியப்படுகிறார்.

தெலுங்கு மொழியில் ராதா என்றொரு பாத்திரத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் தெலங்கு மஹாகவியான ஸ்ரீநாதர் (1370-1440). இவருடைய 'பீமேஸ்வர புராணம்' எனும் காவியத்தில் ராதையை அறிமுகப்படுத்துகிறார். ஸ்ரீமத் பாகவதத்திலோ, ஆழ்வார்கள் திவ்விய பிரபந்தத்திலோ ராதை இடம் பெறாத போதிலும் தனக்கு முன் இறையன்பின் இன்பக்கூடல் பற்றிய காவிய மரபைத் தான் எடுத்துக்கொண்ட பொருளில் திறமையாகக் கைவசமாக்கி முழுமையாக்கியுள்ளார் முத்துப் பழனி.

ராதிகா எனப்படுகின்ற ராதா மதன கலைகளில் தேர்ந்தவள். பெண்களின் மனங்களை ஆள்பவனும், அரசர்க்கெல்லாம் அரசனும், வரங்கள் நல்குபவனும், மூவுலகுக்கும் சக்கரவர்த்தியான இளம் கிருஷ்ணனின் / கண்ணனின் தந்தையான நந்த கோபரின் சகோதரி. ஆகையினால் அவள் கிருஷ்ணரின் அத்தை. குழந்தைப் பருவத்திலிருந்தே கண்ணனுக்கு நெருக்கமாகவும், அவனைத் தன் கட்டுப்பாட்டிலும் வைத்திருந்தவள். கண்ணனோடு இறையன்பின் இன்பக்கூடலில் கூடிக் களித்துக் காமனின் பாடங்களில் கரைகண்டவள். இவளோ கண்ணனின் மாமன் மகள். யாசோதரையின் சகோதரரின் மகள். ராதிகாவே அவளையும் வளர்த்தவள். இளா பருவமடைந்ததும் கண்ணனுக்கு இளாவை மணம்முடித்து வைக்கும் ராதிகா, இளையவளும் மன்மத லீலைக்குப் புதியவளுமான இளாவிடம் பக்குவமாக நடக்கச் சொல்லி கண்ணனுக்குப் புத்திமதி சொல்லி இல்வாழ்க்கையைத் தொடங்க அனுப்பி வைக்கிறாள். ஆயினும் கண்ணன் தன்னைவிட்டுப் பிரிந்ததால் ஏங்குகிறாள். பேரழகும் பெருங்கலையிலும் திளைத்தெழுந்த அவள், ஓர் இளம் பெண்ணிடம் தன் காதலனை இழந்த துயர் தாங்காது வேதனையும் ஆற்றாமையும் அடைகிறாள். அவ்விளையவள் மீது பொறாமையும் கோபமும் கொள்கிறாள்.

ராதிகாவும் கண்ணனும் களிக்கும் இன்பங்களைக் காணவும் கேட்கவும் வாய்ப்புக் கொண்டிருந்த இளா தன் புதிய கணவரை மகிழ்விக்கப் பிழையில்லாக் கடுங்காதலுடனும், தணியாத பற்றுடனும் எல்லாத் தந்திரங்களையும் கையாண்டாள். இன்பத்தின் அரசியான அத்தாமரைக் கண்ணியிடம் ராதாவைவிட்டு எப்போதும் விலகுவதாக நந்தகுமாரன் வாக்களித்தான்.

ஆயினும் அனைத்து யோகங்களுக்கும் வழிமுறையாகவும், தியான சித்திபெற்று அதில் அமிழ்ந்திருப்பவனாயும் இருப்பவனாகிய தெய்வத்திரு பாலகோபாலன், நிலையற்ற ஆண்கள் போல் தன் சத்தியத்தை மறந்து, ராதாவிடம் பெற்ற இன்பத்தின் நினைவால் எழுந்த மோகத்தால் ராதையின் இருப்பிடம் சென்றடைகிறான். அங்கு புறக்கணிப்பின் சினத்திலும் தன் மீது கோபத்திலும் இருக்கும் ராதிகாவைச் சமாதானப்படுத்தி, அவளுடன் இன்பம் துய்ப்பதைக் கூறும் காவியமே 'ராதிகா ஸாந்த்வனமு'. அத்தியந்த அன்பின், பக்தியின் சாரத்தில் நின்றுகொண்டே கண்ணன் - இளா - ராதிகா ஆகியோரின் காதலையும் காமக் களிப்பையும் சாமர்த்தியமான சொல்லாடல்களின் வழியே சலிக்காமல் எழுதியிருக்கிறார்.

சிருங்காரக் காவியமாகப் பாடப்பட்டாலும் 'ராதிகா ஸாந்தவனமு' முத்துப்பழனியின் சொந்த வாழ்வின் கதையிலிருந்து முகிழ்த்ததாகக் கூறப்படுகிறது. தஞ்சை நாயகிக்குப் பிறகு போகபத்தினியாகிய முத்துபழனியின் கலையிலும் காதலி

லும் திளைத்து, அறிவாற்றல் மிக்க அவளுடைய அன்பிலும் கட்டுண்டு கிடந்த பிரதாப சிம்மர், சில காலம் செல்ல ஒருகட்டத்தில் தஞ்சை நாயகியின் பக்கமே மீண்டும் தன் ஆர்வத்தைத் திருப்பியிருக்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்து போவதைக் கண்ட முத்துபழனிக்கு, தஞ்சை நாயகிமீது கசப்பும் பொறாமையும் ஏற்படுகிறது. நேசிப்பவர் பிரிந்த ஆற்றாமை, துயர், இளமை உணர்ச்சிகளை இணைத்து இளாவாகத் தன்னையும் ராதிகாவாகத் தஞ்சை நாயகியையும் உருவகப்படுத்தியே ராதிகா சாந்தவனத்தைப் முத்துப்பழனி எழுதியதாகவும் கருதப்படுகிறது.

‘உடல் சார்ந்து ஒரு பெண்ணுக்கு ஏற்படும் மனக்குறைவும் பொறாமையும் சிக்கலுக்குரியவை. தன்னைவிட அழகாகவும் பூரிப்பாகவும் இருக்கும் ஒரு பெண்ணை, இன்னொரு பெண் பார்த்து அங்கலாய்க்கும் உணர்வுகளை முத்துபழனியே முதன்முதலில் பட்டவர்த்தனப்படுத்தியிருக்கிறார். ஒரு பெண்ணே தன்னுடல் குறித்து ஏற்படுத்திக்கொள்ளும் பார்வைகளை, சமூக மதிப்பீடுகளை மீறியும் முன்வைக்க முத்துப்பழனியால் முடிந்திருக்கிறது. பெண்ணே பெண்ணின் உணர்வுகளை எழுதும்போதுதான் உள்ளார்ந்த வெளிப்பாடுகளைப் பெறமுடியும். ஆண், பெண் போலவும்; பெண், ஆண் போலவும் சிந்திக்கத் தடையில்லை எனலாமே தவிர, உண்மையில் அது சாத்தியமில்லை என்பதையே முத்துப்பழனியைப் படிப்பவர் உணர்ந்து கொள்ளலாம். ராதிகா சாந்தவனத்தின் முழுமையிலும் முத்துப்பழனியே தென்பட்டாலும் அவர், தன்னை இளாவாகப் பாவித்துக்கொள்கிறாரா, ராதிகாவாகக் காட்டிக்கொள்கிறாரா எனப் புரிந்துகொள்ள இயலவில்லை. இரண்டு பெண்களையும் ஒரே தளத்திலும் தன்மையிலும் வைத்தே விவரிக்கிறார்.’

ராஜதாசியான முத்துப்பழனி, தாசிகள் பற்றியும் அவர்களின் கடமையும் தொழிலுடனும் இணைந்த திருமணத்திற்குப் புறம்பான உறவு பற்றியும் சமூகம் வைத்திருந்த மதிப்பீடுகளை உடைத்துக் கேள்விக்குள்ளாகின்ற கருத்துகளைத் துணிச்சலுடன் தன் காவியத்தில் படைத்திருக்கின்றார். அதையும் ‘மயிற்பீலி தரித்தவனும், பிரம்மன், சிவன், ஞானியரான முனிவர்களால் துதிக்கப்படுபவனும், பல அவதாரங்கள் எடுப்பவனும், தீயோரை வதைப்பவனாயும் பாண்டவரைக் காத்த இறைவனான கண்ணனின்’ வாயால் அதைச் சொல்ல வைத்தார்.

ராதிகாவை எண்ணிக் கிருஷ்ணர் அவளிடம் செல்ல முற்படும் வேளை, இளாவின் சகோதரன் ஸ்ரீதாமன் ராதிகா-கிருஷ்ணர் உறவு பற்றி விமர்சித்தபோது யாதவர் தலைவரான கிருஷ்ணர் பின்வருமாறு பதிலளிக்கிறார் ‘காம சாத்திர அறிவு, காம லீலைகளில் பயிற்சி, முன் விளையாட்டுகளில் திறமை எல்லாம், காதற்கலையில் பெருந்தேர்ச்சியுடைவர்களுக்குத்தான் தெரியும்; சாதாரண இடையர்களுக்கன்று; ஆநிரை மேய்ப்பதைத் தவிர, வேறொன்றும் அறியாதவன் நீ, உறவுமுறை பற்றிப் பேசுகிறாய்.

பிரம்மன், தன்னால் படைக்கப்பட்ட தன் மகளையே மணந்தவன், அவன் நடத்தை கெட்டவனாகக் கருதப்படுகிறானா? சந்திரன், தன் குருவின் மனைவியான தாராவை அபகரித்தான்; அவன் ஊழல் செய்தவனாகக் கருதப்பட்டானா? தன் நண்பனின் மனைவியோடு உறவுகொண்டான் சூரியன்; அவன் ஒழுக்கக் கேடானவனாய் கருதப்பட்டானா? சமுத்திரத்தின் அரசன், தன் பேத்தியான கங்கையைக் கூடினானே, கீழ்த்தரமானவனாக அவன் கருதப்பட்டானா? தன் மைத்துனியோடு களியாட்டம் புரிந்தானே வியாசன், அவனுடைய புனிதத் தன்மையை இழக்கச் செய்தார்களா? நீ சொல்கிறாய், இது அனுமதிக்கப்படாததவொரு உறவென்று; அறிவுரையாக நீ விவரிக்கும் அவர்கள் யாவரும் ஒழுக்கக்கேடானவர்களா?

பூதேவி, திருமாலின் அத்தையல்லவா? கங்கை, சிவனின் அத்தையல்லவா? அகலிகை, இந்திரனின் அத்தையல்லவா? அவர்கள் எவ்வாறு உறவு கொண்டிருந்தார்கள்? உண்மையில், உன்னைவிட அவர்களுக்கு அதிகமாகவே தெரியும்’

காமத்தை ஒரு பெண் எழுதினால், அவள் சமூக மதிப்பீட்டில் என்னவாகப் பார்க்கப்படுவாள் என்ற யோசனையே இல்லாமல் எழுதிச்செல்லத் தனக்கிருந்த வாய்ப்பை முத்துப்பழனி நன்கு பயன்படுத்தி, பூடகமோ பூச்சுகளோ இல்லாமல் பெண்களின் பாலியல் தேவைகள் குறித்தும் அவை திருப்திப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுதந்திரமாக ஒப்புக்கொண்டு சமூக விதிமுறைக்குச் சவால் விடுக்கும் பிரதியை எழுதினார். அவரைப் போலவே, அவரது கதாநாயகிகளான இளாவும் ராதாவும் வியக்க வைக்கும் பெண்களாக உள்ளனர்.

முத்துப்பழனியை இந்தியாவின் பெண்ணிய இயக்கத்தின் முன்னோடி என்று அழைக்க முடியாது என்ற விமர்சனத்தை ஏற்க முடிகின்ற போதிலும், சுயமரியாதை குறித்து அவரது அழுத்தமான கருத்துகள் அவருக்கான இடத்தைக் கோரியே நிற்கின்றன. ‘சுயமரியாதை என்பதொரு பொக்கிஷம்; பெருமைக்குரிய பெண்களுக்குச் சுயமதிப்பென்பது ஒரு ஆபரணம்; தாமரைக் கண்ணா! ஒருமுறை அது போய்விட்டால், பின் ஏன் உயிர் வாழ வேண்டும்?’ எனக் கண்ணனிடமே அவர் சுயமரியாதையை முன்னிறுத்துகின்றார். மேலும், மன்னிப்புக் கோரிய மாதவனை மன்னித்து சமாதானமாகின்ற போதும் ‘உன் தவறை ஒத்துக்கொண்டாய்; எனக்கு அது போதும் என்பதைவிட மேலானது; சுயமரியாதையைக் காட்டிலும் முக்கியமானது வேறொன்றுமில்லை’ என அவர் அழுத்தமாக வலியுறுத்துகின்றவைகள், பெண்ணிய சிந்தனைகளின் அடிநாதத்தைக் கொண்டிருப்பதை மறுதலிக்க முடியாதது.

‘கீதகோவிந்தத்தில் ராதாவின் பாதங்களைக் குனிந்து தொடும் பகுதி ஒன்றுண்டு. அப்பகுதியை எழுதும்போது ஜெயதேவரின் கைகள் நடுங்கினவாம். லோகமே கடவுளாக வழிபடும் ஒருவர், பெண்ணின் காலைத் தொட்டு வணங்குவதாக யோசித்துவிட்டோமே எனப் பதறிய ஜெயதேவர், எழுதியவற்றை அப்படியே வைத்துவிட்டு கங்கையில் குளிக்கப் போனாராம். போனவர் முங்கியெழுந்துவந்து பார்த்தால் எழுதப்படவேண்டிய வரிகள் கண்ணனால் எழுதப்பட்டிருந்ததாம். கண்ணனே வந்து எழுதியதாகச் சொல்லப்படும் அப்பகுதி, பெண்ணுக்குக் கண்ணன் அளித்த இடத்தையும் இதயத்தையும் காட்டுவதாக ஆன்மீகப் பெரியவர்கள் பிரசங்கம் செய்வர்.

முத்துப்பழனி, ராதிகாவைச் சாந்தப்படுத்த, ‘வணங்கி, ஒலியெழுப்பும் வண்டுகளின் கூட்டத்தைப் போல, அவளது தாமரைத் தாள்களில் விழுகின்ற’ கண்ணனை ‘இடது காலைத் தூக்கி உதைத்து தள்ளுவதாக’ எழுதினார். அவளோ கோபத்தில் கண்ணனின் தலையை ஓங்கி உதைக்கிறாள். ராதையின்

காலைத் தொடுவதாக எண்ணியதே பாவமென்று ஜெயதேவர் பயந்தது ஒருபுறமிருக்க, ராதிகா காலால் கண்ணனின் தலையில் உதைவிடுகிறாள் என்று முத்துப்பழனி யோசித்திருக்கிறார். புனிதங்களைக் கட்டுடைத்தல், புதிய பொருளையும் சிந்தனையையும் முன்வைத்தல் என்பதாக முத்துபழனியின் எழுத்துகளைக் கருதுகின்ற அதேவேளை கடவுளைக் காலால் உதைக்குமளவுக்கு அரசவைக் கணிகைகளின் செல்வாக்கையும் அறிய வைப்பதாகக் கொள்ளமுடியும்.

ராதிகா ஸாந்தவனமு தெலுங்கு இலக்கியத்தின் ரத்தினமாகக் கருதப்பட்டாலும், ஆந்திரப் பிரதேசத்திற்கு வெளியே அது அங்கீகாரம் பெறவில்லை. ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு இலக்கிய வரலாற்றில் முத்துபழனியைச் சரியான இடத்திற்கு மீட்டெடுத்த பெருமை முத்துப்பழனிக்குச் சமமான திறமை



கொண்ட தேவதாசிப் பெண்ணின் உறுதியான இடைவிடாத முயற்சிகள் இல்லாமல் இருந்திருந்தால், அவரது படைப்பு மலினப்படுத்தப்பட்டு மறைக்கப்பட்டிருக்கும் அல்லது முற்றிலும் மறைந்திருக்கும்.

முத்துப்பழனியிடமிருந்த தஞ்சை மராட்டிய அரசவைச் சேகரங்களில் ஒன்றான தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் சேகரிப்பில் ராதிகா ஸாந்தவனமு சுவடிகள் இருந்ததாகப் பொ. வேல்சாமி ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். ஆயினும் அது அங்கிருந்து நவீன உலகின் பார்வைக்கு வரவில்லை. தெலுங்கு - ஆங்கில அகராதியைத் தொகுத்த சார்லஸ் பிளிப் ப்ரவுன் என்ற ஆங்கிலேயர் முத்துப்பழனியின் காப்பியச் சுவடிகளைச் சேகரித்து வைத்திருந்தார். அவர் 1855-ல் இந்தியாவை விட்டுத் தன் நாட்டுக்குத் திரும்பும் போது அச்சுவடிகளைத் தெலுங்கு - ஆங்கில அகராதிப்பணி உட்படத் தனது பணிகளில் உதவியாளராக இருந்த தெலுங்குப் பண்டிதர் வெங்கட நரஸ் - என்பவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அக்காவியத்தை அச்சிட்டு வெளியிட ஆர்வங்கொண்ட வெங்கட நரஸ் நூலில் சிற்றின்பம் பற்றிய பல பாடல்கள் இருப்பதால் அவற்றையும், நூலாசிரியர் பற்றியும் அவரின் முன்னோர்கள் பற்றிய தகவல் அடங்கிய 'பீடிகை' எனப்படும் தொடக்கவுரைப் பகுதியையும் நீக்கிவிட்டு 1887-ல் அச்சில் பதிப்பித்தார். ஆனால் கண்டுகொள்ளப்படவில்லை. அடுத்து, 1889-ம் ஆண்டில் திருக்கடையூர் கிருஷ்ணராவ் என்பவர் இந்நூலை, நல்லம்பாக்கம் ராகவுலு நாயுடுவின் ஸ்ரீதாம அச்சுக்கூடத்தின் மூலமாக வெளியிட்டார். அப்போதும் இந்நூலுக்குப் பொது மக்களின் வரவேற்புக் கிடைக்கவில்லை. 1907-ல் மீண்டும் வெங்கட நரஸ்-ஆல் வெளியிடப்பட்டதாக 'தேவதாசியும் மகானும்' நூலில் வெ. ஸ்ரீராம் குறிப்பிடுகிறார். அப்போதும் இந்நூல் பெரிதாக அறியப்படவில்லை.

ஆனால், அப்போது செல்வமும் புகழும் இசைத் திறமையும் கொண்டு 146 நகரங்களில் 1235 கச்சேரிகள் செய்த, மிகவும் படித்த, பண்டிதையான தாராள மனம் படைத்த தேவதாசியான 'வித்யாசுந்தரி பெங்களூர் நாகரத்தினம்மா' இந்நூலைப் படித்து, அதைச் செம்மையாகப் பதிப்பித்தபோதுதான் இந்நூல் பிரபல்யம் பெற்றதாக மாறியது. தன் வாழ்நாளில் தேவதாசிகளைத் தன் ஆராதனைகளிலும் ஏனைய விடயங்களிலும் தள்ளியே வைத்த சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகப்பிரமம் தியாகராஜரின் மண்மூடிக் கிடந்த சமாதியைத் தேடிக் கண்டுபிடித்து, திருவையாற்றில் கோயில் கட்டி ஆண்டுதோறும் அவருக்குத் திருவையாறு ஆராதனை நடக்கக் காரணமானவர் பெங்களூர் நாகரத்தினம்மா.

தியாகராஜரை ஆகப்பெரும் நாதக் கடவுளாக நிறுவ உடல், பொருள், ஆவி அத்தனையையும் அளித்து அவருக்கு இசைக் கோயில் எழுப்பி, 1925-ல் கும்பாபிஷேகம் நடத்த நாகரத்தினம்மா பட்டபாடுகள் கொஞ்சமல்ல. அதற்காகச் 'சொந்த வீட்டையும் பாடிச் சம்பாதித்த பொன், பொருள் எனச் சகலதையும் செலவழித்திருக்கிறார். வருமான வரியை அதிகமாகக் கட்டிய முதல்பெண் என்றறியப்பட்டிருந்த அவர், தியாகராஜ பிரேமையால் வாடகை வீட்டுக்கும் வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

பிராமணர்கள், அவரை நீதிமன்றம்வரை அலைக்கழித்து அவமானப்படுத்தினார்கள். தியாகராஜரைப் பிராமணக் குடுவையில் அடைத்து, எப்படியாவது தங்களையும் தங்கள் லௌகீகத்தையும் காப்பாற்றிக்கொள்ள முனைந்த அவர்கள், நாகரத்தினம்மாவை நாக்கூசும் சொற்களால் கேவலப்படுத்தினார்கள். தேவதாசி குலத்தில் பிறந்த ஒருத்தி, தியாகராஜரைத் தெய்வப் புருஷராக்க மேற்கொண்ட முயற்சிகளை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எல்லாத் தடுப்புகளையும் மீறியே தம்முள் எழும்பிநின்ற தியாகேச பக்தியை நாகரத்தினம்மா நிரூபித்து, மார்கழி தியாகேச உற்சவத்தை நிலைநிறுத்தினார். இது பற்றித் 'தேவதாசியும் மகானும்' என்ற சிறப்பான ஆய்வு நூலை வெ. ஸ்ரீராம் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

அவரே முத்துப்பழனியின் ராதிகா ஸாந்தவனத்தையும் மீட்டெடுக்கக் காரணமானவராக இருந்தார். கன்னடம், தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் எனப் பன்மொழி அறிவுகொண்ட நாகரத்தினம்மா அம்மொழிகளின் இலக்கியங்களை நன்கு சுவைத்தறிபவராக இருந்தார். தன் தாய் மொழியல்லாத தமிழில் 'பஞ்சகீரண பௌதீகம்' என்ற தத்துவ நூலை எழுதிய அவர்,

தெலுங்கில் ‘மத்யா பானம்’ என்ற நூலையும், சமஸ்கிருதத்தில் ‘ஸ்ரீ தியாகராஜ அஷ்டோத்திர நாமாவளி’-யையும் வெளியிட்டவர்.

திருப்பதி வெங்கடேசுவரக் கவி எழுதிய ‘பாணிக்ருஹீத’ (கைத்தலம் பற்றல்) என்ற நூலிருந்து முத்துப்பழனியின் ராதிகா ஸாந்தவனமு பற்றி அறிந்துகொண்ட நாகரத்தினம்மாள்




பெருமகிழ்ச்சியோடு அச்சில் வந்திருந்த ராதிகா ஸாந்தவனமுவை வாசிக்கிறார். அதில் பிழைகள் மலிந்து காணப்படுகின்றதை அவதானிக்கிறார். இக்காப்பியத்தின் நல்ல பிரதியை வாசிக்க ஆசைகொண்ட அவர் தேடித் தனது நண்பர் ஒருவர் மூலம் உரையோடு கூடிய கையெழுத்துப் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார். அதனோடு அச்சுப் பிரதியை ஒப்பு நோக்கிப் பார்த்ததில் அச்சுப்பிரதியில் பல நீக்கங்கள் இருப்பதை அறிந்து கொள்கிறார். அதில் முக்கியமானதாக நூலசிரியர் ஒரு தேவதாசி யார்? என்பது பற்றியும் அவரது குலமுன்னோர்கள் பற்றியும் எழுதப்பட்டிருந்த பீடிகை நீக்கப்பட்டிருந்தது.

தவிரவும் செல்வாக்கு மிக்க சீர்திருத்தவாதியான கந்துகூரி விரேசலிங்கம் பந்துலு, தமது ‘தெலுங்குக் கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பில் முத்துப்பழனி பற்றி பிழையான தகவலைத் தந்திருப்பதையும் முத்துப்பழனியை ‘இதி’ (இது), ‘தானி’ (இதற்கு) என்று மரியாதைக் குறைவான சொற்களால் விளிப்பதையும், ‘நடத்தைகெட்ட விலைமாதுவால் எழுதப்பட்ட விரசம் தொனிக்கும்’ நூலென இழித்துரைப்பதையும் கண்டு விசனமடைகிறார். அதை எதிர்கொள்ள தாமே ராதிகா ஸாந்தவனமு காப்பியத்தின் செம்மையான புதிய பதிப்பை வெளியிடத் தீர்மானித்தார். புகழ்பெற்ற ‘வாவிள்ள ராமஸ்வாமிசாஸ்த்ருலு அன் சன்ஸ் பதிப்பகத்தின் வழியாக அதனை வெளியிடுகிறார்.

அந்தச் செம்மையாக்கப்பட்ட பதிப்பில் அதைப் பிரசுரிக்க நேர்ந்த காரணங்களையும் அவசியத்தையும் விவரித்து ஒரு முன்னுரையையும் எழுதினார். அதில் விரேசலிங்கத்தின் கருத்துகளுக்கு உறுதியான மறுப்புகளைத் தெரிவித்தார். முத்துப்பழனி ஒரு தேவதாசி என்பதை அதில் குறிப்பிட்ட அவர் விரேசலிங்கம் பந்தலு, ராதிகா ஸாந்தவனமுவை முழுதாகப் படிக்காமலேயே கருத்துகளை வெளியிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். மேலும் ‘தேவதாசியாகப் பிறந்தமையாலேயே ஒருவர் நடத்தை கெட்டவர் என்று கூறுவதை மறுத்தார். ஆண்கள் எழுதிய காவியங்களான ‘தாரா சசாங்க விஜயமு, ஹம்ச விம்சதி, வைஜயந்தி விலாஸம்’ போன்றவற்றில் உள்ளதைவிடவா இந்நூலில் விரசமான செய்திகள் உள்ளன’ என வினவினார். அத்துடன் ‘வெட்கம் என்பது பெண்களுக்கு மட்டுந்தானா? அது ஆண்களுக்கு இல்லையா? இந்தக் கவியரசி ஒரு தாசியாகையால் வெட்கைத்தையொழித்து ஆண்-பெண் கூடலைப் பற்றிய வர்ணனைகளைப் பச்சையாக எழுதினார் என்றால் நன்னடத்தை உள்ளோரெனக் கருதப்படும் ஆண்கள் இவ்வாறு எழுதவில்லையா? இந்த மகானுபவர்கள் மட்டும் தத்தமது நூல்களில் இதைவிட அதிகமாகப் பச்சையாக வர்ணனை விவரிக்கவில்லையா?’ என்றும் கேள்வி எழுப்பினார். வீரேசலிங்கம் பந்துலுவே சரிபார்த்து, பதிப்பித்த ‘வைஜந்தி விலாசத்தில்’ காமலீலைகள் பச்சையாக விவரிக்கப்பட்டுள்ளதையும், அவரிடம் செல்வாக்கு இருந்தமையால் அவரே எழுதிய ‘ரஸிக ஜன மனோரஞ்ஜனம்’ எனும் நூலை, மதராஸ் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்துள்ளார்’ என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஒரு தேவதாசிப் பெண் எழுதியதாலே இது ஒரு நல்ல நூல் அல்லதாகிவிடாது. நல்ல கையெழுத்துப்பிரதி கிடைத்துச் செம்மையாக்கப்பட்டு, பல அரிய நூல்களைப் பதிப்பிக்கின்ற புகழ்பெற்ற வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு & சன்ஸ் வெளியிடுகின்ற நூல் இது. இதை எழுதியவரும் சரியாகத் தேடியெடுத்துப் பிரதியைச் செம்மையாக்கிப் பதிப்பிப்பவரும் பெண் என்பதால் பெண்களிடம் மதிப்புக் கொண்டவர்கள் இந் நூலை ஆதரிக்க வேண்டுகோள் விடுத்து முன்னுரை முடித்த போது; இப்பதிப்பு தெலுங்கு மற்றும் சமஸ்கிருதப் பண்டிதர் கூட்டத்தையும் சென்னை மாகாண அரசாங்கத்தையும் வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு & சன்ஸ் பதிப்பகத்தையும் உலுக்கி, ஒரு பெரிய விவாதத்தை உருவாக்கும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை.

புத்தகம் வெளிவந்தவுடன் 1911-ல் சசிலேகா பத்திரிகை இக்காவியம் பற்றி *‘இதுபோன்ற கீழ்த்தரமான கொச்சையான வர்ணனைகள் கொண்ட மட்டரகப் புத்தகங்கள் வெளிவருவது கண்டனத்திற்கும் வருத்தத்திற்கும் உரியது’* என மிகவும் காட்டமாக எழுதியதுடன் *‘ஒரு விலைமாதுவால் எழுதப்பட்டு மற்றொரு விலைமாதுவால் பதிப்பிக்கப்பட்டது’* என வசைக் கருத்துகளை வெளியிட்டது. அத்துடன் *‘சட்டத்தைப் பற்றிய*

*பயமில்லாமல் வெளியிடப்பட்டுள்ள இந்நூலுக்கு அதன் மட்ட ரக வர்ணனைகளால் வரும் வரவேற்பால், இதன் பதிப்பாசிரியரும் வெளியீட்டாளர்களும் படங்களுடன் கூடிய புத்தகத்தைப் பதிப்பிக்க உந்தப்படுவார்கள், அதனால் ஏற்படும் தீமை கற்பனை செய்ய முடியாது'* என்று எழுதியது. அத்துடன் அரசு இதைக் கண்டுங்காணாமல் இருந்துவிடக்கூடாது எனவும் தொடர்ந்து வலியுறுத்தியது.

இதனால் புத்தகத்தின் பிரதி அரசாங்கத் தெலுங்கு மொழி பெயர்ப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அன்று அந்தப் பதவியில் இருந்த கோடட்டி கனராஜ பந்துலு என்பவர் கந்து கூரி விரேசலிங்கத்தின் ஆதரவாளராக இருந்தார். எனவே அவர் புத்தகம் பற்றி எதிர்மறையான விமர்சனங்களை அரசுக்குத் தெரிவித்ததுடன் பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் இருவர் மீதும் இந்திய பீனல் கோர்ட் 292-வது பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும் பரிந்துரை செய்தார்.

அரசு நடவடிக்கையை மேற்கொண்டது டெப்புடி கமிசனர் தலைமையில் பதிப்பகங்களுக்குச் சென்ற காவல் குழு, ராதிகா ஸாந்தவனமுவையும் அதுபோன்ற பொதுமக்களின் நன்னடத்தைக்கு ஊறு விளைவிக்கும், மேலும் 18 புத்தகங்களையும் கைப்பற்றியது. சில தமிழ்ப் புத்தகங்களும் அதில் உள்ளடக்கம். கந்துகூரி விரேசலிங்கம் எழுதிய 'ரசிக ஜன மனோரஞ்ஜனம்' நூலும் பாலுறவு பற்றிய வர்ணனைகள் அடங்கிய அந்த நூல்களில் ஒன்றாக இருந்ததுதான். ஆயினும் நூலின் பெயரை மட்டும் குறிப்பிட்டுவிட்டு ஆசிரியரின் பெயரையும் வெளியீட்டாளர் விபரங்களையும் தவிர்த்து விட்டிருந்தார்கள். கோபாலகிருஷ்ண பாரதியின் 'நந்தன் சரித்திரம்' நாடகப் பிரதியும் அந்தப் பறிமுதல் செய்யப்பட்ட நூல்களின் பட்டியலில் இருந்தது.


பட்டியல் மறுபரிசீலனை செய்யப்பட்டு 9 நூல்கள் மட்டும் விரசமானவை எனக் குற்றம் சுமத்தப்பட்டது. விரேசலிங்கத்தின் நூல் இரண்டாம் பட்டியலில் இடம்பெறாத போதிலும் அவர் பதிப்பித்த 'வைஜயந்தி விலாஸமு' விரச நூற் பட்டியலில் இடம்பிடித்திருந்தது. குற்றம் சுமத்தப்பட்டவை அனைத்தும் தெலுங்கு மொழி நூல்கள் என்பதுடன் அவை அனைத்தும் வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு & சன்ஸ் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டவை. நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. பதிப்பகத்தாரோ அந்நூல்கள் புதிய நூல்கள் அல்லவென்றும் நடப்புச்சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட பழங்காவியங்கள் என்றும் தமது நியாயத்தை முன்வைத்தார்கள். இதைத் தொடர்ந்து தெலுங்கு இலக்கிய உலகில் பலத்த விவாதங்கள் எழுந்தன. இறுதியில் குற்றஞ்சாட்டப்பட்ட 9 நூல்களில் 8 நூல்கள் தணிக்கையுடன் பிரசுரிக்க அனுமதி வழங்கப்பட்டது. ராதிகா ஸாந்தவனமுவை விட அதிகளவில் பாலுறவு வர்ணனைகள் கொண்ட 'தாரா சசாங்க விஜயம்'-உம், 'ஹம்ஸ விம்சதி'-யும் விடுவிக்கப்பட்டு இறுதியாக 'ராதிகா ஸாந்தவனமு' மட்டும் தடைசெய்யப்பட்டது. அதன் அச்சிடப்பட்ட நூற்பிரதிகள் பறிமுதல் செய்யப்பட்டு விற்பனையிலிருந்து மறைந்தன. ஒரு தேவதாசிப் பெண்ணால் எழுதப்பட்ட சிருங்கார காவியம், சமூகத்தின் செல்வாக்கு மிக்க கந்தூரி விரேசலிங்கத்தை எதிர்த்து மற்றொரு தேவதாசியால் பதிப்பிக்கப்பட்டது என்பது இதில் பாரபட்சம் நிலவியதற்கு காரணமாகியது. ஆயினும் இப்புத்தக வெளியீடு பற்றிய சர்ச்சைகளால் பொதுமக்களின் மனதில் நாகரத்தினம்மாவின் அந்தஸ்த்து உயர்ந்தது. ஒரு நல்ல பாடகியாக மட்டுமல்லாமல் கவனத்துக்குரிய பண்டிதையாகவும் தைரியசாலியாகவும் இப்போது அவர் பார்க்கப்பட்டார். அவரது நண்பர்கள் வட்டாரத்தில் கவிஞர்கள் மற்றும் பண்டிதர்கள் அதிகரித்ததுடன், கவியரங்கங்களிலும் பண்டிதர் அவைகளிலும் அவருக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது.

1954-ல் அப்போதைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சரான தங்குதூரி பிரகாசத்தின் குறுகிய ஆட்சிகாலத்திற்குள் 'ராதிகா ஸாந்தவனமு' மீதான தடை நீக்கப்பட்டது. தெலுங்கு இலக்கிய மாலையில் மறுபடியும் ஒரு இரத்தினம் சேர்க்கப்பட்டது. 1972-ல் Madras: EMESCO Books ராதிகா ஸாந்தவனமுவை வெளியிட்டது. 2011-ல் புதுடெல்லி பெங்குயின் பதிப்பகம் சந்தியா மூல்சந்தினியை மொழிபெயர்ப்பாளராகக் கொண்டு The Appeasement of Radhika என்ற தலைப்பில் ராதிகா ஸாந்தவனமுவின் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்டது.

The Appeasement of Radhika ஆங்கில நூலின் வழி முனைவர் தி. உமாதேவி அவர்களால் 'ராதிகா சாந்தவனம்' எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 'காவ்யா' பதிப்பகத்தால் 2019-ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை வாசித்து விட்டு கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான யுகபாரதி அவர்கள் எழுதியுள்ள 'நாகரத்தினமும் முத்துப்பழனியும்' என்ற கட்டுரை ராதிகா ஸாந்தவனமு பற்றித் தமிழில் வெளிவந்துள்ள சுவையும் ஆழமும் நிறைந்த, இந்நூல் தொடர்பில் அவசியம் வாசிக்க வேண்டிய சிறந்த கட்டுரையாகும்.

2022-ம் ஆண்டு தெலுங்கு மூலத்திலிருந்து இசையியல் அறிஞர் பி.எம். சுந்தரம் அவர்களால் தமிழில் 'ராதிகா சாந்தமானாள்' என்ற பெயரில் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டு 'அகநி' பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. 1889-ல் திருக்கடையூர் கிருஷ்ணராவ் அவர்களால் நல்லம்பாக்கம் ராகவுலு நாயக்கரின் ஸ்ரீதாம அச்சகத்தால் வெளியிடப்பட்ட தெலுங்குப் பிரதியை அடியொற்றியது இத்தமிழ் மொழிபெயர்ப்பு. மேலும் பெங்களூர் நாகரத்தினம்மா 1910-ம் ஆண்டு பதிப்புக்கு எழுதிய முன்னுரையின் தமிழ் மொழிபெயர்ப்பும் உள்ளது. 'ராதா அல்லது ராதிகா யார் ?' என்ற தலைப்பில் இசையியல் அறிஞர் பி.எம். சுந்தரத்தின் கட்டுரையும் உள்ளது. அத்துடன் முதலாவது பின்னிணைப்பாக 'ஆபாச இலக்கியமென்று விமர்சித்து, ராதிகா ஸாந்தவனமு நூலைத் தடை செய்யச் சொல்லி அக்காலப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளின்' தமிழாக்கமும் இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியினை கமலாலயன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இரண்டாம் பின்னிணைப்பாக 'ராதிகா ஸாந்தவனமு நூலுக்கு எதிராக பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்த சட்ட நடவடிக்கைகளும் தடைசெய்த அரசாணைகளும்; ஆவணங்கள் தொகுப்பு உள்ளது. 150 பக்கங்களுக்கும் மேலான இப்பிணைப்புத் தொகுப்பை அ. வெண்ணிலா தொகுத்துள்ளார். தொடர்பான மூல ஆவணங்களின் நிழற்பிரதிகளின் சேர்க்கையாக இது அமைந்துள்ளது.



sathiyathevan.s@thaiveedu.com



# இராசராச சோழன் ஆண்ட ஈழ மண்டலம்

## ஈழமும் சோழமும்

– வி. துலாஞ்சனன் –

7

கடந்த அத்தியாயத்தில், சோழராட்சிக்கு முந்தைய இலங்கையின் அரசியல் நிலவரம் பொதுவாக எவ்வாறு இருந்தது என்று பார்த்தோம். இனி, அனுராதபுரத்தின் இறுதி மன்னரான ஐந்தாம் மகிந்தன் (982-1029) காலத்து அரசியல் நிலவரத்தையும் ஈழத்தில் இராசராசன் கால் பதித்த பின்னணியையும் ஆராய்வோம்.

தன் பத்தாம் ஆட்சியாண்டில், அதாவது பொ.ஆ.பி. 992-ல் உரோகணத்தில் குடியேறிய ஐந்தாம் மகிந்தன் 1017-ல் சோழரின் பிணைக்கைதியாகக் கைப்பற்றப்படும் வரை இலங்கையின் அரசியல் சூழ்நிலை பற்றி மகாவம்சம் விரிவான தகவல்களைத் தருகிறது. நாம் போன அத்தியாயத்தில் பார்த்தது போலக் கேரளப் படைவீரருக்கு அஞ்சி மகிந்தன் குடியேறிய சீதுபர்வதகாமம் நீண்டநாள் வசிப்பதற்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. எனவே, உரோகண நாட்டின் குடிகளுடன் இடம்பெயர்ந்து ‘கப்பகல்லக’ எனும் இடத்தில் தன் அரசிருக்கையை மாற்றிக்கொண்டான். அப்போது அனுராதபுரத்திலிருந்த கேரளர், சிங்களர், கன்னடர் முதலியோர் இணைந்து உரோகணம் தவிர்ந்த தீவின் பிறபகுதிகளை நிர்வாகம் செய்துகொண்டிருந்தார்கள் என்கின்றது மகாவம்சம்.

ஐரோப்பியர் வருகை வரை, இலங்கையில் ஒருவரோ பலரோ தனித்தும் பிரிந்தும் நடத்திய ஆட்சிகளையே வரிசைப்படுத்தும் மகாவம்சம், ஐந்தாம் மகிந்தன் காலத்தில் ‘கேரளர், சிங்களர், கன்னடர் இணைந்து’ ஆட்சி நடத்தினர் என்ற விந்தையான தகவலைத் தருகிறது. இந்த வரிகளிலுள்ள குழப்பத்தைத் தவிர்க்க நமக்கு உதவிக்கரம் நீட்டுபவை, தமிழகம் மற்றும் இலங்கையில் கிடைத்த கல்வெட்டுகள்.

982-ல் ஐந்தாம் மகிந்தன் அனுரையில் ஆட்சிப்பீடமேறி மூன்று ஆண்டுகளில் 985-ல் வடக்கே சோழ அரியணையில் அமர்கிறான் இராசராச சோழன். இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டு - பொ.பி 993-ம் ஆண்டு - கல்வெட்டிலுள்ள மெய்க்கீர்த்தியில் முதன்முதலாக அவன் ‘ஈழமண்டலத்தை’ வென்ற குறிப்பு வருகின்றது. எனினும் 993-ற்கு முன்னர் இராசராசன் பயன்படுத்திய சுருக்கமான மெய்க்கீர்த்தியைக் கொண்ட ஒரு சிதைந்த கல்வெட்டு திருக்கோணேச்சரத்தில் கிடைத்துள்ளது. வரிவடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் அடிப்படையில் 993-ம் ஆண்டிற்கு முந்தையது என்று காலம் கணிக்கப்படும் இன்னொரு சோழர் காலக் கல்வெட்டு திருக்கோணமலைக்கு அருகே நிலாவெளியிலும் கிடைத்துள்ளது.

இந்த நிலாவெளிக் கல்வெட்டு, கிரிகண்டகிரிகாமம், உராகிரிகாமம் எனும் ஊர்களிலுள்ள நிலங்கள், வாய்க்கால்கள் என்பன திருகோணமலை கோணபர்வதத்தில் அமைந்திருந்த மச்சகேசுவரம் கோவிலுக்குக் கொடையளிக்கப்பட்டதைச் சொல்கிறது. எனவே 993-ற்கு முன்பே இலங்கையின் திருகோணமலைப் பகுதி உள்ளிட்ட சில இடங்கள் சோழரின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன என்பது தெரிகிறது.

ஆக, மகிந்தனுக்கு எதிராக அனுராதபுரத்தில் 992-ல் இடம்பெற்ற ‘கேரள’ப் படையினரின் கலகம் என்பது சோழருக்கு ஆதரவான ஒரு புரட்சியே என்பது உறுதியாகின்றது. மகிந்தனுக்கு முன்னமே படைத்தளபதி சேனன் காலத்தில் அனுராதபுரத்தில் குடியேறிக்கொண்டிருந்த ‘அந்நியர்’ மற்றும் மகாவம்சம் குறிப்பிடும் ‘கேரளர், கன்னடர்’ பெரும்பாலும் திசையாயிரத்து ஐநூற்றுவர் வணிகக் கணத்தைச் சேர்ந்த சோழ ஆதரவாளர்களாக இருக்கவேண்டும். இவர்கள் மகிந்தனின் திறனற்ற ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். இதன்போது அவர்களுக்கு ஆதரவான சோழப்படைகள் கடல்கடந்து இலங்கைக்கு வந்திருக்கவும், கிழக்கிலங்கை வணிக மையமான திருகோணமலையைக் கைப்பற்றியிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

ஆனால், மகிந்தன் 992-ல் உரோகணத்துக்குப் பின்வாங்கிவிட்ட போதிலும் அனுரையில் அவனுக்குத் தொடர்ந்தும் ஓரளவு செல்வாக்கு இருந்திருக்கிறது என்பதை பொ.ஆ.பி. 995-இல் பொறிக்கப்பட்ட அவனது அனுராதபுரத்து கப்பாராராம வடமொழிக் கல்வெட்டுச் சொல்கின்றது. சங்கநந்தி என்ற தேரரின் தலைமையில் வசித்த ‘கப்பார ஆராமம்’ எனும் பௌத்த மடத்துப் புத்த துறவிகளுக்கு அவனால் நீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதைச் சொல்லும் இந்த வடமொழிக் கல்வெட்டு கிரந்த வரிவடிவத்தில் இருப்பதும், அதன் இறுதி இரு வரிகளே சிங்கள வரிவடிவத்தில் இருப்பதும் அக்காலத்தில் அனுரையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த பண்பாட்டு

மாற்றத்தை உணர்த்துகின்றன. சங்கநந்தி சதாவிரர் தலைமையிலான துறவியர் மகாயானப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதைக் கல்வெட்டிலுள்ள வடமொழிச் செல்வாக்குச் சுட்டிக்காட்டுகிறது.

எது எப்படியோ, மிகச்சில ஆண்டுகளிலேயே மகிந்தனின் ஆட்சி உரோகணத்துக்குள் மட்டுப்படுத்தப்பட, திருகோணமலையில் நிலைகொண்டிருந்த சோழ அதிகாரம் முழு வட இலங்கையையும் மெல்ல மெல்லத் தன் கைக்குள் கொணர்ந்து விட்டது. திருகோணமலை கோமரங்கடவைப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவில் இடிபாடொன்றில் இராசராசனின் நீளமான மெய்க்கீர்த்தி அடங்கிய கல்வெட்டொன்று கண்டறியப்பட்டுள்ளது. பதி, மாந்தைப் பகுதிகளில் கிடைத்த வேறு இராசராசன் கல்வெட்டுகள், அங்கெல்லாம் சோழப்படைகள் நிலைகொண்டு தனியரசை நடத்திக் கொண்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன. கிழக்கே திருகோணமலை, மேற்கே மாதோட்டம், தென்கிழக்கே பதி நகரம் மூன்றையும் கைப்பற்றி வட இலங்கையைச் சுற்றிவளைத்த

பட்டப்பெயரான 'இரவிகுலமாணிக்கம்' என்ற பெயரைச் சூடி, 'இரவிகுல மாணிக்க ஈச்சரம்' என்ற பெயரைப் பெற்றிருந்தது. இது பொ.ஆ.பி 1005-ம் ஆண்டு இராசராசன் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கோவில் என்பதை அங்கு கிடைத்த கல்வெட்டொன்று சொல்லும்.

தமிழகச் சோழர் கோவில்கள் போலவே நானாதேசியன் கொண்ணாவில் வெண்காடன், பளைப்பாக்கம் உடையார், உட்பட பத்துக்கும் மேற்பட்ட சோழப் பிரதானிகள் இக்கோவிலுக்கு நந்தாவிளக்குகளும் பொன்னும் கால்நடைகளும் வழங்கியிருக்கிறார்கள். தற்போது பதவியா நகரின் காடுகளுக்குள் மறைந்து கிடக்கும் இக்கோவில் இருபதாம் நூற்றாண்டு அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டபோது கிழக்கும் மேற்கும் இரு கோபுரங்களும் ஒரு பீடமொன்றில் அமைந்த கருங்கல் அடித்தளமும், மேலே செங்கல்லாலான கட்டுமானமும் என்றவாறு பெருங்கோவிலொன்றாக அமைந்திருந்ததற்கான சான்றுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.



சோழப்படைகள் அனுரையை வீழ்த்திப் பொலனறுவை வரை சென்று அதைத் தலைநகராக்கித் தங்கியிருந்தனவா என்ற கோணத்தில் இலங்கை வரலாற்றை நாம் ஆராயவேண்டியிருக்கிறது.

இன்று பதவியா என்று அறியப்படும் 'பதி நகரம்' பத்தாம் நூற்றாண்டில் முக்கியமான ஒரு வணிக நகராக நீடித்து வந்தது. திருகோணமலைக்குத் தென்மேற்கேயும் அனுராதபுரத்துக்கு வடகிழக்கேயும் அமைந்திருந்த பதி நகரம் சோழராட்சிக் காலத்தில் உன்னதமான நிலையிலிருந்தது என்பதை அங்குள்ள ஐந்துக்கும் மேற்பட்ட சிவாலய இடிபாடுகள், தமிழ்க் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. அந்த ஐந்து சிவாலயங்களுள் பிரதானமான முதலாம் சிவாலயம், இராசராசனின்

மறுபுறம் மேற்குக் கரையிலிருந்த மாதோட்டமும் சோழரின் கட்டுப்பாட்டில் நீடித்தது. இராசராசன் காலத்தில் அது அவன் பெயரிலேயே இராசராசபுரம் என்ற பெயரைப் பெற்றிருந்தது என்பது அந்நகர் மீது சோழர் கொண்டிருந்த அபிமானத்தைக் காட்டும். அங்கு நெடுநாளாய் தமிழகத்தாரால் போற்றப்பட்ட சிவத்தலமான கேதீச்சரம் அமைந்திருந்தது. கேதீச்சர வளாகத்தில் இராசராசேச்சரம் என்ற பெயரில் ஒரு சிவாலயம் இக்காலத்தில் அமைக்கப்பட்டது. சிலர், கேதீச்சரமே சோழரால் கற்றளியாகக் கட்டப்பட்டு இராசராசேச்சரம் என்ற புதிய பெயரைப் பெற்றது என்பார்கள். பழைய கோவில்களுக்கும் ஊர்களுக்கும் இப்படித் தாங்கள் சார்ந்த புதிய பெயரொன்றைச் சூட்டுவது சோழர் வழக்கமென்பதால், இக்கூற்றில் உண்மை இருக்கக்கூடும்.

இராசராசேச்சரத்தை அமைத்தவன் சோழநாட்டின் சத்திரிய-சிகாமணி வளநாட்டின் வேளார் நாட்டுச் சிறுகூற்றநல்லூரின் கிழவனாக இருந்த தாழிக் குமரன் என்பவன். திருக்கேதீச்சர வளாகத்தில் இராசராச சோழனின் 'திருமகள் போல பெருநிலச் செல்வியும்' என்ற சிதைந்த மெய்க்கீர்த்தியோடு கிடைத்த கல்வெட்டுச் சொல்லும் அந்நாளைய மாதோட்ட நகரின் -



இராசராசபுரத்தின் செல்வச்செழிப்பு பிரமிக்க வைப்பதாகும்.

சோழராட்சியில் சில பெருநகரங்களும் பிரம்மதேய அந்தணக்குடியிருப்புகளும் 'வளநாடு' எனும் நிருவாகப் பிரிவில் அடக்கப்படவில்லை. மாதோட்டமான இராசராசபுரம் அத்தகைய சிறப்பைப் பெற்றிருந்தது திருக்கேதீச்சரத்தின் அருகே இருந்த 'நகளைக்கொடி நாடு அல்லது அருமொழித்தேவ வளநாடு' எனும் நிருவாகப்பிரிவு நோக்கிச் செல்லும் பாதையில் வரி அறவிடப்பட்டு வந்தது. இந்த நிருவாகப்பிரிவில் பெருமளவு மக்கள் குடியேற்றமும் வணிகப் போக்குவரத்தும் நீடித்து வந்தது என்பதை இதன் மூலம் பெறலாம்.

நகளைக் கொடிக்குச் செல்லும் தெருவில் மாத்திரமன்றி வெவ்வேறு வரி அறவிடும் 'பாதை படவுகளும்' படகுத் துறைகளும் மாதோட்டத்தைச் சூழக் காணப்பட்டன. நகரின் வடக்குப்புறம் இராசராசப் பெருந்தெரு எனும் பாதையொன்று சென்றது. வடக்கே கம்மாளர்களின் சேரி இருந்தது. நெசவாளர்களின் குடியிருப்பொன்றும் அருகே இருந்தது. கோவிலில் இரு இளம்பிராமணர்கள் பணியாற்றியதுடன், கோவிலில் மடமொன்றுக்கு அதிபதியாக மடபதி ஒருவரும் இருந்தார். இந்த வணிகங்கள், வரிகள் மூலம் பெறப்பட்ட பணத்தைக்கொண்டு மாந்தை இராசராசேச்சரத்தில் வழிபாடுகளும் வைகாசி விசாகத்தை ஒட்டி ஏழு நாள் திருவிழாவும் இடம்பெற்று வந்திருக்கின்றன.

இராசராச சோழன் அவனது எட்டாம், ஒன்பதாம் ஆட்சியாண்டுகளிலும் (பொ.ஆ.பி. 993, 994) பின்னர் பதினெட்டாம் ஆண்டிலும் (பொ.ஆ.பி. 1002) இலங்கை மீது படையெடுத்ததாக அவன் மெய்க்கீர்த்திகளிலிருந்து ஊகிக்க முடிகின்றது. இவற்றில் முதலிரு படையெடுப்புகளை ஒட்டியே ஐந்தாம் மகிந்தன் உரோகணத்துக்குப் பின்வாங்குகிறான். 1002-லும் அவன் தன் அரசை மீளவும் கைப்பற்ற முனைந்திருக்கக்கூடும். மகாவம்சம் அங்கு மௌனம் சாதிப்பதால், இலங்கையின் வடக்குப் பாதியிலிருந்த சிங்களரும் சோழருக்கு ஆதரவளித்ததால் இதிலும் மகிந்தன் தோல்வியைத் தழுவியிருக்கிறான் என்று கொள்ளலாம்.

இவ்வாறு 'கேரளர், கன்னடர், சிங்களர் என்போர் இணைந்து ஐந்தாம் மகிந்தனுக்கெதிராகக் குழப்பகரமான ஆட்சியொன்றை நடத்தினர்' என்று மகாவம்சம் குறிப்பிடும் காலத்தில் வட இலங்கையில் இராசராச சோழன் செங்கோலோச்சி கொண்டிருந்தான் என்பது மறுக்கவியலாத உண்மையாகிவிடுகின்றது. திருக்கோணமலை, பதி நகரம், மாதோட்டம் ஆகிய நகரங்கள் இந்தக் கால இடைவெளியிலேயே வணிக வளர்ச்சி கண்டிருக்கின்றன.

இதில் பொலனறுவை எப்போது மிகச்சரியாகச் சோழரின் கைகளுக்குள் வீழ்ந்தது என்பதில் தெளிவில்லை. அங்கு இராசராசன் காலத்துக்குரியதாகக் கணிக்கப்படும் கல்வெட்டு எதுவும் கண்டறியப்படவில்லை. எனினும் பொலனறுவைக்குச் சூட்டப்பட்ட சனநாதமங்கலம் அல்லது சனநாதபுரம் என்ற புதியபெயர், இராசராசனின் 'சனநாதன்' (சனங்களுக்குத் தலைவன்) என்ற பட்டத்தையே அடியொற்றியிருப்பதால், அது அவன் ஆட்சிக்காலத்திலேயே (985 - 1014) அரசிருக்கையாகி விட்டது என்பது தெரிகின்றது.

ஆனால் ஆச்சரியமூட்டும் செய்தி என்னவென்றால், இராசராசன் ஆட்சி முடியும் வரை, முப்பதாண்டுகளுக்கும் மேல் உரோகணத்தில் அரசு புரிந்தபடி மறைந்து வாழ்ந்த ஐந்தாம் மகிந்தனை முற்றாக அழிப்பதிலோ கைது செய்வதிலோ 1017 வரை சோழர் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்பது தான்.

(தொடரும்.)



thulanchanan.v@thaiveedu.com

# தமிழ் இலக்கியப் பண்பாட்டின் உப தளங்கள்

**– ஜிஃப்ரி ஹாசன்**

தமிழ்ப் பண்பாடு என்பதை ஒரு பரந்த அர்த்தத்தில் வைத்துப் புரிந்துகொண்டவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. தமிழ் அறிஞர்களிலேயே இத்தகைய பார்வையுடையவர்கள் வெகுசிலரே. அதிலும் ஈழத்து தமிழ்ச் சூழலில் இவர் ஒருவரே இத்தகையை பார்வையைக் கொண்ட அறிஞர் என்று சொல்லாம். பண்பாட்டை எதன் அடிப்படையில் வரையறுத்துக் கொள்வது என்ற குழப்பம் சிவத்தம்பியிடம் இல்லை. பண்பாட்டின் முழுதளாவிய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டை வரையறுத்துப் புரிந்து கொள்ளும் அவர், தமிழ்ப் பண்பாட்டை வரலாற்றடிப்படையில் புரிந்து கொள்கிறார். தமிழ்ப் பண்பாடு எதன் தளத்தில் கட்டமைந்துள்ளது? மதமா, இனமா, என்ற வாதங்களைக் கடந்த ஒரு பார்வையை சிவத்தம்பி முன்வைத்தார்.

தமிழ்ப் பண்பாடு என்பது தமிழர் பண்பாடு என விரித்துக் கொள்கிறார் சிவத்தம்பி. தமிழ்ப் பண்பாடு என்பது தன்னளவில் சுருங்கிக் கொண்ட, பல்வேறு அடுக்குகளைக் கொண்டிராத ஒற்றைத் தன்மையினைக் கொண்ட அமைப்பாக சிலர் புரிந்து வைத்திருக்கின்றனர். சிவத்தம்பியைப் பொறுத்தவரை தமிழ்ப் பண்பாடு என்பது ஒரு மதத்துக்குரியதல்ல. மாறாக, சில மதங்களை, தனித்தனி குழும வேறுபாடுகளை ஊடறுத்து நிற்கும் தமிழ்மொழியைப் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டினைக் குறிக்கும் ஓர் அடையாளமாக அதனைக் காண்கிறார். அதேநேரம், உலகப் புதுமைகளைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்வதற்கான நடைமுறையைச் சுட்டுவதாகவும் தமிழர் பண்பாடு அமைகிறது என்கிறார். மரபு சிதையாமல் புதுமையை உள்வாங்கிக் கொள்ளும் முறைமையை இது தமிழர்க்கு உணர்த்துவதாக நாம் புரிந்து கொள்ளலாம்.

*‘இன்று தமிழ்ப் பண்பாடு என்பது நமக்குச் சீவாதாரமான ஒரு தொடராகியுள்ளது. பக்தி இலக்கியம் முதல் பகுத்தறிவு இலக்கியம் வரை, பரதநாட்டியம் முதல் தெருக்கூத்து வரை, கோபுரம் முதல் கொட்டகை வரை, திருத்தக்க தேவர் முதல் வீரமாமுனிவர் வரை, சாத்தனார் முதல் உமறுப்புலவர் வரை பலவற்றையும், பலரையும் இணைத்து ஒருமை காண்பதற்கு இத்தொடர் உதவுகிறது’ என்கிறார். (தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், பக்-2. கா. சிவத்தம்பி)*

இந்தப் பார்வை தமிழ்ப் பண்பாட்டு நீட்சியை தெளிவாக முன்வைக்கிறது. அதனை ஒரு மதத்துக்குள்ளேயோ, நிலத்துக்குள்ளேயோ சுருக்கும் ஒரு குறுகலான பார்வையிலிருந்து மிகவும் வேறுபட்டது இந்தப் பார்வை. அதாவது பண்பாடு அது ஊடாடும் ஏனைய பண்பாட்டுக் கூறுகளோடு ஊடாடி அதன் பன்முகத்தன்மையை விரிவுபடுத்துவதன் மூலம் அது மேலும் ஆழமும் அர்த்தமும் பெறும். தன் மரபு சிதையாமல் தன் சூழலில் நிகழும் புதியவற்றை உள்வாங்கி தனது வெளியை மேலும் விரிவுபடுத்திக்கொள்வதன் மூலம் அந்தப் பண்பாடு மேலும் உறுதியுற்று பலமடைகிறது. இதனால்தான் தமிழ்ப் பண்பாடு தமிழ் பௌத்தம், தமிழ் முஸ்லிம், தமிழ் கத்தோலிக்கம் எனும் பண்பாடுகளின் கூறுகளையும் உள்வாங்கி ஒரு பெரும் பண்பாட்டமைப்பாக தமிழ்ப் பண்பாடு தன்னை நிறுவி இருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டின் இந்த உள் அடுக்குகள் அதன் பருமனுக்கும், வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றன.

தமிழ் பண்பாட்டின் வளர்ச்சியை ஐந்து வரலாற்றுக் காலகட்டமாகப் பிரித்து நோக்கி ஒவ்வொரு காலகட்டமும் எப்படி பிற பண்பாடுகளோடு ஊடாடி விரிவுபெற்றது என்பததைக் காட்டுகிறார். பிற பண்பாடுகளின் வருகையை, அவற்றின் ஒருங்கிணைவை தமிழ் பண்பாட்டின் அழிவாகவோ, வீழ்ச்சியாகவோ சிவத்தம்பி காண்பதில்லை. அந்தப் பண்பாடுகளை எப்படி தமிழ்ப் பண்பாடு உள்வாங்கி விரிவுபட்டது என்பதையே அவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றை பின்வருமாறு ஐந்து பெருங் காலகட்டமாக வகுத்துக் காண்கிறார் சிவத்தம்பி.

- ஆரம்பம் முதல் பொ.ஆ.பி.(கி.பி) 250 வரை
- பொ.ஆ.பி. 250 முதல் பொ.ஆ.பி. 600 வரை
- பொ.ஆ.பி. 600 முதல் பொ.ஆ.பி. 1300வரை
- பொ.ஆ.பி. 1300 முதல் பொ.ஆ.பி. 1800 வரை
- பொ.ஆ.பி. 1800 முதல் இன்று வரை

*(தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், பக்-5. கா. சிவத்தம்பி)*

இதில் ஒவ்வொரு காலகட்டத்திலும் எவ்வாறு தமிழ்ப் பண்பாடு ஏனைய பண்பாடுகளோடு ஏற்படும் தொடர்புகளால் தமது மரபுகளைப் பேணிக்கொண்டு புதிய பாரிமாணங்களையும் பெற்று விரிவடைந்தது என்பதை விளக்கிச் சொல்கிறார்.

ஆரம்பம் முதல் பொ.ஆ.பி. 250 வரையான காலகட்டம் என்பது தமிழ்ப் பண்பாட்டின் மூலப் பண்பாட்டுக் காலகட்டமாகும். இக் காலகட்டத்தில் மிகச் சுருங்கிய நிலையில் தனது பண்பாட்டை தமிழர்கள் உருவாக்கிக் கொள்ளத் தொடங்கினர். தமிழ்ப் பண்பாட்டின் நீட்சிக்கான சாளரங்கள் அப்போது திறக்கப்படவில்லை. சங்க காலம் எனக் கருதப்பட்ட இக்காலப் பண்பாடுதான் தமிழின் தனித்துவமான சில பாரம்பரியங்கள் வளர்த்தெடுக்கப்பட்ட காலம் என சிவத்தம்பி கருதுவது.

இரண்டாவது காலகட்டமான பொ.ஆ.பி. 250 முதல் பொ.ஆ.பி. 600 வரையான காலப்பகுதியைத்தான் தமிழ்ப் பண்பாட்டின் களம் விரிபடும் காலகட்டம் என்கிறார். சமணம், பௌத்தம் என்பன தமிழ்ப் பண்பாட்டின் உப பகுதிகளாக உள்வாங்கப்பட்ட காலகட்டமாக இதனைக் கருதுகிறார்.

*‘250-600-ல் சமண, பௌத்த மேலாண்மை காணப்படுகிறது. தமிழின் களம் விரிவடைகிறது. ஆனால் இந்த விரிவாக்கம் பௌத்தம், சமணத்தை அப்படியே பிரதிபலித்த ஒன்றன்று. பௌத்தம் சமணத்தை உள்வாங்கி தனக்கென ஒரு சிறப்புடைய தத்துவத்தை தருகிறது. திருக்குறள் வாழ்க்கை வாழப்பட வேண்டுமென்பது அதில் வாழ்க்கை ஒரு சுமை அல்ல அது சமூக முன்னேற்றத்துக்கான ஒரு பொறுப்பு’ (தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், பக்- 7. கா. சிவத்தம்பி)*

என்கிறார். அக்காலப்பகுதித் தமிழ்ப்பண்பாடு சமணம், பௌத்தம் போன்றவற்றை நிராகரித்து ஒதுக்கவோ, புறக்கணிக்கவோ இல்லை. தனது தனித்துவத்தையும் குரலையும் பேணிக்கொண்டு தமிழ் வாழ்க்கையின் ஒரு கூறாக தமிழ்ப் பண்பாட்டின் ஒரு அம்சமாக அதனை முன்னிறுத்தியது. அது தமிழ் பண்பாட்டின் இன்னொரு கட்ட வளர்ச்சியாகும். இதனால் தமிழ் பௌத்தம் என்றொரு புதிய பரிமாணம் தமிழில், தமிழ்ப் பண்பாட்டில் உருவாகி தமிழின் பரப்பெல்லையை மேலும் விரிவாக்கியது. இதனால் தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் எந்த இழப்பும் இல்லை என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

1300-க்குப் பின்னரான நான்காவது காலகட்டம்தான் தமிழ்ப் பண்பாட்டில் மாபெரும் விஸ்தரிப்பு ஏற்பட்ட காலமாக சிவத்தம்பி காண்கிறார்.

இக்காலகட்டத்தில்தான் இந்திய மற்றும் தமிழ்த் தன்மைக்கு முற்றிலும் அந்நியமான இஸ்லாம் இந்தியாவில், தமிழ்நாட்டில் பரவிய காலம். இந்திய வரலாற்றுப் பாடநூல்களில் இந்தியாவில் இஸ்லாம் பரவியமை தொடர்பில் மிகையான குறிப்புகளே காணப்படுவதாக ரணஜித் குஹா, ரொமிலா தாப்பர் போன்ற இந்தியாவின் தலைசிறந்த வரலாற்றாசிரியர்களே எடுத்துக் காட்டியுள்ளனர். சிவத்தம்பியும் இந்தக் கருத்தோடு ஒத்துப்போகிறார்.

*‘1300-க்குப் பின் ஏற்படும் மாற்றம் தமிழ்ப் பண்பாட்டின் பரிமாணத்தில் ஒரு புதிய விஸ்தரிப்பை ஏற்படுத்துகின்றது. இஸ்லாம் வட இந்தியாவில் பரவிய முறைமைக்கும், தென்னிந்தியாவில் பரவிய முறைமைக்கும் வேறுபாடு உண்டு. இதனைப் பண்பாட்டு வரலாற்றில் காணலாம். இஸ்லாத்தின் வருகை தமிழில் ஏற்படுத்திய விரிவையும், அதனாலும் அதற்கு அடுத்து வரும் இன்னொரு முக்கிய விஸ்தரிப்பாலும் தமிழ்ப் பண்பாட்டின் வரைவிலக்கணம் விரிவடைகிறது’. (தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், பக்-8. கா. சிவத்தம்பி).*

தமிழகத்தில் நிலைபெற்றுவிட்ட தமிழ்ப் பண்பாட்டோடு இக்காலப்பகுதியில் இஸ்லாமும் சேர்ந்து கொள்கிறது. அரபு நாட்டில் தோன்றிய மதமான இஸ்லாம் தமிழ்ப் பண்பாட்டோடும் பாரம்பரியத்தோடும் ஊடாடி தமிழ் இஸ்லாமாக புது வடிவம் பெறுகிறது. அது தமிழ்ப் பண்பாட்டின் இன்னொரு பரிமாணமாக இன்னொரு அடுக்காக முகிழ்க்கிறது. அது தமிழ்ப் பண்பாட்டின் நீட்சியாக வடிவங்கொண்டு அதன் எல்லைகளை மேலும் விரிவுபடுத்துகிறது.

*சிவத்தம்பி தன் நூலில் இப்படி எழுதுகிறார் ‘தங்கள் மதப் பண்பாட்டுத் தேவைகளுக்கு அவர்கள் (தமிழ் முஸ்லிம்கள்) தமிழையே பயன்படுத்தியதன் காரணமாக, தமிழ் தன் வரலாற்றில் முதல் தடவையாக இந்திய மரபுக்குப் புறத்தே, இந்தியப் பண்பாட்டு வட்டத்துக்கு அப்பாலே தோன்றிய ஒரு மதத்தின் மொழியாகிற்று. இது ஒரு மிக முக்கியமான மாற்றம், அரபு அந்த மதத்தின் வேதமொழி. தமிழ் மொழி அதுகாலவரை எடுத்துக் கூறியிராத சில கருத்துகளை, கோட்பாடுகளை இப்பொழுது எடுத்துக்கூற வேண்டியிருந்தது. இம்மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பேசப்பட்ட பொழுது அரபுப் பதங்களே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இறை வணக்கத்துக்குரிய வெளிப்பாடுகள்- ஆத்ம வேட்கைகள், வேண்டுதல்கள் தமிழிலேயே சொல்லப்பட வேண்டியிருந்தன’. (தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், பக்-10. கா.சிவத்தம்பி).*

இதன் தொடர்ச்சியாக குர்ஆன், ஹதீஸ் கிரந்தங்கள் போன்ற இஸ்லாமிய மதப் பிரதிகளும், இஸ்லாமிய மதச் சடங்குகள் குறித்த பிரதிகள் என தமிழ்ப் பண்பாட்டு இலக்கியப் பாரம்பரியத்தோடு கலந்தன. அதோடு அறபுத்தமிழ் என்றொரு புதிய

பரிமாணமும் தமிழ்ப் பண்பாட்டில் தோற்றம் பெற்றது. தமிழ்ப் பண்பாட்டின் காவிய மரபில் தமிழ் முஸ்லிம் புலவர்கள் படைப்போர், மசாலா, நொண்டி மூலகம் போன்ற படைப்பிலக் கியங்களை தமிழ்ப் பண்பாட்டுக்களித்தனர். இந்த வகையில் சிவத்தம்பி குணங்குடி மஸ்தான் பாடல்களையும், சூஃபி பாடல்களையும் மிக முக்கியமானவையாக கருதுகிறார். தமிழ்ப் பண்பாட்டின் விரிதளத்தின் ஒரு பகுதியாக சிவத் தம்பி அவற்றையும் காண்கிறார்.

தமிழ்ப் பண்பாட்டு நீட்சியின் மற்றொரு முக்கியமானதொரு கட்டமாகவும் மாற்றமாகவும் சிவத்தம்பி கருதுவது மேற்கின் தொடர்பையாகும். மேற்கு நாட்டவரின் தமிழ்நாட்டுத் தொடர் புகள் மூலம் அவர்களது பண்பாட்டுக்கூறுகள் தமிழ்ப் பண் பாட்டோடு இணைகிறது. இது அரச அதிகாரத்தின் மூலமும் நிறுவப்பட்டதாக சிவத்தம்பி சொல்வார். அதன் விளைவாக கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவப் பண்பாடுகள் தமிழ்ப் பண் பாட்டின் உள்மடிப்புகளாக, தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சி யாக நிலைபெற்றன. சிவத்தம்பியைப் பொறுத்தவரை கால னிய ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலைநாட்டினர் தான் தமிழ்ப் பண்பாட்டில் மிகப் பெரிய மாற்றங்களை நிகழ்த் தக் காரணமாக இருந்தனர். அதை மிக நுணுக்கமாக அணுகி தன் நூலில் ஆராய்கிறார். மொழி, மதம், பண்பாடு என பல தளங்களில் தமிழையும், மேற்கின் குறிப்பாக ஆங்கில மொழி, ஆங்கிலேயப் பண்பாட்டோடும் ஒப்பிட்டு ஆராய்கி றார்.

பின்னர் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு கூட்டுக் கலவையான பரந்த தளத்தை கூறுபடுத்தலை நோக்கி ஆரியக் கருத்தியல் கொண்டு சென்றது. இந்த ஆரியக் கற்பிதம் தமிழ்ப் பண்பாட் டின் தூய்மையாக்கம் பற்றி பேசத் தொடங்கியது. சமஸ்கிரு தமயமாதல் அல்லது உயர்குடியாக்கம் போன்ற கருத்தியல் கள் தமிழ்ப் பண்பாட்டின் விரிந்த தளத்துக்கு எதிராக ஆரிய மேன்மையாளர்களால் முன்வைக்கப்பட்டவையாகும். ஆனா லும் இன்று தமிழ்ப் பண்பாட்டு வெளியில் ஆரியக் கருத்தி யல் வெறும் மாயையாக புறக்கணிக்கப்படுவது சிவத்தம்பி போன்ற சிந்தனையாளர்களின் கருத்தியல் தாக்கத்தின் விளைவாகவே கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்ப் பண்பாட்டின் தொடக்க நிலையையும் அதன் இன் றைய நிலையையும் ஒப்பிடுவதன் மூலம் அவர் இன்றைய தமிழ்ப் பண்பாட்டின் தன்மைகளை நிறுவுகிறார். தமிழ் பண் பாட்டின் விரிவுபட்ட தன்மையை எடுத்துக்காட்டுகிறார். இதன் மூலம் ஒரே பண்பாட்டுக்குள்ளிருக்கும் பன்மைகளுக்கிடையி லான இடைவெளியைக் குறைப்பதே அவரது நோக்கமாகும். அதேநேரம் அவரது இந்தக் கருத்தே தமிழ்ப் பண்பாட்டின் ஆழமான புரிதலுக்கும் ஏற்புக்கும் வழிகோலுகிறது.


*‘நவீன உலகில் தொடர்ந்தும் தமிழராக, நவீன வளர்ச்சி களை உள்வாங்கிக் கொண்ட தமிழராக வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொண்ட பொழுது எவை எவை எமது அடிப்படை பண்புகள், எந்தப் பண்பு இல்லாவிட்டால் நாம் தமிழராக இருக்க முடியாது என்பதை அறிந்தபோதுதான், நாம் நமது பாரம்பரியத்தை மீளக் கண்டு கொண்டோம். முன் னர் இலைமறைகாயாக இருந்ததை, கருத்துத் தெளிவுடன் எமது வாழ்க்கை அடிப்படையாக்கிக் கொண்டோம். புதிய தேவைகள் பாரம்பரியத்தின் தடங்களைக் காட்டின. புதிய உலகோடு இணைய முற்பட்ட பொழுதான் பழந்தமிழின் ஜன நாயகப் பண்பு, சமரசம், உலகப் பொதுமை ஆகியவற்றை அறிந்துகொண்டோம்.’*

சிவத்தம்பியின் இந்தக் கருத்து தமிழ்ப் பண்பாடு சார்ந்து அது குறித்த புரிதல் சார்ந்து மிக முக்கியமானதாகும். கூறுப டுத்தல், துண்டாடல் கலாசார அறிவுஜீவித்துவ வெளியில் பண்பாட்டு ஒருமைப்பாட்டையும், ஒருங்கிணைவையும் முன் வைக்கும் சிவத்தம்பியின் அணுகுமுறையே ஏற்புடையதாக வும், பகுத்தறிவு சார்ந்ததாகவும் உள்ளது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூகம், பண்பாடு, கருத்து நிலை குறித்த இந்த ஆய்வுக்கு தான் எப்படி உந்தப்பட்டேன் என்பதை சிவத்தம்பி சொல்கிறார்...

*‘சமூக வரலாறு, சமூகவியல், மானிடவியல் ஆகிய துறைக ளின் வழிச்சென்று தமிழிலக்கியப் பாரம்பரியத்தை மீள் நோக்குச் செய்யும் ஓர் ஆய்வுமுறையில் ஏற்பட்ட அனுபவங் கள் காரணமாக நான் இவ்விடயத்திற்கு ஈர்க்கப்பட்டுள் ளேன்’ (யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ளல், பக்- 5 கா. சிவத்தம்பி).*

தமிழ் இலக்கியத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு முயற்சியில் தமிழ்ப் பண்பாட்டு முறையையும், அதன் வரலாற்று வளர்ச்சி யையும் விரிவாகப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசி யத்தை சிவத்தம்பி அறிந்திருந்தார். தமிழர் பண்பாடு என்ற அவரது ஆய்வு இதன் ஒரு பகுதிதான். அதன் தொடர்ச்சியா கவே யாழ்ப்பாணச் சமூகம் மீதான அவரது இந்த ஆய்வுப் பார்வை முகிழ்த்திருக்கிறது.



jiffry.hassan@thaiveedu.com

***தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com     Fax: 1-416-849-0594     Tel: 1-416-857-6406***

# ஆளப்பிறந்தாள்

– த. ஜீவராஜ்

15



வீரசோழன் ஆதுலர் சாலையின் மருந்துக் களஞ்சியத்தில் நிலவிக் கொண்டிருந்த அதிகாலை நேர நிசப்தத்தை குலைத்தது ஆதினியின் அலறல். அருகில் படுத்துக்கொண்டிருந்த அனைவரும் விழித்துக் கொண்டார்கள். உடலெல்லாம் வியர்த்துப் பதறியபடி எழுந்து உட்கார்ந்து இருந்தாள் ஆதினி. முல்லை அழகியும், கோதையின் தாயும் அருகில் அமர்ந்தபடி ஆதினியின் தலையைத் தடவிக் கொண்டிருந்தார்கள். கோதை ஆதினியின் இரண்டு கரங்களையும் இறுகப் பற்றியபடி அருகிலேயே அமர்ந்திருந்தாள். அறிவாட்டி நிதானமாக கனவில் என்ன நடந்தது என்பது பற்றி ஆதினியிடம் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

அது ஒரு பெரிய மலை. அப்படி ஒரு இடத்துக்கு இதுவரைக்கும் நான் போனதே இல்லை. மலை உச்சியில் காலை நேரச் சூரிய உதயத்தை இரசித்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று என் பின்னால் இருந்து வளையல்கள் நிறைந்த ஒரு வயதான பெண்மணியின் கை மிகப் பலமாக என்னைத் தள்ளிவிட்டது. திடுக்கிட்டு விழும்போதே திரும்பிப் பார்த்தேன். தூரத்தில் என் அப்பா கேசவன் ஆதினி என்று அலறியபடி ஓடி வருவதும், என்னைக் காப்பாற்ற முடியாமல் தரையில் புரண்டு அழுவதும் தெரிந்தது. அப்பாவைக் கண்ட அதிர்ச்சியில் விழுந்தபடி அலறிக் கத்தினேன். என்னைத் தள்ளி விட்ட பெண்மணியின் முகத்தினைச் சரியாகப் பார்க்க மறந்து விட்டேன் என்றாள் பயந்தபடி ஆதினி.

கடவுளே காலை நேரக் கனவு பலிக்கும் என்பார்களே என்று ஏதோ சொல்லத் தொடங்கிய கோதையின் தாயினைக் கண்களால் அடக்கினாள் முல்லையழகி. நீ கேசவனையே நினைச்சிட்டுப் படுத்தாய் அல்லவா அதுதான் அப்படிக் கனவு வந்திருக்கிறது என்று ஆறுதல் சொன்னாள் அறிவாட்டி. பயப்படாத அக்கா. உன்னுடைய நெஞ்சு படபடக்கிறது எனக்கு கேட்கிறது என்றாள் கோதை. கனவு இன்னும் முடியல்ல என்ற குரல் தணிந்த வார்த்தைகள் ஆதினியின் உதடுகளில் இருந்து வெளிப்பட்டது. அனைவரும் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

கொஞ்ச நேரம் விழுந்த பிறகு எனது உடைகள் ஏதோ ஒரு மரத்தில் சிக்கி நான் வலுவான கரங்களால் மீட்கப்படுவதாக உணர்ந்து கண் திறந்து பார்த்தபோது என்னை அணைத்தபடி அப்பா நின்றிருந்தார். ஆனால் அப்போதுதான் அந்தப் பயங்கரம் நடந்தது. மலை உச்சியில் நின்று என்னைத் தள்ளி விட்ட அந்தப் பெண்மணி பலத்த சத்தத்தோடு மலையில் இருந்து தலைகீழாகக் கீழே விழுவதை நான் என் கண்களால் கண்டேன் என்ற ஆதினியின் வார்த்தைகளில் இன்னும் பயம் நீங்காத படபடப்பு கலந்திருந்தது.

பெரியவர்கள் ஒவ்வொருவரும் ஆதினிக்கு பல்வேறு விதத்தில் ஆறுதல்கள் சொன்னார்கள். அன்றைய நாளின் தொடக்கம் அனைவருக்கும் மிக மெதுவாக நகர்ந்தது. ஆதினி கண்ட கனவு அனைவரது மனத்திலும் ஏதோவொரு தாக்கத்தை உருவாக்கி இருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. அன்று அவர்கள் தீர்மானித்திருந்த நேரத்துக்கு சற்றுத் தாமதமாக விஜயராஜ விண்ணகரத்து காலைப் பூசையில் கலந்து கொண்டார்கள். ஆதினி மனமுருகி ஆயர்களின் தலைவனை வேண்டிக் கொண்டாள்.

பூசைகள் முடிந்ததும் அறிவாட்டி அங்கிருந்த தேவரடியார்களோடு உரையாடியபடி தனது பழைய வாழ்வினை மீட்டுக் கொண்டிருந்தாள். ஆதினி ஆலயச் சிற்பங்களின் அழகில் மயங்கியபடி மகாவிஷ்ணுவின் பாதங்களை மனதில் நிறுத்தி ஆண்டாளின் பாசுரங்களை வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். கோதையும், தாயும் பலமுறை ஆலயத்தை சுற்றி வந்து அதன் அழகினைப் புகழ்ந்தபடி கும்பிட்டுக்கொண்டிருந்தார்கள். முல்லை அழகி அன்றைய நாளுக்குரிய அவளது பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தாள்.

விஜயராஜ விண்ணகரத்தைப் பரிபாலனம் செய்யும் தேவகன்மிகள் அறிவாட்டியிடம் ஓலை ஒன்றை வழங்கினார். அறிவாட்டியையும், முல்லை அழகியையும் நங்கை சானி அம்மையாரை அவசரமாகச் சந்திக்கும்படி அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்தது. ஆதினியையும், கோதையையும் தேவரடியாராக உரிய முகூர்த்தத்தில் இறைவனுக்குத் திருமணம் செய்து வைப்பது தொடர்பான ஒழுங்குகளை முடிவு செய்வதற்காக அவர்கள் அழைக்கப்பட்டு இருந்தார்கள். அன்றைய தினம் ஆதினியின் தோள்களில் சங்கு சின்னமும், சக்கர சின்னமும் இலட்சனையாகப் பொறிப்பது பற்றியும், கோதையின் தோள்களில் திரிசூல சின்னமும், ரிஷப சின்னமும் பொறிப்பது பற்றியும் தங்களுக்கு கட்டளையிடப்பட்ட ஓலை கிடைத்திருப்பதாக தேவகன்மிகள் அறிவாட்டியிடம் கூறினார்.

முல்லை அழகியின் ஆலயப்பணிகள் முடிந்ததும் அவசர அவசரமாக அறிவாட்டியும், முல்லை அழகியும் நங்கை சானி அம்மையாரின் இல்லத்தை நோக்கி பயணித்தார்கள். தாங்கள் வந்ததும் மதியம் ஆதினிக்கும், கோதைக்கும் இலட்சனை இடும் பணியினை மேற்கொள்ளுமாறு ஆலயத் தேவகன்மிகளிடம் அவர்கள் ஏற்கனவே வேண்டிக் கொண்டிருந்தார்கள். அறிவாட்டியிடம் இருந்து பல்வேறு முறை கேட்டு அறிந்த விடயம்தான் என்றாலும், அன்றைய நாள் அவர்களுக்கு இலட்சனை இடப்படும் என்ற செய்தி ஆதினிக்கும் கோதைக்கும் ஒருவித பரபரப்பை உருவாக்கி இருந்தது.

மதியம் தாண்டி மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. நங்கை சானி அம்மையாரைச் சந்திக்கச் சென்றிருந்த அறிவாட்டியும் முல்லை அழகியும் வருவதற்கான எந்தவித அறிகுறிகளும் தென்படுவதாக இல்லை. ஏற்கனவே தேவகன்மிகள் அவர்களை இலட்சனை இடுவதற்காக அழைத்த போது அறிவாட்டியும் முல்லை அழகியும் வரும் வரை பொறுத்திருக்குமாறு கோதையின் தாய் தேவகன்மிகளை தயவாக வேண்டிக் கொண்டிருந்தாள். அடுத்த முறை இலட்சனையிடும் வயதான தேவரடியார் நேரடியாகவே வந்து அவர்களை அழைத்த போது மறுத்துரைக்க முடியாதபடி நேரம் மாலையாகிவிட்டிருந்தது. அவர்களை அழைத்துச் சென்ற தேவரடியாரின் பெயர் ஆளப்பிறந்தாள். பெயருக்குரிய எந்தவித சம்பந்தமும் இல்லாத சாந்தமான முகமும், மிகப் பக்குவமாக பேசும் திறனும், அன்போடு அரவணைக்கும் செயலும் கோதைக்கும், அவள் தாய்க்கும், ஆதினிக்கும் ஆறுதல் தருவதாக இருந்தது.

ஆளப்பிறந்தாள் அம்மையார் நீண்ட காலம் விஜயராஜ விண்ணகரத்தில் தேவரடியாராகக் கடமை புரிந்துவிட்டு திருக்கோணேச்சரத்தில் தேவரடியாராகத் தன் பணிகளைத் தொடர்ந்து இருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன்னர்தான் மீளவும் விஜயராஜேஸ்வரம் வந்திருக்கிறார் என்ற விபரங்களை கோதையின் தாய் விசாரித்து அறிந்து கொண்டாள். இலட்சனை இடுவதற்காக ஏற்கனவே எல்லா ஆயத்தங்களையும் ஆலயத் தேவரடியார் இருவர் செய்து விட்டிருந்தபடியால் விரைவாக இலட்சனை இடும் பணி முடிவடைந்து விடும் என்று கோதையின் தாயிடம் ஆறுதல் சொன்னாள் ஆளப்பிறந்தாள். தனக்கு உதவியாக நின்ற இரு தேவரடியாரையும் வேறொரு வேலைக்காக அனுப்பிவிட்டு தனியாக இலட்சனையிடும் பணியினை மேற்கொண்டாள் ஆளப்பிறந்தாள்.

ஆளப்பிறந்தாள் அம்மையாருடன் உரையாடியதிலிருந்து அவர் அறிவாட்டியின் காலத்தில் விஜயராஜ விண்ணகரத்தில் தேவரடியாராகப் பணியாற்றி இருக்கிறார் என்பது கோதையின் தாய்க்குப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மிக அண்மையில் கோணேச்சரத்தில் இருந்து வந்ததாலும், முல்லை அழகி ஆலயத்தின் வெளி வேலைகளில் ஈடுபட்டிருந்ததாலும் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை என்பதை கோதையின் தாய் ஊகித்துக்கொண்டாள்.

செம்பில் வார்க்கப்பட்ட இலட்சினைகளை ஆளப்பிறந்தாள் நிதானமாக நெருப்பில் பழுக்க சூடாக்கி கொண்டிருக்க, பதபதைப்போடு இரு பிள்ளைகளின் தாயாக இறைவனைக் கரம் கூப்பி தொழுதபடி அறைக்கு வெளியில் காத்திருந்தாள் கோதையின் தாய். பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்த ஆளப்பிறந்தாளின் கண்களுக்கு முன்னால் செப்பு இலட்சனைகள் தீயில் எரிந்து நிறம் மாறிக்கொண்டிருந்தது. கண்களை இறுகி மூடிக்கொண்டு கடவுளை தியானித்தபடி இரண்டு சிறுமிகளும் தரையில் விரிக்கப்பட்ட துணிகளின் மேல் குப்புறப் படுத்து இருந்தார்கள்.

அலை கடலுக்கு நடுவில் கோணேசர் குடியிருக்கும் கோணமாமலையின் நினைவுகள் மீள மீள வந்து ஆளப்பிறந்தாளின் மனதினை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அங்கே அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கற்றளியாக இருக்கும் விண்ணகரத்தில் முன்னம் நடந்த நடனப் போட்டி நிகழ்ச்சி ஒன்றின் நினைவுகளால் எழுந்த கோபம் அவள் மா நிற முகத்தை செந்நிறமாக்கிக் கொண்டிருந்தது. மனதில் எழுந்த எண்ண ஓட்டங்களால் ஆளப்பிறந்தாளின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை கவனிக்க ஆளில்லாத அறை அமைதி நிறைந்ததாக இருந்தது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com




இலங்கையில் பௌத்த தேசியவாத இயக்கம், நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருந்த சமூக அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு எவ்விதப் பதிற்குறியை (Response) வெளியிட்டது, தனது வேலைத் திட்டங்களையும் கருத்தியலையும் வகுத்துக் கொண்டது என்பனவற்றை விளக்கிக்கூறும் ஆய்வுக் கட்டுரைகள் 1990-களில் 'பிரவாத' (PRAVADA) என்னும் ஆங்கிலச் சஞ்சிகையில் தொடராக வெளியிடப்பட்டன. அத்தொடரில் வெளியான 18 கட்டுரைகள் பின்னர் Religion in Context: Buddhism and Soclio - Political Change in Sri Lanka என்னும் தொகுப்பு நூலாக 2007-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் வெளியீடான இந்நூலில் இடம்பெறும் 'The Re-Making of Vesak' என்னும் கட்டுரை (பக். 56-63)-யின் தழுவலாக்கத்தை இங்கே தந்துள்ளோம்.

இக்கட்டுரை 1885-ம் ஆண்டில் ஆர்தர் கோர்டன் (Arthur Gordon) என்னும் பெயருடைய ஆளுநர் வெசாக் தினத்தைப் பொது விடுமுறையாக அறிவித்த அரசியல் பின்புலத்தையும், ஆடம்பரமற்ற சமய வழிபாட்டு நிகழ்வாக இருந்த அதிகம் அறியப்படாத வெசாக் விழா பௌத்தர்களின் தேசிய விழாவாக மீள் உருவாக்கம் (recreation) செய்யப்பட்டதையும் விளக்கிக் கூறுகிறது. இம்மீள் உருவாக்கம் வெளிப்படையான எதிர்ப்பு (Open defiance), மேற்கத்தியப் பண்பாட்டை விரும்பி ஏற்றுப் பாவனை செய்தல் (Imitation) என்னும் இரு முரண்பட்ட கூறுகளைக் கொண்டிருந்ததையும் இக்கட்டுரை விளக்கிக் கூறுகிறது.

1885-ம் ஆண்டு மார்ச் 27-ம் திகதி ஆளுநர் சேர். ஆர்தர் கோர்டன் (Sir Arthur Gdrdon) வெசாக் போயா தினத்தைப் பொது விடுமுறையாக அறிவித்தார். இவ்வறிவித்தலின் பயனாக 1885-ம் ஆண்டு ஏப்ரல் 28-ம் திகதி போயா தினம், உத்தியோக பூர்வமான விடுமுறை தினமாகக் கொண்டாடப்பட்டது. இந்தச் சலுகையைக் காலனிய அரசாங்கம் அவ்வாண்டில் பௌத்தர்களுக்கு வழங்கிய பின்னணி, வரலாற்று முக்கியத்துவமுடைய 'கொட்டகேன' (தமிழில் கொட்டாஞ்சேனை) கலகம் என்னும் பௌத்தர்-கத்தோலிக்கர் மோதல் சம்பவத்துடன் தொடர்புடையது. கொட்டாஞ்சேனையின் சனத்தொகையில் அரைப்பங்கினர் கத்தோலிக்கர்களாக இருந்தனர். 1883-ல் அங்கு வெடித்த கலகத்தின் போது பௌத்தர்களும் கத்தோலிக்கர்களும் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர்.

கொட்டாஞ்சேனையில் மொஹிட்டிவத்தே குணானந்த தேரர் என்னும் பிரசித்தி பெற்ற பிக்கு பௌத்த விகாரை ஒன்றை நிறுவி அதன் தலைமைக் குருவாக இருந்து வந்தார். குணானந்த புகழ் பெற்ற 'பாணந்துறை விவாதம்' என்னும் கத்தோலிக்கர் எதிர் பௌத்தர் விவாதத்தின் மூலம் பிரபலம் பெற்றவர். அவரின் கொட்டாஞ்சேனைப் பௌத்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதும் அவர் அதைக் கொண்டாடும் வகையில் தொடர் ஊர்வலங்களை நடத்தினார். இந்த ஊர்வலங்கள் 1883-ம் ஆண்டின் கிறிஸ்தவப் புனித வாரமான ஈஸ்டர் வாரத்தின் போது ஆரவாரத்துடன் உச்சம் பெற்றன. அவ்வேளை அப்பகுதியில் பல வதந்திகள் பரவலாயின. பௌத்தர்கள் கிறிஸ்தவர்களை இழிவுபடுத்தும் உருவச் சிலைகளை ஊர்வலமாக எடுத்து வரப்போகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களின் மனதைக் காயப்படுத்தும் நடவடிக்கைகளைத் திட்டமிடுகிறார்கள் என்று வதந்திகள் கிளம்பின. தமது பிரதான சமயப் பண்டிகையான ஈஸ்டர் விழா வேளையில் தமது 'சமய இடப்பரப்பில்' (Religious Territory) 'ஆக்கிரமிப்பு' இடம்பெறப் போவதையிட்டு கத்தோலிக்கர்கள் பதற்றமடைந்தனர். கோபமடைந்த கத்தோலிக்கர் அமைதியான முறையில் வந்து கொண்டிருந்த பௌத்தர்களின் ஊர்வலத்தைத் தாக்க ஆரம்பித்தனர். இந்த மோதலின் போது ஒருவர் உயிரிழந்தார். இந்த வன்முறை மோதல் இடம்பெறுவதற்குப் பொலிசாரின் பொறுப்பற்ற செயலும் ஒரு காரணம் எனலாம். பொலிஸ் முன்யோசனையற்று ஊர்வலத்திற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கியிருந்தது. காலனிய அரசாங்கம் குற்ற வழக்கைத் தொடரவில்லை. ஒரு கத்தோலிக்கர்கூட குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை. இதனால் பௌத்தர்கள் ஆத்திரம் கொண்டிருந்தனர்.

பௌத்தர்கள் 1884 ஜனவரி மாதம் 'பௌத்தர்களின் பாதுகாப்புக் குழு' என்ற ஒரு குழுவை அமைத்தனர். இக்குழுவின் பிரதிநிதியாக கர்னல் ஒல்கொட் என்னும் அமெரிக்கர் தெரிவு செய்யப்பட்டார். லண்டனுக்குச் சென்று பௌத்தர்களின் குறைகளைக் காலனிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சுச் செயலகத்துக்கு எடுத்துக் கூறுமாறு கர்னல் ஒல்கொட் வேண்டப்பட்டார். குழுவின் சார்பில் ஒல்கொட் நான்கு கோரிக்கைகளை காலனிய அதிகாரிகளிடம் முன்வைத்தார். அவையாவன:

- பௌத்தர்களின் ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை

நீக்குதல்.

- கொட்டாஞ்சேனைக் கலகம் பற்றிப் புதிதாக விசாரணை யொன்றை நடத்துதல்.
- அரசாங்கம் சமய விடயங்களில் நடுவுநிலையைப் பேணும் என்பதை உத்தியோக முறையில் அறிவித்தல்.
- வெசாக் தினத்தைப் பொதுவிடுமுறை தினமாக அறிவித்தல்.

குற்றப் பொறுப்பு எதனையும் ஏற்றுக்கொள்ள விரும்பாத அர சாங்கம் பௌத்தர்களின் நான்கு கோரிக்கைகளுள், நான்கா வதான வெசாக் பொது விடுமுறைக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. இந்த விடயத்தில் ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்




வதற்கு அரசாங்கம் முன்வந்தது. சேர் ஆர்தர் கோர்டன் 1884-இன் தொடக்கத்தில் கர்ணல் ஒல்கொட்டை நேரில் அழைத்து இதற்கான தமது சம்மதத்தைத் தெரிவித்தார்.

வெசாக் விடுமுறைப் பிரேரணை தொடர்பாகச் சட்டசபையில் விவாதம் நடைபெற்றது. அவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஏ.எல்.டி. அல்விஸ் என்ற பெயருடையவரும், புரட்டஸ் தாந்து கிறிஸ்தவருமான சட்டசபை உறுப்பினர் வெசாக் தினத்தைப் பொது விடுமுறையாக அறிவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் வெசாக் போயாவிற்குப் பதிலாக ஏப்ரல் 13 அல்லது 14-ம் திகதியில் வரும் சிங்களப் புதுவருடத்தை சிங்கள மக்களின் பொது விடுமுறை தினமாக அறிவிக்கலாம் என்று கருத்துரைத்தார். அவ்விவாதத்தின் போது கலந்து கொண்டு உரையாற்றிய தமிழர் பிரதிநிதியான பொன்னம்பலம் இராமநாதன், ஹிக்கடுவே சுமங்கல தேரர் அவர்கள் எழு திய கடிதம் ஒன்றைச் சபையில் வாசித்தார். அக்கடிதத்தில் வெசாக் தினத்தைப் பொது விடுமுறையாக அறிவிக்க வேண் டும் எனப் பௌத்தர்கள் ஒரு மனதாகக் கோரிக்கை விடுப்ப தாகக் கூறப்பட்டிருந்தது. பொன்னம்பலம் இராமநாதன் அப் பிரேரணையை ஆதரித்து உரையாற்றினார். (சட்டசபை விவா தங்கள் 1883 - 86 பக்: 84 - 85)

1885-ம் ஆண்டின் போயா விடுமுறைக் கொண்டாட்டம், தயா ரிப்பு வேலைகளுக்கான கால அவகாசம் இன்மையால், சிறிய தொரு கொண்டாட்டமாகவே நடந்தேறியது. 'சரசவி சன்திரச' (Sarasavi Sandarese) என்னும் சிங்களப் பத்திரிகை களனி பௌத்த கோவிலில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றிய செய் தியை வெளியிட்டது. அங்கு இடம்பெற்ற விழாவில் பெருந் தொகையான பௌத்த சமய பக்தர்கள் கூடியிருந்தனர். என வும் மொஹிட்டுவத்தே குணானந்த தேரர் 'வெசாக் விடுமுறை' என்ற பொருளில் உரையாற்றினார் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டது. விழாவின் முக்கியமான ஒரு அம்சம், புதிதாக வடிவமைக்கப்பட்ட 'பௌத்த கொடி'யை ஏற்றிவைக்கும் வைபவமாகும். இக்கொடியேற்ற நிகழ்வு ஏப் ரல் 28-ம் திகதி காலை இடம்பெற்றது. இச்சடங்கியல் முறை யிலான கொடியேற்ற நிகழ்வு அக்காலை வேளையில் ஒரே நேரத்தில் கொட்டாஞ்சேனை தீபதூமாராமய, மாளிகாகந்த வில் அமைந்திருந்த வித்தியோதய பௌத்தக் கல்லூரி ஆகிய இடங்களிலும் கொழும்பு நகரின் வேறு பல இடங்களி லும் நடைபெற்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பொது இடங்களில் பௌத்த கொடியை ஏற்றிப் பறக்கவிடும்படி பௌத்தர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் நடைபெற்ற விழா நிகழ்வுகளில், மாளிகா கந்தவில் ஆரம்பித்துப் புறக்கோட்டை வரை சென்ற ஊர்வல மும் முக்கியம் பெற்றதாக விளங்கியது. இந்த ஊர்வலத்திற்கு வேண்டிய பொருள் பண உதவிகளை வழங்கியவர் எச்.டொன் கறோலிஸ் என்னும் மரப்பொருள் (Timber) வர்த்தகராவார். இவரின் வர்த்தக நிலையம் புறக்கோட்டையில் அமைந்திருந் தது. இவரது மாமனார் அன்டிரிஸ் பெரேரா தர்ம குணவர்த்த னவும் இவ்வூர்வலத்திற்கு உதவினார். இவரும் பிரபல வர்த்த கராவார். இசைக் கருவிகளின் முழக்கத்துடன் நடைபெற்ற இந்த ஊர்வலம் கொட்டாஞ்சேனைக் கலவரத்திற்குப் பின்னர் கொழும்பு நகரில் நடைபெற அனுமதிக்கப்பட்ட முதலாவது ஊர்வலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் வெசாக் விடுமுறை உணர்வுபூர் வமாகக் கொண்டாடப்பட்டது. புதிய அம்சங்கள் விழாக் கொண்டாட்டங்களில் சேர்க்கப்பட்டன. 1889-ம் ஆண்டு நடை பெற்ற வெசாக் விடுமுறைக் கொண்டாட்டம் பற்றி லீட்பீற்றர் (Leadbeater) என்பவர் சுவாரசிமான தகவல்களைத் தரும் ஆவணம் ஒன்றை விட்டுச் சென்றுள்ளார். (லீட்பீற்றர் அங்கி லிக்கன் கிறிஸ்தவப் போதகராக இருந்து 'தியோ சொவிக்கல் சபையில்' சேர்ந்து கொண்டவர். பௌத்தராக மாறிய இவர் ஆனந்த கல்லூரியின் முதலாவது அதிபராக பதவியேற்றார். 'The Buddhist' என்ற ஆங்கில சஞ்சிகைளில் பதிப்பாசிரியரா கப் பணியாற்றிய இவர் அச் சஞ்சிகையில், 1889-ல் வெசாக் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். இக்கட்டுரை யில் ஒளிவிளக்குகள், சோடனைகள், ஊர்வலங்கள் போன்ற புதிய அம்சங்கள் வெசாக் கொண்டாட்டங்களில் புகுத்தப்பட் டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

### காலனித்துவத்திற்கு முந்தியகால இலங்கையில் வெசாக்:

இலங்கை வரலாற்றின் இடைக்காலப் பகுதியில் போயா தினங்களையும், வெசாக் மாதப் போயா தினத்தையும் (வைகாசிப் பௌர்ணமி தினம்) சமய விழாவாகக் கொண்டா டப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. குறிப்பாக இவை வழி பாடுகளுடன் கூடிய சமய விழாவாகவே இருந்தது. ஓரளவுக்கு கொண்டாட்டத்தின் தன்மையும் அதில் இருந்தது. வெசாக் தினம் பற்றிய விளக்கமான தகவல்களைப் பெறமுடிய வில்லை. ஆயினும் பூஜாவளிய என்னும் நூலில் வெசாக் பற் றிய சில குறிப்புகள் உள்ளன. புத்தபகவானின் மிகப் பெரிய விழா என்று வெசாக்கைக் குறிப்பிடும் இந்நூல், மும்மணிக ளைப் போற்றும் விழாவெனவும் குறிப்பிடுகிறது. இந்நூல் பொ.ஆ.பி. 1236 முதல் 1270 வரை ஆட்சி செய்தவனான

இரண்டாம் பராக்கிரமபாகு என்னும் மன்னன் காலத்தில் இயற்றப்பட்ட நூலாகும். ஆகவே அக்காலத்தில் வெசாக் விழாவில் இடம்பெற்ற அம்சங்கள் பற்றி இந்நூல் கூறுகிறது எனக் கொள்ளலாம்.

விழாவின் போது இடம்பெற்ற ஊர்வலத்தில் அரசன் ஊர்வலமாகத் தெருக்களின் ஊடாக வந்தான். அவனைச் சூழ யானைப்படை குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்ற நாற்படையும் வந்தன. புத்தபெருமானின் புனிதச் சின்னங்களான புனித தந்தம், பிச்சா பாத்திரம் என்பன ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன, என அது கூறுகிறது. விழாவின் முக்கிய சில அம்சங்களாகப் பின்வருவன அமைந்தன.

- விகாரைகளில் ஆயிரம் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. வானத்தில் பூத்த நட்சத்திரங்கள் போல் அவை ஒளி வீசிப் பிரகாசித்தன.
- சடங்குகளை நடத்துவோர் இசைப் பாடல்களைப் பாடிய படி ஊர்வலத்தில் சென்றனர். இப்பாடல்கள் மக்களுக்கு நலம் உண்டாகுக என வாழ்த்தும் பாடல்களாக அமைந்தன. (சடங்குகளைச் செய்வோர் பலிபோஷகாக்கள் - Balibhojakas என்னும் பாளி மொழிச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர்.)
- அங்கும் இங்குமாக பல இடங்களில் மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அம்மேடைகளில் ஏறி நடனக் குழுக்கள் நடனமாடி மக்களை மகிழ்வித்தன.
- ஐவகை இசைகளை இவைசாணர் குழுக்கள் இசைத்தன.
- பொது மக்களின் வழிபாட்டிற்காகப் புத்த பெருமானின் புனித சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

வெசாக் விழா ஏழு நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ‘சக்கிர என்ற தேவலோகத்தவனின் சுவர்க்க பூமியில் நிகழ்ந்த விழா போன்று இப் பூவுலகில் மானிடரின் விழாவாக இவ்விழா அமைந்தது’ என்று இடைக்கால இலக்கியங்களின் அணியலங்கார நடையில் பூஜாவளிய இவ்விழாவை வருணிக்கின்றது. இந்த விழா ஒரு அரச விழா (State Festival) என்பதும் அரசனின் தலைமையில் நடத்தப்பட்டதென்பதும் தெளிவாகத் தெரிகிறது. இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்திற்கும் 1885-ற்கும் இடைப்பட்ட நீண்டகால எல்லையுள் வெசாக் விழா பெற்ற வளர்ச்சியை அறிவதற்கான சான்றுகள் இல்லை. ஆயினும் கண்டி அரசர்கள் காலத்தில், கண்டி அரசின் முக்கிய நான்கு விழாக்களில் ஒன்றாக வெசாக் விழா குறிப்பிடப்படவில்லை, என்பது கவனிப்புக்குரியது. கண்டி அரசின் நான்கு முக்கிய விழாக்கள் ஆவன.

- சித்திரைப் புத்தாண்டு விழா
- புனித தந்தத்தின் ஊர்வலம்
- கார்த்திகேயத் தெய்வத்திற்கான விழா
- அறுவடை விழா (அளுத்துல் மங்கலய)

கண்டி இராச்சியக் காலத்தில் புத்த பெருமானின் புனித தந்தத்தை ஊர்வலமாக எடுத்துச்செல்லும் ‘பெரஹர’ நடைபெறுவதுண்டு. பௌத்த மக்களின் சமயத் தேவைகளையும் (Religious Needs) கண்டி அரசின் அரசு தேவைகளையும் (Needs of the State) ஒன்று கலந்ததான விழாவாக இது பரிணாமமடைந்து விட்டது என ஊகிக்கலாம். ஆகையால், ‘பெரஹர’ விழாக் கொண்டாட்டம் முக்கியத்துவமுடையதாக மாறியிருந்தது. கண்டியரசர் காலத்தில் வெசாக் பெரியதொரு விழாவாக இருக்கவில்லை. ஆகவே 1885-ல் வெசாக் விடுமுறையை அறிவித்தபோது, வெசாக் விழாக் கொண்டாட்டம் பற்றிய பாரம்பரிய மரபொன்று இருக்கவில்லை. அது அருகிவிட்ட ஒரு மரபாகவே இருந்தது. இதனால் புதிய மரபு ஒன்றை மீளுருவாக்க வேண்டியிருந்தது. அதாவது மரபின் மீளுருவாக்கம் (Re Creation) அவசியமாயிற்று. இம் மீளுருவாக்கம் காலனியப் பின்புலத்தில் (Colonial Context) நடைபெற்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

### வெசாக் விழாவின் மீளுருவாக்கம்:

வெசாக் விழாவின் மீளுருவாக்கம் காலனியப் பின்புலத்தில் நடைபெற்றதென்று மேலே குறிப்பிட்டோம். ஆகவே, நாம் கேட்க வேண்டிய வினாக்களாவன.

- காலனிய ஆட்சியில் மேலாண்மை பெற்றிருந்த கருத்தியல்கள் எவை? காலனிய அரசு எவ்வகைக் கருத்தியல்களை மக்களிடம் பரப்புவதற்கு விரும்பியது?
- காலனிய ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்ட மக்கள் எத்தகைய கருத்தியல்களையும் நடைமுறைகளையும் பாவனை (Imitation) செய்தனர்?


இலங்கையின் பௌத்தர்கள் அக்காலகட்டத்தில் தமது சமயத்தை நவீன காலத்தின் மாற்றங்களுக்கேற்றதாக மாற்றும் தேவையை உணர்ந்தனர். அவர்களுக்குக் கிறிஸ்தவ சமயத்தினரின் நடைமுறைகளும், ஒழுங்கமைப்பு முறைகளும் ஆதர்சம் அளிப்பனவாக அமைந்தன. தமது சமயத்தை ஒழுங்கமைத்துக் கொள்வதில் கிறிஸ்தவத்தை வழிகாட்டியாகக் கொண்டனர். பௌத்த சமயத்திற்குப் புத்துயிரளிப்பதற்குக் கிறிஸ்தவ சமய நடைமுறைகளைப் பிரயோகிப்பதில் முன்னோடியாக விளங்கியவர்களில் மொஹிட்டிவத்தே குணானந்த தேரர் (1823 - 1891) முக்கியமான ஒருவர். அவர் உருவாக்கிய நிறுவனங்களில் மூன்றைக் குறிப்பிடலாம்.

- ‘போதிராஜ சமிதிய’
- அபயகிரி ஆரக்சக சமிதிய (அபயகிரி விகாரை அழிவுற்ற நிலையிலிருந்தது. இதனைப் பாதுகாக்கும் நோக்கமுடைய சங்கம்)
- ‘பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கான சங்கம் (சர்வ சாசன அபிவிருத்தித் தாயக்க சமாகம்)

இந்நிறுவனங்கள் கிறிஸ்தவ மிஷனரி முறைகளைப் (Missionary Methods) பின்பற்றி நிறுவப்பட்டவை. 1880-ல் கர்ணல் ஒல்கொட் கொழும்பிற்கு வந்துசேர்ந்தார். அவரின் வருகை மொஹிட்டிவத்தே குணானந்த தேரர் அமைத்திருந்த நிறுவனங்களிற்குப் புத்துயிரூட்டியது. அந்நிறுவனங்களின் நடவடிக்கைகளின் பயனாகப் புதிய எழுச்சி ஏற்பட்டது. 1881 மே 13-ம் திகதி, வெசாக் தினமாக அமைந்தது. அத்தினத்தில் பௌத்த சமயக் கல்வி நிதியம் ஒன்றை ஒல்கொட் ஆரம்பித்து வைத்தார். தியோசோபிஸ்டுகள் பௌத்த சமயக் கல்

விக்கான 'ஞாயிறு பாடசாலைகளை'-யும் அமைத்தனர். பௌத்தத்தைப் போதிப்பதற்கான கைநூல்களையும் வழி காட்டிகளையும் எழுதத் திட்டமிட்டனர். 'பௌத்த வினா விடை' (Buddhist Catechism) அத்தகையதொரு கைநூலாகும்.

மேற்கூறியவற்றை அவர்கள் திட்டமிட்டபோதும், பௌத்த சம யத்தவர்களை அணிதிரட்டவும், அவர்களுக்குச் சமய உணர்




வூட்டவும், உதவக்கூடியதான கிறிஸ்மஸ் விழா போன்ற பெரு விழா ஒன்று தமக்கு இல்லையே என்பதை உணர்ந்தனர். வெசாக் தினம் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டபோது தாம் தேடிக்கொண்டிருந்த ஒன்று கையில் கிடைத்தது போன்ற உணர்வால் மகிழ்ச்சியடைந்தனர். 1870-களில் கிறிஸ் தவர்களின் கிறிஸ்மஸ் (Christmas) இலங்கையில் கோலாக லமாகக் கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவப் பத்திரிகைகள் மூலம் இதனை அறியமுடிகிறது. கிறிஸ்மஸ் விழாவை கிறிஸ் தவ மிஷனரிகள் மதமாற்றத்திற்கான ஒரு கருவியாகக் கையாண்டனர். கிறிஸ்தவரல்லாத மக்களையும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் பங்குகொள்ளும்படி ஊக்கமளித்தனர். கிறிஸ்தவ மிஷனரிகளால் நடத்தப்பட்ட பாடசாலைகளில் கல்விகற்ற பௌத்த சமயச் சிறுவர்களும் சிறுமிகளும் கிறிஸ் மஸ் விழாவில் பங்குகொண்டு களியாட்டத்திலும், விளையாட் டுகளிலும் பங்குபற்றுவதில் மகிழ்ச்சியடைந்தனர்.

புதிதாக வெசாக் விழாவைக் கொண்டாடும் தேவை 1880-களில் எழுந்தபோது, அவ்விழாவை வடிவமைப்பதில் தியோ சோபிஸ்டுகள் அக்கறையோடு ஈடுபட்டனர். விழாவைத் திட்ட மிடுவதிலும் வடிவமைப்பதிலும் பௌத்த பிக்குகளும், உபா சகர்களும் பங்குகொண்டனர். இவர்கள் யாவரும் பௌத்த மறுமலர்ச்சியாளர்களாய் இருந்தனர். 'பூஜாவளிய' குறிப்பிடு வது போன்ற பழையகால வெசாக் கொண்டாட்ட வழமைகள் பற்றிக் கல்வியறிவுமிக்க பிக்குகள் தெரிந்து வைத்திருந்த னர். ஆனால் பிறருக்குக் கிறிஸ்தவர்களின் நடைமுறைகளே வழிகாட்டியாக அமைந்தன. இதனால் வெசாக் தினக் கொண் டாட்டங்களில் கிறிஸ்தவ நடைமுறைகள் புகுந்தன.

'கறோல் குழுக்கள்' கிறிஸ்மஸ் விழாவில் முக்கிய இடம்பெற் றிருந்தன. 'கரோல் வண்டி' (Carol Cars) ஊர்வலமாக வர, கரோல் குழுக்கள் பாடியும் ஆடியும் பின்தொடருவது கிறிஸ் மஸ் கொண்டாட்டங்களில் இடம்பெற்றது. இது மக்களைக் கவரும் விடயமாக இருந்தது. பௌத்தர்கள் கிறிஸ்தவர்களின் இந்த நடைமுறையை வெசாக் விழாவின் அங்கமாக மாற்றி னர். பௌத்த சமய மரபில் இசை மரபு ஒன்று இருக்க வில்லை. வெசாக் தின விழாக்களில் 'பௌத்த கறோல்கள்' (Buddhist Carols) இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டது. பௌத் தர்களின் கறோல் குழுக்கள் கொழும்பு நகரைச் சுற்றி வலம் வந்ததோடு, தாம் தெரிவுசெய்த பௌத்தர்களின் வீடுகளிற் குச் சென்று, வீட்டில் உள்ளவர்களைச் சந்தித்துச் சமய உணர்வைப் பகிர்ந்துகொண்டன. குழு உறுப்பினர்கள் சிலர் பௌத்த விகாரைகளுக்குச் சென்று புத்த பகவானின் திருவு ருவத்திற்கு மலர்தூவி வழிபட்டனர்.

தொடக்கத்தில் பௌத்தர்களின் 'கறோல்' பாடல்களின் உள் ளடக்கம் கிறிஸ்தவர்களின் துதிப்பாடல்களைத் தழுவி எழு தப்பட்டவையாக அமைந்திருந்தன. லீட்பீட்டர் (Leadbeater) இத்தகைய பாடல்களைக் கிறிஸ்தவப் பாடல்களை அடி யொற்றி எழுதினார். அவர் பௌத்த சமயத்திற்கேற்ற வகை யில் புதிய சொற்களை இப்பாடல்களில் புகுத்தினார். கிறிஸ் தவர்கள் தேவனைப் புகழ்ந்து பாடியவற்றை புத்த தர்மத் தைப் போற்றும் பாடல்களாக மாற்றினார்.

லீட்பீற்றர் இயற்றிய பாடல் ஒன்று பௌத்த தர்மத்தைப் புகழ் வதாக அமைந்தது. இப்பாடல் பைபிளைப் போற்றும் கிறிஸ் தவர்களின் துதிப்பாடல் ஒன்றை ஏறக்குறைய முழுமையாகத் தழுவி எழுதப்பட்டது. சில சொற்களையும் தொடர்களையும் மட்டும் அவர் மாற்றியிருந்தார். அவர் இவ்விதமாக மாற்றம் செய்து பிரசுரித்த பாடல் The Buddhist சஞ்சிகையின் 1893 ஜனவரி இதழில் பிரசுரமாயிற்று.

பௌத்த கறோல் பாடல்களின் இசையும் கிறிஸ்தவர்களின் இசைப் பாணியைத் தழுவியதாக அமைந்தது. கறோல் குழுக் கள் மேற்கத்திய இசைக் கருவிகளான கோர்னட் (Cornet) ஹார்மோனியம், வயலின் என்பனவற்றையும் உபயோகித்தன. லீட்பீட்டர் 'வெசாக்' என்ற தலைப்பிலான கட்டுரையில் மேற் கத்திய இசை வடிவங்களைப் பௌத்தர்கள் உபயோகிப்பது பொருத்தமானது என நியாயப்படுத்தும் முறையில் குறிப் பொன்றைத் தெரிவித்தார்.

வெசாக் கொண்டாட்டம் ஒரு விழாவாகப் பரிணமித்த போது, அவ்விழாவின் அலங்காரத்திற்குத் தேவைப்பட்ட விளக்குக ளையும், லாந்தர்களையும் பௌத்த வர்த்தகர்கள் யப்பானிலி ருந்தும் சீனாவிலிருந்தும் இறக்குமதி செய்ய ஆரம்பித்தனர்.

இதற்கு முன்னரே கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் விழாவிற்காக விளக்குகளை இறக்குமதி செய்து வந்தனர். அவ்வழக்கத் தைப் பௌத்தர்களும் பின்பற்றினர். கத்தோலிக்கர்கள் கிறிஸ்மஸ் விழாவின்போது பந்தல்களை அமைத்து, அப் பந் தல்களில் கிறிஸ்துவின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை எடுத்துக்காட்டும் ஓவியங்களைக் காட்சிப்படுத்தினர். அப்பந் தல்களில் கிறிஸ்தவ ஞானிகளின் வாழ்க்கையைச் சித்திரிக் கும் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. வெசாக் பந்தல் கள், கத்தோலிக்கரின் பந்தல்களின் பாணியில் அமைந்த தோடு, புத்தபெருமானின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படி மங்களையும் ஓவியங்களையும் காட்சிப்படுத்தின. அப்பந்தல் களில் ஜாதகக் கதைகளைச் சித்திரிக்கும் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.


கிறிஸ்தவப் பண்பாட்டு மரபுகளைப் பௌத்தம் தழுவிக் கொள்ளுதல் காலனிய ஆட்சிக் காலத்தில் மேற்கத்திய பண் பாட்டை ஏற்று உள்ளீர்த்துக்கொள்ளுதல் மூலம் நடைபெற் றது. ஆயினும் மேற்கத்தியப் பண்பாட்டைத் தழுவிக் கொள்வ தற்கு எதிர்ப்பும் இருந்து வந்தது. புரட்டஸ்தாந்திய மிஷனரி கள் பௌத்தர்கள் கிறிஸ்தவ நடைமுறைகளைத் தழுவிக் கொள்வதை எதிர்த்தனர். பௌத்தர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக ஆளுநர் கோர்டனைக் கண்டித்தனர். பௌத்தத்திற்கு ஆதரவும் அனுதாபமும் காட்டிய தியோசோ பிஸ்டுகள் போன்ற மேற்கு நாட்டினரையும் மிஷனரிகள் கண் டித்தனர். 1883-1900 காலத்தில் இலங்கையில் பணியாற்றிய வண. தோமஸ் மொஸ்கிறிப் (Rev.Thomas Moscrip) என்ற மெதடிஸ்ட் பாதிரியாரின் கூற்றுகள் இதற்குச் சிறந்த எடுத் துக்காட்டாகும். இப் பாதிரியார் தற்காலப் பௌத்தம் (Present day Buddhism) என்ற விடயம் குறித்து எழுதும்போது, பௌத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் மேற்கத்திய அனுதாபி களை ‘அற ஒழுக்கம் தவறிய நாடோடிகள்’ எனக் குறிப்பிட் டார். ‘இப்பொழுது ஏற்பட்டு வரும் பௌத்த மறுமலர்ச்சியில் ஆளுநர் கோர்டனின் செல்வாக்கும் உள்ளது’ என அவர் ஆளுநரைக் குற்றஞ்சாட்டினார். தொல்லியல் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்த கோர்டன், எல்லைமீறி, பௌத்தர்க ளின் போஷகராகச் செயற்படுவதையும், சட்டசபையில் அவ ரின் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதையும் தோமஸ் மொஸ்கிறிப் குறிப்பிட்டார். ‘புத்தரின் பிறந்தநா ளைப் பொது விடுமுறை தினமாக அறிவித்தவர் இவர்தாம்’ என்றும் இவரின் செய்கையால் பௌத்தர்கள் இப்போது தைரி யத்தோடு கிறிஸ்தவத்தின் கூறுகளைத் தயக்கமின்றி அபக ரித்துத் தங்கள் சமயத்தை நம்பத்தகுந்த ஒரு சமய நெறியா கக் காட்ட முயல்கின்றனர் என்றும் கூறினார். ‘The Light of Asia’ (ஆசிய ஜோதி) என்ற நூல் நேர்மையற்ற முறையில், கிறிஸ்துவைத் துதித்துப் போற்ற உபயோகிக்கும் ‘திருநாமங் களை’ (The Glorious Names) புத்தரைப் புகழ்வதற்காக உப யோகித்துள்ளது என்றும் கண்டித்தார். கிறிஸ்தவ கறோல் கீதங்களை அப்படியே பாவனை செய்து புத்தரின் பிறந்தநாட் கொண்டாட்டத்தில் பாடுகிறார்கள். பெருவிழாவாக அதனை நடத்துகிறார்கள்’ என்றும் அவர் கண்டனம் செய்தார். (The Ceylon Friend பத்திரிகை ஒக்ரோபர் 16, 1889).

மொஸ்கிறிப் பாதிரியாரின் கண்டனத்திற்குப் பதிலடி கொடுக் கும் வகையில் ‘The Buddhist’ என்ற பௌத்தர்களின் பத்தி ரிகை 1887 நவம்பர் 8-ம் திகதி இதழில் கண்டனம் வெளியிட் டது. கிறிஸ்தவ மதப் பரப்புகையில் தீவிரமாக உழைத்து வந்த பாதிரிகள், பெரும்பான்மையினரின் சமயமாகிய பௌத் தத்தை ஆதரித்துப் பேசும் உரிமை ஆளுநர் கோர்டனுக்குக் கிடையாது என்று கூறினர். பௌத்தர்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் பொய்மையையும், அசத்தியத்தையும் நிலைநி றுத்த உதவுவதாகவே இருக்கும் என்று அவர்கள் கூறினர். தீவிரவாதப் பாதிரிகள் பேரரசின் அதிகாரம், சபிக்கப்பட்ட ஆன்மாக்களை விடுவித்துக் கிறிஸ்தவர்களாக மாற்றி, நற்க திக்குக் கொண்டுசெல்வதற்காகவும் உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் கருதினார்கள். காலனிய ஆட்சியாளர்க ளுக்கு அரசியல் சூழுலுக்கேற்ப நடந்துகொள்ளவேண்டிய தேவை இருந்தது பற்றிச் சிறிதும் சிந்திக்காதவர்களாகத் தீவி ரவாதப் பாதிரிகள் செயற்பட்டனர். கிறிஸ்தவம் தவிர்ந்த வேறு எந்தச் சமயத்தையும் மரியாதையுடன் நோக்குவதை அவர்க ளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று இலங்கையில் கொண்டாடப்படும் வெசாக் பௌத்த மறுமலர்ச்சியின் பின்புலத்தில் மீளுருவாக்கம் செய்யப்பட்ட விழாவாகும். இந்த மீளுருவாக்கத்தின் போது மேற்குநாட்டுப் பண்பாட்டின் கூறுகள் பல உள்ளீர்த்துக்கொள்ளப்பட்டன. மேலாதிக்கமுடைய மேற்குப் பண்பாட்டைக் காலனியப் பின்பு லத்தில் ஏற்றுக்கொண்ட உளப்பாங்கை இது எடுத்துக்காட்டு கிறது. பௌத்தர்களிடையே அன்று வெளிப்பட்ட மேற்கத்தி யப் பண்பாட்டு விருப்பத்துடன் கூடவே, கிறிஸ்தவ எதிர்ப்பும் கலந்திருந்தது. கிறிஸ்தவ மிஷனரிகளை எதிர்த்த பௌத்தர் கள் மேற்கத்தியப் பண்பாட்டை உள்ளீர்ப்பதன் மூலம், தமக் குப் பல்லாண்டு காலமாக மறுக்கப்பட்ட அடையாளத்தை உறுதிசெய்து கொண்டதோடு, அதனை மேன்மைப்படுத்தி னர். இந்தப் பின்புலத்தில்தான் ஆர்தர் கோர்டன் என்ற ஆளு நர் 1885-ல் வெசாக் தினத்தைப் பொது விடுமுறையாக அறி வித்தார். இது பௌத்தர்களுக்குக் காலனிய அரசாங்கம் வழங்கிய ஒரு சலுகை. இச் சலுகையைப் பயன்படுத்திய பௌத்தர்களுக்கு இது ஊக்கம் தருவதாக அமைந்தது. ஆர் தர் கோர்டன் பௌத்தர்கள் மீது அனுதாபம் கொண்டவர் ஆயினும், அவர் காலனிய அரசின் பிரதிநிதியாக ஆளுநர் என்ற வகையில் வெசாக் விடுமுறை என்ற அறிவிப்பை ஒரு அரசியல் தந்திரோபாயமாகவே கையாண்டார். கொட்டாஞ்சே னைக் கலகத்தின் போது பௌத்தர்களுக்கு அநீதி இழைக் கப்பட்டது. காலனிய அரசு அநீதி இழைக்கப்பட்டதை ஏற் கவோ, நிவாரணம் வழங்கவோ முன்வரவில்லை. வெசாக் விடு முறை தின அறிவிப்பு கோர்டனின் அரசியல் தந்திரோபாய நடவடிக்கையாகும்.

வெசாக் கொண்டாட்டத்தின் மீளுருவாக்கத்தின் வரலாற்றுப் பின்புலம் பற்றிய விமர்சன நோக்கு சமகாலத்தில் இலங்கை யின் சமயப் பண்பாட்டின் கோலங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

**நன்றி:**
Religion in Context
Buddhism and Socio - Political Change in SriLanka (2007)
Edited by Jayadeva Uyangoda
Social Scientist Association, Colombo SriLanka.
மேற்படி நூலின் ‘The Re-creation of Vesak’ என்ற தலைப்பிலான கட்டுரை (பக்கம் 56-63)



shanmugalingam@thaiveedu.com



## லெனினின் நூற்றாண்டை நோக்கி - 4

# ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் சிந்தனைகள்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புக்கள்:

1924-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி விளாடிமிர் லெனின் மறைந்தார். அவர் இறந்து நூறு வருடங்கள் ஆகின்றன. இன்றும் உலகளாவிய அரசியல் செல்நெறியில் தாக்கம் செலுத்துபவராக அவர் இருக்கிறார். அது ஏன் நிகழ்ந்தது? எவ்வாறு சாத்தியமாகியது என்பதை விளங்கிக் கொள்ள இந்தக் கட்டுரைத் தொடர் முயல்கிறது. 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரலாற்றில் நுழைந்த விளாடிமிர் லெனினின் மார்க்சிசத்திற்கான தத்துவார்த்த மற்றும் நடைமுறை பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அவரது பங்களிப்பானது, மார்க்சியத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தையும், சர்வதேச தொழிலாள வர்க்க இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தையும் ஏற்படுத்தியது. தத்துவத்துறையில், அது அரசியல் பொருளாதாரமாக இருக்கட்டும் அல்லது விஞ்ஞான கம்யூனிசத் துறையாக இருக்கட்டும் லெனினின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததும் தாண்டிச் செல்லமுடியாததுமாகும். மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோரின் வழித்தடத்தை முன்னெடுத்துச் சென்று அவர்களின் சிந்தனைகளை புதிய வரலாற்று சகாப்தத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம், லெனின் சமூக வளர்ச்சியின் மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு பதில்களை வழங்கினார். இவை எல்லா இடங்களிலும் உள்ள மக்களின் மனதைப் பாதிக்கும் பிரச்சினைகளாக இருந்தன. அவற்றுக்கான அவரது தீர்வு முன்மொழிவுகள் உலக புரட்சிகர இயக்கம் மற்றும் அனைத்து மனிதகுலத்தின் எதிர்காலம் சார்ந்ததாக இருந்தன.

தற்போது பொதுவாக லெனினிசம் என்றழைக்கப்படும் லெனினின் சிந்தனைகள் நமது சகாப்தத்தின் மார்க்சியமாகும். 20-ம் நூற்றாண்டின் புரட்சிகர மாற்றங்கள் அவரது பெயருடன் தொடர்புடையவை, அவை உலகின் முகத்தை மாற்றியிருப்பது டன் சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தை நோக்கி மனிதகுலத்தின் திருப்பத்தைக் குறிக்கின்றன. லெனின் வரலாற்றின் முதல் மார்க்சிஸ்ட் மற்றும் தொழிலாள வர்க்கத் தலைவர் ஆவார். விஞ்ஞான கம்யூனிசத்தின் கோட்பாடுகளை வாழ்க்கையாக மாற்றுவதற்கான மக்கள் இயக்கத்திற்கு அவர் தலைமை தாங்கினார். வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சியை முதன்முதலில் இயக்கியவர் அவரே உலகின் முதல் சோசலிச அரசின் முதல் தலைவர்.

லெனின் இறந்து ஒரு நூற்றாண்டு கடந்தும் அவரது பெயர் உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் ஆழ்ந்த மரியாதையையும் நேர்மையான பாசத்தையும் ஈர்த்துள்ளது. லெனினின் கருத்துக்கள் சோசலிச நாடுகளுக்கு புதிய வாழ்க்கையை கட்டமைக்கும் முயற்சியில் வழிகாட்டுகின்றன. மேலும் கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியத்தின் கோட்டைகளிலும் வளரும் நாடுகளிலும் உழைக்கும் மக்களின் பெரும் பகுதியினரை வென்றெடுக்கின்றனர். பரந்த முற்போக்கு வட்டங்களில் லெனினின் எழுத்துக்களின் மீதான ஆர்வம் சீராக வளர்ந்து வருகிறது. லெனினின் படைப்புகள் உலகின் 127 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இது உலகெங்கிலும் லெனினின் கருத்துக்களின் வெற்றியை உறுதியாகக் காட்டுகிறது. லெனினைப் பற்றிய உண்மை எல்லா இடங்களிலும் சிறப்பாகவும் அறியப்பட்டு வருகிறது.

லெனினது முதன்மையான பங்களிப்புகளில் ஒன்று ஏகாதிபத்தியம் குறித்த அவரது சிந்தனைகளாகும். 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்ற அவரது நூல் இன்றளவும் செல்வாக்குப் பெற்றதாக இருக்கிறது. அந்நூலை மையமாகக் கொண்டதாகவே இக்கட்டுரை அமைகிறது. ஏகாதிபத்தியம் குறித்த அவரது சிந்தனைகள் முதலாளித்துவம் குறித்தும் பொருளாதார முறைகள் குறித்தும் புதிய கேள்விகளை எழுப்பின.

### ஏகாதிபத்தியம் என்ற சிந்தனையின் உருவாக்கம்:

1895 மற்றும் 1913-க்கு இடையில், லெனின் தனது பல எழுத்துக்களில், ஏகாதிபத்திய சகாப்தத்தின் சில பண்புகளை குறிப்பிட்டார், உதாரணமாக: உற்பத்தியின் செறிவு மற்றும் ஏகபோக அறக்கட்டளைகள் மற்றும் முறையற்ற வணிகக் கூட்டமைப்புகளின் பெருக்கம், மூலதன ஏற்றுமதியின் முக்கியத்துவத்தை ஒப்பிடும்போது பொருட்களின் ஏற்றுமதி, முதலாளித்துவ பொருளாதார உறவுகளின் சர்வதேசமயமாக்கல், உலகச் சந்தையைப் பிரிப்பதற்கான போட்டி ஐரோப்பிய சக்திகளுக்கு இடையிலான போராட்டம், முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணித்தனம் மற்றும் சிதைவு மற்றும் சோசலிசத்திற்கு மாறுவதற்கான கால நிலைமைகளை முதலாளித்துவத்தின்

சமூகமயமாக்கல் உற்பத்தி மூலம் உருவாக்குதல்.

எவ்வாறாயினும், ஆகஸ்ட் 1914-ல் முதலாம் உலகப் போர் வெடிக்கும் வரை ஏகாதிபத்தியம் குறித்து விரிவான குறிப்புகளை லெனின் எழுதவில்லை. முதலாம் உலகப் போர் ஏற்பட்டவுடன் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டத்தின் தன்மை பற்றிய விரிவான மற்றும் முறையான மார்க்சிய பகுப்பாய்வு செய்ய வேண்டிய அவசியத்தை லெனின் உணர்ந்தார். உதாரணமாக 1902-ல் ஹாப்சன் செய்த பகுப்பாய்வு, 1910-ம் ஆண்டு ஆஸ்திரிய மார்க்சிஸ்ட் பொருளாதார நிபுணர் ருடால்ஃப் ஹில்ஃபர்டிங் தனது நிதி மூலதனம் புத்தகத்தில் விவரித்தவை ஆகியவற்றுக்கு அப்பால் செல்ல வேண்டும் என்பது லெனினின் எண்ணமாக இருந்தது. இதுவே 'ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்ற மிகவும் மதிப்பு மிக்க தத்துவார்த்த பகுப்பாய்வை உருவாக்கியது.



ஹாப்சன் மற்றும் ஹில்ஃபர்டிங் ஆகிய இருவரின் படைப்புகள் பற்றிய அவரது கருத்துக்களைக் கருத்தில் கொண்டு, ஏகாதிபத்தியம் பற்றிய தனது சொந்த பகுப்பாய்வை உருவாக்க வேண்டிய அவசியத்தை லெனின் ஏன் உணர்ந்தார் என்பதற்கான பதிலை 1920-ல் தனது புத்தகத்தின் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் பதிப்புகளுக்கு எழுதிய முன்னுரையில் வழங்குகிறார்:

*'புத்தகத்தின் முக்கிய நோக்கம், வருவாய்களினதும் அனைத்து நாடுகளின் முதலாளித்துவ அறிஞர்களின் ஒப்புதலினதும் அடிப்படையிலும் அமைந்த மறுக்க முடியாத முதலாளித்துவ புள்ளி விவரங்களின் சுருக்கமான தரவுகளைக் கொண்டு உலக முதலாளித்துவ அமைப்பு முறையின் படத்தை அதன் சர்வதேசத் தன்மையில் முன்வைப்பதன் மூலம் 20-ம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் உலக ஏகாதிபத்தியப் போருக்கு முன்புவரை சர்வதேச உறவுகள் எப்படி இருந்தன என்று புரிந்துகொள்வதாகும்.*

இதைச் செய்ய, லெனின் மனதில் மூன்று நோக்கங்கள் இருந்தன:

- 1914-18 போர் இரு தரப்பிலும் ஏகாதிபத்தியம் (இது ஒரு இணைத்தல், கொள்ளையடிக்கும் போர்) என்பதை நிரூபிப்பது. அனைத்திற்கும் மேலாக இரண்டாம் அகிலத்தின் தலைவர்களின் வாதங்களை மறுப்பது. அதன் முன்னணி கோட்பாட்டாளரான கார்ல் காவுட்ஸ்கியின் கருத்துப்படி, போரில் ஒவ்வொரு தரப்பும் வெறுமனே 'தேசிய பாதுகாப்பிற்காக' போராடுகின்றன, அதனாலேயே இந்த தலைவர்களில் சந்தர்ப்பவாத அல்லது வர்க்க ஒத்துழைப்பாளர்கள் தங்கள் சொந்த நாடுகளின் அரசாங்கங்களின் போர் முயற்சிகளை ஆதரிக்கவில்லை.
- ஏகாதிபத்தியத்தின் தன்மை பற்றிய காவுட்ஸ்கியின் தத்துவார்த்த வாதங்களை எதிர்ப்பதற்கும், ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளின் ஆழத்தையும் அது எழுப்பும் தவிர்க்க முடியாத புரட்சிகர நெருக்கடியையும் அவர் மறைத்துவிட்டார் என்பதை நிரூபிக்கவும் ஏகாதிபத்தியம் குறித்து லெனின் விரிவாக எழுதவேண்டியிருந்தது.
  - முதலாவதாக, 'இன்றைய முதலாளித்துவத்தின் அனைத்து நிகழ்வுகளையும் ஏகாதிபத்தியத்துடன் அடையாளப்படுத்துவது – (முறையற்ற வணிகக் கூட்டமைப்புகளின்) கார்டெல்கள், பாதுகாப்பு, நிதியாளர்களின் ஆதிக்கம் மற்றும் காலனித்துவக் கொள்கை - தவறு' என்று வாதிடுவதன் மூலம் காவுட்ஸ்கி இதைச் செய்தார். அதாவது, காவுட்ஸ்கியின் கூற்றுப்படி, ஏகாதிபத்தியம் முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சியின் ஒரு 'கட்டம்' அல்ல, மாறாக மூலதனத்தின் ஒரு 'சிறப்புக் கொள்கை', இதனால் 'ஒவ்வொரு தொழில்துறை முதலாளித்துவ தேசமும் விவசாயப் பிரதேசங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அல்லது எப்போதும் பெரிய பகுதிகளை இணைக்கும் முயற்சியில் உள்ளது'.
  - இரண்டாவதாக, ஏகாதிபத்தியத்தின் இந்தக் கண்ணோட்டத்தில் இருந்து, இந்த 'சிறப்புக் கொள்கை' உலகப் போருக்குப் பிறகு ஒரு புதிய கொள்கையின் மூலம் மாற்றப்படலாம் என்று காட்ஸ்கி வாதிட்டார். அதாவது 'வெளியுறவுக் கொள்கைக்கான கார்டெல்கள், தீவிர ஏகாதிபத்தியத்தின் கட்டம், அனைத்து போட்டி நிதிக் குழுக்களையும் ஒரே, உலகளாவிய நம்பிக்கையாக அமைதியான முறையில் ஒன்றிணைத்தல் மற்றும் ஏகாதிபத்தியத்தின் புனிதக் கூட்டணியின் மூலம் ஏகாதிபத்தியத்தை ஒழித்தல்' சாத்தியம் என வாதிட்டார். ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் மிக உயர்ந்த மற்றும் கடைசி கட்டம் என்பதை நிரூபிப்பதன் மூலம் லெனின் இந்த வாதத்தை எதிர்க்க முயன்றார்.
- முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் இந்தப் புதிய கட்டத்திற்கும், 'மேம்பட்ட' முதலாளித்துவ நாடுகளின் தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் ஒப்பீட்டளவில் நிலையான சந்தர்ப்பவாத, ஏகாதிபத்திய சார்புப் போக்கு இருப்பதற்கும் இடையே நியாயமான தொடர்பு இருப்பதை நிரூபிப்பது முக்கியமானதாக இருந்தது. இதை லெனின் தனது நூலின் முன்னுரையின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

*‘இந்த நிகழ்வின் பொருளாதார வேர்களை புரிந்துகொண்டு, அதன் அரசியல் மற்றும் சமூக முக்கியத்துவத்தை மதிப்பி டாத வரை, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நடைமுறைப் பிரச்சி னைகள் மற்றும் வரவிருக்கும் சமூகப் புரட்சியின் தீர்வை நோக்கி ஒரு படி கூட எடுக்க முடியாது.’*

இருப்பினும், ‘இந்த நிகழ்வின் பொருளாதார வேர்கள்’ மற்றும் அதன் ‘அரசியல் மற்றும் சமூக முக்கியத்துவம்’ ஆகியவை புத்தகத்தில் சுருக்கமாக மட்டுமே கோடிட்டுக் காட்டப்பட்டுள் ளன. ‘ஏகாதிபத்தியம் மற்றும் சோசலிசத்தில் பிளவு’ என்ற கட் டுரையில் அவை இன்னும் விரிவாக எடுத்துக்கொள்ளப்பட் டன. லெனின் ஏகாதிபத்தியம் பற்றிய தனது புத்தகத்தை எழுதி முடித்த சில மாதங்களுக்குப் பிறகு, 1916 அக்டோப ரில், ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (போல் ஷிவிக்குகள்) மைய அமைப்பான சோசியல் டெமோக்ராட்டா வின் போர்க்கால தத்துவார்த்த இணைப்பான Sbornik Sotsyal-Demokrata-ல் இக்கட்டுரை வெளியிடப்பட்டது. .1915-ம் ஆண்டின் நடுப்பகுதியில் லெனின் இது தொடர்பான ஆராய்ச்சியைத் தொடங்கினாலும், இந்த புத்தகம் 1916 ஜன வரி முதல் ஜூன் வரையான மாதங்களுக்கு இடையில் எழுதப் பட்டது. இருப்பினும், இது 1917-ன் நடுப்பகுதி வரை வெளியி டப்படவில்லை.

## முதலாளித்துவத்தின் புதிய கட்டத்தின் அடிப்படை பண்புகள்:

1894-ல் சீனாவுக்கும் ஜப்பானுக்கும், 1898-ல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும், 1899-ல் தென்னாப்பிரிக்காவில் பிரிட்டன் - போயர் குடியரசுக்கிடையில், 1894-ல் சீனாவுக்கும் ஜப்பா னுக்கும் இடையே, 190-5ல் ஜப்பானுக்கும் ரசியாவுக்கும் இடையே என்று 19-ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க வருடங்களும் அடுத்தடுத்து போர்களால் நிறைந்திருந்தன. 1904-ல் ரஷ்யா, 1911-ல் இத் தாலி, துருக்கி, 1912-ல் பால்கன் நாடுகள், துருக்கி, மற்றும் 1913-ல் பால்கன் நாடுகளுக்கு இடையில் தங்களை நிலைநி றுத்திக் கொள்கின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக அதிகரித்து வந்த போர்கள் 1914-ல் முதல் உலகப் போர் வெடித்ததில் உச்சத்தை அடைந்தது.

1914-18-ன் ‘பெரும் போர்’ ஒரு குறிப்பிடத்தக்க தரத்தை அப் பட்டமான பார்வைக்கு கொண்டு வந்தது, இது வளர்ந்து வரும் அளவில், ‘ஏகாதிபத்திய யுகத்தின்’ போர்களைக் குறிக் கிறது. இது உண்மையில் உலகின் மேலாதிக்கத்திற்கான ‘பெரும் சக்திகளுக்கு’ இடையிலான போராட்டமானது பொரு ளாதார வளங்களின் மீதான கட்டுப்பாடு பற்றியதானதே என்ப தைக் குறிக்கின்றது. இதை லெனின் தனது முன்னுரையில் உறுதியாக எடுத்துரைத்தார்:

*‘முதலாளித்துவம் ஒரு சில ‘மேம்பட்ட’ நாடுகளால் உலகின் பெரும்பான்மையான மக்களை காலனித்துவ ஒடுக்குமுறை யையும் கடுமையான நிதி நெருக்கடிகளையும் பிரயோகிக் கும் ஓர் உலக அமைப்பாக வளர்ந்துள்ளது. இந்த ‘கொள்ளை’ இரண்டு அல்லது மூன்று சக்திவாய்ந்த உலக கொள்ளையர் களுக்கு இடையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது (அமெ ரிக்கா, பிரித்தானியா, ஜப்பான்), அவர்கள் கொள்ளையடிப்ப தைப் பெருக்கிக்கொள்வதற்காக உலகம் முழுவதையும் போருக்குள் இழுக்கிறார்கள்.’*

ஏகாதிபத்தியம் என்பது ‘மேம்பட்ட’ நாடுகளின் அரசாங்கங்க ளின் வெளியுறவுக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றமாக மட் டும் விளக்கப்படாமல், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் இயல்பில் ஏற்பட்ட மாற்றமாகவும் விளக்கப்பட்டது. ‘பொது வாக அனைத்து வரையறைகளின் நிபந்தனைகளையும் ஒப் பீட்டு மதிப்பை மறந்துவிடக் கூடாது’ என்று எச்சரித்த லெனின், ஒரு நிகழ்வின் அனைத்து ஒருங்கிணைப்புகளையும் அதன் முழு வளர்ச்சியில் ஒருபோதும் தழுவ முடியாது’ என்று சுட்டிக் காட்டினார். ஏகாதிபத்தியத்தின் சாத்தியமான வரையறை ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் ஏகபோக நிலை என்பதை விளங்கிக் கொள்வதில் இருந்தே தொடங்க வேண்டும் என்றார். அத்தகைய வரையறை, ‘ஒருபுறம், நிதி மூலதனம் என்பது ஒரு சில பெரிய, ஏகபோக வங்கிகளின் வங்கி மூலதனம், இது தொழிலதிபர்களின் ஏகபோக வங்கிக ளின் மூலதனத்துடன் இணைக்கப்பட்டது. மறுபுறம், உலகைப் பங்கு பிரிப்பது என்பது காலனித்துவக் கொள்கையிலிருந்து எந்த முதலாளித்துவ சக்தியாலும் கைப்பற்றப்படாத பிரதே சங்களுக்கு தடையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளது, இது உலகின் நிலப்பரப்பை ஏகபோக உடைமையாகக் கொண்ட காலனித் துவக் கொள்கைக்கு மாறுகிறது’.

முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டமாக ‘ஐந்து அடிப் படை அம்சங்களை’ லெனின் குறிப்பிட்டார்:

- பொருளியல் வாழ்வின் மீது ஆதிக்கஞ் செலுத்தும் ஏகபோ கங்கள் உருவாகுமாறான மட்டத்துக்கு உற்பத்தியினதும் மூலதனத்தினதும் செறிவின் உயர்வு
- நிதி அதிகாரக் குழுமமொன்று கட்டுப்படுத்தும் நிதி மூலத னத்தின் உருவாக்கத்துக்கு வழிகோலுமாறு வங்கி மூலத னத்தினதும் தொழில் மூலதனத்தினதும் ஒன்றிணைவு
- பண்ட ஏற்றுமதியை மூலதன ஏற்றுமதி மேவுதல்
- உலகைத் தம்மிடைப் பங்கிட முனையும் சர்வதேச ஏக போக முதலாளியக் கூட்டணிகளின் உருவாக்கம்;
- முழு உலகையும் அதிபெரிய முதலாளிய வல்லரசுகள் தம் மிடைப் பிரதேசவாரியாகப் பங்கிடல்.

தனித்தனியாக நோக்கும் போது, இந்தப் பண்புகள் ஒவ்வொன் றும் மிகவும் வேறுபட்டு தனித்தியங்கும் ஆற்றல் கொண்டவை என்பது விளங்கும். ஆனால் மொத்தமாக நோக் கும் போது அது அளவறி தன்மையிலிருந்து பண்பறி தன் மையை நோக்கி மாற்றமடைவதைக் காட்டுகின்றன. முதலா ளித்துவத்தின் வளர்ச்சியில் ஒரு தரமான புதிய கட்டம். ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டால், சுதந்திரப் போட்டியை அதற்கு நேர்மாறாக, ஏகபோகமாக மாற்றுவதே அவர்களின் மையப்பண்பு. ஏகாதிபத்தியத்தின் தனித்துவமான அம்சங் களை மேலோட்டமான அல்லது தற்காலிக மாறுபாடுகள் என்று நிராகரிக்கக் கூடாது என்பதை இது சுட்டிக் காட்டுகி றது, இது தற்செயலாக முதலாளித்துவத்தின் ‘சாதாரண போக்கை’ மாற்றியமைக்கிறது. முதலாளித்துவத்தின் அத்தி

யாவசிய உற்பத்தி உறவுகள் அவற்றின் முதன்மையான பகைமைக்குள் மறைந்திருக்கும் அனைத்து சாத்தியங்களையும் (உற்பத்தி செயல்முறையின் சமூகமயமாக்கல் மற்றும் இந்த செயல்முறையின் முடிவுகளை தனிப்பட்ட முறையில் கையகப்படுத்துதல்) உருவாக்கியுள்ளன, மேலும் உற்பத்தியின் சமூக உறவுகளின் வளர்ச்சி மேலும் சாத்தியமாகும் என்பதை அவை சுட்டிக்காட்டுகின்றன. லெனினால் வேறுபடுத்தப்பட்ட ஏகாதிபத்தியத்தின் ஐந்து அடிப்படை அம்சங்களையும் ஒவ்வொன்றையும் ஆராய்ந்தால் இதை மிகத் தெளிவாகக் காணலாம்.

மிகக்குறைவான நிறுவனங்களின் கைகளில் மூலதனம் மற்றும் உற்பத்தியின் செறிவு தவிர்க்க முடியாமல் முதலாளித்துவ உற்பத்தியின் சமூக நிலைமைகளிலிருந்து பின்பற்றப்படுகிறது, அவற்றில் மிகவும் பொதுவானவை (அ) உற்பத்தியின் பல்வேறு கிளைகளின் வேறுபாட்டை உருவாக்கும் உழைப்பின் சமூகப் பிரிவு ஆகும், (ஆ) உற்பத்தி சாதனங்களின் தனியார் உரிமை. இந்த விடயங்கள் மற்றும் போட்டி அதன் தொடக்க வடிவத்தில் உள்ளது. (அ) பண்ட உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் (ஆ) உழைப்புச் சக்தி சந்தையில் ஒரு பண்டமாகத் தோன்றியுள்ளமையால், அதன் முதலாளித்துவ வடிவத்தில் போட்டியை வளர்ப்பதற்கான நிலைமைகள் உள்ளன. முதலாளித்துவ உற்பத்தியானது போட்டியைக் கட்டுப்படுத்திய வரம்புகளை உடைத்து, அதை உற்பத்தியின் இன்றியமையாத உலகளாவிய நிபந்தனையாக ஆக்கியது. உற்பத்திச் சாதனங்களின் ஒவ்வொரு முதலாளித்துவ உரிமையாளரின் மீதும் போட்டி, பொருட்களின் உற்பத்தியை மலிவாகக் குறைக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒவ்வொரு முதலாளித்துவ நிறுவனமும் அதிக அளவில் உற்பத்தி செய்வது கட்டாயமாகியது. சுருக்கமாக, முதலாளித்துவம் போட்டியை விரிவுபடுத்தித் தீவிரப்படுத்தியது. இந்த நீக்குதலின் தர்க்கரீதியான முடிவு ஒரு தனிமையான இறுதி வெற்றியாளரைத் தவிர வேறில்லை.

எவ்வாறாயினும், உறுதியாக, இந்த முடிவை அடைவதற்கு முன் சில சிரமங்களை கடக்க வேண்டும். நேரடி போட்டித்துறையானது உற்பத்தியின் வெவ்வேறு கிளைகளாகவும், பல்வேறு மையங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது (உள்ளூர் மற்றும் தேசியச் சந்தைகள் அவற்றின் ஒருங்கிணைப்பில் மட்டுமே உலகச் சந்தையாக அமைகின்றன). ஆகவே, உலக அளவில் தனித்துப் பிழைத்தவர்கள் உலகளாவிய நிலையை அடையும் முன், தனித்துப் பிழைத்தவர்கள் முதலில் இந்த உற்பத்தியின் ஒவ்வொரு கிளையிலும், இந்த ஒவ்வொரு மையத்திலும் உருவாகியிருக்க வேண்டும்.

ஆனால் உலக அளவில் உற்பத்தியின் எந்த ஒரு கிளையிலும் (எஃகு உற்பத்தி போன்றன) முழுமையான ஏகபோகத்தின் பரிணாமம், உள்ளூர் அல்லது தேசிய சந்தை அல்லது பொருளாதாரத்தின் ஏகபோகக் கட்டுப்பாட்டின் பரிணாம வளர்ச்சியுடன் முரண்படுகிறது. எனவே ஏகபோகத்தை நோக்கிய போக்கு, மிகவும் உறுதியாக மாறினால், தன்னை ஒரு சுமூகமான, நேரியல் பாணியில் உணர முடியாது, ஆனால் இயங்கியல் ரீதியாக தொடர வேண்டும், அதாவது, வன்முறை விரோதங்களின் முழுத் தொடரின் உருவாக்கம் மற்றும் முற்போக்கான மேலோட்டத்தின் மூலம். மேலும், வளர்ச்சி விகிதம், பௌதீக, வரலாற்று மற்றும் அரசியல் நிலைமைகள் மற்றும் பொருளாதார நிலைமைகள் காரணமாக, அவ்வப்போது, தொழில்துறைக்கு தொழில்துறையும் நாட்டிற்கு நாடும், இந்த முரண்பாடுகளின் சக்தி மற்றும் சிக்கலான தன்மை ஆகியவை மாறுபடாமல் இருக்க முடியாது. மற்றும் அவற்றின் இயங்கியல் விளைவுகள் எல்லாக் கணக்கீடுகளுக்கும் அப்பால் பெருக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது. எனவே, ஏகபோகத்தை நோக்கிய போக்கு முதலாளித்துவ உற்பத்தியின் முழுமையான சட்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றாலும், அது முதலாளித்துவப் போட்டியிலிருந்து 'தவிர்க்க முடியாத படிப்படியான' ஒரு வழக்கமான செயல்முறையின் மூலம் அமைதியான மாற்றத்திற்கான கற்பனாவாத சீர்திருத்தவாத, சோசலிச கனவுக்கு எந்த வகையிலும் நியாயத்தை அளிக்காது. உலக ஏகபோகத்தை (அல்லது பல தேசிய ஏகபோகங்கள்) 'மக்கள் சார்பாக' அரசால் அமைதியான முறையில் 'கைப்பற்ற' முடியும்.

இச்செயல்முறையை அதன் சுருக்கமான குறுகிய வடிவில் பார்க்காமல், அதன் உறுதியான மற்றும் பன்முகத் தன்மையில் பார்த்தால், ஏகபோகத்தை நோக்கிய போக்கு தோராயமாக மட்டுமே தன்னை உணர முடியும், முழுமையானதாக இல்லை, ஏனெனில் அதன் உறுதியான வடிவங்களில் ஒவ்வொரு விவரமான போக்கையும் உருவாக்குகிறது. ஒரு உயர் நிலையில் எதிர்ப்பை உருவாக்குவதன் மூலம் படிப்படியாக, போர் அல்லது சமூகப் புரட்சி (அல்லது இரண்டின்) நெருக்கடி ஏற்படும்போது மட்டுமே மீறக்கூடிய ஒரு எதிர்ப்பானது உருவாக முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஏகபோகத்தை நோக்கிய போக்கு உண்மையில் உற்பத்தி மற்றும் பொருட்களின் பரிமாற்றத்தின் பல துறைகளுக்குள் போட்டியின் மறுப்பை உள்ளடக்கியது. அது முதலாளித்துவ பொருளாதாரத்தின் அனைத்துத் துறையிலும், ஒரே நேரத்தில் உற்பத்தி செய்கிறது. முதலாளித்துவ சமூகத்தின், போட்டி முரண்பாடுகளின் தீவிரம், அதனால் ஏகபோகத்தை (தோராயமாக) அடைவது, சமூகத்திலிருந்து போட்டியை (மற்றும் விரோதத்தை) நீக்குவதற்குப் பதிலாக, மாறாக, அவற்றை படிப்படியாக உயர்ந்த மற்றும் அழிவுகரமான அளவிற்கு உயர்த்துகிறது. போட்டி என்பது பல வகையானது என்பதை மனதில் கொள்ளும்போது இது மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையிலான பொதுவான போட்டியும், விற்பவர் மற்றும் வாங்குபவர்களின் போட்டியும் உள்ளது. விற்பனையாளர்களிடையே போட்டியை நீக்குவது, வாங்குபவர்களிடையே போட்டியை நீக்குவதற்குப் பதிலாக, இந்த பிந்தைய வடிவங்களில் போட்டியை தீவிரப்படுத்துகிறது.

ஏகபோகத்தை நோக்கிய போக்கு ஒரு புதிய வகை மூலதனத்தின் தோற்றத்துடன், நிதி மூலதனத்தின் தோற்றத்துடன் ஒரு அமைப்பாக உறுதிப்படுத்தப்படுகிறது. அளவை தரமாக மாற்றுவதற்கு இது மீண்டும் ஒரு எடுத்துக்காட்டு. ஒரு முதலாளித்துவ தொழில்துறை நிறுவனம் (உதாரணமாக, எஃகு உற்பத்தியில்) அதன் குறிப்பிட்ட தொழிலில் ஏகபோக ஆதிக்கத்தின் நிலைக்கு உயரும் போது, வர்த்தகம் ஏற்ற இறக்கமாக இருப்பதால், ஒரு காலத்தில் விரிவாக்கத்திற்குத் தேவையா

னதை விட அதிகமான பண மூலதனத்தை (உண்மையான லாபம்) பெற்றுள்ளது. அதேநேரம் அதன் வணிகம் புதிய பண மூலதனத்திற்கான அவசரத் தேவைகளையும் எதிர்கொள்கிறது. ஒரு கட்டத்தில் அதன் உபரியை வங்கி மூலதனத்தில் முதலீடு செய்கிறது. மற்றொன்றில் அது கடனுக்கு ஈடாக வங்கிக்கு அதன் மூலதனத்தில் ஒரு பங்கைக் கொடுக்கிறது. வங்கிகளுடன் ஒரு இணையான செயல்முறை தொடர்கிறது, மேலும் இரண்டு நிரப்பு செயல்முறைகளும் ஒரு ஏகபோக தொழில்துறை நிறுவனம் மற்றும் ஏகபோக வங்கி நிறுவனங்களின் மூலதனத்தை ஒன்றிணைத்து ஒரு புதிய வகை ஏகபோக நிறுவனத்தை உருவாக்குவதோடு முடிவடைகிறது, அத்துடன் மேலாதிக்க செயல்முறையை அதிக மற்றும் விரிவான அளவில் கொண்டு செல்கிறது. நிதி மூலதனத்தின் உருவாக்கத்துடன், அதன் பிறப்பிடமான நாட்டின் பொருளாதாரத்தை ஒரு சிறிய குழு நிதி தன்னலக்குழுவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் செயல்முறை தொடங்குகிறது.

இந்த செயல்முறை மற்றொரு தொலைநோக்கு அம்சத்தைக் கொண்டுள்ளது. ஏகபோகத்தை அடையும் வரை, அது (தற்காலிகமாக இருந்தால்) விலைகளை நிலைப்படுத்துவதையும், ஏகபோக கட்டுப்பாட்டில் உள்ள சந்தையின் மதிப்பிடப்பட்ட தேவைகளுக்கு உற்பத்தியை கட்டுப்படுத்துவதையும் சாத்தியமாக்குகிறது. இதைச் செய்வதன் மூலம், தேவையற்ற நிர்வாக மற்றும் விற்பனைப் பணியாளர்களுடன் ஒப்பீட்டளவில் அதிகப்படியான உற்பத்தி அகற்றப்படுகிறது. இதன் விளைவாக, ஏகபோகம் அதன் சொந்தக் கோளத்திற்குள் மூலதனத்தை மேலும் முதலீடு செய்வதைத் தடுக்கும் சூழ்நிலைகளில் அதிக அளவிலான லாபத்தைப் பெறுகிறது. எனவே மூலதனத்தின் ஏற்றுமதி எப்போதும் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. உலகம் மேலும் இரண்டு வெவ்வேறு வழிகளில் பிரிக்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக, மூலதனத்தின் ஏற்றுமதியானது கிடைமட்ட மற்றும் செங்குத்து ஏகபோகங்களின் வளர்ச்சியை எளிதாக்குகிறது, அதாவது, கொடுக்கப்பட்ட தொழில்துறையை சர்வதேச ஏகபோகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும், மூலப்பொருட்களை உருவாக்கும் தொடர்ச்சியான தொழில்களின் ஏகபோகக் கட்டுப்பாட்டை நிறுவுவதற்கும் உதவுகிறது. அதன் இயற்கை தோற்றத்தின் புள்ளியிலிருந்து அதன் இறுதி முழுமையான வடிவத்திற்கு வரும் வரையான அனைத்தும் ஏகபோகக் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டது. இந்த செயல்முறைகள் வெட்டும், மோதும், மேலும் ஒன்றிணைந்து உயர்ந்த ஏகபோக வடிவங்களை உருவாக்குகின்றன. இறுதியில், அவை இரண்டும் (அ) தவிர்க்க முடியாத பொருட்களின் மூலங்களின் கட்டுப்பாடு மற்றும் (ஆ) முடிக்கப்பட்ட தயாரிப்புகளை அப்புறப்படுத்துவதற்கான சந்தைகளின் கட்டுப்பாடு ஆகிய இரண்டு தீவிர புள்ளிகளில் ஒன்றிணைகின்றன. இரண்டுமே இவ்வாறு பூமியின் நிலப்பரப்பின் பெரும் பகுதியை போட்டி ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையே 'செல்வாக்கு மண்டலங்களாக' பிரிப்பதற்கு உத்வேகம் சேர்க்கின்றன. ஏகாதிபத்திய பிரிவினையின் இந்த செயல்முறை 19-ம் நூற்றாண்டின் இறுதியில் (தோராயமாக) நிறைவடைந்ததால் பொருளாதார சக்திகள் ஏகாதிபத்திய விரிவாக்கத்தைத் தூண்டுவது தொடர்ந்தது, அத்துடன் 'அளவறியைப் பண்பறியாக' மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏகாதிபத்திய விரிவாக்க செயல்முறையானது ஏகாதிபத்திய சக்திகளின் (போட்டி நிதிய தன்னலக் குழுக்களின் அரசியல் இராணுவப் பிரதிநிதிகள்) தொடர்ச்சியான விரிவாக்கம் ஒருவருக்கொருவரை அண்டிப் பிழைப்பாதகவன்றி அடித்துப்பறிப்பதனூடு மட்டுமே அடைய முடியும் என்ற நிலைக்கு கொண்டு வந்தது.

ஏகபோக முதலாளித்துவத்தின் வரலாறு அதே சமயம் ஒவ்வொரு மேம்பட்ட முதலாளித்துவ நாடுகளுக்குள்ளும் அரசு அதிகாரத்தை வலுப்படுத்திய வரலாறு மற்றும் உலக சந்தையில் அதன் சொந்த நாட்டின் நிதி முதலாளிகளின் நலன்களை மேலும் மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த செயல்முறையின் தொடக்கத்தில், மிகவும் முன்னேறிய மற்றும் மிகவும் விரிவாக்கப்பட்ட முதலாளித்துவ சக்திகளின் செய்தித் தொடர்பாளர்கள் இந்த நலன்களைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி பெரும்பாலும் வெளிப்படையாகவே இருந்தனர். எனவே, 1907-ல், 1912-ல் அமெரிக்க அதிபராக வரவிருந்த உட்ரோ வில்சன் பின்வருமாறு அறிவித்தார்: 'விருப்பமில்லாத நாடுகளின் இறையாண்மைச் செயற்பாட்டில் சீற்றம் ஏற்பட்டாலும் கூட நிதியாளர்களால் பெறப்படும் சலுகைகள் நாட்டின் அமைச்சர்களால் பாதுகாக்கப்பட வேண்டும்'. வில்சனின் மாநிலச் செயலர் வில்லியம் ஜென்னிங்ஸ் பிரையன் அமெரிக்க நிதியாளர்களின் கூட்டத்தில் நேர்மையாக இருந்தார்: 'நான் வெறுமனே மரியாதைக்காக மட்டும் இதைச் சொல்லவில்லை, ஆனால் உண்மையில், எனது பணி உங்களுக்கான பணி. எமது தூதர்கள், அமைச்சர்கள் மற்றும் தூதரகங்கள் அனைத்தும் உங்களுடையது. உங்கள் நலன்களைக் கவனிப்பதும், உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவர்களின் தொழிலாகும்'.

20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நிதி மூலதனத்தின் ஊடுருவும் சக்தியானது இறையாண்மை அரசுகளுக்கு இடையேயான உறவுகளில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியது, இதை முதலாளித்துவ பத்திரிகையாளர்களும் முதலாளித்துவ அரசியல்வாதிகளும் 'தேசங்களின் சமூகம்' என்று அழைக்க விரும்பினர். அதே சமயம் இராஜதந்திரக் கோட்பாட்டில் அனைத்து இறையாண்மை நாடுகளும் சமமாகச் சந்தித்து வணிகம் செய்கின்றன (அதாவது, தங்கள் எல்லைக்குள் சமமாக 'இறையாண்மை'). நிதி மூலதனம் நாடுகளை கடன் பெற்றோர், கடன் கொடுத்தோர் என வேறுபடுத்துகிறது. நாடுகளின் இந்த இடை இணைப்பு, பெரும்பான்மையான நாடுகளின் நிதி மேலாதிக்கத்திற்கு அடிபணிவது, ஒரு சில நிதியியல் பணக்கார சக்திகள், உலகின் திறந்த பிராந்தியப் பிரிவினைக்கு துணை புரிகிறது. அதன் விளைவாக 1914-ம் ஆண்டளவில் உலகின் சில 'பெரும் சக்திகளுக்கு' (பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ரஷ்யா) வெளியே உள்ள ஒவ்வொரு நாடும் இந்த பேரரசுகளில் ஏதாவது ஒன்றின் நிதிக்கு அடிமையாக இருந்தது. மேலும், இந்த பேரரசுகள் ஒவ்வொன்றும் இன்னும் விரிவாக்கத் தேவையால் தூண்டப்பட்டதால், அது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் இழப்பில் மட்டுமே விரிவடையும். இவ்வாறு ஏகாதிபத்தியத்தின் (மற்றும் ஏகாதிபத்தியப் போருக்கு) காரணம் முதலாளித்துவம் ஒரு புதிய மற்றும் உயர்ந்த கட்டமாக வளர்ச்சியடைவதாகக் காட்டப்பட்டது, அதில் அதன் முரண்பாடுகள்

ஒரு புள்ளியை எட்டியிருந்தன, இந்நிலையில் மேலதிக வளர்ச்சியானது ஒன்றில், மூடிமறைக்கப்பட்ட / வெளிப்படையான ஏகாதிபத்தியப் போரின் மூலம் அல்லது சாத்தியமான, உண்மையான புரட்சிகர எழுச்சிகள் ஆகிய இரண்டிலொரு வழியிலேயே சாத்தியம்.

இந்த முழு செயல்முறையையும் சுருக்கமாக, லெனின் டிசம்பர் 1915-ல் எழுதினார்:

*'இந்த மாற்றம் முதலாளித்துவத்தின் ஆழமான மற்றும் அடிப்படையான போக்குகளின் நேரடி வளர்ச்சி, தொடர்ச்சி, பொதுவாக பண்டங்களின் உற்பத்தி ஆகியவற்றால் ஏற்பட்டதே தவிர வேறெதுவும் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். பண்டப் பரிமாற்றத்தின் வளர்ச்சி, பெரிய அளவிலான உற்பத்தியின் வளர்ச்சி ஆகியவை உலகம் முழுவதும் பல நூற்றாண்டுகளாகக் காணக்கூடிய அடிப்படைப் போக்குகளாகும். பரிவர்த்தனையின் வளர்ச்சியினதும் பெரிய அளவிலான உற்பத்தியின் வளர்ச்சியினதும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பொருட்களின் பரிமாற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதார உறவுகளின் அத்தகைய சர்வதேசமயமாக்கல், மூலதனத்தின் சர்வதேசமயமாக்கலினதும் பெரிய அளவிலான உற்பத்தியின் அதிகரிப்புடனும் இலவச போட்டி ஏகபோகத்தால் மாற்றப்பட்டது. இதன்பின்னர் நடைமுறையில் இருந்த முறைகள் நாட்டிற்குள் இயல்பாகச் செயற்படும் நிறுவனங்களாக தொடர்ந்தும் இருக்கமுடியாமல் போனது. மேலும் உற்பத்தித் தொடர்புகள் மூலம் கவனம் செலுத்துவது மிகவும் எளிதானது, அதிகாரமிக்க ஒரு தரப்பு தன்னை அழுத்தமாகத் தடம்பதிக்க இது வாய்ப்பானது. இதன் பலனாக முழு உலகத்தின் விதியை பல நூறு பில்லியனர்களும் மில்லியனர்களும் தங்கள் கைகளில் கொண்டுள்ளனர்.'*

## ஏகாதிபத்தியம்:
## முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த மற்றும் கடைசி நிலை:

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் புதிய, உயர்ந்த கட்டம் என்று லெனின் காட்டினாலும், இது முதலாளித்துவத்தின் மூலம் சாத்தியமான அதிகமான வளர்ச்சிக் கட்டம் என்பதை அவரால் காட்ட முடியவில்லை என்றொரு வாதம் வைக்கப்படுவதுண்டு. இந்த விமர்சனத்திற்கான பதில் என்னவென்றால், கொடுக்கப்பட்ட வரலாற்று ரீதியாக நிபந்தனைக்குட்பட்ட சமூக உற்பத்திக்கான வளர்ச்சியின் சாத்தியக்கூறுகள் வரம்பற்றவை என்ற அனுமானத்தில் இருந்து இது தொடர்கிறது. மார்க்ஸாலும் லெனினாலும் பகுப்பாய்வு செய்யப்பட்ட முழு உண்மைகளும் செயல்முறைகளும், மாறாக, வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு சமூக உற்பத்தி வடிவத்திற்கும் உற்பத்தி சக்திகளின் வரையறுக்கப்பட்ட மற்றும் நிபந்தனைக்குட்பட்ட வளர்ச்சி மட்டுமே சாத்தியமாகும் என்பதைக் காட்டுகின்றன. அவற்றின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருள் உற்பத்தி சக்திகள் தற்போதுள்ள உற்பத்தி உறவுகளுடன் முரண்படுகின்றன, அல்லது அதே விஷயத்திற்கான சட்ட வெளிப்பாடு தவிர, அவர்கள் இதுவரை வேலை செய்த சொத்து உறவுகளுடன். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் வடிவங்களிலிருந்து இந்த உறவுகள் அவற்றின் பிணைப்புகளாக மாறுகின்றன. இதன் பின்னர் சமூகப் புரட்சியின் சகாப்தம் தொடங்குகிறது.

முதலாளித்துவத்தின் உச்ச கட்டத்தின் சிறப்பியல்பு என மார்க்ஸால் சுட்டிக்காட்டப்படும் இரண்டு சிறப்பான நிகழ்வுகள் ஏகபோக நிதி நிலையில் வளர்ந்ததாக லெனினால் காட்டப்படுகின்றன. இவை (1) ஒட்டுண்ணித்தனம் மற்றும் (2) உற்பத்தியின் சமூகத் தன்மையின் பகுதியளவு அங்கீகாரம்.

கூட்டு-பங்கு நிறுவனங்களின் உருவாக்கம் பற்றி மார்க்ஸ் பின்வருமாறு தனது அவதானத்தை முன்வைத்தார்:

- உற்பத்தியின் அளவிலும், தனிப்பட்ட மூலதனங்களுக்கு சாத்தியமில்லாத நிறுவனங்களிலும் மிகப்பெரிய விரிவாக்கம். அதே நேரத்தில், முன்பு அரசாங்க நிறுவனங்களாக இருந்த நிறுவனங்கள் சமூகமாகின்றன.
- மூலதனம், இயல்பாகவே ஒரு சமூக உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் உற்பத்தி சாதனங்கள், உழைப்பு சக்தி ஆகியவற்றின் சமூக செறிவை முன்வைக்கிறது, இப்போது தனியார் மூலதனம், அதன் நிறுவனங்களுக்கு மாறாக சமூக மூலதனத்தின் வடிவத்தை (நேரடியாக தொடர்புடைய தனிநபர்களின் மூலதனம்) பெறுகிறது. தனியார் நிறுவனங்களுக்கு மாறாக சமூக நிறுவனங்களாகத் தோன்றும் இது முதலாளித்துவ உற்பத்தி முறையின் எல்லைக்குள் மூலதனத்தை தனியார் சொத்தாக ஒழிப்பது.
- உண்மையில் செயற்படும் முதலாளியை வெறும் மேலாளராகவும், மற்றவர்களின் பணத்திற்கு பொறுப்பானவராகவும், மூலதன உரிமையாளரை வெறும் உரிமையாளராகவும், வெறும் பண முதலாளியாகவும் மாற்றுதல். அவர்கள் பெறும் ஈவுத் தொகையில் நிறுவனத்தின் வட்டி, லாபம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியிருந்தாலும், அதாவது, மொத்த லாபம் (மேலாளரின் சம்பளம் அல்லது ஒரு குறிப்பிட்ட வகையான திறமையான தொழிலாளர்களுக்கான ஊதியமாக இருக்க வேண்டும், அதன் விலை தொழிலாளர் சந்தையில் கட்டுப்படுத்தப்படுகிறது), இன்னும் வட்டி வடிவில் பெறப்படுகிறது; அதாவது, மூலதன உரிமைக்கான ஒரு வெகுமதியாக, இது இப்போது இந்தச் செயற்பாடு போலவே உண்மையான உற்பத்திச் செயற்பாட்டில் அதன் செயற்பாட்டிலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டுள்ளது. மேலாளர், மூலதன உரிமையில் இருந்து வந்தவர். உற்பத்திச் சாதனங்களை மூலதனமாக மாற்றுவதன் மூலம் எழும் பிறரின் உபரி உழைப்பின் சுவீகரிப்பாக லாபம் தோன்றுகிறது (இனி அதன் ஒரு பகுதி, வட்டி, கடன் வாங்குபவரின் லாபத்திலிருந்து அதன் நியாயத்தைப் பெறுகிறது). உண்மையான தயாரிப்பாளரிடம் இருந்து பிரித்தல், அவர்களின் எதிர்ப்பிலிருந்து, மற்றொருவரின் சொத்தாக, மேலாளர் முதல் மிகக் குறைந்த தினக்கூலியாளர் வரை உற்பத்தியில் உண்மையில் சுறுசுறுப்பான அனைத்து நபர்களுக்கும் கூட்டு-பங்கு நிறுவனங்களில், செயற்பாடு மூலதன உரிமையிலிருந்து பிரிக்கப்படுகிறது, எனவே உழைப்பு உற்பத்தி சாதனங்கள் மற்றும் உபரி உழைப்பின் உரிமையிலிருந்து முற்றிலும் பிரிக்கப்படுகிறது. முதலாளித்துவ

உற்பத்தியின் மிக உயர்ந்த வளர்ச்சியின் விளைவு, மூலதனத்தை உற்பத்தி சாதனமாக மீண்டும் உற்பத்தியாளர்களின் சொத்தாக மாற்றுவதற்கான ஒரு அவசியமான புள்ளியாகும், இருப்பினும் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் தனிப்பட்ட சொத்தாக அல்ல. அவர்களின் சொத்துகள், குறிப்பாகச் சமூகச் சொத்துகள் உற்பத்தியாளர்களுடன் நேரடியான தொடர்புடையவை. மேலும், மறு உற்பத்திச் செயற்பாட்டில் மூலதன உரிமையுடன் முன்னர் பிணைக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் தொடர்புடைய உற்பத்தியாளர்களின் எளிய செயற்பாடுகளாக, சமூக செயற்பாடுகளாக மாற்றுவதற்கான மாற்றத்திற்கான ஒரு புள்ளியாகும்.

இது முதலாளித்துவ உற்பத்தி முறைக்குள்ளேயே முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழிப்பதாகும், எனவே ஒரு சுய-அழிக்கும் முரண்பாடு, இது ஒரு புதிய உற்பத்தி வடிவத்திற்கு மாறுவதற்கான ஒரு புள்ளியாக தன்னை முதன்மையாகக் காட்டுகிறது. வெளித்தோற்றத்தில் கூட அது ஒரு முரண்பாடாகவே காட்சியளிக்கிறது. இது சில துறைகளில் ஏகபோகத்தை உருவாக்குகிறது, எனவே அரசின் தலையீட்டைத் தூண்டுகிறது. இது ஒரு புதிய நிதியியல் பிரபுத்துவத்தை, நிறுவன விளம்பரதாரர்கள், பங்கு வர்த்தகர்கள், வெறும் பெயரளவு இயக்குநர்கள் என்ற போர்வையில் ஒரு புதிய வகையான ஒட்டுண்ணிகளை மீண்டும் உருவாக்குகிறது. நிறுவனங்களின் ஊக்குவிப்பு, பங்குகளின் வெளியீடுகள் மற்றும் பங்கு பரிவர்த்தனைகள் தொடர்பாக மோசடி மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றின் முழு அமைப்பு. இது தனியார் உடைமையால் சரிபார்க்கப்படாத தனியார் உற்பத்தியாகும்.

மார்க்ஸின் மூலதனத்தின் 3-வது தொகுதியின் முதல் பதிப்பின் துணைக் குறிப்பில், ஏங்கெல்ஸ் 1894-ல் பின்வருமாறு எழுதினார், '1865 முதல்', மார்க்ஸ் மேற்கோள் காட்டப்பட்ட கருத்துக்களை எழுதியபோது, 'ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது, இது இன்றைய பங்குச் சந்தைக்கு கணிசமாக அதிகரித்த பங்கைக் கொடுக்கும், மற்றும் தொடர்ந்து வளர்ந்து வரும் ஒன்று, அது மேலும் வளர்ச்சியடையும் போது, முழு உற்பத்தி, தொழில்துறை, விவசாயம், ஒட்டுமொத்த வர்த்தகம், தகவல் தொடர்பு சாதனங்கள், பரிமாற்ற செயற்பாடு ஆகியவற்றைக் குவிக்கும் போக்கைக் கொண்டுள்ளது. பங்கு வர்த்தகர்களின் கைகளால், பங்குச் சந்தையானது முதலாளித்துவ உற்பத்தியின் மிக முக்கியமான பிரதிநிதியாக மாறுகிறது'. இதை 1865-ல் ஏங்கெல்ஸ் விளக்கினார்:


*'முதலாளித்துவ அமைப்பில் பங்குச் சந்தை இன்னும் இரண்டாம் நிலை அங்கமாக இருந்தது. இப்போது அது வேறுபட்டது. 'மூலதனத்தின்' குவிப்பு எப்போதும் வளர்ந்து வரும் வேகத்தில் தொடர்ந்தது, மேலும் எந்த ஒரு தொழில்துறை நாட்டினாலும் உற்பத்தியின் விரிவாக்கத்தின் வேகத்துடன் ஈடுகொடுக்க முடியவில்லை. திரட்சியுடன், அல்லது தனிப்பட்ட முதலாளியின் திரட்சியுடன், தனது சொந்த வியாபாரத்தை விரிவுபடுத்துவதில் முழுமையாகப் பணியமர்த்தப்படுவார். இந்தக் குவிப்புடன், வாடகைக்கு விடுபவர்களின் எண்ணிக்கையிலும், வணிகத்தில் வழக்கமான உழைப்பால் சோர்வடைந்தவர்கள், சாதாரணமாக இருப்பவர்களின் எண்ணிக்கையிலும் வளர்ச்சி உள்ளது. தங்களை மகிழ்விக்க அல்லது நிறுவனங்களின் இயக்குநர்களாக இலகுவான தொழிலை மட்டுமே தொடர விரும்புகின்றனர்'.*

ஏகபோக நிதி முதலாளித்துவம் முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் மிக உயர்ந்த கட்டம் என்ற முடிவுக்கு வர லெனின் புதிய கோட்பாட்டைக் கண்டுபிடிக்க வேண்டி இருக்கவில்லை. இந்தக் கட்டத்தின் சிறப்பியல்பு என்று மார்க்ஸ் விவரித்த அம்சங்கள் - கூட்டு-பங்கு நிறுவனங்கள், உற்பத்தியின் உடனடி செயல்பாட்டில் நிர்வாக செயல்பாடுகளிலிருந்து மூலதன உரிமையைப் பிரித்தல், ஏகபோகங்கள், ஒரு நிதிப் பிரபுத்துவத்தின் தோற்றம், குத்தகைதாரர்கள், பெயரளவு நிறுவன இயக்குநர்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை மோசடி செய்பவர்களின் வடிவில் உள்ள ஒட்டுண்ணித்தனம் ஆகியன 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாளித்துவ வணிக நடவடிக்கையின் ஆதிக்க மற்றும் பொதுவான வடிவமாக மாறியது என்பதை அவர் காட்ட வேண்டியிருந்தது. முதலாளித்துவத்தின் ஏகபோக நிதி நிலை அதன் மிக உயர்ந்த கட்டம் புரட்சிகர வளர்ச்சியில் இருந்து வேறுபட்ட பரிணாம வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளை தீர்த்துவிடும் கட்டம் என்று லெனின் விவரித்தது, மார்க்சின் 'முதலாளித்துவ உற்பத்தி அதன் மிக உயர்ந்த வளர்ச்சியில்' என்ற கருத்தாக்கத்தின் விசுவாசமான பயன்பாடு ஆகும். அதாவது உழைப்பு செயல்முறையின் முழுமையான சமூகமயமாக்கல் மூலதனத்தின் உற்பத்திச் செயற்பாட்டை மூலதனத்தின் உரிமையிலிருந்து முழுமையாகப் பிரிப்பதை உள்ளடக்கியது. அதன் ஒட்டுண்ணி வாடகை வடிவத்தில், இலாபமானது 'வெறுமனே மற்றவர்களின் உழைப்பை கையகப்படுத்துவதாக' காட்டப்படும் போது இது தெளிவாகிறது. உண்மையில் தொழிலாளர் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களிடமிருந்தும் மூலதனத்தின் உரிமையை அந்நியப்படுத்தியதன் விளைவாகும்.

இந்த அந்நியமாதல் ஆரம்பத்திலிருந்தே முதலாளித்துவ உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. முதலாளித்துவ வடிவமான பண்ட உற்பத்தியின் சாராம்சத்தை உள்ளடக்கிய உள் உறவு இதுவாகும். எனவே, உற்பத்திச் செயற்பாட்டில் தனிப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தனிப்பட்ட முதலாளிகளை இணைக்கும் உள் உறவாக இருந்து, அது ஒரு முழுமையான வளர்ச்சியடைந்த சமூக விரோதமாக வெளிப்படும்போது உண்மையான உற்பத்தியாளர்களுக்கு இடையேயான சமூக மோதலாக, உற்பத்தி செயல்முறையால் ஒரு கூட்டுத் தனித்தன்மையுடன் தொடர்புடையது. ஒரு பக்கம் சுரண்டும் உற்பத்தியாளர்கள் அல்லாதவர்கள், அவர்களது உரிமையினால் அவர்களுக்கு எதிரான ஒரு கூட்டுத் தனித்துவத்துடன் சமமாக தொடர்புடையவர்கள் - (அ) முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மேலும் சாத்தியமில்லை என்பது வெளிப்படையானது; (ஆ) சமூக விரோதம், உற்பத்தி செயல்முறையின் புதிய சமூக வடிவத்திற்கு மாறுவதற்கான தொடக்கப் புள்ளியாக மாறியுள்ளது மற்றும் (இ) இந்த தொடக்கப் புள்ளியானது அதன் பொருள் அடிப்படையையும் அதன் பொது வடிவத்தையும் சமூக விரோதத்தின் நேர்மறை மற்றும் எதிர்மறை துருவங்களில் கொண்டுள்ளது.

லெனின் ஏகபோக நிதி முதலாளித்துவத்தை 'அழிந்துபோகும்', 'அழிந்து வரும்' முதலாளித்துவம் என்று விவரித்தபோது

இதைத்தான் லெனின் அர்த்தப்படுத்தினார். அவருடைய விமர்சகர்கள் அடிக்கடி கருதுவது போல், உற்பத்தியின் தொழில்நுட்ப அடிப்படையை புரட்சிகரமாக்குவதற்கு அல்லது உற்பத்தி சக்திகளின் அளவு விரிவாக்கத்திற்கு இது ஒரு




முழுமையான தடையாகிவிட்டது என்று அவர் கூறவில்லை. மாறாக, அது உற்பத்திச் சக்திகளின் முழுமையான சாத்திய மான வளர்ச்சிக்கு ஒரு தடையாக மாறிவிட்டது என்று அவர் வாதிட்டார், இது உற்பத்தி சக்திகளின் பெருகிய முறையில் சீரற்ற வளர்ச்சியை நோக்கிய போக்கை வெளிப்படுத்துவது டன் மூலதனத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பணக்கார நாடுகளின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் தேக்கத்தை நோக்கியதாக இருந்தது:

*'முதலாளித்துவத்தின் கீழ் ஏகபோகத்தால் ஒருபோதும் மிக நீண்ட காலத்திற்கு உலக சந்தையில் போட்டியை முற்றிலு மாக அகற்ற முடியாது (மேலும், அதி-ஏகாதிபத்தியத்தின் கோட்பாடு மிகவும் அபத்தமானதாக இருப்பதற்கான கார ணங்களில் இதுவும் ஒன்றாகும்). உற்பத்திச் செலவைக் குறைப்பது மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் லாபத்தை அதிகரிப்பது மாற்றத்தின் திசையில் செயற்படுகிறது. ஆனால் ஏகபோகத்தின் சிறப்பி யல்புகளான தேக்கம் மற்றும் சிதைவுக்கான போக்கு தொடர்ந்து இயங்குகிறது, மேலும் சில தொழில் துறைகளில், சில நாடுகளில், சில குறிப்பிட்ட காலத்திற்கு, அது பலம் மிக் கதாகின்றது.'*

இந்த சிதைவுப் போக்கு முதலாளித்துவத்தின் விரைவான வளர்ச்சியைத் தடுக்கிறது என்று நம்புவது தவறாகும். ஏகாதி பத்தியத்தின் சகாப்தத்தில், தொழில்துறையின் சில கிளை கள், முதலாளித்துவத்தின் சில அடுக்குகள் மற்றும் சில நாடு கள், அதிக அல்லது குறைந்த அளவிற்கு, இந்தப் போக்குக ளில் ஒன்று மற்றொன்றைக் காட்டிக் கொடுக்கின்றன. மொத் தத்தில், முதலாளித்துவம் முன்பை விட வேகமாக வளர்ந்து வருகிறது. ஆனால் இந்த வளர்ச்சி பொதுவாக மேலும் மேலும் சீரற்றதாக மாறுவது மட்டுமல்லாமல், அதன் சீரற்ற தன்மை தன்னை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, மூலதனத் தில் (பிரிட்டன்) பணக்கார நாடுகளின் சிதைவில்.

ஏகபோக நிதி நிலையை முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டமாக லெனின் கருதும் வரை, சோசலிசத்திற்கு மாறுவதற் கான பொருள் அடிப்படையை உருவாக்கிய முதலாளித்து வத்தின் கட்டமாக, லெனின் ஏற்கனவே மார்க்ஸ் மூலம் வரை யப்பட்ட முடிவுகளை மீண்டும் வலியுறுத்தினார் மற்றும் வலுப் படுத்தினார் என்று புரிந்து கொள்வதே சரியாக இருக்கும்.

ஏகபோக நிதிய முதலாளித்துவத்தை 'இறந்து கொண்டிருக் கும்' முதலாளித்துவம், 'சோசலிசத்திற்கு மாற்றும்' முதலாளித் துவம் என்று லெனின் விவரித்தமைக்கு, முதலாளித்துவம் தானாகவே சோசலிசத்திற்கு திரும்பும் என்று அவர் நம்பினார் என்று அர்த்தமல்ல. 1890-களில், முதலாளித்துவத்தின் 'தவிர்க்க முடியாத சரிவு' பற்றிய மார்க்சின் கருத்தை முற்றிலும் தவறா கப் புரிந்துகொள்ளப்பட்டது. சமூகப் புரட்சியின் ஒரு சகாப் தத்தின் தொடக்கம் காரணமான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது, தற்போதுள்ள சமூக உற்பத்தி வடிவத்தை தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக ஒரு புதிய சமூக வடி வத்தை மாற்றியமைக்க வேண்டியதாயிற்று. ஆனால் அத்த கைய சமூகப் புரட்சி உண்மையில் மேற்கொள்ளப்படாவிட் டால், தற்போதுள்ள சமூக வடிவம் என்றென்றும் நிலைத்திருக் கும் என்று இது அர்த்தப்படுத்தாது. மாறாக, 'அதில் இடம் பெற்றுள்ள அனைத்து உற்பத்தி சக்திகளையும் 'அது உரு வாக்கியவுடன் - போட்டியிடும் வர்க்கங்களின்' 'சமூகத்தின் ஒரு புரட்சிகர மறு-அரசியலமைப்பு' இல்லாத பட்சத்தில், இந்த சமூக வடிவம் சிதைந்துவிடும். முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் உச்சகட்டமாக ஏகாதிபத்தியத்தை பகுப்பாய்வு செய்வதில் மூலதனத்தின் (மற்றும் உற்பத்தி) செறிவு பற்றிய மார்க்சின் கோட்பாட்டினைப் பயன்படுத்துவதன் ஊடாக, சமூ கப் புரட்சியின் சகாப்தத்தை சிதைவின் சகாப்தமாக லெனின் விரிவுபடுத்தி ஆழப்படுத்தினார் என்பதே பொருத்தமானதா கும்.

19-ம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் ஆங்கில தொழி லாள வர்க்கம் மேலும் மேலும் முதலாளித்துவமாக மாறியுள் ளதாக மார்க்சும் ஏங்கெல்சும் அடிக்கடி கேலி செய்தனர். அந்த நேரத்தில் இங்கிலாந்தின் தொழிலாள வர்க்கம் மிகப் பெரியதாகவும், உலகிலேயே மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட தாகவும் இருந்தது. முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அர

சியல்வாதிகளுடன் மரியாதையை பெறுவதற்கு ஆங்கிலேய தொழிலாளர் தலைவர்களிடம் வளர்ந்துவரும் முயற்சிகளை மார்க்சும் ஏங்கெல்சும் நெருங்கிய இடங்களில் அவதானித்துள்ளனர். இங்கிலாந்தில் உழைக்கும் வர்க்கத்தின் நிலை என்ற ஆங்கிலப் பதிப்பிற்கு 1892-ம் ஆண்டு எழுதிய முன்னுரையில் ஏங்கெல்ஸ் இந்தப் பிரச்சினையை விரிவாக எடுத்துரைத்தார். 1848 மற்றும் 1870-களுக்கு இடையில் இங்கிலாந்து ஒரு விதிவிலக்கான முதலாளித்துவ நாடாக வளர்ந்ததைக் குறிப்பிட்டு அவர் தொடங்கினார். இது பரந்த காலனித்துவ உடைமைகளை வைத்திருந்தது. உலக சந்தையில் தொழில்துறை உற்பத்தியின் மெய்நிகர் ஏகபோகத்தை அனுபவித்தது. ஆங்கிலேய முதலாளிகள் இந்த ஏகபோகத்திலிருந்து அபரிமிதமான இலாபங்களை அறுவடை செய்தனர், அதன் ஒரு பகுதியை ஆங்கில தொழிலாளி வர்க்கத்திற்கு முக்கிய பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சலுகைகளை வழங்குவதற்கு, ஆங்கிலேய தொழிலதிபர்களின் சர்வதேச கொள்கைகளுக்கு அதன் நம்பகத்தன்மைக்கு ஈடாக, மத்தியஸ்தம் செய்யப்பட்ட விசுவாசத்திற்கு ஈடாக அவர்கள் பயன்படுத்தினர். மற்றும் தேசிய பெருமை மற்றும் ஆங்கில தேசிய பேரினவாதத்தை வளர்ப்பதன் மூலம் மறைக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் ஆங்கிலேய தொழிலாள வர்க்கத்தின் நிலை பொதுவாக மேம்பட்டது, ஆனால் சலுகைகள் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டன. முதன்மையாக சிறிய, சலுகை பெற்ற, பாதுகாக்கப்பட்ட சிறுபான்மையினர் நிரந்தரமாக பயனடைந்தனர் என்று ஏங்கெல்ஸ் முடிவு செய்தார். ‘பெருமளவிலான தொழிலாளர்களுக்கு கூட, தற்காலிக முன்னேற்றம் இருந்தது. ஆனால் இந்த முன்னேற்றம் எப்போதும் பழைய நிலைக்கு குறைக்கப்பட்டது. ஏனெனில் பெருமளவிலான வேலையற்ற உழைப்புச் சக்தி ஒன்று இருந்தது. புதிய இயந்திரங்களின் வருகை வேலையின்மையைத் தூண்டியது. விவசாயிகள் குடிபெயர்ந்தார்கள். இக்காரணிகளால் சலுகைகள் தொடர்ச்சியானதாகவும் சமமானதாகவும் இருக்கவில்லை’ என்று ஏங்கெல்ஸ் விளக்கினார்.

அரசியல் ரீதியாக, ஆங்கிலேய தொழில்துறை முதலாளிகள், வேகமாக வளர்ந்து வரும் பாட்டாளி வர்க்கத்தின் சிறப்பாக அமைந்துள்ள மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அடுக்குகளுடன் கூட்டணி வைப்பது என்ற விவேகமான கொள்கையைச் செயற்படுத்தினர் என்று ஏங்கெல்ஸ் கவனித்தார். தொழிற்சங்கங்கள் மீதான தொழிலதிபர்களின் மனப்பான்மையில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தது என்றும் ஏங்கெல்ஸ் எழுதினார், ‘தொழிற்சங்கங்கள் இதுவரை பிசாசின் கண்டுபிடிப்புகளாகக் கருதப்பட்டன, ஆனால் இப்போது தொழிலாளர்களிடையே நல்ல பொருளாதாரக் கோட்பாடுகளைப் பரப்புவதற்கான பயனுள்ள வழிமுறையாக, முற்றிலும் சட்டபூர்வமான நிறுவனங்களாகக் கருதப்பட்டு ஆதரவளிக்கப்படுகின்றன. வேலை நிறுத்தங்கள் கூட, 1848 வரை எதுவும் பிரபலமாக இல்லை, இப்போது படிப்படியாக எப்போதாவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கண்டறியப்பட்ட போது குறிப்பாக எஜமானர்களால் தூண்டப்பட்டபோது, அவர்களின் சொந்த நேரத்தில் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன’.

1848-ல் சார்ட்டிஸ்ட் இயக்கத்தின் தோல்வியும் அதைத் தொடர்ந்து நீண்ட காலமாக வழங்கப்பட்ட நிவாரணங்களும் இயற்கையான ஊழலை ஏற்படுத்தியது. இதனால் தொழிற்சங்கங்களில் இருந்த தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் ரீதியாக செயற்பட்ட பிரிவுகள் இங்கிலாந்தின் காலனித்துவக் கொள்கையை ஆதரிக்கவும் தாராளவாத முதலாளித்துவத்தை ஏற்கவும் தொடங்கின. அரசியல் அவர்களின் சொந்தம். மேலும், தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள், மிகவும் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒதுக்கப்பட்ட கொள்கைகளை நிலைநிறுத்தினர், குறிப்பாக ஆங்கிலம் மற்றும் ஐரிஷ் பாட்டாளவர்க்கத்தினர் பிறந்த பிரிவுகளுக்கு இடையிலான பிளவைத் தூண்டி வளர்த்தது.

இங்கிலாந்தில் தொழிலாளர் சந்தர்ப்பவாதத்தின் எழுச்சி பற்றிய மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் விளக்கங்களிலும் பகுப்பாய்விலுமிருந்து சிறுபான்மை தொழிலாளர்களுக்கு உடனடி அனுகூலங்களைப் பெறுவதற்கு ஒட்டுமொத்த தொழிலாள வர்க்கத்தின் நீண்டகால நலன்களை தியாகம் செய்தலைப் பற்றித் தான் திரட்டிய கருத்துக்களின் அடிப்படையில் லெனின் இதைக் கோட்பாட்டுருவாக்கம் செய்தார்: ஆங்கிலேய முதலாளித்துவத்தின் மேலாதிக்க உலக நிலை பெரும் இலாபங்களை உருவாக்கியது என்பதில் ஆங்கிலேயத் தொழிலாளர்களிடையே சந்தர்ப்பவாதத்தின் பிடிவாதமான நிகழ்வு பொருளாதார அடிப்படையைக் கொண்டிருந்தது. இது ஆங்கில முதலாளித்துவம் பாட்டாளி வர்க்கத்தின் மேல் அடுக்குகளுக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சலுகைகளை வழங்க அனுமதித்தது. இந்த சலுகைகள், சமூக ஊதியத்தை விரிவுபடுத்துதல் மற்றும் கல்வி, கலாசார மற்றும் அரசியல் நிறுவனங்களுக்கான அணுகல் உள்ளிட்ட சிக்கலான நிகழ்வுகள், பாட்டாளி வர்க்கத்தின் கீழ் மக்களுக்கு மறுக்கப்பட்டது. முற்றிலும் சந்தர்ப்பவாத, வர்க்க ஒத்துழைப்பாளர் உருவாக்கத்திற்கான ஒரு பொருள் அடிப்படையாக செயற்பட்டது. சலுகை பெற்ற மற்றும் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்களின் ஒரு பெரிய தொழிலாளர் பிரபுத்துவத்தில் வேரூன்றிய போக்கு, அத்துடன் அரசியல் ரீதியாக செயற்படும் ஆங்கிலேய தொழிலாளர்களிடையே முதலாளித்துவ சீர்திருத்தவாத மாயைகள் மற்றும் தேசிய பேரினவாதத்தின் வெளிப்படையான எழுச்சி என்பன முக்கிய அம்சங்களாக இருந்தன.

எவ்வாறாயினும், 19-ம் நூற்றாண்டு இங்கிலாந்தில் தொழிலாள வர்க்க இயக்கத்தில் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் பகுப்பாய்வின் சாராம்சத்தைப் பிரித்தெடுப்பதோடு லெனின் நின்றுவிடவில்லை. மாறாக அவர் இந்த பகுப்பாய்வை முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய நிலைக்குப் பயன்படுத்துவதன் மூலம் விரிவுபடுத்தி ஆழப்படுத்தினார். முக்கியமாக, ஏகபோக முதலாளித்துவத்தின் எழுச்சி ஒரு சில நாடுகளில், ஆளும் முதலாளித்துவத்தின் மேலாதிக்கப் பிரிவான பொருளாதார சிறுகுழுவினரால் பெரும் இலாபங்களைப் பிரித்தெடுப்பதற்கான அடிப்படையை, தற்காலிகமாக அல்லாமல், விரிவுபடுத்தியது என்று அவர் வாதிட்டார். மறுபுறம், முதலாளித்துவ ஆட்சியின் தொடர்ச்சியான அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த, தன்னிச்சையாக அரசியல் ரீதியாக செயற்பட முனையும் தொழிலாள வர்க்கத்தின் பிரிவுகள், சிறந்த படித்த, சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்கள், கருத்தியல் ரீதியாக ஒரு விசுவாசமான எதிர்ப்பாக அடக்கப்பட வேண்டும். பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சலுகைகளுடன் இந்தப் பிரிவுகளுக்கு லஞ்சம் கொடுக்க ஏக

போக நிதி மூலதனத்தின் மிகை லாபத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதன் மூலம் இது நிறைவேற்றப்படும். இந்த அடிப்படை வளர்ச்சி, ஒவ்வொரு ஏகாதிபத்திய நாட்டிலும் உள்ள வர்க்கக் கட்டமைப்பின் (மற்றும் அதற்கேற்ப வர்க்கப் போராட்டத்தின் இயக்கவியலில் தாக்கம்) ஒரு அம்சமாக இருக்கும் என்று லெனின் வாதிட்டார்.

எனவே தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள் இருக்கும் சந்தர்ப்பவாதப் போக்கின் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தை முதலாளித்துவ சட்டதிட்டங்கள் மற்றும் முதலாளித்துவ சமூக சீர்திருத்தவாதத்தின் எல்லைக்குள் வைத்திருப்பதற்கான அவர்களின் நனவான முயற்சிகளுக்கு ஒரு நிலையான தளத்தைக் கண்டுபிடிப்பார்கள். முதிர்ந்த சந்தர்ப்பவாதத்தின் இந்த வடிவம், எந்தவொரு தொழிலாளியின் அரசியல் வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் எதிர்பார்க்கக்கூடிய தன்னிச்சையான சீர்திருத்தவாதத்திலிருந்து வேறுபட்டது, ஏகாதிபத்திய நாடுகளில் (பெரும்பாலும் நிரம்பிய) ஒரு வளர்ந்த தொழிற்சங்க உணர்வு இயக்கத்தின் அடித்தளத்தில் வெளிப்படுவதோடு ஏகாதிபத்தியத்தின் நிரந்தர அம்சமாக இருக்கும்.

இதன் விளைவாக, ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாள வர்க்கத்திற்குள் சந்தர்ப்பவாதிகளுக்கும் புரட்சிகர போக்குகளுக்கும் இடையிலான பிளவு மறைந்துவிடும் என்று எதிர்பார்ப்பது வெறும் கற்பனைகளின் பாற்பட்டது. எனவே புரட்சிகர மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்கள் ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் இந்த நிரந்தர பிளவை ஆரம்பத்திலிருந்தே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். 1916 அக்டோபரில் 'ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்' என்ற கட்டுரையில் லெனின் அப்பட்டமாக பிரச்சினையை முன்வைத்தார்:

*'சந்தர்ப்பவாதிகளின் கட்சிகளுக்கு அல்லது குழுக்கள், போக்குகள் போன்றவற்றுக்கு எதிராக ஒரு உறுதியான, இடைவிடாத போராட்டம் நடத்தப்படாவிட்டால், அது ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவோ அல்லது மார்க்சிசத்துக்காகவோ ஒரு போராட்டம் என்ற கேள்வியே இருக்க முடியாது.'*

எவ்வாறாயினும், தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் சந்தர்ப்பவாதப் போக்கிற்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய பொதுவான அறிக்கைகளுக்கு மட்டும் லெனின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. ஏகாதிபத்திய சகாப்தத்தில் மேம்பட்ட முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்களை விரிவுபடுத்துவதற்கான அடிப்படையாக இது போன்ற ஒரு போராட்டத்தின் வரையறைகளை வடிவமைக்கும் உறுதியான வரலாற்றுப் போக்குகளை வரைய அவர் முயற்சித்தார்.

## ஏகாதிபத்திய சகாப்தத்தில் மார்க்சிய தந்திரங்கள்:

'சோசலிசத்திற்கான ஏகாதிபத்தியமும் பிளவும்' என்ற தனது அக்டோபர் 1916 கட்டுரையில், லெனின் தன்னிச்சையான தொழிலாள வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியில் இரண்டு எதிரெதிரான ஆனால் இணைக்கப்பட்ட வரலாற்றுப் போக்குகளைக் குறிப்பிட்டார். ஒருபுறம், தொழிலாளர்கள், குறிப்பாக சிறப்பாகச் செயற்படும் தொழிலாளர்கள், பொருளாதாரச் சேர்க்கைகளில் (தொழிற்சங்கங்கள்) தங்கள் முதலாளிகளுடன் சிறந்த ஊதியம் மற்றும் நிலைமைகளுக்காகப் போராடுவதற்கும், முதலாளித்துவ அரசை தொழிலாளர் சட்டத்தின் மூலம் தங்கள் பொருளாதார ஆதாயங்களை அங்கீகரிக்க கட்டாயப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறார்கள். சிறந்த இடத்தில் உள்ள தொழிலாளர்கள், அவர்கள் சிறப்பாக அமைந்திருப்பதால், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் ரீதியாக சுறுசுறுப்பான பிரிவாக இருக்க முனைகிறார்கள், அவர்களில் இருந்து தான்தோன்றித்தனமாக புரட்சிகர சோசலிச அரசியலை நோக்கி ஈர்க்கப்பட்ட மேம்பட்ட தொழிலாளர்கள் உருவாகிறார்கள்.

மறுபுறம், சீர்திருத்தங்களுக்கான பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்களின் வெற்றியே, சிறந்த நிலையில் உள்ள தொழிலாளர்களின் மீது தனது கட்டுப்பாட்டை தக்கவைத்துக் கொள்வதற்கான புதிய வடிவங்களைத் தேட முதலாளித்துவத்தை கட்டாயப்படுத்துகிறது. இதற்கிடையில், ஏகபோக உயர் இலாபங்கள் மற்றும் தொழிலாளர்களின் சேர்க்கைகள் தவிர்க்க முடியாமல் தொழிலாள வர்க்கத்தின் குறிப்பிட்ட பிரிவினரை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்ற உண்மையும் முதலாளித்துவம் இந்த முரண்பாட்டைக் கையாளவும், சலுகைகளைப் பயன்படுத்தி நல்ல நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுக்கவும், அதன் மூலம் அவர்களை வளர்க்கவும் அடிப்படையாக அமைந்தது. சீர்திருத்தங்களுக்கான போராட்டங்கள் மூலம் அவர்கள் தங்கள் நிலையில் தொடர்ச்சியான முன்னேற்றங்களை அடைய முடியும் என்பதே இதன் அடிப்படை. இவ்வகையில், சிறப்பாகச் செயற்படும் தொழிலாளர்களின் ஆதாயங்கள், தொழிலாள வர்க்க இயக்கத்தை ஒட்டுமொத்தமாக வலுப்படுத்தாமல், நல்லவர்களிடையே சந்தர்ப்பவாதத்தின் வெற்றியின் மூலம் இயக்கத்தைப் பிளவுபடுத்துவதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் ஒரு அடிப்படையை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நேர்மாறாக மாற்ற முடியும். இதனால் அவர்களின் வரிசையில் இருந்து வெளிப்படும் மேம்பட்ட, புரட்சிகர எண்ணம் கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை வரம்பிடவும் முடிகிறது. லெனின் இந்த இயங்கியலுக்கு குறித்த முக்கியத்துவத்தை அளித்தார், குறிப்பாக தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் இணைவது தவிர்க்க முடியாமல் எப்போதும் உயர்ந்த போராட்டத்திற்கும் நனவிற்கும் வழிவகுக்கும் என்று ஒருதலைப்பட்சமாக வாதிட்டவர்களை குறிவைத்து, முதலாளித்துவ வர்க்கத்தின் அத்தகைய சேர்க்கைகளைப் பயன்படுத்துவதற்கான திறனைக் குறைத்து மதிப்பிடுகிறார்.

மார்க்சிச தந்திரோபாயங்களுக்கு தொழிலாளர் பிரபுத்துவத்தின் நிதானமான பார்வை, தொழிலாள வர்க்க இயக்கத்தின் வெகுஜன அமைப்புகளில் அதன் மேலாதிக்கத்திற்கும் தொழிலாள வர்க்கத்தினுள் இருக்கும் சலுகை பெற்ற அடுக்குகளின் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் எதிராக தீவிரமான கருத்தியல் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் நடத்த வேண்டியது அவசியம் தேவை என்று லெனின் வாதிட்டார். தாழ்த்தப்பட்ட, பாதுகாக்கப்படாத வர்க்கத்தின் வெகுஜனத்தின் நலன்கள், தொழிலாளர் பிரபுத்துவத்தின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் பிரபுத்துவம் அல்லாத பிரிவினரின் நலன்களை நிலைநாட்ட வேண்டியதன்

அவசியத்தைப் பற்றிய இந்த புரிதல், மார்க்சிஸ்டுகள் நல்ல நிலையில் உள்ள தொழிலாளர்கள் மத்தியில் அரசியல் பணியை கைவிட வேண்டும் என்று லெனின் வாதிட்டதாக அர்த்தமில்லை. மாறாக, இந்தத் தொழிலாளர்களின் சந்தர்ப் பவாத அரசியலுக்கு எதிராக மார்க்சிஸ்டுகளுக்குப் போராடு வதற்கான அழைப்பு அது. இந்த போராட்டம் இரண்டு முனை களில் தொடர்கிறது: தொழிலாளர் பிரபுத்துவத்தின் பிற்போக் குத்தனமான தலைவர்களுக்கு எதிராக, முதலாளித்துவ வர்க் கத்தின் தொழிலாளர் லெப்டினன்ட்களுக்கு எதிராக, தொழி லாள வர்க்க இயக்கத்திற்குள் முதலாளித்துவத்தின் நனவான முகவர்கள் என அம்பலப்படுத்துவதும் மதிப்பிழப்பதும் அவ சியம். அவர்களுக்குப் பதிலாக உணர்வுப்பூர்வமான புரட்சிகர தலைவர்களை நியமிக்கவும்; மற்றும் தொழிலாள வர்க்க இயக்கத்தின் அணிகளில் உள்ள தொழிலாளர் பிரபுக்களின் அரசியல் செல்வாக்கை அழிக்க, அவர்களில் ஒரு பகுதியி னர் போராட்டத்தின் போக்கில் சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து விலகி வெற்றி பெறலாம்.

தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள் ஒருங்கிணைக்கப்பட்ட சந்தர்ப்பவாதப் போக்கு இருப்பதற்கான பொருள் அடிப்ப டையை லெனின் புரிந்துகொண்டது ஏகாதிபத்திய நாடுகளில் புரட்சிகர மார்க்சிச அரசியலுக்கான அடிப்படை நோக்கு நிலையை வழங்குகிறது. இந்த நாடுகளில் சோசலிசப் புரட் சிக்கு பாட்டாளி வர்க்கத்தைத் தயார்படுத்தும் மூலோபாயப் பணி சந்தர்ப்பவாதப் போக்கின் அரசியல் செல்வாக்கை தர மான முறையில் பலவீனப்படுத்தாமல் நினைத்துப் பார்க்க முடியாதது என்பது இந்த நிகழ்வு பற்றிய லெனினின் பொருள் முதல்வாத ஆய்வில் இருந்து தெளிவாகிறது. எவ்வாறாயி னும், பொருள்முதல்வாத முறைக்கு இணங்க, லெனினின் பகுப்பாய்வு, இது எல்லா நேரங்களிலும் சாத்தியமில்லை என் பதை வெளிப்படுத்துகிறது, ஏனெனில் சந்தர்ப்பவாதத்தின் வலிமையானது சர்வதேச மற்றும் எந்த குறிப்பிட்ட ஏகாதிபத் திய நாட்டிற்குள்ளும் ஏகபோக முதலாளித்துவத்தின் வலிமை யுடன் நேரடியாக தொடர்புடையது.

ஒப்பீட்டளவில் ஏகாதிபத்திய செழுமையின் காலகட்டங்கள், தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள் சந்தர்ப்பவாதத்தின் அர சியல் செல்வாக்கை எதிர்க்கும் பணியை மிகவும் கடினமாக் கும். எவ்வாறாயினும், இந்த மெதுவான காலகட்டங்களில் புரட்சிகர அரசியல் பணியானது, புறநிலை நிலைமைகள் சந் தர்ப்பவாதப் போக்கோடு தீவிரமாகப் போராடுவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கும் காலகட்டங்களில் முன் னேற்றங்களின் தரத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

தவிர்க்க முடியாத பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி யின் காலகட்டங்கள், சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான வெளிப்ப டையான மற்றும் கூர்மையான போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கின்றன, இது தொழிலாள வர்க்க இயக்கத்தின் பொருள் தளம் சுருங்கும்போது இன்னும் ஆபத்தானதாகவும், வீரியமாகவும் மாறும். இத்தகைய காலகட்டங்களில் சிறந்த நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு பொருளாதார, கலா சார மற்றும் அரசியல் சலுகைகளின் பொருள் லஞ்சம் பலவீ னமடைவது, சந்தர்ப்பவாத தொழிலாளர் தலைவர்களின் கருத்தியல் மற்றும் அரசியல் சேவைகளின் முதலாளித்துவத் தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. சலுகைகள் இழப்பு அல்லது அவற்றின் அச்சுறுத்தல் இழப்பு ஆகியவை தொழி லாள வர்க்கத்தின் மேல் அடுக்குக்குள் சந்தர்ப்பவாதத்தை தன்னிச்சையாக கைவிடுவதைத் தூண்டிவிடாது. மாறாக, இந் தச் சலுகைகளை இழந்ததற்கு அல்லது அச்சுறுத்தப்பட்ட இழப்புக்கு கீழ் அடுக்கு அல்லது பிற நாடுகளில் உள்ள தொழிலாளர்களை குற்றம் சாட்டுவதற்கு இந்த பிரிவுகளுக் குள் ஒரு சக்திவாய்ந்த எதிர்வினையைத் தூண்டலாம். ஆயி னும்கூட, ஏகாதிபத்திய செழிப்பினால் உருவாக்கப்பட்ட சலு கைகளை இழப்பது சந்தர்ப்பவாதத்திற்கான சமூக அடித்த ளத்தை சீராக அரித்துவிடும், இதன் மூலம் தொழிலாளர்கள் சந்தர்ப்பவாத தொழிலாளர் தலைவர்களின் உண்மையான பாத்திரத்தை புரிந்துகொள்வதற்கும் தங்கள் சொந்த வர்க்க நலன்களை நன்கு புரிந்துகொள்வதற்கும் மிகவும் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும்.

புறநிலை நிலைமைகளின் முழுத் திறனும் உணரப்படுமா இல்லையா என்பது புரட்சிகர மார்க்சிஸ்டுகளின் அரசியல் செல்நெறி, தந்திரோபாயங்கள், அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. இதுவே துல்லியமாக ‘லெனினிசத்தின்’ முக்கி யத்துவமாகும். இது ஏகாதிபத்திய ஜனநாயகங்களுக்கு முற் றிலும் பொருத்தமற்றது அதனாலேயே அனைத்துவிதமான சந்தர்ப்பவாதிகள் ‘தன்னார்வவாதம்’ என்ற பெயரில் சோர்வ டையாமல் நிராகரிக்கின்றனர்.

இறுதியாக, ஆழ்ந்த சமூக நெருக்கடியின் காலகட்டத்திலும் கூட, சந்தர்ப்பவாதப் போக்கினால் ஏகாதிபத்திய நாடுகளில் தொழிலாள வர்க்க இயக்கத்தின் மேலாதிக்கத்தை தோற்க டிப்பதில் மார்க்சிஸ்டுகளுக்கு விரைவான முடிவுகள் பற்றிய மாயைகள் இருக்கக் கூடாது என்று லெனின் எச்சரித்தார். அவர் பின்னர் எழுதினார்: ‘சந்தர்ப்பவாத தலைவர்கள், தொழிலாள வர்க்கத்தின் மேலடுக்குகளோடு, தொழிலாளர் பிரபுத்துவம் ஆகியவற்றின் மிக அதிகமான நிலைத்தன் மையை நாம் காண்கிறோம், அவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத் திற்கு வலுவான எதிர்ப்பை வழங்குகிறார்கள். அதனால்தான் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க தொழிலாளர் கட்சிகளுக்கு இந்த நோயிலிருந்து விடுபடுவது நம் நாட்டில் இருந்ததை விட கடினமாக இருப்பதைக் கண்டறிய நாம் தயாராக இருக்க வேண்டும்.’

## லெனினும் ஏகாதிபத்தியமும்:

நூறு ஆண்டுகளுக்கு முன்பு லெனின் முதலாளித்துவம் ஒரு புதிய வரலாற்று கட்டத்தில், அதன் வரலாற்றில் கடைசி மற் றும் மிக உயர்ந்த கட்டமாக, ஏகபோக முதலாளித்துவத்தில் நுழைந்துள்ளது என்று லெனின் முடிவு செய்தார். அவர் இதை இவ்வாறு வரையறுத்தார்: ‘முதலாளித்துவம் வளர்ச்சியின் அந்த கட்டத்தில் ஏகபோகங்கள் மற்றும் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இதில் மூல தனத்தின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இதில் சர்வதேச அறக்கட்டளைகளுக்கு இடையே உலகப் பிரிவினை தொடங்கியுள்ளது. இதில் உலகின் அனைத்துப் பகுதிகளையும் மிகப்பெரிய முதலாளித்துவ சக் திகளுக்கு இடையே பிரிப்பது நிறைவடைந்துள்ளது.’ லெனின் இதை நவீன ஏகாதிபத்தியத்தின் சகாப்தம் என்றும் அழைத் தார்.

ஏகபோக முதலாளித்துவத்தின் முக்கிய அம்சங்களின் சமகால வெளிப்பாடுகளைப் படிப்பது, ஏகபோக முதலாளித்துவ அமைப்பின் தர்க்கமும் இயக்கமும் லெனின் காலத்திலிருந்து அடிப்படையில் மாறாமல் இருப்பதைக் காட்டுகிறது. இருப்பினும், ஏகாதிபத்தியத்தின் குணாதிசயமான சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் வடிவங்களும் வழிமுறைகளும் உருவாகி தீவிரமடைந்துள்ளன என்பதை இது காட்டுகிறது. ஏகாதிபத்தியத்தில், முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டமாக, லெனின் ‘போட்டியை ஏகபோகமாக மாற்றுவது நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும்’ என்று அடிக்கோடிட்டுக் காட்டினார். எவ்வாறாயினும், இந்த நிகழ்வு, தத்துவார்த்த, அனுபவ மற்றும் கொள்கை மட்டங்களில் ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்க நவதாராளவாத உரையாடலால் முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது அல்லது மறைக்கப்பட்டுள்ளது.

உண்மையில், நவதாராளவாதக் கோட்பாட்டின் அனைத்து நலன்களை மேம்படுத்தும் கூற்றுக்கள், பின்வரும் ஐந்து நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டிய முழுமையான போட்டி சந்தைகளின் செயற்பாடுகளைச் சார்ந்துள்ளது: 1) ஒரே மாதிரியான தயாரிப்புகளை விற்கும் பல சிறிய நிறுவனங்கள்; 2) ஒவ்வொரு நிறுவனமும் ஒப்பீட்டளவில் சிறிய சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது; 3) அனைத்து நிறுவனங்களும் விலை எடுப்பவர்கள், அதாவது அவர்கள் தங்கள் தயாரிப்புகளின் சந்தை விலையை பாதிக்க முடியாது; 4) தொழில்துறையில் நிறுவனங்கள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் தடைகள் இல்லை; மற்றும் 5) அனைத்து வாங்குபவர்களுக்கும் விற்கப்படும் தயாரிப்பு மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் வசூலிக்கும் விலைகள் பற்றிய முழுமையான தகவல் உள்ளது. இது முதலாளித்துவ அமைப்பு முறையின் சுருக்கம் ஆகும், அது அதன் ஆற்றல் மிக்க மற்றும் முற்போக்கான கட்டத்தில் இருந்தபோதும், பல போட்டியிடும் முதலாளிகளிடையே மூலதனம் இன்னும் சிதறடிக்கப்பட்டது. இந்த ஐந்து அளவுகோல்களைப் புறந்தள்ளக்கூடிய எந்த ஒரு பொருளாதாரமும் இன்று உலகில் இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த இலட்சியப்படுத்தப்பட்ட கட்டமைப்பில், ஏகபோகங்களும் சில்லோர் முற்றுரிமை (oligopolies) பிறழ்வுகளாகும். முதலாளித்துவ போட்டி இறுதியில் மேலாதிக்க நிறுவனங்களை வெளியேற்றுவதால் அவை விதி அல்லது நிலையற்ற நிகழ்வுகளுக்கு விதிவிலக்குகள். புதிய தாராளவாதிகளுக்கு, போட்டி இருக்கும் வரை, ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்கள் நீண்ட காலத்திற்கு நடைமுறைச் சிக்கல் அல்ல. மறுபுறம், ‘ஹெட்டோரோடாக்ஸ்’ நவதாராளவாதிகள் (எ.கா., தாராளவாதிகள் அல்லது இடது சமூக ஜனநாயகவாதிகள்) முதலாளித்துவப் பொருளாதாரங்களின் சமநிலையின்மை, பரவலான வெளிப்புறங்கள், விரிவடையும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பொதுப் பொருட்களில் குறைவான முதலீடு போன்ற சந்தை தோல்விகளை முதலாளித்துவ அரசுகள் சரி செய்ய முடியும் என்று கருதுகின்றனர். ஆனால் லெனினுக்கு முன்பே, முதலாளித்துவம் தவிர்க்கமுடியாமல் முதலாளிகளின் கைகளில் மூலதனத்தின் அதிக செறிவுகளுக்கு வழிவகுக்கிறது என்பதை மார்க்ஸ் நீண்ட காலத்திற்கு முன்பே அங்கீகரித்தார்.

மார்க்சிஸ்டுகளைப் பொறுத்தவரை, ஏகபோக நிறுவனங்கள் என்பது போட்டியின் காரணமாக அல்ல. முதலாளிகளுக்கு இடையிலான சண்டையில், சிறிய மற்றும் பலவீனமானவை பொதுவாக திவாலாகி, பெரியவர்களால் விழுங்கப்படுகின்றன. காலப்போக்கில் ஒரு சில நிறுவனங்களின் ஏகபோகக் கட்டுப்பாடு பல நிறுவனங்களின் போட்டியை எப்போதும் விரிவடையும் நோக்கத்தில் மாற்றியமைக்கிறது, அது தொழில்துறையின் முழு கிளைகளிலும் முழு பொருளாதாரத்திலும் ஆதிக்கம் செலுத்தும் வரை தொடர்கின்றன.

ஏகபோக நிறுவனங்கள் விலைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன, விநியோகத்தைக் கட்டுப்படுத்துகின்றன, மற்றவர்கள் நுழைவதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. நுகர்வோர் தேவையை கையாளுதல் முதலியவற்றை தங்கள் ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளப் பயன்படுத்துகின்றன. மார்க்சிய பாரம்பரியத்தைச் சேர்ந்த அரசியல் பொருளாதார வல்லுனர்களுக்கு, ஏகபோக அதிகாரம் என்பது ஒன்று அல்லது சில பெரிய நிறுவனங்களின் சராசரிக்கு மேல் லாபம் அல்லது அதிக லாபம் ஈட்டுவதற்காக தொழில்கள் அல்லது முழுப் பொருளாதாரங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் திறன் ஆகும். ஏகபோக அதிகாரம் என்பது போட்டியின் முழுமையான இல்லாமையைக் குறிக்காது. தொழில்கள் ஒரு சில ஏகபோக நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்துகின்றன, அவை ஒரே நேரத்தில் கூட்டு மற்றும் போட்டியிடுகின்றன. ஆனால் இது புதிய தாராளமயம் தூண்டும் சுதந்திர சந்தையில் சரியான போட்டி நிலைமைகளுக்கு முரணானது.

மேலும், அரசு நடுநிலையானது அல்ல, மாறாக சமூகத்தில் ஆளும் வர்க்கங்களின் ஒரு கருவி என்பதை மார்க்சிஸ்டுகள் அங்கீகரிக்கின்றனர். முதலாளித்துவ அரசுகள் பொது மக்களின் நலனுக்காக பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தாது, ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்கள் ஒருபுறம் இருக்கட்டும். இதற்கு நேர்மாறாக, முதலாளித்துவ அரசு ஏழைகளை மேலும் முதலாளித்துவ சுரண்டலை எளிதாக்கும். எனவே மார்க்சிஸ்டுகளைப் பொறுத்தவரை, தடையற்ற சந்தைகளை அடக்குவதற்கு வளர்ச்சி அரசை புத்துயிர் அளிப்பது ஒரு கேள்வி அல்ல, இது பெரும்பாலான நவ தாராளவாத எதிர்ப்பாளர்கள் அழுத்தம் கொடுக்க தயாராக உள்ளது. அடிப்படையில் இது உழைக்கும் வர்க்கங்கள் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவது, உற்பத்திச் சாதனங்களின் மீதான உரிமையையும் கட்டுப்பாட்டையும் ஜனநாயகப்படுத்துவது மற்றும் வர்க்க உறவுகளை சோசலிசம் மற்றும் இறுதியில் கம்யூனிசத்தை நோக்கி மாற்றுவது பற்றியது.

லெனினின் காலத்தில், முதலாளிகள் மத்தியில் உற்பத்தி மற்றும் மூலதனத்தின் அதிக செறிவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபோக சேர்க்கைகளின் விரைவான வளர்ச்சியை அவர் கண்டார். இவை 1873-1890 காலகட்டத்தில் கூட்டுப் பங்கு நிறுவனத்தின் வளர்ச்சியுடன் மிகவும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரம் முழுவதும் வேகமாகப் பரவின. 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் பொருளாதாரங்களில் ஏகபோகங்கள் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்தின. ரஷ்யா மற்றும் ஜப்பான் போன்ற வேறு சில நாடுகள் விரைவில் பிடிபட்டன. 20-ம்

நூற்றாண்டில் பெரு நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத் தப்படும் ஏகபோக நிறுவனங்களின் மேலாதிக்கம் அதிகரித் தது, பின்னர் அவை பல தொழில்கள் மற்றும் துறைகளில் மேலாதிக்க நலன்களைக் கொண்ட கூட்டு நிறுவனங்களின் வடிவத்தை எடுத்தன, பின்னர் பன்னாட்டு நிறுவனங்களாக பல நாடுகளில் செயற்படுகின்றன. இடைக்காலம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் பெருங்கடலால் சூழப்பட்ட தொழில் துறை தீவுகளில் வளர்ந்து வரும் முதலாளித்துவத்துடன் ரஷ்யா போன்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையே உள்ள பலவீனமான இணைப்பிலிருந்து சோசலிசம் எழலாம் என்ப தைக் குறிக்க அவர் சமச்சீரற்ற வளர்ச்சியின் சட்டத்தை விரி வாகக் கூறினார். மற்றும் பல்வேறு தேசிய இனங்களை ஒடுக் குகிறது. முதலாளித்துவம் தொழில் ரீதியாக வளர்ச்சிய டைந்து அதை வழங்குகிறது.

சோசலிசத்திற்கான பொருளாதார மற்றும் சமூக நிலைமை கள், முதலாளித்துவ வர்க்கம் தொழிலாள வர்க்க இயக்கத் தையும் சோசலிச நோக்கத்தையும் எதிர்க்கவும் ஒடுக்கவும் ஒரு வலுவான நிலையில் உள்ளது. பாட்டாளி வர்க்கம் அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது மற்றும் முத லாளித்துவ அரசை தூக்கி எறிந்து ஜனநாயகத்திற்கான போரில் வெற்றி பெற வேண்டும். ரஷ்யா போன்ற ஒரு குறை வாக முன்னேறிய நாட்டில், புரட்சியின் முதலாளித்துவ ஜனநா யக நிலை மிகவும் வரையறுக்கப்படுகிறது.

அரசியல் பொருளாதாரத்தில், லெனின் இலவச போட்டி முத லாளித்துவத்தை ஏகபோக முதலாளித்துவம் அல்லது நவீன ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்தார், மேலும் முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த மற்றும் இறுதி கட்டம் என்று வரையறுத்தார். ஏகாதிபத்தியவாதிகளிடையே சக்திக ளின் சமநிலையில் கணிசமான மாற்றம் உலகை மறு பகிர்வு செய்வதற்கான தீவிரமான போராட்டத்திற்கும் உலகப் போர் வெடிப்பதற்கும் வழிவகுக்கிறது. அவர் ஏகாதிபத்தியங்க ளுக்கு இடையிலான போரை சோசலிசப் புரட்சியின் முன் னோடியாக விவரித்தார், மேலும் ஏகாதிபத்தியப் போரை புரட் சிகர உள்நாட்டுப் போராக மாற்ற பாட்டாளி வர்க்கத்தையும் மக்களையும் அழைத்தார். அவர் அந்தந்த நாடுகளின் போர் முயற்சிகள் மற்றும் போர் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப் பதற்காக இரண்டாம் அகிலத்தில் ஐரோப்பிய சமூக ஜனநாய கக் கட்சிகளை எதிர்த்தார் மற்றும் அவர்களை சமூகப் பேரின வாதிகள் என்று அழைத்தார். இவ்வாறு ஏகாதிபத்தியம் குறித்த முன்னோடியான சிந்தனைகளை லெனின் முன்வைத் தார்.

## நிறைவுக் குறிப்புகள்:

ஏகாதிபத்தியம் எனும் பதத்தை அரசியற் கருத்துரைப்போர் கவனக்கேடாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். மேலாதிக்க வல் லரசுகளாலும் பேரினவாதிகளாலும் பாதிக்கப்பட்டோர் அவற்றை ஏகாதிபத்தியங்கள் எனக் குறிப்பிடுவதுண்டு. ஆங் கிலத்தில் 'imperialism' எனப்படும் இப் பதம் 'empire' (பேரரசு) என்ற சொல்லிலிருந்து பிறந்த போதும், இன்றைய நடைமுறையில் அது குறிப்பான அரசியற் கருத்தை உடை யது. தேசிய, சர்வதேசியத் தளங்களில் முதலாளியத்தைத் தக்கவைப்பதில் ஏகாதிபத்தியத்திற்கு முக்கிய வகிபாகம் உண்டு. எனவே ஏகாதிபத்தியம் எனின் என்ன எனவும் அது எவ்வாறு இயங்குகிறது எனவும் விளங்கிக்கொள்வது மானிட விடுதலைக்கான போராட்டத்துக்கு முக்கியமானது. 'ஏகாதி பத்தியம் – முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்ற நன்கறி யப்பட்ட தனது நூலில், லெனின், 'வரலாற்றில் ஏகாதிபத்தியத் தின் இடம்' எனுந் தலைப்பிலான அத்தியாயத்தை 'ஏகாதிபத் தியம் என்பது அதன் பொருளாதாரச் சாராம்சத்தில் ஏகபோக முதலாளியமாகும்' என்ற கூற்றுடன் தொடங்குகிறார். அதுவே ஏகாதிபத்தியத்தின் பொழிப்பாகும்.

முதலாளியம் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தை எட்டிய போது ஏகாதிபத்தியம் தோன்றியது. முதலாளியம் தொடர்ந்து வளரவும் நிலைக்கவும் அது ஏகபோக இயல்பினதாக வேண் டியிருந்தது. காலனித்துவத்தினின்று நவ கொலனித்துவத்துக் கான மாற்றம் ஏகாதிபத்தியம் செயற்படும் முறையில் ஒரு மாற்றத்தைக் காட்டியது. நிதி மூலதனம் மேலும் மேலும் ஆதிக்கஞ் செலுத்திய நிலையில் ஏகபோக முதலாளியமும் மாற்றங்கண்டது. அத்துடன், பகிரங்கமாக அரசுக்கு ஆணை யிடவும் மூலதனத்துக்கு முடிகிறது. சேவைத் தொழில்களின் வளர்ச்சியும் பொதுச் சேவைகளதும் வசதிகளதும் வணிக மாக்கலும் பொருளாதாரத்தை இயக்கும் சக்திகளாக ஆயு தத் தொழிற் துறையினதும் போரினதும் பங்கும் இன்று முத லாளியத்தின் முக்கியமான அம்சங்களாகும். முக்கியமானது யாதெனில் ஏகாதிபத்தியம் பற்றிய நமது விளக்கத்தை அதன் தொடக்கக் கட்டத்துக்கோ அன்றி 20-ம் நுற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான அதன் விருத்திக்கோ மட்டுப்படுத்து வது, ஏகாதிபத்தியம் செயற்படும் விதத்தை விளங்கப் போதா ததாகலாம். ஏகாதிபத்தியத்தின் சாராம்சம் மாறாத போதும் அது வெளிப்படும் விதங்கள் மாறியுள்ளன.

ஏகாதிபத்தியம் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிறது. இக் காலத்துட் கொலனியத்தின் இடத்தை நவகொலனியம் பிடித்ததோடு ஏகாதிபத்தியம் தனது மேலாதிக்க நோக் கத்தை உலகமயமாக்கத் திட்டத்தினூடு தீவிரமாக முன்னெ டுக்கிறது. எனவே ஏகாதிபத்தியத்தை விளங்கல், ஏகாதிபத்தி யவாதிகளை அறிதல், ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ளல் எனும் மூன்று விடயங்களையும் தெளிவாக விளங்கல் காலத் தின் தேவை. 21-ம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் புதிய வடி வங்களை எடுத்துள்ளது. அதை உலகமயமாக்கல் சாத்திய மாக்கியது. உலகமயமான இன்றைய ஏகாதிபத்திய முறைமை அரை நூற்றாண்டு முன்னிருந்த முறைமையினுஞ் சிக்கலா னது. வங்கிகள் கட்டுப்படுத்த இயலாதவாறு, தனியார் சேமிப் புகளிலும் பொது நிதியங்களிலுமிருந்து நேராயும் மறைமுக மாயும் தமது நிதியிற் பெருமளவைப் பெறும் இராட்சத ஏக போக நிறுவனங்களின் வருகையும் நிதி மூலதனத்தின் கட் டற்ற வளர்ச்சியும் அதன் புதிய பண்புக்கூறுகளுள் அடங்கும். இவை அனைத்தையும் புரிந்து கொள்வதற்கான கோட்பாட்டு அடிப்படைகளை வகுத்துத் தந்தவர் என்றவகையில் லெனினை நன்றியுடன் நினைவுகூரலாம்.



meenilankco@thaiveedu.com

# மகாகவி சொல்லிய மந்திரம்

– கிருங்கை சேதுபதி

ஓவியம்: ஜீவா

***‘மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்’***
என்று பாடியவர் பாரதி.

அவர்தம் ஒவ்வொரு சொல்லும் மந்திரத்தன்மை வாய்ந் தவை என்பதைக் காலம் உறுதிப்படுத்தியிருப்பதைப் பார்க் கலாம். அத்தகு மந்திரத்தன்மையைச் சொல்லுக்குள் ஏற்றுகி றவர் மனிதர். அவர் வாய்க்கு வந்ததை மந்திரம் என்று வழங் கியவர் அல்லர். தனக்கான வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்தவர். வாழ்தலுக்கும் வாழ்வாங்கு வாழ்தலுக்கும் வேறு பாடு உண்டு. தான் மட்டும் வாழாது யாவற்றையும் வாழ்வித்து வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல். அது சொல்லால், செயலால், மனத்தால் மனிதத்துக்கு வாய்ப்பது. வினைவேறு சொல்வேறு பட்டோர் அத்தகையவர் ஆகமாட்டார். அவரை மனித வர்க் கத்திலேயே சேர்ப்பதுகூடத் தவறு. சொல்லும் செயலும் ஒன் றாக மனமும் ஒன்று வேண்டும். ‘மனமது செம்மையானால் மந் திரம் செபிக்க வேண்டா’ என்பது சித்தர்களின் சீரிய வேதம். மனதைச் செம்மையாக்கும் மார்க்கங்களைப் பலவாகச் சொல்லிக் கொடுத்தவர்கள் முன்னோர்கள். அவற்றை எல் லார்க்கும் எளிதாக்கித் தந்த அமைப்புத்தான் வழிபாட்டுத் தலங்களில் திருக்கோயில்கள். குறிப்பு பொருள் உணர்த்தி விடுதலைக்கான வாயிலைத் திறக்கும் திருக்கோயிலின் மாண்பினைச் சுட்டிக்காட்டி, ஓலை தந்து பாரதியாரை ஆட் கொண்டவர் குள்ளச்சாமி.

- ‘எப்போதும் வானத்திலே சுற்றும் பருந்துபோல் போக விஷ யங்களினால் கட்டுப்படாமல், பரமாத்மாவின் ஞானக் கதிரை விழித்து நோக்குதலே, விடுதலை. அதுதான் சிதம்பரம். மகனே! சிதம்பரத்துக்குப் போ.
- சிதம்பரத்தில் நடராஜருடன் சிவகாம சக்தி பக்தருக்கு வர தானம் கொடுக்கிறார். போய் வரம் வாங்கு.
- சிதம்பரமே ஸ்ரீரங்கம்; அதுவே பழனிமலை. எல்லாப் புண் ணிய க்ஷேத்திரங்களும் ஜீவன்முக்திச் சின்னங்கள் என்று தெரிந்துகொள். உனக்கு க்ஷேமமும் நீண்ட வயதும் ஜீவன் முக்தியும் விளைக’

என்பன, அவ்வோலையின் மந்திரச் சொற்கள். ‘கோயில்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. கோயில்கள் கொள்ளை யடிப்போரின் கூடாரங்கள் ஆகிவிடக்கூடாது என்றுதான் சொல்லுகிறோம்’ என்ற முற்போக்கு வசனங்கள் தமிழில் முளைக்குமுன்பே, பாரதி எழுதிவிட்டார்.

‘கோவில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானால், ஜனங்களிடம் பூசாரிகள் எதை யும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றா மல், விஷயத்தைச் சொல்ல வேண்டும். ‘கடவுள் எங்கும் இருக்கிறாரே? எல்லாம் கடவுள் தானே? ஊருக்கு நடுவில் ஒரு கோவிலைக் கட்டி, அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு, அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிடவேண்டும் என்ற நியமம் எதற்காக?’ என்றால், ஜனங்களுக்குள் ஐக்கி யம் ஏற்படுவதற்காக. கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிற தென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வமில்லை என்று நம்பலாமா?’ என்று கேட்கிறார்.

‘ஊரொற்றுமைக் கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனி யாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டா கும் பொருட்டாக’ என்று விளக்கமளிக்கிற பாரதியார், உலக ஒற்றுமையைப் பேண வந்தவர். உயிர்களிடையே ஒருமைப் பாட்டு உணர்வைப் பேணி வளர்த்துப் பிரபஞ்ச ஐக்கியத் தைப் பேசியவர், பேணியவர். அவர் சொல்கிறார். ‘உன்னு டைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை - எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து, மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டு, தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர் கோவில் வகுத்தார்கள்.’

ஆனால், நடந்தது என்ன? ‘கோயில் பூசை செய்வோன் சிலை யைக் கொண்டு விற்கிறான்.’ ‘தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்? என்பது முன்னோர் கொள்கை.’ இதனை மாற்றி, மக்களை ஏமாற்றிப் பூசாரிகள் மறைத்துப் பொய்

சொல்கிறார்கள்.

‘கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லது என்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது. அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பது போலே நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனை காலம் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வங் காட்ட முடியும்? ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப் போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்தி, பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது. எப்படிச் சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து நர்த்தனம் பண்ணுவாரோ, அதுபோல் யோக்கியதை இல்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் பகவான் அந்தக் கல்லை விட்டுப் போய் விடுவார். அது மறுபடி சாதாரண ரஸ்தா உருளை ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்துவிடும்.’ இதற்கு மேல் என்ன சொல்லிவிட முடியும்?

இந்த நுட்பத்தை மக்களிடம் எடுத்துச்சொல்லி, ‘கோயிலாவதேதடா குளங்களாவதேதடா’ என்று கூறி, ‘கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே’ என்று அருள்வாக்கு வழங்கியவர், சித்தர் சிவவாக்கியர். இவரைப்போல் எத்தனையோ சித்தர்கள் இந்த நாட்டில் தோன்றி, முக்திக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். காலப்போக்கில், கோயில் பூசாரிகளைப்போல், இந்தச் சித்தர்களிலும் சுயநலவாதிகள் தோன்றிவிடவே, மெய்யான சித்தமார்க்கம் பொய் சொல்லி, ஏமாற்றும் தன்மை கொண்டதாக ஆகிவிட்டது. மூடபக்தி முன்னிலும் வேகமாக முளைத்துக் கிளைத்துப் பரவிவிட்டது. வாய்க்கு வந்ததையெல்லாம் மந்திரம் என்று சொல்லி, வயிறு வளர்க்க ஆரம்பித்துவிட்டவர்கள் பலர். அதனையும் அடையாளம் கண்டு அகற்றிட முனைகிறார் பாரதி. அதற்குக் குள்ளச்சாமியும் துணை செய்கிறார். அது பாரதியாரின் ‘கலியுக கடோற்கசன்’ கதையாக அமைகிறது.

•

‘வேதபுரத்தில் கலியுக கடோத்கசன் என்பதாக ஒருவன் கிளம்பியிருக்கிறான். பழைய துவாபர யுகத்துக் கடோத்கசனுடைய சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். அரக்கு மாளிகையிலிருந்து பாண்டவர் தப்பியோடும்போது இடும்பவனத்தில் தங்கினார்கள். அங்கிருந்த இடும்பாசுரன் என்ற ராக்ஷஸன் அவர்களைப் பிடித்துத் தின்ன வந்தான். அந்த இடும்பனை வீமன் கொன்று விட்டான். பிறகு அவன் தங்கையாகிய இடும்பி என்ற ராக்ஷஸி வீமன்மேல் காதல் கொண்டு தன்னை மணந்து கொள்ளச் சொல்லி வற்புறுத்தினாள். மற்ற சகோதரர் நால்வரும் பிரமசாரிகளாக இருக்கையில் தான் முதலாவது ஒரு ராக்ஷஸியைப் போய்க் கலியாணம் பண்ணிக் கொள்வதில் வீமனுக்குச் சம்மதமில்லை. இடும்பி குந்தியிடம் போய் முறையிட்டழுதாள். குந்தி வீமனை நோக்கி: ‘மகனே, ஒரு ஸ்திரீ வந்து காதல் கூறுமிடத்து அவளை மறுப்பது ஷத்திரிய தர்மமில்லை. ஆண் மக்கள் அங்ஙனம் செய்யலாகாது. ஆதலால், நீ இந்த ராக்ஷஸியைக் கல்யாணம் பண்ணிக் கொள்க’ என்று கட்டளையிட்டாள். தாய் சொல்லுக்கிணங்கி வீமன் இடும்பியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான். இவ்விருவருக்கும் பிறந்த பிள்ளையே துவாபர யுக கடோத்கசன். இவன் வீமனுக்குச் சமமான பலமும் பராக்கிரமும் உடையவனென்று வேதவியாசர் தெரிவிக்கிறார். இது நிற்க. நமது கலியுக கடோத்கசனைக் கவனிப்போம். இவன் வேதபுரத்தில் ஒரு சாராயக் கடையிலே பணவசூல் குமஸ்தாவாக இருக்கும் ராமசாமி நாயக்கர் என்பவருடைய மகன். இவனுக்கு இப்போது வயது சுமார் இருபது இருக்கலாம். சாராயக் கடையில் பிராந்தி, விஸ்கி, ஜின் முதலிய ஐரோப்பியச் சாராயங்கள் விற்கிறார்கள். வேதபுரத்தில் குடி மும்முரம். ஆனபடியால் மேற்படிக் கடைக்குப் பற்று வரவு ஜாஸ்தி. அங்கு பண வசூல்காரனாகிய ராமசாமி நாயக்கருக்கு மாதம் எட்டு ரூபாய் சம்பளம். தெலுங்கு பேசும் நாயக்கர். நல்ல ஷத்திரிய வம்சம். தெலுங்கு ராஜ்ஜியம் போன பிறகு கெட்டுப்போய்த் தாழ்ந்த நிலைமைக்கு வந்திருக்கும் நாயுடு கூட்டத்தைச் சேர்ந்தவர். மேற்படி ராமசாமி நாயக்கர் மகனுக்குத் தாய் தந்தையர் வைத்த பெயர் கோவிந்தராஜுலு. அவன் தானாக வைத்துக்கொண்ட பெயர் கலியுக கடோத்கசன்.

இது அவனது பூர்வோத்திர சரித்திரம். இனித்தான் அவனைப் பற்றிய பாரதியாரின் வருணனை ஆரம்பமாகின்றது.

•

‘அவன் உயரம் ஐந்தேகால் அடியிருக்கலாம். குண்டுருளை போலே வயிரமான உடம்பு. இவன் மேலே மோட்டார்வண்டி ஓட்டலாம். மாட்டு வண்டி விடலாம். இவன் தலை ரோமத்தில் முந்நூறு இறாத்தல் கல் தொங்கவிடலாம். இவன் தலையிலே நாற்பது பேரடங்கிய பெரிய தொட்டிலை நிறுத்தி வைக்கலாம். இவன் இரண்டு விரல்களைக் கொண்டு மகாபாரதப் புஸ்தகத்தைக் கிழித்துப் போடுவான். இவன் பல்லினால் கல்லைப் பேர்த்துப் போடுவான். இவன் நகத்தால் கதவைப் பிளப்பான். வயது இருபதுக்கு மேல் ஆகவுமில்லை. நேற்றுக் காலையில் இந்தப் பையன் என்னைப் பார்க்கும் பொருட்டாக வந்திருந்தான். முதலாவது, தன்னுடைய தொழில்களை எல்லாம் என் வீட்டில் செய்து காட்டினான். நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன்.

•

இது அவனது முகவிலாசம். அதாவது புறத்தோற்றம். இனித்தான் அவனது அகவிலாசத்தைப் பாரதியார் ஆராய்ச்சி செய்யப் போகிறார். அது அடுத்த காட்சியாக விரிகிறது.

•

பிறகு இவனுடைய புத்தி எந்த நிலைமையில் இருக்கிறதென்பதைப் பரிசோதனை செய்யும் பொருட்டாக அவனுடன் சிறிது நேரம் சம்பாஷணை செய்து பார்த்தேன். அவன் கையில் ஒரு குறிப்புப் புத்தகம் (பாக்கெட் நோட்புக்) வைத்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்தால் சின்ன பைபிளோஅல்லது டைரி (தினசரி)யோ என்று ஐயப்படும்படியாக இருந்தது. ‘கையில்




என்ன டைரி புத்தகமா?' என்று கேட்டேன். அந்தப் பையன் ஹீ என்று பல்லைக் காட்டிக்கொண்டு, 'இல்லைங்க; மந்திர வாதப் புத்தகங்கள்' என்றான்.

'நான் வாசிக்கலாமா?' என்று கேட்டேன். 'வாசிக்கலாம்' என்று சொல்லி அந்தப் புத்தகத்தை என் கையில் கொடுத்தான். அது அச்சிட்ட புத்தகமன்று. அவன் கையால் எழுதியது. 'பல ஊர்களில் சஞ்சாரம் பண்ணினேன். பல சாதுக்களிடம் கேட்ட மந்திரங்களையெல்லாம் இதில் எழுதி வைத்திருக்கிறேன். நான் அவர்களுக்கு (அந்தச் சாதுக்களுக்குப்) பத்திரம் தயார் பண்ணிக் கொடுப்பேன்' என்று கலியுக கடோத்கசன் சொன் னான். 'பத்திரமா? அதென்ன?' என்று கேட்டேன்.

அவன் சொல்லுகிறான்: 'அதைப் பாமர ஜனங்கள் கஞ்சா

இலை என்றும் சொல்லுவார்கள். சாதுக்களுக்கு மனதை ஒரு நிலையில் நிறுத்திப் பிரம்மத்திலே கொண்டு சேர்க்க அது உபயோகங்க. மைசூரில் நான் போன மாசம் போயிருந்தே னுங்க. அங்கே பெரிய சாமியாருங்க, அவர்தான் எனக்கு ஆஞ்சநேயர் மந்திரம் கற்றுக் கொடுத்தாருங்க. அவர் ஒரு நாளைக்கு ஒன்றரை ரூபாய் கஞ்சா வாங்கிப் புகை குடிப்பா ருங்க. அவர் மனதை உள்ளே கொண்டு நிறுத்தினால் பிறகு அதை வெளியே இழுப்பது கஷ்டங்க' என்றான்.

இவன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் எனக்கு அந் தப் புத்தகத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவா அதிகப்பட் டது. புத்தகத்தைக் கையிலெடுத்துத் திறந்தபோது அதிலி ருந்து பொல பொலவென்று இருபது, முப்பதுத் துண்டுக் காகி தங்கள் உதிர்ந்தன. எனக்கு ஆராய்ச்சியிலே பிரியம் அதிக மானபடியால் முதலாவது அந்தத் துண்டுக் காகிதங்களைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுப் பிறகு புத்தகத்துக் குள்ளே நுழைவோம் என்று யோசித்து அந்தக் காகிதங்க ளைப் பார்த்தேன். அவற்றின் விவரம் பின்வருமாறு:

- முதலாவது: 'ஹோம்ரூல் ஸ்டாம்ப்' மூன்று இருந்தது. அதில் ஒவ்வொரு ஸ்டாம்புக்கு நடுவிலும் அனிபெஸன்ட் அம்மாள் தலை போட்டிருக்கிறது. சுற்றித் 'தெய்வத்துக்கா கவும் தேசத்துக்காகவும், ராஜாவுக்காகவும், சிறைப்பட்ட வர்' என்றெழுதி யிருந்தது. அதைச் சூழ நான்கு புறத்திலும் இங்கிலீஷ், தெலுங்கு, உருது, நாகரி, கன்னட லிபிகளில் 'ஹோம் ரூல்' என்றெழுதியிருந்தது.
- இரண்டாவது: ஒரு சின்ன டிக்கட். அதில் இங்கிலிஷ் பாஷை யில் 'மிஸ். தாரா; இந்தியன் லேடி ஸாண்டோ' என்று ஒரு புறத்திலும், வெளிச்சீட்டு (ஔட் பாஸ்) என்று மற்றொரு புறத்திலும் போட்டிருந்தது.
- மூன்றாவது: ஒரு லேசான காகிதத்தைப் போன்ற செப்புத் தகடு. அதில் ஏதோ சக்கரம் செதுக்கும் பொருட்டு வைத் துக் கொண்டிருப்பதாகக் கடோத்கசன் சொன்னான்.
- நாலாவது: ராமமூர்த்தி சர்க்கஸ் ஆட்ட ஜாப்தா.
- ஐந்தாவது: ஒரு கிறிஸ்தவப் பையனுடைய நேர்த்தியான புகைப்படம். அவன் யாரென்று கேட்டதற்குத் தன்னுடைய சிநேகிதனென்றும், இரும்பாலையில் வேலை பார்க்கிறா னென்றும், தன்னைப் போலவே குஸ்தி வகையறாத் தொழில்களில் பழக்கமுடையவனென்றும், அவனுக்குக் கலியுகக் கும்பகர்ணன் என்று பெயர் வைக்கலாமென்றும் கடோத்கசன் சொன்னான்.
- ஆறாவது: மறுபடியும் ஒரு டிக்கட். அதில் இங்கிலிஷில், 'எடிஸன் கினேமாடோக்ராப் கம்பெனி. ஒரு ஆளை உள்ளே விடு' என்றெழுதியிருந்தது.
- ஏழாவது: சிகரட் பெட்டியிலிருந்தெடுத்த துர்க்கை படம். அதில் தேவி மகிஷாசுரனைக் கொல்லுகிறாள். பக்கத்தில் விநாயகருடைய தலை மாத்திரம் தெரிகிறது. உடம்பெல் லாம் மறைந்திருக்கிறது. சின்னச் சுப்பிரமணியன் ஒன்றிருக் கிறது. அம்மனுக்குப் பதினாறு கைகள் போடுவதற்குப் பதி லாக எட்டுக் கை போட்டிருந்தது.
- எட்டாவது: இரண்டு சிங்கங்களுடன் ஒரு மனிதன் சண்டை போடுவது போல ஒரு படம். பத்திரிகையிலிருந்து கத்தரித் தது.
- ஒன்பதாவது: யேசு கிறிஸ்து, மாட்டுக் கொட்டகையில் பிறந்து வைக்கோல் மேலே போட்டுக் கிடப்பதாகக் குழந் தையுருவங் காட்டிய படம்.
- பத்தாவது: சாதாரண வருஷத்து மார்கழி மாதம் 18-ம் தேதி முதல் விரோதி கிருது வருஷத்துச் சித்திரை மாதம் 16-ம் தேதி வரையில் 'ஏகாதசி, ஷஷ்டி, பிரதோஷம், கரிநாள், யமகண்டம், ராகுகாலம், குளிகைகாலம், வாரசூலை இவற் றின் அட்டவணை.
- பதினோராவது: இனி மேன்மேலும் அடுக்கிக்கொண்டு போனால் படிப்பவர்களுக்குப் பொறுமையில்லாது போய் விடும் என்ற அச்சத்தால் இங்கு மேற்படி கீழேயுதிர்ந்த துண்டுக் காகிதங்களைப் பற்றிய முழு விபரங்களும் தெரி விக்காமல் விடுகிறேன். அதில் அநேகம் கடோத்கசனு டைய சிநேகிதர்களுடைய மேல் விலாசம், ஒரு சிறு துண் டுக் காகிதத்தில் குங்குமம் சுற்றியிருந்தது. அது கோயி லில் கொடுத்ததென்றும், அம்மன் பிரசாதமென்றும் கடோத் கசன் விளக்கினான்.

•

எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு நேரே வாராமல், இத்தனை விபரணைகள் எதற்கென்று நினைக்கத் தோன்றுகிறதில் லையா? அதையும் கூட, தனது பட்டியலில் பதினொன்றாவது சரத்தில் பாரதியார் குறித்துவிடுகிறார். அந்தக் காரணத்தால், ஏழு விவரங்களை அவர் சொல்லாது விடுகிறார். அடுத்து வரு வதுதான் நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய கருத்துக்குரிய சரத்து.

இனி அவன் மந்திரவாதப் புத்தகத்துள் எழுதியிருந்த விநோ தங்களில் சிலவற்றை இங்கு காட்டுகிறேன்.

கணபதி மந்திரம்:

ஓம் கணபதி; ஐயும் கணபதி; கிளியும் கணபதி; ஸவ்வும் கண-பதி; வா, வா; சகல ஜனங்களும்; போகங்களும்; சகல லோக சித்தியும், உமக்கு வசியமானது போல் எனக்கு வசியமாகவும். சுவாஹா.

பஞ்சாச்சரம்:

ஹரி ஓம் சிவாய நம:
அனுமார் மந்திரம்:

ஓம் அனுமந்தா, ஆஞ்சனேயா, நமோ நாராயணாய, சிரஞ்சீவி யாகக் காத்து ரக்ஷித்து வா. கிளியும், ஸவ்வும், என் எதிரி களை வென்று என்னைக் கா, கா, கா, ஸ்வாஹா!

புருஷ வசியத்துக்கு மந்திரம்:

நிலத்திலே முளைத்தவளே, நீலப்பூ பூத்தவளே, மனத்துக் கவலை தீர்த்தவளே, மன்னன் சிறை மீட்டவளே, குடத்துத் தண்ணீர் பாலாக வேண்டும். கோவிந்தராஜா என்னைக் கண்டா கும்பிட வேண்டும். நான் ஒரு புலியாக வேணும். அவன் ஒரு பசுவாக வேணும். புலியைக் கண்ட பசு நடுங்கி னாற் போல் நடுங்கி ஒடுங்கி வணங்கி நிற்க ஸ்வாஹா! - இந்த மந்திரத்தை ஆயிரம் உரு ஏற்றவேண்டும். வேளைச் செடியின் வடக்கே போகிற வேரில் ஞாயிற்றுக்கிழமை சூரி

யன் கிளம்புகிற சமயத்தில் மஞ்சள் துண்டைக் கட்டிப் பதி னாறு விசை மந்திரத்தை ஜபித்து பிறகு வேரறாமல் பிடுங்கி வெள்ளித் தாயித்தில் மஞ்சளை நீக்கி வேரைச் செலுத்திக் கட்டிக்கொள்ள வேண்டும்.

சகல வியாதிகளுக்கும் மந்திரம்:
'ஓம், ரீங், அங்' இந்தப்படிக்கு விபூதியில் எழுதி ஆயிரத் தெட்டு உரு ஜபித்து சூடக் கட்டியை அதன் மேலே வைத்துக் கொடுக்க வியாதி தீரும். இது கை கண்டது.

சிரங்கு கண்டவுடன் செய்கிற மந்திரம்:
மசி மா மசி; நசி மா நசி!'
சிரங்கு நைய மந்திரம்:
'கசி; நசி! கசி; நசி!'

பழுத்த பின் உடைக்கும் மந்திரம்:
நஞ்சு, பிஞ்சு, நாசமதாகிப் பிஞ்சு நஞ்சு போக ஸ்வாஹா!

ராஜாவை வசியம் பண்ண மந்திரம்:
வசீகரா, வசீகரா, ராஜ வசீகரா, அச்சிட்ட பங்காளா, தக்ஷி ணாமூர்த்தி, துர்க்கா தேவதாயை நம: இதற்கு ஆயிரத் தெட்டு செய்யவும்.

மற்றும் ஒரு ராஜ வசிய மந்திரம்:
அய்யும், கிலியும் ஸவ்வும், ஸவ்வும் கிளியும், ஐயும், நவகோடி சித்தர் சாயம் நசி, நசி: ஸர்வ மூலிகையும் இன்ன ராஜாவும் வசி, வசி.

•

இவை யாவும் பாரதியார் 'கலியுக கடோத்கசன்' கதைக்காக இட்டுக்கட்டிய மந்திரங்கள் அல்ல. வாழ்வில் கண்ட யதார்த் தத்தின் பதிவுகள். என் வாழ்க்கைப் பயணத்திலும் இவ்வாறு மந்திரம் சொல்லுகிற சாமியார்களைச் சந்தித்திருக்கிறேன். கண்மூடித் தியானித்து, கஞ்சாப் போதையில் வந்த ஒலிக ளைக் குறிப்பாகச் சொல்ல, அவற்றைக் குறித்து வைத்துக் கொண்டு அந்த நேரத்தில் அவர்களுக்கு என்ன தோன்றுகி றதோ, அதனை நம்மிடம் கூறி, அதன்படி நித்தியமும் பூசித்து வரவேண்டியது நமது கடப்பாடு என்று சொல்லிவிடுவார்கள். அவற்றுக்கான பலன்களும் கூடவே, சொல்லப்படும். கூடவே, 'நம்புபவர்களுக்கு நடராசா, நம்பாதவர்களுக்கு எமராசா' என்ற எச்சரிக்கையும் தரப்படும்.

விபூதி மந்திரித்தல், தாயத்து தருதல், தகடு தயாரித்தல் என்று பலவித மந்திர தந்திரங்கள் இந்த மார்க்கத்தில் அடங் கும். யந்திரத் தகடுகளில், வரையப்படுவதற்காகச் சில சக்க ரங்களும் உண்டு.

நம்பிக்கையின் அடிப்படையில் இந்த மந்திரங்கள் பலிக்க வும் செய்திருக்கும். அதன் பலனாய், 'நல்ல காரியம் இது. பல ருக்கும் பரவட்டும்' என்று அந்தக் காலத்தில் துண்டுப் புத்த கங்களாய் அச்சிட்டுக் கொடுத்தவர்களும் உண்டு. திருவி ழாக் காலங்களில் தெருக்களில் போட்டு, கூவி விற்றுப் பிழைத்தவர்களும் இருந்தனர். இப்போதும் இது தொடரத் தான் செய்கிறது.

இனி பாரதியார் கூறும் கதைக்குள் நுழையலாம்.

•

இந்த மந்திரங்களைத் தவிர, மேற்படிக் கலியுகக் கடோத்கச னுடைய நோட்புக்கில் இன்னும் இதுபோலவே முப்பது நாற் பது மந்திரங்களும், பலவிதமான சக்கரங்களும் இருந்தன. அந்த மந்திரங்களையும் சக்கரங்களையும் இப்போது புத்த கத்தில் முழுதும் விஸ்தாரமாகச் சொல்லப்போனால் நெடுந் தூரம் இந்த வியாசம் அளவுக்கு மிஞ்சி நீண்டுவிடும். எனினும் நமது ஹிந்து தர்மத்தையும், மந்திர மகிமையையும், இடைக் காலத்து மூட ராஜாக்களும், அயோக்கியப் பூசாரி, பண்டார, மந்திரவாதிகளும் எவ்வளவு கேலிக்கிடமாகச் செய்துவிட்டார் களென்பதை விளக்க, மேற்கூறிய திருஷ்டாந்தங்களே போது மென்று நினைக்கிறேன். இன்னும் அவனுடைய குறிப்புப் புத்த கத்தில் போகப் போகப் பெருங் கேலியாக இருந்தது. எனக்கு அவற்றையெல்லாம் பார்க்கும்போது சிரிப்பொரு பக்கம் வந் தது. தலையொரு பக்கம் கிறுக்கிற்று.

ஹிந்துக்களுடைய மூல பலமாகிய மந்திர சாஸ்திரத்தை இடைக்காலத்து மூடர் இவ்வளவு சீர்கெடுத்து வைத்திருப்ப தையும், அதைத் தற்காலத்து மூடர்களிலே பலர் நம்புவதை யும் நினைக்கும்போது எனக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று.

•

ஆத்திகத்திற்கு எதிரான நாத்திகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பகுத்தறிவு விளக்கம் தருவதற்கான இயக்கங்கள் தமிழகத்தில் உருவாகுமுன்பே, பாரதியார் விரித்து விளக்கிய கதை இது. பார்ப்பனர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டு கோயில் பூசாரிகள் செய்துவரும் ஏமாற்றைப், பார்ப்பன குலத்தில் தோன்றிய பாரதி பொய்யென்று காட்டியதைப் போல, இத்தகு மந்திரங்களைக் காட்டி, மக்களை ஏமாற்றும் போலிகளை அடையாளம் காட்டுதற்குச் சித்தர் மரபிலிருந்து ஒருவர் வரவேண்டும் அல்லவா ? தன்னைச் சித்தராக்கிய குள் ளச்சாமியைக் கொண்டுவந்து பாரதியார் அங்கே நிறுத்துகி றார். அவர், பாரதியாருக்குக் கைகொடுக்கிறார். கதை இப் படி மேலும் வளர்கிறது.

•

'அதை நான் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் குள்ளச் சாமி என்ற வேதபுரத்து ஞானி வந்தார். அவரிடம் அதைக் கொடுத்தேன். அவர் அந்தப் புத்தகத்தை வெளிமுற்றத்துக் குக் கொண்டு போனார். அங்கிருந்து நெடுநேரமாகத் திரும்பி வரவில்லை. என்ன செய்கிறார், பார்ப்போமென்று சொல்லி நான் எழுந்து வெளிமுற்றத்துக்கு வந்தேன். என்னுடன் கலி யுக கடோத்கசனும் வந்தான். அங்கு போய்ப் பார்த்தால், குள் ளச்சாமி அந்தப் புத்தகத்தில் மண்ணெண்ணையை விட்டுத் தீயைக் கொளுத்தி எரியவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தார். குழந்தைகள் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்த னர். எனக்குச் சிரிப்பு வந்தது. கடோத்கசன் கோவென்றழு தான். குள்ளச்சாமி பெரிய ஞானியென்றும், பரமபுருஷனென் றும், அவர் செய்தது பற்றி வருத்தப்படக் கூடாதென்றும் சொல்லி நான் கடோத்கசனைத் தேறுதல் சொல்லி அனுப்பி னேன்.

போகும்போது அவன் பைக்குள் குள்ளச்சாமியார் ஒரு பொற் காசு போட்டார். நான் ஒரு துண்டுக் காகிதத்தில் ‘ஓம் சக்தி’ என்ற மந்திரத்தை எழுதி அவன் பைக்குள் போட்டேன்.

பொற்காசைக் கண்டவுடன் கடோத்கசன் கொஞ்சம் சந்தோ ஷமடைந்து புன்சிரிப்புக் கொண்டான். அப்போது குள்ளச் சாமி சொல்லுகிறார்:

‘எல்லாம் தெய்வம்’ - ‘தர்மமே மகா மந்திரம்’, ‘உண்மைக்கு ஐயமுண்டு’, ‘எல்லோரையும் வசப்படுத்த வேண்டுமானால், எல்லோரையும் தெய்வமாக நினைத்து மனத்தால் வணங்க வேண்டும்.’, ‘இந்த விஷயங்களையெல்லாம் இந்தத் தேசத் தில் பரவும்படி செய்’ என்றார்.

•

கதை முடிந்துவிட்டது. காட்சி இன்னும் மனத்தில் நிற்கிறது. கதையில் வருகிற ‘கலியுக கடோத்கசன்’ சொல்லிக் காட்டு கிற சாமியார்களும் கஞ்சாப் புகைக்கிறார்கள். களத்திலி றங்கி உண்மையை நாட்டுகிற குள்ளச்சாமிக்கும் கஞ்சாப் பழக்கம் உண்டு என்பதைக் கண்டவர்கள் சொல்லியிருக்கி றார்கள். ஆனால், சித்த மார்க்கத்தில் உண்மை எது? பொய் யெது என்பதைத் துல்லியமாகப் பிரித்தறிந்து உணர்த்திக் காட்டுகிற மெய்யறிவு பாரதியாருக்கு வாய்த்திருக்கிறது. அதற்காகக், குள்ளச்சாமியைத் துணைக்கொள்கிறது, அவர் தம் நுண்ணறிவு. இந்தக் கதைக்குள், கலியுக கடோத்கசன் வைத்திருக்கும் காகிதங்களில், முதற் பத்து - கண்ட கண்ட காகிதங்கள். அடுத்த பத்து - மந்திரக் குறிப்புகள். இனி இவைபோல் இன்னும் மூன்று, நான்கு, பத்துகள் இருப்பதாக வும் சொல்லிக் காட்டுகிறார் பாரதியார்.

இவை பொருளற்றவை என்பதைப் படித்த மாத்திரத்திலேயே புரிந்துகொள்ளும் படியாக, வாசகர்களுக்கு உணர்த்திவிடுகி றார் பாரதியார். சமகால அரசியல், ஆன்மிகப் போக்குகளை உணர்த்த, அன்னிபெசன்ட் அம்மையாரின் படம், எட்டுக்கை முருகன் படம், இயேசு கிறிஸ்து படம், இவற்றோடு சக்கரம் வரைய வைத்திருந்த தகடு எனப் பையிலிருந்த பொருள்க ளின் பட்டியல். எல்லாவற்றையும் விட, ‘பத்திரம் (கஞ்சா)’ பற் றிய குறிப்பு. இப்படிக் காட்டிப் பிழைக்கிற கூட்டம் இன்னும் காவித் துணி கட்டிக்கொண்டு அலையத்தான் செய்கிறது. இதன் ஆபத்தை உணர்ந்து அடையாளம் காட்டுகிற பாரதி யார், குள்ளச்சாமியைக் கொண்டுவந்து நிறுத்தி உண்மையை விளக்கிவிடுகிறார்.

பொருள் தேடிப் பிழைக்கும் வழிகளில் இதுவும் ஒன்று என்ப தால், கோவென்றழுகிறான் கடோத்கசன். குறிப்பறிந்து பொற் காசினை, அவன் பைக்குள் போடுகிறார் குள்ளச்சாமி. (இது அவர்தம் சித்து விளையாட்டுகளுள் ஒன்று). பாரதியோ, ‘ஓம் சக்தி’ என்ற மந்திரத்தை ஒரு காகிதத்தில் எழுதி அவன் பையில் போடுகிறார். மேல் விளக்கம் போல், குள்ளச்சாமி கதை நிறைவில் நான்கு மந்திரங்களைச் சொல்கிறார். முன் னர் சொல்லப்பட்ட போலிகளுக்கெதிராக, நிறுத்தப்பெற் றவை இவை. நான்கு வேதங்களைப் போல, நான்கு மந்திரங் கள்..

- ‘எல்லாம் தெய்வம்’
- ‘தர்மமே மகா மந்திரம்’
- ‘உண்மைக்கு ஐயமுண்டு’
- ‘எல்லோரையும் வசப்படுத்த வேண்டுமானால், எல்லோரை யும் தெய்வமாக நினைத்து மனதால் வணங்க வேண்டும்.’

•

உண்மையில் மந்திரம் என்பதுதான் என்ன?

‘முன்னோர் முன்னோர்’ என்று அடிக்கடி பாரதியார் சொல்லு கின்ற முன்னோர்களின் மகத்தான முன்னோடி திருவள்ளுவர். அவர் சொல்லுகிறார்:

***‘நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்’***

- நீத்தார் பெருமை -28

அவருக்கும் முன்னோடியான தொல்காப்பியர் சொல்லுகிறார்:


***‘நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப’***

- செய்யுளியல் -17

இந்த முன்னோடிகளின் வரிசையில் தன் இருப்பையும் நிலை நிறுத்திக் கொண்ட பாரதியார், தன் சொல்லையும் மந்திரத் தன்மையுடையதாய் ஆக்கித் தருகிறார். அவரும் நிறைமொழி மாந்தர் தானே. அவர் காட்டும் மார்க்கமும் மந்திரமும் பின்வ ருமாறு அமைகிறது.

‘கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி: தெய் வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள்புரியும். துளிகூட, ஓர் அணுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாது என்று ஒருவன் பரிபூரண சித்தியடைவானாகில், அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு - ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது. வஞ்சனை இல்லாமல், ‘ஏதோ உலகத்திற் பிறந்தோம். தெய்வம் விட்டதே வழி’ என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டைபோல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்லவேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாய் எவன் ஈசுவரன் மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கி றானோ, அவனுக்குத் தெய்வத்தன்மை உண்டாகும். இதில் சந்தேகமே கிடையாது.’

‘தெய்வம் நீ என்று உணர்’ என்று மந்திரம் சொல்லி, புதிய ஆத்திசூடியில் கட்டளை பிறப்பித்தவர் அல்லவா, அவர்?



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் அயோத்தியாக் காண்டத்தின் இரண்டா வது படலமாகிய மந்தரை சூழ்ச்சிப் படலத்தினுள்ளே சென்று அதன் ஒரு பகுதியை நுகர்ந்து சுவைத்தோம். இந்த இதழில் மந்தரை சூழ்ச்சிப் படலத்தின் பிற்பகுதியில் காப்பியத்தின் பெரும் திருப்புமுனையாக அமையும் மந்தரையின் சூழ்ச்சி பற்றிக் கம்பரின் கவிநயமிக்க செய்யுள்கள் மூலம் அறிந்து கொள்வோம். நகரத்து மக்கள் பேராரவாரத்துடன் நகரத்தை அலங்கரிப்பதையும் இராமனின் முடிசூட்டு விழா நடைபெற இருப்பதையும் அறிந்து கூனி என அழைக்கப்படும் மந்தரை மனம் பொறாதவளாகக் கைகேயியின் அரண்மனையைச் சென்றடைவதைக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

***'தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்மேல்***
***மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்***
***பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்***
***உண்டையுண் டதனைத்தன் உள்ளத் துள்ளுவாள்'***

- கம்ப. அயோத்தி. 140

முன்னொரு நாள் இராமன் சிறுவனாக இருந்தபோது சிறு வில் லிலே மண்ணுருண்டையை வைத்துக் கூனியான மந்தரை யின் முதுகிலே அடித்ததனால் அவன்மீது கொண்டிருந்த வஞ்சினத்தை அவள் மனதினில் எண்ணியபடியே கோபத்தில் மடித்த வாயை உடையவளாகக் கொவ்வைக்கனி போன்ற அதரத்தையுடைய கைகேயியினது மாளிகையைச் சென்றடை கின்றாள். பல காலமாக இராமன் மீது பழிதீர்க்கக் காத்தி ருந்த கூனிக்கு வாய்த்த தருணமாக இராமனின் முடிசூட்டு விழா அமைந்து விடுகிறது. பழி தீர்க்கும் எண்ணம் உள்ளத் தில் ஏற்பட்டபோது அவளது உடலில் ஏற்பட்ட மெய்ப்பாட்டு மாற்றத்தை மடித்த வாயினாள் எனக் காட்சிப்படுத்தி அவளி டம் ஆழமாக வேரூன்றியிருந்த வஞ்சினத்தைக் கம்பர் வெளிப்படுத்தியுள்ளது நயமிக்கது.

***'எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்***
***நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினால்***
***செய்தபே ருவகைசால் செம்பொற் சீறடி***
***கைகளிற் தீண்டினள் காலக் கோளனாள்'***

- கம்ப. அயோத்தி. 140

பள்ளியறையில் துயின்று கொண்டிருந்த கேகயன் மகளாகிய கைகேயியை எழுப்புவதற்காக இதழ் நெகிழ்ந்து மென்மை யாக மலர்கின்ற தாமரை மலர்கள் தாம்செய்த தவத்தினால் பெற்ற உவமைத் தன்மை பொருந்திய சிவந்த பொன்னினா லான அணிகலன்களை அணிந்த கைகேயியினது சிறிய பாதங்களைத் தீய கோளைப் போன்றவளாகிய அக்கூனி தன் கைகளால் தடவினாள். தாமரை தவம்செய்து கைகேயியினது சிவந்த பாதங்களைப் போன்ற வடிவத்தைப் பெற்றது எனத் தற்குறிப்பேற்ற அணிநயத்துடன் இச்செய்யுள் அமைந்துள் ளது.

இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்காகச் சூழ்ச்சிசெய்ய வந்துள்ளாள் என்பதைக் குறிக்கும் வகையில் காலக் கோள னாள் என்ற அடைமொழியில் கூனியைக் கம்பர் குறிப்பிடுகி றார்.

***'அணங்குவாள் விடவரா அணுகும் எல்லையும்***
***குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்***
***பிணங்குவாள் பேரிடர் பிணிக்க நண்ணவும்***
***உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள்.'***

- கம்ப. அயோத்தி. 144

துன்பம் செய்கின்ற வாள்போன்ற நஞ்சையுடைய பாம்பாகிய இராகு, தன்னை விழுங்குமாறு நெருங்கிவரும் எல்லையிலும் தனது தன்மை மாறாமல் ஒளிக்கதிர்களை வீசிக்கொண்டிருக் கின்ற குளிர் வெண்திங்களைப் போலப் பெருந்துயரம் நிகழ இருக்கிற வேளையிலும் நீ வருந்துகின்றாயில்லை. இப்படித் துயின்று கொண்டிருக்கின்றாயே| என்று கூறித்துயில் எழுப்பு கின்றாள். தனது செல்வங்களையும், பெருமைகளையும் இழந்து கைகேயியைப் பெரும் துன்பம் சூழப்போகின்றது. இந்த வேளையிலும் அமைதியாக அவள் துயின்று கொண்டி ருப்பதை இராகு என்னும் நச்சுப் பாம்பு தன்னை விழுங்க வரும்போதும் ஒளி சிறிதும் குறையாது ஒளிர்கின்ற நிலவுக்கு உவமை கூறியுள்ளார் கம்பர்.

வெவ்விடம் அனையவளான கூனி இவ்வாறு கூறவும், 'அறந்தி றம்பாத புதல்வர்களைப் பெற்ற எனக்கு என்ன துன்பம் வந்து

விடப் போகின்றது? மேலும் இராமன் எனக்கு மகனாக இருக்கும்போது எனக்கு என்ன துன்பம் ஏற்படப்போகின்றது?' என்று கைகேயி இராமன் மேலுள்ள அன்பைத் தெரிவிக்கின்றாள்.

*'ஆழ்ந்தபே ரன்பினாள் அனைய கூறலும்*
*சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்*
*வீழ்ந்தது நின்னலம் திருவும் வீழ்ந்தது*
*வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள்.'*

- கம்ப. அயோத்தி. 147

**'கூனி கொண்டிருந்த சினத்தை வெளிப்படுத்த இதனைவிடச் சிறப்பான சொற்களால் கம்பரைவிட எந்தப் புலவனும் கூறியிருக்க முடியாது என்னும் படியாகக் கம்பரின் சொல்லாடல் வியக்கவைக்கிறது.'**

இராமனிடம் மிகுந்த அன்புடையவளான கைகேயி அவ்வாறு கூறவும், சூழ்ந்து கொண்டுள்ள தீவினைக்கு நிகரான கூனி 'உனது நன்னலம் எல்லாம் அழிந்தது. உனது செல்வம் யாவும் ஒழிந்தது. உனது சக்களத்தியான கோசலை தனது மதியின் வல்லமையால் எல்லா நன்மையையும் பெற்றுவிட்டாள் என்று கைகேயின் உள்ளத்தில் பொறாமை ஏற்படுத்தும் வகையில் தீய எண்ணத்தை விதைக்க முயல்கின்றாள். இராமன் முடி புனையப் போகின்றான் என்னும் செய்தியைத் தெரிவிக்கின்றாள்.

அதனைக் கேட்டுக் கோசலையைவிடப் பெருமகிழ்ச்சியுற்ற கைகேயி அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்ததற்காகப் பெறுமதி வாய்ந்த அணிகலனை அவளுக்குப் பரிசாக வழங்குகிறாள்.

*'தெளித்தனள் உரப்பினள் சிறுக்கண் தீயுக*
*விளித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்*
*அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையால்*
*குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே.'*

- கம்ப. அயோத்தி. 152

அப்போது கொடியவளான அக்கூனி இரைந்தாள், அதட்டினாள், அவளது சிறிய கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்கக் கைகேயியைப் பார்த்தாள், தீய வார்த்தைகளால் திட்டினாள், வெப்பமாகப் பெருமூச்சு விட்டாள், தனது கோலத்தை அழித்துவிட்டுப் புலம்பினாள், மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னாள் என்பதற்காகக் கைகேயி அவளுக்குப் பரிசளித்த அழகிய பொன்னாரத்தை நிலம் குழிவிழும்படியாக நிலத்தில் வீசியடித்தாள். கூனி கொண்டிருந்த சினத்தை வெளிப்படுத்த இதனைவிடச் சிறப்பான சொற்களால் கம்பரை விட எந்தப் புலவனும் கூறியிருக்க முடியாது என்னும் படியாகக் கம்பரின் சொல்லாடல் வியக்க வைக்கிறது.

மந்தரை பொன்மாலையை வீசியெறிந்து விட்டு கைகேயின் மனத்தை மாற்றி இராமன் முடி சூடுவதைத் தடுப்பதற்காகப் பலவாறான தீய ஆலோசனைகளைக் கூறுகிறாள். 'கோசலையும் அவளைச் சேர்ந்தவர்களும் உன்னைத் தாழ்த்த நேரிடும் போது நீ உன் மகனோடு துயர்படவிரும்பினாலும் நான் கோசலையின் தாதியர்களுக்கு அடிமையாக இருக்க மாட்டேன். இராமன் தனது மனைவியுடன் அரியாசனத்திலிருக்க நீயும் உன் மகன் பரதனும் தரையிலிருக்கப் போகின்றீர்கள். அரசர்களின் வரிசையில் பரதன் சேராதிருப்பதை விட அவன் இறத்தலே நன்று. பரதனின் அறிவாற்றல் ஆளுமை எல்லாமே புல்லின் மீது சிந்திவிட்ட அமுதம் போலாகிவிட்டதே! என்றெல்லாம் பலவாறாகப் புலம்பிக் கைகேயியின் உள்ளத்திலே நச்சு விதையைத் தூவ என்னென்னவோ உத்திகளைக் கூனி கையிலெடுக்கிறாள். இருந்தும் கைகேயியின் மனம் மாறவில்லை.

*'எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்*
*தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்*
*உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட*
*மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.'*

- கம்ப. அயோத்தி. 164

நீ எனக்கு நன்மையைச் செய்பவளல்ல. எனது மகன் பரதனுக்கும் நன்மை செய்பவளல்ல. அரச தருமத்தை நோக்கும் போது நீ உனக்கு நன்மை செய்பவளுமல்ல. அறிவில்லாத நெஞ்சினையுடையவளே! ஊழ்வினையின் தூண்டுதலால் உன் மனத்துக்கு நன்றாக இருப்பவைகளைச் சொல்கின்றாயோ? எனக்கு நல்லவள் போலவும், எனது மகனுக்கு நல்லவள் போலவும் இவற்றைச் சொல்கிறாய் ஆனால் நீ கூறுவது யாருக்கும் நன்மையானதல்ல என்று கைகேயி கடிந்து கூறுகின்றாள்.

நீ சினந்தாலும் உனக்கு உறுதியானவற்றை எடுத்துச் சொல்வதற்கு நான் பின்நிற்கப் போவதில்லை என்று கூனி கைகேயியின் காலில் விழுந்து மேலும் பல தீய உரைகளைக் கூறுகின்றாள். அவற்றால் மனம் மாறாத கைகேயியின் மனத்தை மாற்றுவதற்கு இறுதி ஆயுதமாக அவள் பிறந்தகத்தைக் கையிலெடுத்துக் கொள்கிறாள். ‘இராமன் உலகை ஆள்வானானால் உனது தந்தைக்குப் போர்த்துணையாக இருக்க மாட்டான். பகைவர்கள் உன் தந்தைக்கு எதிராகப் படையெடுத்தால் உனது தந்தைக்கும் உறவினருக்கும் கேடு விளையும். உனது பிறந்த குலம் இழிநிலையை அடையும். அதற்கான பாதையை நீ ஏற்படுத்திக்கொள்ளப் போகின்றாய். பரதனுக்கு இராச்சியம் கிடைப்பதற்கான வழியைத் தேடாமல் அவனையும் கெடுத்து நீயும் கெட்டழிகின்றாய்’ என்று மந்தரை கூறவும் தன் பிறந்த குலத்துக்குத் தன்னால் அழிவு ஏற்பட்டுவிடுமோ என்று மனங்கலங்கிய கைகேயியின் மனதில் மாற்றம் ஏற்படுகிறது. தனது மகன் பரதனை விட இராமனின் மேல் பேரன்பு கொண்டிருந்த கைகேயி தன்னால் தனது தந்தைக்கு இழிவு நேர்ந்துவிடக் கூடாதே என்பதால் மனம் மாறுபடுகிறாள். எதனையும் பொறுத்துக் கொள்ளும், விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் கொண்ட பெண்கள், தம்மால் தமது பிறந்த வீட்டுக்கோ பெற்றோருக்கோ கேடு விளைவதைப் பொறுக்கமாட்டார்கள் என்பதனை நன்கறிந்த கூனி இந்த இறுதி ஆயுதத்தைப் பிரயோகித்துக் கைகேயியின் மனதைத் திருப்பி விடுகிறாள். இராமனை விடுத்துப் பரதனுக்கு முடிசூட்டுவிப்பதற்கான வழியைக் கூறுமாறு கைகேயி கூனியிடம் கேட்கிறாள். தனது சொல்லைக் கேட்டால் பரதனுக்கு முடிசூட்டுவிப்பேனென்று மந்தரை கூறுகிறாள்.

முன்னர் ஒருமுறை தயரதன் இரண்டு வரங்கள் வேண்டுமாறு கைகேயிக்குக் கொடுத்த வாக்கை மனம் மாறிய கைகேயிக்கு நினைவூட்டுகிறாள். ‘முன்னாளில் சம்பராசுர யுத்தம் நடந்தபோது தயரதனுக்குத் தேர்ச் சாரதியாக இருந்து அவனுக்கு ஏற்படவிருந்த உயிராபத்தைத் தவிர்த்தபோது உனக்குக் கொடுத்த இரண்டு வரங்களை இப்போது கேட்பாயாக என்று ஆலோசனை கூறுகிறாள்.

***‘இருவ ரத்தினில் ஒன்றினால் அரசுகொண் டிராமன்***
***பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து***
***திரிதரச் செய்வ தொன்றினாற் செழுநில மெல்லாம்***
***ஒருவ ழிப்படு முன்மகற் குபாய மீதென்றாள்.’***

- கம்ப. அயோத்தி. 181

‘அவ்விரண்டு வரங்களுள் ஒரு வரத்தினால் மகன் பரதனுக்கு முடிசூட்டி அரசாட்சியை அவனுக்கு உரியதாக்கிக் கொண்டு மற்றொரு வரத்தினால் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடு சென்று அலையக் கட்டளையிடும்படியும் இரண்டு வரங்களைத் தயரதனிடம் வேண்டினால் வளம் பொருந்திய இந்த உலகம் உனது மகனின் வசப்பட்டுவிடும்’ என்று கூனி ஆலோசனை கூறுகின்றாள்.

***‘நன்று சொல்லினை நம்பியை நளிமுடி கூட்டல்***
***துன்று கானத்தில் இராமனைத் துரத்தலிவ் விரண்டும்***
***இன்றெய் தாஎனில் அரசன்முன் என்னுயிர் துறந்து***
***பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்றாள்’***

- கம்ப. அயோத்தி. 181

‘நீ நல்ல அலோசனை கூறினாய். பரதனுக்குப் பெருமையுடைய முடியைச் சூட்டுதலும், இராமனை அடர்ந்த காட்டுக்குத் துரத்துதலும் இன்று கைகூடாமற் போகுமானால் மன்னன் தயரதன் முன்னே எனது உயிரைத் துறந்து இறந்தொழிவேன் என்று கைகேயி மந்தரையைப் புகழ்ந்து கொண்டாடி அவளை அனுப்பிவிட்டுத் தயரதன் அவளைத் தேடி வரும்போது தலைவிரி கோலமாய் நிலத்திலே புரண்டு கிடக்கிறாள் கைகேயி. அவள் நிலத்தில் விழுந்து கிடக்கும் காட்சியைக் கம்பர் இவ்வாறு வருணனை செய்கிறார்.

***‘நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்***
***கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்து***
***அவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை***
***தவ்வை யாமெனக் கிடந்தனள் கேகயன் றனையை.’***


- கம்ப. அயோத்தி. 187

கேகயன் மகளாகிய கைகேயி துன்பம் மிகுதியால் மான் ஒன்று விழுந்து கிடப்பதைப் போலவும், குலாவுந் தன்மையுள்ள மயில் ஒன்று ஒடுங்கிக் கிடந்தாற் போலவும், சீதையாகிய பொற்தாமரை மலரில் இருக்கின்ற தாயாகிய இலக்குமி காட்டிற்கு நீங்குவாள் என்று அயோத்திக்கு வந்தடைந்த இலக்குமிக்கு மூத்தவளான மூதேவி போலவும் விழுந்து கிடந்தாள் என வருணிக்கின்றார். மனம் மாறுதலடைந்த கைகேயி அலங்கோலமாக நிலத்தில் வீழ்ந்து கிடந்ததை, துன்பத்தில் மான் விழுந்து கிடந்ததைப் போலும், கொஞ்சிக் கூத்தாடுதல் ஒழிந்து ஒடுங்கிக்கிடந்த மயில் போலவும் என்று உவமை அணிநயத்தில் கம்பர் வருணித்துள்ளார். சீதையாகிய இலக்குமி இந்நகரத்தை விட்டு நீங்கிப் போகப்போகின்றாள், அந்த இடத்தை நாம் பிடித்துக் கொள்வோம் என்று மூதேவி குடிபுகுந்ததைப் போலவும் கிடந்தாள் என்று தற்குறிப்பேற்ற அணி நயத்தில் கம்பர் சித்திரித்துக் காட்டியுள்ளது சிறப்பானது.

மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் மந்தரையாகிய கூனியின் பாத்திரப் படைப்பு வருமிடங்களில் அவளைக் காலக் கோளனாள், வெவ்விடமனையவள், தீவினை நிகர் கூனி, கொடிய கூனி, வேதனைக் கூனி, மதியிலா மனத்தாள், தீய மந்தரை என்பனவாக அவளுக்குக் கம்பர் பல்வேறாக அடைமொழி கொடுத்துக் கூனியின் பாத்திரத்துக்குத் தனித்துவத்தைக் கொடுத்திருப்பதை நோக்கக் கூடியதாகவுள்ளது.

மந்தரை சூழ்ச்சிப் படலம் உள்ளம் திரிபடைந்த கைகேயியின் நிலைமையோடு நிறைவு பெறுகிறது. அடுத்து வரும் இதழில் கைகேயி சூழ்வினைப் படலத்தில் நிகழ்வனவற்றைக் கம்பரின் கவி வண்ணத்தில் கலந்து தெளிந்து கொள்வோம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# நூற்றாண்டில் எழுந்துவரும் கு. அழகிரிசாமி

– சு. வேணுகோபால்

ஓவியம்: ஜீவா

எழுத்தாளர் கு. அழகிரிசாமியின் நூற்றாண்டு நிறைவை அவரது வாசகர்கள் தன்னெழுச்சியாகக் கொண்டாடி வருகிறார்கள். கு. அழகிரிசாமி கதைகள் எழுதிய ஆரம்ப பத்தாண்டுகளில் அவரது திறனைக் கண்டு சொன்னவர் க.நா. சுப்பிர-மணியம். கடந்த ஐம்பதாண்டுகளில் பல முக்கியமான படைப்பாளிகள்கூட அழகிரிசாமியை ஆழ்ந்து கற்கவில்லை. சிலர் தொகுத்த தொகுப்பு நூல்களில் கூட அவரது கதையைச் சேர்க்கவில்லை. புதிய வாசகர்கள் ஏதேதோ வகையில் அழகிரிசாமியின் ஆற்றலைக் கேள்விப்பட்டு இப்போது வாசித்துக்கொண்டிருக்கிறார்கள். கு. அழகிரிசாமியும் சுந்தர ராமசாமியும் நெருங்கிய நண்பர்களாக இருந்தும் அழகிரிசாமியின் படைப்புலகம் குறித்து சு.ரா. பெரிதாக ஒன்றும் எழுதிவிடவில்லை என்றுதான் ஞாபகம். ஆனால் அக்காலத்தில் சு.ரா.-வின் கதைகள் வெளிவந்தபோது அவ்வளவு பாராட்டி வரவேற்றிருக்கிறார்.

இந்த தமிழ் எழுத்தாளன் பிறந்து நூற்றாண்டு ஆகிறது. தமிழராகிய நாம் அவரை கொண்டாடுவோம். அவரது சிறுகதைகள் குறித்து மிக விரிவாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் எழுதியிருப்பதால் இங்கு எதுவும் சொல்லப்போவதில்லை. புதுப்புனல் இதழில் வந்த அக்கட்டுரையை அறிந்த அழகிரிசாமியின் மகன் சாரங்கன் அந்த இதழின் அலுவலகத்திற்குச் சென்று மூன்று பிரதிகளை வாங்கியதை இதழாளர் ரவிச்சந்-திரன் பெருமையாகச் சொன்னார். கட்டுரையைப் படித்துவிட்டு சாரங்கன் பொள்ளாச்சியில் இருந்த என்னிடம் வந்து பேட்டியும் எடுத்துச்சென்றார்.

ஒரே ஊரில் ஒரே தெருவில் வாழ்ந்த கி. ராஜநாராயணனும் கு. அழகிரிசாமியும் குழந்தைகளாக இருந்த காலம் தொடங்கி இறுதிவரை அன்னோன்யமான நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். அழகிரிசாமியின் கரிசல் கதைகளை மட்டும் தொகுத்து வெளியிட வேண்டும் என்று ஆசை கொண்டதை கி.ரா. பகிர்ந்துள்ளார். 'ராஜா வந்திருக்கிறார்' கதையில் வரும் தாயம்மாள் என்ற பாத்திரத்தின் வழி அழகிரிசாமி தன் தாய்க்கு ஒரு கோயிலையே கட்டிவிட்டான் என்று சிலாகித்து எழுதியிருக்கிறார்.

செல்லையா என்ற அழகிரிசாமி 11 மாதம் வயிற்றில் குடியிருந்து பிறந்ததாக அவரது அம்மா பெருமையாகச் சொல்வார்களாம். இது எந்த அளவு உண்மையோ! என்றாலும் அவரது தாயின் அன்புதான் அது. அழகிரிசாமி சிறுவனாக இருந்த போது சேட்டைகள் செய்துகொண்டே இருந்திருக்கிறார். அவர் வீட்டின் சுவரில் சாய்த்து வைத்திருந்த வண்டிச் சக்கரத்தில் ஏறி விளையாடியபோது விழுந்ததில் இடது கை ஊனமுற்றது. ஒரு முறை அல்ல இரண்டு முறை அதே சக்கரத்தில் விளையாடி வினையைப் பெற்றிருக்கிறார். நாட்டு வைத்தியம் செய்தும் ஒரு கை சரியாகாமல் போய்விட்டது. அதனாலே நன்றாகப் படித்தார்.

'எனக்கு கை மாத்திரம் ஒடியாமல் இருந்திருந்தால் மூணு படிக்கு உன் தோட்டத்தில் உழுகிற வேலைக்குத்தான் போயிருப்பேன். ஒடிந்தது நல்லதாகிவிட்டது. என் விருப்பம் போல படிக்கவும் எழுதவும் வாழ்க்கை அமைந்தது' என்று ராஜநா-ராயணனிடம் சொல்லி இருக்கிறார்.

கி. ராஜநாராயணனின் வீட்டில் ஒரு சிவலை நாய் இருந்திருக்கிறது. ரோசமான நாய்தான். வர வர தெருவில் வருவோர் போவோரையெல்லாம் கடித்திருக்கிறது. அழகிரிசாமியையும் துரத்தியிருக்கிறது. அதனால் அந்த நாய்க்குப் பயந்து ராஜ-நாராயணன் வீட்டுக்கு வருவதையே நிறுத்திக்கொண்டார் அழகிரிசாமி. ஊர்க்காரர்களின் பொல்லாப்பு வர வர அந்த பெரிய சிவலை நாயைக் கல்லெறிந்து கொல்ல இழுத்துச் சென்றிருக்கிறார்கள். உடன் வந்த அழகிரிசாமி ஒரு கமலைக் கிணற்று வாரியில் அமர்ந்து அந்த நாயைக் கொல்ல வேண்டாம் விட்டுவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார். இப்படியொரு குணம் அவருக்கு இருந்திருக்கிறது.

கு. அழகிரிசாமி, கி. ராஜநாராயணன் இருவருக்கும் தமிழிசையில் மிகுந்த ஆர்வம் இருந்திருக்கிறது. இசையை முறையாகவும் பயின்றிருக்கிறார்கள். இவர்களின் இடைச் செவல் ஊரிலேயே இவர்களின் ஒத்த வயசான அருணாச்சலம் நாதஸ்வரத்தில் பெரிய கலைஞனாக வளர்ந்து வந்திருக்கிறார். அவர் திருவாவடுதுறை ஆதீனம் நாதஸ்வர சக்கரவர்த்தி ராஜரத்தினம்பிள்ளையிடம் முறைப்படி சங்கீதம் கற்றிருக்கிறார். திருநெல்வேலி ஜில்லாவில் ராஜரத்தினம்பிள்ளை எங்கு வாசிக்க வந்தாலும் அருணாச்சலம் இணை வாசிப்பிற்குப் போவார். பாபநாசத்திற்கு அருகில் உள்ள காருக்குறிச்சிப் பெண்ணை மணந்து அங்கு சென்றதால் காருக்குறிச்சி அருணாச்சலம் ஆனார். ஆனால் அடிக்கடி இடைச்செவல் வந்து கி. ராவுட-னும், கு.அ. வுடனும் இருந்து பாடிச் செல்வது வழக்கம். அருணாச்சலத்திற்கு குருமீது அளவுகடந்த பக்தி. ஒருமுறை ராஜ




ரத்தினம்பிள்ளையிடம் ‘காருக்குறிச்சி அருணாச்சலம் உங்களிடத்தில் அளவுகடந்த பக்தியை வைத்துள்ளான்’ என்று சொல்ல, அதனால்தான் நல்லா வாசிக்கிறான் என்றாராம். அதைவிட முக்கியமான விஷயம் அருணாச்சலம் வாய்ப்பாட்டில் மிகச்சிறந்த குரல் வளம் கொண்டவராக இருந்திருக்கிறார். கர்நாடக சங்கீதத்திலும் நீ இறங்கு என்று சொன்னபோது, ‘குரு கோபித்துக் கொள்வார், நாதஸ்வரத்தில் மட்டும் கவனம் செலுத்தினால்தான் மேலே போகமுடியும். அதனால் அவர் முன் நான் பாட மாட்டேன்’ என்று குரு பக்தியைக் காட்டியிருக்கிறார். 1958-ல் காருக்குறிச்சி புகழின் உச்சியில் இருந்தபோது அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் அழகிரிசாமியைக் கண்டதும் தன் கைகளை நீட்டி பற்றிக்கொண்டு பேசியிருக்கிறார். ஒரு ஊரில் மூன்று இளைஞர்கள் பெயர் பெற்றதைக் குறித்து அழகிரிசாமி விரிவாக எழுதியிருக்கிறார்.

ஒருவகையில் அழகிரிசாமி இடதுசாரி. கம்யூனிசத்தைப் படித்தவர். முற்போக்கு எண்ணம் கொண்டவரும்கூட. 40, 50-களில் கலை கலைக்காகவே, கலை மக்களுக்காகவே என்ற இரண்டு இலக்கிய கோட்பாட்டு குரல்கள் ஓங்கி ஒலித்தன. அழகிரிசாமி இலக்கியம் மக்களுக்கானதுதான் அடிப்படையான நோக்கத்தைக் கொள்கிறபோதுதான் இலக்கியமும் ஆகிறது. ஆனால் நம்மிடம் ஒரு தவறான புரிதல் இருக்கிறது. தனக்குப் புரியவில்லை என்றால் அது இலக்கியம் இல்லை என்று பார்க்கப்படும் ஒரு மோசமான மனப்போக்கு இருக்கிறது. மட்டுமல்லாமல் ஒரு முற்போக்காளருக்கு ஒரு படைப்பு புரிந்திருந்தால், தனக்கு மட்டும் புரிந்துகொள்வதாக இருந்தால் பத்தாது, வாசிக்கும் பொது வாசகர்கள் எல்லோருக்கும் புரிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இப்படி எதிர்பார்ப்பதும் மலினப்படுத்துவதும் கலைக்கு ஆகாது. வாசகர்களை உயர்த்த வழி பார்க்கவேண்டுமேயொழிய படைப்பைத் தரம் தாழ்த்தி எழுதக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எஸ்.எஸ்.எல்.சி. முடித்து சில காலம் வேலையில்லாமல் இருந்தபோது நிறைய படித்திருக்கிறார். முக்கியமாக டால்ஸ்டாய் படைப்புகளை ஆழமாக கற்றிருக்கிறார். கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம், சிற்றிலக்கியம் என்று மரபு இலக்கியத்திலும் ஆழ்ந்து விரும்பிக் கற்றார். 20 வயதிலேயே அவரது

கதைகள் வெளியீடு காணத் தொடங்கின. பத்திரிக்கையில் இருந்தால் நிறைய வாசிக்க முடியும். நிறைய எழுத முடியும் என்று கனவு கண்டார்.

பிரசண்ட விகடனில் அவரது கதை வந்தபோது புதுமைப்பித்தன், எங்கள் சீமை புள்ளையாண்டன் எழுதியிருக்கிறான் என்று நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார். அதே பிரசண்ட விகடனுக்கு உதவியாசிரியராக வந்து சேர்ந்து பணியாற்றியிருக்கிறார். அரசு பதிவு அலுவலகத்தில் கிடைத்த வேலையை விட்டு எழுத்துக்காக ஆர்வத்துடன் சென்னைக்கு வந்தார். பத்திரிக்கைத்துறை சார்ந்து சென்னைக்கு வந்ததால் எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார்.

புதுமைப்பித்தன், க.நா.சு., தி.ஜ.ர., ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, சக்தி வை. கோவிந்தன், கல்கி கி. ராஜேந்திரன், ஆ. மாதவன், தீப. நடராஜன், வல்லிக்கண்ணன், தி.க.சி. என்று சகலருடன் அவர் பழகினார். பலரால் நேசிக்கக்கூடியவராக அவரின் அணுகுமுறையும் இருந்திருக்கிறது.

கு. அழகிரிசாமி நிறைய விஷயங்களைத் தெரிந்துகொண்டவராக இருந்தார். எந்த விஷயம் தெரியவில்லையோ அதைத் தேடிப்பிடித்து படிக்கும் ஆர்வம் இருந்திருக்கிறது. அறிவுத் தேடல் அவருக்கு அதிகம். எனக்கு வாசிப்பின் வழிதான் சிலவற்றை தெரிந்துகொண்டேன். அழகிரிசாமிக்கு அனுபவமும் வாசிப்பும் அபாரமாக இருந்தது. அவரோடு பேசும்போது ஒரே பிரமிப்பாக இருக்கும் என்று கூறியிருக்கிறார் க.நா.சு.

கொள்கை அடிப்படையில் பார்த்தால் அவர் முற்போக்குவாதி. ஆனால் தன் பேச்சிலோ, கதைகளிலோ ஒருதலைப்பட்சமான பிரச்சாரமோ வர்ணமாகவோ குறிக்கிட மாட்டாத தன்மையை அவரிடமிருந்தது என்று க.நா.சு. எழுதுகிறார்.

க.நா.சு., தி இந்து ஆங்கில நாளேட்டில் எழுதிய நல்ல விமர்சனத்தைக் காட்டித்தான் அவர் கல்யாணம் செய்துகொண்டார் என்று பத்திரிக்கையாளர் வேங்கடராஜுலு நாயுடு குறிப்பிட்டபோது ‘அப்படி ஒரு நல்ல காரியத்திற்கு என் விமர்சனம் பயன்பட்டது குறித்து நான் பெருமைப்படுகிறேன்’ என்றாராம் க.நா.சு.

க.நா.சு. விற்கு அழகிரிசாமி மீது ஒரு ஆதங்கம் இருந்தது. இவ்வளவு நல்ல கதைகளை எழுதுகிறார். வேகம் பத்தவில்லை. நல்ல நல்ல சரக்குகளை வைத்துக்கொண்டு அதிகம் எழுதாமல் இருக்கிறார் என்று அவரது மனப்போக்கை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எந்த நெருக்கடியான வீதியில் எழுத்தாளர்களைச் சந்தித்தாலும் நிறுத்தி பேசிவிட்டுத்தான் செல்வது அவரது வழக்கம். நேரமாகுதே, முக்கியமான வேலை இல்லையா என்றால், ‘என்னையா பிரமாதமான வேலை, நாம் சந்தித்து இப்போ பேசுகிறோமே அதுதான்யா முக்கியமானது. இப்படிப் பேசுறதுல கிடைக்கிற சந்தோஷமும் திருப்தியும் ரொம்ப விசேஷமானது. இது எப்போ கிடைக்கும்’ என்று நல்ல இடத்தில் நின்று பேசுவோம் என்று கூட்டிச் செல்லக்கூடியவர்.

அதேபோல பழைய புத்தகங்களைப் பார்த்துவிட்டால் போகிற வேலையைப் பாதியில் விட்டுவிட்டு நல்ல நூல்களைத் தேட ஆரம்பித்துவிடுவாராம். ஒருமுறை பழைய புத்தகக் கடையில் ஒரு பழம்பெரும் பத்திரிகையைக் கண்டெடுத்திருக்கிறார். அதற்கு முன்னும் பின்னும் சில பக்கங்கள் இல்லை. அதிலே அந்நாளைய சென்னையில் எப்படியெல்லாம் எத்து வேலைகள் நடந்தன என்று எழுதப்பட்டிருந்ததை காட்டி சென்னை இப்போ மட்டுமில்லை 70 வருஷத்துக்கு முன்னாடியும் இப்படித்தான் இருந்திருக்கிறது என்று அதை பொக்கிஷம் போல வாங்கியதாக வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார்.

சென்னை வாசத்தில் பல அபூர்வமான புத்தகங்களைச் சேர்த்து வைத்திருந்திருக்கிறார். மலேசியாவில் பத்திரிக்கைப் பணி கிடைத்தபோது ஆசை ஆசையாக சேர்த்தப் புத்தகங்களைப் பாதி விலைக்கும் எடைக்கும் போட வேண்டிய நிலை வந்ததை வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். சென்னை வாடகை அறையில் எங்கே பாதுகாப்பாக வைத்துவிட்டுப் போகமுடியும் என்று விற்றதை நினைத்து வருத்தம் கொண்டிருக்கிறார்.

மலேசிய ‘தமிழ்நேசன்’ பத்திரிக்கையில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். சிறுகதை எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியிருக்கிறார். ஒரு பக்கம் கொள்ளும் சிறுகதையை வெளியிட்டால் ஒரு பக்கம் விளம்பரத்தில் வரும் பணம் போய்விட்டதே என்று பதறும் காலத்தில் இலக்கியத்திற்கு என்று பக்கங்களை ஒதுக்கினார். எழுதியவர்களுக்குப் பணம் தரவேண்டும் என்று வற்புறுத்தி செயலாக்கியவர். மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தை ஏற்படுத்தியவர். சுப. நாராயணனுடன் இணைந்து சிறுகதை வகுப்புகளை நடத்தினார். தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களைப் பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் அறிமுகப்படுத்தினார். எழுத்தாளர்களின் தனிப்பட்ட பழக்கவழக்கங்களை மனோபாவங்களை எல்லாம் எடுத்துவைத்துச் சொல்லியிருக்கிறார். உரைகள் வழங்கியிருக்கிறார். சொற்சித்திரங்களாக கட்டுரை வரைந்திருக்கிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில் அழகிரிசாமி தமிழகத்திற்குத் திரும்பி வந்தார். 1952-ல் இருந்து 1957 வரை தமிழ் நேஷனலில் இருந்து மலேசிய இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். தமிழ்நாட்டிற்கு வந்ததும் இலக்கிய நண்பர்கள் பலரும் நீ மலேசியாவிலேயே இருந்திருக்கலாம் இங்கு வந்து மறுபடியும் கஷ்டப்பட வேண்டுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

பத்திரிக்கைப் பணி படைப்பாற்றலைக் கொன்றுவிடும் என்று தோன்றியது. அப்புறம் தீவிரமாக இலக்கியம் குறித்துப் பேச எனக்கு அங்கு ஆள் இல்லை. அங்கு இப்போதுதான் இலக்கியம் வளர்ந்து வருகிறது. எனக்கு என் படைப்பாக்க வேலைகள் போய்விடுமோ என்று தோன்ற வந்துவிட்டேன். என்ன ஆனாலும் சரி என் வாழ்வு தமிழ்நாட்டோடுதான். மலேசியா எனக்கு நல்ல சம்பளம் தந்தது. நல்ல வேலையை தந்தது. அதைவிட மிக உயர்ந்த என் வாழ்க்கைத் துணையான இந்த சீத்தாலட்சுமி என்ற பெண்ணை தந்தது. மலேசியா நல்லதே செய்தது. நான் எழுத வந்தேன் தமிழ்நாட்டிற்கு என்று சொல்லியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் கடிதம் தவிர வேறு ஒரு தொடர்பு சாதனம் இல்லை. ஒருவர் முகம் ஒருவர் பாராமலே படைப்பின் வழி அறிந்திருக்கிறார்கள். மலேசியாவில் இருந்து வந்த அழகிரிசாமி டி.கே.சி.-யின் பேரன் தீப. நடராஜன் வீட்டிற்குப் போயிருக்கிறார். நேரில் பார்த்தது கிடையாது. எழுத்துவழி அறிந்தவர்கள். கதவைத் தள்ளி ‘நடராஜன் இருக்கிறாரா?’ என்றிருக்

கிறார். ஏதோ எழுதிக்கொண்டிருந்த நடராஜன் நான்தான் நட-ராஜன் என்றதும் 'நான்தான்பா அழகிரிசாமி' என்று கட்டிப்பிடித்திருக்கிறார்கள். பின்னென்ன மூன்று நான்கு நாட்கள் இரவும் பகலும் வீட்டில் தங்கி இலக்கியத் திட்டங்கள் பற்றி பேசியிருக்கிறார்கள்.

இதேபோல் ஒருநாள் ஆ. மாதவனைப் பார்க்கத் திருவனந்தபுரம் போயிருக்கிறார். ஆனால் கி. ராஜநாராயணன் வழி ஆ. மாதவனும் மற்றவர்களும் ஏற்கனவே வருவது அறிந்து பேருந்து நிறுத்தத்தில் போய் வரவேற்க நின்றிருக்கிறார்கள். கு. அழகிரிசாமி இறங்கியதும் நீங்கள்தானே மாதவன் என்று கையைப் பிடித்ததை மாதவன் பெருமையாகச் சொல்லியிருக்கிறார். தூசி படிந்த காற்று வராத திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கக் கட்டடத்தின் படிப்பக அறையில் சந்தோசம் பொங்க இலக்கியம் பேசியிருக்கிறார்.

மாதவனின் 'தூக்கம் வரவில்லை' கதையைத் தாமரையில் படித்ததும் அந்த மலரிலே 'உன் கதைதான் முதலிடம். தமிழில் என்ன, மலையாளத்தில்கூட இப்படியொரு கதை இல்லை. மலையாளத்தில் இக்கதையை மொழிபெயர்த்தால் மிரண்டு போவார்கள்' என்று கடிதம் எழுதியிருக்கிறார். திறமை எங்கிருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடித்து நாலுபேர் மத்தியில் உயர்வாகப் பேசி படிக்கத்தூண்டும் அபூர்வமான பண்பு கு. அழகிரிசாமியிடம் இருந்ததை எல்லோருமே சொல்கிறார்கள்.

எப்போதோ புதுமைப்பித்தனின் அந்திம காலத்து நாட்களை உருக்கமாக 'சக்தி' இதழில் எஸ். சிதம்பரம் என்ற இலக்கிய ஆர்வலர் எழுதிய புகழ்பெற்ற கட்டுரை பலருக்குத் தெரியும். அக் கட்டுரையைத் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்க மலரில் திரும்ப வெளியிட மாதவன் ஆசைப்பட்டு கடிதம் எழுதிய போது அதை தம் கைப்பட நகல் எடுத்து அனுப்பியிருக்கிறார்.

சுந்தர ராமசாமியின் அக்கரைச்சீமையிலே நூல் வெளியீட்டு விழாவை ஸ்டார் பிரசுரம் மாடியில் வைத்திருக்கிறார்கள். அந்த நிகழ்விற்கு அழகிரிசாமியும் அழைக்கப்பட்டிருக்கிறார். அப்போது சுந்தர ராமசாமிக்கு சென்னையில் வாழலாம் என்று ஒரு விருப்பம் இருந்திருக்கும்போல. அதற்கு முன்பே இருவரும் கடிதத் தொடர்பின்வழி மிக நெருங்கிய நண்பர்களாக இருந்திருக்கிறார்கள்.

சுந்தர ராமசாமியின் 'அகம்' கதை சரஸ்வதியில் வந்திருந்ததைத் தனியாக எடுத்துவைத்து மூன்று நான்கு நாட்கள் கழித்து ஓய்வான வேளையில் வாசித்திருக்கிறார். வாசித்ததும் மிக நல்ல கதை, புது நடை என்று மனதாரப் பாராட்டி கடிதம் எழுதியிருக்கிறார். கேரளாவிலிருந்து குடும்பத்துடன் நாகர்கோவில் வந்து 17 வயதிற்கு மேல் தமிழ் கற்று இப்படி அழகான நடையில் எழுதியிருப்பதைக் குறித்துப் பெருமைப் பட்டிருக்கிறார். 'அக்கரைச்சீமையிலே' நூல் வெளியீட்டு விழாவில் ராமசாமியைப் பார்த்ததும் 'என்னய்யா நீங்க நாகர்கோயிலை விட்டுப்போட்டு சென்னைக்கே வந்துடணும். இங்கேயே வசிக்கணுமன்னு ஆசைப்படுறீங்களாமே? அப்படி எதையாவது செய்து வைக்காதீங்க. நீங்க நாகர்கோவில்லயே இருந்தால்தான் உங்கள் இலக்கியம் தனித்தன்மையோடு இருக்கும். நாங்க சென்னைக்கு வந்து சுகப்படுகிறது போதும். நீங்க வரவேண்டாம் என்றிருக்கிறார். சக எழுத்தாளர் மீது எத்தகைய அக்கறை பாருங்கள். இந்த 'அக்கரைச்சீமையிலே' தொகுப்புக் குறித்து பின்பு க.நா.சு., தி.ஜா. தி.ஜ.ர. முதலியவர்களிடமெல்லாம் சிலாகித்து சொல்லியிருப்பது சுந்தர ராமசாமிக்கு எழுதிய கடிதங்களின் வழி தெரிய வருகிறது.

அவர் இலக்கிய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில்தான் எத்தனை எத்தனை விஷயங்கள் கொட்டிக் கிடக்கின்றன. புதுமைப்பித்தன் பூனாவில் இருந்து முற்றிய காச நோயுடன் சென்னைக்கு வருகிறார். கி.வா. ஜெகநாதன் சந்திக்கிறார். அவரிடம் 'இனி ஒரு மாதம்கூட உயிருடன் இருக்க மாட்டேன்' என்று புதுமைப்பித்தன் கலங்குகிறார். இந்த விஷயம் குறித்து கி. ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதத்தில் 'இவ்வளவு பிரகாசமான நட்சத்திரம் சமீபத்தில் தமிழில் உதயம் செய்ததில்லை. மற்ற நட்சத்திரங்களெல்லாம் துர்சகுனம் காட்டும் வால் நட்சத்திரங்களாக வந்து மறைகின்றன. ஆசியாவிலேயே மிகச்சிறந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன். அவர் நம்மை விட்டுப் போய்விடுவார் என்பதை எப்படித் தாங்க' என்று எழுதுகிறார்.

சகஸ்கர ராமுக்காக எழுதிய நாடகத்திற்கு 'வாழ்வில் வசந்தம்' என்று பெயர் வைத்தது, அந்நாடகத்தின் தலைமை மாந்தருக்கு ராமசாமி என்று வைத்திருந்தது. பின் அடடா சுந்தர-ராமசாமி 'வாழ்வும் வசந்தமும்' என்று ஒரு சிறுகதை எழுதியிருப்பது நினைவிற்கு வர இந்த தற்செயலாக அமைந்துவிட்டதையெல்லாம் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

கி. ராவின் கடிதம் வராமல் தவிப்பதை, ஆறுதலற்று இருப்பதை, நீ கடிதம் எழுதுவது நான் தைரியமாக இருப்பதற்கு உதவும் எழுது என்று எழுதிக் கேட்டது, தன் 'முருங்கை மரத்து மோகினி' கதை சிறப்பாக அமைந்துவிட்டதை நேரில் விவரிப்பதாகச் சொல்லியது, காய்ச்சலில் உடல் மெலிந்து தலைமயிர் குத்திட்டு நிற்பதைக் கண்ணாடியில் பார்த்ததும் அதுவும் ஒரு நல்ல சித்திரமாகத் தோன்றியது பற்றியெல்லாம் கடிதத்தில் எழுதுகிறார். கடிதம் எழுதுவதற்கு ஒரு நோபல் பரிசு கொடுப்பதாக இருந்தால் அது உனக்குத்தான் (கி. ராஜநாராயணனுக்கு) தரவேண்டும். பதில் எழுதாமல் இருப்பவர்களுக்கு ஒரு நோபல் பரிசு தருவதாக இருந்தால் அது சந்தேகமே இல்லாமல் சுந்தர ராமசாமிக்குத்தான் என்று கடிதத்தில் எழுதுகிறார். என்னைப் பொறுத்தளவில் கு. அழகிரிசாமியின் கடிதங்கள் இலக்கியப் பொக்கிஷம்.

சிறந்த சிறுகதை எழுத்தாளரான கு. அழகிரிசாமியைத் தொடர்கதை எழுதும்படி கல்கி கி. ராஜேந்திரன் வலியுறுத்தி கேட்டபோது, 'தொடர்கதை என்றாலே எனக்கு அலர்ஜி, எழுத வராது' என்று சொல்லியிருக்கிறார். ஒரு பத்திரிக்கைக்கு ஒரு தொடர் எழுதப்போய் அவர்கள் திடீரென முடிக்கச் சொன்ன போது நான்கைந்து அத்தியாயங்களில் கதைச் சுருக்கம் போல எழுதி முடித்த இக்கட்டைச் சொல்லியிருக்கிறார். அதையும் மீறியே கல்கி ராஜேந்திரன் வற்புறுத்திக் கேட்டதைத் தட்டமுடியாமல் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற ஒரு தொடர்கதை எழுதியிருக்கிறார். அதையும் குறிப்பிட்ட காலத்தில் முடிக்க முடியாமல் திணறியிருக்கிறார்.

கு. அழகிரிசாமியிடம் நாவல் எழுதுங்கள் என்று நெருங்கிய நண்பர்கள் சொல்லிய போதெல்லாம், 'என் கிராமத்தை

விட்டு வந்து 25 வருடம் ஆகிவிட்டது. அந்த மனிதர்களுடன் இருந்த உறவு அறுந்து போய்விட்டது. அந்த உறவுகள் எல் லாம் காலமாற்றத்தால் என்ன ஆனார்கள் என்று அருகிலி ருந்து கவனிக்கவில்லை. என்னால் நல்ல நாவலை எழுத முடி யாது' என்று வல்லிக்கண்ணனிடமும் ராஜேந்திரனிடமும் சொல்லியிருக்கிறார்.

பல்வேறு பத்திரிகைகளில் வேலை செய்திருக்கிறார். காந்தி நூல்களை ஆராய்ந்து பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஒருநாள் கவர்மெண்ட் எஸ்டேட் ராஜாஜி ஹாலுக்கு நண்பர்கள் அழைக்கச் சென்றிருக்கிறார்கள். வெயில் தெரி யாதபடி குளு குளுவென்றிருந்திருக்கிறது அவ்விடம். கடல் காற்று சுகமாக வீசியிருக்கிறது. அருமையான இடம். சற்று நேரம் அதை அனுபவித்தவர் நமக்கெல்லாம் வசிப்பதற்கு இது போன்ற இடமும் கொடுத்து மாதம் தோறும் 200 ரூபாயும் ஒழுங்காக தந்து இஷ்டம் போல எது வேண்டுமானாலும் படித் துக்கொண்டு என்ன வேண்டுமானாலும் எழுதிக்கொண்டு இருங்கள் என்று சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும். எத்தனை அருமையான நாவல்கள் எழுதலாம். ஆனால் இந்த நாட்டிலே அது மாதிரியெல்லாம் ஒரு காலத்திலும் நடக்காது என்று வல்லிக்கண்ணனிடம் சொல்லியிருக்கிறார்.

கு. அழகிரிசாமியிடம் ஒரு பழக்கம். இது ஒரு தரத்தை எட்டிப் பிடிக்காது குப்பைதான் என்று தெரிந்தும் முழுவதும் படித் துத்தான் கருத்துக் கூறுவார். வித்துவான் சண்முகசுந்தரம் ஒருமுறை இந்த வேண்டாதவற்றைப் படித்து நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள் மூன்றாம் தர எழுத்துக்கு இவ்வளவு முக்கி யத்துவம் தரவேண்டியதில்லை. லெனின் போல படித்ததும் இது ஆகும் ஆகாது என்று ஒதுக்க வேண்டும் என்றிருக்கி றார். அழகிரிசாமி, விளாடிமிர் லெனின் போல என்னால் ஒரு பக்கத்தைப் படித்ததும் தரம் பற்றிய முடிவிற்கு வரமுடிய வில்லை. என்ன செய்ய என்று கவலைப்படுவாராம்.

நவீன இலக்கியத்தில் உள்ள ஈடுபாட்டைப் போலவே பழந்த மிழ் இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார். கம் பராமாயணத்திற்கு நல்ல பதிப்பு ஒன்றை கொண்டுவந்தார். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தைப் பதிப்பித்தார், பேசினார். குற்றாலக் குறவஞ்சி பாடல்களைக் கர்நாடக சங்கீ தத்திற்காகப் பதம் பிரித்து எழுதி மேடையேற்றினார். பழந்த மிழ் இலக்கியம் குறித்து நிறைய கட்டுரைகள் எழுதினார். இவ ரது பழந்தமிழ் அறிவை அறிந்த நண்பர் மு. வரதராஜனிடம் இவருக்கு கல்லூரியில் ஒரு ஆய்வு இருக்கையைத் தாருங்க ளேன் என்றதற்கு, அவர் டிகிரி படிக்கவில்லை. அவருக்கு எப் படித் தரமுடியும் என்றாராம்.

திருமூலர் கவிதை குறித்து எழுதிய கட்டுரையில் ஒரு பாட லைச் சொல்லி முடிக்கிறார்.

***'அன்புள் உருகி அழுவான், அரற்றுவான்,***
***என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்***
***என் பொன்மணியை இறைவனை ஈசனைத்***
***தின்பன்! கடிப்பன்! திருத்துவன் தானே!'***

இந்தப் பாடலின் இறுதியடியில் கடித்தபின்தானே தின்ன முடி யும் திருமூலர் தின்பதை முன்னதாகவும் கடிப்பதை பின்னதா கவும் சொல்வது சரியான முறையல்லவே. 'திருத்துவன்' என்ற சொல் சம்பந்தமில்லாமல் தின்பதோடு வந்து விழுந்திருக்கி றதே என்று எடுத்துக்காட்டி தன்னை மறந்த பரவசத்திலும், ஆவல் மிகுதியிலும், அன்பின் வேகத்திலும் இப்படி சம்பந்த மற்ற விதத்தில் துள்ளி விழுந்து ஒரு அற்புதமான இறை உணர்வின் தத்தளிப்பைச் சொல்லுகிற கவித்துவ உச்சத் தைத் தொட்டுக்காட்டியிருக்கிறார்.


பழந்தமிழ் குறித்து எழுதிய அழகான கட்டுரைகள் ஏராளமாக இருக்கின்றன. ஸ்டீபன் ஜெரோம்ஸ்கி, வில்லியம் ஸ்ரோயன் போன்ற மேலைநாட்டார் கதைகளை மொழிபெயர்த்திருக்கி றார். அபிசீனியா, ஜப்பான் தேசத்து சிறார் கதைகளை மொழி பெயர்த்திருக்கிறார். மிக நல்ல கதைகள். குட்டிக் கதையான 'பிறந்த மண்' மிக அற்புதமான கதை. அதைப்போல ஜொரோம்ஸ்கியின் 'உதயம்' கதையும்.

இலக்கியம் குறித்து அதிலும் சிறுகதை குறித்து ஆழமான விடயங்கள் அவரிடம் இருந்தன. 'பிறர் செய்யாத ஒரு காரி யத்தை அல்லது புதுமையைச் சாதிப்பதற்கு மட்டும்தான் சிறு கதை எழுத வேண்டும்' என்று கூறுகிறார்.

கல்கி 25-வது ஆண்டுக்கான ஒரு வெள்ளி விழாச் சிறுகதைப் போட்டியை நடத்தியது. அதற்கு கி. ராஜேந்திரன், கு. அழகிரி-சாமியையும், பி.எஸ். ராமையாவையும் நியமித்திருக்கிறார். கு. அழகிரிசாமி ஒரு கதையை மதிப்பிட, கதைக் கருவிற்கு இத்தனை மதிப்பெண், கதாபாத்திரங்களின் குணவியல்பை வெளிப்படுத்தும் திறனுக்கு இத்தனை மதிப்பெண், எழுத்து நடைக்கு இத்தனை மதிப்பெண், சிறுகதையாக அமைத்துத்த ரும் உத்திக்கு இத்தனை மதிப்பெண் என்று அட்டவணையு டன் வந்ததையும் அவரின் இலக்கிய ஈடுபாட்டையும் வியந்து சொல்கிறார். அதேபோல பிடிவாதம் மிக்கவர் என்றாலும் தீர ஆய்வு செய்கிறபோது தன் முடிவில் மாற்றம் தேவை என்றால் மாற்றிக்கொள்ளும் மனவிலாசம் படைத்தவர் என்று அவரது செயற்பாட்டை கூறுகிறார். அப்படி பி.எஸ். ராமையா, தேர்வு செய்யப்பட்ட கதைகளை வாசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரலாம் என்ற போது ஒத்துக்கொண்டு வாசித்த போது ஏற் பட்ட புதிய உணர்வு பாவத்தின் அடிப்படையில் தன் முடிவை மாற்றிக்கொண்டதைக் குறிப்பிடுகிறார்.

கு. அழகிரிசாமி சோவியத் நாடு இதழில் பணியாற்றியபோது முதுகுத்தண்டில் எலும்புருக்கி நோய் கண்டுபிடிக்கப்பட்டது. நோய் முற்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஆனந்த விகடன் வைத்திருந்த திருநெல்வேலி மாவட்டச் சிறு கதை போட்டிக்கு நடுவராக இருந்து உழைத்தார். 25 ஆண்டு கால இலக்கியப் பணியில் அதுவே கடைசிப் பணியாக அமைந்தது.

மரணம் நெருங்கி விட்டதை உணர்ந்த கு. அழகிரிசாமி 14 ஆண்டுகளே தன்னுடன் வாழ்ந்த இளம் அன்பு மனைவியிடம் 'கவலைப்படாதே சீதா. என் நண்பர்கள் உனக்கு நிறைய உத வுவார்கள். நீ சௌக்கியமாயிருப்பாய்' என்று கூறியுள்ளார். மூன்று சிறு சிறு குழந்தைகளை விட்டுட்டு அழகிரிசாமி பிரிந் தார்.



venugopal@thaiveedu.com




**தொகுப்புரை:**

**தொ**ன்மை தொடர்பான பல தலைப்புகளில் குறிப்பிட்ட சில விடயங்கள் ஆயப்பட்டன. தொடர்ந்து, ஆயப்பட்ட விடயங் கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

- தொல்காப்பியத்தில் திணைக் குடிகள், வளர்ச்சி.
- புறத்திணையியல் வழி பண்டைய குடிகள், போர் முறை கள், அரச உருவாக்கம்.
- தொல்காப்பியத்தில் மூவேந்தர் பற்றிய குறிப்புக்கள், நடு கற்கள் முதலிய தொல்லியல் தரவுகள்.
- புறநானூறு 201-ம் பாடல்,
- அசோகரின் கிர்னார் கல்வெட்டும், அதியமான் நெடுமான் அஞ்சியின் காலமும்.
- சங்க காலத்தின் 'காலக்கணிப்பும் கிர்னார் கல்வெட்டும்'.
- பதிற்றுப்பத்து, அரச உருவாக்கமும் காலமும்.
- தமிழ் நாட்டு மன்னர்கள், வேளிர் குடி, வேளிர் என்பவர் யார், வேளிர் குடித் தொன்மை, கபிலரும் இருங்கோவே-ளும், தலையாலங்கானத்துப் போர், கல்வெட்டுச் சான்று கள் முதலியன.

தொடர்கிறது...

**பதிற்றுப்பத்து மன்னர்கள் வழி காலம்:**

பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்பட்ட 10 மன்னர்கள் தவிர 25-க்கு மேற்பட்ட சேர மன்னர்கள் சங்க இலக்கியத்தால் அறியப்படு கிறார்கள். சேரர் குடியினர், சேர அரசகுமாரர்களுக்கு ஆட் சிப் பயிற்சி வழங்குவதற்காக, சேர நாட்டைப் பல பகுதிகளா கப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக்கி ஆண்டமை யால் அதிகமான அரசர்கள் அறியப்பட்டார்கள் என்று ஏற்க னவே, சேரர் வரலாறு பற்றி ஆராய்கையில் ஆராயப்பட்டது. இக் காரணத்தாலேயே சேரநாடு இடைக்காலத்தில் பதினெட் டுச் சிறு நாடுகளாகப் பிரிந்தது. எமது ஆய்வுக்காக, பதிற் றுப்பத்து மன்னர்களை மட்டுமே எடுத்துக் கொள்வோம்.

பதிற்றுப்பத்து மன்னர்களுள், 1-ம் பத்தின் பாட்டுடைத் தலை வனான உதியஞ்சேரலாதன், 8-ம் பத்தின் பாட்டுடைத் தலை வனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆகிய இரு மன்னர்கள் பற்றி மட்டுமே வரலாற்று அடிப்படையில் காலத்தைக் கணிப்பதற்குரிய சான்றுகள் உள.

இடைப்பட்ட 6 மன்னர்களின் ஆட்சிக் காலமாக (உறுதிப்ப டுத்தப்படாத) இணையவழித் தரவுகள், ஒரு சிறு கணிப்புக் காக மட்டுமே இவ்வாய்வில் கணக்கில் கொள்ளப்படுகின்றன.

- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள்,
- பல்யானைச் செல்கெழுகுட்டுவன் 25 ஆண்டுகள்,
- களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் 25 ஆண்டுகள்,
- கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 55 ஆண்டுகள்,
- ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 38 ஆண்டுகள்,
- செல்வக் கடுங்கோ வாழியாதன் 25 ஆண்டுகள்,

ஆக மொத்தம் 6 அரசர்களும் 226 ஆண்டுகள் அரசாண்டி ருக்கலாம் என்பது உறுதி செய்யப்படாத இணையவழித் தக வல்கள் மூலமான கணக்கு.

பதிற்றுப் பத்தின் எஞ்சிய நான்கு மன்னர்களின் ஆட்சிக் காலங்களையும் குத்து மதிப்பாகச் சராசரி 20 ஆண்டுகள் எனக் கணக்கிற் கொண்டு முற்காலச் சேரர் அரசு ஏறக்கு றைய 300 ஆண்டு காலம் நிலைத்து இருந்திருக்கலாம் என்று கொள்ளலாம்.

வரலாற்று அடிப்படையில், தென்னக அரசுகளின் ஆட்சிக் காலம், ஏறக்குறைய 300 ஆண்டு காலமாகவே இருப்பது இந் தக் கணக்குடன் ஒத்துப்போகிறது. ஆனால், 'எந்த 300 ஆண் டுகள்' என்பது தான் கேள்வி.

1-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ்சேரலாதனுக்கும் சோழன் கரிகாலனுக்கும் நடந்த வெண்ணிப் பறந்தலைப் போரில் ‘மார்பில் பாய்ந்த அம்பு முதுகில் ஏற்படுத்திய புறப் புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் நீத்தான் சேரன்’ என்ற செய்தி, இவன் கரிகால் பெருவளத்தானின் சமகாலத்தவன் என்னும் தகவலைத் தருகிறது.

உதியஞ்சேரலாதன் காலம் பற்றிய பிற தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில், அவனுடன் போர் செய்த கரிகாலனின் காலக் கணிப்பு முக்கியமானதாகிறது.

## கரிகால் பெருவளத்தான் காலம்:

சோழர் குலத்தை ஒரு குறுநில அரசு நிலையிலிருந்து காஞ்சி முதல் காவிரி வரை பரவச் செய்தவன் கரிகாலன்.

பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் திருமாவளவன். பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். திருமாவளவனும் கரிகால் பெருவளத்தானும் ஒருவரா ? பட்டினப்பாலையும் பொருநராற்றுப்படையும் ஒரு தலைவன் மேல் பாடப்பட்டவையா ? போன்ற வினாக்கள் ஆய்வாளர் மத்தியில் இன்னமும் தீர்க்கப்பட்டும் படாமலும் இருந்து வருகின்றன.

- சேரமான் பெருஞ்சோற்று உதியம் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் (புறம் 2) ‘நின் கடல் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின் வெண்டலைப் புணரிக் குட கடற்குளிக்கும்’ என்று பெரு நிலப்பரப்பை ஆண்டான் என்று பொதுப்படக் கூறப்பட்ட ஒரு தகவல் தவிர ஏனையவை வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளக்கூடியவையாக இல்லை.
- கரிகால்பெருவளத்தான் பற்றிய தகவல்கள், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, கலிங்கத்துப் பரணி, பழமொழி நானூறு முதலிய நூல்கள் வாயிலாகவும் புறநானூற்றுப் பாடல்கள் வாயிலாகவும் அறியக்கிடக்கின்றன. இவற்றில் பழமொழி நானூறும் கலிங்கத்துப் பரணியும் காலத்தால் பிந்தியவை.
- கரிகாலன் பெயரில், முடத்தாமக் கண்ணியார், பரணர், கழாத் தலையார், வெண்ணிக் குயத்தியார், கருங்குழல் ஆதனார் ஆகியோரும் திருமாவளவன் பெயரால் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் பாடியிருக்கிறார்கள். கழாத் தலையாரும் வெண்ணிக் குயத்தியாரும் வெண்ணிப் பறந்தலைப் போரை நேரில் கண்டு பாடியிருக்கிறார்கள் (புறநானூறு 65, 66)
- இதே கழாத்தலையார், சேமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் (இவன் பதிற்றுப் பத்தில் பாடப்பட்ட மன்னன் அல்லன்) சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளியும் மண்ணாசையால் பொருது ஒரு களத்தில் இறந்த காட்சியைப் பார்த்து பாடியிருக்கிறார்.
- சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகால் வளவனின் இரு மகன்களுள் ஒருவன் என்பது சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்து. சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகாலனின் பின் புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டதாக அறியப்படுகிறது.
- கரிகாலனைப் பாடிய கழாத்தலையார், அவன் மகன் (பின்னோனான) சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளியையும் பாடியிருக்கிறார். இங்கு, வரலாற்றுத் தொடர்பும் அவர்களைப் பாடிய புலவர்களும் அறியப்படுகிறார்கள்.

வெண்ணிப் பறந்தலைப் போரை நேரில் கண்டு பாடிய புலவர்களுள் ஒருவரான கழாத்தலையார், புறநானூறு 62-ம் பாடலில், அரச விரிவாக்க காலத்தில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி ஆகிய இரு மன்னரிடையே ஆட்சிப் பெருக்கம் காரணமாக நடந்த போரின் விளைவைச் சிறப்பாகப் பாடியிருக்கிறார். போர்க்களத்தின் நிலை கண்ட புலவர், போரையும் போரின் விளைவுகளையும் மனம் நொந்து பாடுகிறார்.

இவ்விடத்தில் புலவர் ‘பைஞ்ஞிலம்’ என்னும் ஒரு பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். தொல்காப்பியர், நிலங்களின் தன்மையின் அடிப்படையில், நிலத்தை, ‘நடுவண் ஐந்திணை’ என ஐநிலங்களாக வகுத்துள்ளார். பைஞ்சு என்பதே ஐஞ்சு ஆகியிருக்க வேண்டும். இது மொழியியல் ஆய்வுக்கு உட்பட்டதாயினும் இக் கட்டுரையின் நோக்கத்திற்காக ‘பைஞ்ஞிலம்’ என்பதை ‘ஐநிலம்’ என்று கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

***‘பன்னூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்***
***இடம் கெட ஈண்டிய வியன்கண் பாசறை’***

- புறநானூறு 65

என்னும் அடிகளுக்கு, மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட ஐவகை நிலங்களையும் அடக்கிய பெரு நிலப்பரப்பை உள்ளடக்கிய பாசறை என்று கொண்டால் இப் போரின் பாரிய தன்மை வெளிச்சமாகும்.

பல நூற்றுக்கணக்கான வீரர்களைக் கொண்ட ஐவகை நிலங்களையும் உள்ளடக்கியதாக விரிந்த பரந்த பாசறை, வீரர்கள் எல்லாம் அழிந்து ஒழிந்த காரணத்தால் களம் கொள்ளுவார் இன்றிப் பயங்கரமாக வெறிச்சோடிக் காணப்பட்டது. கணவன்மாரை இழந்த பத்தினிப் பெண்கள் நோன்பு நோற்காது, கணவன்மாருடன் உடன் கிடந்தார்கள் என்று இவ்வாறு போரின் கொடுமைகளை எடுத்துக் கூறிய புலவர், இத்தனையையும் கண்ட பின்பும் போரா ? என்று கேட்பது போல அமைந்திருக்கிறது பாடல்.

- இப் பாடலால் அறியப்படும் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், பதிற்றுப்பத்து 6-ம் பத்துப் பதிகம் கூறும் சேரமானாக இருந்தால் (அவனே என்பது எனது கருத்து), இவனுக்குப் பின் அரசனாகப் பதவி ஏற்றவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பரணரும் பாடியிருக்கிறார்.

- கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்தின் 5-ம் பத்தில் பரணரும், செல்வக் கடுங்கோ வாழி யாதனை 7-ம் பத்தில் கபிலரும் பாடியிருக்கிறார்கள். அதாவது இரு தலைமுறை முன் பின்னாக கபிலரும் பரண ரும் பாடியிருக்கிறார்கள். பதிற்றுப்பத்தில் 5-ம் பத்துப் பாடிய பரணரும், 7-ம் பத்துப் பாடிய கபிலரும், 8-ம் பத்துப் பாடிய அரிசில் கிழாரும், 9-ம் பத்துப் பாடிய பெருங்குன்றூர் கிழாரும் பேகனையும் பாடியிருக்கிறார்கள்.
- இதன் அடிப்படையில் ஆராயும் பொழுது புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்டு அப் புலவர்கள் வாழ்ந்த காலப்பகுதியைக் கணிப்பதும் அக் கணிப்பைத் துணைச் சான்றுகளாகக் கொண்டு மன்னர்கள் காலக் கணிப்பை மேற்கொள்வதும் ஒரு வகை உத்தியாகக் கொள்ளலாம்.
- பரணர் வயதானவராக இருந்த காலத்தில் கபிலர் இளைஞ ராக இருந்து 7-ம் பத்தைப் பாடியிருக்கலாம். கபிலர், பாரி யின் வீழ்ச்சியின் பின்பே 7-ம் பத்தைப் பாடினார் என்ப தற்கு 7-ம் பத்திலேயே அகச்சான்று உண்டு. பாரியின் இணைபிரியா நண்பனான கபிலர், தன் நண்பனைக் கொன்ற கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்த சேர மன்னனைப் பாடியிருக்க முடியுமா என்பது வலுவான வினாவே.

ஒரே சமயத்தில் சேர நாட்டின் பல்வேறு பகுதிகளையும் பல் வேறு சேர இளவரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். எனவே, கூட் டுக் கொலை முயற்சியில் ஈடுபட்ட சேரன் யார் என்று தெரி யாத நிலையில், நிச்சயமாக, அம் முயற்சியில் ஈடுபட்டிருந்த சேரன் 7-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான செல்வக் கடுங்கோ வாழியாதனாக இருக்க முடியாது என்ற முடிவிற்கே வரலாம்.

- கபிலர் கழாத்தலையாரைத் தமக்கு முற்பட்டவராகக் குறிப் பிடுகிறார். ஆனால் எவ்வளவு காலம் முன்னையவர் என் பது தெளிவாக இல்லை. பதிற்றுப் பத்துப் பாடல்களுடன் இணைத்துப் பார்க்கும் போது கழாத்தலையார் முதலாம் பத்தின் தலைவனான உதியஞ் சேரலாதனின் வெண்ணிப் பறந்தலைப் போரை நேரில் கண்டிருக்கிறார். எனவே, கழாத்தலையார் கபிலருக்கு 6 தலைமுறைகளுக்கு முன்ன யவர்.
- இதே வெண்ணிப் பறந்தலைப் போரை நேரில் கண்டு பாடிய இன்னும் ஒரு புலவர், வெண்ணிக் குயத்தியார்.
- ஒரு தலைமுறைக்கு சராசரி 25 ஆண்டுகள் ஆட்சிக் காலம் என்று எடுத்துக் கொண்டால் கபிலருக்கும் கழாத்தலையா ருக்கும் ஏறக்குறைய 150 ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டும். உதயஞ்சேரலாதனுக்கும் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் இடைப்பட்ட காலம் குத்து மதிப்பாக 150 ஆண்டுகளாக இருக்கலாம்.

## கரிகால் பெருவளத்தானின் வெண்ணிப் பறந்தலைப் போர்:

- இது, கரிகாலனின் ஆட்சியில் நடந்த முதல் பெரும் போர்.
- கரிகாலன் சோழ அரசை, பேரரசு நிலைக்குக் கொண்டு சென்ற போர்.
- கரிகாலனைத் தமிழகத்தின் தன்னிகரில்லா மன்னனாகவும் முடியுடைய மூவேந்தர்க்குத் தலைவனாகவும் உயர்த்திய போர்.
- இப்போர் வெற்றியால் தனக்கெதிரான ஒரு பெரும் கூட்ட ணியை முறியடித்தான்.
- இப்போரில் முதுகில் புண்பட்ட சேரமான் பெருஞ்சேரலா தன், புறப்புண் நாணி, வடக்கிருந்து உயிர் நீத்த செய் தியை இப் போரை நேரில் கண்ட வெண்ணிக் குயத்தியார் விளக்குகிறார்.
- 'மேலும், வெண்ணிவாயிலில் நடந்த பெரும் போரில் கரிகா லன் வேந்தரையும் பதினொரு வேளிரையும் வென்றான் என்று பரணர் பாடியுள்ளார். அவரே பிறிதொரு செய்யுளில், 'அரசர் ஒன்பதின்மர் 'வாகை' என்னும் இடத்தில் கரிகால னோடு நடத்திய போரில் தோற்றனர்' என்று குறித்துள்ளார்.

## வாகைப் பறந்தலைப் போர்:

கரிகால் பெருவளத்தானது படை பலத்தை வெளிக் கொண்டு வந்த வாகைப் பறந்தலைப் போரில் ஒன்பது குறுநில மன்னர் களை வென்றான்.

சோழ அரசை, காஞ்சி முதல் காவிரி வரை பரவச் செய்தவன்.

பதிற்றுப்பத்து மன்னர்களில் 1-ம் பத்தின் தலைவன் சேரமான் உதியஞ்சேரலாதனதும் 8-ம் பத்தின் தலைவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையினதும் காலம் தான் ஓரளவுக் குக் கணிக்கக்கூடியதாக உள்ளது.

## தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலம்:

சங்க காலத்தின் வரலாற்றுக் காலம் பற்றிய ஆய்வுக்கு தகடூ ரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான் வரலாறு ஒரு மைல் கல்லாக அமைகிறது.

சங்க இலக்கியங்கள், அரச உருவாக்கத்தில் 'முதுகுடி மன் னர்' உருவாகிவிட்ட நிலையைத் தெளிவாகக் காட்டுகின்றன. வேளிர், மழவர், ஆவியர் போன்ற பழங்குடி மன்னர்கள் மலைப் பகுதியில் உருவாகிவிட்டார்கள். அதியர் குடியின னான அதியமான் நெடுமான் அஞ்சியும் குதிரைமலையின் மன்னனாகத் தமிழ் நாட்டவரால் மட்டுமல்லாது வடஇந்திய அசோக மன்னனாலும் அறியப்படுகிறான்.

## அசோகரின் கிர்னார் கல்வெட்டு:

மௌரியப் பேரரசனான அசோகன், கலிங்கப் போரின் பின், பௌத்தனாகி பௌத்த தர்மத்தை உலகெங்கும் பரப்புவதில் பெருமுயற்சி செய்தான். அவனது அரச கட்டளைகள் 'அசோ-

கன் ஆணைகள்' என்று வழங்கப்பட்டு குகைக் கல்வெட்டுக்களாகவும் பாறைக் கல்வெட்டுக்களாகவும் தூண் கல்வெட்டுக்களாகவும் வெளியிடப்பட்டன. இக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் மக்களிடையே நன்னெறி பரப்புவனவாகவே காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள் தமிழ் நாடு தவிர்ந்த இந்தியா முழுமையும் காணப்படுகின்றன.

அசோகரது கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு, அசோக மன்னனால், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இக் கல்வெட்டு, தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் தொடர்பான அரிய செய்திகளைத் தாங்கி நிற்கிறது (தொன்மையைத் தேடி - அரச விரிவாக்கம் 3).

இக் கல்வெட்டு, அசோகர் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டுமன்றி அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தம்பபர்ணி (ஈழம்), யோன அரசரான அன்டியோகஸ் (கிரேக்கம்) மற்றும் அவருடைய அண்டை நாடுகளுக்கும் இரு வகைச் சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை உறுதி செய்கிறது.

இக் கல்வெட்டில் 'ஸதியபுதோ' என்றது, சங்க காலக் கல்வெட்டாக இனம் காணப்பட்ட திருக்கோவலூர் ஜம்பைக் கல்வெட்டின் மூலம் அதியமான் நெடுமான் அஞ்சியைக் குறிக்கிறது என்பது உறுதிசெய்யப்பட்டது.

### அதியமானும் அசோகர் கல்வெட்டும்:

அசோகரின் கிர்னார் கல்வெட்டு சங்க கால வேளிர் மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியின் காலம் பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு என்பதை உறுதி செய்கிறது.

### அதியமானுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் நடந்த தகடூர் போர்:

பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் அதியமானுக்கும் பல நாட்கள் தொடர்ந்து நடந்த போரில் அதியமான் வீர மரணம் அடைந்தான். சோழ மன்னனும் பாண்டிய மன்னனும் அதியமானுக்கு ஆதரவாகப் போரிட்டு இறந்தனர். இப் போரை நேரில் கண்டோர் பாடியதாகக் கூறப்படும் நூல் தகடூர் யாத்திரை.

- தகடூர் போரில் அதியமான் நெடுமான் அஞ்சியை 8-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெருஞ்சேரல் இரும்பொறை வென்றான். எனவே அதியமான் நெடுமான் அஞ்சியும் பெருஞ்சேரல் இரும்பொறையும் சமகாலத்தவர், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு.
- கபிலருக்கும் கழாத்தலையாருக்கும் ஏறக்குறைய 150 ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டும். உதயஞ்சேரலாதனுக்கும் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் இடைப்பட்ட காலம் குத்து மதிப்பாக 150 (25*8) ஆண்டுகளாக இருக்கலாம்.

எனவே பத்துப்பாட்டு 1-ம் பாட்டுடைத் தலைவன், சேரமான் உதியஞ்சேரலாதன் காலம், குத்து மதிப்பாக, பொ.ஆ.மு. 5-ஆம் நூற்றாண்டளவு என்று கொள்ளலாம்.

எனவே, வேறு தகுந்த சான்று கிடைக்கும் வரை, சோழப் பேரரசன், கரிகால் பெருவளத்தான் காலமும் பொ.ஆ.மு. 5-ம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

அகழாய்வுத் தரவுகள் வழி காலக் கணிப்பையும் (இன்றய நிலையில் ) ஒப்பிட்டுப் பார்க்கலாம் -

- பொ.ஆ.மு 905 - ஆதிச்சநல்லூர்
- பொ.ஆ.மு 490 - பொருந்தல்
- பொ.ஆ.மு 500 - கீழடி
- பொ.ஆ.மு 4ஆம் நூ. அளவில் - கொடுமணல்

இலக்கியத் தரவு:

- பொ.ஆ.மு 711 - தொல்காப்பியம்

மேலே கண்ட ஆய்வின் படி, பொ.ஆ.மு. 5-ம் நூற்றாண்டளவில் குழுக்கள் நிலையிலிருந்து அரசு விரிவாக்கம் காணும் முயற்சியில் தொடர்கிறது எனக் கண்டோம்.

இருங்கோவேளைக் கபிலர் பாடிய புறநானூறு 201-ம் பாடலில் கூறப்பட்ட தகவலுடன் இம் முடிவு ஒத்துப் போவதாக உள்ளது.

***'நாற்பத் தொன்பது வழிமுறை வந்த***
***வேளிருள் வேளே'***

- புறநானூறு 201, 11-12

கபிலர் காலம் ஏறக்குறைய பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு என்று கொண்டால், சராசரி ஒரு மன்னனது ஆட்சிக் காலம் 25 ஆண்டுகள் எனக் கொண்டு (49*25 = 1225 ), பொ.ஆ.மு. 1000-ம் ஆண்டுகளுக்கு முன்பே வரலாறு தொடங்கியிருக்கலாம் என்று கொள்ளலாம் போலிருக்கிறது. மேலே குறிப்பிட்ட அகழாய்வுத் தளங்களில் கண்டறியப்பட்ட காலக் கணிப்பு, அகழாய்வின் நீட்சியில் வேறுபடலாம். அரசு சார்ந்த கூடுதல் தகவல்கள் கிடைக்கலாம். நம்பிக்கையே ஆய்வின் மூலம்.

(பெப்பிரவரி மாதம் சமகால மன்னர்,
அரசர்களைக் காணலாம்.)

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com

# முத்தம்மா

**– சந்திரவதனா**

**ஓவியம்: ஜீவா**

முத்தம்மா, கை மாற்றிக் கை மாற்றி உலக்கையைத் தூக்கிப் போட்டு அரிசியை இடித்துக் கொண்டிருந்தாள். உலக்கை ஒவ்வொரு தரமும், ஒரு சீரான வேகத்துடன் உரலுக்குள் உள்ள அரிசிக்குள் வீழ்ந்து புதையும் போது எழும் சத்தம் ஒரு தாளம் போல ஒலித்துக்கொண்டிருக்க, முத்தம்மாவின் மேற்சட்டைக்கும் இடுப்புச்சேலைக்கும் இடையில் சற்றுப் பிதுங்கி மடிந்திருந்த அவளது இடுப்புத் தசை மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது.

உள்ளே சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி அன்றைய புதினப் பத்திரிகையை மேய்ந்து கொண்டிருந்த கதிரேசரின் கண்கள் இப்போது பத்திரிகையை விடுத்து முத்தம்மாவை மேயத் தொடங்கின.

முத்தம்மா அந்த ஊருக்கு வந்ததிலிருந்து, கதிரேசரிடம் மட்டுமல்ல, பெரியவர், சிறியவர் என்ற பேதமின்றி அங்குள்ள பல ஆண்களிடமும் இப்படியான சபலங்கள் எட்டிப் பார்க்கத்தான் செய்தன. இளசுகள் சில அவளைத் தூரத்தில் கண்டாலே ‘ஏண்டி முத்தம்மா..! ஏது புன்னைகை, என்னென்ன எண்ணங்கள் உள்ளத்தில் பின்னுதோ, வெட்கத்தினால் அதை மறைத்தாயோ...?’ என்று அப்போதுதான் புதிதாக வெளிவந்த சினிமாப் பாடலைச் சத்தமெடுத்துப் பாடத் தொடங்கினார்கள்.

அவளுக்கு நாற்பது நாற்பந்தைந்து வயதிருக்கலாம். அவளது நிறம் சாதாரணமான ஊர்ப்பெண்களின் மாநிறத்தை விடச் சற்று வித்தியாசமாக, மஞ்சள் பேர்ந்த வெண்மை நிறம் கொண்டதாக இருந்தது. அவள் பேரழகி என்று இல்லாவிட்டாலும் அழகி. அந்த அழகி, திடீரென அந்த ஊருக்குள் தன்னந்தனியாக வந்திருக்கிறாள்.

யாரிவள்...? யாரிவள்...? என்று அங்கலாய்ப்புடன் தேடியவர்களுக்கு, அரசல் புரசலாகக் கிடைத்த தகவல்கள், அவளுக்குத் திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் அவளது கணவன் அவளை விட்டுவிட்டு வேறொரு பெண்ணுடன் போய் விட்டான். அவமானம் ஒரு புறமும், பணமின்மை மறுபுறமுமாய்த் தாக்க அந்த ஊரில் மேற்கொண்டு வாழ முடியாத நிலையில் இங்கு வந்துவிட்டாள்.

முத்தம்மா நூற்சேலைதான் கட்டியிருப்பாள். கழுத்தில் ஒரு கறுத்தமாலை. அது கழுத்தோடு ஒட்டியபடி இருக்க, அதில் குண்டுமணியை விடச் சற்றுப் பெரியதான ஒரு முத்து. பொட்டு வைக்கமாட்டாள். நெற்றி வெறுமையாகத்தான் இருக்கும். காதடியிலும் கழுத்துப் பகுதியிலும் சுருண்டும் நெளிந்தும் தூங்கும் அவளது சுருண்ட கேசம். கண்ணுகளுக்குள் மட்டும் கொட்டிவிட முடியாத சோகம் நிறைந்திருக்கும்.

அந்தச் சோகம் யார் கண்களுக்குமே தெரிவதில்லை. அல்லது யாரும் அதைக் கண்டு கொள்வதில்லை. அவளது அழகு, தனிமை, இளமை... இவைதான் பலரது கண்களையும் உறுத்திக் கொண்டிருந்தன.

எல்லோரும் தள்ளி நின்றுதான் அவளைச் சபலத்துடன் பார்த்தார்கள், ரசித்தார்கள், பாடல்களால் சீண்டினார்கள், சீட்டியடித்தார்கள்... கிட்ட நெருங்க மட்டும் தயங்கினார்கள். காரணம் அவள் பஞ்சமர் சமூகத்தில் இருந்து வந்தவளாம். வெளிப்படையாகத் தொட்டாலோ, பட்டாலோ ஏதாவது ஒட்டிவிடும் என்ற பயம் அவர்களுக்கு.

பஞ்சமர், கோயிலுக்குள் வரக்கூடாது. கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளக்கூடாது. ஏன்... வீட்டுப்படிகளில் கூட இருந்து விடக்கூடாது... என்று மிகக் கடுமையான சட்ட திட்டங்களுடனும் கட்டுப்பாடுகளுடனும் வாழ்ந்து கொண்டிருந்த ஊர் அது. அந்தக் கட்டுப்பாடுகளை பகலில் மீறத் துளியும் துணிவின்றிய ஊரவர்கள் அவர்கள்.

அந்த ஊர்ப் பெண்பிள்ளை ஒன்றுக்கு, அந்தச் சமூகத்தில் ஒருவனோடு காதல் வந்ததால், அது பெரும் பிரச்சினையாகி... ஒருநாள் மாரிக் கிணற்றுக்குள் அவள் இறந்து மிதந்த சம்பவம் அந்த ஊரில், அதே 1970-களின் இறுதிப் பகுதியில் தான் நடந்தது.

அப்படியான ஊருக்குள் தான் முத்தம்மா வந்திருக்கிறாள். அதுவும் தன்னந்தனியாக வந்திருக்கிறாள். தற்போதைக்கு ஊரை அண்டிய ஒரு பகுதியில் இருக்கும் பஞ்சமர் குடும்பங்களில் ஒன்றோடு ஒண்டிக் கொண்டிருக்கிறாளாம்.

பிழைப்புக்கு ஏதாவது வழி வேணுமே! அதுதான் இந்த ஆச்சார சீலர்கள் வாழும் பகுதிக்குள் நுழைந்து, ஒவ்வொரு வீடு வீடாய்ச் சென்று, அரிசி இடித்துக் கொடுக்கும் வேலையைச் செய்யத் தொடங்கினாள்.

எல்லா வீடுகளிலும், அரிசி இடிக்கும் வேலைக்கு விண்ணப்பம் வைத்தபோது அவள் கையாண்ட உத்தி, வழமையான சம்பளத்தை விட ‘கிலோவுக்கு ஐந்த சதம் குறைத்து இடித்துத் தருகிறேன்’ என்பதுதான்.

‘நன்றாக, வேகமாக, அரிசி இடிக்கிறாள்’ என்பதில் பல பெண்களுக்கு அவளைப் பிடித்தும் போயிற்று.



ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வீட்டில் என்று நாட்குறித்து இடிக்கத் தொடங்கினாள். ஒரு கிலோ அரிசி இடிப்பதற்கு இரு பது சதம். அனேகமான ஒவ்வொரு வீட்டிலும் பத்துப் பதி னைந்து கிலோ அரிசி இடிப்பிப்பார்கள். இரண்டு ரூபா காசும் மதியச்சாப்பாடும் அவ்வப்போது தேநீரும் கிடைக்கும். எல்லா வீடுகளிலும் காலை, மாலை இரண்டு நேரமும் அரிசி மாப் பிட்டு, அரிசிமா இடியப்பம்... ஒரு சுற்று ஒரிரு கிழமைக ளில் முடிய மீண்டும் புதுச் சுற்றுப் போல முதல் இடித்த வீட்டி லிருந்து அடுத்த சுற்றைத் தொடங்குவாள்.

அவள் பஞ்சமர் சமூகத்தில் இருந்து வந்தவளென்பதால் சில குடும்பங்கள் அவளைக் கொண்டு இடிப்பிப்பதில்லை. அதற் கென்று இருக்கும் சிலரது வீடுகளுக்கு அரிசியைக் கொண்டு போய்க் கொடுத்து இடிப்பிப்பார்கள். சிலர் மில்லிலும் கொடுப்பார்கள்.

மில்லில், மெசினில் அரைப்பது கைக்குத்து மாப்போல ருசி யாக இருப்பதில்லை. அதனால் செல்லம் ஒரு நாளும் மில் லில் கொடுப்பதில்லை. அரிசியைக் காவிக்கொண்டு போய் வள்ளிப்பிள்ளை வீட்டில் கொடுத்துத்தான் இதுவரை இடிப் பித்தாள். முத்தம்மா வந்தபின், இது செல்லத்துக்கு இன்னும் வசதியாக இருந்தது. அரிசியைக் காவிக்கொண்டு போய்க் கொடுக்கும் வேலையும் இல்லை. வள்ளிப்பிள்ளையைவிட கிலோவுக்கு ஐந்து சதமும் குறைவு. கண்ணுக்கு முன்னா லேயே இடிக்கிறாள். ஒரு பிடி மாவையோ, ஒரு பேணி மாவையோ எடுத்து வைக்கும் களவும் இல்லை. என்ன, அவளை அரிசியின் மேலோ, அரிசி மாவின் மேலோ கைபட விடாமல் பாதுகாத்தால் சரி.

இரண்டு கிழமைக்கொருக்கால் முத்தம்மா வருவாள். முதல்

நாள் இரவே செல்லம் தீட்டல் பச்சையரிசியைச் சுளகில் போட்டு தவிடு பறக்கப் பிடைத்துத் தண்ணீருக்குள் ஊறப் போட்டு விடுவாள். தவிட்டை அள்ளி கழுநீரில் கலந்து ஆட்டுக்குத் தீனியாக்கி விடுவாள். பிறகு அதிகாலையில் எழுந்து அரிசியைக் கிளைந்து, தண்ணீரை வார வைத்து விட்டு, வேளைக்கே மத்தியானச் சமையலையும் முடித்து விட்டு முத்தம்மாவின் வருகைக்காகக் காத்திருப்பாள்.

இந்த இடைவெளிக்குள் கதிரேசரைக் கொண்டு உரலையும் உலக்கையையும் எடுப்பித்து வெளியில், முற்றத்தில் வைப்பித்து விடுவாள். அந்த நாட்களில் எல்லாம் கதிரேசர் மிகுந்த குதூகலமாக இருப்பார். நீண்ட நேரம், வெளி விறாந்தையில் நேரே இருக்கும் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்து புதினப்பத்திரிகை படிப்பார்.

கதிரேசர் வேலைக்குப் போகும் காலங்களிலும் சரி இப்போ ஓய்வெடுத்த பின்னும் சரி வீட்டு வேலைகளில் பெரிதான ஆர்வம் காட்டுவதில்லை. செல்லம்தான் பரபரப்பாய் ஓடியோடி எல்லாவற்றையும் செய்வாள்.

கதிரேசர் மிகுந்த ஆச்சாரமானவர். கோயில், குளம் என்று திரிபவர். பஞ்சமரை மிக எட்டத்திலேயே வைத்திருப்பவர். அதனாலேயே செல்லம் எல்லாவற்றிலும் இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்துவாள்.

இடித்து முடிந்ததும், செல்லம் தானே உரலுக்குள் இருக்கும் மாவைக் கைகளால் எடுத்துச் சருவச்சட்டிக்குள் போட்டு விட்டு, புது அரிசியை உரலுக்குள் போடுவாள். முத்தம்மா இடிக்கும் போது சருவச்சட்டிக்குள் போட்ட மாவை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து பின்னறைக்குள் போட்டுப் போட்டு மாப் பெட்டிக்குள் அரித்து எடுப்பாள். வரும் கட்டையை அடுத்த தர அரிசியோடு சேர்த்து உரலுக்குள் போடுவாள். முத்தம்மா தாள லயம் தப்பாமல் இடித்துக் கொண்டே இருப்பாள். கதி-ரேசரின் கைகள் புதினப் பத்திரிகையைப் பிடித்தபடி இருக்க, கண்கள் முத்தம்மாவையே மேய்ந்து கொண்டிருக்கும்.

'ஒண்டுக்கும் கூப்பிட்டுக் கீப்பிட்டு கரைச்சல் படுத்தாமல் இந்த மனுசன் பொறுமையாப் பேப்பர் வாசிச்சுக் கொண்டிருக்குது' என்று செல்லம் மனசுக்குள் திருப்திப்பட்டுக் கொள்ளுவாள்.

இடையில் ஓரிரு தடவைகள் எழுந்து போய் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து 'இந்தாருங்கோப்பா... தேத்தண்ணி குடியுங்கோ...' என்று சொல்லிச் சுடு தேநீர் நிறைந்த எவர்சில்வர் டம்ளரைக் கதிரேசரிடம் நீட்டுவாள்.

முத்தம்மா, தானே கொண்டு வந்த ஒரு குடிகோப்பையை நீட்டுவாள். அதற்குள், செல்லம் தேநீரை ஊற்றி விடுவாள். முத்தம்மா அந்த முற்றத்திலேயே செல்லம் கொடுத்த சாக்கில் குந்தியிருந்த படி ஊதி ஊதிக் குடிப்பாள்.

அரிசி இடித்து முடிந்ததும், செல்லம் ஒரு வாளித் தண்ணீர் கிணற்றில் மொண்டு முத்தம்மாவின் கைகளில் ஊற்ற, அவள் கிணற்றடியோடு அண்டிய முற்றத்தில் நின்றபடியே குனிந்து தண்ணீரைக் கைகளில் ஏந்திக் கைகளையும் முகத்தையும் கழுவி தனது சேலைத்தலைப்பாலேயே துடைத்துக் கொள்வாள்.

வாழையிலை ஒன்று வெட்டி, அதைப் பழைய புதினப் பத்திரிகைக்கு மேல் வைத்து, சோறுகறியெல்லாம் போட்டு செல்லம், முத்தம்மாவிடம் கொடுப்பாள்.

முத்தம்மா சாக்கின் மேல் குந்தியிருந்த படியே அதைச் சாப்பிடுவாள். ஒரு சோடாப் போத்தலில் தண்ணீர் வாங்கிக் குடிப்பாள். மீதச் சாப்பாடை அப்படியே சுற்றிக் கொண்டு போவாள். இரவுக்கு அதைச் சாப்பிடுவாளோ என்னவோ!

முத்தம்மா போனதும், முதல் வேலையாகச் செல்லம் உலக்கையை மஞ்சள் தண்ணீர் தெளித்துக் கழுவித் துடைத்து வைத்து விடுவாள். முத்தம்மா இருப்பதற்குக் கொடுத்த சாக்கையும் கொண்டுபோய் ஆட்டுக் கொட்டிலோடு சேர்த்து இறக்கியிருக்கும் பத்தி மூலைக்குள் வைத்து விடுவாள்.


அதன் பின்தான், இடித்தமாவைத் தாச்சியில் போட்டு வறுத்து, அரித்து, மாவை மாப்பானைகளில் போட்டுப் பத்திரப்படுத்துவாள். பிரித்தெடுத்த மாக்கட்டைக்குக் கொதி தண்ணீர் ஊற்றிவைத்து, மாப்பூத்ததும் அதை அன்றைய இரவுச் சாப்பாட்டுக்குப் பிட்டாக்குவாள்.

சில நாட்களில் இடித்த பச்சைமாவை எடுத்துவைத்துக் கரைத்து அடுத்த நாளைக்கு அப்பமும் சுடுவாள். அந்த நாட்களில் முத்தம்மாவை 'அடுத்த நாள் வரும் படியும், இரண்டு அப்பம் தருகிறேன்' என்றும் சொல்லி விடுவாள்.

காலப்போக்கில் அப்பம் சுட்டால், தோசை சுட்டால் மட்டுமல்லாது வேறு வேறு வேலைகளுக்காகவும் முத்தம்மா அடிக்கடி அங்கு வரத்தொடங்கி விட்டாள். தென்னோலை பின்னுவது, ஆட்டுக் கொட்டில் கூட்டுவது, ஊமல் கொட்டையைப் பிளப்பது, பொச்சுமட்டையைப் பிரிப்பது... என்று பல வேலைகள் அங்கு அவளுக்குக் கிடைத்திருந்தன. எல்லாம் வீட்டுக்கு வெளியில் முற்றத்தில் இருந்தும் நின்றும் செய்யும் வேலைகள்தான். அது அவளுக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை. வேலை செய்யும் நாட்களிலெல்லாம் உணவும் பணமும் அவளுக்குக் கிடைத்தன. அவ்வப்போது அவள் விரும்பியோ, விரும்பாமலோ அதற்கு மேலேயும் கிடைத்தன.

அவள் அப்படி அடிக்கடி வருவது ஆச்சாரசீலர் கதிரேசருக்கு நல்ல வசதியாக இருந்தது. அவளின் இடையையும் நடையையும் கண்களால் மட்டும் மேய்ந்து கொண்டிருந்தவர், இப்போதெல்லாம் கைகளாலும் மேயத் தொடங்கியிருந்தார். செல்லம் அங்கே இங்கே என்று எங்காவது போகும்போது கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்கள் ஒன்றையும் தவற விட்டுவிடாது தனக்குச் சாதகமாக்கி, அதற்கு மேலேயும் சென்றார். அதே கைகளால் இரவுகளில் செல்லத்தையும் தொட்டன.

எதையும் அறியாத செல்லம், ஒவ்வொரு முறையும் முத்தம்மா அரிசி இடித்த பின், உலக்கையை மஞ்சள் தெளித்துக் கழுவி வைப்பதுவும் முத்தம்மா இருந்த சாக்கை ஆட்டுக் கொட்டிலோடு சேர்த்து இறக்கியிருக்கும் பத்தி மூலைக்குள் கொண்டு போய் வைப்பதுமாக இருந்தாள்.



chandravathana@thaiveedu.com



# வாழ்வுரிமை

- மா. சித்திவினாயகம்

ஓவியம் : செல்வன்

6

பண்ணை அமைதியாக இருந்தது! விலங்குச் சமூகத்தின் பேசவல்ல அதிகாரியான பன்றிப் பிரதிநிதி தேவன் பேசிக் கொண்டிருந்தான்.

தோழர்களே... ஆதிமனிதர் மனிதராக இருக்கவில்லை. விலங்குகளான எம்மிலிருந்து கூர்ப்படைந்தவர்களே மனிதர்கள். அவரகளுக்குத் தாய்மொழி, ஆதியில் நாம் பேசிய விலங்கு மொழி தான். விலங்காக, நாடோடியாக, நாகரிகமற்ற காட்டு மனிதராகக் கற்களைப் பயன்படுத்தி வேட்டையாடி, வனாந்தரங்களில் அலைந்த காலம் தான் அவர்களது மிக நீண்ட காலம்.

ஆதி மனித இனத்தின் சேப்பியன்ஸ், முன்னோர்கள் ஆபிரிக்காவில் விலங்கினத்திலிருந்தே தோன்றியதாகவும், பிற இடங்களுக்கு அங்கிருந்தே அவர்களின் பரம்பல் தொடர்ந்ததாகவும், இன்றைக்கு அவர்களது அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

பல்லாயிரம் வருட வேட்டை வாழ்வு அவர்களது கற்காலம் என்றழைக்கப்படுவது. கற்களுக்குப் பதிலாக அவர்கள் இரும்பையறிந்து அதைப் பயன்படுத்தி நிலையான ஓர் இடத்தில் வாழத் தலைப்பட்ட காலம் இரும்புக் காலம். அப்போது தான் அவர்கள் பேசிய எமது மொழி, நாம் அறியாத எழுத்தாகின்றது. அந்த எழுத்தில் அவர்கள் எழுதிய முதல் வரலாறு, எம்மைப்போன்ற மிருகங்கள் தமக்காகப் பிறந்தவை என்பது தான். அவர்கள் அந்த வரலாறு எழுதுவதற்கு முன்னரும் அவர்களது மூதாதைகளான மிருகங்களாகிய எம்மைத்தான் அழித்தார்கள். வரலாற்றிற்குப் பின்னரும் எம்மை அழிக்கின்றார்கள்.

எதை உண்பது என்றறியாமல் எல்லா விலங்கையும் போல மாமிசத்தைத் தேடி வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் தான் இந்த மனிதர்கள். ஆனால் அவர்கள் தன் உணவிற்காய் மட்டுமே எம்மை அழிப்பவர்களல்ல. வெறும் வீரம் காட்ட எம்மை அழிப்பவர்கள். எம்மைக் கொல்கிற வேட்டைக் கலையில் சிறந்தவரும், எல்லோரையும் விடப் பலசாலியுமானவர் எவரோ அவரே அவர்களின் தலைவன் ஆனான். அவனே அவர்களுக்கு அரசன்.

அரசன், காட்டில் வாழும் விலங்கின மக்களுக்கு, தான் பலசாலி என்று நிரூபணம் செய்யும் கட்டாயம் இருந்தது.

ஆகையினால், வேட்டைக்குச் சென்று காட்டு விலங்குகளைச் சரமாரியாகக் கொன்று, அவற்றின் தலையை வெட்டித் தமது அரண்மனையில் வைக்கும் பழக்கம் இருந்தது. சிங்கம், புலி, யானை, சிறுத்தைத் தலைகள், மான் கொம்பு, காட்டெருமைக் கொம்புகள் என எம் தலைகள் அவர்களின் காட்சிப் பொருள்களாயின.

'தேவனே... வீரம் மிக்கவனுக்கே இவ்வாழ்க்கை என்றும், இங்கு பலமுள்ளதே வாழுமென்றும் கொண்டால், பன்றிகள் எங்காவது போர் புரிந்த வரலாறுண்டா? என்றது கேட்டுக் கொண்டிருந்த சிற்றெலி...

***'நகை நீ கேளாய் - தோழி! அல்கல்***
***வயநாய் எறிந்து, வன்பறழ் தழீஇ***
***இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு'***

என்கிற அகநானூற்றின் 248 பாடலைப் பன்றி வீரத்திற்காகப் பாடியவர் கபிலர். இது கதையென்று கருதாதே நேரில் கண்ட காட்சி என்று சாட்சி பகர்ந்தவர் அவர்.

காடு சூழ் மலைமீது கடும் வேட்டையாடவென நாய்களை ஏவியபடியே, வேட்டுவர்கள் விரைந்தபோது பாய்ந்து, பயந்து எம் பன்றிக் கூட்டம் பல்வேறு திசைகளிலே சிதறியோட, தாய்ப் பன்றியொன்று தன் குட்டிகளுடன், தவியாய்த் தவித்துத் தடுமாறியது.

தன் துணைவிக்கும், குட்டிகட்கும் நேர்ந்தகதி தாங்காமல் அதன் ஆண் பன்றி அவ்வேடர்களைத் தடுத்தெதிர்த்து, தலைநிமிர்ந்து உறுமியது!

தாவித் தாண்டிச் சீறியது! சற்றே வேடுவர்கள் பயந்து தடுமா

# வாழ்வுரிமை!



றிய வேளை தாய்ப் பன்றியையும், குட்டிகளையும் தழைத்திருந்த புதரோரம் ஒளித்துவிட்டுத் தான்மட்டும் ஆண்மையுடன் வழியின் குறுக்கே நின்று எதிரேவரும் வேடுவரை அடித்து வீழ்த்த ஆயத்தமாய் நின்ற அந்த ஆண் பன்றியின் ஆவேசத்தைக் கண்டு கதிகலங்கினான் வேடன் என்று, எம் பன்றி புகழ் பாடுகிறது அகநானூறு, கொடுங் காற்றிற்கும் பணியாப் புல்லிற்கும் ஓர் தனி வீரம் இங்குண்டு என்றான் தேவன்.

மிருகங்கள் ஆரவாரத்தோடு கால் தட்டின.

செட்டையடித்தபடி மூலையில் இருந்த மயில், பிறந்து செத்துப்போகிற இந்த உலகில் நிலையானதென்று எதுவுமேயில்லை என்றது. மேடைகளில் ஆர்ப்பாட்டமாகப் பேசித், தம் மொழிச் சொல்லாட்சிகளில் திளைத்து, மாற்றுமொழிக் கடன் பெற்று, அடுக்குமொழி பேசி, வெறும் பேச்சை அலங்காரமாகப் பயன்படுத்தி, இந்த உலகைச் சீரழித்துத் தாம் தலைவனாகும் பேச்சாளப் பெரும் படையினரின் கையில்தான் இந்த உலகம்.

அப்பாவி மனிதர்களை அவர்கள்தான் ஏமாற்றுகின்றார்கள். அவர்கள் எதைப் பேசுவார்கள் என்பதற்கே வீணாய்ப்போன இந்த உலகம் தவங் கிடக்கிறது. அவர்களின் வெற்றுப் பேச்சு வாரிசுகளே மறுபடி மறுபடி உலகமெங்கும் தலைவர்களாகத் தோன்றிக் கொண்டேயிருக்கின்றார்கள். இவர்களை வைத்தே மானிட நாகரிகம் வளர்ந்ததென இந்த மூடர்கள் நம்பிக்கை உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். அவர்களின் பல மணி நேரப் பேச்சின் முடிவில் எதைப் பேசினார்கள் என்றால் எதுவும் இருக்காது. ஆனால் அவர்கள்தான் உலகச் சிந்தனையாளர்கள், கோட்பாட்டாளர்கள், அறிவார்ந்த விவாதங்கள் நடத்தும் தத்துவார்த்திகள், பேராசான்கள் எனப் பெயர் பெறுகின்றார்கள் என்று கோபமாகப் பேசியது மூலையில் நின்று மயில்.

நீங்கள் பேசுவதற்காக இதனைச் சொல்லவில்லை தேவன்..., இலங்கை அமைச்சன் ஒருவன் பாராளுமன்றில் மயிலாகிய நான் உட்பட 6 விலங்குகளை இலங்கையில் அழிக்க வேண்டுமென்று பேசித் தீர்மானம் நிறைவேற்றிய அநியாயத்தை நினைந்து அழுகின்றேன் என்றது அது.

தேவன் தொடர்ந்தார்...

இந்த மனித சமுதாயம், நாகரிகத்தைத் தொடங்கிய இடம் நாம் வசித்த காடுதான். அவர்கள் காட்டையழித்து தம் வீடாக்கினார்கள். தண்ணீர் தேங்கிய இடங்களில் தோட்டம் வைத்தார்கள். உள்ளி கண்ட இடங்களில் பிள்ளை பெற்றார்கள். வேளாண்மை என்ற ஒன்று தெரியாத நிலையில் மற்ற விலங்குகள் உண்பவற்றையே அவர்கள் உண்டார்கள். கிழங்குகள், விதைகள், பழங்கள், மற்றும் வேட்டையாடப்பட்ட விலங்குகள் தான் அவர்களின் உணவு.

இவ்வாறு மனிதமிருகம் சக மிருகச் சதை மீது கொண்ட பற்று, விலங்குகளை வீட்டில் வளர்க்கும் பழக்கத்திற்கு வழி வகுத்தது. ஆடு, கோழி, மாடு, முயல் மற்றும் நல்ல இறைச்சி உள்ள விலங்குகள் வீட்டில் வளர்க்கப்பட்டு, பின் இவற்றைக் கொன்று, உணவாக மாற்றினார்கள் மனிதர்கள்.

கொடிய பெரிய விலங்குகளைக் கொல்லவும், அவற்றின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும், பிறரது உதவி தேவைப்பட்டபோது அவகள் ஒரு குழுவாகத் தமக்குள் இயங்கி, பின்... அதுவே சிறு சமுதாயமாக மாறத் தொடங்கியது. அவளது மூதாதையரான சேப்பியன்ஸ்கள் வரலாறு முற்றிலும் வேட்டையாடிகளாகவும், உணவு சேகரிப்பவர்களாகவுமே இருந்தனர்.

விலங்குகள் மனிதராகப் பரிணாம வளர்ச்சிநிலையை அடையும் வரையில் எம்மைப் போலவே அவகளுக்கும் தேவையானவை உணவு, கலவி, தங்குமிடம்... இவை மூன்றும் மட்டுமே அவர்களுக்கு அடிப்படை. பசி, தாகம், காமம், தூக்கம் இவை தான் விலங்கின் தேவைகள்.

தனது தேவைகளைப் பூர்த்திசெய்ய மனிதர் சிந்திக்க ஆரம்பித்தனர். வேட்டையாடி உண்பதற்குப் பதில் ஆபத்தில்லாமல் உழுது வேளாண்மை செய்து சாப்பிட்டால் நல்லது என்று கண்டனர். அனுபவத்திலிருந்து கிடைக்கக்கூடிய அறிவோடு, ஆழ்ந்த சிந்தனைக் கல்வியையும் கற்றனர்.

கல்விகற்ற சிந்தனைகொண்ட மனிதர்கள்தான் இந்தச் சமூகத்தைத் தமக்கெனச் சுயநலமாக்கிக் கட்டமைக்கின்றனர். அதிலும் நன்றாக சிந்திக்கத் தெரிந்தவன் எவனோ அவன் தான் இந்த மனிதனை ஆள்கின்றான். அடிமை கொள்கின்றான். மனிதர் மகா விலங்கு. அதனால்தான் அவளது அடிப்படைத் தேவைகளை யார் பூர்த்தி செய்கின்றார்களோ அவர்களுக்கு விழுந்து, விழுந்து அடிமையாகின்றார்கள்.

மனிதர்களுக்குப் பாதுகாப்புத் தந்து அவர்களின் பிரச்சினைகளைப் பூர்த்தி செய்கின்ற அரசன் அவர்களிடம் வரி வசூலித்துக்கொண்டு தனது செல்வத்தையும் பெருக்கிக்கொண்டான். இங்குதான் பணம் என்ற முறை உருவாக்கப்பட்டது. வேலைக்குச் சென்று கொண்டுவரும் பணத்தில் தனக்குத் தேவையானதைச் செய்துகொள்ளலாம் என்ற முறையும் உருவாக்கப்பட்டது. அவரவர் செய்யும் தொழிலுக்கேற்பப் பணம் வழங்கப்பட்டது. அவர்களுக்குள் அதனால் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. இதே நிலமைதான் இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

மனிதர்கள் தமக்கு மட்டும் பிரச்சினையில்லாத வாழ்க்கை வாழ விரும்பும் ஒரு சுயநல விலங்கு. தான் நிம்மதியான வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காக எந்த எல்லைக்கும் செல்ல விரும்புபவன். தனது நிம்மதியான வாழ்க்கைக்கு இவ்வளவு பணம் வேண்டும் என்று தெரிந்துகொண்டு அதற்கான படிப்பைப் படிக்கின்றான் அல்லது ஒரு வேலையைக் கற்றுக் கொள்கின்றான். அதனை வைத்து வேலையைப் பெற்று மேலும் பணம் சம்பாதிக்கின்றான். தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ்வாறு இயந்திர முறையில் சிக்கிக்கொள்கின்றான்.

மற்றைய மனிதர்களை வைத்தே அந்தப் பணத்தைத் தான் ஈட்டுகின்றான். அந்தப் பணம் அவனுக்குக் கீழ் வேலைசெய்யும் இயந்திரமனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. உணவு, உடை, வீடு, கைபேசி, கணினி, வாகனங்கள் என அவன் தன்னை அதன்மூலம் செழுமைப் படுத்துகின்றான்.

வாகனங்கள் இல்லாத அற்றை நாளில், மனித இனத்தின் பொருட்களைக் கொண்டுசெல்லும் திறனில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவை எம்மினமான கழுதைகள்தான் என்றது தேவனுக்கு முன்பாகப் படுத்திருந்த கழுதை.

ஓமோம்... ரோமானியர்கள், கோவேறு கழுதைகளைத்தான் இராணுவ உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும், நாடுகள் பிடிப்பதற்கும் பயன்படுத்தினர் என்பது வரலாறு... என்றது சத்தமாகச் சிரித்தபடி குதிரை குரு.

கோவேறு கழுதை என்றால் என்ன ? என்றது, வெள்ளேந்தியா கச் சிவப்பி ஆடு!

குதிரைக்கும், கழுதைக்கும் பிறந்த கலப்பினம் தான் கோவேறு கழுதை என்றது குதிரையான குரு.

கழுதைக்குக் கடுங்கோபம்...

கோவேறு கழுதை என்றால் அரசனேறிய கழுதை என்று அர்த் தம் என்று தன் காலை உதைத்தபடியே சத்தமிட்டது கழுதை. தேவன் அவற்றைச் சமாதானமாக்கப் பெரும்பாடுபட்டான். கொலைகார அரசனை விடக் குதிரை சிறந்ததில்லையோ என்று கழுதையைச் சீண்டியது குதிரை.

மனிதர் தவறு செய்வதற்கும், மிருகங்களைக் கொல்வதற் குமே கையுடையவனாயிருக்கின்றானென்றும், தம்முன்னுள்ள வற்றைப் பற்றி அவதூறு பேசுவதற்கு மட்டுமே அவன் வாய்க ளைப் பரிணாம வளர்ச்சி உருவாக்கியது என்றது காட்டு முயல்.

கோழிக்குஞ்சுகளோ 'வெண்பஞ்சுக் கட்டிகள்' என்று தமைக் கொஞ்சுகிற மனிதன் எமைக் கொல்வானா ? என்றன.

அவன் வளர்ந்த கோழிகளைத் துரத்திப் பிடிப்பதைத் தமக்கு விளையாட்டுக் கற்றுக் கொடுப்பதாகவும், தம் செட்டைகளை உரிப்பதைச் சவரம் செய்வதாகவும், சுடுநீருள் அமுக்கிக் கழு வுவதைத் தமக்கு 'யக்குஷி பாத்' தருவதாகவும், மஞ்சளும், மசாலாவும் தடவுவதைத் தம்மை அழகாக்கி மேக்கப் செய்வ தாகவும், ஆயுதம் கொண்டு அறுக்கின்றபோது தம்மைக் காக் கிற அபாய இரட்சகர்களின் ஆப்பிரேசனாயிருக்கும் என்று கோழிகள், தம்மை வளர்க்கிற மனிதர்களை இன்றுவரை நம்பு கின்றன. அவர்களை நம்பி அவர்கள் பின்னாலேயே அலை கின்றன. இப்படித்தான் உலக மனிதர்கள் கண்மூடித்தனமாக பலரையும் நம்புகின்றனர்.

இத்தகு ஏமாந்த சோணகிரிகள் இருக்கும்வரை இங்கு மனித ருக்கெதிராக எந்த மயிரையும் பிடுங்கமுடியாதென்றது மூலையில் இருந்த முரட்டுக் காகமான சுடலை.

பன்றியான தேவனில் சுடலைக்கு என்றும் அவநம்பிக்கையே. அதற்கு முக்கிய காரணம் அவன் மற்றைய விலங்குகளுக் கெல்லாம் போராளி விலங்குகள் மணமுடிக்கக் கூடாது என்று கட்டளை பிறப்பித்து விட்டுத் தான்மட்டும் பக்கத்து அறைப் பன்றியைத் தூக்கி வந்து புணர்ந்து பிள்ளை பெற்றுக்கொண் டதுதான்.

அவன் பேச்சை நம்பு, இவன் பேச்சை நம்பாதே என்றெல் லாம் புத்திமதி சொல்கின்றீர்கள். ஆனால் முதலில் உன்னி டமே நீ நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உனக்குள் ளேயே உள்ளன என்பதை முதலில் நீ உணர்ந்துகொள். நீ பேசுவதைப் போலவே வாழ்வில் எப்போதும் இருக்கப் பழகு. இந்த மனிதர்கள் போல சொல்வது ஒன்று, செய்வதொன்றாக இருக்க வேண்டாமே என்றது தேவனை வெறுப்போடு பார்த்த படி காகம்.

தேவனுக்குக் காகத்தில் மிகுந்த எரிச்சல் வந்தது.

சுறுசுறுப்பு, விடாமுயற்சி, மிகுந்த பொறுமை, சோர்வில்லா உழைப்பு, ஒற்றுமை, கூட்டு வாழ்க்கை, தம் தலைமையை மதிப்பது எப்படி என்று எல்லாவற்றிற்குமே தலையாய உதார ணமாயிருப்பவை நம் தேனீக்கள்தான். அவற்றைப் போல இருக்கப் பழகுங்கள். அவையின்றேல் உலகில்லை. மகரந் தச் சேர்க்கையின்றேல் வேளாண்மையில்லை. அவை அமைக்கும் வீடமைப்பை எவன் உலகில் அமைக்க இயலும் ? இவை சிறு பூச்சி எமக்குத் தரும் பாடங்கள்.

தன்னம்பிக்கையை வளருங்கள். பயத்தை வெறுத்து ஒதுக் குங்கள். ஒற்றுமைப் பலமே எம் வாழ்வு. பலவீனம் வெறும் மர ணம் என்பதைத்தான் நானும் தினமும் உங்களுக்குச் சொல் கின்றேன் என்றது கோபத்தோடு தேவனாகிய ஞானப்பன்றி.

இந்தச் சலசலப்புகளுக்கு மத்தியில் பக்கத்துப் பண்ணைக் குக் களவாகப் போய் அங்கிருந்த பாலஸ்தீனக் கொம்பாட் டின் சகல வித்தைகளையும் கற்றுவந்த முக்கோணத் தாடி வைத்த முற்போக்காடு தன் கரகரத்த தொண்டையால் சொன் னது, 'ஓர் பண்ணையுள் மட்டும் இந்தப் போராட்டம் நடந்து பயனில்லை. எல்லாப் பண்ணைக்கும் இது விஸ்தரிக்கப்பட வேண்டும்'. மனிதர்கள் கொண்டாடுகின்ற வேளாண்மைப் புரட்சி எங்களுடைய பண்ணை விலங்குகளிற்கு விடுதலை தரும் என்பதாக நாம் கொண்டாடுவது அபத்தமானது.

உலக வரலாற்றில் இழைக்கப்பட்டுள்ள கொடூரங்களிலேயே மிகக் கொடூரமான கொடுமை நவீன வேளாண்மையில் விலங் குகளுக்கு நடத்தப்படுகின்ற கொடூரங்கள்தான். விலங்குக ளிற்கும் உணர்வுகள் உண்டு, குடும்பம் உண்டு, பாசம் உண்டு என்பதை மனிதன் என்றும் உணர்ந்தவனும், ஏற்றவ னும் இல்லை. தம் நோயிலிருந்தும், பட்டினியிலிருந்தும், தம் சொகுசுக்காகத், தம்மைப் பாதுகாக்க எம் விலங்குகள்தான் அவர்களது ஆய்வுகூடங்களிலும், கல்லூரிகளிலும், பண் ணைகளிலும் தம்முயிரைக் கொடுக்கின்றன.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த கிளி சொன்னது, காடாய்க் கிடந்த மிருகங்களின் உலகை, எல்லை வகுத்து சேதமாக்கி யது இந்த மனிதப் பிசாசுகள் தான். அவர்கள் இனத்திற்காக, நிறத்திற்காக, மொழிக்காக, மதத்திற்காக, சாதிக்காக என் றெல்லாம் தமக்குள் குரோதங்களோடு போர் புரிந்து தமக் கான நிலங்களைத், தம் சடலங்களாலும், இரத்தங்களாலும் எல்லைபோட்டுப் பிரித்து வைத்துள்ளார்கள்.

சாதி பிரித்துப் பொதுக் கிணற்றில் நீரெடுக்கத் தடை, சுடு காட்டில் அவர்கள் பிணம் எரிக்கத் தடை, கிணற்றில், குளங்க ளில் குளிக்கத் தடை, தெருக்களைப் பயன்படுத்தத் தடை, மேற்சட்டை, வேட்டி, சால்வை, தாவணி, செருப்பு அணிய தடை, பேருந்துகளில் இருக்கத் தடை, பாடசாலையில் படிக் கத் தடை, மீசை வைக்கத் தடை, கோவிலுக்குச் செல்லத் தடை என்று ஒரு பிரிவு மக்களை இன்னொரு பிரிவு வஞ்சித்து

இன்றுவரை ஒதுக்கியே வைத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் மேல் நான் பறந்துள்ளேன். இந்த இலங்கையின் மக்கள் அதே இலங்கை மக்களை வேறுமொழி என்கிற காரணத்தால் கொன்றொழிக்க வெறியோடு முடுக்கி விடப்பட்டார்கள். அதில் இலங்கையின் ஒரு மொழி பேசும் மக்களை மற்றைய மொழி பேசுவோர் வகைதொகையின்றி அழித்தார்கள். பொருட்களை நாசம் செய்தார்கள். வழி வழியாக வந்த சொந்தங்களை நிர்மூலமாக்கினார்கள். அதுதான் போர் என்றார்கள். இற்றைவரையும் எவரும், ஏன் அந்தப் போர் எனக் கேட்கவில்லை.

அந்தப் போரில் ஈடுபட்ட எவருமே உண்மையில் ஒருவரையொருவர் கொல்கிற அளவிற்கு விரோதிகள் அல்ல. அவர்கள் எவருக்கும் அவர்களின் எவர்மேலும் தனிப்பட கோபங்கள் இல்லை. ஆனாலும் அந்தப் போர் அவர்களின் இனத்திற்காக ஆற்றுகிற கொடை என்று கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

கிளி சொல்வதை ஆவலோடு கூர்ந்து அவதானித்தன மற்றைய விலங்குகள். ஆனால், அதைக் கேட்டுக்கொண்டிருந்த பன்றியான தேவன் கோபத்தோடு கேட்டான்.

ஆமா... நீ மனிதரோடு அதிகமாகவும் நெருக்கமாகவும், அதிலும் முதலாளி திரவியத்தோடு மிக நெருக்கமாகவும் இருப்பதாகச் சொல்கின்றார்களே உண்மையில் எம்மைப் பற்றிய செய்திகளை நீதான் உன் பேசும் மொழியறிவால் அவர்களுக்குச் சொல்லி வருவதாக எம் புலனாய்வுப் பிரிவினர் சொல்கிறார்களே உண்மையா அது? கேள்வியில் இறுக்கம் இருந்தது.

இனிமேல் திரவியத்தின் தோள்களிலோ, கைகளிலோ நீ இருக்கக் கூடாது... கிளியை எச்சரித்து அனுப்பினான் தேவன்.

கிளிநொச்சி முருகனுக்கு அன்று சூரன் போர். இத்தாலிக்காரச் ஸ்ரெவ்வனியைத் திரவியம் சூரன் போருக்கு அழைத்துச் சென்றிருந்தான். கோவிலிலிருந்து அழகான திருப்புகழ் ஒலித்தது.

'தந்த பசிதனைய றிந்து முலையமுது தந்து முதுகுதடவிய தாயார்' என்று சீர்காழிப் பாலகனுக்கும், தன் பிள்ளை முருகனுக்கும் பாலூட்டிய தாயின் பெருமையைச் சொல்லுகின்ற திருப்புகழ். அந்த இறைத்தாய் பாலூட்டிய பூமியில் இன்றைக்குப் பலபேர் பட்டினி. கோவிலினுள் சூரன் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக்குப் போன பலரும் கூட உள்ளூரில் சூரன் போரைக் கண்டுகளிக்க வருவது இப்போதெல்லாம் ஒரு கலாசார வழமை. அதிலும்அவர்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், அவர்களை வெளிநாட்டில் கலியாணம் கட்டிய, விரும்பியிருக்கிற வெள்ளையர்கள், கறுப்பர்கள், சீனர்கள் என்று பலரையும் கையோடு கூட்டி வந்திருந்தார்கள். அவர்கள் தமிழ் தவிர உலகின் அனைத்து மொழிகளையும் பேசினார்கள்.

கிளிநொச்சி முருகன் கோவிலினுள் ஸ்ரெவ்வனி நுழைந்த சமயம் சூரன், தன் தம்பியாகிய தாரகாசூரனை முருகனையழிக்க அனுப்பியிருந்தான். முருகனை அழிக்கப் பல வகைகளில் முனைந்த தாரகாசூரனின் பதுங்கிப் பாய்ச்சலைக்கண்டு ஸ்ரெவ்வனி பலமாய்க் கைதட்டினாள்.

நோ... நோ... நீ முருகனுக்குத்தான் கைதட்டணும். இது அவனது எதிரி என்றான் திரவியம். ஸ்ரெவ்வனிக்கு சிரிப்பு வந்தது.

சேவலும், மயிலுமாக்கி எதிரியை ஏற்றுக்கொண்ட முருகனைத் தொழும் இந்த மனிதர்கள் தங்கள் எதிரிகளை இல்லாதொழிக்கவே என்றும் நினைக்கின்றார்கள்.

கோவிலில் கூட்டம் கலையப் பண்ணைக்கு வந்தனர் திரவியம் தம்பதிகள்.

திரவியம் நேராக அன்பே என்றழைத்தபடி கிளியைச் சென்று பிடித்தான். அதன் தலையைத் தடவினான். கையில் வைத்து உணவு கொடுத்தான். கிளி முதலாளி கை உணவை விரும்பிக் கொத்திச் சாப்பிட்டது.

'கூட்டமா போடுறீங்கள் கூட்டம்' என்று ஆத்திரத்தோடு மிருகங்களைப் பார்த்துச் சொல்லியபடியே கிளியோடு நடந்தான் திரவியம்.

கிளியின் துரோகத்தனத்தை நொந்த மனத்தோடு நினைத்த விலங்குகள் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது.

விடியற்காலை அந்தப் பண்ணை துயரத்தோடு விடிந்தது. துரோகி என்கிற முத்திரையோடு கிளியின் தலை நசுக்கிப் படுகொலை செய்யப்பட்டிருந்தது. அந்தக் கிளிக்காக எந்த விலங்கும் அழுததாகத் தெரியவில்லை. காட்டிக்கொடுப்பவர்களுக்கு இதுதான் தண்டனை என்றது தேவன்.

ஸ்ரெவ்வனியின் பிரியத்திற்குரிய பன்றிக் குட்டியான சகீலா மட்டும் இறந்த கிளிக்காகப் பிலாக்கணமிட்டு அழுதது. துரோகிக்காக மற்றொரு துரோகிதான் அழுவான் என்று முணுமுணுத்தன மற்றைய விலங்குகள்.

செத்து விழுந்துகிடந்த கிளியைக் கோபத்தோடு தூக்கினான் திரவியம். பல லட்சம் சப்கிரைபர்களைத்(subscribe) தந்து பல லட்சம் உழைத்துத்தந்த கிளி மரணித்துப் போனதே என்று கத்தினான்.

கிளியின் நெஞ்சிலிருந்த கமரா சிப்பைக் கத்தியால் தோண்டியெடுத்தான். அவன் அந்தக் கிளியை நம்பிக் 'கிளிப் பார்வை' என்று ஓர் பிரபல 'யூ ரியூப் சனல்' வைத்திருந்தவன். அது பறந்து பறந்து பிடிக்கிற அத்தனை காட்சிகளையும் தன் காட்சியெனப் பதிந்து பணம் சேர்த்தவன் திரவியம்.

அப்போ கிளி துரோகியில்லையா? விலங்குகள் துக்கித்தன.

தொடரும்...




sithivinayagam@thaiveedu.com

# மாய வருத்தத்தின் மந்திர முடிச்சு

- தேவகாந்தன்

ஓவியம்: செல்வன்



தூரத்தில், விரிவானின் எல்லையில் விழுந்த புள்ளியில் ஒரு கருமை திகைந்தெழுந்து திணிவது கண்டு, மாளிகையின் மேல்மாடத்தில் நின்றிருந்த அல்மினாவின் உள்ளத்தில் குதூகலத்தின் அரும்புகள் சட்டெனத் தெறித்தன. 'கமால் அப்துல்லாவா ?'

இல்லை, அவனில்லை; அவனாகயிருக்காது; அவன் வரமாட்டான்; இத்தனையாண்டுகள் வராதிருப்பவன் இனியும் வரப்போவதில்லை; வருவது எதிர்வுகூறப்பட்ட மணற்புயலாய்த்தான் இருக்கும்; ஆயினும் அவனாகயிருந்தால் நல்லதுதான்; கண்டால் ஜென்ம சாபல்யம் அடைந்தமாதிரி ஆகுமென அவள் எண்ணினாள்.

சுற்றிலும் பாலை விரிந்த அம் மணல் வெளியில் லிபியா, சூடான், எகிப்து ஆகிய நாடுகளை அண்டியதாய், ஆயினும் சுலபமான அடைதல் சாத்தியமின்றியும், எல்லை நிர்ணயமின்றியும், பசுமைகொண்ட சில நிலத் தீவுகள் இருந்துகொண்டுதான் இன்னும் இருக்கச்செய்தன.

இத்தாலியரும், இஸ்பானியரும், பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் ஆபிரிக்க கண்டத்தைக் குறிவைத்தபோது, சில நல்லதுகள் நடந்தன. சூயஸ் கால்வாய் அவற்றிலொன்று. நடுவில் கிடந்த நிலத்தை தோண்டி கடலாக்கி மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைத்து அய்ரோப்பாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமான சுருக்க வழி அண்மையில்தான் காணப்பட்டது. அதனால் எகிப்துக்கு லாபம்தான் கிட்டியது. எகிப்திய நிலப்பரப்பை அண்டிய அம்மாதிரி நிலத் தீவுகளுக்கு என்ன ஆதாயம்? அவை அந்தந்தப்படியேதான் அமைந்துகிடந்தன.

சில பல ஊர்கள் ஒரு தொட்டமாய், சில பல ஊர்களும் சில சிறுநகர்களும் இன்னொரு திசையிலாய், சில பல ஊர்களும் சில சிறுநகர்களும் ஒரு பெருநகரமும் வேறொரு திசையிலாயென அவற்றின் இருப்பு. அரசுகள் கண்டது மாதிரியும், காணாதது மாதிரியும் அவற்றின் நிலைப்பு.

அவளறிவாள் மாபெரும் நீர் வளம்கொண்ட பெருநிலப் பரப்புகள் அவளூரின் கிழக்கிலிருப்பது. அங்கே ஓடும் வளநதி-நைல் எனப் பெயர் பெற்றிருப்பதையும் அவள் கேள்வியில் அறிந்துள்ளாள். அவளையீர்க்கும் காந்தம் அங்கேயிருக்கிறது. அந்த இடம் கெய்ரோ; ஈர்ப்பின் பெயர் கமால் அப்துல்லா.

அது குறித்து அவளொரு பெருங்கதை சூழ்ந்திருக்கிறாள்.

அந்நிலத் தீவுப் பிரதேசங்களில் பிளாஸ்ரிக் காப்புகளும், கண்ணாடி வளையல்களும், மணிக்கல் மாலைகளும், தங்க மற்றும் தந்த சங்கிலிகளும், கறுப்பு வெள்ளை சிவப்பு ஆதியாம் வர்ணங்களில் சிறந்த சல்லடைத் துணிகளும், பெண்கள் சிறுமியர்க்கேற்ற ஆடைகளும், சிறப்பாக பெண்களுக்கான வாசனைத் திரவியங்களும், ஆண்களுக்கும் சிறுவர்களுக்குமேற்ற உடைகளும், சிறப்பாக ஆண்களுக்கு பாலியல் ஊக்கியான ஜென்சிங் போன்ற மூலிகைகளும் அலெக்ஸாந்திரியா, போர்ட் செயித்போன்ற துறைமுக நகரங்களில் தென்னமெரிக்காவிலிருந்தும், சீனாவிலிருந்தும் கப்பல்களின் ரகசியப் பொதியாய் வரும் விசேஷ சாமான்களில் அல்மினாவின் தந்தை நஸீம் யாவாரம் செய்து வந்தார்.

சென்ற இடங்களிலெல்லாம் தன்னையவர் நஸீம் பாஷாவெனச் சொல்லிக்கொண்டார். அந்த மந்திரச் சொல் ஜனங்களிடையே நன்கு வேலை செய்தது. நஸீம் பாஷாவைக் காத்து மாதக் கணக்கில் அவர் வாடிக்கையாளர்கள் காத்திருந்தார்கள். அதனால் நஸீமுக்கு நல்ல யாவாரம் நடந்தது. நிஜ பாஷாவினதே போன்ற மாளிகை கட்டி தன் மூன்று மனைவியரையும் குடியிருத்தினார். குடும்பங்கள் மூன்றும் வளமான வாழ்வை அனுபவித்துக்கொண்டிருந்தன.

வீட்டுப்புறம் இவ்வாறிருந்ததெனில், அவரோ ஒரேயொரு உதவியாளை மட்டும் வைத்துக்கொண்டு தானுமே ஒரு தொழிலாளியாக மாய்ந்து மாய்ந்து உழைத்துக்கொண்டு இருந்தார்.

மனையிலிருந்து உதவியாள் சகிதம் ஒட்டகத்தில் தன் யாவாரத்துக்குப் புறப்படுபவர் திரும்ப, இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிடும். மூன்று நான்கு வாரங்களில் மறுபடி முன் திட்டமிராத வேறொரு திக்கில் தன் வியாபாரப் பயணத்தை நஸீம்-பாஷா ஆரம்பித்துவிடுவார். அவரது செல்வச் செழிப்பின் சூட்சுமம் அங்கேயிருக்கிறது. கூட, அவரது பாதுகாப்பும். பாலைவனக் கொள்ளைகள் குறைவாயெனினும் அக் காலத்




தில் இருக்கவே செய்தன. அதனால் அந்த ஒழுங்கில் மாற்ற மேதும் விழ அவர் அனுமதித்ததில்லை.

அவரது இயங்குதல் இவ்வாறிருந்த ஒருநாளில் சித்திரை மாத பூரணைப் பாலைவன விழாவுக்கு குடும்பங்களுடன் சென்றிருந்த நஸீம், தன் நீண்ட கால எகிப்திய நண்பரின் மகனான கமால் அப்துல்லாவை திட்டமேதுமின்றி சந்திக்க நேர்கிறார்.

அவனை அழைத்துச் சென்று தனியான ஓரிடத்தில் நின்று உரையாடினார்.

அன்றே முதன் முறையாய்ச் சந்தித்திருந்தும் குடும்பத்தார்

நீண்டகாலம் அறிமுகமானவனாய் கமாலுடன் சகஜத்தில் உரையாடியதில் நஸீம் வெகு சந்தோஷப்பட்டார்.

அதெப்படியென ஆச்சரியம்கொண்ட கமால் மெதுவாய் வின வியபோது, அவனையும் அவன் தந்தையையும் பற்றி தன் குடும்பத்தாருடன் தான் பறையாத இரவுகள் குறைவென்றான் அவன்.

'அவை எவைபற்றியன?' என கமால் வினவியபோது, தம் பால்ய காலம் பற்றி, தன் நண்பர் மகனுக்கும் தன் மூத்த மகள் அல்மினாவுக்குமிடையிலான நிக்காஹ் குறித்தென் றான் நஸீம். மேலுமவன், 'உன் இங்கிலாந்துப் படிப்பு முடியும் வரை காத்திருக்கச் சொல்லியிருக்கிறான் உன் தந்தை' என் றான்.

'உங்கள் மகள்களில் யார் அல்மினா?'

'அதோ, எல்லோருக்கும் பின்னால் இன்னும் நாணியபடி நிற்கி றாளே, அந்த நெடுமிதான் அல்மினா.' கமாலின் பக்கமாய்ச் சரிந்து கிசுகிசுத்தான் நஸீம்.

அவர்களது உரையாடலை முன்னின்று செவிமடுத்தவளாய் நாணிப்போன அல்மினா, தன்னை அச் சூழலிலிருந்து மீட்டுக் கொண்டு கமால் நின்ற திசையின் ஈர்ப்பில்போல் நிமிர்ந்த போது, அவளைக் காணத் திரும்பிய கமாலின் கண்களை நேர் நேர் எதிர்கொண்டாள்.

தலை தாழ முயன்றது; கண்கள் பதிய முனைந்தன; ஆனால் அவன் கண்களின் சேதி அனைத்தையும் உடைத்தது.

அவள் மனதுக்குள் ஓரிரவின் ஒரு சிறு பொழுதுக்குள் அவன் பற்றிய கனவின் விதைகள் விதைபட்டுப் போயின.

'என் படிப்பு நிறைவெய்தி நானும் எகிப்து வந்துவிட்டேன். எனக்கான வியாபார மய்யமொன்றை கெய்ரோவில் உருவாக் குவதில் ஆர்வமாயுள்ளேன். அது பூரணமானதும், நானே பெண் கேட்க உங்கள் இடம் வருவே'னென சொன்னான் கமால்.

அது அல்மினாவின் செவியிலும் தெளிவுற விழுந்தது.

ஏற்கனவே கனவின் விதைகள் மனத்துள் முளைகளாகிவிட்ட வள், தன் அழகிய கண்களில் ஊறிக்கொண்டிருந்த நாணத்தை ஒதுக்கிக்கொண்டு, அது இன்னமுமே கன்னத்தில் செம்மை பூத்து திகைந்து கொண்டிருக்கையிலும், விழிக் கேள்வி அனுப் பினாள் எப்போது என.

அவனும் கண்களிலேயே பதிலிறுத்தான் விரைவிலென்பதாக.

நஸீமின் தொடர்பிலிருந்த கமாலின் தந்தை அப்துல்லாவின் மரணத்தின் பின்னதாக, அவன் கமாலிடமிருந்து செய்தியே தும் அற்றவனானான்.

ஆயினும் மூன்று வருடங்களைக் காத்திருக்க அவனால் முடிந்தது. மேலே அல்மினாவுக்கு பாஷாவாக இல்லாவிட்டா லும் வியாபாரியாக உள்ளவராவது பெண்கேட்டு வருவதை விரும்பியிருந்தான்.

ஆனால் அல்மினாவுக்கு, கமால் விதைத்துப் போன காதலின் விதை மரமாகியிருந்ததில், தந்தையின் விருப்பத்தின் சார்பி லெண்ண இயலாது போய்விட்டது. கமாலை மறப்பது தன்னை மறப்பதற்கு நிகராயிற்று அவளுக்கு.

அவள் அதற்கொரு உபாயம் கண்டுபிடித்தாள்.

பிசாசு பிடித்தவர்களை, வல்வினையால் தாழ்வுற்றவரை, தீரா நோய் கொண்டோரை, மனநோய் உற்றோரை ஓதுதலில் குண மாக்கும் காரியங்கள் மசூதியில் நடைபெறுவதைக் கண்டி ருந்த அனுபவத்தில், அந்த உபாயம் அவளால் வடிவமைக் கப்பட்டது.

அவள் பகலில் அண்ணாந்து பார்த்து நின்று தனக்கு நட்சத்தி ரங்களைக் காண முடிகிறதென்றாள். மாதம் முழு நாளும் தனக்கு நிலா தெரிகிறதென்றாள். எந்நேரமும் வான்பார்த்து நின்றிருந்தாள். அது கண்ட அவளன்னையர் அது மனநோ யின் கூறுவென தெளிவாய்த் தெரிந்தார்கள்.

வீடு திரும்பிய நஸீம் மனைவியர் அறிவிக்கை கேட்டு அவை இபிலிசின் அடையாளங்களோவென ஐயமுற்றான். அதனால் இபிலிஸ் வெக்கறைப்பட்டு அகலும்படியான மணிகளை, மாந்திரீக சுருவங்களை அல்மினா கழுத்தில் அணிவிக்கச் செய்தான்.

இரண்டு யாவாரப் பயணங்களை முடித்துத் திரும்பியும், அல் மினாவிடத்தில் மாந்திரீகத்தால் பலனேதும் காணாதுபோக, அவனுமே மனநோயென அதைத் தெளிந்து, மசூதியில் அல் லாவின் கருணையை வேண்டியதோடு, மார்க்கத்தின்படியான சாங்கியங்களையும் நிறைவேற்ற வைத்தான். நோய் குணமா கும்வரை மகளின் நிக்காஹ் கனவை ஒதுக்கிவைத்து தன் னுள் புழுங்கினான்.

அதனால் கடந்துபோன மூன்று வருஷங்களில் வந்த ஆறு வரன்களை அவன் அது காரணமாய் நிராகரித்தான்.

யாவாரத்திலிருந்து நஸீம் பாஷா வீடு திரும்பியிருந்த ஒருவே ளையில், தூரவிடத்திலிருந்து ஒரு வரன் அல்மினாவை பெண் கேட்டு வரவிருந்தது.

அல்மினா நொந்துபோனாள். தொடர்ந்தும் தன்னாலே அப் பாசாங்கை நடத்த இயலாதவளானாள். எகிப்தின் எழிலரசி யாய் யுவதிகளிடை புகழ் கொண்டிருக்கும் தான், நிகரற்ற ஆணழகனும் ஆண்மையாளனுமான கமாலுடன் வாழப்போ கும் இன்பங்களின் எதிர்பார்ப்பின் சுமையேறிப்போனவள், மீண்டுமொருமுறை கண்டால் போதுமென்ற அளவுக்கு விரக நோய் முற்றிப்போனாள்.

அவ்வாறு தணிவதையும் ஒருவகை 'அக'மென வகுத்திருக்கி றது பாலை நிலத்து இலக்கியம்.

உண்மையாகவே அல்மினா மனநோயாளி ஆகிவிட்டாளோ வென அவளது இல்லுறையும் தோழியும் வேலைக்காரியுமான நபிஷா ஏங்கிப்போனாள். அல்மினா அவளுக்கு தன் அகம்

விளக்கினாள். 'அவனோடு வாழ்வதே இலக்கு. இல்லையேல் இந்த ஜீவதத்தில் அவனை இன்னொருமுறை கண்டாலும்கூட கடைத்தேற்றம் பெறுவேன்.'

'கமாலை உன்னால் காண்பது சாத்தியமாகுமா, தோழி?'

'காண்பதென்ன, அவனூரில் வாழ்ந்தால்கூட எனக்குப் போதுமாயே இருக்கும், நபிஷா.'

வாழத்தான் கொடுத்துவைக்கவில்லை, அவள் அவரைக் காணவாவது வேளை அமைய வேண்டும், இல்லையேல் அவனூரில் வாழவாவது பயனுண்டாகவேண்டுமென எல்லாம் வல்லவரும் கருணையுள்ளவருமான அல்லாஹ்வை வேளைகள் தவறாது பிரார்த்தனையில் வேண்டுதல் செய்தாள் தோழியும்.

தலைநகர் வரை எட்டியிருந்த அல்மினாவின் எழில் நலம் கேட்ட மனிதனொருவன், எவ்வளவு பணம் கொடுத்தும் அவளை தன் வீட்டில் ஏனைய இரு மனைவியருடன் வாழ வைப்பேனென சபதமிட்டான். அவன் வரவிருக்கும் சேதி அன்று வந்திருந்தது.

அது அறிந்துதான் தந்தை என்ன பதில் சொல்வாரோவெனத் தெரிய அல்மினாவும் மேல்மாடம் வந்திருந்தாள்.

வந்தவள் வானம் பார்த்தாள்; நட்சத்திரங்கள் தெரிவதாய்ச் சிரித்தாள். அப்போதுதான் தன் பாசாங்கில் திளைத்திருந்த அவள் கண்டாள், அடிவான விளிம்பில் படிந்துகொண்டிருக்கும் கருமையின் திணிவு.

அது அவளை கமாலுடன் தன்னைப் பெண்கேட்டு வரும் உறவுக் கூட்டத்தின் ஒட்டகங்கள் கிளர்த்தும் புழுதியென ஒரு கணம் எண்ணவைத்தாலும், அந்த நீண்ட காத்திருப்பில் அவளது விரக்தி அவன் வரமாட்டானெனவே எண்ண வைத்தது.

ஆம், அது அவ்வண்ணம்தான் ஆயிற்று.

அவளது விகசிப்பின் அரும்புகள் அவிந்தன.

வந்தது கமால் அல்ல, மணற்புயல்.

அதன் நகர்ச்சி, சிறிதாகத்தான் தென்பட்டது. உண்மையில் அதனது வேகம் தோன்றியதைவிட பத்து மடங்காவது அதிகமிருந்திருக்கும். சிறிது நேரத்தில் அப் பசுமைத் திட்டு கண்ணில் மறைந்து மணற்படலம் காட்சியாயிற்று. அல்மினா கீழே தன் இடம் ஓடினாள்.

மூன்று நாட்களாயிற்று மணல் புயல் ஓய. மேலும் சில தினங்களாயின சேதாரங்கள் செப்பனிடப்பட. மணற்புயலின் பாதிப்பும் சேதங்களும் அவர்களுக்குத் தெரிந்தேயிருந்தன. முன்னரே எதிர்பார்க்கப்பட்டிருந்ததில் அழிவுகள் சுலபத்தில் தாங்கப்பட்டன; திருத்தப்படக் கூடியன பெரும் அனுபவ சுளுவுடன் திருத்தப்பட்டன.

ஒருநாள், எதிர்பார்த்திருந்த வரன் மணப்பெண்ணைக் கண்டு நிச்சயம் பண்ண நஸீம் வீடு வந்தார்.

அல்மினா மேல் தளமோடி கூடத்தின் உரையாடல் தெளிவுறக் கேட்கக்கூடிய வசதியில் போய் நின்றுகொண்டாள்.

உரையாடலில் அவள் கிரகித்தவை: ஒன்று, அவருக்கு இரண்டாவது மனைவியாக அவள் நிக்காஹ் செய்யப்படவிருக்கிறாள்; இரண்டு, அவர் அரசாங்கத்தில் ஓர் உயர்தர அதிகாரியாகயிருக்கிறார்; மூன்று, அவள் அழகைக் கேள்விப்பட்டு வந்திருக்கும் அவரூர் கெய்ரோ மாநகருக்கு மிகச் சமீபத்திலிருக்கிறது; நான்கு, அவர் கமாலின் தந்தையை சொந்த ஊரவராய் நேரில் அறிமுகம் கொண்டிருந்தவர்.

அல்மினா வியப்பெய்தினாள்.

கமாலின் நாட்டிலிருந்து, அதுவும் அவன் குடியிருக்கும் ஊரிலிருந்து அவர் வந்திருக்கிறார். அவள் சம்மதம் சொல்ல அது போதும்.

கமாலைக் காண, ஒரு தரமேனும் காண, குறைந்தவளவிலான ஒரு வாய்ப்பேனும் அவளுக்கு அந்த நிக்காஹ்வால் கிடைக்கக்கூடும். இல்லாவிட்டாலென்ன, அது அவன் ஊராகயிருக்கிறது!

விரும்பியவரைக் காண்டலின் மூலமும், அவர் ஊரில் வாழ்வதன் மூலமும் காதலைத் தணித்தலென்பது எவ்வகை அகமாக இருக்கக்கூடும்?

பாசாங்கு மனநோயை நிஜமென எண்ணியிருக்கும் தந்தை தன் திருந்திய மனநிலையறியாது என்ன பதிலை மணம் கேட்டு வருபவருக்குச் சொல்லப்போகிறாரோ?

அப்போதும் ஒரு தந்திரத்தைச் செய்ய அவள் தவறவில்லை.

மேலிருந்தபடியே, 'ஐயம் தெளிந்தேன், தந்தையே' என்றாள்.

நஸீம் முதலில் திகைத்தாலும் ஒரு சாமர்த்தியத்தின் கூறு அதிலிருப்பது உணர்ந்து, 'நிச்சயமாகவா?' என்றான்.

'நிச்சயமாகத்தான். இப்போதெல்லாம் பகலில் தெரிந்த நட்சத்திரங்கள் தெரிவனவாயில்லை. மாதம் முப்பது நாளும் தென்பட்ட நிலாவும் காணக்கிடக்கவில்லை' என்றாள்.

'நல்லது, மகளே. நீ கீழே இறங்கி வா. நான் உன் அன்னையரிடம் செய்யவேண்டியன சொல்லியனுப்புவேன்.'

ஏதேனும் பிரச்சினையாவென பெண்பார்க்க வந்தவர் வினவினார்.

'அவள் தான் படித்த கவிதையொன்றுபற்றி சொல்லிக்கொண்டிருக்கிறாள்' என்றார் நஸீம்.

'அவ்வளவு கல்வியறிவுண்டோ?
அபாரம், அற்புதம்!' என்றார் அவர்.



devakanthan@thaiveedu.com

# தடிகள்

## – ஜோர்ஜ் சோன்டேர்ஸ்

தமிழில்: என். கே. மகாலிங்கம்

ஓவியம்: ஜீவா

எங்கள் அப்பா சாந்தா குளோஸ் உடுப்பை இழுத்துக் கொண்டு தெருவிற்குச் சென்றார். முற்றத்தில் உலோகக் கம்பம் ஒன்றில் அவர் கட்டிய சிலுவை போன்ற ஒன்றின் மேல் அதைப் போர்த்திவிட்டார். ஒவ்வொரு ஆண்டும் நன்றி நவிலல் நாளிரவில் நாங்கள் எங்கள் அப்பாவின் பின்னால் கூடி நிற்போம். சுப்பர் போல் கிழமை அன்று கம்பம் ஒரு ஜேர்சியால் உடுத்தப்படும். றொட்டின் தலைக்கவசம் போடப்படும். அந்தத் தலைக்கவசத்தை அதிலிருந்து எடுக்க வேண்டுமானால் அப்பாவுடன் சேர்ந்து கம்பத்தைக் கலைக்க வேணும். யூலை நாலாம் நாள் அந்தக் கம்பம் அங்கிள் சாம் ஆகவும், முன்னாள் இராணுவ வீரர் தினத்தில் அதுவொரு இராணுவ வீரராகவும், ஹலோவீன் தினத்தன்று அது ஓர் ஆவியாகவும் உருமாறும். அந்தக் கம்பம் தான் அப்பா கொடுக்கும் ஒரேயொரு மகிழ்ச்சியான விட்டுக் கொடுப்பு. கிறேயோலாப் பெட்டியில் இருந்து ஒரு நேரத்தில் ஒரு பென்சிலை மட்டும் எடுக்க விடுவார். கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்னிரவு ஒரு துண்டு அப்பிளை வீணாக்கியதற்காகக் கிம்மியைப் பார்த்துச் சத்தம் போட்டார். கெச்சப் சாற்றை நாங்கள் எங்கள் உணவில் ஊற்றும்போது அது போதும், அது போதும், அது போதும் என்று சொல்லிக் கொண்டிருப்பார். பிறந்தநாள் கொண்டாட்டங்களில் சிறிய பெட்டிக் கேக்குகள் மட்டுந்தான் எல்லாருக்கும் கிடைக்கும். ஐஸ் கிறீம் கிடையாது.

நான் முதன் முதல் என் பெண் தோழியை அழைத்துக் கொண்டு போனபோது அவள் கேட்டாள்… உன் அப்பாவுக்கு என்ன நடந்தது, அந்தக் கம்பம் எதற்கு? நான் ஒன்றும் பேசாமல் துரு துருவென விளித்துக்கொண்டு குந்தி இருந்தேன். பின் நாங்கள் வீட்டைவிட்டு வெளியேறினோம். மணம் முடித்தோம். குழந்தைகள் பெற்றோம். எங்களிடமும் அற்பத்தனம் வளர்ந்தது.



ஜோர்ஜ் சோன்டேர்ஸ், 1958 அமெரிக்காவிலுள்ள ரெக்சாஸ் மாகாணத்தில் பிறந்தார். அமெரிக்க எழுத்தாளர். சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைகள், குழந்தைகள் நூல்கள் போன்றவை எழுதியுள்ளார். நியுயோர்க்கர், ஹாப்பர்ஸ் போன்ற சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். சிராகூஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். தேசிய சஞ்சிகை விருதைப் பல முறை வென்றுள்ளார். Licoln in the Bardo என்ற நாவலுக்குப் புக்கர் பரிசு வென்றுள்ளார். அதைவிட, Civil WarLand in Bad Decline, Pastorola, Tenth of December ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

அப்பா அந்தக் கம்பத்தை மிகவும் சிக்கலாக அதேநேரத்தில் வெளிப்படையான எந்தத் தர்க்கமும் இல்லாமல் உடைகளை உடுத்திவிட்டுக்கொண்டிருந்தார். நிலப்பன்றி தினத்தில் அதன்மேல் ஒருவகையான விலங்கின் மென்மயிரைப் போர்த்தியிருந்தார். ஒளிவெள்ளத்தின் நிழல் அதில் படுமாறு அதை இழுத்து விட்டிருந்தார். சில்லி நாட்டில் நிலநடுக்கம் தாக்கியபோது அக்கம்பத்தைப் படுக்க வைத்து நிலத்திலுள்ள பிளவுக்குத் தெளிப்புப் பூச்சு வர்ணம் அடித்தார். அம்மா இறந்தபோது கம்பத்தை மரணத்தைப் போல உடுத்தார். குறுக்குத் தண்டில் அம்மா குழந்தையாக இருந்தபோது எடுத்த நிழல் படங்களைத் தொங்கவிட்டார். தன் இளமைக்கால இராணுவப் பதக்கங்கள், நாடக அரங்கு அனுமதிச் சீட்டுகள், பழைய சுவெற்றர்கள், அம்மாவின் ஒப்பனைப் பொருட்கள் போன்றவற்றை மந்திரக் காப்புகளைப் போல கம்பத்தின் அடியில் ஒழுங்குபடுத்தி வைத்தார். அவற்றை நாங்கள் அங்கே சென்று பார்த்தபோது கண்டோம். ஓர் இலையுதிர்க் காலத்தில் கம்பத்துக்குப் பிரகாசமான மஞ்சள் நிற வர்ணம் பூசினார். உறைபனிக் காலத்தில் கம்பத்தைச் சுற்றி அதைச் சூடாக்குவதற்காகப் பருத்திச் சுருணைகளால் மூடிக் கட்டினார். முற்றத்தில் ஆறு குறுக்குத் தடிகளை நட்டார். அவை கம்பத்தின் சந்ததிகள். கம்பத்தையும் தடிகளையும் நூலால் இழுத்துக் கட்டினார். மன்னிப்புக் கடிதங்களையும், தவறுகள் நடந்துள்ளன என்பதையும் புரிந்துகொள்ளுங்கள் என்ற மன்றாட்டங்களையும் ஒட்டி வைத்தார். எல்லா எழுத்துகளும் கட்டுப்பாடுகளை மீறிய மனநிலையில் அட்டவணை அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. அன்பு என்று பெரிய சித்திர எழுத்துகளால் எழுதப்பெற்ற ஓர் அட்டை கம்பத்தில் தொங்கியது. இன்னொரு அட்டையில் மன்னித்துக் கொள்ளுங்கள் என்று எழுதப்பெற்றிருந்தது. அதன் பின் அவர் முன்மண்டபத்தில் வானொலி பாடிக்கொண்டிருக்க இறந்து கிடந்தார். நாங்கள் ஒரு இளம் சோடிக்கு அந்த வீட்டை விற்றோம். அவர்கள் அந்தக் கம்பத்தையும் தடிகளையும் இழுத்தெடுத்துக் குப்பையெடுக்கும் தினத்தன்று தெருவோரம் போட்டிருந்தார்கள்.

(கதை என்ற சஞ்சிகையில் எழுத்தாளர் குறிப்பில் இப்படி எழுதப்பட்டிருந்தது. 'இரண்டு ஆண்டுகளாக இந்தக் கதையில்



உள்ளது போல ஒரு வீட்டின் பக்கம் நான் காரில் போய்க் கொண்டிருப்பேன். அந்த வீட்டின் உரிமையாளர் என்னைப் போல மகிழ்ச்சியானவராகவும் தன்னம்பிக்கை உடையவராக வும் சுயபிரக்ஞை உடையவராகவும் இருப்பார் என்றும் கற் பனை செய்து கொள்வேன். ஒருநாள் அவர்மீது கோபம் கொண்டு அவருக்கு நேர்மாறான ஒருவரைக் கற்பனை செய்து இந்தக் கதையை எழுதினேன்.)

இந்தக் கதை ஒரு மின்னல் புனைவுக் கதை என்ற வகைமை யைச் சேர்ந்தது. ஃபளாஷ் ஃபிக்ஷன் வகைமை. அவற்றை மினிமலிசப் புனைவுகள் என்றும் சொல்வர். ஹேமிங்வே, காஃப்கா போன்றோரும் இப்படியான கதைகளை எழுதியுள் ளார்கள். 100 சொற்களிலிருந்து 250 சொற்கள் வரை உள் ளவை சில கதைகள். சில கதைகள் சில சொற்களே உள் ளவை. அவை சிறியவையாக இருந்தபோதிலும் கதைக்கரு வளர்ச்சி, கதாபாத்திரங்கள் எல்லாமே இருக்கும்.



mahalingam.k@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்து CO அளவிற்
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
HEATING & COOLING
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com



Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc.
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


நீங்கள் வீடு வாங்கும்போது
$8475⁰⁰
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600


வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225


Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMIDGROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011



Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.


Azon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON,M1P 4S6


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell 416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS. DENTIST
YAJ Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
WWW.YAJSMILES.CA


RE/MAX
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner